MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41
திருச்சிற்றம்பலம்

# தொல்காப்பியம்.

## சொல்லதிகாரம்.

மதுரையாசிரியர் பாரத்துவாசி

## நச்சினார்க்கினியருரையோடும்

பலதேசப்பிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து

யாழ்ப்பாணம்

## சி. வை. தாமோதரம்பிள்ளையால்

சென்னபட்டணம்

விக்டோரியா ஜூபிலி யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1892.

நந்தன ஹூ புரட்டாசிமீ.

(Copyright Registered)

# விளம்பரம்.

யான் பதிப்பித்த புத்தகங்கள் இதன் அடியிற் குறித்தபடி சென்னபட்டணத்தில் வித்தியாநுபாலனயந்திரசாலையில் ந. க. சதாசிவப்பிள்ளையவர்களிடத்துங் கலாரத்நாகர அச்சுக்கூடத்தில் ஊ. முத்துக்குமாரசாமிச்செட்டியாரவர்களிடத்தும் விக்டோரியா ஜூபிலியந்திரசாலையில் வி. சுந்தரமுதலியாரவர்களிடத்துஞ், சிதம்பரத்திற் சைவப்பிரகாசவித்தியாசாலை விசாரணைக்கருத்தர் க. பொன்னுசாமிப்பிள்ளையவர்களிடத்தும், யாழ்ப்பாணத்தில் ஏழாலைச் சைவப்பிரகாசவித்தியாசாலை உபாத்தியாயர் சுன்னாகம் அ. குமாரசாமிப்பிள்ளையவர்களிடத்தும், தஞ்சாவூரிற் புத்தகவியாபாரம் த. நா. திருவேங்கடபிள்ளையவர்களிடத்துங், கோயமுத்தூரிற் புத்தகவியாபாரம் இ. ஒன்னைய கவுண்டரவர்களிடத்தும் வாங்கிக்கொள்ளலாம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| தொல்காப்பியம் நச்சினார்க்கினியம் எழுத்ததிகாரம். ... | ௧ | அ |
| ஷை ஷை சொல்லதிகாரம். ... | ௧ | அ |
| ஷை ஷை பொருளதிகாரம். ... | ௬ | 0 |
| ஷை ஷை முழுவதுஞ்சேர்த்து. ... | ௭ | அ |
| ஷை சொல்லதிகாரம் சேனாவரையம். ... | ௨ | 0 |
| நல்லந்துவனார் கலித்தொகை மூலமும் உரையும். ... | ௩ | அ |
| வீரசோழியம் ... ... ஷை ஷை ... | ௧ | அ |
| இறையனாரகப்பொருள் ... ஷை ஷை ... | ௧ | அ |
| இலக்கணவிளக்கம் ... ஷை ஷை ... | ௫ | 0 |
| தணிகைப்புராணம். ... ... ... ... | ௩ | 0 |
| சூளாமணி. ... ... ... ... ... | ௧ | அ |
| ஷை பத்துப் புத்தகமும் ஒருமிக்க வாங்குவோர்க்கு ... | ௨௨ | 0 |
| கட்டளைக்கலித்துறை. ... ... ... ... | 0 | ௧ |
| நக்ஷத்திரமாலை. ... ... ... ... | 0 | ௧ |

சி. வை. தா.

# நன்றிகூறல்.

படிப்பாரும் எழுதுவாருமின்றிப் பாணிவாய்ப்பட்டுந் தேடுவாருந் தொடுவாருமின்றிச் செல்லுக்கிரையாகியுங் காலாந்தரத்தில் ஒன்றொன்றாய் அழிந்துபோம் பழைய தமிழ் நூல்களை இயன்றமட்டும் அச்சிட்டு நிலைநிறுத்தத் தொடங்கிய என் முயற்சிக்கு உதவியாக, ஆங்காங்குள்ள தரும சீலர்கள், சென்றவருஷம் வைகாசி௴ வரையும், எனக்கு அப்பப்போ உபகரித்த பணத்தொகையைக் கலித்தொகை தொல்காப்பிய எழுத்ததிகாரம் இவற்றின் பதிப்புரையிலே அவரவர் நாமதேயத்தோடு தெரிவித்திருக்கின்றேன்.

அதன் பின்பு, இறங்கூனிலே கடைவைத்திருக்கும் நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகளுள் ஸ்ரீ இராமநாதன்செட்டியென வழக்கப்பெயர்பெற்ற ம-ா-ா-ஸ்ரீ ரா. ம. சோ. சோக்கப்பசேட்டியார் ரூ ௫0 அனுப்பிவைத்தார். அவரது தயாளகுணத்தை என்றும் மிகுந்த நன்றியறிவுடன் பாராட்டுவேன்.

தருமச்செலவுகளில் இக்காலத்தில் அதிபிரசித்தியடைந்திருக்கும் நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகளில் வேறுபெயர்களும் இம்முன்மாதிரியை அனுசரித்து இப்படிப்பட்ட முயற்சியுடையவர்களுக்கும் ஒருவாறு துணைசெய்யும்படி அவர்கள் மனதில் எந்நாளுங் குடிகொண்டிருக்கும் ஸ்ரீ நடேசப்பெருமான் அருள்புரியுமாறு அவரது திருவடிகளைப் பிரார்த்திக்கின்றனன்.

நந்தன௵ புரட்டாசி௴.

சி. வை. தா.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௩௫ | ௧௯ | யெயர் | பெயர் |
| ௩௮ | ௧௪ | முலேமுக் | உலேமுக் |
| ௩௯ | ௧௪ | நீருட்டுருக | நீருட்டுக |
| ௪௦ | ௨௪ | யெல்லர | யெல்லா |
| ௪௮ | ௨௫ | ஒத்தாக்கி | ஓத்தாக்கி |

௯௪ முதல் ௮௩ வரைக்குஞ் சூத்திரங்களின்முன் இருக்கும் இலக்கங்களை ஒவ்வொன்று ஏற்றிக்கொள்க.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௭௪ | ௨௩ | எனக்குமகளுகிய | எமக்குமகளுகிய |
| ௮௦ | ௫ | கறகு | கறக்கு |
| ௯௫ | ௩௦ | பிறந்த | பிரிந்த |
| ௧௦௯ | ௧௨ | மூன்னிலே | முன்னிலே |
| ௧௩௨ | ௨௯ | ஏண | என |
| ௧௪௦ | ௨௦ | ஒடுவ | ஓடுவ |
| ௧௪௯ | ௪ | வேறுபடுஞ் | வேறுபடுஞ் |
| ௧௬௮ | ௨௫ | வயறு | வயிறு |
| ,, | ௨௭ | மாணிப்ப்பட்டார் | மாணிப்பட்டார |
| ௧௭௯ | ௨௯ | நல்லலார | நல்லார் |
| ௧௮௯ | ௧௫ | "இன்னுந்தோழி | இன்னும் "தோழி |
| ,, | ௧௯ | ளிவட்டகான் | ளிவட்காண |
| ,, | ௩௦ | நின்றன்னுக | நின்றனுக |
| ௧௯௭ | ௨௯ | தண்ணென்றது | தண்ணென்றது |
| ௨௦௪ | ௨௯ | தெள்ளற்றழீஇய | தெள்ளறறழீஇய |
| ௨௧௮ | ௧௭ | மன்றமார்த்த | மணறமார்த்த |
| ௨௫௪ | ௯ | மாமுல | பாமூல |
| ௨௫௫ | ௩, ௮ | வரையரை | வரையறை |
| ௨௯௩ | ௯ | திடப | திட்ப |
| ௨௯௭ | ௩௩ | கூறிப் | குறிப் |
| ௨௯௯ | ௨௩ | சொற் | சோற் |
| ௨௭௪ | ௧௨ | தாரரது | தாராது |
| ௨௭௫ | ௧௨ | செய | செய் |
| ௨௭௯ | ௧௩ | வேரிகிஞேதி | வெரிநிஞேதி |
| ௨௭௮ | ௩ | திடப | திட்ப |
| ,, | ௧௯ | செய்தது | சேய்த்து |
| ௨௮௫ | ௧௩ | தன்மையான | தன்மையான் |
| ௨௮௮ | ௯ | ருட்டாய | ருட்டாய் |
| ,, | ௨௪ | பொன்மனி | பொன்மணி |

# இரண்டாம் பிழைதிருத்தம்.

| பக்கம். | | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| க0 | | ுகாவேவெனனின் | ஈறுகாவோவெனின் |
| கக | க‸ | 'ராய | பெயராய் |
| உக | கரு | | தாழி |
| ,, | ,, | | வெருவர |
| ,, | ௬௩ | சி‸ | சிாவியு |
| உஅ | க௫ | கொா‸ | கொத்தனென் |
| உகூ | ௫ | நலகினை | நல்கினை |
| ௩க | உக | சேரலாதா‸ | சேரலாதன் |
| ௩௯ | உகூ | பெயர் | பெயர்: |
| ௪0 | உ | கூற்றுற்றல் | கூற்று ஆற்றல் |
| ௪க | கஉ | பண்மை | பண்பை |
| ,, | க௪ | குறிப்பிஞன் | குறிப்பிஞனன்றி |
| ,, | கஎ | பண்மை | பண்பை |
| ௪௫ | ௩0 | வெளளி | வெள்ளி |
| ௫க | க0 | வியங்கோள் | வியங்கொள |
| ௫உ | ௩0 | அவவயின் | அவவியல் |
| ௫௯ | ௫ | இழைத்தாகின்று | இழைத்தற்கின்று |
| எகூ | அ | சாத்தனதாயிற | சாத்தனதாயிற் |
| அ0 | ௯ | தணவால் | தணவரல் |
| அக | க௩ | காவலோன்புரை | காவலோன'' ''புரை |
| கூக | ௩ | சான்றொரீன்ற | சான்றோரீன்ற |
| கூ௩ | க0 | உன் | முன் |
| க00 | க | விரவுபெயர் | விரவுப்பெயர் |
| க0க | ௯ | சேரமாஅன் | சேரமாஅன் |
| க0௩ | ௪ | குறித்தனவெ | குறித்தனவே |
| க0௫ | உ௮ | ஓரன்ன | ஓரன்ன |
| கக0 | கக | நாடு | ஆடு |
| ககக | கஅ | ஓரன | ஓரன்ன |
| ,, | உகூ | ஒருமையியையபு | ஒருமையியைபு |
| க௩0 | ௩0 | காப்பினும் | கரப்பினும் |
| க௪0 | எ | பொய | போய |
| க௪உ | கஅ | எவனெனபது | எவனென்பது |
| க௪௩ | ௩0 | புறமுடைத்து'' | புறம்'' உடைத்து |
| க௫௫ | க0 | நீக்கிற்று | நீங்கிற்று |
| க௫எ | உ௪ | பொயபின் | போயபின் |
| க௫கூ | கஉ | காாண | காரண |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௧௬௧ | ௫ | வெய்யொளும் | வெய்யோளும் |
| ௧௬௨ | ௮ | மருந்திலெனன் | மருந்திலேனன் |
| ,, | ௧௩ | நீலம்பூத்த | நிலம்பூத்த |
| ௧௬௬ | ௬ | ஆம்பலூரு | அம்பலூரு |
| ௧௭௧ | ௪ | பொழிடத்து | பொழிலிடத்து |
| ௧௭௫ | ௮ | மன்திட்பமின்று" | மன்" திட்பமின்று |
| ௧௮௪ | ௫ | கேண்மியா | கேண்மியா |
| ௧௮௫ | ௧௭ | ஆங்க | "ஆங்க |
| ௧௮௬ | ௧௫ | போதுகவீங்கென | போதுகீங்கென |
| ,, | ௨௪ | கூறுகின்றது, | கூறுகின்றது. |
| ௧௮௭ | ௧௦ | எ,றிதிரை | எறிதிரை |
| ௧௯௫ | ௩ | மரம்பொனி | மரம்போனி |
| ௨௦௪ | ௨௭ | திரிகாய | திரிகாய் |
| ௨௦௮ | ௧௨ | மைந்தினை | மைந்தினை |
| ,, | ௧௩ | ஆடந்த | ஆய்ந்த |
| ௨௧௨ | ௧௨ | பெரும | பெரும் |
| ,, | ௨௫ | வெறிப்பு | வெறுப்பு |
| ௨௧௩ | ௧, ௨ | வெறிப்பு | வெறுப்பு |
| ௨௧௪ | ௨௪ | விழுமியோர் | விழுமியோர்க் |
| ௨௧௫ | ௩ | உணாத்து | உணர்த்து |
| ௨௨௧ | ௭ | நணவுப்புகு | "நணவுப்புகு |
| ,, | ௨௧ | றேருர | றேருர |
| ௨௨௪ | ௧௫ | மெயபெற | மெய்பெற |
| ௨௩௧ | ௨௬ | புகழந்திகு | புகழ்ந்திகு |
| ௨௩௭ | ௭ | அடிமறை | அடிமறி |
| ,, | ௧௨ | தொழி | தோழி |
| ௨௪௪ | ௧௪ | போலமர்ந்த | போலமலர்ந்த |
| ௨௪௫ | ௧௫ | ஆசியர் | ஆசிரியர் |
| ௨௪௭ | ௮ | மெழியும் | மொழியும் |
| ,, | ௨௯ | கூதலிர் | கூதளிர் |
| ௨௪௮ | ௮ | கோண் | கோணம் |
| ௨௬௨ | ௧௯ | யவா-நல் | யலவ-னல் |
| ,, | ,, | சேரிஞெரு | சேஞெரு |
| ,, | ௨௦ | மருங்கிலமே | மருங்கிணமே |
| ௨௯௩ | ௨௨ | கொளளேன் | கொள்ளேன் |
| ௨௮௮ | ௨௪ | ஏழாவதும | ஏழாவதும் |
| ,, | ௨௬ | விரிங் | விரிங் |

திருச்சிற்றம்பலம்.

# தொல்காப்பியம்.

## சொல்லதிகாரம்

முதலாவது

### கிளவியாக்கம்.

க. உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
யஃறிணை யென்மனா ரவரல பிறவே
யாயிரு திணையி னிசைக்குமன் சொல்லே.

என்பது சூத்திரம். மேற் பாயிரத்துள் "எழுத்துஞ்சொல்லும பொருளுநாடி" என நிறுத்தமுறையானே எழுத்து உணர்த்திச் சொல் உணர்த்துகின்றாராதலிற் சொல்லதிகாரமென்னும் பெயர்த்து. அது சொல்லை உணர்த்திய முறைமையென விரியும்.

சொல்லென்றது எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப்பொருட்டன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசையை. ஈண்டு ஆக்கப்படுதலென்றது ஒருசொற் கூறுமிடத்து ஓரெழுத்துப் போக ஓரெழுத்துக் கூறுவதல்லது ஒருசொல்லாக முடியும் எழுத்தெல்லாஞ் சேரக்கூறலாகாமையின் அவவெழுத்துக்கள் கூறிய அடைவே போயிற்றேனுங் கேட்டோர் கருத்தின்கண் ஒருதொடராய் நிலை பெற்று நின்று பொருளை அறிவுறுத்தலை. ஆயின் ஓரெழுத்தொருமொழிக்கு ஆக்குதலின்றாலெனின், ஓரெழுத்தொருமொழியைக் கூறியக்கால் அதுவுஞ் செவிப்புலனாய்க் கருத்தின்கண் நிகழ்ந்து பின்னர்ப் பொருளை ஆக்குதலின் அதுவும் ஆக்குந்தன்மையுடையதாயிற்று.

இருதிணைப்பொருளுமாவன ஐம்பாற்பொருளின் பகுதியாகிய காட்சிப்பொருளுங் கருத்துப்பொருளும் அவற்றின் பகுதியாகிய ஐம்பெரும்பூதமும் அவற்றின் பகுதியாகிய இயங்குதிணையும நிலைத்திணையுமாம். இவையெல்லாம் ஐம்பாலாய் அடங்கின.

இனிப் பொருட்டன்மையாவது மக்கட்டன்மையும் இயங்கு திணைத்தன்மையும் நிலைத்திணைத்தன்மையுமாம். இத்தன்மை ஒரு பொருட்குக் கேடு பிறந்தாலுந் தனக்குக் கேடின்றித் தான் ஒன்றேயாய்ப் பலவகைப்பட்ட பொருடோறும் நிற்குமென்று உணர்க.

கருவியாவது அப்பொருட்டன்மையை ஒருவன் உணர்தற்கு அவவோசை கருவியாய்நிற்றல்; இதனை ஐம்பொறிகள் ஒருவன் பொருளை உணர்தற்குக் கருவியாய் நின்றாற்போலக் கருவியாய் நிற்குமென்று உணர்க.

இனி ஓசையைச் சொல்லென்றீரேற், கடலொலி சங்கொலி விண்ணொலி முதலியனவுஞ் சொல்லாகாவோவெனின், சொல்லு இது முன்பு யான் உணர்ந்த எழுத்தென்றே பினபு கூறியக்காலும் உணரநிற்றலிற் கேடின்றி நிலைபேறுடையதாயிற்று. இவை அங்ஙனம் உணர்தலாற்றாமையானும் எழுத்தின்றன் ஆக்கப்படாமையானும நிலைபேறிலவாயின, ஆதலிற் சொல்லெனப்படா. அன்றியும் ஓசை அரவம் இசையென்பனபோலன்றிக் கிளவி சொல் மொழியென்பன எழுத்தினான் ஆகிய ஓசையை உணர்த்தும். முற்கு வீளை முதலியன எழுத்தினான் ஆக்கப்படாமையிற் சொல்லாகா.

இனி ஒருசாரார் எழுத்தினான் ஆகிய ஓசையையுங் கெடுமென பர். உரையாசிரியருஞ் சொல்லென்பது எழுத்தினான் ஆக்கப்பட்டுத் திணையறிவுறுக்கும் ஓசையென்றுந் தன்னை உணரநின்றவழி எழுத்தெனப்படுந் தான் இடைநின்று பொருளுணர்த்தியவழிச் சொல்லெனப்படுமென்றுங் கூறினார் இக்கருத்தேபற்றி. இனிச சேனாவரையர் சொல் பொருள்குறித்துவருமென்றாராலெனின், ஒருவன் பொருட்டன்மையை உணர்தற்குச் சொல் கருவியாய் நிற்றலன்றித் தனக்கு ஒருணர்வின்மையிற் தான் ஒருபொருளைக் கருதிநிற்றலின்றென மறுக்க.

அச்சொல்லை எட்டுவகையானும் எட்டிறந்த பலவகையானும் உணர்த்துப. இரண்டுதிணையும் ஐந்துபாலும் ஏழுவகைவழுவும் எட்டு வேற்றுமையும் ஆறொட்டும் மூன்றிடமும் மூன்றுகாலமும் வழக்குஞ் செய்யுளுமாகிய இரண்டிடமுமென எட்டுவகையான் உணர்த்துப. இனி எட்டிறந்த பலவகையாவன சொல் நான்குவகைய என்றலும் அவற்றையே பலவாகப் பகுத்தலும் விகாரவகையும் பொருள்கோள் வகையுஞ் செய்யுட்கு உரியசொல் நான்கென்றலும் பிறவுமாம்.

அச்சொற்றான் தனிமொழியுந் தொடர்மொழியுமென இரு வகைப்படும். தனிமொழி பொருள்விளக்குமாறு "நிலந்தீநீர்வளிவிசும் போடைந்துங்-கலந்தமயக்கமுலகமா தலி-னிருதிணையைம்பாலியனெ றிவழாஅமைத் - திரிவில்சொல்லொடுதழாஅல்வேண்டும்." என்னும் மரபியற்சூத்திரத்தான் உணர்க. தொடர்மொழி இருமொழித்தொ டரும் பன்மொழித்தொடருமென இருவகைப்படும். அவை தொட ருங்காற் பயனிலைவகையானுந் தொகைநிலைவகையானும் எண்ணுநிலை வகையானுந் தொடரும். இனி வடநூலார் கூறியவாறே அவாய்நிலை யானும் அண்மைநிலையானுந் தகுதியானுந் தொடருமென்றலுமாம். சாத்தன் உண்டான் மன் ஈனி என்பன தனிமொழி. சாத்தன்வந் தான், இதுபயனிலைத்தொடர். யானைக்கோடு, இதுதொகைநிலைத் தொடர். நிலநீர், இஃதெண்ணுநிலைத்தொடர். இவை இருமொழித் தொடர். அறம்வேண்டியரசனுலகம்புரக்கும் என்பது பன்மொழித் தொடர்.

வழுக் களைந்து சொற்களை அமைத்துக்கோடலின் இவ்வோத் துக் கிளவியாக்கமென்னும் பெயர்பெற்றது. இனிச் சொற்கள் பொருள்கண்மேலாமாறு உணர்த்தினமையிற் கிளவியாக்கமென்னும் பெயர்பெற்றதென்றுமாம், ஒருவன்மேலாமாறிது ஒருத்திமேலாமா றிது பலர்மேலாமாறிது ஒன்றன்மேலாமாறிது பலவற்றின்மேலாமா றிது வழுவாமாறிது வழுவமையுமாறிது எனப் பொருள்கண்மேலா மாறு உணர்த்தினமையின்.

இனி இத்தலைச்சூத்திரஞ் சொல்லும் பொருளும் வரையறுத்து உணர்த்துகின்றது.

(இதன்பொருள்.) மக்கட் சுட்டே = மக்களாகிய நன்குமதிக்கப் படும் பொருளை: உயர்திணை என்மனார் = உயர்திணையென்று கூறுவர் தொல்லாசிரியர்: அவர் அல பிறவே = அம்மக்களல்லாத பிறபொருளை: அஃறிணை என்மனார் = அஃறிணையென்று கூறுவர் தொல்லாசிரியர்: ஆயிரு திணையின் இசைக்கும் மன் சொல்லே = அவ்விருதிணைப் பொருள்களையும் உணர்த்துஞ் சொற்கள் என்றவாறு.

ஏகாரம் மூன்றும் ஈற்றசை. இனைத்தென அறிந்த உம்மை விகாரத்தாற் தொக்கது.

"இசைப்பிசையாகும்." என்றதனால் இசைப்பு ஒலிக்குமென் னும் பொருடந்ததெனின், சொல்லுக்குப் பொருள் உணர்த்துமெழி

யல்லது ஒலித்தல்கூடாமையின் உணர்த்துமென்னுந் தொழிலினை இசைக்குமென்னுந் தொழிலாற் கூறினார். இதுவும் ஓர் மரபுவழுவமைதி. பொருளையுணர்த்துவான் ஒரு சாத்தனேயெனினும் அவற்கு அது கருவியாகவல்லது உணர்த்தலாகாமையின் அக்கருவிமேற் தொழிலேற்றிச் சொல் உணர்த்துமென்று கருவிக்கருத்தாவாகக் கூறினார். இவ்வாசிரியர் எவ்விடத்துஞ் சொல்லைக் கருவிக்கருத்தாவாகக் கூறுமாறு மேலே காண்க. அஃது "எல்லாச்சொல்லும்பொருள்குறித்தனவே." என்றூற்ெ..ால்வன.

இச்சூத்திரத்தாற் பொருளிரண்டு சொல்லிரண்டென வரையறுத்தார்.

உயர்திணையென்பது உயர்ந்த ஒழுக்கமென இறந்தகாலவினைத்தொகை; அஃது ஆகுபெயராய் அப்பொருளை உணர்த்திநின்றது. இதனைப்பண்புத்தொகையென்பாரும் உளர். அது பொருந்தாது. என்னை? இது காலந் தோன்றிநிற்றலின். மக்கட்சுட்டென்பது மக்களாகிய சுட்டென இருபெயரொட்டுப்பண்புத்தொகை. சுட்டு நன்குமதிப்பு. அஃது ஆகுபெயராய் மக்கட்பொருளை உணர்த்திநின்றது. சேனாவரையர் இதனைப் பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையென்றாராலோவெனின், இருபெயரொட்டாகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் வேறுபாடு உணராமற் கூறினமையின் அதுபொருந்தாது. என்னை வேறுபாடெனில், ஈண்டு ஆகுபெயராய் நின்ற நன்குமதிக்கும்பொருளும் மக்களையே உணர்த்திநிற்கும். அன்மொழித்தொகை அவ்வாறன்றி வெள்ளாடையென்றால் வெண்மையும் ஆடையுமன்றி உடுத்தாளையே உணர்த்திநிற்கும். இது தம்முள் வேற்றுமை. "அம்மொழிநிலையாதன்மொழிநிலையலும்" என்புழி "வெள்ளாடையென்புழித் தொக்க இருமொழிமேலும் நில்லாது உடுத்தாளென்னும் அன்மொழிமேல் நின்றது" என்று உதாரணங் காட்டினார் சேனாவரையருமென்று உணர்க.

அஃறிணை அவவொழுக்கமல்லவாகிய ஒழுக்கமெனப் பண்புத்தொகை. அது பொருளை உணர்த்திநின்றது ஆகுபெயராய்.

என்மனாரென்பது ஓர் ஆரீற்றுநிகழ்காலமுற்றுவினைத்திரிசொல். என்றிசினோரென்பது அவ்வாறு வந்த இறந்தகாலமுற்றுவினைத்திரிசொல்.

"மக்கடாமேயாறறிவுயிரே" என்று மக்கள் உயர்ந்தமை மரபியலிற் கூறுப. அவரல என்றது பிற என்றார் அஃறிணை உயி

ருள்ளனவும் இல்லனவுமாகிய இருகூறும் அடங்குதற்கு. "மறங்க டிந்தவருங்கற்பின்" எனவும் "சில்சொல்லிற்பல்கூந்தல்" எனவும் பிறாண்டுஞ் சான்றோர் செய்யுளில் இன்சாரியை உருபுபற்றாது நிற்றல் நோக்கி உரையாசிரியரும் "ஆயிருதிணையினையும்" என இரண்டாமுருபு விரித்துப் பொருள்கூறினார்.

இனிச் சேனாவரையர் 'மக்கட்சுட்டு' என்பதற்கு "மக்களாகிய சுட்டியாதன்கண் நிகழும் அது மக்கட்சுட்டு" என்றும் 'ஆயிருதிணையினிசைக்குமனசொல்லே' என்பதற்குச் "சொன்னிகழ்ச்சிக்குப் பொருள் இடமாதலின் ஆயிருதிணையின்கண்ணென ஏழாவது விரிக்க" என்றும் பொருள்கூறினாராலெனின், முன்னர் மக்களென்று கருதப்படும் பொருளை உயர்திணையென்ப என்று அவர் கண்ணழிவு கூறியது ஒருபொருளிடத்துநின்ற மக்கட்டன்மையாலே ஒருவற்கு அப்பொருள் மக்களென்று கருதப்பட்டதென்று பொருடந்துநின்றது; பின்னர் மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழுமென்றது நோக்குகின்றவர்க்கு மக்களாகிய கருத்து யாதொருபொருளிடத்துத் தோன்றுமென்று பொருடந்தால் வெள்ளாடையென்னும் பண்புத்தொகை போல அக்கருத்து மக்களாகாமையிற் பண்புத்தொகையன்றாம்; அது மக்கட்சுட்டென்றதற்கு அப்பொருண்மக்கட்சுட்டென்று அவர் கூறிய பொருளானும் மக்களையே தோற்றுவித்து நிற்றலின் அன்மொழித்தொகையன்றாம்; அன்றியும் ஆசிரியர் ஈண்டு ஒருபொருள் நின்று தன்னை ஒருவற்கு உணர்த்துமாறும் ஒருவன் அதனை உணருமாறும் ஆராய்கின்றாரல்லர்; உயர்ந்த ஒழுக்கமென்று முதனூலாசிரியர் கூறிய குறி உலகத்தார்க்கு விளங்கப் பொருள்கூறக்கருதி அதன்பயன் எய்துவிப்பத் தாமும் மக்களாகிய நன்குமதிக்கும்பொருளென்று அச்சொற்குப் பொருள்கூறினாரென்று உணர்க. அவர் கூறிய உயர்ச்சி தோன்றத் தாமும் நன்குமதிப்பென்று பொருள் கூறினார், தாமும் உயர்திணையென்றே ஆளுதல்பற்றி. இனி "இசைப் பிசையாகும்." என்பதனாற் திணையிடமாகச் சொற்கள் நின்று பிறவற்றை இசைத்தல்வேண்டுமெதனான் அது பொருந்தாது. அன்றியும் ஆசிரியர்க்கு அங்ஙனம் பொருள்கூறுதல் கருத்தாயின் "ஆடூஉவறிசொல்" முதலிய சூத்திரங்களெல்லாஞ் சொன்னிகழ்ச்சிக்குப் பொருள் இடமாக ஆடூஉவின்கண் நிகழுஞ்சொல் மகடூவின்கண் நிகழுஞ் சொல்லென்றே சூத்திரஞ்செய்வர், அங்ஙனஞ் செய்யாது ஒருவன் ஆண்மகனை அறியுஞ் சொல்லும் பெண்டாட்டியை அறியுஞ் சொல்லுமென அறியுமென்னும் பெயரெச்சஞ் சொல்லென்னுங் கருவிப்

பொருளைக்கொண்டு முடியச் சூத்திரஞ்செய்தலின் ஆசிரியர்க்கு அங் ஙனம் பொருள்கூறுதல் கருத்தன்மை அறிக.

மன்னென்பது வினைபற்றிய அசைநிலையிடைச்சொல்லாய் நின்றது.

உ. ஆடூஉ வறிசொன் மகடூஉ வறிசொற்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
யம்முப் பாற்சொ லுயர்திணை யவ்வே.

இஃது உயர்திணைப்பாலைப் பகுக்கின்றது.

(இ - ள்.) ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்=ஒருவன் ஆண் மகனை அறியுஞ் சொல்லும் பெண்டாட்டியை அறியுஞ் சொல்லும்: பல்லோர் அறியுஞ் சொல்லொடு சிவணி=பல்லோரை அறியுஞ் சொல்லோடு சிவணுகையினாலே: அம் முப்பாற் சொல்=அம்மூன்று கூறுகியசொல்லும்: உயர்திணைய=உயர்திணையினையுடையவாம். எ-று.

ஆண்பன்மையும் பெண்பன்மையும் அவவிருவருந் தொக்க பன்மையுமன்றிப் பன்மைப்பொருள் வேறின்மையின் ஆடூஉவும் மகடூஉவும் பல்லோரறியுஞ்சொல்லொடு சிவணுகையினாலே மூன்றுகூறாயிற்றென்றார். எனவே, அல்வழி இரண்டேயாமென்பது கருத்து.

செய்தெனெச்சங் காரணகாரியப்பொருட்டாய் நின்றது. உயர் திணைய என்ற ஆறும்வேற்றுமையாய்நிற்குஞ்சொல் எண்டுப் பெய ராகாது வினைக்குறிப்பாய் நின்றது.

இனிச் சிவணவெனத் திரிப்பாருமுளர்.

இவ்வாறன்றிச் சிவணி உயர்திணையவாமென்பார்க்கு முப்பாற் சொற்கும் பயனிலையாய்நின்ற உயர்திணையவாமென்னும் வினைக்கு றிப்பு ஆடூஉவறிசொல் மகடூஉவறிசொல் என்னும் இரண்டன் வினை யாகிய சிவணியென்னுஞ் செய்தெனெச்சத்திற்கு வினைமுதல்வினையா யிற்று, உயர்திணையவாகல் ஆடூஉவறிசொற்கும் மகடூஉவறிசொற்கும் எய்துதலின். ஆடூஉ மகடூஉ என்பன பண்டையார்வழக்கு. அறி சொல் அறிதற்குக் கருவியாகிய சொல். (உ)

ங. ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்
றாயிரு பாற்சொ லஃறிணை யவ்வே.

இஃது அஃறிணைப்பாலைப் பகுக்கின்றது.

(இ - ள்.) ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று = ஒருவன் ஒன்றனை அறியுஞ்சொல்லும் பலவற்றை அறியுஞ்சொல்லு மென்று சொல்லப்பட்ட: ஆயிரு பாற்சொல் அஃறிணைய = அவவி ரண்டுகூற்றுச்சொல்லும் அஃறிணையினையுடையவாம். எ-று. (௬)

சு. பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கி
னாண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியுந்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியு
மிவ்வென வறியுமந் தந்தமக் கிலவே
யுயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும.

இஃது ஐயம் அறுக்கின்றது; மேற்றொகையுள் ஒழிந்த தெய் வத்தையும் வகையுள் ஒழிந்த பேடியையும் இவவாறுமென்றலின்.

(இ - ள்.) உயர்திணை மருங்கிற் பெண்மை சுட்டிய = ஒருவன் உயர்திணையிடத்துப் பெண்பாற்குரிய அமைதித்தன்மையைக் கருது தற்குக் காரணமான: ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும் = ஆண்பாற்கு உரிய ஆளுந்தன்மை திரிந்த பெயர்ப்பொருளும்; தெய் வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும் = தெய்வத்தன்மையைக் குறித்த பெயர்ப்பொருளும்: இவவென அறியும் அந்தம் தமக்கு இலவே = இவையெனத தம்பெயர்ப் பொருளினை வேறறிய நிற்கும் ஈற்றெ ழுத்தினையுடைய சொற்களைத் தமக்குடையவல்ல: உயர்திணை மருங் கிற் பால் பிரிந்து இசைக்கும் = உயர்திணையிடத்திற் குரிய பாலாய் வேறுபட்டு இசைக்கும். எ-று.

அலியன்று என்றற்குப் பெண்மைசுட்டிய என்றார். பெண் ணன்று என்றற்கு ஆண்மைதிரிந்த என்றார். இரண்டிடத்துப் பெயர் நிலைக்கிளவியுஞ் சொல்லினுற் பொருளறியப்படுதலின் ஆகுபெய ராய் அப்பொருளுணர்த்திநின்றன.

சுட்டிய என்பது நிலம்பூத்த மரமென்பதுபோலும் பெயரெச் சம், அது பெயர்நிலைக்கிளவியென்பதனோடு முடியும். ஆண்மைதிரிந்த என்பது இடைநிலை. இதன்பொருள் ஆண்பாற்குரிய ஆளுந்தன்மை முற்பிறப்பிற் தான் செய்த தீவினையாற் தன்னிடத்து இல்லையான பெயர்ப்பொருளென்க. என்றது நல்வினை செய்யாத பொருளென்ற வாறு. இதற்குப் பெண்மைதிரிதலும் உண்டேனும் ஆண்மைதிரிதல் பெரும்பான்மை.

பால்பிரிந்திசைத்தலாவது தாம் உயர்திணைப்பொருளாய் அவற்றின் ஈற்றினுல் இசைத்தலாம்.

பேடியைப் பாலுள்ளுந் தெய்வத்தைத் திணையுள்ளும் அடக்கினுர்.

உ-ம். பேடிவந்தாள் பேடியர்வந்தார் தேவன்வந்தான் தேவிவந்தாள் தேவர்வந்தார் எனவரும்.

பேடியர் பேடிமார் பேடிகள் என்பனவும் அடங்குதற்குப் பேடியென்னுது ஆண்மைதிரிந்த என்முர். "பெண்ணவாயாணிழந்த பேடியணியாளோ" என்பதனுற் பெண்ணவாய்நிற்றல் கொள்க.

அந்தந்தமக்கில என்றதனுன் நிரயப்பாலர் அலி மகண்மா முதலியவற்றையும் இம்மூவீற்றின் ஏற்பதனுன் முடிக்க.

உ-ம். நரகன்வந்தான் நரகிவந்தாள் நரகர்வந்தார் அலிவந்தான் அலியர்வந்தார் மகண்மாவந்தாள் எனவரும். (ச)

ரு. னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்.

இஃது ஆடூஉ அறிசொல் உணர்த்துகின்றது.

(இ - ள்.) னஃகானொற்று=னஃகானுகிய ஒற்றினை ஈமுகவுடையசொல்: ஆடூஉ அறிசொல்=ஒருவன் ஆண்மகனை அறியுஞ்சொல்லாம். எ-று.

ஏகாரந் தேற்றேகாரம்.

உ-ம். உண்டனன் உண்டான் உண்ணுநின்றனன் உண்ணுநின்முன் உண்பன் உண்பான் கரியன் கரியான் எனவரும்.

உண்டனன் உண்டான் என்புழி னகரம் ஒழிந்த மூவெழுத்துக்களும் ஏனைப்பாற்கும் வருதலின் னகரத்தின் சிறப்பு நோக்கி னஃகானொற்றே என்முர். அன் ஆன் என்னும் இரண்டனையுந் தொகுத்து னஃகானென்முர். மேலனவற்றிற்கும் இஃது ஒக்கும். (ரு)

சு. ளஃகா னொற்றே மகடூஉ வறிசொல்.

இது மகடூஉ அறிசொல் உணர்த்துகின்றது.

(இ - ள்.) ளஃகானொற்று=ளஃகானுகிய ஒற்றினை ஈமுகவுடையசொல்: மகடூஉ அறிசொல்=ஒருவன் மகடூஉவினை அறியுஞ்சொல்லாம். எ-று.

உண்டனள் உண்டாள் உண்ணாநின்றனள் உண்ணாநின்றாள் உண்பள் உண்பாள் கரியள் கரியாள் எனவரும். (௬)

௭. ரஃகா னொற்றும் பகர விறுதியு
மாரைக் கிளவி யுளப்பட மூன்று
நேரத் தோன்றும் பலரறி சொல்லே.

இது பலரறிசொல் உணர்த்துகின்றது.

(இ - ள்.) ரஃகான் ஒற்றும்=ரஃகானாகிய ஒற்றினை ஈறாகவுடைய சொல்லும்: பகர இறுதியும்=பகரமாகிய இறுதியையுடைய சொல்லும்: மாரைக் கிளவி உளப்பட மூன்றும் = மாரென்னும் இடைச்சொல்லை ஈறாகவுடைய சொல் உட்பட மூன்றும்: நேரத் தோன்றும் பலரறி சொல்லே=நிரம்பத் தோன்றும் பலரை அறியுஞ்சொல்லாம். எ-று.

அகரத்தோடு புணர்ந்த பகரமல்லது உயர்திணைப் பன்மையை உணர்த்தாதென்றற்கு ஈண்டுப் பகரமென்றும் மேல் "அஆவ" என்றும் பகர அகர உயிர்மெய் ஈறாய்நிற்றல் உடம்பொடுபுணர்த்துக் கூறினாராயிற்று.

உ-ம். உண்டனர் உண்டார் உண்ணாநின்றனர் உண்ணாநின்றார் உண்பர் உண்பார் கரியர் கரியார் கூறுப வருப "ஆர்த்தார்கொண்மார் வந்தார்" எனவரும்.

மாரீறு ஆரீறென அடங்குமெனின் மகரவொற்றுக் காலங்காட்டும் எழுத்தாய் முதனிலைக்கேற்றவாற்றான் உண்பார் வருவாரென்றாற்போல வேறுபட்டு வரல்வேண்டும்; அங்ஙனம் வேறுபடாமையானும் வினைகொண்டுமுடிதலானும் மாரீறு ஆரீற்றின் அடங்காதாயிற்று. ஏனைப்பன்மையீறுகள் திரிபுடைமையின் இவற்றை நேரத் தோன்றுமென்றார். பகரவிறுதியென்றது மொழிந்தபொருளோடொன்றவவ்வயின் மொழியாததனைமுட்டின்றுமுடித்தலென்பதற்கு இனம். (௭)

௮. ஒன்றறி கிளவி தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

இஃது அஃறிணைக்கண் ஒன்றறிசொல் உணர்த்துகின்றது.

(இ - ள்.) ஒன்றறிகிளவி = ஒருவன் ஒன்றனை அறியுஞ்சொல்: த்றட ஊர்ந்த குன்றியலுகரத்து இறுதியாகும் = தறட என்னும் ஒற்றுக்களை ஊர்ந்துவந்த குற்றியலுகரத்தினை ஈறுகவுடைய சொல்லாம். எ-று.

உ-ம். வந்தது வாராநின்றது வருவது கரியது கூயிற்று தாய்றறு கோடின்று குளம்பின்று குன்றுகட்டு குறுந்தாட்டு எனவரும். (அ)

௯. அஆ வஎன் வரூஉ மிறுதி
யப்பான் மூன்றே பலவறி சொல்லே.

இஃது அஃறிணைக்கட் பலவறிசொல் உணர்த்துகின்றது.

(இ - ள்.) பலவறிசொல் = ஒருவன் பலவற்றை அறியுஞ் சொல்லாவன: அ ஆ வ என வரூஉம் இறுதி அப்பால் மூன்று = அ ஆ வ எனவரூஉம் இறுதியையுடைய அக்கூற்று மூன்றுசொல்லாம். எ-று.

உ-ம். உண்டன உண்ட உண்ணாநின்றன உண்ணாநின்ற உண்பன உண்ப கரியன கரிய கோட்ட எனவரும்.

உண்ப என்பது பலரறிசொல்லன்றோவெனின், தகைத்தன தகையாநின்றன தகைப்பன என அன்பெற்றுந் தகைத்த தகையாநின்ற தகைப்ப என அன்பெறாதும் நின்றாற்போலவும் "கானந்தகைப்பசெலவு" என்றாற்போலவும் உண்ப என்பதும் அன்பெறாது நின்ற அகர ஈற்றுப் பலவறிசொல், பகர ஈற்றுப் பலரறிசொல்லன்று.

ஆ உண்ணாதின்னா எனவும் வ உண்குவதின்குவ எனவும் வரும்.

இவை அன்பெறாது எதிர்காலத்துவரும் வகரவொற்று ஊர்ந்து நின்ற அகர ஈறுகாவேனெனின் குகரம்பெறுதலின் வகர ஈறேயாம். வருவ சொல்வ எனக் குகரம் பெறாதவழி அகர ஈறுதலும் பெற்ற வழி வகர ஈறுதலும் உடையவாம். (௯)

௧0. இருதிணை மருங்கி னைம்பா லறிய
வீற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்துந்
தோற்றந் தாமே வினையொடு வருமே.

இது மேற் பாலுணர்த்திய எழுத்து இனைத்தென்றும் அவை வினைக்கண் நின்று உணர்த்துமென்றும் உணர்த்துகின்றது.

(இ - ள்.) இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய=உயர்திணை அஃறிணை என்னும் இரண்டுதிணைக்கண்ணும் உளவாகிய ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் ஐந்து பாலினையும் அறிய: ஈற்று நின்று இசைக்கும் பதினோர் எழுத்தும்=அவ்வச்சொல்லின் இறுதிக் கண் நின்று ஒலிக்கும் பதினோரிடைச்சொற்களும்: தோற்றந்தாமே வினையொடு வருமே=பால் உணர்த்துதற்குப் புலப்படுதற்கண் வினைச் சொற்கு ஈறாய்ப் புலப்படும். எ-று.

பதினோரிடைச்சொல்லையும் எழுத்தென்றார் எழுத்தினாற் சொல் லாதல்பற்றி. இது கருத்தாதல் "மாரைக்கிளவி" என்றதனாற் பெற் றாம். ஈற்றின் நின்று இசைக்குமென்றது னகரம் முதலிய இரண் டற்கும் ஞாபகம், அல்லனவற்றிற்கு அனுவாதம். அவை னகாரமும் ளகாரமும் ரகாரமும் பகாரமும் மாரும் துவ்வும் றுவ்வும் டுவ்வும் அவ்வும் ஆவும் வவ்வும். இது விரித்தது தொகுத்தது. வினையியலுள் வினைக்கு ஈறுபற்றி ஓதிப் பெயரியலுட் பெயர்கடம்மை எடுத்தோ தினமையானும் இப்பதினோரீறும் பெயர்க்கட் திரிபுடையவாய் வருத லானும் பெயர்க்கு இவ்வீறுகள் கோடலாகாமை உணர்க. (கo)

கக. வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியு
மயங்கல் கூடா தம்மர பினவே.

இது வழுவற்க என்று காத்தலும் வழுவியமைக என்று காத் தலுமாகிய இரண்டனுள் வழுவற்க என்று காக்கின்றது.

(இ - ள்.) வினையிற் தோன்றும் பாலறி கிளவியும்=வினைச் சொல்லான் விளங்கும் பாலறியப்படும் பொருளும்: பெயரிற் தோன் றும் பாலறி கிளவியும்=பெயர்ச்சொல்லான் விளங்கும் பாலறியப் படும் பொருளும்: மயங்கல்கூடா=ஒன்றோடு ஒன்றை மயங்கச்சொல் லுதல் பொருந்தா: தம்மரபின=தத்தம் இலக்கணத்தாலே சொல்லு தலுடைய. எ-று.

சொல்லென்றார் அதனான் உணரும் பொருளை. பால் மயங்கா தெனவே திணைமயங்காமையுங் கூறிற்றாம்.

உ-ம். உண்டானவன் உண்டாளவள் உண்டாரவர் உண்டதது உண்டனவவை; இவை வினைநின்று பெயர்மேற் தத்தம் மரபினான் வந்தன. அவனுண்டான் அவளுண்டாள் அவருண்டார் அதுவுண்

டது அவையுண்டன; இவை பெயர்நின்று வினைமேற் றத்தம் மரபி னான் வந்தன. வினைச்சொல்லால் விளங்குமெனவே அதனிலுள்ள காலமும் இடனும் மயங்காமையும் பெற்றாம். அவை, உண்டேன் நெருநல், உண்ணாநின்றேன் இன்று, உண்கு நாளை, யான்வந்தேன், நீவந்தாய், யாம்வந்தேம், நீயிர்வந்தீர், எனவரும்.

இனி உய்த்துக்கொண்டுணர்தலென்பதனாற் றம்மரபின என்பதனைப் பிரித்து வேறோர் தொடராக்கி மரபுமயங்காமையுங் கொள்க. அவை யானைமேய்ப்பானைப் பாகன் என்றலும் யாடுமேய்ப்பானை இடையன் என்றலுமாம்.

இச்சூத்திரத்தாற் றிணையும் பாலும் இடமுங் காலமும் மரபும் வழுவாமற் காத்தார்.

இனி மயங்கல்கூடா என்பதனானே மயங்குதலும் உண்டென்பது பெற்றாம். அம்மயக்கம் எழுவகையவென்பது உரையிற்கோடும். அவை திணைமயக்கமும் பால்மயக்கமுங் காலமயக்கமும் இடமயக்கமுஞ் செப்புமயக்கமும் வினாமயக்கமும் மரபுமயக்கமுமென ஏழாம். இவை மயங்குமெனவே வழுவாதல் பெற்றாம். உண்டானது உண்டானவை உண்டாளது உண்டாளவை உண்டாரது உண்டாரவை உண்டதவன் உண்டனவவன் உண்டதவள் உண்டனவவள் உண்டதவர் உண்டனவவர் இவை திணைவழு; உண்டானவள் உண்டானவர் உண்டாளவன் உண்டாளவர் உண்டாரவன் உண்டாரவள் உண்டதவை உண்டனவது இவை பால்வழு; இவை வினைநின்று பெயர்மேல் வழீஇயின. அவன்வந்தது அவன்வந்தன அவள்வந்தது அவள்வந்தன அவர்வந்தது அவர்வந்தன அதுவந்தான் அவைவந்தான் அதுவந்தாள் அவைவந்தாள் அதுவந்தார் அவைவந்தார் இவை திணைவழு; அவன்வந்தாள் அவன்வந்தார் அவள்வந்தான் அவள்வந்தார் அவர்வந்தான் அவர்வந்தாள் அதுவந்தன அவைவந்தது இவை பால்வழு; இவை பெயர்நின்று வினைமேல் வழீஇயின. செத்தானைச்சாமென்றல் காலவழு. யானுண்டான் யானுண்டாய் என்றாற்போல்வன இடவழு. இவை பெயர்வினைகளைப்பற்றி வரும் விகற்பமுங்கொள்க. யானைமேய்ப்பானை இடையனென்றலும் யாடுமேய்ப்பானைப் பாகனென்றலும் மரபுவழு. செப்பும் வினாவும் வழுவாமையும் வழுவுமாறும் மேலேகூறுப. வினையியலுட் கடைக்கட் காலவழுவமைதியும் மரபியலுள் மரபுவழுவமைதியுங் கூறி ஏனைய வழீஇயமையுமாறு இவ்வோத்தினுட்கூறுப. (கக)

கஉ. ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
யாண்மை யறிசொற் காகிட னின்றே.

இதுவும் அது.

(இ - ள்.) ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி = உயர்திணை மருங்கிற் பால்பிரிந்திசைக்குமென மேற்கூறிய ஆண்மை திரிந்த பெயர்ச்சொல்: ஆண்மை அறிசொற்கு ஆகிடன் இன்று = ஆடூஉவறி சொல்லோடு பொருந்தும் இடனுடைத்தன்று. எ-று.

இது வழுவற்க என்கின்றதாகலின் ஈண்டுப் போதந்து வைத்தார். (கஉ)

கங. செப்பும் வினாவும் வழாஅ லோம்பல்.

இதுவும் அது.

(இ - ள்.) செப்பும் வினாவும் = வினயபொருளை அறிவுறுப்பதனையும் அறியலுறவு வெளிப்படுப்பதனையும்: வழாஅல் ஓம்பல் = வழூவாமற் போற்றுக. எ-று.

செவ்வனிறையும் இறைபயப்பதுவுமெனச் செப்புஇருவகைத்து. அவற்றுள் இறைபயப்பனதாம் வினவெதிர்வினாதலும் ஏவுதலும் மறுத்தலும் உற்றதுரைத்தலும் உறுவதுகூறலும் உடம்படுதலுஞ் சொற்றொகுத்திறுத்தலுஞ் சொல்லாதிறுத்தலுமென எண்வகை. உயிரெத்தன்மைத்தென்று வினயவழி உணர்தற்றன்மைத்தென்றல் செவ்வனிறையாம். உண்டியோவென்று வினயவழி வயிறுகுத்திற்றென்றலும் உற்றதுரைத்தலாய் உண்ணேனென்பது பயத்தலின் இறைபயப்பதாம். கடம்பூர்க்குவழியாதோவெனில் இடம்பூணியென்றவின்கன்று என்றல் செப்புவழுவாம்.

அறியான்வினாவும் ஐயவினாவும் அறிபொருள்வினாவுமென வினா மூவகைத்து. உயிரெத்தன்மைத்தென்றல் அறியான்வினா. ஒருவாற்றானும் அறியப்படாத பொருள் வினவப்படாமையிற் பொது வகையான் உணர்ந்து சிறப்புவகையான் அறியாமையின் வினவினானென்று உணர்க. குற்றியோ மகனோ தோன்றுகின்ற உரு என்பது ஐயவினா. அறியப்பட்டபொருளை வேறறிதலும் அறிவுறுத்தலும் முதலிய பயனோக்கி வினாதல் அறிபொருள்வினா. இவ்வறிபொருள் வினாவின்கண்ணே அறிவொப்புக்காண்டலும் அவனறிவுதான்காண்டலும் மெய்யவற்குக்காட்டலும் அடங்கின.

ஒருவிரல் காட்டி நெடிதோகுறிதோவென்றலுங் கறக்கின்ற எருமை சினையோபாலோவென்றலும் பிறவும் வினாவழுவாம்.

செப்பு ஆசிரியன்கண்ணதாகலானும் வினாவின்றியுஞ் செப்பு நிகழ்தலானுஞ் செப்பு முற்கூறினர்.

செவ்வனிறையும் அறியான்வினாவும் ஐயவினாவும் வழாநிலை யாதலின் வழாஅலோம்பலென்பதனாற் கொள்க. ஏனைய வழுவமைப் புழிக் காண்க. (கங)

கச. வினாவுஞ் செப்பே வினாவெதிர் வரினே.

இது வழுவமைக்கின்றது.

(இ - ள்.) வினா எதிர்வரின்=வினாப்பொருளை ஒருவாற்றான் அறிவுறுத்து வினாவிற்கு மறுமொழியாய் வரின்; வினாவுஞ் செப்பு= வினாத்தானுஞ் செப்பாம். எ-று.

சாத்தா உண்டியோ என்று வினயவழி உண்ணேனோ என வரும் வினா வினாவாய்பாட்டால் வந்ததேனும் உண்பேனென்னும் பொருள்பட வருதலிற் செப்பாயிற்று. இது வினாவெதிர்வினாதல்.()

கரு. செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
யப்பொருள் புணர்ந்த கிளவி யான.

இதுவும் அது.

(இ - ள்.) செப்பே வழீஇயினும் வரைநிலையின்று=செவ்வனிறையாகாது செப்பு வழுவிவரினுங் கடியப்படாது: அப்பொருள் புணர்ந்த கிளவியான=ஒருவாற்றான் அவ்வினயபொருட்கு இயைவுபட்ட கிளவியாதற்கண். எ-று.

சாத்தா உண்டியோ என்று வினயவழி வயிறுகுத்திற்றென உற்றதுரைத்தலும் வயிறுகுத்துகின்றதென மறுத்தலும் நீயுண்ணென ஏவுதலும் வயிறுகுத்துமென உறுவதுகூறலும் பசித்தேனென்றும் பொழுதாயிற்றென்றும் உடம்படுதலும் ஒருவாற்றான் வினயபொருளை அறிவுறுத்தன. குமரியாடிப்போந்தேன் ஒருபிடிசோறுதம்மின் என்பது சொல்லாதிறுத்தல். சொற்றொகுத்திறுத்தல் "எப்பொருளாயினும்" என்புழியும் "அப்பொருள்" என்புழியுங் கூறுப.

செப்பே எனநின்ற ஏகாரம் பிரிநிலையேகாரம், வினாநிற்பச் செப்பைவாங்கிக்கொண்டமைத்தலின். உம்மை சிறப்பும்மை.

செப்பு வழுவினும் அமைக. வினா வழீஇயின இடத்து அமை யாதாம். (கரு)

கசு. செப்பினும் வினாவினுஞ் சினைமுதற் கிளவிக்
கப்பொரு ளாகு முறழ்துணைப் பொருளே.

இது செப்பிற்கும் வினாவிற்கும் மரபு கூறுகின்றது.

(இ - ள்.) செப்பினும் வினாவினும்=செப்பின்கண்ணும் வினாவின்கண்ணும்: சினைமுதற் கிளவிக்கு=சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும்: உறழ்துணைப்பொருளே=ஒப்புமை கருதாது மாறுபடக் கூறும்பொருளும் ஒப்புமை கூறப்படும் பொருளும்: அப்பொருளாகும்=அவ்வப்பொருளுக்கு அவ்வப்பொருளேயாம். எ-று.

இவள்கண்ணின் இவள்கண் பெரிய, நும்மரசனின் எம்மரசன் முறைசெய்யும், இவள்கண்ணின் இவள்கண் பெரியவோ, எம்மரசனின் நும்மரசன் முறைசெய்யுமோ, இவள்கண்ணொக்கும் இவள் கண், எம்மரசனையொக்கும் நும்மரசன், இவள்கண்ணொக்குமோ இவள்கண், எம்மரசனையொக்குமோ நும்மரசன் எனவரும்.

தன்னினமுடித்தலென்பதனான் எண்ணுங்காலுந் துகிரும் முத்தும் பொன்னுமென இனமொத்தன எண்ணுக. முத்துங் கருவிருந்தையுங் கானங்கோழியும் பொன்னுமென்று எண்ணற்க. (கசு)

கள. தகுதியும் வழக்குந் தழீஇயின வொழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே.

இது மரபுவழுவமையுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) தகுதியும் வழக்குந் தழீஇயின ஒழுகும்=ஒருபொருட்கு உரியசொல்லாற் பட்டாங்கே சொல்லுதல் நீர்மையன்றென்று அது களைந்து அதற்குத்தக்கதோர் வாய்பாட்டாற் கூறுதலையும் ஒரு காரணமின்றி வழங்கற்பாடேபற்றி வருவதனையும் பற்றிநடக்கும்: பகுதிக் கிளவி=இலக்கணத்திற் பக்கச்சொல்: வரைநிலையில=கடியப்படா. எ-று.

செத்தாரைத் துஞ்சினாரென்றலும் ஓலையைத் திருமுகமென்றலுஞ் சுடுகாட்டை நன்காடென்றலுங் கெட்டதனைப் பெருகிற்

றென்றலும் போல்வன தகுதி. பண்புகுறியாது சாதிப்பெயராய் வெள்யாடு வெண்களமர் கருங்களமர் என வருவனவுங் குடத்துள் ளும் பிறகலத்துள்ளும் இருந்தநீரைச் சிறிதென்னுது சிலவெனற லும் அடுப்பின் கீழ்ப்புடையை மீயடுப்பென்றலும் போல்வன வழக்காம். (கஎ)

கஅ. இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயாக்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே.

இது செய்யுட்கு மரபுவழுவமைதி கூறுகின்றது.

(இ - ள்.) இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை= இனத்தைச்சுட்டி அவற்றினின்றும் விசேடிக்கப்படுதலில்லாத பண்பு அடுத்து வழங்கப்படும் பெயரை ஒருபொருட்குக் கொடுத்தல்: வழக் காறு அல்ல செய்யுளாறு=வழக்குநெறியல்ல செய்யுணெறி. எ-று.

"செஞ்ஞாயிற்று நிலவுவேண்டினும் வெண்டிங்களுள் வெயில் வேண்டினும்" என இவை கருஞாயிறுங் கருந்திங்களுமாகிய இன மின்மையின் விசேடிக்கப்படாவாயினுஞ் செய்யுட்கு அணியாய் நிற்றலின் அமைத்தார். எனவே வழக்கின்கட் பண்புகொள்பெயா இனங்குறித்து வருதல் மரபென்பதூஉஞ் செய்யுட்கண் வழீஇயமை தல் மரபென்பதூஉங் கூறியவாறாயிற்று.

பண்பு அடாது "வடவேங்கடந் தென்குமரி" முட்டாழை கோட்சுறு எனத் திசையும் உறுப்புந் தொழிலும் முதலிய அடை யடுத்து இனஞ்சுட்டாது வருவன ஒன்றெனமுடித்தலாற் செய்யு ளாறென அமைக்க. (கஅ)

கக. இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல்.

இஃது இயற்கைப்பொருட்கண் மரபுவழுவாமை கூறுகின்றது.

(இ - ள்.) இயற்கைப் பொருளை=பொருட்குப்பின் தோன்றாது உடனிகழுந் தன்மைத்தாய பொருளை அதன் இயல்புகூறுங்கால்: இற்றெனக் கிளத்தல்=ஆக்கமுங் காரணமுங் கொடாது இற்றெனச் சொல்லுக. எ-று.

நிலம்வலிது நீர்தண்ணிது தீவெய்யது வளியுளரும் உயிருண ரும் எனவரும். சேற்றுநிலம் மிதித்து வன்னிலம் மிதித்தான் நிலம் வலிதாயிற்றென்றவழி மெலிதாயது வலிதாய் வேறுபட்டதென ஆக்

கம் வேறுபாடு குறித்து நிற்றலின் இயற்கைப்பொருள் ஆக்கமொடு வந்ததன்றாம். (கக)

உ0. செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறல்.

இது செயற்கைப்பொருண்மேல் மரபுவழுவாமை கூறுகின்றது.

(இ - ள்.) செயற்கைப் பொருளை=காரணத்தாற் தன்மை திரிந்த பொருளைத் திரிபு கூறுங்கால்; ஆக்கமொடு கூறல்=ஆக்கங் கொடுத்துச் சொல்லுக. எ-று. (உ0)

உக. ஆக்கந் தானே காரண முதற்றே.

இது மேலதற்கோர் புறனடை.

(இ - ள்.) ஆக்கந்தானே=செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூறுங்கால் அவ்வாக்கச்சொற்றான்: காரணமுதற்று = காரணச் சொல்லை முன்னாக உடைத்து. எ-று.

உ-ம். கடுக்கலந்த கைபிழியெண்ணெய் பெற்றமையான் மயிர் நல்லவாயின, எருப்பெய்து இளங்களைகட்டு நீர் கால்யாத்தமையாற் பைங்கூழ்நல்லவாயின எனவரும். மயிர்நல்ல பைங்கூழ்நல்லவென ஆக்கமின்றிவந்தது பொருட்குப்பின் தோன்றாது உடன்தோன்றி நிற்றலின் இயற்கைப்பொருளாம். அவ்வாறன்றி முன் தீயவாய்ப் பின் நல்லவாயினவழி அத்தீமைகாணாதான் மயிர் நல்லவெனினும் இழுக்கின்று, அச்செயற்கை உணராமற் கூறலின். (உக)

உஉ. ஆக்கக் கிளவி காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.

இஃது எய்தியது விலக்கிற்று.

(இ - ள்.) ஆக்கக் கிளவி=காரணமுதற்று என்ற ஆக்கச்சொல்: காரணமின்றியும் போக்கின்றென்ப=காரணமின்றிவரினுங் குற்றமின்றென்று கூறுப: வழக்கினுள்ளே=வழக்கிடத்து. எ-று.

உ-ம். மயிர் நல்லவாயின, பயிர் நல்லவாயின எனவரும்.

எனவே செய்யுட்குக் காரணம்பெற்றே வருமாயிற்று.

"வருமழைய வாய்க்கொள்ளும் வாடாச்சீர் வண்கைக் - கரு முருகன் சூடிய கண்ணி - திருநுதாஅ - லின்றென் குறக்கூந்தற் பெய்

தமையாற் பண்டைத்தன் - சாயல்வாயினதோள்.'' என இது காரண மும் ஆக்கமும் பெற்றது. "குருதி படிந்துண்ட காக முருவிழந்து குக்கிற் புறத்த சிரல்வாய'' என இதற்கு ஆக்கம் விகாரத்தாற் றொக்கதென்று உணர்க. "அரிய கானஞ் சென்றோர்க்-கெளிய வாகிய தடமென் றோளே'' இதற்குக் கற்புக்காலத்தாற் தோள் எளியவா யின என அக்காலங் காரணமாயிற்று.

உம்மை எதிர்மறையாகலாற் காரணங்கொடுத்துச் சொல்லு தலே வலியுடைத்து. (உஉ)

உங. பான்மயக் குற்ற வையக் கிளவி
தானறி பொருள்வயிற் பன்மை கூறல.

இது மேல் இயற்கை செயற்கையெனப் பகுத்த பொருள்க ளுட் திணையுணர்ந்து பாலையந் தோன்றியவழி அவ ஐயப்பொருண் மேற் சொல் நிகழ்த்துமாறு கூறுகின்றது.

(இ-ள்.) பால் மயக்குற்ற ஐயக்கிளவி = திணை துணிந்து பால் து ணியாதுநின்ற ஐயப்பொருளை: தானறிபொருள்வயிற் பன்மைகூறல் = தானறிந்த உயர்திணைப்பொருளிடத்துப் பன்மையாற் கூறுக. எ-று.

ஐயப்பொருளாவது சிறப்பியல்பாற் தோன்றாது பொது இயல் பாற் தோன்றிய பொருள். ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டி கொல்லோ தோன்றுகின்றவர் எனவரும். திணைவயினென்னாது தான றிபொருள்வயினெனப் பொதுப்படக் கூறிய அதனால் ஒருவன் கொல்லோ பலர்கொல்லோ இக்கறவையுய்த்த கள்வர், ஒருத்தி கொல்லோ பலர்கொல்லோ இக்குருக்கத்திநீழல் வண்டல் அயர்ந் தார் எனத் திணையோடு ஆண்மைபெண்மை துணிந்த பன்மையொ ருமைப்பாலையமுங் கொள்க. அப்பொருட்கு இருபாலுமாய் நிற்ற லின்மையிற் தான் ஒன்றாகியபொருளைப் பன்மையாகக் கூறினும அமைகவென வழுவமைத்தார். (உங)

உச. உருவென மொழியினு மஃறிணைப் பிரிப்பினு
மிருவீற்று முரித்தே சுட்டுங் காலை.

இதுவும் ஐயப்பொருண்மேற் சொல் நிகழ்த்துமாறு கூறு கின்றது.

(இ - ள்.) இரு ஈற்றுஞ் சுட்டுங்காலை = திணையையத்துக்கண் ணும் அஃறிணைப்பாலையத்துக்கண்ணுங் கூறும் மரபு கருதுமிடத்து:

உருவெனமொழியினும்=இணையயத்துக்கண் உருவெனச்சொல்லும் இடத்தும்: அஃறிணைப் பிரிப்பினும்=ஒருமையும்பன்மையுமாகப் பிரிக்கப்படும்அஃறிணையியற்பெயராகிய பொதுச்சொற்கண்ணும்: உரித்து= ஐயத்தைப் புலப்படுத்தும் பொதுவாகியதன்மை உரித்து. எ-று.

குற்றிகொல்லோ மகன்கொல்லோ இத்தோன்றுநின்ற உரு, ஒன்றுகொல்லோ பலகொல்லோ இச்செய்புக்க பெற்றம் எனவரும்.

உருவினுமென்னது உருவென மொழியினுமென்றதனன் உருவின் பொருளவாகிய வடிவு பிழம்பு பிண்டமென்னுந் தொடக்கத்தனவுங் கொள்க. உருவுமுதலியன உயர்திணைப் பன்மையொருமைப்பால் ஐயத்திற்கு ஏலாமையும் ஏனைத் திணையயத்திற்கு ஏற்புடைமையுந் தோன்றச் சுட்டுங்காலையென்றார். உருபு எனப் பகரவுகரமாகப் பாடமோதில் அது வேற்றுமையுருபிற்கும் உவமவுருபிற்கும் பெயராய வடிவை உணர்த்தாதென்று உணர்க. "அதுவெனுருபுகெட" எனவும் "உருபினும்பொருளினுமெய்தடுமாறி" எனவும் "உருபுதொடர்ந்தடுக்கிய" எனவும் "உருபுதொகவருதலும" எனவும் "மெய்யுருபுதொகா" எனவும் "யாதனுருபின்" எனவும் பிறாண்டும் வேற்றுமைக்கு உருபென்றே சூத்திரஞ்செய்தவாறு காண்க. உவமவுருபெனறல் அவவோத்திற் கூறிய உரைகளான் உணர்க. அன்றியுஞ் சான்றோர் செய்யுட்களிலும் "உருவுகிளரொளிவினை" எனவும் "ஞாயிற்றுருவுகிளர்வண்ணங்கொண்ட" எனவும் "உருவக்குதிரை" எனவும் "வேண்டுருவங்கொண்டதோர்கூற்றங்கொல்" எனவும் பிறாண்டுங் கூறுமாற்றான் உணர்க. உருவென்பது உடலுயிர்க்கூட்டப் பொதுமையாகிய மக்களென்னும் பொதுமைக்கு ஏலாது உடலையே உணர்த்துதலானும் பெற்றமென்பது இயற்பெயராயினும் ஒருகாற்சொல்லுதற்கண் ஒருபால்மேல் நில்லாது இருபால்மேல் நிற்றலானும் வழுவமைதியாயிற்று. (உச)

உரு. தன்மை சுட்டலு முரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான.

இது முன்னர்க்கூறிய பாலையத்தையுந் திணையயத்தையுந் துணிந்துகூறும்வழி அவற்றிற்கு அன்மைத்தன்மைகூறும் மரபுகூறுகின்றது.

(இ - ள்.) தன்மை சுட்டலும் உரித்து=ஒருவர்க்குப் பாலையமுந் திணையயமும் நிகழ்ந்துழி அங்ஙனம் ஐயுறலேயன்றி அவர்க்கு

அப்பொருள்களின் உண்மைத்தன்மையைக் கருதுதலும் உரித்து: 'அன்மைக்கிளவி வேறிடத்தான என மொழிப=ஆண்டு ஒருபொருள் ஒருபொருளல்லவாந் தன்மை உணர்த்துஞ் சொல் ஐயத்துக்கு வேறாய்த் துணிந்து தழீஇக்கொண்ட பொருளின்கண்ணவென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

இவன் பெண்டாட்டியல்லன் ஆண்மகன், இவள் ஆண்மகனல்லள் பெண்டாட்டி, இவன் குற்றியல்லன் மகன், இவ்வுரு மகனன்று குற்றி, இப்பெற்றம் பலவன்று ஒன்று, இப்பெற்றம் ஒன்றல்ல பல எனவரும். இவனென்னும் எழுவாய் அல்லனென்பதனோடு முடிந்தது. மகனென்பது இவனென்னுஞ் சுட்டுப்பெயர்க்குப் பெயர்ப்பயனிலையாய் நின்றது. இவற்றிற்கு ஐந்தாமுருபு விரித்தலுமொன்று, பெண்டாட்டியின் அல்லனென.

இனிச் சேனாவரையர் முன்னிற்சூத்திரத்தில் உருவென்பதனை ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டிகொல்லோ இத்தோன்றாநின்ற உருவெனப் பாலையத்திற்கு உருவென்னும் ஐயப்புலப்பொதுச்சொல் உரித்தென்று உதாரணங்காட்டி, இச்சூத்திரத்தில் அன்மைக்கிளவி மறுக்கப்படும்பொருண்மேலாமென்று கூறினாராலெனின், அவர் உதாரணங்காட்டியவற்றில் ஆண்மகனென்று துணிந்தவழிப் பெண்டாட்டியல்லள் ஆண்மகனென்றும் பெண்டாட்டியென்று துணிந்தவழி ஆண்மகனல்லன் பெண்டாட்டியென்றும் மறுக்கப்படும் பொருண்மேல் அன்மைகூறி அவற்றிற்கு இவ்வுருவு பெண்டாட்டியல்லள் ஆண்மகனென்றும் இவ்வுருவு ஆண்மகனல்லன் பெண்டாட்டியென்றும் உருவென்னுஞ்சொற் கூட்டியே பொருண்முடிக்கவேண்டுதலின் உருவென்னும் அஃறிணைப்பெயர் அல்லன் அல்லள் என்னும் உயர்திணைவினைக்குறிப்போடு முடியாமை உணர்க. அன்றியும் இவன் பெண்டாட்டியல்லள ஆண்மகன், இவள் ஆண்மகனல்லன் பெண்டாட்டி என அவர் சொல்முடித்தற்குக் கூட்டிய சுட்டுப்பெயர் கூட்டினும் முடியாமையும் உணர்க. இனிக் குற்றியோ மகனோவென்று ஐயுற்றான் மகனென்று துணிந்தது மக்கட்டன்மையை ஆண்டுப்பெற்றன்றே? அது பெறவே குற்றித்தன்மை ஆண்டு இல்லையாயிற்று. ஆண்டு இல்லாத குற்றித்தன்மையனல்லன் மகனாதலான் அஃதல்லாதான்மேல் அன்மையேற்றுதலே ஆசிரியர் கருத்தென்று உணர்க. இனிக்குற்றியென்று துணியினும் இஃது ஒக்கும். உம்மை எண்ணும்மை. (உ௫)

உசு. அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.

இது வண்ணச்சினைச்சொற்கண் மரபுகூறுகின்றது.

(இ - ள்.) அடை சினை முதலென மூன்றும்=பண்புச்சொல் லுஞ் சினைச்சொல்லும் முதற்சொல்லுமென்ற மூன்றும்: முறை மயங்காமை நடைபெற்று இயலும்=கூறப்பட்ட முறை மயங்காமை வழக்கைப் பொருந்திநடக்கும்: வண்ணச் சினைச்சொல்=வண்ணம் முதலாகிய பண்புகளோடு தொடர்ந்த சினைச்சொல்லையுடைய முதற் சொல். எ-று.

மீட்டும் வண்ணச்சினைச்சொல்லென்றது அச்சொற்குப் பெயர் கூறிற்று.

உ-ம். செங்காலுரை பெருந்தலைச்சாத்தன் என வழக்கினுள் மயங்காதெனவே செய்யுளுட் "கவிசெந் தாழைக் குவிபுறத் திருந்த-செவிசெஞ் சேவலும் பொருவலும் வெருவா-வாய்வன் காக்கையுங் கூகையுங் கூடி" என மயங்கியும் வருமாயிற்று. சினையொடு முதற்கு ஒற்றுமையுடைமையான் முதலொடும் இயைந்தன. "பெருந்தோட் சிறுநுசுப்பிற் பேரமர்க்கட் பேதை" என்பதும் அவ்வாறே மயங்கிவந் தது, செய்யுளாதலின். பெருவழுதுணங்காயென்பது பெருமை முதன்மேலே கூறுதலிற் சொல்லுவான்கருத்து வேறாயிற்று. இன் னும் வழக்கினுள் மயங்காதென்றதனாற் சிறுபைந்தூவியெனச் சினை யோடு குணம் இரண்டு அடுத்தல் செய்யுளாறென்க. இளம்பெருங் கூத்தன் என்பது சினையின்மையின் வேண்டியவாறு வந்தது.(உசு)

உஎ. ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியு
மொன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி
யிலக்கண மருங்கிற் சொல்லா றல்ல.

இது பால்வழுவுந் திணைவழுவும் அமைக்கின்றது.

(இ - ள்.) ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்=ஒருவனை யும் ஒருத்தியையுஞ் சொல்லும் பன்மைச்சொல்லும்: ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்=ஒன்றனை உயர்திணைப்பன்மையாகச் சொல்லும் பன்மைச்சொல்லும்: வழக்கினாகிய உயர்சொற் கிளவி=

வழக்கினுள்ளவாகிய உயர்த்துச்சொல்லுஞ் சொல்லாம்: இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல=இலக்கணமுறைமையாற் சொல்லும் நெறி யல்ல. எ-று.

வழக்கினுகிய எனவே வழுவமைதிபெற்ரும்.

உயர்சொல் உபர்க்குஞ்சொல். ஒருவனையுந் தாம்வந்தாரென்ப, ஒருத்தியையுந் தாமவந்தாரென்ப, ஒன்றனையுந் தாம்வந்தாரென்ப.

உ-ம். யாம்வந்தேம் நீர்வந்தீர் இவர்வந்தார் எனவரும்.

தாம்வந்தார்தொண்டனுரென்பது உயர்சொற் குறிப்புநிலையின் இழிபு விளக்கிற்று.

'இலக்கணமருங்கிற் சொல்லாறல்ல' என்ற மிகையான் ஓர் எருத்தை எந்தைவந்தான் எனவும் ஓர் ஆவை எம் அன்னைவந்தாள் எனவுங் "கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர-வின்னே வருகுவர் தாயர்" எனவும் ஒப்புமைகருதாது காதல்பற்றி உயர்த்துவழங்கலுங், கன்னிநறுஞாழல் கன்னியெயிலெனவும் ஓர் எருத்தை நம்பியெனவும் ஒருகிளியை நங்கையெனவும் அஃறிணையை உயர்திணைவாய்பாட்டாற் கூறலும் பண்புகொள்பெயர்க்கொடை. வழக்கினகத்துப் பெருங்கொற்றன் பெருஞ்சாத்தன் என இல்குணம் அடுத்து உயர்த்துக்கூறலுங் கொள்க. என் பாவை வந்ததென்பது ஆகுபெயர், அஃது ஒப்புள்வழிக் கூறியது. (உஎ)

உஅ. செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினு
நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னு
மம்மூ விடத்து முரிய வென்ப.

இஃது இடம்பற்றிநிகழுஞ் சொற்களுக்குப் பொதுவிதி கூறுகின்றது.

(இ-ள்.) செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும் நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்=செலவுமுதலிய நான்கு வினையானும் இடம் நிலைபெறப் புலப்படாநின்ற அந்நான்குசொல்லும்: தன்மை முன்னிலை படர்க்கை என்னும் அம்மூவிடத்தும் உரிய வென்ப=தன்மை முன்னிலை படர்க்கையென்னும் அம்மூவிடத்திற்கும் உரியவாய் வருமென்று கூறுவர் புலவர். எ-று.

ஈங்குமுதலியன தன்மைக்கண்ணும் ஆங்குமுதலியன படர்க்கைக்கண்ணும் அடக்கப்பட்டன.

வினைச்சொல் பாலுணர்த்தும் ஈற்றான் மூன்றிடத்திற்கும் உரிமை வினையியலுட் கூறிச், செலவுமுதலியன முதனிலைதாமே இடம் உணர்த்திநிற்றலின் ஈண்டுக்கூறினார் அவற்றுள் அடங்காமையின். (உ௮)

உ௯. அவற்றுட், டருசொல் வருசொ லாயிரு கிளவியுந் தன்மை முன்னிலை யாயீ ரிடத்த.

இஃது அவற்றுட் சிலவற்றிற்குச் சிறப்பிலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுட் தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்=முற்கூறிய நான்குசொல்லினுட் தருசொல்லும் வருசொல்லுமாகிய இரண்டுசொல்லும்: தன்மை முன்னிலை ஆயீரிடத்த=தன்மை முன்னிலையாகிய அவவிரண்டிடத்திற்கும் உரிய. எ-று.

எனக்குத்தந்தான் நினக்குத்தந்தான் என்னுழைவந்தான் நின்னுழைவந்தான் ஈங்குவந்தான் என ஈற்றானன்றித் தரவும் வரவுமாகிய வினை தன்கண்ணும் முன்னின்றான்கண்ணுஞ் சென்றன. முன்னிற்குத்திரத்துப் பொதுவிதியான் மூன்றிடத்தும் வரைவின்றி ஆமெனவுங் கொள்ளவைத்தமையாற் "பெருவிறலமரர்க்குவென்றி தந்த" "புன்றருபசுங்காய்தின்ற" "தூண்டில்வேட்டுவன்வாங்கவாராது" "அரிமலர்ந்தன்னகண்ணம்மாகடைசி - திருமுகமுந்திங்களுஞ் சேத்துத் - தெருமந்து - வையத்தும்வானத்துஞ்செல்லாதனங்காகி - யையத்துநின்றதரா" என மயங்குவனவும் அமைக.

தரவு வரவு உணர்த்துஞ் சொல்லென்பது பொருள். (உ௯)

௩௦. ஏனை யிரண்டு மேனை யிடத்த.

இதுவும் அது.

(இ - ள்.) ஏனை இரண்டும்=செலவுச்சொல்லுங் கொடைச்சொல்லும்: ஏனை இடத்த=படர்க்கைக்கு உரிய. எ-று.

அவன்கட்சென்றான், ஆங்குச்சென்றான், அவர்க்குக்கொடுத்தான் என ஈற்றானன்றிச் செலவுத்தொழிலுங் கொடைப்பொருளும் படர்க்கையான்கட் சென்றுற்றன. (௩௦)

௩௧. யாதெவ னென்னு மாயிரு கிளவியு
மறியாப் பொருள்வயிற் செறியத் தோன்றும்.

இஃது அறியாப்பொருண்மேற் சொல் நிகழ்த்தும் மரபு கூறுகின்றது.

(இ - ள்.) யாது எவன் என்னும் ஆயிரு கிளவியும்=யாது எவன் என்று சொல்லப்படும் அவ்விரண்டுசொல்லும்: அறியாப்பொருள்வயின் செறியத் தோன்றும்=அறியாப்பொருளிடத்து ஒருவன் வினவும் வினாவாய் யாப்புறத் தோன்றும். எ-று.

இச்சொற்குப்பொருள்யாது, இச்சொற்குப்பொருளெவன்; இது பொதுவகையான் உணரப்பட்டுச் சிறப்புவகையான் உணர்த்தப்படாத பொருளாம். இக்காலத்து எவனென்பது என்னென்றும் என்னையென்றும் மருவிற்று.

யாவன் யாவள் யாவர் யார் யா யாவை யாண்டு யாங்கு எப்பொருள் என்பன திணைபால் முதலியன உணர்த்தலின் அறியாப் பொருள்வயிற் செறியத்தோன்றாவாயின. ஆயின் யாது எவனென்பனவற்றிற்கும் அவை உளவாலெனின், வினவுகின்றான் அஃறிணையொருமையும் பன்மையுந்துணிந்து அவற்றின் பகுதியறிதற்கு வினவுகின்றானல்லன் பொதுவகையான் வினவுகின்றானென்று அறிவுறுக்குமாறு வழக்குநோக்கிஉணர்க. (௩௧)

௩௨. அவற்றுள், யாதென வரூஉம் வினாவின் கிளவி
யறிந்த பொருள்வயி னையந் தீர்தற்குத்
தெரிந்த கிளவி யாதலு முரித்தே.

இஃது அவற்றுள் ஒன்று அறிந்தவழியும் வருமென்று அறிந்து காக்கின்றது. எனவே மரபுகூறிற்றாம்.

(இ - ள்.) அவற்றுள் யாது என வரூஉம் வினாவின் கிளவி= அக்கூறப்பட்ட இரண்டனுள் யாதென்னும் வினாச்சொல் அறியாப் பொருளை வினாதலேயன்றி: அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத் தெரிந்த கிளவியாதலும் உரித்து=அறிந்தபொருட்கண் ஐயந் தீர்தற்கு ஆராய்ந்த சொல்லாதலும் உரித்து. எ-று.

நம்மெருது ஐந்தனுட் கெட்ட எருது யாது எனவரும். இஃது அறிந்த பொருட்கண் ஐயந்தீர்தலின் வழூவமைதியன்று.

முன்னிற் சூத்திரத்துள் யாதென்பதனை இச்சூத்திரத்தோடு பொருந்தப் பின்வையாததனாற் செறியத்தோன்றுதனவற்றினும் வருவனகொள்க. நமருள் யாவன் போயினான் என எல்லாவற்றோடும் ஒட்டுக.

இனிக் "கடிசொல்லில்லை" என்பதனால், நமருள் எவன்போயினான், அவற்றுள் எவ்வெருது கெட்டது என்பனவுங் கொள்க.

உம்மை எதிர்மறையாகலான் ஐயத்தாய் நிற்றல் வலியுடைத்து.

௩௩. இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்.

இது வரையறையுடையது தொகைபெறும்வழிப் படுவதோர் மரபுகூறுகின்றது.

(இ - ள்.) இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு=கேட்போரால் இத்துணையென்று அறியப்பட்ட சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும்: வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்=முடிக்குஞ்சொல்லோடு படுந்தொகுதிக்கண் உம்மைகொடுத்துச் சொல்லுக.எ-று.

நம்பி கண்ணிரண்டும் நொந்தன, தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார் எனச் சினைமுதற்கிளவிகள் தாமே வினைப்பட்டமையின் உம்மைவேண்டின. "பன்னிரு கையும் பாற்பட வியற்றி" இது பிற வினைப்படுத்தினது. "முரசுமுழங்கு தானை மூவருங் கூடி" இது தானே வினைப்பட்டது. பன்னிரண்டென்னுந் தொகுதியுங் கையும் இயற்றியென்பதன்மேல் வருதலிற் கையென்பதனோடு இயைந்த இயற்றியென்னும் வினை தொகைப்பெயரோடும் இயைந்ததாம். ஐந்தலை நாகம் உடன்றது என்பதற்கு நாகம் வினைப்படுதொகுதியன்று, முடிக்குஞ்சொல்லன்மையின். இனிக் கண்ணிரண்டுங் குருடு எருதிரண்டும் மூரி எனப் பெயர்கொண்டவழிப் பெயரும் முடிக்குஞ்சொல்லேயாம். சுவையாறும் உடைத்து இவ்வடிசில், கதியைந்தும் உடைத்து இக்குதிரை எனச் சிறவாத பண்புமுதலியன பற்றிவருவனவுங் கொள்க. "இருதோடோழர்பற்ற" என்பது பிறரால் வினைப்படுக்கப்பட்டது. இதற்கு உம்மை விகாரத்தாற் தொக்கது, செய்யுளாதலின். இத்துணையென்று அறியாக்கால் முருகற்குக் கைபன்னிரண்டு என்று உம்மைபெறாதாம். "ஒண்குழையொன்றொல்கி யெருத்

தலைப்ப'' என்பது ஒன்றேனும் இனைத்தென அறிந்தபின் உம்மை வேண்டும். அது விகாரத்தாற் றொக்கது. (௩௩)

௩௪. மன்னுப் பொருளு மன்ன வியற்றே.

இது நிலையாப்பொருட்கண் மரபுநிகழ்த்துமாறு கூறுகின்றது.

(இ - ள்.) மன்னுப் பொருளும்=உலகத்து நிலையில்லாதபொருளும்: அன்ன இயற்று=அதுபோல உம்மைகொடுத்துக் கூறுதல் வேண்டும். எ-று.

பொருளும் என்ற எச்சவும்மையான் உலகத்தில்லாதபொருளும் இடமுங் காலமும் பொருளும் முதலியனவற்றோடு படுத்துக் கூறுதற்கண் உம்மைகொடுத்துக் கூறுதல்வேண்டுமென்று பொருளுரைத்துக்கொள்க. யாக்கையும் நிலையாதெனவே இளமையுஞ் செல்வமும் நிலையாதென்னும் பொருளும் உணர்த்தி எச்சவும்மையாய் நிற்கும் உம்மைபெறுதல் ஒப்புமையான் முற்றும்மையோடு எச்சவும்மையை மாட்டெறிந்தார்.

இனிப் பவளக்கோட்டுநீலயானை சாதவாகனன்கோவிலுள்ளுமில்லை, குருடுகாண்டலும் பகலுமில்லை, "உறற்பாலநீக்கலுறுவர்க்குமாகா" என இல்லாப்பொருள்களும் எச்சவும்மை பெற்றவாறு காண்க. இடமுதலியவற்றோடு வாராதவழி உம்மைபெறா. "மன்னுக பெருமநிலமிசையானே" எனவும் "மன்னுவுலகத்துமன்னுதல்குறித்தோர்" எனவும் "மன்னுப்பொருட்பிணிமுன்னிய" எனவும் மன்னுமை நிலையாமையை உணர்த்துதலன்றி இன்மையை யாண்டும் உணர்த்தாமை காண்க. (௩௪)

௩௫. எப்பொரு ளாயினு மல்ல தில்லெனி
னப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்.

இது வினயதன்புறத்துச் சொற்பல்காமற் சொற்சுருக்கிறுத்தலென்னுஞ் செப்பாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) எப்பொருளாயினும்=யாதானுமொருபொருளையாயினும்: அல்லது இல்லெனின்=தன்னுழை உள்ளதல்லதனை இல்லையெனலுறுமேயெனின்: அப்பொருளல்லாப் பிறிதுபொருள் கூறல்=அவன் வினயபொருடன்னையே கூறாது அதற்கு இனமாகிய பிறிதுபொருளைக் கூறி இல்லையென்க. எ-று.

நூறுவிற்கும் பட்டாடையுளவோ என்று வினாயினார்க்கு ஐம் பதுவிற்குங் கோசிகமல்லதில்லையென்றும், பயறுளவோ வணிகீர் என் றார்க்கு உழுந்தல்லதில்லைக் கொள்ளல்லதில்லையென்றுந் தன்னுழை உள்ளதல்லதனை இல்லையென்பான் பிறிதுபொருளைக் கூறினான்.

பயறுளவோ என்றவழி அல்லதென்பதொழியவும் பயறில்லை உழுந்துள என்றாற் படும் இழுக்கென்னையெனின், எப்பொருளாயி னுமென்றது ஐம்பாற்பொருளையாகலானும் அல்லதென்பது அஃறிணை யொருமைப்பாற்கு உரித்தேனும் மற்றைநான்குபாற்கண்ணும் பால் வழுவாயுந் திணைவழுவாயும் மயங்குதலானும் அதுகண்டு அதனை யமைத்தற்கு 'எப்பொருளாயினுமல்லதில்' என்றார். அவனல்லது அவளல்லது அவரல்லது அதுவல்லது அவையல்லது எனவரும். "நாணு நட்பு மில்லோர்த் தேறின் - யானல்ல தில்லையிவ் வுலகத் தானே" எனச் சான்றோர் செய்யுளுட் பயின்றுவருமாறும் உணர்க. அவனல்லது பிறனில்லையென மேல்வருஞ்சொல்லோடு படுத்து வழு வமைதியாதல் அறிக.

பயற்றான் முடிக்குங் குறை உழுந்தான் முடித்தலன்றிப் பாம் புணிக்கருங்கல்லான் முடித்தலாகாமையிற் பயறுளவோ என்றார்க் குப் பாம்புணிக்கருங்கலல்லதில்லையென்றல் பொருந்தாமை உணர்க.

௩௬. அப்பொருள் கூறிற் சுட்டிக் கூறல்.

இது மேலதற்கோர் புறனடையாயதோர் இறுத்தல்வகைமை உணர்த்துகின்றது.

(இ - ள்.) அப்பொருள் கூறின் = அல்லதில்லென்பான் பிறிது பொருள் கூறாது அப்பொருடன்னையே கூறுமாயின்: சுட்டிக் கூறல் = முன்னர்க் கிடந்தபொருளைச் சுட்டிச் சொல்லுக. எ-று.

இவையல்லதில்லை இப்பயறல்லதில்லை எனவரும். வினாயினான் பயற்றின் நன்மையுந் தீமையும் உணர்ந்து கோடற்குந் தவிர்தற் கும் இவ்வாறே கூறுக என்றார். சுட்டாவது பயறல்லதில்லையெ னிற் பயறு உள உழுந்துமுதலிய இல்லையெனப் பிறிதுபொருளேற் றத்துச் செப்புவழுவாம்.

தன்னினமுடித்தலென்பதனாற் பெரும்பயறல்லதில்லை பசும் பயறல்லதில்லை எனக் கிளந்து கூறுதலுங்கொள்க. (௩௬)

௩எ. பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்
பொருள்வேறு படாஅ தொன்றா கும்மே.

இது திணைவழு அமையுமாறும் ஒருபொருட்பெயர் சுட்டாய் நின்று அப்பொருளுணர்த்துவதோர் மரபுவழுவமைதியும் உணர்த்துகின்றது.

(இ - ள்.) சுட்டுப் பொருளோடு புணராவாயினும் ஆகும்=ஒரு சுட்டுத் தான் உணர்த்துதற்கு உரிய அஃறிணைப்பொருளை உணர்த்தாது உயர்திணைப்பொருளை உணர்த்திநிற்குமாயினும் ஆம்: பெயர் பொருளோடு புணராவாயினுஞ் சுட்டுப்பொருள் வேறுபடாது ஒன்றாகும்=சிலபொருட்பெயர் சுட்டுப்பொருளை உணர்த்தாவாயினுந் தாஞ் சுட்டுவதோர் பொருளிடத்து வேறுபடநில்லாமல் அப்பொருளையே உணர்த்திநிற்கும். எ-று.

"இஃதொத்தன்" என்றவழி இஃதென்றது அஃறிணைப்பொருளை உணர்த்தியசுட்டு இவனொருத்தனென உயர்திணைப்பொருளை உணர்த்தி நின்றவாறு காண்க. "இஃதோர்செல்வற்கொத்தனென" என்பதும் அது. "நாயிடைமுதுநீர்" என்னும் அகப்பாட்டினுள் "நாணி நின்றோ ணிலைகண் டியானும் - பேணினெ னல்லனோ மகிழ்ந வானத் - தணங் கருங் கடவுளன்னோ - ணின்மகன் றாயாதல் புரைவதா லெனவே" என்புழி நாணிநின்றோளென்னும் பொருட்பெயர் தன்றொடர்ப்பொருளைக்கொண்டு முடிந்தபின்னர் அப்பொருட்பெயர்மேல் ஒருகாரியங் கூறவேண்டியவழி அவளெனச் சுட்டிக்கூறுதல்வேண்டும், அங்ஙனங் கூறாது "வானத்தணங்கருங்கடவுளன்னோள்" என எல்லார்க்கும் பொதுவாயதோர் பெயராற் கூறினாளாயினுங் கூறுகின்றாள் பரத்தையைக் கருதியே கூறுதலின் அக்கடவுளன்னோளென்ற பெயருஞ் சுட்டுப்பெயர்த்தன்மையாய் நின்றவாறு காண்க. "அளிநிலை பெறாது" என்னும் அகப்பாட்டினுள் "ஒண்ணுத லுயிர்த்த காலை மணியுரு விழந்த தோற்றங் கண்டு கடிந்தனம்" என முடிந்தபின்னர் அவண்மேற் பின்னரும் ஒருகாரியங் கூறக் கருதிய தலைவன் ஒண்டொடியெனப் பொதுப்பெயராற் கூறினானேனும் அப்பெயர் அவளென்னும் பொருள் தந்துநின்றவாறு காண்க. "கொய்தளிர்த் தண்டலைக் கூற்றப் பெருஞ்சேந்தன் - வைகலு மேறும் வயக்களிறே - கைதொழுவல் - காலேக வண்ணனைக் கண்ணாரக் காணவெஞ்-சாலேகஞ் சார நட" "பொற்பூண்சுமந்தபுணர்மென்முலைக்கோடுபோழ-நற் பூங்கழலானிருதிங்கணயர்ந்தவாறுங்-கற்பாடழித்தகனமாமணித்தூண்

செய்தோளான்-வெற்பூடறுத்துவிரைவின்னெறிக்கொண்டவாறும்.''
என்றாற்போலப் பிறசெய்யுட்களுள்ளும் பொருட்பெயர் சுட்டுப்
பெயர்ப்பொருளவாய் வருதல் பெரும்பான்மையென்று உணர்க.

"வையைக்கிழவன் வயங்குதார்மாண்கலந் - தையலாயின்றுநீ
நலகினை நல்காயேற் - கூடலார்கோவொடு நீயும்படுதியோ - நாடறியக்
கௌவை யொருங்கு.'' என்புழிக் கூடலார்கோ என்றாற்போலப்
பின் பொருட்பெயர் பொதுவாய்நில்லாது அப்பொருளையே விளக்
கிச் சுட்டாய்நிற்பனவும் ஒன்றென முடித்தலாற்கொள்க.

இச்சூத்திரத்திற்குப் பலருங் கூறும் பொருளெல்லாம் முன்
னிற் சூத்திரத்தாற் பெற்றவாறு காண்க.

உம்மை சிறப்பும்மை. அது வேறுபொருள்படுதன்மாலைத்தாயி
னும் பொருள் வேறுபடாது ஒன்றாகுமென்றவாறு. (௩௭)

௩௮. இயற்பெயர்க் கிளவியுஞ் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றிற்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவா
ரியற்பெயர் வழிய வென்மனார் புலவர்.

இஃது ஒருபொருளையுணர்த்தும் இருபெயர்வழுக் காக்கின்றது.

(இ - ள்.) இயற்பெயர்க்கிளவியுஞ் சுட்டுப்பெயர்க்கிளவியும்=
இயற்பெயராகியசொல்லுஞ் சுட்டுப்பெயராகியசொல்லும்: வினைக்கு
ஒருங்கு இயலுங் காலந் தோன்றில்=ஒன்றனையொன்று கொள்ளாது
இரண்டும் பிறிதுவினைகோடற்கு ஒருங்குநிகழுங் காலந் தோன்று
மாயின்: சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்=உலகத்தார் சுட்டுப்
பெயராகியசொல்லை முற்படக் கிளவார்: இயற்பெயர் வழிய என்ம
னார் புலவர்=இயற்பெயர்க்குப் பின்னாகக் கூறுவர் என்று சொல்லு
வர் புலவர். எ-று.

ஒருங்கியலும் என்றதனான் ஒருபொருளை உணர்த்துதல்கொள்க.
வழிய என்றதனான் இயற்பெயர்வழி நிற்றற்கு உரிய அகர இகரச்
சுட்டேகொள்க.

சாத்தன்வந்தான் அவற்குச்சோறுகொடுக்க, சாத்திவந்தாள்
அவட்குப்பூக்கொடுக்க எனவரும்.

அவன் வந்தான் சாத்தற்குச் சோறுகொடுக்க எனின் அவனுஞ் சாத்தனும் வேறாய் அவன்வருந்துணையுஞ் சாத்தன்சோறுபெறா திருந்தானாவான்செல்லும், அங்ஙனங் கூறற்க.

இனி இயற்பெயர்வழிய என்றமிகையான் இயற்பெயரல்லா உயர்திணைப்பெயர்க்கும் அஃறிணைப்பெயர்க்குஞ் சுட்டுப்பெயர் பின் வருதல்கொள்க. நம்பிவந்தான் அவற்குச்சோறுகொடுக்க, நங்கைவந் தாள் அவட்குப்பூக்கொடுக்க, எருதுவந்தது அதற்குப்புல்லிடுக, குதி ரை வந்தது அதற்குமுதிரைகொடுக்க எனவரும்.

தன்னினமுடித்தலென்பதனான் விரவுப்பெயருள் இயற்பெய ரொழிந்தனவுங் கொள்க. முடவன்வந்தான் அவற்குச்சோறுகொ டுக்க, முடத்திவந்தாள் அவட்குக் கூறைகொடுக்க எனவரும்.

வினைக்கொருங்கியலுமென்று வினைகூறுதலாற் பெயர்க்கு இயலாது முன்கூறினும் அமைகவென்பதாம். சாத்தனவன் அவன் சாத்தன் எனவரும். (௩அ)

௩௯. முற்படக் கிளத்தல் செய்யுளு ளுரித்தே.

இஃது எய்தியது விலக்கிற்று.

(இ - ள்.) முற்படக் கிளத்தல்=இயற்பெயருஞ் சுட்டுப்பெய ரும் வினைக்கு ஒருங்கியலும்வழிச் சுட்டுப்பெயரை முற்கூறுதல்: செய்யுளுள் உரித்து=செய்யுளிடத்து உரித்து. எ-று.

"அவனணங்கு நோய்செய்தா னாயிழாய் வேலன் - விறன்மிகு தார்ச்சேந்தன்பேர்வாழ்த்தி-முகனமர்ந்-தன்னையலர்கடப்பந்தாரணியி லென்னைகொல்-பின்னையதன்கண் விளைவு." சேந்தன் இயற்பெயர்.

௪0. சுட்டுமுத லாகிய காரணக் கிளவியுஞ்
சுட்டுப்பெய ரியற்கையிற் செறியத் தோன்றும்.

இதுவும் அச்சுட்டாராய்ச்சியே கூறுகின்றது.

(இ - ள்.) சுட்டுமுதலாகிய காரணக் கிளவியும்=சுட்டுப்பெயர் முதலாகிய காரணப்பொருண்மையை உணர்த்துஞ் சொல்லும்: உம் மையாற் காரணமின்றிவருஞ் சுட்டுப்பெயரும்; சுட்டுப்பெயர் இயற் கையிற் செறியத் தோன்றும்=சுட்டுப்பெயர்போலத் தன்னாற் சுட் டப்படுந் தொழிலை உணர்த்துஞ் சொற்குப்பின் கிளக்கப்படும். எ-று.

சுட்டுப்பெயரியற்கையெனவே, வழக்கிற்குப் பின்னுஞ் செய்யுட்கு முன்னும் நிற்குமென்பது பெற்றாம்.

சாத்தன் கையெழுதுமாறு வல்லன் அதனாற் றந்தை உவக்கும், சாத்தி சாந்தரைக்குமாறுவல்லள் அதனாற் கொண்டவன் உவக்கும்; இதனுட் சுட்டுமுதலாகிய காரணக்கிளவி உருபன்று, உருபேற்ற சுட்டுப்பெயரோடு ஒப்பதோர் இடைச்சொல்; என்னை? பிளவுபடாது ஒன்றுபட்டு இசைத்தலின்.

சாத்தன்வந்தான் அஃது அரசற்குத் துப்பாயிற்று, கிழவன் பிரிந்தான் அதனைக் கிழத்தி உணர்ந்திலள் என இவை காரணமின்றிவந்தன. (௪0)

௪௧. சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு
மியற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.

இதுவும் ஒருபொருளையுணர்த்தும் இருபெயர்வழுக் காக்கின்றது.

(இ - ள்.) சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்=வினைக்கு ஒருங்கியலும்வழிச் சிறப்பினாகிய பெயராய்நிற்றலையுடைய சொற்கும்: உம்மையாற் றவங் கல்வி குடி உறுப்புமுதலியவற்றான் ஆகிய சொற்கும்; இயற்பெயர்க்கிளவி முற்படக் கிளவார்=இயற்கைப்பெயராகிய சொல்லை உலகத்தார் முற்படக் கிளவார் பிற்படக்கிளப்பர். எ-று.

சிறப்பு மன்னர்முதலியோரால் பெறும் வரிசை. ஏனாதிநல்லுதடன், முனிவன் அகத்தியன், தெய்வப்புலவன் திருவள்ளுவன், சேரமான் சேரலாதான், சோழன் வன்கிள்ளி, பாண்டியன் மாறன், குருடன் கொற்றன் எனவரும்.

தச்சக்கொற்றன் தொழிலினானாகியபெயர்.

திருவிரவாசிரியனென்றாற்போல இயற்பெயர் முற்கூறுவனபிறவும் இக்காலத்தார் மயங்கக்கூறுவனபிறவுங் "கடிசொல்லில்லை" என்பதனாற் கொள்க. (௪௧)

௪௨. ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பி னொன்றிட னிலவே.

இஃது ஒருபொருளையுணர்த்தும் பலபெயர்வழுக் காக்கின்றது.

(இ - ள்.) ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி= ஒருபொருளையுணர்த்துதலைக் குறித்துவந்த பலபெயர்ச்சொற்கள்: தொழில் வேறு கிளப்பின்=ஒருதொழிலையே முடிபாகக் கூறாது பெயர்தோறும் வேறாகிய தொழில்களைக் கொடுத்து முடிப்பின்: ஒன்றிடன் இல=ஒருபொருளினவாய் ஒன்றுதலில. எ-று.

கிளவி கருவிக்கருத்தாவாய் நின்றது. ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன்வந்தான் என்னாது ஆசிரியன் வந்தான், பேரூர்கிழான் உண்டான், செயிற்றியன் சென்றான் என வேறுவேறு முடிக்குஞ்சொற் கொடுப்பின் ஒருவனாகாது வேறு வேறுபொருளாம்.

"எந்தைவருகவெம்பெருமான்வருக" என்றாற்போல்வன காதல் பற்றிப் பலகால் ஒருதொழிலே வந்தனவாம். (௪௨)

௪௩. தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவியென்
றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்.

இஃது எண்ணின்கட் டிணைவழு அமைக்கின்றது.

(இ - ள்.) தன்மைச்சொல்லே அஃறிணைக்கிளவியென்று= தன்மைச்சொல்லும் அஃறிணைச்சொல்லுமென்று கூறிய இரண்டும்: எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்=எண்ணுமிடமாகிய இடத்து விராய்வந்து தன்மைப்பன்மைச்சொல்லான் அஃறிணைச் சொல் முடிதலை நீக்கார் ஆசிரியர். எ-று.

மேற் "பன்மையுரைக்குந் தன்மைக்கிளவி" என்பதனானும் பன்மைத்தன்மைபெற்றாம்.

"யானுமென் னெஃகமுஞ் சாறு மவனுடைய யானைக்குஞ் சேனைக்கும் போர்." இஃது இருதிணையும் விராயெண்ணி அஃறிணை உயர்திணையோடு முடிந்தது. (௪௩)

௪௪. ஒருமை யெண்ணின் பொதுப்பிரி பாற்சொ
லொருமைக் கல்ல தெண்ணுமுறை நில்லாது.

இஃது எண்ணுவகையாற் கூறும் ஒருவகைச் சொன்னிகழ்ச்சி கூறுகின்றது.

(இ - ள்.) ஒருமையெண்ணின் பொதுப் பிரி பாற்சொல்=ஒருமையெண்ணினை உணர்த்தும் ஒருவரென்னும் பொதுமையினின்றும்

பிரிந்த பாலுணர்த்துஞ் சொல்லாகிய ஒருவன் ஒருத்தியென்னுஞ் சொல்: ஒருமைக்கு அல்லது எண்ணுமுறை நில்லாது=ஒருமைக்க ணல்லது இருமைமுதலிய எண்ணுமுறைமைக்கண் நில்லாது. எ-று.

எனவே, பொதுப்பிரியாப் பாற்சொல்லாகிய ஒருவரென்னுஞ் சொல் இருவர் மூவரென எண்ணுமுறைமைக்கண் நிற்பதாயிற்று. இருவன் மூவன் எனவும் இருத்தி முத்தி எனவும் னகர ஈறும் இகர ஈறும் இயைபின்மையானும் ரகர ஈறு இயைபுடைமையா னும் இங்ஙனங் கூறினார்.

ஒன்றெனமுடித்தலென்பதனான் ஒருவேன் ஒருவை என்னுந் தன்மை முன்னிலை ஈறும் எண்ணுமுறை நில்லாமை கொள்க.

சரு. வியங்கோளெண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்.

இஃது எண்ணின்கட் டிணைவழு அமைக்கின்றது.

(இ-ள்.) வியங்கோள் எண்ணுப்பெயர் = வியங்கோளொடு தொடரும் எண்ணுப்பெயர்: திணைவிரவு வரையார்=திணைவிராய் வருதலை நீக்கார் ஆசிரியர். எ-று.

ஆவும் ஆயனுஞ் செல்க என்றது எண்ணும்மையாதலிற் சேறற் றொழில் இரண்டிற்கும் எய்துதலின் வழுவின்றேனும் அஃறிணை ஏவற்றொழிலை முற்றமுடியாமை கருதி வழுவமைத்தார்.

"ஆவும் ஆனியற்பார்ப்பனமாக்களும்" என எண்ணி "நும் மரண்சேர்மின்" என முன்னிலைவினைகோடல் செய்யுண்முடிபென் பது அதிகாரப்புறனடையாற் கொள்க. ஆவும் ஆயனுஞ் சென்ற கானஞ், செல்லுங்கானம் என வியங்கோளல்லா விரவுவினையான் வருதல் தன்னினமுடித்தலாற் கொள்க. (சரு)

சசு. வேறுவினைப் பொதுச்சொ லொருவினை கிளவார்.

இது மரபுவழுக் காக்கின்றது.

(இ-ள்.) வேறுவினைப் பொதுச்சொல்=வேறுபட்ட வினையி னையுடைய பலபொருட்குப் பொதுவாகிய சொல்லை: ஒருவினை கிளவார்=அவற்றுள் யாதானுமொரு வினையாற் கூறார்.

எனவே அவற்றையெல்லாம் உள்ளடக்கிநிற்கும் பொதுவினை யாற் கூறுவர். எ-று.

அடிசிலென்பது உண்பன தின்பன நக்குவன பருகுவனவற்றிற்கும் அணியென்பது கட்டுவன கவிப்பன செறிப்பன பூண்பனவற்றிற்கும் இயமென்பது கொட்டுவன ஊதுவன எழுப்புவனவற்றிற்கும் படையென்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற்கும் பொதுவாதலின், அடிசில் உண்டார் கைதொட்டார் எனவும், அணி அணிந்தார் மெய்ப்படுத்தார் எனவும், இயம் இயம்பினுர் படுத்தார் எனவும், படை வழங்கினுர் தொட்டார் எனவும் பொதுவினையாற் கூறுப. இவற்றை ஒருவினையாற்கூறின் வழுவாம்.

"ஏறுங்கின்மிசைந்தமுழந்தாளிரும்பிடி" எனவும். "நளிபுகை கமழாதிறுணீர்மிசைந்து" எனவும் "இடம்படில்வீழ்களிறுமிசையாப் புலியினுஞ்சிறந்த" எனவுங் "கடவுளொருமீன் சாலினியொழிய-வறுவர்மற்றையோரு மந்நிலையயின்றனர்" எனவும் இவை தின்றென வும் விழுங்கியெனவும் பெரும்பான்மை வருதலின் மிசைந்தார் அயின்றுர் என்பன உதாரணங்காட்டல் பொருந்தாமை உணர்க. இனி "உண்டற்குரியவல்லாப்பொருளை - யுண்டனபோலக்கூறலு மரபே" என்னும் பொருளியற்சூத்திரத்தான் உண்டற்றெழில் எல்லாவற்றிற்கும் பெரும்பான்மை வருதல்பெற்றும்.

"அறுசுவையடிசிலணியிழைதருதலி - னுறுவயிறுரவோம்பாது தின்றென" என்பது இழித்தற்கண் வருதலின் வழுவன்று. (௪௬)

௪௭. எண்ணுங் காலு மதுவதன் மரபே.

இதுவும் அது.

(இ - ள்.) எண்ணுங்காலும் = அவ்வேறுவினைப்பொருள்களைப் பொதுச்சொல்லாற் கூறுது பிரித்து எண்ணுமிடத்தும்: அது அதன் மரபே = அதன் இலக்கணம் ஒருவினையாற் கிளவாது பொதுவினையாற் கிளத்தலேயாம். எ-று.

சோறுங்கறியும் நன்றென்று உண்டார், யாழுங்குழலும்பறையும் இயம்பினுர் எனவரும். தின்றுர் ஊதினுரென்றுல் வழுவாம். "ஊன்றுவைகறிசோறுண்டுவருந்துதொழிலல்லது" என்புழி நுகரப்படும் பொருள் எல்லாவற்றிற்கும் உண்டற்றெழில் வந்தவாறு காண்க. (௪௭)

௪௮. இரட்டைக் கிளவி யிரட்டிற்பிரிந் திசையா.

இஃது உரிச்சொற்கண் மரபுவழுக் காக்கின்றது.

(இ - ள்.) இரட்டைக்கிளவி = இரட்டித்துநின்று பொருளுணர்த்துஞ் சொற்கள்: இரட்டிப்பிரிந்து இசையா = இரட்டித்து நிற்றலிற் பிரிந்து நில்லா. எ-று.

சுருசுருத்தது மொடுமொடுத்தது என இசைபற்றியுங் கொறுகொறுத்தார் மொறுமொறுத்தார் எனக் குறிப்புப்பற்றியுங் குறுகுறுத்தது கறுகறுத்தது எனப் பண்புபற்றியும் இரட்டித்துப்பிரியாது நின்றன. இவை குறுத்ததுகுறுத்ததென ஒருசொல்முழுவதும் இருமுறை வாராமையின் அடுக்கன்று. இவை மக்களிரட்டையும் விலங்கிரட்டையும்போல வேற்றுமையின்றி இலையிரட்டையும் பூவிரட்டையும்போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையவாம். குறுவென்னுஞ் சொல் அடுத்துக் குறுத்ததென்பது மிகுதியுணர்த்திற்றேற் குறுவென்பது யாண்டும் மிகுதியுணர்த்தல்வேண்டும் அஃதுணர்த்தாமையின் இரண்டும் ஒருசொல்லேயாயிற்று. (சஅ)

சகூ. ஒருபெயர்ப் பொதுச்சொ லுள்பொரு ளொழியத்
தெரிபுவேறு கிளத்த றலைமையும் பன்மையு
முயர்திணை மருங்கினு மஃறிணை மருங்கினும்.

இஃது ஒருபெயர்ப்பொதுச்சொல்லை மரபுவழுக் காக்கின்றது.

(இ - ள்.) உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும் = உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும்: ஒருபெயர்ப் பொதுச்சொல் = ஒருபெயராய்ப் பலபொருட்குப் பொதுவாகிய சொல்லை: உள்பொருள் ஒழியத் தெரிபுவேறு கிளத்தல் = பிற உள்பொருள் ஒழியத் தெரிந்துகொண்டு பொதுமையின் வேறாகச் சொல்லுக: தலைமையும் பன்மையும் = தலைமையானும் பன்மையானும். எ-று.

பிறரும்வாழ்வார் உளரேனும் பார்ப்பனச்சேரியென்றல் உயர்திணைக்கட் தலைமைபற்றியவழக்கு; எயினர்நாடென்பது அத்திணைக்கட் பன்மைபற்றியவழக்கு. பிறபுல்லும்மரனும் உளவேனுங் கமுகந் தோட்டமென்றல் அஃறிணைக்கட் தலைமைபற்றியவழக்கு. ஒடுவங் காடென்பது அத்திணைக்கட் பன்மைபற்றியவழக்கு. பார்ப்பார் பலராயினுங் கமுகு பலவாயினும் அவைதாமே பன்மைபற்றியவழக்காம்.

ஒன்றெனமுடித்தலான் அரசர்பெருந்தெரு ஆதீண்டுகுற்றி வயிரக்கடகம் என்னும் பொதுச்சொல் அல்லனவுங்கொள்க.

பலகுடி சேர்ந்தது சேரி, பலபொருள் தொக்கது தோட்டம். ()

௫௦. பெயரினுந் தொழிலினும் பிரிபவை யெல்லா
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன.

இஃது இருதிணை இருபாற்கும் பொதுவாகிய பெயர்க்கண் மரபுவழுக்காக்கின்றது.

(இ - ள்.) பெயரினுந் தொழிலினும் பிரிபவை எல்லாம் = உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் பெயரினானுந் தொழிலினானும் பொதுமையிற் பிரிந்த ஆண்பாற்கும் பெண்பாற்கும் உரியவாய் வருவன எல்லாம்; மயங்கல் கூடா = வழுவாகா; வழக்குவழிப் பட்டன = வழக்கின்கண் அடிப்பட்டனவாதலான். எ-று.

பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர், இது பெயரிற்பிரிந்த ஆணொழிமிகுசொல். வடுகரசர் ஆயிரவர் மக்களையுடையர், இது பெயரிற்பிரிந்த பெண்ணொழிமிகுசொல். இவர் வாழ்க்கைப்பட்டார், இது தொழிலிற் பிரிந்த ஆணொழிமிகுசொல். இவர் கட்டிலேறினார், இது தொழிலிற்பிரிந்த பெண்ணொழிமிகுசொல். இவை உயர்திணைக்கட் பெயரானுந் தொழிலானும் பிரிந்தன. நம்பி நூறு எருமையுடையன், இது பெயரிற்பிரிந்த ஆணொழிமிகுசொல். நம்மரசன் ஆயிரம் யானையுடையன், இது பெயரிற்பிரிந்த பெண்ணொழிமிகுசொல். யானை ஒடிற்றென்பது தொழிலிற்பிரிந்த பெண்ணொழிமிகுசொல். யானைநடந்தது இது தொழிலிற்பிரிந்த ஆணொழிமிகுசொல். இவை அஃறிணைக்கட் பெயரானுந் தொழிலானும் பிரிந்தன, இவை இருபாற்கும் பொதுவாயினும் ஒருபாற்கட் தாமே பிரிந்தன. இவர் பெரிதுஞ் சொல்லுமாறு வல்லர், இவர் பெரிதுங் கால்கொண்டோடுவர் எனத் தொழிலின் மிகுதி விளக்கி வருவனவுங் கொள்க. (௫௦)

௫௧. பலவயி னானு மெண்ணுத்திணை விரவுப்பெய
ரஃறிணை முடிபின செய்யு ளுள்ளே.

இது திணைவழு அமையுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) பலவயினானும் எண்ணுத் திணைவிரவுப்பெயர் = பல இடத்துந் திணைவிராய் எண்ணப்பட்ட பெயர் செய்யுளுள்ளே அஃறிணை முடிபின = செய்யுளகத்துப் பெரும்பான்மையும் அஃறிணைச் சொற்கொண்டு முடியும். எ-று.

"வடுக ரருவாளர் வான்கரு நாடர்-சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங் - குறுகா ரறிவுடை யார்." "கடுஞ்சினத்தகொல்களிறுங் கதழ்பரியகலிமாவு - நெடுங்கொடி.யநிமிர்தேரு நெஞ்சுடையபுகன் மறவருமென-நான்குடன்மாண்டதாயினும்" எனவரும்.

பலவயினானும் எனறமையாற் சிலவயினாற் திணைவிரவாது உயர்திணையான் எண்ணி அஃறிணையான் முடிவனவுந் திணை விராய் எண்ணி உயர்திணையான் முடிவனவுங் கொள்க. "பாணன்பறையன்றுடியன்கடம்பனென் - றந்நான்கல்லதுகுடியுமில்லை." என்றது பாண்குடி பறைக்குடியெனக் குடியைச்சுட்டிநில்லாது பாணன் பறையன் எனப் பால்காட்டிநிற்றலான் உயர்திணைப்பொருள் நின்று அஃறிணைமுடிபு கொண்டனவேயாம். "பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்-மூத்தா ரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்-காற்ற வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்-போற்றி யெனப்படு வார்." "பார்ப்பா ரறவோர் பசுப்பத்தினிப்பெண்டிர் - மூத்தோர்குழவி யெனுமிவரைக் கைவிட்டு" இவை திணைவிராய் எண்ணி உயர்திணையான் முடிந்தன. உயர்திணையும் பொருளென்னும் பொதுமையான் அஃறிணைக்கண் அடங்குதலானும் உயர்திணைக்கண் அஃறிணை அவ்வாறு அடங்காமையானும் ஆசிரியர் அஃறிணைமுடிபின என்றார்.

திணைவிராயெண்ணி அஃறிணையானும் உயர்திணையானும் முடிந்தது தலைமைபற்றியும பன்மைபற்றியும் இழிவுபற்றியுமென உணர்க. "தானுந்தேரும் பாகனும்வந்தென னலனுண்டான்" என்றாற்போல்வன தலைமைப்பொருட்கு வினைகொடுப்பவே தலைமையில்பொருளும் உடன்முடிந்ததோர் முறைமைபற்றி வந்தனவாம். (௫௧)

௫௨. வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொலென்
றாயிரு வகைய பலபொரு ளொருசொல்.

இதனாற் பலசொல்லான் ஒருபொருளுணர்த்தி, இனி ஒருசொல்லான் வரும் பலபொருளுணர்த்துகின்றார், அவற்றின் பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றார்.

(இ - ள்.) வினை வேறுபடூஉம் பலபொருள் ஒருசொல்=வினையான் வேறுபடும் பலபொருளொருசொல்லும்: வினை வேறுபடாஅப் பலபொருள் ஒருசொல்=வினையான் வேறுபடாத பலபொருளொரு

சொல்லும்: என்று ஆயிரு வகைய பலபொருள் ஒருசொல்=என அவ்விரண்டுவகைப்படும் பலபொருளொருசொல். எ-று. (௫௨)

௫௩. அவற்றுள், வினைவேறு படூஉம் பலபொரு ளொரு
வேறுபடு வினையினு மினத்தினுஞ் சார்பினுந் [சொல்
தேறத் தோன்றும் பொருடெரி நிலையே.

இஃது அவற்றுள் வினை வேறுபடுவதாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் வினை வேறுபடூஉம் பலபொருள் ஒரு சொல்=அவ்விரண்டனுள்ளும் வினையான் வேறுபடும் பலபொருளொருசொல்: வேறுபடு வினையினும் இனத்தினுஞ் சார்பினும்=ஒரு பொருட்கே சிறந்த வினையானும் இனத்தானுஞ் சார்பானும்: பொருள் தெரிநிலை தேறத் தோன்றும்=பொருள்தெரிநிலைமைக்கட் பொதுமைநீங்கித் தெளியத்தோன்றும். எ-று.

**மா** என்பது ஒருசார்விலங்கிற்கும் மரத்திற்கும் வண்டிற்கும் பிறபொருட்கும் பொது. குருகு என்பது ஓர்பறவைக்கும் முலைமூக்கிற்கும் வளைக்கும் பிறபொருட்கும் பொது. மா பூத்தது, இது வினை, மாவும் மருதும் ஓங்கின, இஃது இனம்; கவசம் புக்குநின்று மாகொணு என்பது சார்பு. ஒருசாதிக்கண் அணைந்த சாதி இனம்; ஒருவாற்ருன் இயைபுடையது சார்பு.

ஒன்றெனமுடித்தலென்பதனல் இம்மாவயிரம் வெளிறு என வேறுபடுக்கும் பெயருங்கொள்க.

"தாழிப்பூக்குற்றுக்கானலல்கி" என்முற்போலச் சிலபொருளை ஒழித்துச் சிலபொருண்மேனிற்றல் உரையிற்கொள்க.

இனமுஞ் சார்பும் பின்வரும் வினையொடு கூடியல்லது பொருண்முடியாமையின் அவையும் வினைவேறுபட்டனவேயாம். (௫௩)

௫௪. ஒன்றுவினை மருங்கி னொன்றித் தோன்றும்.

இது மேலிற்சூத்திரத்திற்கோர் புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்=முற்கூறிய வினைவேறுபடூஉம் பலபொருளொருசொல் வினையான் வேறுபடுதல்லாது பொதுவினை கொண்டு பொதுமைப்பட நின்றுழியும் வினைவேறுபட்டாற்போல இன்னதிதுவென வேறுபடநிற்றலும் வழக்கினகத்து உண்டு. எ-று.

மாவீழ்ந்ததென்பது வீழ்தல்வினை எல்லாவற்றிற்கும் பொது வேனும் இவ்விடத்து இக்காலத்து இவன் சொல்லுகின்றது இம் மாவினையென ஒன்றினை உணர்த்திநின்றவாறு காண்க. என்றது வினைவேறுபடூஉம் பலபொருளொருசொல் ஒருகால் வினைவேறுபடாத பலபொருளொருசொற்போல நிற்குமென்றவாறு. (௫௪)

௫௫. வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொன் னினையுங் காலைக் கிளந்தாங் கியலும்.

இது நிறுத்தமுறையானே வினைவேறுபடாப் பலபொருளொருசொல்லாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) வினைவேறுபடாஅப் பலபொருள் ஒருசொல் = வினையான் வேறுபடாத பலபொருளொருசொல்: நினையுங்காலைக் கிளந்தாங்கு இயலும் = ஆராயுங்காலத்து இன்னதிதுவெனக் கிளக்கப்பட்டு அவ்வாராய்ச்சியுடையவிடத்து நடக்கும். எ-று.

கன்றுநீருட்டுக என்றவழிக் கேட்டான் இன்னகன்றென்பது அறியவாராதவழி ஆன்கன்று பூங்கன்று என்று கிளந்தேசொல்லுக என்றவாறு.

நினையுங்காலை என்றதனாற் கருமச்சிதைவு உள்வழிக் கிளந்து கூறுக என்பதுகொள்க. "கன்றூற்றுப்படுத்த புன்றலைச்சிறார்" என்றவழிக் கருமச்சிதைவில்வழிக் கிளத்தல்வேண்டாவாயினவாறு காண்க.

அன்றி, ஒன்றுவினைமருங்கினொன்றித்தோன்றும் - வினைவேறுபடாஅப்பலபொருளொருசொல்லென ஒருசூத்திரமாக்கி, "வேறுபடாத வினைகொண்டவழி வேறுபடாதுதோன்றும் வினை வேறுபடாப் பலபொருளொருசொல்" என்று பொருள்கூறி, வினைவேறுபடூஉம் பலபொருளொருசொல்லாகிய மாவென்பதுதானே வீழ்ந்ததென்னும் பொதுவினைகொண்டவழி வினைவேறுபடாதாய் நின்றதற்கு மாமரம் வீழ்ந்ததெனக் கிளந்துகூறுக என்றார் சேனாவரையர். அங்ஙனம் பொருள்கூறின் வினைவேறுபடாப் பலபொருளொருசொல்லென வேறோர் சொல்லின்றி ஆயிருவகையவென்பதனோடு மாறுபடுமென மறுக்க. (௫௫)

௫௬. குறித்தோன் கூற்றந் தெரித்துமொழி கிளவி.

இது மரபுவழுக் காக்கின்றது.

(இ - ள்.) குறித்தோன் கூற்றம்=ஒருபொருள் வேறுபடக் குறித்தோன் கூற்றுற்றல் முதலியவற்றான் விளங்காதாயின்: தெரித்து மொழி கிளவி=அப்பொருளைத் தெரிவித்துச்சொல்லுஞ் சொல்லாகக் கூறுக. எ-று.

"அரிதாரச்சாந்தங்கலந்ததுபோல - வருமெழத்தோன்றிவருமே முருகுறழு - மன்பன்மலைப்பெய்தநீர்" எனத் தெரித்து மொழிக. கலந்ததுபோல வருமே இலங்கருவி அன்பன் மலைப்பெய்த நீர் எனத் தெரித்துமொழியாக்கால் வழுவாம்.

"ஊட்டியன்னவொண்டளிர்ச்செயலை" என்றது ஊட்டாத தனை ஊட்டியதுபோலக் கூறலின் வேறோர் உவம இலக்கணமாம்.

"பல்லார்தோடோய்ந்துவருதலாற்பூம்பொய்கை-நல்வயலூரநின் றார்புலால் - புல்லெருக்க - மாசின்மணிப்பூணெம்மைந்தன்மலைந்தமை யாற் - காதற்றாய்நாறுமெமக்கு." இதுவுந் தெரித்து மொழிந்தது. "ஒல்லேங்குவளைபுலா அன்மகன்மார்பிற்-புல்லெருக்கங்கண்ணிநறிது" எனத் தெரித்துமொழியாதாயிற்றாயினுந் தலைவன் தவறும் புதல்வன் மேல் அன்புங் காரணமாகக் கூறலும் வழுவன்றென்றலும் ஒன்று.()

ருஎ. குடிமை யாண்மை யிளமை மூப்பே
யடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை யரசே மகவே குழவி
தன்மை திரிபெய ருறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென்
றாவறு மூன்று முளப்படத் தொகைஇ
யன்ன பிறவு மவற்றொடு சிவணி
முன்னத்தி னுணருங் கிளவி யெல்லா
முயர்திணை மருங்கி னிலையின வாயினு
மஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்.

இது திணைவழுக் காக்கின்றது.

(இ - ள்.) குடிமை ஆண்மை இளமை மூப்பே அடிமை வன்மை விருந்தே குழுவே பெண்மை அரசே மகவே குழவி தன்மைதிரிபெயர் உறுப்பின்கிளவி காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொல் என்று ஆவறுமூன்றும் உளப்பட அன்ன பிறவும் அவற்றொடு சிவணித்

தொகைஇ=குடிமை முதலாக விறற்சொல் ஈறுகச் சொல்லப்பட்ட அப்பதினெட்டும் உளப்பட அவைபோல்வன பிறவும் அவற்றொடு பொருந்தித் தொக்கு: முன்னத்தின் உணருங் கிளவியெல்லாம்= சொல்லுவான்குறிப்பொடுபடுத்து உயர்திணைப்பொருளை உணரப்படுஞ் சொற்களெல்லாம்: உயர்திணை மருங்கின் நிலைஇயினவாயினும்=உயர்திணையிருபாற்கண்ணும் பெரும்பான்மை நிலைபெற்றனவாயினும்: அஃறிணை மருங்கிற் கிளந்தாங்கு இயலும் = அஃறிணைப்பொருளை உணர்த்திநின்றவழிபோல அஃறிணைமுடிபே கொள்ளும். எ-று.

என்னை உயர்திணைப்பொருளுணர்த்தியவாறெனின், இக்குடிமை முதலியனவெல்லாம் பெரும்பான்மையும் உயர்திணைக்குப் பண்பேயாய்நின்று அப்பண்பினையுணர்த்தி அஃறிணையாய்நில்லாது அப்பண்புச்சொற் றன்பன்மையுந் தன்னையுடையபொருளையும் ஒருங்கு தோற்றுவித்துப் பிரியாதுநிற்றலின் உயர்திணைப்பொருளையே உணர்த்திற்றும். இங்ஙனம் நிற்குமென்றுணர்தல் சொல்லுவான்குறிப்பினன் உயர்திணைப்பொருளிற் றீர்ந்து இன்னவாறு நிற்குமென்று வேறோராற்றான் உணர்தலின்றென்றற்கு முன்னத்தின் உணருமென்றார். இவற்றுள் விரவுப்பெயராய் அஃறிணைப்பன்மை உணர்த்துவன உளவேனும் அவையுஞ் சொல்லுவான் குறிப்பான் ஒருகால் உயர்திணைப்பண்பே உணர்த்துமென்றுகருதி உயர்திணைமருங்கினிலையினவாயினும் என்றார். உயர்திணைப்பெயரும் விரவுப்பெயரும் மேற்கூறுபடுத்துதும்.

இனிக் குடிமை ஆண்மை முதலியவற்றை ஆகுபெயரென்பாரும் உளர். குடிமையென்னுங் குணப்பெயர் ஆகுபெயராய்க் குடிமகனை உணர்த்திற்றேற், குடிமைநல்லனென உயர்திணையான் முடியும், அன்றிக் குடிமையெனத் தனக்கு உரிய பண்பையுணர்த்திநிற்குமேற், பின்னர் அஃறிணைமருங்கிற்கிளந்தாங்கியலுமென வேண்டா, தானே அஃறிணையான்முடியும்; ஆதலின் ஆகுபெயரென்றலும் பண்புணர்த்திநிற்குமென்றலும் பொருந்தாமை உணர்க. இக்குடிமை முதலியவற்றிற்கு நன்று தீது என்றும் வந்தது போயிற்று என்றும் ஏற்ற அஃறிணைவினை கொடுத்து ஒட்டுக.

இனி இவை உயர்திணைப்பண்பாய் அப்பொருளையும் ஒருங்குணர்த்தி நிற்குமாறு;—குடிமையாவது குடிப்பிறப்பிற்கேற்ற ஒழுக்கம். அஃது "ஒழுக்கமுடைமைகுடிமை" என்றதனான் உணர்க.

"மடிமைகுடிமைக்கட்டடங்கின்" என உயர்திணையிருபாலையும் உணர்த்திற்று.

ஆண்மையாவது ஆளுந்தன்மை. அஃது "ஆயிடையிருபெயராண்மைசெய்தபூசல்" என இருபாலையும் உணர்த்திற்று. இன்னும் "ஊராண்மைக்கொத்தபடிறுடைத்து" எனவும் "வேளாண்மை செய்துவிருந்தோம்பிவெஞ்சமத்து - வாளாண்மையானும்வலியராய்த்-தாளாண்மை" எனவும் வரும். இது "வேளாணெதிரும்விருந்தின் கண்ணும் - வாளாணெதிரும்பிரிவினானும்" எனவும் "உட்குடையாளுராணியல்பினள்" எனவும் விகாரமாயும் நிற்கும். இவ்வாண்மை ஆளுந் தன்மையேயன்றி ஆண்பாலாகிய தன்மையும் உணர்த்துமென்றற்கு "ஆண்மைசுட்டிய வெல்லாப்பெயரும்" என்று ஆசிரியர் விரவுப்பெயர்க்கண் உடம்பொடுபுணர்த்தோதினார். இவவிரண்டும் பெண்பும் "பிறப்பேகுடிமையாண்மையாண்டோ-டுருவுநிறுத்தகாமவாயி-னிறையேயருளேயுணர்வொடுதிருவென - முறையுறக்கிளந்தவொப்பினதுவகையே." என்னும் மெய்ப்பாட்டியற்சூத்திரத்தாற் தலைவற்குந் தலைவிக்கும் ஒப்ப உரியவென்றே ஓதுகின்றாராதலின் ஈண்டும் இருபாற்கும் ஒப்பவே ஓதினார்.

இனி ஆண்மையை ஆள்வினையென்றும் உரைப்ப. இவ்வாண்மையும் மேற்கூறும் பெண்மையும் உயர்திணையாண்பாலையும் பெண்பாலையும் உணர்த்தாதென்று கருதி "ஆண்பாலெல்லாமாணெனற்குரிய - பெண்பாலெல்லாம்பெண்ணெனற்குரிய" என அஃறிணைக்கே ஓதியவற்றையே "பெண்ணுமாணும்பிள்ளையுமவையே" எனக் கிளந்து கூறுதவழி உயர்திணையை உணர்த்துமென்று மரபியலுட் கூறுவர். அன்றியும் "புல்லாவாட்கைவல்லாண்பக்கமும்" என்றும் "பாடாண்பகுதி" என்றும் பிறாண்டும் ஆண்மையென்னாது ஆணென்றே சூத்திரஞ்செய்ததனானும் ஆண்மக்கள் பெண்மக்களென்னும் வழக்கானும் உணர்க. இனி ஆண்மையை விரவுப்பெயரென்றால் முற்காட்டிய உதாரணங்கட்கும் விரவுப்பெயருள் அஃறிணைப்பெயர்க்கும் ஏலாமையுணர்க. "ஆண்மைதோன்ற ஆடவற்கடந்த" என்பதற்கும் ஆளுந்தன்மைதோன்ற என்றே பொருளுரைத்துக்கொள்க.

இளமையாவது காமச்செவ்விநிகழ்வதோர்காலம். "இளமை கழிந்தபின்றை-வளமைகாமந்தருதலுமின்றே." என உயர்திணையிருபாலும் உணர்த்திற்று.

மூப்பு "மூப்புடைமுதுபதி" என உயர்திணையிருபாலையும் உணர்த்திற்று. இளமையும் மூப்பும் பொருண்மேல் நில்லாது பண்பின்மேல் நிற்பின் அஃறிணையையும் உணர்த்தும்.

அடிமையென்பது "அடிமைபுகுத்திவிடும்" என உயர்திணை இருபாலும் உணர்த்தும்.

வன்மையாவது ஒருதொழிலைவல்லுதல்; அது "சொல்வன்மை நன்று" என உயர்திணையிருபாலும் உணர்த்தும். ஈண்டு வன்மை வலியன்று.

விருந்து "விருந்தெதிர்கொள்ளவும்" என உயர்திணையிருபாலையும் உணர்த்திற்று. "ஆங்கவைவிருந்தாற்றப்பகலல்கி" என அஃறிணைக்கும் இது வரும்.

குழு "குழுவின்பெயர்" எனவும் "ஐம்பெருங்குழுவுமெண்பெயராயமும்" எனவும் உயர்திணையிருபாலும் உணர்த்தும்.

பெண்மையாவது கட்புலனாயதோர் அமைதித்தன்மை. அது "பெண்மையடுத்தமகனென்கிளவி" என்பதனான் உணர்க. இது மகனென்பது பெண்பாலுணர்த்தப் பெண்மையென்பதும் பெண்பாலுணர்த்துமேற் கூறியதுகூறலாமாதலின் ஆசிரியர்க்கு இதுவே பொருளாயிற்று. "ஆண்மையடுத்தமகன்" என்பதற்கும் இஃதொக்கும். அது "பெண்மைசுட்டியவுயர்திணைமருங்கின்" என்பதனானும் "பிறனியலாள்பெண்மைநயவாதவன்" என்பதனானும் உணர்க. இப்பெண்மை அமைதித்தன்மையேயன்றிப் பெண்பாலாகிய தன்மையும் உணர்த்துமென்பது கருதி ஆசிரியர் "பெண்மைசுட்டியவெல்லாப்பெயரும்" என விரவுப்பெயர்க்கண் உடம்பொடுபுணர்த்து ஓதினார். உயர்திணையாண்பாற்கு உரித்தன்றிப் பெண்பாற்கேவரினும் அதுவும் உயர்திணையேயாதல் நோக்கி 'உயர்திணைமருங்கினிலையினவாயினும்' என்றார்.

அரசு "அரசுபடக்கடந்தட்டு" என உயர்திணையாண்பால் உணர்த்திற்று. "பெண்ணரசியேந்தினள்" என ஈறு வேறாயவழிப் பெண்பாலும் உணர்த்தும். இஃது "அரசுவாவீழ்ந்தகளத்து" என அஃறிணைக்கும் வரும்.

இனி மகவுங்குழவியுங் "குழவியுமகவுமாயிரண்டல்லவை-கிழவவல்லமக்கட்கண்ணே." என அஃறிணைக்கேயன்றி உயர்திணையிருபாற்கும் வருமென்றார்.

தன்மைதிரிபெயர் அலி. உறுப்பின்கிளவி குருடு முடம். இவை இருபாற்கும் ஒக்கும். விரவுப்பெயர்க்காயின் முடவன் முடத்தி எனவரும்.

காதல் யானைவந்தது பாவைவந்தது என ஒப்பின்றிக் காதல் பற்றி நிற்கும். அது "போர்யானைவந்தீகவீங்கு" எனவரும்.

தன்னினமுடித்தலாற் "தேமலரலங்கற்றிருவேபுகுதக" என உவப்புங்கொள்க.

சிறப்புக் கண்போலச் சிறந்தாரைக் கண்ணென்றலும் உயிர் போலச்சிறந்தாரை உயிரென்றலுமாம். அஃது "ஆலமர்செல்வனணி சால்பெருவிறல் - போலவருமெம்முயிர்." எனவரும்.

செறற்சொல் செறுதலைப் புலப்படுக்கும் பொறியறை கெழீஇ யிலி. அது பொய்ச்சீத்தையென்றாற்போல்வன.

தன்னினமுடித்தலான் "ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வு யிர் - போஒ மளவுமோர் நோய்." என இழிபுங் கொள்க.

விறற்சொல் விறலை உணர்த்தும் பெருவிறல் அருந்திறல் போல்வன.

அன்னபிறவுமென்றதனால் வேந்து வேள் குரிசில் அமைச்சு புரோசு என ஒருபாற்கு உரிய காட்டலும் ஒன்று. இருபாற்கு உரி யன வந்துழிக்காண்க.

இவையெல்லாம் பண்பென்றுவிளக்கிய பண்புவாய்பாட்டால் ஓதினார். இவை உயர்திணைப் பண்புப்பெயராய் அப்பொருளையும் ஒருங்குணர்த்தினவேனும் அஃறிணைச்சொற்கொண்டு முடியுமென வழுவமைத்தார். (ருஎ)

ருஅ. கால முலக முயிரே யுடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூத
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉ
மாயீ ரைந்தொடு பிறவு மன்ன
வாவயின் வரூஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா வுயர்திணை மேன.

இதுவுந் திணைவழுக் காக்கின்றது.

(இ - ள்.) காலம் உலகம் உயிரே உடம்பே பால்வரைதெய்வம் வினையே பூதம் ஞாயிறு திங்கள் சொல் என வரூஉம் ஆயிரைந்தொடு அன்ன பிறவும்=காலம் முதலாகச் சொல் ஈறுகச் சொல்லப்பட்ட அப்பத்தும் அத்தன்மையன பிறவுமாகிய: ஆவயின் வரூஉங் கிளவியெல்லாம்=அவ்வுயர்திணைக்கண் வருஞ் சொல்லெல்லாம்: உயர்திணை மேன பால் பிரிந்து இசையா=உயர்திணைச்சொல்லாயினும் உயர்திணைக்கட் பால்பிரிந்து இசையா அஃறிணைப்பாலாய் இசைக்கும். எ-று.

இச்சூத்திரத்துக் கூறியவற்றுள் உலகமும் உயிரும் உடம்பும் ஒழிந்தனவெல்லாந் தெய்வத்தையே உணர்த்திற்றுதலிற் தெய்வமென்பதனைத் "தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக்கிளவியும்" என்பதனான் உயர்திணை யென்பது பெற்றும். இவையெல்லாந் தெய்வமென்னும் உயர்திணைப்பொருளை உணர்த்திற்றேனுந் தெய்வமென்னுஞ்சொல் அஃறிணைவாசகமாதலின் அதற்கேற்ப அஃறிணைமுடிபே கொள்ளுமென்றார்.

இச்சொற்கள் கூறுகின்றபொழுதே தத்தம் உயர்திணைப்பாற் பொருளே தோற்றுவித்து நிற்றலின் ஆகுபெயரன்மையுணர்க.

இவற்குக்காலமாயிற்றென்றது காலக்கடவுளை. உலகம்பசித்த தென்றது உலகத்தாரை. உயிர்போயிற்று உடம்புநுணுகிற்று இவை உயர்திணைமுடிபு கொள்ளா என விலக்குதலின் ஈண்டு உயர்திணைக்கே உரியவாயின. என்னை? அறஞ்செய்துதுறக்கம்புக்கான், உயிர்நீத்தொருமகன்கிடந்தான் என உயிரும் உடம்பும் வரின் வேறன்றி அவராக உணரப்பட்டு உயர்திணைக்கேற்ற முடிபுகோடலின் மக்களேயாயின. இவை இங்ஙனம் உணர்த்தலின் ஆகுபெயரன்று. தெய்வஞ்செய்தது, இதனைப் பால்வரைதெய்வமென்றார், இன்பதுன்பத்திற்குக் காரணமாகிய இருவினையும் வகுத்தலின். வினை விளைந்தது இஃது இருவினைத்தெய்வம். பூதம் புடைத்தது, ஞாயிறு பட்டது, திங்கள் எழுந்தது; சொல் நன்று, இது நாமகளாகிய தெய்வம்.

பிறவும் என்றதனாற் பொழுது நன்று, யாக்கை தீது, விதி வலிது, கனலி கடுகிற்று, மதி நிறைந்தது, வெள்ளி எழுந்தது, வியாழம் நன்று எனவரும்.

காலம் உலகமென்பன வடசொல்லன்று, ஆசிரியர் வடசொற்களை எடுத்தோதி இலக்கணங்கூறுராகலின். உலகமென்பது மக்கட்

தொகுதியை உணர்த்தியவழி உயர்திணையாயும் இடத்தை உணர்த்தியவழி அஃறிணையாயும் வருதலின் ஒருசொல் இருபொருட்கண்ணுஞ் சென்றதெனப்படாது இருசொல்லெனவேபடும். அங்ஙனம் மக்கட் தொகுதியை உணர்த்துங்கால் உரிப்பெயராயே உணர்த்திற்று. ஆகுபெயரன்று. இங்ஙனம் வருவனவற்றைப் பலகால் எடுத்தோதாமை இலேசாகக் கருதி "ஒருசொற்பலபொருட்குரிமைதோன்றினும்" என எழுத்தொப்புமைபற்றி ஒருசொல்லென்றார். உலோகமென்றது வடமொழித்திரிபு. (ருஅ)

ருகூ. நின்றாங் கிசைத்த லிவணியல் பின்றே.

இது "குடிமையாண்மைத்" தொடக்கத்திற்கு ஓர் புறனடை.

(இ - ள்.) நின்றாங்கு இசைத்தல்=ஈறு திரியாது நின்றாங்கு நின்று உயர்திணையாய் இசைத்தல்: இவண் இயல்பின்று=காலம் முதலிய சொற்களிடத்து இயல்பில்லை. எ-று.

எனவே குடிமை ஆண்மை முதலிய சொற்களிடத்து இயல்பு உண்டாமென்றவாறு.

குடிமைநல்லன் ஆண்மைநல்லன் மூப்புத்தீயன் என ஒட்டுக.

சு0. இசைத்தலு முரிய வேறிடத் தான.

இது "காலமுலக" த்திற்கோர் புறனடை.

(இ - ள்.) இசைத்தலும் உரிய=காலம் உலகம் முதலிய சொற்களும் உயர்திணையாய் இசைத்தலும் உரிய: வேறிடத்தான=ஈறு திரிதற்கு ஏற்பன ஈறுதிரிந்து வாய்பாடு வேறுபட்ட இடத்து.எ-று.

காலன்கொண்டான் உலகர்பசித்தார் என ஈறுதிரிவனவற்றோடு ஒட்டுக. (சு0)

சுக. எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே.

இஃது அருத்தாபத்தி கூறுகின்றது.

(இ - ள்.) எடுத்த மொழி=இனமாகிய பொருட்கண் ஒன்றை விதந்துவாங்கிக் கூறிய அச்சொல்: இனஞ் செப்பலும் உரித்து=தன்பொருட்கு இனமாகிய பிறபொருளைக் குறிப்பாலுணர்த்துதலும் உரித்து. எ-று.

உம்மை எதிர்மறையாகலின் உணர்த்தாமையும் உரித்தாயிற்று.

அறஞ்செய்தான் துறக்கம்புகும் என்றவழி இனப்பொருளாகிய மறஞ்செய்தான் நிரயம்புகுமென்பது உணர்த்திற்று. இழிவறிந்து உண்பூன்கண் இன்பம் எய்தும் என்றவழிக் கழிபேரிரையான் இன்பமெய்தானென்பதும் இனப்பொருளை உணர்த்திற்று. கீழ்ச்சேரிக் கோழி அலைத்ததெனை மேற்சேரிக்கோழி அலைப்புண்டதும் அது.

ஆவாழ்க அந்தணர்வாழ்க என்பன இனஞ்செப்பாதன. அருத்தாபத்தி இனஞ் செப்புமாறு தன்னொடு மறுதலைப்பட்டு நிற்பது ஒன்று உள்வழியாயிற்று. மறுதலைப்பாடு பல உள்வழிச் செப்பாது. ஆவிற்கு மறுதலை எருமை ஒட்டகமெனப் பலவுள; அந்தணர்க்கு மறுதலை அரசர் வணிகர் வேளாளர் எனப் பிறரும் உளர். அங்ஙனம் பலமறுதலை உள்வழிச் செப்பாது. (சாக)

சாஉ. கண்ணுந் தோளு முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறுங் கடப்பா டிலவே
தம்வினைக் கியலு மெழுத்தலங் கடையே.

இதுவுந் திணைவழுக் காக்கின்றது.

(இ - ள்.) கண்ணுந் தோளும் முலையும் பிறவும் = கண்ணுந் தோளும் முலையும் அவைபோல்வன பிறவும்: பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி = பன்மையைக்குறித்து நின்ற சினைநிலைமையை உணர்த்திய சொற்கள்: தம்வினைக்கு இயலும் எழுத்தலங்கடை = அவை தமக்கு உரிய பன்மைவினைக்கேற்ற அகர ஈற்றுச் கூறக்கருதாது தம் முதல்வினைக்கேற்ற ஒருமையீற்றானும் பன்மையீற்றானுங் கூறக் கருதியவழி: பன்மை கூறுங் கடப்பாடில = தமக்கு உரிய பன்மையாற் கூறப்படும் யாப்புறவு உடையவல்ல. எ-று.

கண் நல்லள், முலைநல்லள் எனவும், கண் நல்லர், தோள் நல்லர், முலை நல்லர் எனவும், கண் நொந்தாள், தோள் நொந்தாள், முலை நொந்தாள் எனவும் வரும். பிறவும் என்றதனாற் புருவங் காது முதலியனவுங் கொள்க.

மூக்கு நல்லள், கொப்பூழ் நல்லள் என ஒருமைச்சினைப்பெயர் நின்று உயர்திணைகொண்டனவும் நிறங்கரியன் கவ்வுக்கடியன் எனப் பண்புந் தொழிலும் நின்று உயர்திணைகொண்டனவுந் தன்னின

முடித்தலாற் கொள்க. கண் நொந்தது, முலை எழுந்தது என்றாற் போல்வன சாதியொருமையுணர்த்தலும் இதனாற் கொள்க. கோடு கூரிது கரி, குளம்பு கூரிது குதிரை எனப் பன்மைச்சினைப்பெயர் நின்று முதல்வினையாகிய ஒருமையான் முடிவனவுங் கொள்க. (சுஉ)

கிளவியாக்கம் முற்றும்.

---

இரண்டாவது

## வேற்றுமையியல்.

சுங. வேற்றுமை தாமே யேழென மொழிப.

என்பது சூத்திரம். இவ்வோத்துச் செயப்படுபொருள் முதலியனவாகப் பெயர்ப்பொருளை வேறுபடுத்து உணர்த்தலின் வேற்றுமையோத்தென்று காரணப்பெயர் பெற்றது. முன்னர் நான்கு சொற்கும் பொது இலக்கணம் உணர்த்திய அதிகாரத்தானே இப்பொது இலக்கணங் கூறுகின்ற ஒத்தினையுஞ் சேரக்கூறினார். அப்பொது இலக்கணம் என்னையெனின், வேற்றுமைதாமும் பெயரும் ஒருசார்வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய பொதுவிலக்கணமாதல் உடைமையானும் "எழுவாய்வேற்றுமைபெயர் தோன்றுநிலையே" எனவும் "அன்றியனைத்தும்பெயர்ப்பயனிலையே" எனவும் "ஈறுபெயர்க்காகுமியற்கையவென்ப" எனவும் "பெயர்நிலைக் கிளவிகாலந்தோன்றா" எனவுந் தொழிற்பெயர்காலந்தோன்றுமெனவும் மேற்கூறுஞ் சிறப்புடைப்பெயர்க்குப் பொது இலக்கணம் எண்டுக்கூறுதல் உடைமையானும் இவ்வோத்துப் பொது இலக்கணமே கூறியதாயிற்று. ஆயின் வேற்றுமைமயங்கியலும் விளிமரபும் இடைவைத்ததென்னையெனின், இவ்வேற்றுமையின்மயக்கம் யாப்புடைமையின் வேறோத்தாக்கி விளி இவைபோற் சிறப்பின்மையின் வேறோர் ஒத்தாக்கி வைத்தார். இங்ஙனம் வைத்துப் பின்னர்ச் சிறந்த பெயர்வினையிடையுரிகளை முறையே கூறி இவற்றுள் எஞ்சிநின்ற இலக்கணத்தை எச்சவியலிற் கூறினார் என்றுணர்க. பொருண்மை சுட்டல் முதலிய ஆறுபொருளையுங்குறித்து அவற்றாற் தான் வேறுபட நிற்றலானும் முடிக்குஞ் சொல்லைத் தான் விசேடித்துநிற்றலானும் எழுவாயும் வேற்றுமையாயிற்று.

இச்சூத்திரம் வேற்றுமை இனைத்தென்கின்றது.

(இ - ள்.) வேற்றுமைதாமே ஏழெனமொழிப=வேற்றுமையாவன ஏழென்றுசொல்லுவர் தொல்லாசிரியர். எ-று.

தாமேயென்பது சந்த இன்பஞ் செய்துநின்றது. (க)

கூச. விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே.

இஃது ஒழிந்த வேற்றுமையுங் கூறித் தொகை கூறுகின்றது.

(இ - ள்.) விளிகொள்வதன்கண் விளியோடு = விளியேற்கும் பெயர்க்கண்ணதாகிய விளியோடு முற்கூறியவுறைந் தலைப்பெய்ய: எட்டே=வேற்றுமை யெட்டாம். எ-று.

'விளிகொள்வதன்கண்விளி' என்றதனாற் பிறிதோர் இடைச்சொல்லை ஏலாது தானே திரிந்தும் இயல்பாயும் நிற்கும் பெயரிறுதி விளியென்பது பெறும். (உ)

கூரு அவைதாம்,
பெயர் ஐ ஒடு கு
இன்அது கண்விளி யென்னு மீற்ற.

இஃது அவற்றின் பெயரும் முறையும் உணர்த்துகின்றது.

(இ - ள.) அவைதாம் = எட்டெனப்பட்ட வேற்றுமையாவன: விளி என்னும் ஈற்ற=விளிவேற்றுமையை இறுதியதாகவுடைய: பெயா ஐ ஒடு கு இன் அது கண் = பெயரும் ஐயும் ஒடுவுங் குவவும் இன்னும் அதுவுங் கண்ணுமாம். எ-று.

"சிறப்புடைப்பொருளைத்தானினிதுகிளத்தல்" என்பதனான் ஒடுவும் அதுவும் ஓதினரேனும், மூன்றாவதற்குச் சிறுபான்மை ஓடும் ஆனும் ஆறாவதற்கு அகர ஈறும் அதுவுங் கொள்க. (ந)

கூசா. அவற்றுள்,
எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே.

இது முறையானே எழுவாய்வேற்றுமை கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் = மேற்கூறிய வேற்றுமை எட்டனுள்: எழுவாய்வேற்றுமை=முதல்வேற்றுமையாவது: பெயர் தோன்றும் நிலையே = பெயர் பொருள் அறுவகைப்பட்ட பயனிலையுந் தன்கட் டோன்றநிற்கும் நிலைமை. எ-று.

அஃது உருபும் விளியும் ஏலாது நிற்கும் நிலையதாயிற்று.

மக்கள் ஆ என வரும்.

இதனை முற்கூறியது என்னையெனின், சாத்தன் குடத்தைக் கையால் வனைந்து கொற்றற்குக் கொடுத்தான் என வினைமுதல் நின்று ஏனையவற்றை நிகழ்த்துதல் வேண்டுதலின். அவ வினைமுதலாகிய எழுவாயை முற்கூறினார், அன்றியும் மேல் இரண்டாவது மூன்றாவது என்று ஆறு நிடத்து இதனை முதல்வேற்றுமையென்றே ஆளவேண்டுதலின். அப்பொருள் தருதற்கு முன்னிற் சூத்திரத்திற் பெயரென்றுகூறிய அதற்கே எழுவாய் வேற்றுமையென்று வேறோர் பெயர்கொடுத்தார். இதற்கு இப்பெயர்கூறிய அதனானே உருபும் விளியும் ஏற்பனவற்றைப் பெயரென்று வழங்குதல் பெற்றாம். அஃது "ஈறுபெயாக்காகும்" என்றதனானும் உணர்க. (௬)

௬எ. பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே.

இஃது அவ்வெழுவாய் ஆறுபயனிலையும் ஏற்குமென்கின்றது.

(இ - ள்.) பொருண்மைசுட்டல்=ஒருபொருளினது பண்புமுதலியன சுட்டாது அப்பொருட்டன்மையது உண்மைத்தன்மையே சுட்டிநிற்க வருதல்: வியங்கொள வருதல்=தான் ஏவலைக்கொள்ள வருதல்: வினைநிலை உரைத்தல்=தனது தொழிலினைச் சொல்லவருதல்: வினாவிற்கு ஏற்றல் = தான் வினாவிற்குப் பொருந்திவருதல்: பண்புகொள வருதல்=தனது பண்பினைத் தான் கொள்ளவருதல்: பெயர்கொள வருதல் = தான் பெயரைக்கொண்டுமுடிய வருதல்: என்று அன்றி அனைத்தும்=என்றுசொல்லப்பட்ட அவ்வனைத்துவரவும்: பெயர்ப்பயனிலையே=அவ்வெழுவாய்வேற்றுமையது பயனாகிய நிலைமை. எ-று.

தன்னைமுடித்தற்குப் பின்வருஞ்சொல்லின் பொருண்மையைத் தான் அவாவிநிற்கும் நிலைவேறுபாட்டைப் பயனிலையெனறார்.

ஆவுண்டு, ஆசெல்க, ஆகிடந்தது, ஆயாது, ஆவெவன், ஆகரிது, ஆபல எனவரும்.

தன்னினமுடித்தலென்பதனான் ஆவில்லை ஆவல்ல என வினைக்குறிப்புங் கொள்க.

பொருளென்றது பொருண்மையென்றார் அப்பொருளினது தன்மையுணர்த்துதற்கு. பொருட்டன்மையாவது அப்பொருள்களின் சாதித்தன்மை. ஆவென்னும் பொருள் கெட்டதேனும் அவ்வாவினது சாதித்தன்மை எக்காலத்துங் கெடாதுநிற்குமென்பது உணர்த்துதற்கு ஆவுண்டு என்றார். கட்புலனாகிய ஆகெடவும் அச்சாதித்தன்மை கெடாதென்பது தோன்றப் 'பொருண்மை சுட்டல்' என்று சூத்திரஞ்செய்தார்.

வினைநிலையுரைத்தல் தன்றொழில், வியங்கோள்வருதல் மேற்றன்கட் டொழில் நிகழ்வதாக ஒருவன் ஏவப்படுதல். இரண்டற்கும் இதுவே வேறுபாடு.

வினைநிலையுரைத்தலும் பண்புகொளவருதலும் பெயர்கொளவருதலும் முடிக்குஞ்சொல்லாதலேயன்றி முடிக்கப்படுஞ்சொல்லாதலும் உடைய. வியங்கோளும் வினாவும் முடிக்குஞ்சொல்லாயல்லது நில்லா. வினைக்குறிப்பு முடிக்குஞ்சொல்லாயல்லது வராது.

ஆபல என்பது பிறிதோர் சொல் நோக்காது ஆ என்பதனோடு அமைந்து மாறும்.

முன்னிற் சூத்திரத்துத் தோன்றுநிலை என்றதனானே ஆயன் சாத்தன்வந்தானெனப் பண்பொட்டாகாது விட்டிசைத்துநின்று மற்றோர் எழுவாயின் பயனிலையோடு தானும் பயனிலைகோடலும், ஆயன் வந்தான்சாத்தன் என வினைப்பின்னும் நிற்றலுஞ், சாத்தனை தலைவனயினனெனப் பயனிலைக்கு அடையாய்நிற்றலுஞ், சாத்தன் கண்ணனல்லனெனச் சினைவினை முதற்கேற்றிக்கூறலும், இம்மணி நிறம் நன்றெனப் பண்பின் தொழிலைப் பண்பு அடைந்த பொருட்கு ஏற்றிக் கூறலும், இக்குதிரைநடை நன்றெனத் தொழிலின் தொழிலைத் தொழில் அடைந்த பொருட்கு ஏற்றிக்கூறலும், இவ்வாறு நீரொழுகுமென இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்திற்கேற்றிக் கூறலும், இறைவன் அருளல் எம்முயிர்காக்கும் - இறைவன் அருளலின் யாம் உயிர்வாழ்தும் என எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த பெயர் தானும் எழுவாயாய்ப் பயனிலைகோடலும், அஃது உருபேற்றலும், ஆ செல்க-செல்க ஆ என முன்னும் பின்னும் பயனிலைநிற்றலும் பிறவுங் கொள்க.

"சிறுமைபெருமையிற்காணுதுதுணிந்தே" எனவும் "கோலல் செம்மையிற்சான்றோர்பல்கி" எனவும் வரும் பண்புகளும் பொருளிமையின்றேனும் பெயர்கொளவருதற்பாற்படுதலும், ஆசிரியன்பேரூர் கிழான்செயிற்றியனிளங்கண்ணன்சாத்தன்வந்தான் எனப் பலபெயர் ஒருங்கு எழுவாயாய்நின்று ஒரு பயனிலைகோடலும் இதனாற்கொள்க. இன்னும் எழுவாய்வேற்றுமையின் விகற்பமெல்லாம் வழக்கினகத்து அறிந்து இவ்விலேசான் முடித்துக்கொள்க. (௭)

சூஅ. பெயரி னாகிய தொகையுமா ருளவே
யவ்வு முரிய வப்பா லான.

இது தொகைப்பெயரும் பயனிலைகொள்ளுமென்கின்றது.

(இ - ள்.) பெயரினாகிய தொகையுமாருளவே=பெயரும் பெயருந் தொக்க தொகையும் உள: உம்மையாற் பெயரும் வினையுந் தொக்க தொகையும் உள; அவவும் உரிய அப்பாலான=அவவிரண்டனுட் பெயரும்பெயருந்தொக்கதொகையும் உரிய அவ்வெழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலைகொள்ளுமிடத்து. எ-று.

அவ்வும் உரிய என்றது இரண்டற்கும் பொதுவேனும் ஏற்புழிக்கோடலான் ஒன்றற்கேயாயிற்று.

யானைக்கோடுகிடந்தது மதிமுகம்வெயர்த்தது கொல்யானைநின்றது கருங்குதிரையோடிற்று உவாஅப்பதினான்குகழிந்தது பொற்றொடிவந்தாள் எனவரும்.

நிலங்கடந்தான் குன்றத்திருந்தான் எனப் பெயரொடுவினை தொக்கன எழுவாயாய்ப் பயனிலைகொள்ளாது முற்றாய்நிற்குமென்று உணர்க. இதனாற் தொகை இருவகையவென்பதூஉங் கூறினாராயிற்று. (௮)

சூகூ. எவ்வயிற் பெயரும வெளிப்படத் தோன்றி
யவ்விய னிலையல் செவ்வி தென்ப.

இஃது அவ்வெழுவாய் புலப்பட்டும் புலப்படாதும் நிற்குமென்கின்றது.

(இ - ள்.) எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி=மூன்றிடத்து எழுவாயுஞ் செவிப்புலனாகத் தோன்றிநின்று: அவ்வயின்

நிலையல் செவவிது என்ப = பயனிலைகோடல் செவ்விதென்ப ஆசிரியர். எ-று.

எனவே அவ்வாறு தோன்றாது நின்று பயனிலைகோடலும் உண்டு, அது செவ்விதன்று என்றவாறும்.

அவ்வியல் நிலையலென்பது எவ்வியல் நிலையலோவெனின், மேற்கூறிய ஆறு பயனிலையுங் கொண்டுநிற்றல்; செவ்விது, அப்பயனிலைகோடலிற் றிரியாவாய்ப் பயனிலைப்பட்டுநிற்றல். செவ்விதெனவே பிறிதேற்றற்குச் செவ்வியவாகாமையும் உடைய; அவை நீயிரென்பதும் அவ்வாய்க்கொண்டான் என்பதும், உருபேற்றற்குச் செவ்விய அல்ல.

கருவூர்க்குச் செல்வையோ சாத்தா என்றவழிச் செல்வனெனவும் யான் எதுசெய்வல் என்றவழி இதுசெய்யெனவும் இவன்யார் என்றுழிப் படைத்தலைவனெனவுஞ் செப்பியவழி, யான் நீ இவனென்னும் எழுவாய்வேற்றுமை வெளிப்படாதுநின்று செல்வல் இதுசெய் படைத்தலைவன் என்னும் பயனிலைகொண்டவாறு காண்க. (எ)

எo. கூறிய முறையி னுருபுநிலை திரியா
தீறுபெயர்க் காகு மியற்கைய வென்ப.

இஃது உருபுநிற்கும் இடங்கூறுகின்றது.

(இ - ள்.) கூறிய முறையின் உருபுநிலை திரியாது=மேல் ஐ ஒடு கு இன் அது கண் என்று கூறிய முறைமையையுடைய உருபுகள் தத்தம் நிலை திரியாது: பெயர்க்கு ஈறாகும் இயற்கைய என்ப= பெயர்க்கு ஈறாகும் இயல்புடைய என்று கூறுவர் ஆசிரியர். எ-று.

சாத்தனை சாத்தனொடு சாத்தற்கு சாத்தனின் சாத்தனது சாத்தன்கண் எனவரும்.

இவ்விடைச்சொற்கள் பெயர்க்கு உறுப்பாகாது தாமென வேறு உணரப்பட்டு இறுதிநிற்றலின் நிலைதிரியாதென்றார். எனவே வினைக்குத் தாமென வேறுபடாது நிற்குமாயின.

எக. பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழினிலை யொட்டு மொன்றலங் கடையே.

இது பெயர்க்கு ஓரிலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) பெயர்க்கிளவி = பெயர்ப்பெயராகிய சொல்லும்: நிலைக் கிளவி = அப்பெயரது நிலையிலே நிற்றலையுடைய சொல்லும்: காலந் தோன்று = காலந்தோன்றுவாய்நிற்கும்: தொழில் நிலை ஒட்டும் ஒன்ற' லங்கடையே = ஒருபொருளது புடைபெயர்ச்சியாய்க் காலந்தோன்று தற்குப் பொருந்தும் ஒருகூற்றுத் தொழிற்பெயரல்லா இடத்து. எ-று.

பெயர் தொழினிலை என்பன ஆகுபெயர். பெயர், பொருள்; தொழினிலை, காலம்; ஒட்டும், பொருந்தும்.

இதனாற் றிணையும் பாலுங் காலமும் இடனுந் தோன்றுந் தொழிற்சொல் படுத்தலோசைப்பட்டுநின்றாற் றொழிற்பெயராய் நின்று பயனிலைகொண்டும் உருபேற்றுங் காலத்தைத்தோற்றுவித் தலும், பெயர்ப்பெயரும் பெயரதுநிலையிலே நிற்றலையுடைய சொல் லுங் காலத்தை யாண்டுந் தோற்றுவியாமையுங் கூறினார்.

இடுகுறியாய்ச் சாத்தன் கொற்றன் என வரும் பெயர்ப்பெ யரும் புடைபெயர்ச்சிமாத்திரம் உணர்த்திநிற்கும் உண்டல் தின்றல் என வரும் வினைப்பெயரும் பூசல் வேட்கை என்றாற்போலப் புடை பெயர்ச்சி விளக்காதுநிற்கும் வினைப்பெயரும் உண்டான் தின்றான் என்றாற்போலக் காலந்தோன்றி வினைமுதன்மேல் நின்ற படுத்த லோசையானுந் தொழிற்பெயரும் ஓசைவேறுபாட்டானன்றி உண் டவன் உண்ணுமது என்றாற்போலத் தானே பெயராய்க் காலந் தோன்றி வினைமுதன்மேல் நிற்குந் தொழிற்பெயருங் "கொலைவர் கொடுமரந்தேய்த்தார்" அவனேறிற்றுக்குதிரை என்றாற்போலச் செயப்படுபொருட்கட் காலங்காட்டிநின்ற தொழிற்பெயரும் யான் சொன்னவன் உண்பவைநாழி என்றாற்போலச் செயப்படுபொருண் மேற்பெயராய்க் காலந்தோன்றி நிற்குந் தொழிற்பெயரும் பிறவாற் றாய் வரும் பெயர்வேற்றுமையும் உணர்க. (கூ)

எஉ. இரண்டாகுவதே, ஐயெனப் பெயரிய வேற்றுமைக் [கிளவி
யெவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்
பவ்விரு முதலிற் றோன்று மதுவே.

இது முறையே இரண்டாவது இப்பொருட்கண் வருமென் கின்றது.

(இ - ள்.) ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி இரண்டாகு வதே = "பெயர் ஐ ஒடு கு இன் அது கண்" என்னுஞ் சூத்திரத்து

ஐயெனப் பெயர்பெற்ற வேற்றுமைச்சொல் இரண்டாவதாம்: அது எவ்வழி வரினும்=அஃது யாண்டு வரினும்: வினையே வினைக்குறிப்பு அவ்விரு முதலிற் தோன்றும் = வினைச்சொல்லினும் வினைக்குறிப்புச் சொல்லினும் பிறந்த செயப்படுபொருளாகிய அவ்விரண்டு காரணத் தின்கண்ணுந் தோன்றும். எ-று.

பெயரிய என்பது "கவிரம்பெயரிய" என்றாற்போல நின்றது.

வினை வினைக்குறிப்பு என்பன ஈண்டு ஆகுபெயர், அம்முத னிலைகளாற் பிறந்த அச்சொற்களை உணர்த்தலின்.

முதலென்றது காரணத்தை. "ஆயெட்டென்பதொழின்முத னிலையே" என்றமையால் அக்காரணங்கள் எட்டு உளவேனும் ஏற் புழிக்கோடலென்பதனாற் செயப்படுபொருளே ஈண்டுக்கோடும்.

காரியத்தை நிகழ்த்துவிப்பது காரணம்.

ஒருவினைமுதல் செய்யுந் தொழிலினை உறுவது செயப்படு பொருள்.

உ-ம். குடத்தைவனைந்தான் குழையையுடையன் எனவரும்.

எவ்வழிவரினும் என்றதனான் புகழைநிறுத்தல் புகழையுடைமை என வினைப்பெயரிற் புடைபெயர்ச்சிபெற்றியும் முடியும்.

இயற்றப்படுவதும் வேறுபடுக்கப்படுவதும் எய்தப்படுவதுமெனச் செயப்படுபொருள் மூன்றாம். அவை முறையே இல்லதனை உண்டாக் கலும் உள்ளதனைத் திரித்தலுந் தொழிற்பயனுறுந் துணையாய் நிற்ற லுமாம். இவ்வுருபை முடித்தற்கு மேலிற் காப்பு முதலிய வாய் பாடுபற்றிவரும் பொருள்களை இம்மூன்று கூற்றானும் பகுக்கின்றார், ஈண்டு வினைமாத்திரையும் வினைப்பெயருமாகப் பகுப்பர்.

குடத்தைவனைந்தானென்றது மேல்வரும் இழையென்னும் இயற்றப்படும்பொருள். அஃது எயிலை இழைத்தான் எனவரும். என் றது எயிலை இழைத்தலைச் செய்தான் என்னும் பொருட்டு. இழை யென்னும் வினைமாத்திரையை உணர்த்தும் முதனிலைப்பெயர்நின்று, முன்னர் இழைத்தலென வினைப்பெயரையுந் தோற்றுவித்து, இழைத் தலையென்னும் உருபையும் ஏற்பித்துச், செய்தானெனன வினையொ ழிந்த காரணங்கள் ஏழானும் நிகழுங் காரியத்தினையுந் தோற்று வித்து நிற்றலின், இழையென்னும் முதனிலைப்பெயரை வேற்றுமைப்

பொருளாக எடுத்தோதினர். இப்பொருட்கட் டோன்றிய செய்தா னென்னுங் காரியத்துடனல்லது எயிலையென்னும் இரண்டாவது முடியாமை உணர்க. என்னை? செய்தற்கு இழைத்தல் செயப்படு பொருள் நீர்மைத்தாய்க் காரணமாய் நிற்றலானும் ஒழிந்தகாரணங் கள் தன்கண் நிகழ்ந்து காரியமாந்தன்மை இழைத்தாகின்றமையாதலா னும் என்பது. இவ்வாறே மேலிற்சூத்திரத்து ஒழிந்தபொருள்களை யும் விரிக்க.

இனி வினைக்குறிப்பிற்குங் குழையையுடையனென்புழி உடை யனெனக் கருதுதல் வினை; அக்கருத்தை நிகழ்த்துகின்றான் வினை முதல்; அக்குழை அவன் கருத்து நிகழ்த்தப்படும் பொருளாய்க் கிடக்கின்றதன்மை செயப்படுபொருள். இவவாறே ஒழிந்தனவுங் குறிப்பாற் காண்க. (௧0)

௭௩. காப்பி னொப்பி னூர்தியி னிழையி
னொப்பிற் புகழிற் பழியி னென்றா
பெறலி னிழவிற் காதலின் வெகுளியிற்
செறலி னுவத்தலிற் கற்பி னென்றா
வறுத்தலிற் குறைத்தலிற் றொகுத்தலிற் பிரித்தலி
னிறுத்தலி னளவி னெண்ணி னென்றா
வாக்கலிற் சார்தலிற் செலவிற் கன்றலி
னோக்கலி னஞ்சலிற் சிதைப்பி னென்றா
வன்ன பிறவு மம்முதற் பொருள
வென்ன கிளவியு மதன்பால வென்மனார்.

இஃது அதனை முடிக்கும் பொருள்வேறுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) காப்பின் * * * சிதைப்பினென்றா = காப்பு முதலா கச் சிதைப்பு ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்தெட்டுப்பொருளும்: அன்னபிறவும் அம் முதற் பொருள என்ன கிளவியும் = அவைபோல் வன பிறபொருளுமாகிய அச்செயப்படுபொருண்மேல் வரும் எல்லாச் சொல்லும்: அதன் பால என்மனார் = அவ் இரண்டாம்வேற்றுமையின் கூற்றன என்று கூறுவர் புலவர். எ-று.

எயிலையிழைத்தான், இவ் இயற்றப்படுவது ஒருதன்மைத்தாக லின் ஒருவாய்பாடே கூறினர். கிளியையோப்பும், பொருளையிழக்

கும்; இவற்றிற்கு வேறுபாடு ஒருதொழில் உறுவிக்கப்பட்டுத் தானே போதலுந் தொழிற்பயன் உற்றமாத்திரையாய் ஒருவன் கொண்டு போகப் போதலும்; நாணையறுக்கும், மரத்தைக்குறைக்கும்; இவற்றிற்கு வேறுபாடு சிறிதிழவாமல் வேறுபடுத்தலுஞ் சிறிதிழக்க வேறுபடுத்தலும் பெருமையைச்சுருக்குதலும்; நெல்லைத்தொகுக்கும், வேலியைப்பிரிக்கும்; இவற்றிற்கு வேறுபாடு விரிந்ததுதொகுத்தலுந் தொகுத்ததுவிரித்தலும்; அறத்தையாக்கும், நாட்டைச்சிதைக்கும்; இவற்றிற்கு வேறுபாடு மிகுத்தலுங் கெடுத்தலும்; இவையெட்டும் வேறுபடுக்கப்படுவன. ஊரைக்காக்கும், தந்தையையொக்கும், தேரையூரும், குரிசிலைப்புகழும், நாட்டைப்பழிக்கும், புதல்வனைப்பெறும், மனைவியைக்காதலிக்கும், பகைவரைவெகுளும், செற்றாரைச்செறும், நட்டாரையுவக்கும், நூலைக்கற்கும், பொன்னைநிறுக்கும், அரிசியையளக்கும், அடைக்காயையெண்ணும், ஊரைச்சாரும், நெறியைச்செல்லும், சூதினைக்கன்றும், கணையைநோக்கும், கள்ளரைஅஞ்சும், எனப் பத்தொன்பதும் எய்தப்படுவன. இவைதாந் தொழிலுறுவனவுந் தொழிற்பயனுறுவனவுமாய் வரும் வேறுபாடும் உணர்க. வெகுடலுஞ் செறலுங் கொலைப்பொருளாயவழி வேறுபடுக்கப்படுவன. செறல் வெகுளியது காரியம். உவத்தல் காதலது காரியம்.

இனிச்செய்வான்கருத்து இல்வழி நிகழுஞ் செயப்படுபொருளுஞ் செய்வானுஞ் செயப்படுபொருளுந் தானேயாய் நிற்பனவுங் கொள்க. சோற்றைக்குழைத்தான், சாத்தன் தன்னைக்குத்தினான் எனவரும்.

இன்னும் இச்செயப்படுபொருள் தன்கட் டொழில் நிகழ்ந்தும் நிகழாதும் வரும். அறுத்தல் முதலியன தன்கண் நிகழ்வன, கா[ண]தல் முதலியன தன்கண் நிகழாதன.

அன்னபிறவுமென்றது பகைவரைப்பணித்தான், சோற்றை[யுட்]டான், குழையையுடையன், பொருளையிலன் என்றாற்போல்வன.

இச்சூத்திரந் தொகுத்தமொழியின்வகுத்தனர்கோடல். (கக)

எச. மூன்றாகுவதே, ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக்
 கிளவி வினைமுதல் கருவி யனைமுதற் றதுவே.

இது முறையானே மூன்றாவது இப்பொருட்கண் வருமென்கின்றது.

(இ - ள்.) ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி மூன்றாகு வதே=மேல் ஒடுவெனப் பெயர்கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச் சொல் மூன்றாவதாம்: அது வினைமுதல் கருவி அனைமுதற்று=அது வினைமுதலுங் கருவியுமாகிய அவ் இரண்டுகாரணத்தையும் பொரு ளாக உடைத்து. எ-று.

மேல் "அதனினியறல்" முதலியன ஆனுருபிற்கேற்ப உடம் பொடுபுணர்த்துச் சூத்திரஞ்செய்தலின் அவற்றிற்கு முற்கொண்ட ஒடு என்பதற்கும் ஆலென்பதற்கும் வினைமுதல் கருவி கொள்க. ஆன் ஆலாய்த் திரிந்தும் நிற்கும்.

வினைமுதல் கருத்தா என்பன ஒன்று. கருத்தா நின்று தன் னையொழிந்த கருவிமுதலிய காரணங்கள் ஏழனையுங் காரியத்தின் கண் நிகழ்த்துதலின் அதனை வினைமுதலென்றார்.

இது இயற்றும்வினைமுதலும் ஏவும்வினைமுதலும் என இருவ கைப்படும். கொடியொடுதுவக்குண்டான் என்பது இயற்றும்வினை முதல். அது கொடிதன்னொடு துவக்குதலைச்செயப்பட்டான் சாத்தன் என்னும் பொருட்டு. கொடியினது நிகழ்ச்சி ஈண்டுக் கருவி. கொடி சாத்தனைத் தொழிலுறுவிக்குங்காற் தான் அவனை நீங்கா உடனி கழ்ச்சியை விளக்கிற்று ஒடுவெனுருபு. அரசனொலியற்றப்பட்டதேவகு லம் என்பது ஏவும்வினைமுதல்.

இனிக் கருவி காரணம் ஏது நிமித்தம் என்பன தம்முள்வேறு பாடுடையவேனும் ஒத்தபொருட்டு. அக்காரணம் முதற்காரணமுந் துணைக்காரணமுமென இருவகைப்படும். முதற்காரணமாவது காரி யத்தோடு ஒற்றுமையுடையது. துணைக்காரணமாவது அம்முதற்கா ரணத்திற்குத் துணையாகிய வினைமுதலிய எட்டும். அக்கருவியாவது வினைமுதற்றொழிற்பயனைச் செயப்படுபொருட்கண் உய்ப்பது. அது வும் இயற்றுதற்குக் கருவியாகிய காரகக்கருவியும் ஞாபகக்கருவியு மென இருவகைப்படும். ஊசியொடுகுயின்றதூசும்பட்டும் என்பது காரகக்கருவி. அஃது ஊசிகொண்டு சாத்தன் குயிலுதலைச் செய்யப் பட்ட தூசும்பட்டுமென்னும் பொருட்டு. சாத்தன் தொழிற்பயனை ஊசி தூசிலும்பட்டிலும் நிகழ்த்திற்று. இது துணைக்காரணம். மண் ணினியன்றகுடம் முதற்காரணம். இதுவுங் காரகக்கருவி. உணர் வினுலுணர்ந்தான், புகையினுலெரியுள்ளதுணர்ந்தான், இவை ஞாப கக்கருவி. இவற்றிற்கு உணர்வு முதற்காரணம். காரகமாவது தொ ழிலை இயற்றுவிப்பது. ஞாபகமாவது அறிவிப்பது.

இனி ஆல் ஆகத்தியனூற்றமிழுரைக்கப்பட்டது, வேலாலெறிந்தான் எனவும், ஒடு "உலகத்தோடொட்டவொழுகல்" "காவோடறக்குளந்தொட்டானும்" "நாவீற் றிருந்த புலமாமகளோடு நன்பொற்பூவீற் றிருந்த திருமாமகள்" எனவும் வரும்.

"இதுநனிபயக்குமிதனானென்னும்" இஃது ஆன் வந்தது. (௬௨)

எரு. அதனி னியற லதற்றகு கிளவி
யதன்வினை படுத லதனி னாத
லதனிற் கோட லதனொடு மயங்க
லதனொ டியைந்த வொருவினைக் கிளவி
யதனொ டியைந்த வேறுவினைக் கிளவி
யதனொ டியைந்த வொப்ப லொப்புரை
யின்னா னேது வீங்கென வரூஉ
மன்ன பிறவு மதன்பால வென்மனார்.

இஃது அதனைமுடிக்கவரும் பொருள்வேறுபாடு கூறுகின்றது.

(இ - ள.) அதனின் இயறல்=ஒன்றனான் ஒன்று பண்ணப்படுதலென்னும் பொருண்மை: அதற் தகு கிளவி=ஒனறனான் ஒனறு தகுதலெனனும் பொருண்மை: அதன் வினைப்படுதல்=ஒன்றனான் ஒனறு தொழிலுறுதலென்னும் பொருண்மை: அதனின் ஆதல்=ஒன்றனான ஒன்று ஆதலெனனும் பொருண்மை: அதனிற் கோடல்=ஒன்றனான் ஒன்றைக் கோடலெனனும் பொருண்மை: அதனொடு மயங்கல்=ஒன்றனோடு ஒன்று மயங்குதலெனனும் பொருண்மை: அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி=ஒன்றனோடு ஒன்று இயைந்த ஒருவினையாகலென்னும் பொருண்மை: அதனொடு இயைந்த வேறு வினைக் கிளவி=ஒன்றனோடு ஒன்று இயைந்த வேறுவினையாகலென்னும் பொருண்மை: அதனொடு இயைந்த ஒப்பு அல் ஒப்புரை=ஒன்றனோடு ஒன்று இயைந்த ஒப்பல்லாத ஒப்பினையுரைத்தலென்னும பொருண்மை: இன் ஆன் ஏது=இன்னும் ஆனுமாகிய ஏதுப் பொருண்மை: என வரூஉம்=என்று சொல்லப்பட்டுவரும் பத்தும்: ஈங்கு வரூஉம் அன்ன பிறவும்=வினைமுதலுங் கருவியுமாகிய பொருளிடத்து வரும் அவைபோல்வன பிறபொருள்களும்: அதன்பால என்மனார்=அம்மூன்றுவதன் கூற்றனவென்று கூறுவர் புலவர். எ-று.

உ-ம். மண்ணுணியன்றகுடம் வாயாற்றக்கதுவாய்ச்சி அறிவா னமைந்தசான்றோர் இவைகருவி, நாயாற்கோட்பட்டான் சாத்தனுன் முடியுமிக்கருமம் இவைவினைமுதல், வாணிகத்தானுயினுன் காணத் தாற்கொண்டவரிசி இவைகருவி, ஆனுருபான் வந்தன. எண்ணெடு விராயவரிசி ஆசிரியனெடுவெந்தமாணுக்கன் மலையொடுபொருந மால் யானை (மலைக்கு வினையின்மையின் இது வேறுவினையாயிற்று.) "பொன்னொடிரும்பனையர்நின்னெடும்பிறரே" (பொன்னோடு இரும் பை உவமித்தலையொப்பார் நின்னோடு பிறரை உவமிக்குமிடத்தென்ற வாறு.) இவைவினைமுதல், ஒடுவுருபான் வந்தன. முயற்சியிற்பிறத்த லானெலிநிலையாது இதனுள் முயற்சியினென்பது காரகவேது, பிறத் தலானெலிநிலையாதென்பது ஞாபகவேது. ஐந்தாவதற்கு உரிய ஏதுவும் ஈண்டு ஓதினது ஏதுவை வரையறுத்தற்கு.

அன்னபிறவுமென்றதனுற் கண்ணுற்காத்தை இது சினை வினை முதற்கேறியது, உறற்மணியானுயர்மருப்பினை பெண்டகையாற் போமர்க்கட்டு இவை ஆன் ஒடுவாயிற்று, மனத்தொடுவாய்மைமொ ழியின் ஒடு ஆனுயிற்று, மதியொடொக்குமுகம் இஃது ஒப்பு, குலொடு கழுதைபாரஞ்சுமந்தது இது கட்புலனுகா ஒரு வினை ஒடு. இவை முதலியனகொள்க. இவற்றின் வேறுபாடு உய்த்துணர்க. (௩௩)

௭௪. நான்கா குவதே,
கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
யெப்பொ ருளாயினுங் கொள்ளு மதுவே.

இது முறையானே நான்காவது இப்பொருட்கண் வருமென் கின்றது.

(இ - ள்.) கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி நான்காகு வதே = மேற் கு எனப் பெயர்கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச் சொல் நான்காவதாம்: அது எப்பொருளாயினுங் கொள்ளும் = அஃது யாதானுமொருபொருளாயினும் அதனைத் தான ஏற்றுநிற்கும். எ-று.

உ-ம். அந்தணர்க்காவைக்கொடுத்தான் எனவரும்.

மாணுக்கற்குநூற்பொருளுரைத்தான் எனக் கொடைப்பொருள வாகிய சொல்லானன்றிப் பிறவாய்பாட்டாற் கூறுவனவும் மாணுக் கற்கு அறிவுகொடுத்தான் எனக் கொடுப்பான்பொருளாய்க் கொள்

வான்கட்செல்லாது ஆண்டுத் தோன்றும் பொருளும் அடங்குதற்கு எப்பொருளாயினுமென்றார். (௧௪)

௭௭. அதற்குவினை யுடைமையி னதற்குடம் படுதலி
னதற்குப்படு பொருளி னதுவாகு கிளவியி
னதற்கியாப் புடைமையி னதற்பொருட் டாதலி
னட்பிற் பகையிற் காதலிற் சிறப்பினென்
றப்பொருட் கிளவியு மதன்பால வென்மனார்.

இஃது அதனை முடிக்கவரும் பொருள்வேறுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) அதற்கு வினையுடைமை=ஒன்றற்கு ஒன்று பயன் படுதல்: அதற்கு உடம்படுதல்=ஒன்றற்கு ஒருபொருளை மேற்கொடுப்பதாக உடம்படுதல்: அதற்குப் படு பொருள்=ஒன்றற்கு உரிமை யுடையவாகப் பொதுவாகியபொருளைக் கூறிடப்படுதல்: அது ஆகு கிளவி=உருபு ஏற்கும் பொருள் தானேயாய்த் திரிவதோர் பொருண்மை: அதற்கு யாப்புடைமை=ஒன்றற்கு ஒன்று பொருத்தமுடைத்தாதல்: அதற்பொருட்டாதல் = ஒருபொருளினை மேற்பெறுதல் காரணமாக ஒருதொழில் நிகழ்தல்: நட்பு = ஒன்றற்கு ஒன்று நட்பாதல்: பகை=ஒன்றற்கு ஒன்று பகையாதல்: காதல்=ஒன்றற்கு ஒன்று காதலுடைத்தாதல்: சிறப்பு=ஒன்றற்கு ஒன்று சிறத்தல்: என்று கிளவியும்=என்றுசொல்லப்பட்ட பொருள்களும்: அப்பொருளும்=அன்னபொருள்களும்: அதன்பால என்மனார்=அந்நான்கனுருபின் கூற்றனவென்று கூறுவர் புலவர். எ-று.

உ-ம். கரும்பிற்குவேலி; "நிலத்துக்கணியென்பநெல்லுங்கரும்பும்" என்பதும் அது. வினை, உபகாரம். சாத்தற்கு மகள் உடம்பட்டார்; சான்றோர்கொலைக்கு உடம்பட்டார் என்பதும் அது. சாத்தற்குக் கூறு கொற்றன். கடிசூத்திரத்திற்குப்பொன்; பொன் கடிசூத்திரமாய்த் திரியுமாதலின் அதுவாகுகிளவியென்றார். கிளவி, பொருள். கைக்கு யாப்புடையது கடகம்; "உண்டிவெய்யோர்க்குறுபிணியெளிது" என்பதும் அது. கூழிற்குக் குற்றேவல் செய்யும். அவற்கு நட்டான்; அவற்குத் தமன் என்பதும் அது. அவற்குப் பகை; "கள்வார்க்குத்தள்ளுமுயிர்நிலை" என்பதும் அது. நட்டார்க்குக் காதலன்; "புதல்வற்கன்புறும்" என்பதும் அது. வடுகரசர்க்குச் சிறந்தார் சோழியவரசர்; கற்பார்க்குச்சிறந்தது செவி என்பதும் அது.

அப்பொருளுமென்றதனானே இச்சொற்குப் பொருள் இது, அவர்க்குச் சோறுண்டு, நினக்குவலி வாள், அவ்வூர்க்கு இவ்வூர் காதம், "மனைக்குப்பாழ் வாணுதலின்மை" "போர்க்குப்புணை மன்" பிணிக்கு மருந்து "நட்டார்க்குத் தோற்றலை நாணுதோன்" "தன்சீரியனல்லா டானவற்கீன்றமைந்தன்" அவற்குத்தக்காளிவள் "உற்றார்கருரியர் பொற்றொடிமகளிர்" என்றாற்போல்வன கொள்க. (கரு)

எஅ. ஐந்தாகுவதே,
இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
யிதனி னிற்றிது வென்னு மதுவே.

இது முறையானே ஐந்தாவது இப்பொருட்கண் வருமென் கின்றது.

(இ - ள்.) இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி ஐந்தாகு வதே=மேல் இன்னெனப் பெயர்கொடுத்து ஓதிய வேற்றுமைச் சொல் ஐந்தாவதாம்: அது இதனின் இற்று இது என்னும்=அஃது இப்பொருளின் இத்தன்மையாயிருக்கும் இப்பொருளென்னும் பொருண்மையை உணர்த்தும். எ-று.

ஐந்தாவது பொருவும் எல்லையும் நீக்கமும் ஏதுவுமென நான்கு வகைப்படும். பொரு உறழ்பொருவும் உவமப்பொருவுமென இருவகைப்படும். உறழ்தல் ஒன்றனோன் ஒன்றை மிகுத்தல். ஏதுவும் ஞாபகவேதுவுங் காரகவேதுவுமென இருவகைப்படும். ஞாபகவேது முற் கூறிற்று. காரகவேது அச்சம் ஆக்கமென்பனவற்றாற் பெறப்படும். நீக்கப்பொருண்மை தீர்தல் பற்றுவிடுதலென்பனவற்றாற் பெறப்படும். ஏனையிரண்டும் இதனின் இற்று இதுவென்பதனாற் பெறப்படும், அவ்விரண்டனையும அஃது இருமுறையான் உணர்த்துமாதலின். எல்லைப்பொருள் கருவூரின்கிழக்கு இவ்வூர், இதனினாங்கு என வரும். இவையும் இற்றென்னும் பொருட்டு. (கசு)

எகூ. வண்ணம் வடிவே யளவே சுவையே
தண்மை வெம்மை யச்ச மென்று
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை யென்று
முதுமை யிளமை சிறத்த லிழித்தல்
புதுமை பழமை யாக்க மென்று

DR. U.V. SWAMINATHA IYER LIB...
TIRUVANMIYUR MADRAS 41


வின்மை யுடைமை நாற்றந் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதலென்
றன்ன பிறவு மதன்பால வென்மனார்.

இஃது அதனை முடிக்கவரும் பொருள்வேறுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) வண்ணம் * * * விடுதலென்று = வண்ணம் முதலாகப் பற்றுவிடுதல் ஈருகச் சொல்லப்பட்ட பொருள்களும்: அன்ன பிறவும் அதன்பால எனமனார் = அவைபோல்வன பிறபொருள்களும் ஐந்தாம்வேற்றுமைத் திறத்தனவென்று கூறுவர் புலவர். எ-று.

வண்ணம் வெண்மை கருமை முதலியன. வடிவு வட்டஞ் சதுரம் முதலியன. அளவு நெடுமை குறுமை முதலியன. சுவை கைப்புப் புளிப்பு முதலியன. நாற்றம் நறுநாற்றந் தீநாற்றமுதலியன.

உ-ம். காக்கையிற்கரிதுகளம்பழம்; இதனினென்பது காக்கை, இற்று என்பது கரிது, இதுவென்பது களம்பழம். இதனின்வட்டமிது இதனினெடிதிது இதனிற்றீவிதிது இதனிற்றண்ணிதிது இதனின்வெய்யதிது இதனினன்றிது இதனிற்றீதிது இதனிற்சிறிதிது இதனிற்பெரிதிது இதனின்வலிதிது இதனின்மெலிதிது இதனிற்கடிதிது இதனின்முதிதிது இதனினிளிதிது இதனிற்சிறந்ததிது இதனினிழிந்ததிது இதனிற்புதிதிது இதனிற்பழைதிது இவனினிலனிவன் இவனினுடையனிவன் இதனினாறுமிது இதனிற்பலவிவை இதனிற்சிலவிவை. இவற்றிற்கு இருவகைப்பொருவும் விரிக்க. அச்சம், கள்ளரினஞ்சும். ஆக்கம், வாணிகத்தினாயினான்; "கோட்டிற் செய்த கொடிஞ்சிநெடுந்தேர்" என்பதும் அது. தீர்தல், ஊரிற்றீர்ந்தான் "தலையினிழிந்தமயிரனையர்" எனவரும். பற்றுவிடுதல், காமத்திற்பற்றுவிட்டான் எனவரும். அன்னபிறவுமென்றதனான் அவனினளியனிவன் அதனிற்சேய்த்திது இகழ்ச்சியிற்கெட்டான் மகிழ்ச்சியின்மைந்துற்றான் என்பன போல்வன கொள்க. (௧௭)

௮௦. ஆறுகுவதே,
அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினு மிதன திதுவெனு
மன்ன கிளவிக் கிழமைத் ததுவே.

இது முறையானே ஆருவது [illegible] கின்றது.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

(இ - ள்.) அது எனப் பெயரிய வேற்றுமைக்கிளவி ஆருகு வதே=மேல் அதுவெனப் பெயர்கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச் சொல் ஆருவதாம்: அது=அவவேற்றுமைச்சொல்: தன்னினும்= ஒருபொருளினது உடைமைப்பொருளாகி நிற்குந் தன்னோடு ஒற்று மையுடைய பொருளானும்: பிறிதினும்=ஒருபொருளினது உடை மைப்பொருளாய்நிற்குந் தன்னின் வேருகிய பொருளானும்: இத னது இது எனும்=இப்பொருளினுடையது இப்பொருளென்பது பட நிற்கும்: அன்ன கிளவிக் கிழமைத்து=அன்ன பொருளாற் தோன் றுங் கிழமையைப் பொருளாகவுடைத்து. எ-று.

ஈண்டுத் தன்னென்றது உருபேற்கும் பொருளை. அன்னவென் ருர் இதன இவையென்னும் பன்மையுருபும் ஆதென்னும் ஒருமை யுருபும் அடங்குதற்கு.

"உ-ம். சாத்தனவாடை தனது வெள்வேல் "யானைவளவன்கொல் லிமீமிசை" எனவரும்.

ஒன்றுபலகுழீஇயதும் வேறுபலகுழீஇயதும் ஒன்றியற்கிழமை யும் உறுப்பின்கிழமையும் மெய்திரிந்தாயதுமெனத் தற்கிழமை ஐந்து வகைப்படும், "ஐம்பாலுரிமையுமதன்றற்கிழமை." என்பது அகத்திய மாதலின். பொருளின்கிழமையும் நிலத்தின்கிழமையுங் காலத்தின் கிழமையுமெனப் பிறிதின்கிழமை மூவகைப்படும். (கஅ)

அ௦. இயற்கையி னுடைமையின் முறைமையிற் கிழமை
செயற்கையின் முதுமையின் வினையி னென்ரு [யிற்
கருவியிற் றுணையிற் கலத்தின் முதலி
னொருவழி யுறுப்பிற் குழூஉவி னென்ரு
தெரிந்துமொழிச் செய்தியி னிலையின் வாழ்ச்சியிற்
றிரிந்து வேறுபடூஉம் பிறவு மன்ன
கூறிய மருங்கிற் ருேன்றுங் கிளவி
யாறன் பால வென்மனர் புலவர்.

இஃது அதனை முடிக்கவரும் பொருள்வேறுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) இயற்கை * * * வாழ்ச்சியின்=இயற்கை முதலாக வாழ்ச்சி ஈருகச் சொல்லப்பட்டனவும்: திரிந்து வேறுபடூஉம் அன்ன பிறவும்=ஒருசாரன திரிந்து வேறுபடும் அவைபோல்வன பிறவுமா கிய: கூறிய மருங்கிற் தோன்றுங் கிளவி=முற்கூறிய கிழமைப்பொ

ருட்கட் தோன்றுஞ் சொல்லெல்லாம்: ஆறன் பால என்மனார் புல. வர்=ஆரும்வேற்றுமைத் திறத்தனவென்று கூறுவர் புலவர். எ-று.

உ-ம். எண்ணதுகுப்பை இஃது ஒன்றுபலகுழீஇய தற்கிழமை; படையதுகுழாம் இது வேறுபலகுழீஇய தற்கிழமை; சாத்தனதியற்கை, நிலத்ததகலம் இவை இயற்கைக்கிழமை; சாத்தனதுநிலைமை, சாத்தனதில்லாமை இவை நிலைக்கிழமை; இந்நான்கும் ஒன்றியற்கிழமை. ஒருபொருளின் ஏகதேசம் அறிவித்தற்கு ஒருவழியுறுப்பென்றார். அவை யானையதுகோடு, புலியதுகிர் இவை உறுப்பின் கிழமை. செயற்கையாவது தன்றன்மை திரிந்து வேறோர்தன்மை யாதல்; அவை சாத்தனதுசெயற்கை, சாத்தனதுகற்றறிவு; முதுமைக்கிழமை, அரசனதுமுதுமை அரசனதுமுதிர்வு, இஃது அறிவின் முதிர்ச்சியென்பது அறிவித்தற்கு இளமைகூறாராயினர். வினைக்கிழமை, சாத்தனதுவினை சாத்தனதுசெலவு; இவை மெய்திரிந்தாய தற்கிழமை. உடைமைக்கிழமை, சாத்தனதுடைமை சாத்தனது தோட்டம்; முறைமைக்கிழமை, மறியதுதாய் மறியதுதந்தை; கருவிக்கிழமை, இசையதுகருவி வினைக்கலத்ததுகிகிரி; துணைக்கிழமை, அவனதுதுணை அவனதிணங்கு; கலமாவது ஓலை, நிலத்ததொற்றிக் கலம் சாத்தனதுவிலைத்தீட்டு; இஃது இருபொருட்கு உரிமையுடைமையின் உடைமையின் வேறாயிற்று. முதற்கிழமை, ஒற்றியதுமுதல் ஒற்றியதுபொருள்; தெரிந்துமொழிச்செய்தி, தெரிந்துமொழியாற் செய்யப்படுதலிற் தெரிந்துமொழிச்செய்தியாயிற்று. கபிலரதுபாட்டு; இது பாரியதுபாட்டு எனவும் நிற்றலின் இருபொருட்கு உரியதாம்; பரணரதுபாட்டியல் இதுவும் அது; இவைபொருட்பிறிதின்கிழமை. கிழமைக்கிழமை, முருகனதுகுறிஞ்சிநிலம் இது நிலப்பிறிதின்கிழமை; வெள்ளியதாட்சி இது காலப்பிறிதின்கிழமை; வாழ்ச்சி, காட்டது யானை இது பொருட்பிறிதின்கிழமை; யானையதுகாடு நிலப்பிறிதின் கிழமை; வாழ்ச்சி வாழ்தலை உணர்த்துங்காற் தற்கிழமையுமாம். அன்னபிறவுமென்றது, எட்சாந்து கோட்டுநூறு இவை முழுதுந் திரிந்தன; சாத்தனதொப்பு தொகையதுவிரி பொருளதுகேடு சொல்லதுபொருள் இவை சிறிதுதிரிந்தன. (கக)

அக. ஏழாகுவதே,

கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் யிடத்தி னிலத்திற் காலத்தி
னனைவகைக் குறிப்பிற் றோன்று மதுவே.

இது முறையானே ஏழாவது இப்பொருட்கண் வருமென்கின்றது.

(இ - ள்.) கண் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி ஏழாகுவதே = மேற் கண்ணென்று பெயர்கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச்சொல் ஏழாவதாம்: அது வினை செய் இடத்தில் நிலத்திற் காலத்தின் அனைவகைக் குறிப்பிற் தோன்றும்=அது வினைசெய்யாநிற்றலாகிய இடத்தின்கண்ணும் வினைநிகழாதுவரையறையுடையதோர் நிலமாகிய இடத்தின்கண்ணும் வினைநிகழாது வரையறைப் பட்டுநிற்குங் காலமாகிய இடத்தின்கண்ணும் என மூவகைக்குறிப்பின்கண்ணுந் தோன்றும். எ-று.

எனவே, ஏழாவது இடப்பொருட்டாயிற்று.

உ-ம். தட்டுப்புடைக்கண்வந்தான் மாடத்தின்கண்ணிருந்தான் கூதிர்க்கண்வந்தான் எனவரும். இவை இடமும் இடத்துநிகழ்பொருளும் வேறாய்வந்தன. குன்றத்துக்கட்குவடு இஃது அவ்விரண்டும் ஒன்றாய்வந்தது.

குறிப்பிற் தோன்றுமென்றது அவற்றை இடமெனக் கருதிய வழியே அவ்வேழனுருபு தோன்றுவது அல்லுழித் தோன்றாதென்றவாறு. (உ0)

அஉ. கண்கால் புறமக முள்ளுழை கீழ்மேல்
பின்சா ரயல்புடை தேவகை யெனாஅ
முன்னிடை கடைதலை வலமிட மெனாஅ
வன்ன பிறவு மதன்பால வென்மனார்.

இஃது இவ்வேழாவதற்கு முடிக்கவரும் பொருள்வேறுபாடின்றி உருபின்பாகுபாடே உடைமையின் உருபின்பாகுபாடேகூறுகின்றது.

(இ - ள்.) கண் = கண்ணென்னும்பொருளும்: கால் * * * புடை=கால் முதலாகப் புடை ஈறாகச் சொல்லப்பட்ட உருபுகளும்: தேவகை எனா=தேவகை என்னுந் திசைக்கூற்றுப் பொருண்மையும்: முன் * * * இடம் எனா = முன் முதலாக இடம் ஈறாக ஓதப்பட்ட உருபுகளும்: அன்ன பிறவும் = அவைபோல்வன பிறவுருபுகளும்: அதன் பால என்மனார்=ஏழாவதன் கூற்றனவென்று கூறுவர் புலவர். எ-று.

இச்சூத்திரத்தாற் கூறிய உருபுகள் ஓரிடத்தின் ஏகதேசத்தினை வரையறுத்து உணர்த்தும்வழி ஆறுவதனை உணர்த்தியும் ஓரிடத்தினை வரையறுத்து உணர்த்தாது கண்ணென்பதுபோல இடமெனை முழுதுணர்வுசெல்ல நின்றவழி ஏழாவதனையே உணர்த்தியும் நிற்குஞ் சிறப்பின்மைகருதி வேறாக எடுத்தோதினர். ஏழாவதற்கு இம் மூவகைப் பொருட்பாகுபாடன்றி வேறுபொருட்பாகுபாடு இன்மையின் முன்னையனபோலப் பொருளினைப் பகுத்தோதாராயினர்.

ஆசிரியர் "கூறியமுறையினுருபு" "இறுதியுமிடையும்" என்னுஞ்சூத்திரங்களாற் பெயரிறுதிக்கும் முடிக்குஞ்சொற்கும் முன்னிற்பது உருபென்று கூறினமையாற் பொருளிடை நில்லாமையும் பெற்றாம்.

சிறந்த கண்ணென்னும் உருபை முற்கூறி ஈண்டுக் கண்ணென்பதனைச் சிறப்பில்லா உருபுகளோடு எடுத்தோதினர், கண்ணகன் ஞாலமென்புழி அக்கண் ஞாலந்தன்னையே உணர்த்தி ஓரிடத்தினை வரையறுத்து உணர்த்தாதுநிற்பதோர் இடைச்சொல்லென்பது உணர்த்துதற்கு.

தேவகையென்னும்பொருள் வரையறைப்படாது சொல்லுவான் குறிப்பிற்றாய் நிற்றலின் இடத்துள் அடக்காராயினர்.

இவ்விரண்டு பொருட்கும் வேறோர் சூத்திரஞ்செய்யாது இவ்வுருபுகளுடனே ஓதினர் சூத்திரஞ் சுருங்குதற்கு.

உ-ம். ஊர்க்காலிருந்தான் ஊர்ப்புறத்திருந்தான் மாடத்தகத்திருந்தான் ஊருளிருந்தான் சான்றோருழைச்சென்றான் மாடத்துக்கீழிருந்தான் மாடத்துமேலிருந்தான் ஏர்ப்பின்சென்றான் காட்டுச்சாரோடுங்களிறு ஊரயலிருந்தான் ஊர்ப்புடையிருந்தான் வடக்கண் வேங்கடம் தேர்முன்சென்றான் சான்றோரிடையிருந்தான் கோயிற்கடைச்சென்றான் தந்தைதலைச்சென்றான் கைவலத்துள்ளதுகொடுக்கும் கையிடத்துப்பொருள் எனவரும்.

அன்னபிறவால்வருவன குடத்தில்விளக்கு ஊரிலேயிருந்தான் கிழவோடேத்து கிழவிமாட்டு எனவும், பொருட்கணுணர்வு மலர்க்கணுற்றம் ஆகாயத்துக்கட்பருந்து எனவும்வரும்.

இன்னும் மணியின்கண்ணொளி கையின்கண்விரல் நிறத்தின்கண்ணெழில் ஆடற்கண்ணழகு எனக் கிழமையுஞ் சினையும் பண்பும் வினைப்பெயரும்பற்றி வரும்.

இனிக் கண் கால் முதலியன உருபைவிளக்குதற்கு அவ்வுரு பின்பொருளாய்நின்று கண்ணெனுருபு விரித்துக்கொண்டுநிற்குமெனின், கண்ணென்னும் உருபின்பொருளாவது கண்ணென்னும் இடைச்சொல்லாலுணர்த்தப்படும் இடப்பொருண்மையென்று பொருளுரைத்தாற் பின்வருகின்ற இடப்பொருண்மையை முன்னுங்கூறிற்றேயாமாதலிற் கூறியதுகூறிற்றாம். அல்லதூஉங் கண்ணகன்ஞாலமென்புழிக் கண்ணென்னும் இடைச்சொல்லான் உணர்த்தும் இடப்பொருண்மைக்கும் இடத்துக்கண்ணெனக் கண்ணெனுருபு மீண்டுங் கூறல்வேண்டும். அல்லதூஉங் "கண்ணின்றுகூறுதலாற்றானவனாயின்" என்பதற்கு என்கணின்றெனத் தோன்றாவெழுவாயாய்நின்று கண்ணெனுருபேற்று நின்றதாம். அல்லதூஉம் "வடக்கண்வேங்கடம்" என்புழிக் கண்ணெனுருபு விரித்தலின் ஒழிந்தவற்றிற்கு ஒவ்வாதாம். அல்லதூஉம் ஆலின்கீழ்க்கிடந்தவா மரத்தின்மேலிருந்தகுரங்கு என்பன முதலியவற்றிற்குக் கண்ணெனுருபுகொடுத்து உலகம்வழங்காமை உணர்க. முன் இரண்டாவது முதலிய உருபுகளை முடித்தற்கு எடுத்தோதிய காப்புமுதலிய பொருள்களைப்போல உருபைமுடித்துநில்லாது ஈண்டுக் கூறிய பொருள்கள் கண்ணென்னும் உருபையே உணர்த்திநின்றன என்றலிற் சேனாவரையரும் இப்பொருள்களை உருபென்றே கூறினாராயிற்று. அங்ஙனங்கூறி அத்துச்சாரியைகொடுத்து உதாரணங்காட்டவே உருபின்பின்னரும் அத்துச்சாரியை வருதல்தானும் நேர்ந்தாராயிற்று. (உக)

அ௩. வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
யீற்றுநின் றியலுந் தொகைவயிற் பிரிந்து
பல்லா றாகப் பொருள்புணர்ந் திசைக்கு
மெல்லாச் சொல்லு முரிய வென்ப.

இது வேற்றுமை தொக்குழி விரிக்குமாறும் அதற்கு இனமாகிய அன்மொழி தொக்குழி விரிக்குமாறுங் கூறுகின்றது.

(இ - ள்.) வேற்றுமைப் பொருளை ஈற்று நின்று இயலுந் தொகைவயிற் பொருளை விரிக்குங் காலை=வேற்றுமைத்தொகையின் நின்ற பொருளை அன்மொழித்தொகையின் நின்ற பொருளை விரிக்குங்காலத்து: பொருள்புணர்ந்து = அவ்வேற்றுமைப்பொருளோடும் அன்மொழிப்பொருளோடும் புணர்ந்து: பல்லாறாகப் பிரிந்து இசைக்கும் எல்லாச்சொல்லும் உரிய என்ப=பலநெறியாகப் பிரிந்து ஒலிக்கும் எல்லாச்சொல்லும் விரித்தற்கு உரியவென்று கூறுவர் ஆசிரியர்.

மேலும் "ஈற்றுநின்றியலுமன்மொழித்தொகையே" யென்பர். கருங்குழற்பேதை பொற்றொடியரிவை மட்குடம் என்னும் வேற்றுமைத்தொகைகள் கருங்குழலையுடைய பேதை பொற்றொடியையணிந்த அரிவை மண்ணானியன்ற குடம் என விரிந்தவாறு காண்க. தாழ்குழல் பொற்றொடி மட்காரணம் என்னும் அன்மொழித்தொகைகள் தாழ்குழலையுடையாள் பொற்றொடியையணிந்தாள் மண்ணாகியகாரணத்தினியன்றது என விரிந்தவாறு காண்க. (உஉ)

வேற்றுமையியல் முற்றும்.

---

மூன்றாவது

## வேற்றுமைமயங்கியல்.

அச. கரும மல்லாச் சார்பென் கிளவிக்
குரிமையு முடைத்தே கண்ணென் வேற்றுமை.

என்பதுசூத்திரம். இது தன்பொருளிற் றீராது பிறிதொன்றன் பொருட்கட் செல்லும் பொருண்மயக்கமுந் தன்பொருளிற் றீர்ந்து செல்லும் உருபுமயக்கமுமென்னும் இருவகைமயக்கமும் உணர்த்தலின் வேற்றுமைமயங்கியலென்னும் பெயர்த்தாயிற்று. இச்சூத்திரம் இரண்டாவதன்பொருளும் அதிகாரத்தானின்ற ஏழாவதன்பொருளும் மயங்கும் மயக்கங் கூறுகின்றது.

(இ - ள்.) கருமம் அல்லாச் சார்பு என் கிளவிக்கு=கருமச் சார்ச்சியல்லாத அரசரைச்சார்ந்தானெனவரும் சார்பென்னும் பொருண்மைக்கு: கண் என் வேற்றுமை உரிமையும் உடைத்து=ஏழாம் வேற்றுமை உரித்தாய்வருதலுமுடைத்து. எ-று.

தூணினைச்சார்ந்தானென்றாற்போல மெய்யுறலின்றி அரசர்கட் சார்ந்தான் எனவரும். இதனுள் அரசரது சார்தற்கிடமாகிய அருள் தன்பொருளதனினீங்காதே பிறிதின்பொருளாகிய செயப்படுபொருட்கட் சென்றது ஏழாவது. தூணின்கட்சார்ந்தானென்பதுவழக்கமின்று; ஆசிரியர்மறுத்தலின். (க)

அரு. சினைநிலைக் கிளவிக் கையுங் கண்ணும்
வினைநிலை யொக்கு மென்மனார் புலவர்.

இதுவும் அவ்விரண்டன் மயக்கங் கூறுகின்றது.

(இ - ள்.) சினைநிலைக் கிளவிக்கு = சினைப்பொருண்மேல் நிற்குஞ் சொல்லிற்கு: ஐயுங் கண்ணும் வினைநிலை ஒக்கும் என்மனார் புலவர் = இரண்டாவதும் ஏழாவதும் வினைகூறுநிலைமைக்கண் ஒக்குமென்று கூறுவர் புலவர். எ-று.

உ-ம். கோட்டைக்குறைத்தான் கோட்டின்கட்குறைத்தான் எனவரும்.

அறுத்தல் குறைத்தல் முதலிய இரண்டாவதன்பொருட்கண் ஏழாவது வந்ததேனும் வழக்குப்பயிற்சி நோக்கி வினைநிலையொக்குமென்றார். (உ)

அசு. கன்றலுஞ் செலவு மொன்றுமார் வினையே.

இதுவும் அது.

(இ - ள்.) கன்றலும் செலவும் = கன்றற்பொருண்மேல் வருஞ் சொல்லும் செலவுப்பொருண்மேல் வருஞ் சொல்லும்: ஒன்றுமார் வினையே = இரண்டாவதற்கும் ஏழாவதற்கும் ஒருதொழில. எ-று.

உ-ம். சூதினைக்கன்றினான் சூதின்கட்கன்றினான் நெறியைச் சென்றான் நெறிக்கட்சென்றான் எனவரும்.

பொருள்பற்றி ஓதினமையாற் சூதினையிவறினான் சூதின்கணிவறினான் நெறியையடைந்தான் நெறிக்கணடைந்தான் எனவும் வரும்.

இஃது இரண்டாவதன்பொருளை எடுத்தோதலின் வேறுகூறினார் வழக்கின்கட் பயின்றுவருதலின் ஏழாவதனையும் ஒப்பக்கூறினார். சினைமுதல்மயக்கங்கூறுகின்றதற்கு இடையே இச்சூத்திரம் வைத்தார் இரண்டாவதும் ஏழாவதும் அதிகாரத்தாற் பெறுகின்ற இலேசு நோக்கி. (ந)

அஎ. முதற்சினைக் கிளவிக் கதுவென் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கை வருமே.

இஃது உருபுமயக்கமாய் வருவனவற்றைக் கூறுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) முதற்சினைக் கிளவிக்கு = முதற்சொல்லோடு தொடர்ந்த சினைச்சொல்லிற்கு: அது என் வேற்றுமை முதற்கண் வரின் =

ஆறும்வேற்றுமை முதற்கண்ணே வருமாயின்: சினைக்கு ஐவரும்= சினைச்சொல்லின்கண் இரண்டாம்வேற்றுமை வரும். எ-று.

உ-ம். யானையதுகோட்டைக்குறைத்தான் எனவரும். இஃது ஒருதொடர்க்கண் இரண்டுருபு வருதலின் மயக்கமாயிற்று. (ச)

அஅ. முதன்மு னைவரிற் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருத றெள்ளி தென்ப.

இது பொருண்மயக்கம் உணர்த்துகின்றது.

(இ - ள்.) முதன்முன் ஐவரின் = அம்முதற்சினைக்கிளவிக்கண் முதற்சொன்முன் இரண்டாம்வேற்றுமைவரின்: சினைமுன் கண் என் வேற்றுமை வருதல் தெள்ளிது என்ப = சினைச்சொன்முன் கண் ணென்வேற்றுமை வருதல் தெள்ளிதென்றுகூறுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். யானையைக் கோட்டின்கட் குறைத்தான்; இது பொருண்மயக்கம். தெள்ளிதென்றதனுன் யானையைக் கோட்டைக் குறைத்தானென ஐகாரம் வருதலும் முன்னர்க்கூறியவெல்லாம் பண்புந் தொழிலும் பொருட்டொடர்ச்சியும்பற்றி வருதலுங் கொள்க. மணியது நிறத்தைக் கெடுத்தான், மணியை நிறத்தைக் கெடுத்தான். முற்கூறியதும் இவையும் ஒரு தொடரின் இரண்டு உருபு மயங்கலின் உருபுமயக்கம். மணியை நிறத்தின்கட் கெடுத்தான், தலைமகனைச் செலவின்கண் அழுங்குவித்தல், இது பொருண்மயக்கம். தலைமகனது செலவை அழுங்குவித்தல் தலைமகனைச் செலவை அழுங்குவித்தல் சாத்தனை நூலை ஓதுவித்தான் யாற்றை நீரை விலக்கினான் இவை உருபு மயக்கம். (ரு)

அகூ. முதலுஞ் சினையும் பொருள்வேறு படாஅ
நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே.

இது முதல்சினைகளை ஆராய்கின்றது.

(இ - ள்.) முதலுஞ் சினையும் பொருள் வேறுபடாஅ = முதலுஞ் சினையும் முதலாயது முதலேயாய்ச் சினையாயது சினையே யாய்ப் பொருள்கள் தம்முள் வேறுபட நில்லா: நுவலுங்காலைச் சொற்குறிப்பின=சொல்லுங்கால், சொல்லுவானது சொல்லுதற் குறிப்பினன் முதலென்றுஞ் சினையென்றும் வழங்கப்படும். எ-று.

உ-ம். கோட்டது நுனியைக் குறைத்தான், கோட்டை நுனிக்கட் குறைத்தான், கோட்டை நுனியைக் குறைத்தான் என ஒரு முதலின் சினையை முதலாகக் குறித்தவழி அதுதான் முதலாய் நின்றவாறு காண்க. படையென்பதனை முதலாகப் பார்க்கும்வழிப் படையினதுயானை என முதல் சினையாய்நிற்கும். (சு)

கூ0. பிண்டப் பெயரு மாயிய றிரியா
பண்டியன் மருங்கின் மரீஇய மரபே.

இது பிறனுடம்பட்டது தானுடம்படுதல்.

(இ-ள்.) பிண்டப்பெயரும் ஆயியல் திரியா = பலபொருட்டொகுதியை உணர்த்தும் பெயரும் முதற்சினைப்பெயரியல்பிற் றிரியா: பண்டு இயல் மருங்கின் மரீஇய மரபே = அவ்வாறு அவற்றை முதலுஞ் சினையுமாக வழங்குதல் மேற்றொட்டு வழங்கிவாராநின்ற கூற்றான் மருவிய முறை. எ-று.

உ-ம். குப்பையது தலையைச் சிதறினான், குப்பையைத் தலைக்கட் சிதறினான், குப்பையைத் தலையைச் சிதறினான் எனவரும்.

இது முதல்சினையதிகாரத்தின் இலக்கணமல்லா மரூஉக் கூறினார். இது வேறுபல்குழீஇய படைமுதலியவற்றிற்கும் ஒக்கும். (எ)

கூக. ஒருவினை யொடுச்சொல் லுயர்பின் வழித்தே.

இது மூன்றுவதன்கட் சொல்லுதல் வகைமை கூறுகின்றது.

(இ-ள்.) ஒருவினையொடுச்சொல் = "அதனொடியைந்தவொருவினைக்கிளவி" என மூன்றுவதற்கு ஓதிய ஒருவினையொடுச்சொல்: உயர்பின் வழித்து = உயர்ந்த பொருளையுணர்த்தும் பெயர்வழித் தோன்றும். எ-று.

உ-ம். அரசனொடிளையர் வந்தார் எனவரும்.

இஃது உயர்பொருளும் இழிபொருளும்பற்றி மயங்கிவருதலின் ஈண்டுக்கூறி இழிபொருளை விலக்கினார்.

சாத்தனொடுகொற்றன்வந்தான் என உயர்பில்வழி எண்ணொடு வந்தது.

குலந் தவங் கல்வி வினை உபகாரம் முதலியவற்றான் உயர்பு கொள்க.

நாயொடு நம்பி வந்தான் என்றாற்போல்வன இழிபொருட்கண்ணும் ஒருவினையொடுச்சொல் வந்ததாலெனின், அது யாதானும் ஒரு வாற்றான் உயர்புண்டாயினல்லது அவ்வாறு கூறார்; கூறுபவாயின் அஃது ஒருவினையொடுச்சொலெனப்படாது. கைப்பொருளொடு வந்தான் என்றாற்போல்வன பிறிதோர் பொருள் தந்த ஒடு; அது பொருளுண்டாக வந்தானென்றலின். (அ)

கூஉ. மூன்றனு மைந்தனுந் தோன்றக் கூறிய
வாக்கமொடு புணர்ந்த வேதுக் கிளவி
நோக்கோ ரனைய வென்மனார் புலவர்.

இது மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் ஏது ஒத்தகிழமைய என்கின்றது.

(இ - ள்.) மூன்றனும் ஐந்தனுந் தோன்றக் கூறிய = மூன்றாம்வேற்றுமைக்கண்ணும் ஐந்தாம்வேற்றுமைக்கண்ணும் விளங்கச் சொல்லப்பட்ட: ஆக்கமொடு புணர்ந்த ஏதுக்கிளவி = ஆக்கத்தோடு கூடிய ஏதுச்சொல்: நோக்கோரனைய என்மனார் புலவர் = அவவேதுப் பொருண்மையை நோக்கும் நோக்கு ஒருதன்மைய என்று கூறுவர் புலவர். எ-று.

உ-ம். வாணிகத்தானாயினான் வாணிகத்தானாயபொருள் வாணிகத்தினாயினான் வாணிகத்தினாயபொருள் எனவரும்.

எனவே ஞாபகவேதுவின்கண் வரும் இன்னும் ஆனும் ஒத்த ரிமையிலவென்பது பெற்றாம். இஃது உருபும் பொருளும் மயங்கிற்று. ( )

கூங. இரண்டன் மருங்கி னோக்க னோக்கமவ்
விரண்டன் மருங்கி னேதுவு மாகும்.

இது நோக்கனோக்கத்திற்கு ஏதுவுஞ் செயப்படுபொருளும் ஒத்த உரிமைய என்கின்றது.

(இ - ள்.) இரண்டன் மருங்கின் நோக்கனோக்கம் = இரண்டாவதற்கு உரித்தாக ஓதிய கண்ணானோக்கும் நோக்கமின்றி மனத்தானோக்கும் நோக்கம்: அவ்விரண்டன் மருங்கின் ஏதுவுமாகும் = அம் மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் உரிய ஏதுப்பொருண்மையுமாம். எ-று.

உ-ம். "வானோக்கிவாழுமுயிரெல்லாம்" என்புழி வானை நோக்கி வாழும் உலகம் என விரியும்வழி வானுடைய பயனைக் கருதி உயிர்வாழு மெனவும், வானினுடைய பயனைக் கருதி உயிர்வாழுமெனவுஞ் செயப் படுபொருளும் ஏதுவும் ஒப்பப் பிறந்துநிற்றல் இச்சூத்திரத்திற்குக் கருத்து. இஃது உருபும் பொருளும் மயங்கிற்று. (௧௦)

௬௪. அதுவென் வேற்றுமை யுயர்திணைத் தொகைவயி
னதுவெ னுருபுகெடக் குகரம் வருமே.

இஃது ஆறாவதற்கு ஓதிய முறைப்பொருட்கண் நான்காவது விரியுமாறும் ஆறனுருபுகெட அதனுடைமைப்பொருள் விரியுமாறுங் கூறுகின்றது.

(இ - ள்.) உயர்திணைத் தொகைவயின் குகரம் வரும்=உயர்தி ணைப்பொருள் இரண்டு சேர்ந்தவிடத்து உருபுவிரிப்புழி நான்கனு ருபு விரியும்: அது என் வேற்றுமை அது என் உருபு கெட வரும்= அதுவன்றி அவவுயர்திணைத்தொகைவயின் ஆறாம்வேற்றுமையை விரிப்புழி அவ்வதுவெனுருபு தான்கெட்டுப்போக அதனுடைமைப் பொருள் விரியும். எ-று.

உ-ம். நம்பிமகன் என்னுந்தொகை நம்பிக்கு மகன் என விரி யும். இஃது உருபுமயக்கம். இனி "நின்மகள் பாலுமுண்ணாள் பழங் கண்கொண்டு" "யாமெம்மகளைப்பாராட்ட" "என்னணியியற்குறுமக ளாடிய" என்பனவற்றுள் அதுவெனுருபு கெட அதனுடைமைப் பொருள் விரிந்தவாறு காண்க. இவை உருபு நிலைக்களத்துப் பொ ருண்மயங்கின. இவற்றிற்கு நான்கனுருபுவிரிப்பின் நினக்குமகளா கியவள் எனக்குமகனாகியவனை எனக்குமகளாகியகுறுமகள் என ஆக் கங்கொடுத்துக் கூறல்வேண்டும்; ஆண்டு அம்முறைமை செயற்கை யாமாகலின் அதுபொருளன்மையுணர்க. (௧௧)

௬௫. தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டு மூன்றுங்
கடிநிலை யிலவே பொருள்வயி னான.

இஃது இரண்டாவதும் மூன்றாவதும் மயங்குமாறு கூறுகின்றது.

(இ - ள்.) தடுமாறு தொழிற்பெயர்க்கு = தனக்கே உரித்தாய் நில்லாது ஒருகால் ஈற்றுப்பெயரொடுஞ் சென்று தடுமாறுந் தொழி லொடுதொடர்ந்தபெயர்க்கு: இரண்டும் மூன்றுங் கடிநிலை இல=

இரண்டாவதும் மூன்றாவதுங் கடியப்படா: பொருள்வயினான = அவ் வேற்றுமை தொக்கு அவற்றின்பொருள் நிற்குமிடத்து. எ-று.

உ-ம். புலிகொல்யானை என்புழிப் புலி செயப்படுபொருளாய வழி இரண்டாவதும், அது வினைமுதலாயவழி மூன்றாவதும் விரியும். அது புலியைக் கொன்ற யானை, புலியாற் கொல்லப்பட்ட யானை என வரும்.

வினைத்தொகைக்கண்ணுஞ் செயப்படுபொருள் பிறக்குமோவெனின், செய்குன்று உறைபதி என்றாற்போல்வனவற்றுட் பிறந்தவாறு காண்க. இஃது உருபுமயக்கம். (கஉ)

கூசா. ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப வுணரு மோரே.

இது மேலதற்கோர் புறனடை.

(இ - ள்.) ஈற்றுப் பெயர்முன்னர் = தடுமாறுந்தொழிலொடு புணர்ந்த இருவகைப் பெயருள் இறுதிப்பெயர்முன்னர் வந்த: மெய் யறி பனுவலின் = பொருள்வேறுபாடு உணர்த்துஞ் சொல்லான்: வேற் றுமை தெரிப உணருமோரே = அப்பொருள்வேற்றுமை தெரிவார் உணர்வோர். எ-று.

உ-ம். புலிகொல்யானையோடாநின்றது புலிகொல்யானையோடா நின்றன புலிகொல்யானைக்கோடுவந்தன எனவரும். முன் புலியைக் கொன்றயானை பின் பிறிதொன்றானிறந்துழியும் புலிகொல்யானைக் கோடுவந்தனவென்ப. இது குறிப்பானுணரப்படுமென்றற்கு உணரு மோரேயென்றார். இன்னும் இதனானே புலிகொல்யானைகிடந்த தென்புழிச் சொல்லுவான் குறிப்பான் உணர்தலுங்கொள்க. (கங)

கூஎ. ஓம்படைக் கிளவிக் கையு மானுந்
தாம்பிரி விலவே தொகவரு காலை.

இஃது இரண்டாவதும் மூன்றாவதும் மயங்குமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஓம்படைக் கிளவிக்கு = பாதுகாத்தலாகிய பொருண் மைக்கு: ஐயும் ஆனுந் தாம் பிரிவில = இரண்டாவதும் மூன்றாவதும் ஒத்த உரிமைய: தொக வருகாலை = வேற்றுமை தொக்கவழி. எ-று.

உ-ம். புலிபோற்றிவா என்புழிப் புலியைப் போற்றி வாவென விரியும்வழிப் புலியானாய ஏதத்தைப் போற்றிவாவென இரண்டுருபும்

பொருளும் ஒப்பவிரிந்து இரண்டும் மயங்கியவாறு காண்க. இன்னுருபு பிரிவுடைத்தாய்ப் புலியிற்போற்றிவாவெனச் சிறுபான்மை வரும். ()

கூஅ. ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்
கேழு மாகு முறைநிலத் தான.

இஃது ஆறுவதும் ஏழாவதும் மயங்குமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஆறன்மருங்கின் வாழ்ச்சிக்கிழமைக்கு = ஆறும்வேற்றுமைக்கண் ஓதிய வாழ்ச்சிக்கிழமைக்கு: உறைநிலத்து ஆன ஏழுமாகும் = உறைநிலப்பெயர் பின்மொழியாயவழி ஏழாவதும் வரும். எ-று.

உ-ம். காட்டதியானை, காட்டின்கண்யானை எனவரும். அந்நிலத்து வாழ்வதனை அதனதெனப்படும், அது பற்றுக்கோடாக உண்டாய், அஃது இன்றிவிடிற் தான் வாழ்தலில்லாமையின். யானைக்காடென்பது உறைநிலப்பெயர். முன்மொழியாய்வருதலின் யானைக்கட்காடென ஏழனுருபு விரியாதாயிற்று. இது பொருண்மயக்கம்.(கஈ)

கூகூ. குத்தொக வரூஉங் கொடையெதிர் கிளவி
யப்பொரு ளாறற் குரித்து மாகும்.

இது நான்காவதன்பொருள் ஆறுவதற்குச் செல்லுமென்கின்றது.

(இ - ள்.) குதொக வரூஉங் கொடையெதிர் கிளவி = நான்கனுருபு தொக வருங் கொடையை விரும்பி மேற்கோடலை உணர்த்துந் தொகைச்சொல்லினது: அப்பொருள் = அக்கொடையெதிர்தலாகிய அப்பொருண்மை: ஆறற்கு உரித்துமாகும் = ஆறும்வேற்றுமைக்கு உரித்துமாம். எ-று.

உ-ம். நாகர்பலி என்பது நாகர்க்கு நேர்ந்த பலி, நாகரது பலியென விரியும். நாகர்க்கு நேர்ந்த பலியெனவே பிறர்க்காகாது அவருடைமையாயிற்றுதலின் ஆறுவதும் உரித்தாகப்பெற்றது. சாத்தற்குநேர்ந்தசோறென்புழி அது பிறர்க்குயாதலின் ஆண்டு ஆறுவது ஏலாது. தெய்வமல்லாதாரினுஞ் சிறந்தார்க்கும் நேர்ந்ததேல் ஆண்டும் ஆறுவதும் வருமென்றுணர்க. (கசு)

க00. அச்சக் கிளவிக் கைந்து மிரண்டு
மெச்ச மிலவே பொருள்வயி னான.

இஃது ஐந்தாவதும் இரண்டாவதும் மயங்குமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அச்சக் கிளவிக்கு = அச்சப்பொருண்மேல் வருஞ் சொல்லிற்கு: ஐந்தும் இரண்டும் எச்சம் இல=ஐந்தாவதும் இரண்டாவதும் ஒத்த உரிமைய: பொருள்வயினான=வேற்றுமைதொக்கு அவற்றின்பொருள் நின்றவழி. எ-று.

உ-ம். பழியஞ்சும் என்பது பழியினஞ்சும் பழியையஞ்சும் என வரும். கள்ளரினஞ்சும் என்பதற்கு அவரின்மிகவஞ்சுமென்னும் பொருண்மையையுந் தருமேனும் அப்பொருள்கொள்ளற்க. கள்ளரான் அஞ்சுமென்பதே கொள்க. இந்த உருபும் பொருளும் மயங்கிற்று.()

க0௧. அன்ன பிறவுந் தொன்னெறி பிழையா
துருபினும் பொருளினு மெய்தடு மாறி
யிருவயி னிலையும் வேற்றுமை யெல்லாந்
திரிபிட னிலவே தெரியு மோர்க்கே.

இது வேற்றுமைமயக்கத்திற்குப் புறனடை.

(இ - ள். அன்ன பிறவும் = மேல் வேற்றுமைமயக்கங்கூறப்பட்ட வேற்றுமையேயன்றி அவைபோல்வன பிறவும்: தொன்னெறி பிழையாது=தொன்றுதொட்டு வரும வழக்கிற் பிழையாது: உருபினும் பொருளினும் மெய்தடுமாறி=உருபானும் பொருளானும் ஒன்ற னிலைக்களத்து ஒன்று சென்று: இருவயின் நிலையும் வேற்றுமை யெல்லாம் = பிறிதொன்றன்பொருளுந் தன்பொருளுமாகிய ஈரிடத்தும் நிலைபெறும் வேற்றுமையெல்லாம்: திரிபிடன் இலவே தெரியு மோர்க்கே=திரிபுடையவல்ல தெரிந்துணர்வோர்க்கு. எ-று.

ஏதுப்பொருட்கண் வரும் மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் இருவயினிற்றலின்மையின் அவற்றையொழித்து ஏனையவற்றிற்கே இருவயினிற்றல் கொள்க. என்னை? வழிபோயினார் எல்லாருங் கூறை கோட்பட்டாரென்றவழிக் கடவுளரையொழித்து ஏனையோர்க்கே அக்கூறைகோட்படுதல் எய்தினாற்போல.

அன்னபிறவாவன, நோயினீங்கினான் நோயைநீங்கினான்; சாத்தனைவெகுண்டான் சாத்தனொடுவெகுண்டான்; முறையாற்குத்துங் குத்து முறையிற்குத்துங்குத்து எனவரும். இது முறைக்குத்துக் குத்தினானெனத் தொக்குநின்றதன்கண் இரண்டும் விரிந்தன. கடலொடுகாடொட்டாது கடலைக்காடொட்டாது; தந்தையொடுசூளுற்றான் தந்தையைச்சூளுற்றான் என இவை தொகையாயும், தொகையன்றியும் மயங்கிநிற்குமாறு உணர்க. (௧அ)

கoஉ. உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
யொருசொன் னடைய பொருள்செல் மருங்கே.

இது பல உருபு தொடர்ந்து அடுக்கியவழிப் படுவதோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) உருபு தொடர்ந்து அடுக்கிய வேற்றுமைக்கிளவி = ஓருருபும் பலவுருபுந் தம்முட்டொடர்ந்து அடுக்கிவந்த வேற்றுமை யுருபை இறுதியாகவுடைய சொற்கள்: ஒருசொல் நடைய = முடிக்குஞ்சொல் ஒன்றனான் முற்றுப்பெற்று நடக்கும்: பொருள் செல் மருங்கே = அவவொன்றனாற் பொருள்செல்லும்பக்கத்து. எ-று.

உ-ம். "என்னொடுநின்னொடுஞ்சூழாது"; "நடுப்பெனப்புரையு நின்றிரண்டநெறி"; "முன்கைச்சுடர்விரிவரிவாய்ந்தூதையும்பாவையும்விளையாட", என்புழி முன்கையாற் றூதையாலும் பாவையாலும் விளையாடவென அடுக்கிமுடிந்தது; "அந்தணர்நூற்குமறத்திற்குமாதியாய்"; யானையதுகோட்டைநுனிக்கட்குறைத்தான்; எனவரும்.

இச்சூத்திரத்தின்கருத்து முன்னர்ப் பலவுருபுதொடர்ந்தசொற்கள் ஒருசொல்லான்முடிதலும், ஒருருபுதொடர்ச்சியும் ஒருசொல்லான்முடிதலுங் கூறுதலாயிற்று. கோட்டைநுனிக்கட்குறைத்தானென்புழி முன்மொழிக்கட் பொருள் நிற்றலானுந் தினையிற்கிளியைக்கடியுமென்புழிப் பின்மொழிக்கட் பொருள் நிற்றலானும் இவற்றை அடையென்று கூறுதல் பொருந்தாதென்றுணர்க. (கக)

கoங. இறுதியு மிடையு மெல்லா வுருபு
நெறிபடு பொருள்வயி னிலவுதல் வரையார்.

இஃது உருபுநிற்கும் இடங்கூறுகின்றது.

(இ - ள்.) இறுதியும் இடையும் = வேற்றுமைத்தொடரிறுதிக்கண்ணும் அதன் இடைநிலத்தும்: எல்லா உருபும் = ஆறு உருபும்: நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார் = தத்தமக்கு ஓதிய பொருட்கள் நிற்றலை நீக்கார் கொள்வர் ஆசிரியர். எ-று.

இவற்றுள் இறுதிக்கண் நிற்பனவற்றின் ஆறனுருபு இறுதிக்கண் நில்லாது; நின்றதேல் வினைக்குறிப்பாமென்றுணர்க. இதற்காகவன்றே "ஈறுபெயர்க்காகும் இயற்கைய" என்று ஓதியவதனை மீட்டும் ஈண்டு இறுதியுமென்று வருத்துக்கூறிற்றென்றுணர்க.

ஆறனுருபு ஒழிந்தவற்றிற்கு உதாரணங் கடந்தானிலத்தை வந்தான்சாத்தனொடு கொடுத்தான்சாத்தற்கு வலியன்சாத்தனின் இருந்தான்குன்றத்துக்கண் எனவரும்.

இடைநிற்பன நிலத்தைக்கடந்தான் சாத்தனொடுவந்தான் சாத்தற்குக்கொடுத்தான் சாத்தனின்வலியன் சாத்தனதாடை குன்றத்துக்கணிருந்தான் எனவரும். சாத்தனதாடை என்புழி அதுவென்பது பெயராய் நிற்கும். ஆடைசாத்தனது என்புழி ஆடையென்னும் உடைமைப்பெயர் எழுவாயாய்ச் சாத்தனதாயிற்றென்னும் பயனிலையோடு முடிதலின் வினைக்குறிப்பாயிற்று. (உ0)

கUச. பிறிதுபிறி தேற்றலு முருபுதொக வருதலு
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப.

இஃது ஆறனுருபிற்கு உரியதோர் இலக்கணமும் எல்லாவுருபிற்கும் பொது இலக்கணமுங் கூறுகின்றது.

(இ - ள்.) பிறிதுபிறிதேற்றலும்=ஆறனுருபு தன்னையொழிந்த உருபினை ஏற்றலும்: பெயர்க்குப் பிறிதாய்நிற்றலிற் பிறிதென்றார்; உருபு தொக வருதலும் = இடையிலும் இறுதியிலும் ஆறுருபுந் தொக்குநிற்றலும்: நெறிபட வழங்கிய வழிமருங்கு என்ப=நெறிபட வழங்கிய வழக்கைச் சார்ந்துவருமென்று சொல்லுவர் புலவர். எ-று.

உ-ம். சாத்தனதனை சாத்தனதனொடு சாத்தனதற்கு சாத்தனதனின சாத்தனதன்கண் எனவரும்.

உருபு தொகுமிடத்து உருபும் பொருளும் உடன்றொகுதலும் உருபு தானே தொகுதலுமுடைய. கடந்தானிலம் இருந்தான் குன்றத்து எனவரும்.

நிலங்கடந்தான் தாய்மூவர் கருப்புவேலி வரைவீழருவி சாத்தன்கை குன்றக்கூகை எனவரும் இவை உருபுதொக்கன; படைக்கையென்பது உருபும்பொருளுந்தொக்கது.

சாத்தன்றனதெனத் தன்னையும் ஏற்றுதல் உரையிற்கொள்க.()

கOரு. ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ விறுதி யான.

இஃது எய்தியது விலக்கிற்று.

(இ - ள்.) ஐயுங் கண்ணும் அல்லாப் பொருள்வயின் மெய்யுருபு = ஐகாரவேற்றுமைப்பொருளுங் கண்ணென்வேற்றுமைப்பொருளும் அல்லாத பிறபொருண்மேனின்ற உருபு: இறுதியான தொகா= தொடர்மொழியிறுதிக்கட் தொக்குநில்லா. எ-று.

உ-ம். அறங்கற்குமென்றது கற்குமறமென இறுதிக்கட் தொகாமைகாண்க. "தணவால்வாடையும்பிரிந்திசினோர்க்கழலே" என ஆன் இறுதிக்கட் தொக்கதாலெனின் அது வினைச்சொற் காரணப்பொருட்டாய் நின்றது. (உஉ)

க0சு. யாத னுருபிற் கூறிற் றாயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்.

இஃது உருபுகள் தம்பொருளவன்றி மயங்குமாறு கூறுகின்றது.

(இ - ள்.) யாதனுருபிற் கூறிற்றாயினும் = ஒருதொடர் யாதானுமொரு வேற்றுமையது உருபுகொடுத்துச் சொல்லப்பட்டதாயினும்: அவவுருபேற்றசொல்லும் உருபுநோக்கிய சொல்லும் பொருள் இயையாதவழி; பொருள் செல் மருங்கின் வேற்றுமை சாரும் = பொருள் செல்லும் பக்கத்து வேற்றுமையைச்சாரும். எ-று.

உ-ம். "கிளையரிநாணற்கிழங்குமணற்கீன்ற-முளையோரன்னமுள்ளெயிற்றுத்துவர்வாய்" என்புழி மணலுளீன்றவென ஏழாவதன்பொருளாயிற்று. "கொக்கினுக்கொழிந்ததீம்பழங்கொக்கின" என்புழியுங் கொக்கினின்றுமென ஐந்தாவதன்பொருளாயிற்று.

முற்கூறிய எல்லாந் தம்முள் இயைபுடைய பொருண்மயக்கமே மயங்குமாறுகூறி இஃது ஓரியைபுமில்லாத உருபுமயக்கமே கூறிற்றென்று உணர்க. (உ௩)

க0எ. எதிர்மறுத்து மொழியினுந் தத்த மரபிற்
பொருணிலை திரியா வேற்றுமைச் சொல்லே.

இது வேற்றுமைகள் தம்பொருள் மாறுபட்டுழியும் அப்பொருள என்கின்றது.

(இ - ள்.) எதிர்மறுத்து மொழியினும் = விதிமுகத்தாற்கூறாது எதிர்மறுத்துக்கூறினும்: தத்தம் மரபிற் பொருணிலை திரியா = தத்தம் இலக்கணத்தான் வரும் பொருணிலை திரியா: வேற்றுமைச்சொல்லே = வேற்றுமையுருபுகள். எ-று.

உ-ம். மரத்தைக்குறையான் வேலானெறியான் எனவரும். வினைநிகழாமையின் மரமும் வேலுஞ் செயப்படுபொருளுங் கருவியும் ஆகாவேனும் எதிர்மறையும் விதிவினையோடொக்குமென ஆணை கூறிற்று. (உச)

கoஅ. கு ஐ ஆனென வரூஉ மிறுதி
அ ஒடுஞ் சிவணுஞ் செய்யு ளுள்ளே.

இஃது அவ்வுருபுகளுட் சில செய்யுளுட் திரியுமென்கின்றது.

(இ - ள்.) கு ஐ ஆன் என வரூஉம் இறுதி = கு ஐ ஆன் என வரும் மூன்று உருபுந் தொடரிறுதிக்கண் நின்றவழி: அ ஒடுஞ் சிவணுஞ் செய்யுளுள்ளே = அகரத்தோடுபொருந்தி நிற்றலுமுடைய செய்யுளுள். எ-று.

உ-ம். "கடிநிலையின்றேயாசிரியர்க்க" "காவலோனக்களிறஞ் சும்மே" "களிறஞ்சுமக்காவலோன்புரைதீர்கேள்விப்புலவரான" என வரும்.

"உள்ளம்போலவுற்றுழியுதவும் புள்ளியற்கலிமாவுடைமையான" என்பது வினைக்குறிப்புக் காரணம்பெற்றது. (உரு)

கoகூ. அஃ எனப் பிறத்த லஃறிணை மருங்கிற்
குவ்வு மையு மில்லென மொழிப.

இஃது எய்தியது விலக்கிற்று.

(இ - ள்.) குவவும் ஐயும் அஃறிணை மருங்கின் அ எனப் பிறத்தல் இல்லென மொழிப = குவவும் ஐயும் அஃறிணைப்பெயர்க்கண் அகரத்தோடு சிவணி ஈறுதிரிதல் இல்லையென்றுசொல்லுவர் புலவர். எ-று.

எனவே புள்ளினான என அஃறிணைக்கண் ஆன்பிறக்குமாறு பிற்று. (உசா)

ககo. இதன திதுவிற் றென்னுங் கிளவியு
மதனைக் கொள்ளும் பொருள்வயி னானு
மதனாற் செயற்படற் கொத்த கிளவியு
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்

பால்வரை கிளவியும் பண்பி னாக்கமுங்
காலத்தி னறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியுந் தீர்ந்துமொழிக் கிளவியு
மன்ன பிறவு நான்க னுருபிற்
றொன்னெறி மரபின தோன்ற லாறே.

இது நான்காவது ஏனையுருபுகளின் பொருள்களோடு மயங்கு மென்கின்றது.

(இ - ள்.) இதனது இது இற்று என்னுங் கிளவியும்=இப்பொருளினுடையது இப்பொருள் அதுதான் இத்தன்மைத்து என்னும் ஆறாவதன்பொருண்மையும்: அதனைக் கொள்ளும் பொருள்வயினானும்= ஒன்றனை ஒன்றுகொள்ளுமென்னும் இரண்டாவதன்பொருண்மையும்: அதனாற் செயற்படற்கு ஒத்த கிளவியும் = ஒன்றான் ஒன்று தொழிற்படற்கு ஏற்குமென்னும் மூன்றாவதன் பொருண்மையும்: முறைக்கொண்டு எழுந்த பெயர்ச்சொற் கிளவியும்=முறைப்பொருண்மையைக் கொண்டுநின்ற பெயர்ச்சொல்லினது ஆறாம்வேற்றுமைப் பொருண்மையும்: பால் வரை கிளவியும் பண்பின் ஆக்கமும்= நிலத்தை வரைந்துகூறும் பொருண்மையும் பண்பின்கண் ஆம் பொருவுமாகிய ஐந்தாவதன்பொருண்மையும்: காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்=காலத்தின்கண் அறியப்படும் ஏழாம்வேற்றுமைப் பொருண்மையும்: பற்று விடு கிளவியுந் தீர்ந்து மொழிக் கிளவியும்= பற்றுவிடும் பொருண்மையுந் தீர்ந்து மொழிப்பொருண்மையும் ஆகிய ஐந்தாவதன் பொருண்மையும்: அன்னபிறவும் நான்கனுருபிற் தோன்றலாறு தொன்னெறி மரபின = அவைபோல்வனபிறவும் நான்கனுருபிடத்துக் கூறுதலைப் பழைய நெறிமுறைமையாகவுடைய. எ-று.

உ-ம். யானைக்குக்கோடுகூரிது இஃது ஆறாவது; இவட்குக் கொள்ளுமிவ்வணி இஃது இரண்டாவது; அவற்குச்செய்யத்தகுங் காரியம் இது மூன்றாவது; ஆவிற்குக்கன்று இஃது ஆறாவது; கருவூர்க்குக்கிழக்கு இஃது ஐந்தாவது, சாத்தற்குநெடியன் இதுவும் அது; காலைக்குவரும் இஃது ஏழாவது; மனைவாழ்க்கைக்குப்பற்றுவிட்டான் இஃது ஐந்தாவது, ஊர்க்குத்தீர்ந்தான் இதுவும் அது.

அன்னபிற என்றதனால், ஊர்க்கட்சென்றான் ஊர்க்கணுற்றது செய்வான் ஊரிற்சேயன் என்பனவற்றிற்கு நான்கனுருபுகொள்க.

இது தொகாது நின்றவிடத்து நான்கனுருபுசென்று மயங்குதலின் வேறுகூறினர். (உ௭)

௧௧௧. ஏனை யுருபு மன்ன மரபின
மான மிலவே சொன்முறை யான.

இது நான்கனுருபு ஒழிந்தனவுந் தம்முள் மயங்குமென்கின்றது.

(இ - ள்.) ஏனையுருபும் அன்ன மரபின மானமில = நான்கனுருபல்லாத பிறவுருபுந் தொகையல்லாத தொடர்மொழிக்கண் ஒன்றன்பொருளிற் சிதையாமல் ஒன்றுமயங்குதற்கட் குற்றமில: சொன்முறையான = வழக்கு முறையான். எ-று.

உ-ம். நூலதுகுற்றங்கூறினன் நூலைக்குற்றங்கூறினன்; அவட்குக்குற்றேவல்செய்யும் அவளதுகுற்றேவல்செய்யும் எனவரும். பிறவும் அன்ன. (உ௮)

௧௧உ. வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலங் கருவி யென்றா
வின்னதற் கிதுபய னாக வென்னு
மன்ன மரபி னிரண்டொடுந் தொகைஇ
யாயெட் டென்ப தொழின்முத னிலையே.

இது வேற்றுமைப்பொருள்கள் தோன்றும் இடங்கூறுகின்றது.

(இ - ள்.) வினையே = வினைபெயரையும் வினைச்சொல்லையுந் தோற்றுவிக்கும் உண் தின் செல் கொள் வனை என்பனமுதலாகிய வினையும்: செய்வது = அவ்வினையைச் செய்யும் வினைமுதலும்: செயப்படுபொருளே = அவ்வினைமுதல் அதனைச்செய்ய அத்தொழிலையுறும் பொருளும்: நிலனே = அத்தொழிலைச் செய்கின்ற இடமும்: காலம் = அத்தொழிலைச் செய்யுங் காலமும்: கருவி = அவ்வினைமுதல் தொழிலினைச் செய்யுங்காலத்து அதற்குத் துணையாங் கருவிகளும் ஆகிய ஆறும்: இன்னதற்கு = ஒருபொருள் நின்று அவ்வினைமுதல் செய்யப்பட்டதனை ஏற்றுக்கோடற்கு உபகாரமாக: இது பயனாக = அப்பொருள் அதனை ஏற்றுக்கொண்டதனான் அவ்வினைமுதற்கு இப்பயனுண்டாக: என்னும் அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ = என்றுசொல்லப்படும் அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய இரண்டோடுந் தொக்கு: தொழில் முதனிலை ஆயெட்டு என்ப = காரியத்திற்கு முன்னிற்குங் காரணம் அவ்வெட்டு என்று சொல்லுவர் புலவர். எ-று.

ஆக என்றதனை இன்னதற்காகவென்றுங் கூட்டுக.

உ-ம். வனைந்தானென்றவழி வனையென்னும்வினையும் வனைந்த கருத்தாவும் வனையப்பட்ட குடமும் வனைதற்கு இடமாகிய நிலமும் அத்தொழினிகழுங் காலமும் அதற்குக் கருவியாகிய திகிரிமுதலி யனவும் அதனைக்கொள்வானும் அவன்கொண்டதனாற்பெறும் பய னும் ஆகிய எட்டுக்காரணத்தானுந் தொழில் நிகழ்ந்தவாறு காண்க. ஒழிந்தவினைகட்கும் அவ்வாறு விரிக்க.

வினையைமுன்வைத்தார் சொற்களையுந்தோற்றுவித்து மேனிக ழுங்காரியத்திற்கு ஏனை ஏழினுஞ் சிறந்தகாரணமாய் நிற்றலின். வினையுந் தொழிலும் வேறென்பது இச்சூத்திரத்தான் உணர்தற்கு வினையென்றெடுத்துத் தொழின்முதனிலையேயென முடித்தார்.

வனைந்தானென்பதற்குக் குடத்தைவனைதலைச்செய்தானென்று பொருட்டுழிச் செய்தானென்ற தகரங் காலங்காட்டித் தொழிலைத் தோற்றுவித்தவாறும் வனையென்னும்வினை காலங்காட்டாமல் நின்ற வாறும் வனைதலெனவிரிந்துழியும் புடைபெயர்ச்சிமாத்திரமன்றிக் கா லங்காட்டாமல் நின்றவாறும் உணர்க. காரியத்திற்கு யாண்டுங் காலங் காட்டும் எழுத்துக்களோடு கூடிய செய்யென்பதே வாசகமென்று உணர்க. இக்காரியவாசகம் இவ்வாறன்றி ஒருசொல் முழுவதுந் தானாய் நிற்பனவும் உள. அவை "கறைமிடறணியலுமணிந்தன்று" என்புழிக் கறைமிடற்றை அழகுபெறுதலையுஞ் செய்ததெனவும் இனி "யானுண்ணலுமுண்ணேன்" என்புழி இனி யான் சோற்றையுண் ணுதலையுஞ்செய்யேனெனவும் "வாழ்தலும்வாழேன்" என்புழி இனி யான் உயிரைவாழுதலையுஞ்செய்யேனெனவும் வந்தவற்றுள் அணிந் தன்று உண்ணேன் வாழேன் என்பன முழுதுங் காரியவாசகமாயே நின்றவாறு காண்க.

இனிவனைந்தானென்பதன்கட் செய்வது எழுவாயாயும் வினை யுஞ் செயப்படுபொருளும் இரண்டாவதாயும் வினைமுதலுங் கருவி யும் மூன்றாவதாயும் ஒருவன் ஏற்றுக்கொண்டவழி இன்னதற்கு இது பயன் நான்காவதாயும் நிலமுங்காலமும் ஏழாவதாயுஞ் சேர்ந்தன. இன்னும் வனைந்தவன் கொடுத்த குடம் அவன்கையினின்று நீங்கு தல் ஐந்தாவதாயும் அதனை ஒருவன் ஏற்றுக்கொண்டவழி அஃது அவனுடைமையாதல் ஆறாவதாயுஞ் சேருமாறும் உணர்க. கருவிக் கண் அடங்கும் ஏதுவும் ஐந்தாவதற்குவரும். இங்ஙனம் இவ்வுருபுகள் இவ்வினைச்சொற்கட் தோன்றுதல்பற்றி இச்சூத்திரத்தை வினையிய

விற்கூறாது ஈண்டுக்கூறினார். "பெயர்நிலைக்கிளவி" "இரண்டாகு வதே" என்னுஞ் சூத்திரங்களானும் இக்கருத்து உணர்க. (௨௯)

௧௧௪. அவைதாம்,
வழங்கியன் மருங்கிற் குன்றுவ குன்றும்.

இது மேலதற்கோர்புறனடை.

(இ - ள்.) அவைதாம்=மேற் கூறப்பட்ட தொழின்முதனிலைகள்தாம்: வழங்கியல் மருங்கிற் குன்றுவ குன்றும்=எல்லாத்தொழிற்கும் எட்டும் வருமென்னும் யாப்புறவில்லை, வழக்கின்கட் சிலதொழிலிற் குன்றத்தகுவன குன்றிவரும். எ-று.

குன்றத்தகுவன செயப்படுபொருளும் இன்னதற்கு இதுபயன் என்பனவுமாம்.

உ-ம். கொடியாடிற்று வளிவழங்கிற்று எனவரும். (௩௦)

௧௧௫ முதலிற் கூறுஞ் சினையறி கிளவியுஞ்
சினையிற் கூறு முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரு
மியன்றது மொழிதலு மிருபெய ரொட்டும
வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ
யனையமர பினவே யாகுபெயர்க் கிளவி.

இது குறிப்பாற் பொருளுணர்த்தும் பெயர் இத்துணையென் கின்றது.

(இ - ள்.) முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்=முதற்சொல் வாய்பாட்டாற் கூறப்படுஞ் சினைப்பொருளை அறிவிக்குஞ் சொல் லும்: சினையிற் கூறும் முதலறி கிளவியும்=சினைச்சொல் வாய்பாட் டாற் கூறப்படும் முதற்பொருளை அறிவிக்குஞ் சொல்லும்: பிறந்த வழிக் கூறலும்=நிலத்துப்பிறந்த பொருண்மேல் அந்நிலத்துப்பெயர் கூறலும்: பண்புகொள் பெயரும் = பண்புப்பெயர் அப்பண்புடைய தனை உணர்த்திநிற்குஞ் சொல்லும்: இயன்றது மொழிதலும்=முதற் காரணப்பெயரான் அக்காரணத்தான் இயன்ற காரியத்தினைச் சொல் லுதலும்: இருபெயரொட்டும்=அன்மொழிப்பொருண்மேல் நில்லாத இருபெயரொட்டும்: வினைமுதல் உரைக்குங் கிளவியொடு தொ கைஇ=செய்யப்பட்டபொருண்மேல் அதனைச் செய்தான்பெயரைச்

சொல்லுஞ் சொல்லோடே முற்கூறிய ஆறுந் தொக்கு: அனைய மர பினவே ஆகுபெயர்க் கிளவி=அப்பெற்றிப்பட்ட இலக்கணத்தையு டையவாகும் ஆகுபெயரான சொல். எ-று.

உ-ம். கடுத்தின்முன் தெங்குதின்முன் இலைநட்டுவாழை பூநட்டு வாழும் குழிப்பாடிநேரிது எனவரும். இவவாடை கோலிகன் என் பதும் அது.

நீலமென மணியையுணர்த்திற்று; பொன்னெனக் குடத்தை யுணர்த்திற்று; மங்கட்சுட்டென இரண்டுமில்லாததோர் பொருளை உணர்த்தாது மக்களையுணர்த்திற்று, நன்குமதிக்கும்பொருளும் மக்க ளேயாதலின்.

பொற்றொடியென்பது அன்மொழி, ஆகுபெயரன்மை உணர்க.

இச்சூத்திரத்தானே இயற்கைப்பெயரேயன்றிக் குறிப்பாற்பொ ருளுணர்த்தும் பெயரும் பெரும்பான்மை என்றார். (௩௧)

௧௧௬. அவைதாந்,
தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணலு
மொப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலு
மப்பண் பினவே நுவலுங் காலை.

இஃது அவவாகுபெயரிலக்கணம் இருவகைய என்கின்றது.

(இ - ள்.) அவைதாந் தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவண லும்=மேற்கூறப்பட்ட ஆகுபெயர்கள்தாந் தத்தம்பொருள்வயின் நீங் காதுநின்று தம்பொருளின் வேறல்லாத பொருளொடு புணர்தலும்: ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலும்=பொருத்தமில்லாத கூற் றுன் நின்று பிறிதுபொருளை உணர்த்தலும்: அப்பண்பினவே நுவ லுங் காலை=என்றுசொல்லப்படுகின்ற அவ்விரண்டிலக்கணத்தையு முடைய சொல்லுங்காலத்து. எ-று.

உ-ம். கடுத்தின்முன் குழிப்பாடிநேரிது எனவரும். (௩௨)

௧௧௭. வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

இஃது ஆகுபெயரும் வேற்றுமையேற்குமென்கின்றது.

(இ - ள்.) வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்=அவ்வா குபெயர்கள் ஐ முதலிய அறுவகை வேற்றுமைப்பொருண்மையிடத்

தும் இயைபுடைமையைப் பாதுகாத்து அறியல்வேண்டும் ஆசிரியன். எ-று.

உ-ம். மக்கட்சுட்டையுயர்திணையென்மனூர், தொல்காப்பியனூற் செய்யப்பட்டது, தண்ணேறுதற்குக்கிடந்தது, பாவையினுமழகியாள், கடுவினதுகாய், குழிப்பாடியுட்டோன்றியது எனக் காண்க. (௩௩)

ககஅ. அளவு நிறையு மவற்றொடு கொள்வழி
யுளவென மொழிப வுணர்ந்திசி னோரே.

இஃது ஆகுபெயர்வேறுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி உளவென மொழிப=அளவுப்பெயரும் நிறைப்பெயரும் ஆகுபெயராகக் கொள்ளும் இடமுடைய என்று சொல்லுவர்: உணர்ந்திசினோரே=உணர்ந்தோர். எ-று.

உ-ம். பதக்கு தூணி தொடி துலாம் என அளக்கவும் நிறுக்கவும் பட்ட பொருட்கட்கிடந்த வரையறைக்குணப்பெயர் அப்பொருட்குப் பெயராயிற்று. நெல்லை அளந்துபார்த்தும் பொன்னை நிறுத்துப் பார்த்தும் பின்னர் அவற்றிற்குப் பதக்குத் தொடி என்று அளவும் நிறையுமாகிய பெயர் கூறப்படுதலின் அவற்றை ஆகுபெயரென்றூர். ஒன்றென்னும் எண்ணுப்பெயரால் அவவெண்ணப்படும்பொருளைக் கூறுவதற்குமுன்னும் அப்பொருள் ஒன்றுயேநிற்றலின் எண்ணுப்பெயரை ஆகுபெயரோடு கூறூராயினூர். (௩௪)

ககக. கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே.

இஃது ஆகுபெயர்க்குப் புறனடை.

(இ - ள்.) கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்=சொல்லப்பட்டனவேயன்றி வேறுபிறசொற்கண்ணே ஆகுபெயர்த்தன்மை தோன்றினும்: கிளந்தவற்றியலான் உணர்ந்தனர் கொளலே=சொல்லப்பட்டவற்றதியல்பான் உணர்ந்துகொள்க. எ-று.

உ-ம். யாழ் குழல் என்னுங் கருவிப்பெயர் யாழ்கேட்டான் குழல்கேட்டான் என்று அவற்றூன் ஆய ஓசைமேலும், யானை பாவை என்னும் உவமப்பெயர் யானைவந்தான் பாவைவந்தாள் என உவமிக்கப்படும்பொருண்மேலும், ஏறு குத்து என்னுந் தொழிற்பெயர் இஃ

தோர் ஏறு இஃதோர் குத்து என அத்தொழிலாகிய வடுவின்மேலும், நெல்லாதல் காணமாதல் பெற்றுனொருவன் சோறுபெற்றேனெனக் காரணப்பொருட்பெயர் காரியத்தின்மேலும், ஆகுபெயராய் வந்தன. "ஆறறியந்தணர்" என்புழி ஆறென்னும் வரையறைப் பண்புப்பெயர் அப்பண்பினையுடைய அங்கத்தினை உணர்த்திநிற்றலும் அவ்வெண்ணுப்பெயரினை அறிகுறியாகிய அலகுநிலைத்தானமும் அப்பெயரவாய்நிற்றலும் அகரமுதலிய எழுத்துக்களை உணர்த்துதற்குக் கருவியாகிய வரிவடிவுகளும் அப்பெயர் பெற்றுநிற்றலுங் கொள்க. கடிசூத்திரஞ்செய்ய இருந்த பொன்னைக் கடிசூத்திரமென்றுந் தண்டுஞ்செய்தற்குக் கிடந்த மரத்தைத் தண்டேனென்றுங் காரியத்தின்பெயரைக் காரணத்திற்கு இட்டு வழங்குவனவும் எழுத்துச் சொற் பொருள் என்பனவற்றிற்கு இலக்கணங்கூறிய அதிகாரங்களை எழுத்துச் சொற் பொருளென்பன உணர்த்திநிற்றலுங் கொள்க.

பிறவென்றது வேறென்றதனுன் அவை தொல்காப்பியம் கபிலம் வில்லி வாளி என ஈறுதிரிதலுங் கொள்க.

இவ்வாகுபெயர்கள் எழுவாய்வேற்றுமைமயக்கமென்று உணர்க, கடுவென்பது தனக்கு உரியமுதற்பொருளை உணர்த்தாது சினைப்பொருளை உணர்த்தலின். (௩௫)

வேற்றுமைமயங்கியல் முற்றும்.

---

நான்காவது

## விளிமரபு.

கஉ0. விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்று மியற்கைய வென்ப.

என்பது சூத்திரம். இது நிறுத்த முறையானே விளியுணர்த்துதலின் இவ்வோத்து விளிமரபென்னும் பெயர்த்தாயிற்று. இச்சூத்திரத்தான் விளியது பொது இலக்கணங் கூறுகின்றார்.

(இ-ள்.) விளியெனப் படுப=விளியென்று சொல்லப்படுவன: கொள்ளும் பெயரொடு = தம்மையேற்கும் பெயரோடு: தெளியத் தோன்றும் இயற்கைய என்ப = விளங்கத்தோன்றும் இயல்பினையுடைய என்றுகூறுவர் ஆசிரியர். எ-று.

ஈறுதிரிதலும் ஈற்றயனீடலும் பிறிதுவந்தடைதலும் இயல்பாத லும் என்னும் வேறுபாட்டாற் படுப என்றார். கொள்ளும் பெயரென வே கொள்ளாப்பெயரும் உளவாயின. இயல்பாய் விளியேற்பனவுந் தெரிதுறன விளங்குமென்றற்குத் தெளியத்தோன்றுமென்றார். (க)

கஉக. அவ்வே,
யிவ்வென வறிதற்கு மெய்பெறக் கிளபப.

இஃது அப்பெயர்களைக் கூறுவல் என்கின்றது.

(இ - ள்.) அவவே இவ எனஅறிதற்கு=விளிகொள்ளும்பெய ருங் கொள்ளாப்பெயரும் இவையென மாணுக்கன் உணர்தற்பொ ருட்டு: மெய்பெறக் கிளப்ப=பொருள்பெற எடுத்தோதுவர் ஆசிரியர் அதனன் யானும் அம்முடிபே கூறுவல். எ-று. (உ)

கஉஉ. அவைதாம்,
இ உ ஐ ஓ வென்னு மிறுதி
யப்பா னன்கே யுயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே.

இஃது உயர்திணைப்பெயருள் விளியேற்பன இவையென் கின்றது.

(இ - ள்.) அவைதாம்=கிளக்கப்படுவனவாகிய பெயர்தாம் எண் வகை அவற்றுள்: உயர்திணை மருங்கின் மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயர் = உயர்திணையிடத்து மெய்ப்பொருளைக்கருதின விளிகொள்ளும் உயிரீற்றுப்பெயர்: இ உ ஐ ஓ என்னும் இறுதி அப் பால் நான்கே=இ உ ஐ ஓ என்னும் இறுதியையுடைய அக்கூற்று நான்குபெயரும். எ-று.

மெய்ப்பொருளென்றதனன் அஃறிணைப்பெயர் அன்மொழி யாய் உயர்திணைக்கண்வந்துழி உயர்திணைப்பெயராய் விளியேற்றலும் அவ ஈற்று அஃறிணைப்பெயர்களும் உயர்திணைப்பெயர்கள்போல விளி யேற்றலுங் கொள்க.

உ-ம். "சுடர்த்தொடீ கேளாய்" எனவும், "தும்பீ-சிறுமீன்கவுட் கொண்ட செந்தூவிநாராய்." எனவும், "கொன்றாய் குருந்தே கொடி முல்லாய் வாடினீர் - நின்றீ ரறிந்தே னெடுங்கணாள்-சென்றாளுக்கு" எனவும் வரும். (ங)

கஉ௩. அவற்றுள்,
இ ஈ யாகும் ஐயா யாகும்.

இஃது இகர ஈறும் ஐகார ஈறும் விளியேற்குமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் = முற்கூறிய நான்கு ஈற்றுப்பெயருள்: இ ஈ ஆகும்=இகர ஈற்றுப்பெயர் ஈகாரமாயும்: ஐ ஆய் ஆகும்=ஐகார ஈற்றுப்பெயர் ஆயாயும் ஈறுதிரிந்து விளியேற்கும். எ-று.

உ-ம். நம்பி - நம்பீ, நங்கை - நங்காய் எனவரும். (௩)

கஉ௪. ஓவும் உவ்வு மேயொடு சிவணும்.

இஃது ஒழிந்தன விளியேற்குமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஓவும் உவவும் ஏயொடு சிவணும்=ஓகார ஈற்றுப்பெயரும் உகர ஈற்றுப்பெயரும் ஏகாரத்தோடு பொருந்திப் பிறிதுவந்தடைதலாய் விளியேற்கும். எ-று.

உ-ம். கோ - கோவே, வேந்து - வேந்தே எனவரும். (௪)

கஉ௫. உகரந் தானே குற்றிய லுகரம்.

இஃது ஐயம் அறுக்கின்றது.

(இ - ள்.) உகரந்தானே குற்றியலுகரம்=மேற்கூறப்பட்ட உகரமாவது குற்றியலுகரம். எ-று.

உ-ம். திரு - திருவே எனச் சிறுபான்மை முற்றியலுகரமும் விளியேற்கும். (௫)

கஉ௬. ஏனை உயிரே யுயர்திணை மருங்கிற்
றாம்விளி கொள்ளா வென்மனார் புலவர்.

இது வேண்டா கூறி வேண்டியது முடிக்கின்றது.

(இ - ள்.) ஏனை உயிரே = மேற்கூறப்பட்ட நான்கு ஈறும் அல்லா உயிரீறு: உயர்திணை மருங்கிற் தாம் விளிகொள்ளா என்மனார் புலவர்=உயர்திணைக்கண் விளிகொள்ளாவென்று கூறுவர் புல

இதனாற்பயன் கணி கணியே கரி கரியே என முற்கூறிய உயிர்கள் பிறவாறும் விளியேற்குமென்றல். தாமென்றதனால் மகவென்பது மகவேயெனப் பிறிது வந்துஞ் "சான்றோரீன்றதகரத்தகாமகா" என ஆகாரமாயும் ஆஉவென்றது ஆஉகூறுமென இயல்பாயும் ஆஉவேயெனப் பிறிது வந்தும் விளியேற்றவாறு கொள்க. (எ)

௧௨௭. அளபெடை மிகூஉ மிகர விறுபெய
ரியற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

(இ - ள்.) அளபெடை மிகூஉம் இகர இறுபெயர் = அளபெடை தன்னியல்புமாத்திரையின் மிக்கு நான்கும் ஐந்தும் மாத்திரைபெற்று நிற்கும் இகர ஈற்றுப்பெயர்: இயற்கைய ஆகுஞ் செயற்கைய என்ப = இ ஈயாகாது இயல்பாய் விளியேற்குஞ் செயற்கையையுடையவென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

தோழீஇஇஇ எனவரும். தோழீஇஇஇஇ என ஐந்தெழுத்தும் இட்டெழுதுப. இகர ஈற்றுப்பெயரெனவே நெட்டெழுத்து அளபெடுத்ததன்று குற்றெழுத்தே நின்று மாத்திரைபெற்றதென்று உணர்க. இது தொழில்செய்கின்றவளே என்னும் பொருட்டு நிற்பதோர் சொல். (அ)

௧௨அ. முறைப்பெயா மருங்கி னையெ னிறுதி
யாவொடு வருதற் குரியவு முளவே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ - ள்.) முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி = முறைப்பெயரிடத்து ஐகார ஈறு: ஆவொடு வருதற்கு உரியவும் உள = ஆயாகாது ஆகாரத்தோடு வருதற்கு உரியனவும் உள. எ-று.

உ-ம். அன்னை அன்னா, அத்தை அத்தா எனவரும். உம்மை மறுத்துநிற்றலின் அன்னாய் அத்தாயென்று வருதலே சிறப்பிற்று.

இவை விரவுப்பெயரேனும் ஈண்டு உயர்திணைப்பெயரிடை வைத்தார், மேல் விரவுப்பெயரை இவற்றோடு மாட்டெறிதலின் அம்மாட்டேற்றிற்கு ஏற்ப விளியேற்பன உயர்திணைப்பெயர்களுள் வேறின்மையான். (௯)

௧௨௯. அண்மைச் சொல்லே யியற்கை யாகும்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ - ள்.) அண்மைச்சொல்லே இயற்கை ஆகும் = நான்கு ஈற்று அண்மைக்கண் விளியேற்குஞ் சொற்கள் இயற்கையாய் விளியேற்கும். எ-று.

உ-ம். நம்பிவாழி வேந்துவாழி நங்கைவாழி கோவாழி எனவரும்.

௧௩௦. ணரலள வென்னு மந்நான் கென்ப
புள்ளி யிறுதி விளிகொள் பெயரே.

இது புள்ளியீற்றுள் விளியேற்பன கூறுகின்றது.

(இ - ள்.) புள்ளியிறுதி விளிகொள்பெயர் = புள்ளியீற்றினையுடைய விளித்தலைக்கொள்ளும் உயர்திணைப்பெயர்: ண ர ல ள என்னும் அந்நான்கு என்ப = ண ர ல ள என்று கூறப்படும் அந்நான்கு ஈற்றுப்பெயருமென்று கூறுவர் ஆசிரியர். எ-று. (௧௧)

௧௩௧. ஏனைப் புள்ளி யீறுவிளி கொள்ளா.

இது வேண்டா கூறி வேண்டியது முடிக்கின்றது.

(இ - ள்.) ஏனைப் புள்ளியீறு விளிகொள்ளா = அந்நான்கும் அல்லாத புள்ளியீற்றுப்பெயர் விளித்தலைக் கொள்ளா. எ-று.

இங்ஙனம் வேண்டாகூறியவதனாற் பயன் மேற்கூறுகின்ற புள்ளியீறுகள் பிறவாற்றான் விளிகொள்வன உள என்பதூஉம், எடுத்தோதாப் புள்ளியீறுகளிலும் விளியேற்பன உள என்பதூஉம் உணர்த்துதலாம். முறைமைசுட்டா மகன் மகளென்பன "படிவவுண்டிப்பார்ப்பனமகனே" "அகவன்மகனே" "அகவன்மகளே" என ஏகாரம் பெற்றுவருதலும் (அகவன்மகள் முறைமைசுட்டியதன்று, அகவல் ஓசை.) "கூந்தன்மா வூர்ந்து குடமாடிக் கோவலனாய்ப் - பூந்தொடியைப் புல்லியனான் றுண்டாங்கொல் - யாங்கொளித்தாய் - தென்னவனே தேர்வேந்தே தேறுநீர்க் கூடலார் - மன்னவனே மார்பின் மறு" என அன்னீறு ஏகாரம்பெற்று வருதலும் "நம்பன்சிறிதேயிடைதந்திதுகேட்க" என அன்னீறு இயல்பாய் வருதலும் "நம்பானெம்பெருமா" என அன்னீறு ஈற்றயனீண்டு வருதலும் ஆனீறு "வாயிலோயே வாயிலோயே" என ஏகாரம்பெற்றுவருதலும் ரகர

ஈறு "மாந்தர்கூறீர்" என இயல்பாயும் இறைவரேயென ஏகாரம் பெற்றும் வருதலும் லகார ஈறு கானல்கூறுய் குரிசில்கூறுய் என இயல்பாயுந் திருமாலே தாழ்குழலே என ஏகாரம்பெற்றும் வருதலும் ளகார ஈறு கடவுள்வாழியென இயல்பாயும் அடிகள் அடிகே ளென் ஈற்றயல் அகரம் ஏகாரமாயும் வருதலும் இவையிற் பிறவாறுய் வருதலுங் கொள்க.

இனி எடுத்தோதாதனவற்றுள் ஆகார ஈறு "துறந்துள்ளாரவ ரெனத்துனிகொள்ளலெல்லாநீ" என எடா என்றும் "எல்லாநீ, முன்னர்த்தாளென்றுகுறித்தாய்போற்காட்டினை" என எடாவென்றும் இருபாற்கும் பொதுவாய் விளியேற்றலும் உன் ஈறு தம்முன்-தம்முனே என ஏகாரம் பெற்றும் நம்முன்-நம்முனு என ஆகாரம் பெற்றும் இர் ஈறு பெண்டிர்-பெண்டிரோ என ஓகாரம்பெற்றும் என்னைகேளீ ரென ஈர் பெற்றும் "கேளிர்வாழியோகேளிர்நாளும்" என இயல்பாயும் யகர ஈறு "விளங்குமணிக்கொடும்பூணாய்" என இயல்பாயும் ஆயே என ஏகாரம் பெற்றும் வருதலுங் கொள்க.

இனிக் "கிழவோள்பிறள்குணமிவையெனக்கூறிக் - கிழவோன் குறிப்பினையுணர்தற்குமுரியள்." என்றுங் "கிழவோட்குவமமீரிடத்துரித்தே." "கிழவோற்காயினிடம்வரைவின்றே." என்றும் பிறண்டும் உடம்பொடுபுணர்த்துக் கூறிய ஓனென்னும் ஈறு தொழிலிற் கூறும் ஆனெனிறுதிபோல் அகரமாய் விளியேற்றலுங் கொள்க. அது "பெருங்கால்வைப்பினுங்கிழவோயே" மாஅயோய் என்றாற்போலச் செய்யுட்களுள்ளும் வருவனவுங் கொள்க. ஓகாரம் அடுத்த ளகார ஈறு விளியேற்குமேனும் உணர்க. "ஆவுமானியற்பார்ப்பனமாக்களும் - பெண்டிரும்பிணியுடையீரும்பேணி" என்றாற்போலும் அண்மைவிளியும் இதனுற் கொள்க. (கஉ)

கஙஉ. அவற்றுள், அன்னெ னிறுதி யாவா கும்மே.

இது முறையானே னகார ஈறு விளியேற்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் அன் என் இறுதி ஆ ஆகும்மே = அந்நான்கு ஈற்றுப்பெயருள் அன் என்னும் னகர ஈற்றுப்பெயர் ஆவாய் விளியேற்கும். எ-று.

உ-ம். துறைவன் துறைவா, ஊரன் ஊரா, சோழன் சோழா, சேர்ப்பன் சேர்ப்பா எனவரும். (கங)

கநந. அண்மைச் சொல்லிற் ககர மாகும்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்.) அண்மைச்சொல்லிற்கு அகரம் ஆகும் = அண்மை விளிக்கண் அன்னீறு அகரமாகும். எ-று.

உ-ம். துறைவன் துறைவ, ஊரன் ஊர, சேரழன் சேரழ, என வரும். (கச)

கநச. ஆனெ னிறுதி யியற்கை யாகும்.

இஃது ஆனென்பது விளியேற்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) ஆன் என் இறுதி இயற்கையாகும் = ஆனென்னும் னகர ஈற்றுப்பெயர் இயல்பாய் விளியேற்கும். எ-று.

உ-ம். சேரமான் மலையமானெனக் கூவுதற்கண்ணும் அவ்வாறே நிற்றல் காண்க. (கரு)

கநரு. தொழிலிற் கூறு மானென் னிறுதி
யாயா கும்மே விளிவயி னான.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்.) தொழிலிற் கூறும் ஆனென் இறுதி விளிவயினான = தொழிலினான் ஒருபொருள் அறியச் சொல்லும் ஆனீற்றுப்பெயர் விளியேற்கும் இடத்து: ஆயாகும் = ஆயாம். எ-று.

உ-ம். வந்தான் வந்தாய், சென்றான் சென்றாய் எனவரும்.

தொழிலென்றதனாற் கழலாய் இடையாயெனக் குறிப்பினுங் கொள்க. (கசா)

கநசா. பண்புகொள் பெயரு மதனோ ரற்றே.

இதுவும் அது.

(இ-ள்.) பண்புகொள் பெயரும் அதனோரற்றே = ஆனீற்றுப் பண்பைக்கொண்டு நின்ற பெயரும் அவ்வீற்றுத் தொழிற்பெயர்போல ஆயாய் விளியேற்கும். எ-று.

உ-ம். கரியான் கரியாய், தீயான் தீயாய் எனவரும். (கஎ)

கரு௭. அளபெடைப் பெயரே அளபெடை யியல.

இஃது எய்தாதது எய்துவித்தது.

(இ - ள்.) அளபெடைப் பெயரே அளபெடை இயல=ஆனீற் றளபெடைப்பெயர் இகர ஈற்றளபெடைப்பெயர்போல மூன்றுமாத் திரையின் நீண்டு இயல்பாய் விளியேற்கும். எ-று.

உ-ம். உழாஅஅன் கிழாஅஅன் எனவரும். இஃது அளபெடுத்த லின் ஆன் ஈற்றின் அடங்காதாயிற்று. (க௮)

கரு௮. முறைப்பெயர்க் கிளவி யேயொடு வருமே.

இதுவும் அது.

(இ - ள்.) முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே = னகார ஈற்று முறைப்பெயர் ஏகாரம்பெற்று விளியேற்கும். எ-று.

உ-ம். மகன் மகனே, மருமகன் மருமகனே எனவரும். ஐகார ஈற்று முறைப்பெயர்க்குக் கூறிய உரையை ஈண்டுங் கூறிக்கொள்க.

கருகூ. தானென் பெயருஞ் சுட்டுமுதற் பெயரும்
யானென் பெயரும் வினாவின் பெயரு
மன்றி யனைத்தும் விளிகோ ளிலவே.

இது னகார ஈற்றுள் விளியேலாதன கூறுகின்றது.

(இ - ள்.) தானென் பெயருஞ் சுட்டுமுதற் பெயரும் யா னென் பெயரும் வினாவின் பெயரும் அன்றியனைத்தும் விளிகோள் இலவே=தான் என்னும் ஆனீற்று விரவுப்பெயரும் அவன் இவன் உவனென்னும் அன்னீற்றுச் சுட்டுமுதற்பெயரும் யானென்னும் ஆனீற்றுப்பெயரும் யாவனென்னும் வினாப்பொருளையுணர்த்தும் அன்னீற்றுப்பெயருமாகிய அவ்வனைத்தும் னகார ஈறேயாயினும் விளிகொள்ளா. எ-று. (உ0)

க௨0. ஆரு மருவு மீரொடு சிவணும்.

இது முறையானே ரகார ஈறு விளியேற்குமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஆரும் அருவும் ஈரொடு சிவணும்=ரகார ஈற்றுப்பெ யருள் ஆர்அர் என நின்ற இரண்டீற்றுப்பெயரும் ஈராய் இறுதி திரிந்து விளியேற்கும். எ-று.

உ-ம். பார்ப்பார் பார்ப்பீர், கூத்தர் கூத்தீர் எனவரும். (உக)

கசக. தொழிற்பெய ராயி னேகாரம் வருதலும்
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ - ள்.) தொழிற்பெயராயின் = மேற்கூறிய இரண்டீறுந் தொழிற்பெயர்க்கு ஈறாய்வருமாயின்: ஏகாரம் வருதலும் வழுக்கின்று என்மனார் வயங்கியோரே = முற்கூறிய ஈரோடு ஏகாரம் வருதலுங் குற்றமின்றென்று கூறுவர் விளங்கிய அறிவினையுடையார். எ-று.

உ-ம். வந்தார் வந்தீரே சென்றார் சென்றீரே எனவரும். அர் ஈறு வந்துழிக் காண்க.

வழுக்கின்றென்றதனாற் தொழிற்பெயரல்லா ஆரீறுகளும் ஈரோடு ஏகாரம்பெறுதல் கொள்க. நம்பியார் நம்பியீரே, கணியார் கணியீரே, எனவரும்.

இன்னும் இதனானே அர் ஈறு வந்தவரே சென்றவரே என ஈர் பெறாது ஏகாரம்பெற்று வருதலுஞ் சிறுபான்மை கொள்க. (உ௦)

கசஉ. பண்புகொள் பெயரு மதனோ ரற்றே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தது.

(இ - ள்.) பண்புகொள் பெயரும் அதனோரற்றே = அவ்விரண்டீற்றுப் பண்புகொள்பெயரும் அவ்வீற்றுத் தொழிற்பெயர்போல ஈரொடு சிவணியுஞ் சிறுபான்மை ஈரோடு ஏகாரம்பெற்றும் ஈர்பெறாது ஏகாரம்பெற்றும் விளியேற்கும். எ-று.

உ-ம். கரியர் கரியீர், இளையார் இளையீர் எனவும் கரியீரே இளையீரே எனவும் கரியவரே இளையவரே எனவும் வரும்.

இனித் தன்னினமுடித்தலென்பதனாற் சீவகசாமியென்னும் இருபெயரொட்டுப்பண்புத்தொகை சீவகசாமியாரென ஆரீறாய்ச் சீவகசாமியீரே என ஈரொடு ஏகாரம்பெறுதல் கொள்க. (௨௧)

கசஙு. அளபெடைப் பெயரே யளபெடை யியல.

இஃது எய்தாதது எய்துவித்தது.

(இ - ள்.) அளபெடைப் பெயரே அளபெடை இயல = ரகார ஈற்று அளபெடைப் பெயர் னகார ஈற்று அளபெடைப் பெயர்போல மாத்திரை மிக்கு இயல்பாய் விளியேற்கும். எ-று.

உ-ம். சிறுஅர், "துடியே பாடுவன் மகாஅஅர்" எனவரும். அவ்வளபெடைகள் செய்யுளுட் குறைந்துவந்தன சந்த இன்பம் நோக்கி விகாரத்தாற் குறைந்துவந்தனவென்று கொள்க. (உச)

கசச. சுட்டுமுதற் பெயரே முற்கிளந் தன்ன.

இது விளியேலாதன கூறுகின்றது.

(இ-ள்.) சுட்டுமுதற்பெயரே முற்கிளந்தன்ன = அவர் இவர் உவரென்னும் ரகார ஈற்றுச் சுட்டுமுதற்பெயர் ணகார ஈற்றுச் சுட்டு முதற்பெயர்போல விளிகொள்ளா. எ-று. (உரு)

கசரு. நும்மின் றிரிபெயர் வினாவின் பெயரென்
றம்முறை யிரண்டு மவற்றியல் பியலும்.

இதுவும் அது.

(இ-ள்.) நும்மின் திரிபெயர் = நும்மென்னுஞ் சொல்லினது திரிபாகிய நீயிரென்னும் சொல்லும்: வினாவின்பெயர் = வினாப்பொருளை உணரநின்ற யாவரென்னுஞ் சொல்லும்: என்று அம்முறை இரண்டும் அவற்றியல்பு இயலும்=என்றுசொல்லப்பட்ட அம்முறைமையினையுடைய இரண்டுசொல்லும் முற்கூறிய சுட்டுப்பெயர்போல விளியேலா. எ-று.

"ஏனைப்புள்ளி" என்பதனுள் இர் ஈறு கோடலின் ரடு நீயிரென்பதனை எடுத்தோதி விலக்கினார். (உசா)

கசசா. எஞ்சிய விரண்டி னிறுதிப் பெயரே
நின்ற வீற்றய னீட்டம் வேண்டும்.

இது லகார ளகார ஈறு விளியேற்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே = உணர்த்தாதுநின்ற லகார ளகாரமென்னும் இரண்டுபுள்ளியை இறுதியாகவுடைய பெயர்: ஈற்றயல் நின்ற நீட்டம் வேண்டும்=ஈற்றெழுத்துக்கு அயனின்ற எழுத்து நீண்டு விளியேற்றல்வேண்டும். எ. று.

உ-ம். குரிசில் குரிசீல் ஏந்தல் ஏந்தால் தோன்றல் தோன்றால் குழையள் குழையாள் அணியள் அணியாள் மக்கள் மக்காள் என வரும். (உஎ)

கசஎ. அயனெடி தாயி னியற்கை யாகும்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்.) அயல் நெடிதாயின் இயற்கையாகும் = அவ்விரண்டீற்றுப்பெயரும் ஈற்றயலெழுத்து நெட்டெழுத்தாயின் இயல்பாய் விளியேற்கும். எ-று.

உ-ம். ஆண்பால் பெண்பால் ஏமாள் கோமாள் கடியாள் என வரும். நமர்காளென்பதும் அது. நமரங்காள் அறிமினெனப் பெயர்த்திரிசொல்லாய்த் திரிந்துநின்று விளியேற்றலுங் கொள்க. (உஅ)

கசஅ. வினையினும் பண்பினு
நினையத் தோன்று மாளெ னிறுதி
யாயா குமே விளிவயி னான.

இஃது அவ்விரண்டனுள் ளகர ஈற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்.) வினையினும் பண்பினும் நினையத் தோன்றும் ஆள் என் இறுதி = வினைச்சொல்லின்கண்ணும் பண்புச்சொல்லின்கண்ணும் ஆராயத்தோன்றும் ஆளீற்றுப்பெயர்: விளிவயினான ஆயா குமே = விளிக்குமிடத்து இயல்பாகாது ஆயாய் விளியேற்கும். எ-று.

உ-ம். உண்டாள் உண்டாய் கரியாள் கரியாய் எனவரும்.

விளிவயினான என்பதனை யாண்டுங் கூட்டுக. (உகூ)

கசகூ. முறைப்பெயர்க் கிளவி முறைப்பெய ரியல.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்.) முறைப்பெயர்க்கிளவி முறைப்பெயர் இயல = ளகார ஈற்று முறைப்பெயர் னகார ஈற்று முறைப்பெயர்போல ஏகாரம் பெற்று விளியேற்கும். எ-று.

உ-ம். மகள் மகளே, மருமகள் மருமகளே, எனவரும். (௩0)

கரு0. சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரு
முற்கிளந் தன்ன வென்மனார் புலவர்.

இது ளகார ஈற்றுள் விளியேலாதன கூறுகின்றது.

(இ - ள்.) சுட்டுமுதற்பெயரும் வினாவின்பெயரும் முற்கிளந் தன்ன என்மனார் புலவர்=அவள் இவள் உவளென்னும் ளகார ஈற் றுச் சுட்டுமுதற்பெயரும் யாவளென்னும் வினாப்பெயரும் முற்கூறிய சுட்டுமுதற்பெயரும் வினாப்பெயரும் போல விளிகொள்ளா. எ-று.()

கருக. அளபெடைப் பெயரே அளபெடை யியல.

இஃது எய்தாதது எய்துவித்தது.

(இ - ள்.) அளபெடைப் பெயரே அளபெடை இயல=ல்கார ளகார ஈற்று அளபெடைப்பெயர் முற்கூறிய னகார ஈற்று அளபெ டைப்பெயர்போல அளவுநீண்டு இயல்பாய் விளியேற்கும். எ-று.

"மாஅஅனின் னிறம்போன் மழையிருட் பட்டதே-கோஒஒள் கொளக்கோடு கொண்டு" என்பதனுள் மாஅஅல் கோஒஒள் என வந்த வாறு காண்க. (கஉ)

கருஉ. கிளந்த விறுதி யஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங் காலை.

இது விரவுப்பெயர் விளியேற்குமாறு கூறுகின்றது.

(இ - ள்.) கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர் = மேல் உயர்திணைக்கண் விளியேற்குமென்ற எட்டு ஈற்றினையுமுடைய உயர் திணையோடு அஃறிணைவிரவும் விரவுப்பெயர்: விளம்பிய நெறிய விளிக்குங் காலை=அவவீறுகளின் எடுத்து ஓதிய முறைமையினையு டைய விளிக்கும் இடத்து. எ-று.

உ-ம். சாத்தீ பூண்டே தந்தாய் எனவும், சாத்தாய் கூந்தால் மக்காள் எனவும் வரும். சாத்தி பூண்டு தந்தை சாத்த என அண் மைவிளியுங் கொள்க.

இனி விளிக்குங்காலை என்றதனாற் பிணாவாராய் அளிதூவா ராய் என எடுத்தோதாத ஆகார ஊகார ஈற்று விரவுப்பெயர் இயல் பாய் விளியேற்றலுஞ், சாத்தன்வாராய் மகள்வாராய் தூங்கல்வாராய் என எடுத்தோதிய ஈறுகள் கூறியவாறன்றி இயல்பாய் விளியேற்ற லும், இப்பெயர்கள் ஏகாரம்பெற்று விளியேற்றலுங் கொள்க.

உயர்திணையோடு அஃறிணைவிரவுமாறு "அஃறிணைவிரவுபெய ரியல்புமாருளவே." என்புழிக்கூறினும். (௩௩)

௧௫௩. புள்ளியு முயிரு மிறுதி யாகிய
வஃறிணை மருங்கி னெல்லாப் பெயரும்
விளிநிலை பெறாஉங் காலந் தோன்றிற்
றெளிநிலை யுடைய வேகாரம் வரலே.

இஃது அஃறிணைப்பெயர் விளியேற்குமாறு கூறுகின்றது.

(இ - ள்.) புள்ளியும் உயிரும் இறுதியாகிய=புள்ளியீறும் உயிரீறுமாகிய: அஃறிணை மருங்கின் எல்லாப்பெயரும் = அஃறிணையிடத்து வரும் எல்லாப்பெயர்களும்: விளிநிலை பெறாஉங் காலந் தோன்றில்=விளிகொள்ளுங் காலந் தோன்றில்: ஏகாரம் வரல் தெளிநிலையுடைய=ஏகாரம்பெறுதலைத் தெற்றெனவுடைய. எ-று.

உ-ம். மரம் மரமே, அணில் அணிலே, புலி புலியே, கிளி கிளியே எனவரும்.

தெளிநிலையுடைய என்றதனன் "வருந்தினைவாழியென்னெஞ்சம்" "கருங்கால்வெண்குருகொன்றுகேண்மதி" "திங்களுட்டோன்றியிருந்தகுறுமுயால்" என்றாற்போலப் பிறவாற்றான் விளியேற்பனவுங் கொள்க.

இனி உயர்திணைப்பெயருள் ஏகாரம் பெறாமல் விளியேற்று நின்றனவற்றையும் வழக்குச்சொல்லாற் றெரியப் பொருள்கூறவேண்டியக்கால் இவ்வேகாரமே விரித்துக் கூறல்வேண்டுதலும் இதனாற் கொள்க. தொண்டையோர்மருக செருமேம்படுந மள்ளர்மள்ள மறவர்மறவ பைம்பூட்சேஎய் என்றாற்போல்வன ஏகாரத்தாற் பொருள் கூறுமாறு உணர்க. விளிநிலைபெறாஉங் காலந்தோன்றினென்றார், முன்னிலையாக்கலுஞ் சொல்வழிப்படுத்தலும் வேண்டுழியே விளியேற்குமென்றற்கு. (௩௪)

௧௫௪. உளவெனப் பட்ட வெல்லாப் பெயரு
மளபிறந் தனவே விளிக்குங் காலைச்
சேய்மையி னிசைக்கும் வழக்கத் தான.

இது முற்கூறிய மூவகைப்பெயர்க்கும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது.

(இ - ள்.) உள எனப்பட்ட எல்லாப்பெயரும் = இருதிணைக்கண்ணும் விளியேற்பனவாகச் சொல்லப்பட்ட எல்லாப்பெயரும்; விளிக்குங் காலை அளபு இறந்தன = விளிக்குமிடத்துத் தம்மாத்திரையின் இறந்து இசைத்தனவாம்; சேய்மையின் இசைக்கும் வழக்கத்தான = சேய்மைக்கண் ஒலிக்கும் வழக்கின்கண். எ-று.

உ-ம். நம்பீஇ சாத்தாஅ எனவரும். சோமாஅன் மலையமாஅன் என்பன அளபிறந்திசைக்கும்வழி இயல்பனறி ஈற்றயல் நீண்டனவாம். (ந௫)

க௫௫ அம்ம வென்னு மசைச்சொ னீட்ட
மம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே.

இது அம்ம என்னும் இடைச்சொல் விளியேற்குமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம் = அம்ம வென்று கூறப்படும் முறைப்பொருட்கிளவியினது நீட்டமாகிய அம்மாவென்னுஞ்சொல்; அம்முறைப் பெயரொடு சிவணாது ஆயினும் = முற்கூறிய விளியேற்கும் முறைமையினையுடைய பெயர்களோடு பொருந்தாது இடைச்சொல்லாய் நிற்பினும்; விளியொடு கொள்ப தெளியுமோரே = விளியேற்கும் பெயர்களோடு இதனையும் விளிநிலைமைத்தாகக் கொள்வர் தெளிந்த அறிவினையுடையோர். எ-று.

உ-ம். அம்மா கொற்றா எனவரும்.

கொற்றாவென்பது எதிர்முகமாக்குமாயினுங் கேளாயென்பதூஉம் அதனோடு கூடி எதிர்முகமாக்கி நின்றவாறு காண்க.

"அம்மகேட்பிக்கும்" எனவும் "அம்மவென்னுமுரைப்பொருட்கிளவியும்" எனவும் "உரைப்பொருட்கிளவிநீட்டமும்வரையார்" எனவும் ஆசிரியர் இதனைப் பொருள் தந்து நிற்குமென்றே சூத்திரஞ் செய்தலின் ஈண்டு அசைச்சொல் நீட்டமென்றதற்கு "யாவென்சினைமிசை யுரையசைக்கிளவிக்கு" என்றாற்போல எதிர்முகமாக்குஞ் சொல்லின் நீட்டமென்று பொருளுரைத்துக்கொள்க. (ந௬)

க௫௬. த ந நு எ என வவைமுத லாகித்
தன்மை குறித்த னரளவெ னிறுதியு

மன்ன பிறவும் பெயர்நிலை வரினே
யின்மை வேண்டும் விளியொடு கொளலே.

இஃது உயர்திணைப்பெயருள் விளியேலாதன கூறுகின்றது.

(இ - ள்.) த ந நு எ என அவைமுதலாகி = த ந நு என்னும் உயிர்மெய்யையும் எ என்னும் உயிரையும் முதலாகவுடையவாய்: தன்மை குறித்த ன ர ள என் இறுதியும்=ஒருவனது கிழமைப்பொருண்மையைக் குறித்து நின்ற ன ர ள என்னும் மூன்றுபுள்ளியை இறுதியாகவுடைய சொல்லும்: அன்ன பிறவும் பெயர்நிலை வரினே= அவைபோல்வன பிறவுமாகிய பெயராகிய நிலைமையையுடைய சொற்கள் வரின்: விளியொடு கொளல் இன்மை வேண்டும்=மேல் விளியேற்குமென்னப்பட்ட பெயரோடு கோடலை இல்லாமைவேண்டும் ஆசிரியன். எ-று.

உ-ம். தமன் தமர் தமள் நமன் நமர் நமள் நுமன் நுமர் நுமள் எமன் எமர் எமள் எனவும் தம்மான் தம்மார் தம்மாள் நம்மான் நம்மார் நம்மாள் நும்மான் நும்மார் நும்மாள் எம்மான் எம்மார் எம்மாள் எனவும் வரும்.

பிறவுமென்றதனன் மற்றையான் மற்றையார் மற்றையாள் பிறன் பிறர் பிறள் எனவரும். வேண்டுமென்றதனன் எம்பீ "எம்மானேதோன்றினுயென்னையொளித்தியோ" என்முற்போலச் சிறுபான்மை விளியேற்பனவுந் தமர்முதலியன கள்ளென்னுமிடைச் சொல்லோடு கூடியவழி ஏகார ஈறுபோல ஈற்றயல் நீண்டு தமர்கள் நமர்கள் எனவும் நமரங்காளெனவும் பெயர்த்திரிசொல்லாய்த் திரிந்து நின்று விளியேற்பனவுங் கொள்க. எம்பியென்னுங் கிளைமுதற்பெயரைத் தன்னினமுடித்தலாற் கொள்க. (கஎ)

விளிமரபு முற்றும்.

---

ஐந்தாவது

## பெயரியல்.

கருஎ. எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.

என்பது சூத்திரம். இவ்வோத்துப் பெயர்க்கு இலக்கணம் உணர்த்தினமையாற் பெயரியலென்னும் பெயர்த்தாயிற்று. இதுமுதல்

ஐந்து சூத்திரமும் பொது இலக்கணங் கூறுதலின் வேற்றுமை இலக்கணத்தைச் சேர முன்வைத்தார். இச்சூத்திரம் நால்வகைச்சொற்கும் பொது இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே = பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகிய எல்லாச்சொல்லும் பொருளுணர்த்துதலைக் கருதியே நிற்கும், பொருளுணர்த்துதலைக் கருதாது நிற்பன இல்லை. எ-று.

எல்லாச்சொல்லும் பொருள்குறித்தனவே என்றது இவவாள் வெட்டுதலைக் கருதியேயிருக்கும் என்றாற்போலக் கருவிக்கருத்தாவாய் நின்றது. "ஆயிருதிணையினிசைக்குமன்சொல்லே" என்புழி இருதிணைப்பொருளையுஞ் சொற்களுணர்த்துமென்பதன்றித் தமிழ்ச்சொல்லெல்லாம் ஒருதலையாகப் பொருளுணர்த்துமென்னுந் துணிபு விதி ஆண்டின்மையின் இச்சூத்திரங் கூறினார். தாஞ் சார்ந்த சொற்களின் பொருளையுணர்ந்தியும் அச்சொற்களை அசைந்தும் நிற்றலின் அசைநிலையும் பொருள்குறித்தனவேயாம். சொற்கள் ஓசை நிறைந்துநின்றே பொருளுணர்த்தவேண்டுதலின் இசைநிறையும் பொருளுணர்த்திற்றேயாம். முயற்கோடு பொய்ப்பொருள் குறித்ததாய், இல்லையென வருதலின். (க)

கருஅ. பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகு மென்மனார் புலவர்.

இதுவும் அச்சொற்கள் பொருளுணர்த்துமாறு கூறுகின்றது.

(இ - ள்.) பொருண்மை தெரிதலும் = சொல்லின்வேறாகிய பொருட்டன்மை அறியப்படுதலும்: சொன்மை தெரிதலும் = பொருட்டன்மை அறியப்படாது அச்சொற்றன்மை அறியப்படுதலுமென்று இரண்டும்: சொல்லின் ஆகும் என்மனார் புலவர் = சொல்லானென்று சொல்லுவர் புலவர். எ-று.

உ-ம். சாத்தன் வந்தான் பண்டுகாடுமன் உறுகால் இவை பொருட்டன்மைதெரிந்தன. செய்தெனெச்சம் தஞ்சக்கிளவி வேறென்கிளவி செய்தென்கிளவி கடியென்கிளவி இவை சொற்றன்மைதெரிந்தன, அச்சொற்றன்னையே அறியப்படுதலின்.

"ஈறுபெயர்க்காகுமியற்கையவென்ப" என்றாற்போல்வன பெயர்ச்சொல்லை உணர்த்தலிற் சொற்றன்மைதெரிதலும் உருபேற்றுழிச்

செயப்படுபொருள்முதலிய பொருள்களை உணர்த்தலிற் பொருண் 'மைதெரிதலும் உடனின்றனவாம். பிறவும் இவ்வாறு உடன்வருவன உணர்ந்துகொள்க. (உ.)

கருசு. தெரிபுவேறு நிலையலுங் குறிப்பிற் றோன்றலு
மிருபாற் றென்ப பொருண்மை நிலையே.

இதுவும் அது.

(இ - ள்.) பொருண்மைநிலையே = மேற்கூறப்பட்ட பொருட் டன்மை தெரிதல்: தெரிபு வேறுநிலையலும் = சொன்மைமாத்திரத் தான் விளங்கி வேறுநிற்றலும்: குறிப்பிற் றோன்றலும்=சொன்மை மாத்திரத்தாற் றோன்றாது சொல்லோடு கூடிய குறிப்பாற் றோன் றலுமாகிய: இருபாற்று என்ப = இரண்டுகூற்றையுடைத்தென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். அவன் இவன் உவன் வந்தான் சென்றான் இவை தெரிந் தன. ஒருவர்வந்தாரென்றாற்போல்வனவும் ஆகுபெயராய் வருவன வுங் குறிப்பிற் றோன்றலாம். சேனாவரையர் காட்டிய "இளைதாக முண்மரங் கொல்க களையுநர் - கைகொல்லுங் காழ்த்த விடத்து" என் னும் உதாரணஞ் செய்யுளாதலிற் செய்யுளியலிற் "சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை - புல்லிய கிளவி யெச்சமாகும்" என்னுஞ் சூத்திரத்துள் ஆசிரியர் குறிப்பெச்சமெனக் கூறியவாறு காண்க. (ந)

கசாO. சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப வறிந்திசி னோரே.

இஃது அந்நால்வகைச்சொல்லினுட் சிறந்தவற்றிற்குப் பெய ரும் முறையுந் தொகையும் உணர்த்துகின்றது.

(இ - ள்.) சொல்லெனப் படுப=சொல்லென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன: பெயரே வினையென்று ஆயிரண்டு என்ப அறிந் திசினோரே = பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமென அவ்விரண் டென்று கூறுவர் அறிந்தோர். எ-று.

பொருளும் பொருளினது புடைபெயர்ச்சியுமாகிய முறைமை பற்றிப் பெயரை முற்கூறினர். (ச)

கசுக. இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு
மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப.

இஃது இறந்தது காத்தது.

(இ - ள்.) இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும் அவற்றுவழி மருங்கிற் தோன்றும் என்ப = இடைச்சொல்லாகிய சொல்லும் உரிச்சொல்லாகிய சொல்லும் பெயர்வினைகளது தாந் தோன்றுதற்கு இடமாகிய இடத்தே தோன்றுமென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். தாந்தோன்றுதற்கு இடமாவன அவன் அவள் உண்டான் உண்டாள் துவைத்தல் துவைக்கும் என்றாற்போல்வன. தாந்தோன் றுதற்கு இடமல்லாதன மரம் மான் என்றாற்போல்வனவாகிய பெய ரும் உண் தின் என்றாற்போல்வனவாகிய முதனிலைப்பெயர் தானே நிற்பனவுமென்று உணர்க. (எ)

கசுஉ. அவற்றுட், பெயரெனப் படுபவை தெரியுங் காலை
யுயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு
மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே.

இது நிறுத்தமுறையானே பெயர்ச்சொற்குப் பெயரும் முறை யுந் தொகையுங் கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் = மேற் கூறப்பட்ட நான்குசொல்லுள் ளும்: பெயரெனப்படுபவை தெரியுங்காலை = பெயர்ச்சொல்லென்று சொல்லப்படுவனவற்றை ஆராயுங்காலை: தோன்றல் ஆறே = அவை தோன்றும் நெறிக்கண்: உயர்திணைக்கு உரிமையும் = உயர்திணைக்கு உரிமையுடைமையும்: அஃறிணைக்கு உரிமையும் = அஃறிணைக்கு உரி மையுடைமையும்: ஆயிரு திணைக்கும் ஓர் அன்ன உரிமையும் = அவ்விருதிணைக்கும் ஒத்த உரிமையுடைமையும்: அம் மூ உருவின = அம்மூன்று வேறுபாட்டையுடையவாம். எ-று.

ஓரன்ன உரிமைய என்றதற்கு ஒருசொல்லுதற்கண்ணே இரண் டினையுமுணர்த்தாவென்று உணர்க. (அ)

கசுந. இருதிணைப் பிறந்த வைம்பாற் கிளவிக்கு
முரியவை யுரிய பெயர்வயி னான.

இதுவும் பெயர்க்கண்ணதோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) பெயர்வயினான = ஒருபாற் பெயரிடத்து முடிபாக வந்த வினைகள்: இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும் = இருதிணையினின்றும் பிரிந்த ஐம்பாற் பொருட்கும்: உரியவை உரிய = தனித்தனி கூறாமற் றானே சென்று உணர்த்தற்கு உரியன உரியவாம். எ-று.

உம்மையால் ஐம்பாலையுஞ் சேர உணர்த்தாது சிலபாலை உணர்த்துதற்கு உரியன உரியவாம் என்றுங் கொள்க.

உ-ம். நஞ்சுண்டான்சாமென்றவழி நஞ்சுண்டல் சாதற்குக் காரணமென்பான் ஒருபால்மேல் வைத்துக் கூறினானாயினும் அஃது ஒழிந்த நான்குபாற்குஞ் சாதல் எய்தினமையை உணர்த்தினவாறு காண்க. பார்ப்பான் கள்ளுண்ணானென்பது ஏனை இருபாற்கும் எய்துவித்துநின்றது.

இனிச் சேனாவரையர் இருதிணைப்பிரிந்த ஐம்பாற்கிளவியாதற்கும் பெயருள் உரியன உரியவாமென்று பொருள்கூறி அவன் பெண்மகன் சாத்தன் என னகர ஈறு ஆடூஉவிற்கும் மகடூஉவிற்கும் அஃறிணைப்பாற்கும் உரித்தாய்வருதலின் உரியவை உரிய என்றார் என்பது இச்சூத்திரத்திற்குக் கருத்தென்றாராலெனின், ஆசிரியர் வினைச்சொல்லை ஈற்றான் அடங்குமென்று கருதி ஈறுபற்றி ஓதிப் பெயர்ச்சொல்லை ஈற்றான் அடங்காது பல்வேறுவகையவாய் வருமென்று கருதிச் சொல்லாகத் தனித்தனியே எடுத்தோதினாராதலின் இவ்வெடுத்தோதிய சொற்களான் இவர்கூறிய பொருள்விளங்குதலின் இச்சூத்திரத்திற்கு இதுவே பொருளென்று உணர்க. அன்றியும் "ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும்-வருவன தானே வழக்கென மொழிப" என்னும் பொருளியற்சூத்திரத்தான் நஞ்சுண்டான்சாமென்பது அடங்குமென்று கூறல் அச்சூத்திரத்தின் கருத்து அறியாது கூறிற்றாம்; என்னை? அஃது "ஒத்தகிழவனுங்கிழத்தியும்" என்ற களவியற்சூத்திரத்திற் பன்மைகூறா வழுவை அமைத்தற்கு எழுந்த சூத்திரமாதலின். (எ)

கசுச. அவ்வழி,

அவனிவ னுவனென வரூஉம் பெயரு
மவளிவ ளுவளென வரூஉம் பெயரு

மவரிவ ருவரென வரூஉம் பெயரும்
யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவ ரென்னு
மாவயின் மூன்றொ டப்பதி னைந்தும்
பாலறி வந்த வுயர்திணைப் பெயரே.

இது முறையானே உயர்திணைப்பெயரை உணர்த்துகின்றது.

(இ - ள்.) அவ்வழி=மூன்று கூற்றதாக முற்கூறிய பெயருள்: அவன் இவன் உவன் என வரூஉம் பெயரும் அவள் இவள் உவள் என வரூஉம் பெயரும் அவர் இவர் உவர் என வரூஉம் பெயரும்= அவனென்பது முதலாகிய சுட்டுப்பெயர் ஒன்பதும்: யான் யாம் நாம் என வரூஉம் பெயரும் = யானென்னுந் தனித்தன்மைப்பெயர் ஒன்றும் யாமென்னும் படர்க்கையுளப்பாட்டுத் தன்மைப்பெயர் ஒன்றும் நாமென்னும் முன்னிலையுளப்பாட்டுத் தன்மைப்பெயர் ஒன்றும்: யாவன் யாவள் யாவர் என்னும் ஆவயின் மூன்றொடு அப்பதினைந்தும் = யாவன் முதலிய வினாப்பொருளிடத்துப் பெயர் மூன்றுமாயுள்ள அப்பதினைந்துபெயரும்: பால் அறிவந்த உயர்திணைப் பெயரே=ஒருவன் ஒருத்தி பலர் என்னும் மூன்றுபாலினையும் அறிய வந்த உயர்திணைப்பெயராம். எ-று.

யான் யாம் நாம் என இருபாற்குப் பொதுவேனுங் குறிப்பால் உணர்ந்துழி ஒருபாலுணர்த்தியே நிற்றலிற் பால் அறிய வந்த உயர் திணைப்பெயராயிற்று. நம்பி பெண்டாட்டி என இகர ஈறும் ஆடூஉ மகடூஉ என ஊகார ஈறுகளும் பிற ஈறுகளும் இருபாற்கும் உரியவாய் வருதலின் ஈறுபற்றி ஓதாது இச்சூத்திரம் முதலாகப் பெயர் பற்றி ஓதினர். (௨)

கசரு. ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்
பெண்மை யடுத்த மகளென் கிளவியும்
பெண்மை யடுத்த விகர விறுதியு
நம்மூர்ந்து வரூஉ மிகரவை காரமு
முறைமை சுட்டா மகனு மகளு
மாந்தர் மக்க ளென்னும் பெயரு
மாடூஉ மகடூஉ வாயிரு கிளவியுஞ்
சுட்டுமுத லாகிய வன்னு மானு

மவைமுத லாகிய பெண்டென் கிளவியு
மொப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
யப்பதி னைந்து மவற்றோ ரன்ன.

இதுவும் அது.

(இ - ள்.) ஆண்மை அடுத்த மகனென் கிளவியும் = ஆளுந் தன்மை அடுத்த ஆண்மகனென்னுஞ் சொல்லும்: பெண்மை அடுத்த மகளென் கிளவியும் = கட்புலனாயதோர் அமைதித்தன்மை அடுத்த பெண்மகளென்னுஞ் சொல்லும்: பெண்மை அடுத்த இகர இறுதியும் = கட்புலனாயதோர் அமைதித்தன்மை அடுத்த இகர ஈறாய்ப் பெண்டாட்டியென்னுஞ் சொல்லும்: நம் ஊர்ந்து வரூஉம் இகர ஐகாரமும் = நம்மென்னும் முதனிலையை ஊர்ந்து நமக்கின்னரென வரூஉம் இகர ஐகார ஈற்று நம்பி நங்கை என்னுஞ்சொல்லும்: முறைமை சுட்டா மகனும் மகளும் = முறைப்பொருண்மை கருதாத மகன் மகளென்னுஞ் சொல்லும்: மாந்தர் மக்கள் என்னும் பெயரும் = மாந்தர் மக்கள் என்னும் பன்மைச்சொல்லும்: ஆடூஉ மகடூஉ ஆயிரு கிளவியும் = ஆடூஉ மகடூஉ ஆகிய அவ்விருவகைச் சொல்லும்: சுட்டு முதலாகிய அன்னும் ஆனும் = சுட்டெழுத்தை முதலாகவுடைய அவ்வாளன் இவ்வாளன் உவ்வாளன் அன்னன் அனையன் என்னும் அன்னீற்றுச்சொல்லும் அம்மாட்டான் இம்மாட்டான் உம்மாட்டான் அன்னான் அனையான் என்னும் ஆனீற்றுச்சொல்லும்: அவை முதலாகிய பெண்டு என் கிளவியும் = அச்சுட்டெழுத்தினை முதலாகவுடைய அப்பெண்டு இப்பெண்டு உப்பெண்டு என்னுஞ் சொல்லும்: ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ = ஒப்புமைப்பொருள்பற்றி வரும் பொன்னன்னான் பொன்னன்னாள் பொன்னன்னார் என வருஞ் சொல்லொடு தொக்கு: அப்பதினைந்தும் அவற்றோரன்ன = அப்பதினைந்து பெயர்ச்சொல்லும் முற்கூறிய பெயர்போலப் பால் அறிய வந்த உயர்திணைப்பெயராம். எ-று.

ஆண்மை பெண்மை என்பனவற்றிற்கு இவ்வாறு பொருளுரையாக்காற் கூறியது கூறலாம். இவை ஆளும் மகன் ஆண்மகன், பெண்ணாகிய மகள் பெண்மகள் என விரியும். பெண்டாட்டிபெண்மை ஆளகின்றவள்; நம்பி நங்கை உயர்சொல்; மகளென்பது பிறிதொரு சொல்லாயே நின்று பெண்மையுணர்த்திற்று.

பெண்டன்கிளவியென்று பாடம் ஓதி அவ்வாட்டி இவ்வாட்டி உவ்வாட்டி என்பாரும் உளர். "ஊரார்பெண்டெனமொழிப" "என்

ஊனின் - பெண்டெனப் பிறர்கூறும் பழிமாறப் பெறுகற்பின்" எனச் சான்ரேர் கூறலிற் பெண்டென்பதே பாடம். அப்பெண்டென்னுஞ் சுட்டுக் "கடிசொல்லில்லை" என்பதனுற் பெண்டென நின்றது. (கூ)

கசுசு. எல்லாரு மென்னும் பெயர்நிலைக் கிளவியு
மெல்லீரு மென்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை யடுத்த மகனென் கிளவியு
மன்ன வியல வென்மனர் புலவர்.

இதுவும் உயர்திணை ஒருபாற் பெயருணர்த்துகின்றது.

(இ - ள்.) எல்லாருமென்னும் பெயர்நிலைக் கிளவியும்=எல்லாருமென்று சொல்லப்படுகின்ற படர்க்கைப்பெயர்ச்சொல்லும்: எல்லீருமென்னும் பெயர்நிலைக் கிளவியும்=எல்லீருமென்று சொல்லப்படுகின்ற முன்னிலைப் பெயர்ச்சொல்லும்: பெண்மை அடுத்த மகனென கிளவியும் = கட்புலனுயதோர் அமைதித்தன்மை அடுத்து நாணு வரையிறந்து புறத்து விளையாடும் பருவத்தாற் பால் திரிந்த பெண் மகனென்னும் பெயர்ச்சொல்லும்: அன்ன இயல என்மனர் புலவர்= இம்மூன்றும் அவைபோலப் பால் அறிய வந்த உயர்திணைப்பெயராம். எ-று.

பெண்மகனென்பது அந்தன்மையாரை அக்காலம் அவவாறே வழங்கினாராயிற்று, இங்ஙனங் கூறலின். (க0)

கசுஎ. நிலப்பெயர் குடிப்பெயர் குழூவின் பெயரே
வினைப்பெய ருடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கி னுடியற் பெயரே
யின்றிவ ரென்னு மெண்ணியற் பெயரோ
டன்றி யனைத்து மவற்றியல் பினவே.

இதுவும் அது.

(இ - ள்.) நிலப்பெயர் = ஒருவன் தான் பிறந்த நிலத்தினுற் பெற்ற பெயர்களுங்: குடிப்பெயர்=ஒருவன் தான் பிறந்த குடியினுற்

பெற்ற பெயர்களுங்: குழூவின் பெயரே = தாந் திரண்டு ஒருதுறைக் கண் உரிமைபூண்ட பல்லோர்மேல் எக்காலத்தும் நிகழும் பெயர்களும்: வினைப்பெயர் = தாஞ் செய்யுந் தொழிலினுற் பெற்ற பெயர்களும்: உடைப்பெயர் = தன் உடைமையாற் பெற்ற பெயர்களும்: பண்புகொள் பெயரே = தனது ஓர்பண்பினுற் பெற்ற பெயர்களும்: பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே = பல்லோரைக் கருதின தமது முறைமையாற் பெற்ற பெயர்களும்: பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே = பல்லோரைக் கருதின சினைநிலைமையாற் பெற்ற பெயர்களும்: பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே = பல்லோரைக் கருதின குறிஞ்சிமுதலிய ஐந்திணைநிலைமையாற் பெற்ற பெயர்களும்: கூடி வரு வழக்கின் ஆடு இயற்பெயரே = இளந்துணைமகார் தம்மிற் கூடி விளையாடல் குறித்த பொழுதைக்குத் தாமே படைத்திட்டுக் கொண்ட பெயர்களும்: இன்று இவரென்னும் எண்ணியற்பெயரொடு = இத்துணையாரெனத் தமது வரையறை உணரநின்ற எண்ணுகிய இயல்புபற்றிப் பொருளுணர்த்தும் பெயருடனே: அன்றி அனைத்தும் அவற்றியல்பினவே = அவ்வனைத்துப்பெயர்களும் மேற்கூறிய பெயர்கள்போலப் பால் அறியவந்த உயர்திணைப்பெயராம். எ-று.

உ-ம். அருவாளன் சோழியன் எனவும் சேரமான் மலையமான் பார்ப்பார் அரசர் வணிகர் வேளாளர் எனவும் அவையத்தார் அத்திகோசத்தார் வணிககிராமத்தார் மாகத்தார் எனவும் வருவார் செல்வார் தச்சர் கொல்லர் தட்டார் வண்ணார் எனவும் அம்பர்கிழான் பேரூர்கிழான் குட்டுவன் பூழியன் வில்லவன் வெற்பன் சேர்ப்பன் எனவுங் கரியான் கரியாள் செய்யான் செய்யாள் எனவும் தந்தையர் தாயர் எனவும் பெருங்காலர் பெருந்தோளர் அலைகாதர் எனவும் குறவர் இறவுளர் வேட்டுவர் ஆயர் பொதுவர் நுளையர் திமிலர் பரதவர் களமர் உழவர் எயினர் மறவர் எனவும் பட்டிபுத்திரர் கங்கைமாத்திரர் எனவும் ஒருவர் இருவர் முப்பத்துமூவர் எனவும் அருவாட்டி சோழிச்சி மலையாட்டிச்சி பார்ப்பனி அரசி வாணிச்சி வெள்ளாட்டிச்சி கொல்லிச்சி தட்டாத்தி வண்ணாத்தி அம்பருடைச்சி பேரூர்கிழத்தி எனவும் வரும். மகடூஉப்பெயர்கள் டகரவொற்று இரட்டியும் இச்சுப்பெற்றுந் தகரவொற்று இரட்டியும் இரண்டு இடைநிலையெழுத்துக்களைப்பெற்றும் பெரும்பாலும் வருமாறு உணர்க. இவை இங்ஙனம் இடைநிலையெழுத்துக்களும் பெற்றுப் பால் உணர்த்துதற்கு உரிய இகரமும் பெற்று நிற்குமென்பது "சொல்வரைந்தறியப்பிரித்தனர்காட்டல்" என்னும் அதிகாரப் புறனடையாற் கொள்க. (கக)

கசுஅ. அன்ன பிறவு முயர்திணை மருங்கிற்
பன்மையு மொருமையும் பாலறி வந்த
வென்ன பெயரு மத்திணை யவ்வே.

இஃது உயர்திணைப்பெயர்க்குப் புறனடைகூறுகின்றது.

(இ - ள்.) அன்ன பிறவும் = மேற் கூறிய பெயர்போல்வன பிறவுமாயுள்ள: உயர்திணை மருங்கிற் பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த என்ன பெயரும்=உயர்திணைக்கட் பன்மையும் ஒருமையு மாகிய பால்களை அறிய வந்த எல்லாப்பெயர்களும்: அத்திணை யவ்வே=அவ்வுயர்திணைப்பெயராம். எ-று.

உ-ம். அன்னள் அனையாள் அவ்வாட்டி ஏனாதி காவிதி எட்டி வாயிலான் பூயிலான் வண்ணத்தான் சுண்ணத்தான் பெண்டிர் பெண்டுகள் அடியான் அடியாள் அடியார் வேனிலான் பிறன் பிறள் பிறர் மற்றையான் மற்றையாள் மற்றையார் என்னுந் தொடக்கத்தனவெனக் கொள்க. இன்னும் "எல்லேம்பிரியற்கெஞ்சுற்றமொடொருங்கே" "வல்லேமிருந்தேமேவாய்ந்தமன்றிதுவென" "இருவேமும் வல்லேமிருவர்நம்படர்தீர" என்னும் பெயர்களுங் கொள்க. (கஉ)

கசுகூ. அதுவிது வுதுவென வரூஉம் பெயரு
மவைமுத லாகிய வாய்தப் பெயரு
மவையிவை யுவையென வரூஉம் பெயரு
மவைமுத லாகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை யென்னும் பெயரு
மாவயின் மூன்றொ டப்பதி னைந்தும்
பாலறி வந்த வஃறிணைப் பெயரே.

இது முறையானே அஃறிணைப்பெயர் கூறுகின்றது.

(இ - ள்.) அது இது உது என வரூஉம் பெயரும்=அது இது உது என்று சொல்லப்பட்டு வருஞ் சுட்டுமுதற்பெயர்களும்: அவை முதலாகிய ஆய்தப்பெயரும் = அப்பெயர்க்கு முதலாகிய சுட்டெழுத்தே தனக்கு முதலாக ஆய்தத்தோடு கூடி அஃது இஃது உஃது என்று சொல்ல வரும் ஆய்தத் தொடர்மொழிக் குற்றுகர ஈற்றுப் பெயர்களும்: அவை இவை உவை என வரூஉம் பெயரும்=அவை இவை உவை என வருஞ் சுட்டுமுதற்பெயர்களும்: அவை முதலாகிய

வகரப்பெயரும் = அப்பெயர்க்கு முதலாகிய சுட்டெழுத்தே தனக்கு முதலாக வகர ஒற்ரோடு கூடி அவ் இவ் உவ என்றுசொல்லப்படும் வகர ஈற்றுப்பெயர்களும்: யாது யா யாவை என்னும் ஆவயின் மூன்ரோடு அப்பதினைந்துபெயரும்=யாது யா யாவை என்று சொல்லப் படுகின்ற அவ்வினாப்பொருளிடத்து மூன்றுபெயர்களோடுங் கூடிய அப்பதினைந்து பெயர்களும்: பால் அறிவந்த அஃறிணைப்பெயரே= ஒருமைப் பன்மைப் பால் அறியவந்த அஃறிணைப்பெயராம். எ-று. ()

களO. பல்ல பலசில வென்னும் பெயரு
முள்ள வில்ல வென்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரு
மினைத்தெனக் கிளக்கு மெண்ணுக்குறிப் பெயரு
மொப்பி னாகிய பெயர்நிலை யுளப்பட
வப்பா லொன்பது மவற்ரோ ரன்ன.

இதுவும் அஃறிணை ஒருசார்ப் பெயர்களைக் கூறுகின்றது.

(இ - ள்.) பல்ல பல சில என்னும் பெயரும்=பல்ல பல சில என்று சொல்லப்படுகின்ற பெயர்களும்: உள்ள இல்ல என்னும் பெயரும்=உள்ள இல்ல என்று சொல்லப்படுகின்ற பெயர்களும்: வினைப் பெயர்க் கிளவியும்=வருவது வருவன என்ருற்போலும் வினைப்பெயராகிய சொற்களும்: பண்புகொள் பெயரும் = கரியது கரியன என்ருற்போலும் பண்பினைக்கொண்ட பெயர்களும்: இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்=ஒன்று பத்து நூறு என்ருற்போலச் சொல்லப்படுகின்ற இத்துணையென வரையறை உணர்த்தி எண்ணப் படும் பொருண்மேல் நிற்கும் பெயர்களும்: ஒப்பினாகிய பெயர்நிலை உளப்பட=பொன்னன்னது பொன்னன்ன என்ருற்போல உவமத்தினாற் பெற்ற பெயர்ச்சொல் உட்பட: அப்பால் ஒன்பதும் அவற்ரோ ரன்ன=அக்கூற்று ஒன்பதும் மேற் கூறிய பெயர்போலப் பால் அறிய வந்த அஃறிணைப்பெயர்களாம். எ-று. (கச)

களக. கள்ளொடு சிவணு மவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே.

இதுவும் அஃறிணை இயற்பெயர் கூறுகின்றது.

(இ - ள்.) கள்ளொடு சிவணும் அவ்வியற்பெயரே=கள்ளென்னும் வாய்பாட்டோடு பொருந்தும் அவ்வஃறிணையியற்பெயர்கள்: பல

அறி சொற்குக் கொள்வழி உடைய = பலவற்றை அறியுஞ் சொல்லா தற்குக் கொள்ளும் இடமுடைய. எ-று.

உ-ம். ஆ நாய் குதிரை ஒட்டகம் புலி புல்வாய் தெங்கு பலா மலை கடல் என்னுந் தொடக்கத்துச் சாதிப்பெயர் இருபாற்கும் பொதுவாய் நின்றன, கள்ளொடு சிவணி, ஆக்கள் குதிரைகள் கடல்கள் மலைகள் எனப் பன்மைவிளக்கி நின்றன. "வெறியுறுகமழ்கண்ணிவேந்தர்கட்காயினும்" எனவும், "பிறந்தவர்களெல்லாமவர்ப்பெரியராகியே" எனவும், "கற்றனங்கள்யாமுமுடன்கற்பவைகளெல்லாம்" எனவும், "எங்கள்வினையாலிறைவன்வீடியவர்நாளே" எனவும் கள் ஈறு பலரை உணர்த்திநின்றனவாலெனின் இவற்றுட் பலரையுணர்த்துதற்கு ஓதிய ஈறுகளே பலரை உணர்த்திநின்றன, கள்ளென்பது இசை நிறைத்து நின்றன எனப்படும், அவ்வீறுகளை ஒழிந்துநின்று கள்ளென்பது பலரையுணர்த்தாமையின். இனி இவ்வீறுகளை ஒழியத் தானே பலரை உணர்த்துவன உளவேற் "கடிசொல்லில்லைக்காலத்துப்படினே" என்றதனாற் கொள்க. அஃது இக்காலத்துப் பெண்டுகள் என்றாற்போல வருவனபோலும். (கரு)

களஉ. அன்ன பிறவு மஃறிணை மருங்கிற்
பன்மையு மொருமையும் பாலறி வந்த
வென்ன பெயரு மத்திணை யவ்வே.

இஃது அஃறிணைப் பெயர்க்குப் புறனடை கூறுகின்றது.

(இ-ள்.) அன்ன பிறவும் அஃறிணை மருங்கின் = முற்கூறிய பெயர்போல்வன பிறவுமாகிய அஃறிணைக்கட்: பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த = பன்மையும் ஒருமையுமாகிய பால் விளங்க வந்த: என்ன பெயரும் அத்திணையவ்வே = எல்லாப்பெயரும் அவ்வஃறிணைக்கு உரிய பெயராம். எ-று.

உ-ம். பிறிது பிற அனையது அனையன மற்றையது மற்றையன பல்லவை சில்லவை உள்ளது இல்லது உள்ளன இல்லன அன்னது அன்னன எனவரும். நிலம் நீர் தீ வளி ஆகாயம் உண்டல் தின்றல் கருமை செம்மை என்பனவும் அப்பாற்படும். (கசு)

களந. தெரிநிலை யுடைய வஃறிணை யியற்பெய
ரொருமையும் பன்மையும் வினையொடு வரினே.

இஃது அஃறிணையியற்பெயர் பால் உணர்த்துமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அஃறிணையியற்பெயர் = கள்ளோடு சிவணாத அஃறிணை இருபாற்கும் உரிய பெயர்: ஒருமையும் பன்மையுந் தெரிநிலையுடைய = ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் விளங்கும் நிலைமையுடைய: வினையொடு வரினே = அதற்கு ஏற்ற வினையோடு தொடர்ந்தவழி. எ-று.

உ-ம். ஆவந்தது ஆவந்தன யானைவந்தது யானைவந்தன குதிரை வந்தது குதிரைவந்தன எனவரும்.

கள்ளொடு சிவணிய இயற்பெயரை வேறுகூறினார் வினையானன்றிப் பெயர் தாமே பன்மை விளக்கலின். (கஎ)

கஎ௪. இருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமையிற்
திரிபுவேறு படூஉ மெல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்த மரபின்
வினையோ டல்லது பாறெரி பிலவே.

இது நிறுத்தமுறையானே விரவுப்பெயர் கூறுகின்றது.

(இ - ள்.) இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின் = இருதிணைச்சொல்லாதற்கும் ஒத்த உரிமையவாதலிற்: திரிபு வேறுபடூஉம் எல்லாப்பெயரும் = உயர்திணைக்கட் சென்றுழி உயர்திணைப்பெயராயும் அஃறிணைக்கட் சென்றுழி அஃறிணைப்பெயராயும் வேறுபடூஉம் விரவுப்பெயரெல்லாம்: நினையுங்காலை = ஆராயுங்காலத்து: தத்தம் மரபின் வினையோடல்லது பால் தெரிபிலவே = அவ்வத்திணையை உணர்த்துதற்கு உரிய முறைமையினையுடைய வினைச்சொல்லோடு இயைந்தல்லது திணைவிளங்க நில்லா. எ-று.

உ-ம். சாத்தன்வந்தான் சாத்தன்வந்தது முடவன்வந்தது முடவன்வந்தான் எனவரும். நினையுங்காலை என்றதனாற் சாத்தனொருவன் சாத்தனொன்று எனப் பெயரோடு வந்து பால்விளக்கலுங் கொள்க. இன்னும் இதனானே முற்கூறிய அஃறிணையியற்பெயர்களும் ஆவொன்று ஆபல எனப் பெயராற் பாலறியப்படுதலுங் கொள்க. இன்னும் இதனானே முலையெழுந்தது மோவாயெழுந்தது என்றாற் போல்வன தன் சினைவினையாற் பால்தெரியாமையுங் கொள்க. (கஅ)

கஎரு. நிகழூஉ நின்ற பால்வரை கிளவியி
னுயர்திணை யொருமை தோன்றலு முரித்தே
யன்ன மரபின் வினைவயி னான.

இஃது அவ்விரவுப்பெயர் விரவுவினையானுந் திணையறியப்படும் என்கின்றது.

(இ - ள்.) நிகழூஉ நின்ற பால் வரை கிளவியின் = நிகழ்கால மேபற்றி வருஞ் செய்யுமென்னும் முற்றுச்சொல்லான்: உயர்திணை யொருமை தோன்றலும் உரித்தே = உயர்திணையொருமைப்பால் தோன்றலும் உரித்து: அன்ன மரபின் வினைவயினான = அவவொரு மைப்பால் தோன்றுதற்கு ஏற்ற வினையிடத்து. எ-று.

உ-ம். சாத்தன்யாழெழூஉங் குழலூதும் பாடும் எனவும் சாத்தி சாந்தரைக்கும் பூத்தொடுக்கும் எனவும் வரும்.

இனி ஒன்றெனமுடித்தலென்பதனான் வியங்கோளானும் உயர் திணையொருமை தோன்றுதலுங்கொள்க. சாத்தன்யாழெழுக சாத் திசாந்தரைக்க எனவரும். சாத்தன்புற்றின்னும் சாத்திகன்றீனும் என அஃறிணையும் வருமாலெனின், சாத்தன்புற்றின்னுமென்பது புல்லரிசிச்சோற்றைத் தின்னுமென்று உயர்திணைக்கும் ஏற்றலின் அஃறிணைக்கே அஃது ஆகாமையின் அதுகொள்ளார். சாத்திகன்றீனு மென்பது கன்றென்னுஞ்சார்பான் அஃறிணை தோன்றிற்று, அத னாற்கொள்ளார். (கசு)

கஎசு. இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
யெல்லா நீயிர் நீயெனக் கிளந்து
சொல்லிய வல்ல பிறவு மாஅங்
கன்னவை தோன்றி னவற்றொடுங் கொளலே.

இது விரவுப்பெயர்க்குப் பெயரும் முறையுந் தொகையுங் கூறு கின்றது.

(இ - ள்.) இயற்பெயர் = சாத்தன் கொற்றன் என வழங்குதற் பயத்தவாய் நிமித்தமின்றிப் பொருள்பற்றி வரும் இயற்பெயர்: சினைப்பெயர் = பெருங்காலன் முடவன் எனச் சினையுடைமையாகிய நிமித்தம் பற்றி முதன்மேல் வரும் பெயர்: சினைமுதற் பெயரே =

சித்தலைச்சாத்தன் கொடும்புறமருதி எனச் சினைப்பெயரோடு தொடர்ந்தல்லது பொருளுணர்த்தாது வரும் இயற்பெயராகிய முதற்பெயர்: முறைப்பெயர்க் கிளவி = தந்தை தாய் எனப் பிறவியான் ஒருவரோடு ஒருவற்கு வரும் இயைபுபற்றி வரும் பெயராய் முறையுடைப் பொருண்மேல் வரும் பெயர்: தாமே தானே எல்லாம் நீயிர் நீ எனக் கிளந்து சொல்லியவற்றோடு = தாம் தான் எல்லாம் நீயிர் நீ என்று தொல்லாசிரியராலே விதந்து ஓதப்பட்டவற்றோடே: அல்ல அன்னவை பிறவும் ஆங்குத் தோன்றின் கொளல் = எடுத்தோதாதன வாய் அவைபோல்வன பிறவும் அவ்விரவுதலிடத்தே தோன்றுமாயின் அவற்றையுங் கொள்க. எ-று.

அன்னபிறவாவன, மக குழவி போல்வனவுங் காடன் காடி நாடன் நாடி தரையன் திரையன் மலையன் போல்வனவும் முதியானெனப் பிராயம்பற்றி வருவனவுஞ் சுமையனெனத் தொழில்பற்றி வருவனவும் பிறவுமாம். (௨0)

கஎஎ. அவற்றுள்,

நான்கே யியற்பெயர் நான்கே சினைப்பெயர
நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி யிரண்டா கும்மே
யேனைப் பெயரே தத்த மரபின.

இது தொகுத்தனவற்றை விரிக்கின்றது.

(இ - ள்.) அவற்றுள் = முற்கூறிய விரவுப்பெயருள்: நான்கே இயற்பெயர் = இயற்பெயர் நான்கு வகைப்படும்: நான்கே சினைப்பெயர் = சினைப்பெயர் நான்கு வகைப்படும்: நான்கு சினைமுதற்பெயரே = சினைமுதற்பெயர் நான்கு வகைப்படும்: முறைப்பெயர்க் கிளவி இரண்டாகும்மே = முறைப்பெயராகிய சொல் இரண்டு வகைப்படும்: ஏனைப் பெயரே தத்தம் மரபின = ஒழிந்த ஐந்து பெயரும் பொருண்மைசுட்டாது ஒரோவொன்றாய் நின்ற பெயரைச் சுட்டிநிற்கும் இலக்கணத்தன: என மொழிமனார் = என்றுகூறுவர் ஆசிரியர். எ-று. (உக)

கஎஅ. அவைதாம்,

பெண்மை யியற்பெய ராண்மை யியற்பெயர்
பன்மை யியற்பெய ரொருமையியற் பெயரென்
றந்நான் கென்ப வியற்பெயர் நிலையே.

இஃது இயற்பெயர் நான்கு என்றவற்றின் பெயரும் முறையுங் கூறுகின்றது.

(இ-ள்.) அவைதாம் = அவவாறு பகுக்கப்பட்டனதாம் யாவை யெனின்: இயற்பெயர்நிலையே = இயற்பெயரது நிலைமையை: பெண்மையியற்பெயர் ஆண்மையியற்பெயர் பன்மையியற்பெயர் ஒருமையியற்பெயரென்று அந்நான்கு என்ப = பெண்மையியற்பெயரும் ஆண்மையியற்பெயரும் பன்மையியற்பெயரும் ஒருமையியற்பெயருமென்று கூறப்பட்ட அந்நான்குமென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று. (உஉ)

கஎகூ. பெண்மைச் சினைப்பெய ராண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெய ரொருமைச்சினைப் பெயரென்
றந்நான் கென்ப சினைப்பெயர் நிலையே.

இது சினைப்பெயர் நான்கு என்றவற்றின் பெயரும் முறையுங் கூறுகின்றது.

(இ-ள்.) சினைப்பெயர் நிலை = சினைப்பெயரது நிலைமையை: பெண்மைச்சினைப்பெயர் ஆண்மைச்சினைப்பெயர் பன்மைச்சினைப்பெயர் ஒருமைச்சினைப்பெயரென்று அந்நான்கு என்ப = பெண்மைச் சினைப்பெயரும் ஆண்மைச்சினைப்பெயரும் பன்மைச்சினைப்பெயரும் ஒருமைச்சினைப்பெயருமென்று கூறப்பட்ட அந்நான்குமென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று. (உ௩)

க௮0. பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
யாண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
யொருமை சுட்டிய சினைமுதற் பெயரென்
றந்நான் கென்ப சினைமுதற் பெயரே.

இது சினைமுதற்பெயர் நான்கு என்றவற்றின் பெயரும் முறையுங் கூறுகின்றது.

(இ-ள்.) சினைமுதற்பெயரே = சினைமுதற்பெயரது நிலைமையை: பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரென்று அந்நான்கு என்ப = பெண்மைசுட்-

டியசினைமுதற்பெயரும் ஆண்மைசுட்டியசினைமுதற்பெயரும் பன்மை சுட்டியசினைமுதற்பெயரும் ஒருமைசுட்டியசினைமுதற்பெயருமென்று கூறப்பட்ட அந்நான்குமென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று. (உசு)

கஅக. பெண்மை முறைப்பெய ராண்மை முறைப்பெய
ருயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே. [ரென்

இது முறைப்பெயர் இரண்டு என்று அவற்றது பெயரும் முறையுங் கூறுகின்றது.

(இ - ள்.) முறைப்பெயர் நிலையே = முறைப்பெயராது நிலைமை: பெண்மைமுறைப்பெயர் ஆண்மைமுறைப்பெயர் என்று ஆயிரண்டு என்ப = பெண்மைமுறைப்பெயரும் ஆண்மைமுறைப்பெயரும் என்று கூறப்பட்ட அவ்விரண்டுமென்று கூறுவர் ஆசிரியர். எ-று.()

கஅஉ. பெண்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றற்கு மொருத்திக்கு மொன்றிய நிலையே.

இது பெண்மைப்பெயரெல்லாந் தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

(இ - ள்.) பெண்மை சுட்டிய எல்லாப்பெயரும் = பெண்மையியற்பெயரும் பெண்மைச்சினைப்பெயரும் பெண்மைச்சினைமுதற்பெயரும் பெண்மைமுறைப்பெயரும்: ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றியநிலையே = அஃறிணைப்பெண்ணொன்றற்கும் உயர்திணையொருத்திக்கும் பொருந்திய நிலைமையையுடையனவாம். எ-று.

உ-ம். சாத்திவந்தது சாத்திவந்தாள் முடத்திவந்தது முடத்திவந்தாள் முடக்கொற்றிவந்தது முடக்கொற்றிவந்தாள் தாய்வந்தது தாய்வந்தாள் எனவரும். முடஞ் சினையாகிய காலை உணர்த்திற்று.

ஆய் என்பதும் அது. யாயென்பது தன்மையோடு ஒட்டுதலின் முறைப்பெயரெனினும் உயர்திணையாம். (உ௲)

கஅ௩. ஆண்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றற்கு மொருவற்கு மொன்றிய நிலையே.

இஃது ஆண்மைப்பெயரெல்லாந் தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

(இ - ள்.) ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும் = ஆண்மையியற்பெயரும் ஆண்மைச்சினைப்பெயரும் ஆண்மைச்சினைமுதற்பெயரும் ஆண்மைமுறைப்பெயரும்: ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே = அஃறிணையாகுனொன்றற்கும் உயர்திணையொருவற்கும் பொருந்திய நிலைமையையுடையனவாம். எ-று.

உ-ம். சாத்தன்வந்தது சாத்தன்வந்தான் முடவன்வந்தது முடவன்வந்தான் முடக்கொற்றன்வந்தது முடக்கொற்றன்வந்தான் தந்தைவந்தது தந்தைவந்தான் எனவரும்.

நுந்தையென்பதும் அது. எந்தையென்பது தன்மையோடு கூட்டுதலின் உயர்திணையாம். (உஎ)

கஅச. பன்மை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றே பலவே யொருவ ரென்னு
மென்றிப பாற்கு மோரன் னவ்வே.

இது பன்மைப்பெயரெல்லாந் தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

(இ - ள்.) பன்மை சுட்டிய எல்லாப்பெயரும் = பன்மையியற்பெயரும் பன்மைச்சினைப்பெயரும் பன்மைச்சினைமுதற்பெயரும்: ஒன்றே பலவே ஒருவன் என்னும் என்றிப்பாற்கும் ஓரனவே = அஃறிணையொருமையும் அத்திணைப்பன்மையும் உயர்திணையொருமையுமென்று சொல்லப்படும் அம்மூன்று பாற்கும் ஒருதன்மைய. எ-று.

ஒன்றென்றதனை அஃறிணையாகுனொன்றனையும் பெண்ணொன்றனையும் ஒருவரென்பதனை உயர்திணையாகுனொருமையும் பெண்ணொருமையுமாகக் கொள்க.

உ-ம். யானைவந்தது யானைவந்தன யானைவந்தான் யானைவந்தாள்; நெடுங்கழுத்தல்வந்தது வந்தன வந்தான் வந்தாள்; பெருங்கால்யானைவந்தது வந்தன வந்தான் வந்தாள் எனவரும்.

வெண்குடைப்பெருவிறலென்பது செங்குடைமுதலியவற்றோடு இயைபு நீக்காது வெண்குடையோடு இயைபின்மைமாத்திரை நீக்கி நின்றாற்போலப் பன்மைசுட்டியவென்பதும் ஒருமையினியைபு நீக்காது பன்மைசுட்டுதலோடு இயைபின்மை மாத்திரை நீக்கிநின்றது. இஃது இயைபின்மைநீக்கமாம். கருங்குவளையென்பது செம்மைமுதலியவற்

ரூடு இயைபு நீக்குதலிற் பிறிதினியைபுநீக்கமாம். எனவே விசேடித்தல் இருவகையவாயின; எனவே பலபால்களையும் உணர்த்திநிற்றலிற் 'பன்மைசுட்டிய' என்றாரென்று உரையாசிரியர் கூறியதே சேனாவரையர்க்குங் கருத்தாயிற்று. (உ௮)

க௮ரு. ஒருமை சுட்டிய வெல்லாப் பெயரு
மொன்றற்கு மொருவற்கு மொன்றிய நிலையே.

இஃது ஒருமைப்பெயரெல்லாவற்றையுந் தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

(இ - ள்.) ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்=ஒருமையைக் கருதி வரும் ஒருமையியற்பெயரும் ஒருமைச்சினைப்பெயரும் ஒருமைச்சினைமுதற்பெயரும்: ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே= அஃறிணையொருமைக்கும் உயர்திணையொருமைக்கும் பொருந்திய நிலைமையையுடையனவாம். எ-று.

உ-ம். கோதைவந்தது வந்தான் வந்தாள், செவியிலிவந்தது வந்தான் வந்தாள், கொடும்புறமருதிவந்தது வந்தான் வந்தாள் என வரும்.

பெண்மைப்பெயரும் ஆண்மைப்பெயரும் ஒருமையுணர்த்துமாயினும் இவை பெண்மை ஆண்மை என்னும் வேறுபாடு உணர்த்தாது ஒருமையுணர்த்தலின் இவற்றை ஒருமைப்பெயரென்றார். (உ௯)

க௮௬. தாமென் கிளவி பன்மைக் குரித்தே.

இது தாமென்னும் பெயர் இருதிணைக்கும் உரித்தாமாறு உணர்த்துகின்றது.

(இ - ள்.) தாம் என் கிளவி பன்மைக்கு உரித்தே = தாமென்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மைப்பாற்கு உரித்து. எ-று.

உ-ம். தாம்வந்தார் தாம்வந்தன எனவரும். (௩0)

க௮எ. தானென் கிளவி யொருமைக் குரித்தே.

இது தானென்பது இருதிணைக்கும் உரித்தாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) தான் என் கிளவி ஒருமைக்கு உரித்தே=தானென்னும் பெயர் இருதிணைக்கண்ணும் ஒருமைப்பாற்கு உரித்து. எ-று.

உ-ம். தான்வந்தான் தான்வந்தாள் தான்வந்தது எனவரும். ()

கஅஅ. எல்லா மென்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே.

இஃது எல்லாமென்பது திணைக்கு உரித்தாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) எல்லாமென்னும் பெயர்நிலைக் கிளவி=எல்லாமென்னும் பெயராகிய நிலைமையையுடைய சொல்: பல் வழி நுதலிய நிலைத்தாகும்மே=இருதிணைக்கண்ணும் பன்மையிடத்தைக் கருதின நிலைமைத்தாய் வரும். எ-று.

உ-ம். எல்லாம்வந்தேம் வந்தீர் வந்தார்* வந்தன எனவரும். மேனியெல்லாம் பசலையாயிற்றென்பது எஞ்சாப்பொருட்டாயதோர் உரிச்சொல். (ருஉ)

கஅகூ. தன்னு ளுறுத்த பன்மைக் கல்ல
துயர்திணை மருங்கி னாக்க மில்லை.

இஃது எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது.

(இ - ள்.) உயர்திணை மருங்கிற் தன்னுள் உறுத்த பன்மைக்கு அல்லது ஆக்கம் இல்லை = எல்லாமென்னுஞ்சொல் உயர்திணைக்கண் வருங்காற் தன்மைப்பன்மைக்கல்லது பெரும்பான்மை வாராது.எ-று.

எனவே சிறுபான்மை முன்னிலைப்பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் வருமாயிற்று.

உ-ம். "கண்டனிரெல்லாங்கதுமெனவாங்கே - பண்டறியாதீர் போலநோக்குதிர்" "ஊடினிரெல்லாமுருவிலான்றன்னாணை - கூடினிரென்றுகுயில்சாற்ற" என முன்னிலைக்கண்ணும் "நெறிதாழிருங் கூந்தனின்பெண்டிரெல்லாஞ் - சிறுபாகராக" எனப் படர்க்கைக்கண்ணும் வந்தன. (ருங)

ககூ0. நீயிர் நீயென வரூஉங் கிளவி
பாறெரி பிலவே யுடன்மொழிப் பொருள.

இது நீயிர் நீ என்பனவற்றைத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

(இ - ள்.) நீயிர் நீ என வரூஉங் கிளவி=நீயிரெனவும் நீயெனவும் வரும் பெயர்ச்சொற்கள்: பால் தெரிபு இலவே உடன்மொழிப் பொருள = திணைப்பகுதி தெரிய நில்லா, இருதிணைப்பொருளும் ஒருங்கு தோன்றுதலைப் பொருண்மையாகவுடைய. எ-று.

உ-ம். நீயிர்வந்தீர் நீவந்தாய் என வினையானுந் திணைதெரியாமை காண்க. இவற்றிற்குத் தத்தம்மரபின் வினையின்று. (கச)

கககக. அவற்றுள்,
நீயென் கிளவி யொருமைக் குரித்தே.

இது நீயென்பது பாற்கு உரித்தாமாறு கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் நீ என் கிளவி ஒருமைக்கு உரித்தே = முற்கூறிய இரண்டுபெயருள் நீயென்னும்பெயர் ஒருவன் ஒருத்தி ஒன்றென்பனவற்றிற்கெல்லாம் பொதுவாகிய ஒருமைக்கு உரித்தாம்.

உ-ம். நீவந்தாயெனவரும். (கரு)

கககஉ. ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே.

இது நீயிரென்பது பாற்கு உரித்தாமாறு கூறுகின்றது.

(இ-ள்.) ஏனைக் கிளவி பன்மைக்கு உரித்தே = ஒழிந்த நீயிரென்னும் பெயர் பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொதுவாகிய பன்மைக்கு உரித்தாம். எ-று.

உ-ம். நீயிர்வந்தீர் எனவரும். (கசு)

கககங. ஒருவ ரென்னும் பெயர்நிலைக் கிளவி
யிருபாற்கு முரித்தே தெரியுங் காலை.

இஃது உயர்திணையதிகாரத்தின் ஒழிபு கூறுகின்றது. இது பொதுவாய் நிற்றலின் ஈண்டுக் கூறினார்.

(இ-ள்.) ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி=மேல் "இன்றிவரென்னுமெண்ணியற்பெயர்" என்றவற்றுள் ஒருவரென்னும்பெயர் நிலைமையையுடைய சொல்: தெரியுங் காலை இருபாற்கும் உரித்தே = ஆராயுங்காலத்து உயர்திணைப்பாலுள் ஒருபால் உணர்த்தாது ஒருவன் ஒருத்தியென்னும் இருபாற்கும் பொதுவாய்நிற்கும். எ-று.

உ-ம். ஒருவர்வந்தார் எனவரும். (கஎ)

ககசச. தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும்.

இஃது ஒருவரென்பதன் முடிபு கூறுகின்றது.

(இ - ள்.) தன்மை சுட்டில் = முற்கூறிய ஒருவரென்னுஞ் சொல் முடியுந் தன்மையைக் கருதில்: பன்மைக்கு ஏற்கும்=தான் காட்டுகின்ற பொருண்மைக்கு ஏற்ப ஒருமைச்சொல்லோடு முடியாது ரகர ஈறாதாய் நின்ற சொற்றன்மைக்கு ஏற்பப் பன்மைச் சொற் பெற்று முடியும். எ-று.

உ-ம். ஒருவர்வந்தார் ஒருவரவர், இது பால்பற்றிய மரபுவழுவமைதி. (௩அ)

கக௫. இன்ன பெயரே யிவையெனல் வேண்டின்
முன்னஞ் சேர்த்தி முறையி னுணர்தல்.

இது நீயிர் நீ ஒருவர் என்பனவற்றிற்கு ஓர் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) இன்ன பெயரே இவை எனல் வேண்டின் = நீயிர் நீ ஒருவர் என்பன இன்னபாற்பெயரென்று அறியலுறின்: முன்னஞ் சேர்த்தி முறையின் உணர்தல்=இடமுங் காலமும் பற்றிச் சொல்லுவான் குறிப்போடு கூட்டி மேல் ஓதின முறையானே திணையும் பாலும உணர்க. எ-று.

உ-ம். விலங்கு வாராததோர் இடத்திருந்து நீயிர்வந்தீர் நீவந்தாய் எனஞல் உயர்திணையெனவும் மக்கள் வாராததோர் இடத்திருந்து அங்ஙனங் கூறினல் அஃறிணையெனவும் உணரப்படும். "நீயுந் தவறிலைநின்னைப்புறங்கடை" என்றவழிப் பெண்பாலென்பதூஉம் "நீயேபிறர்நாடுகொள்ளுங்காலை" என்றவழி ஆண்பாலென்பதூஉம் "இன்றுனைப்பிரிந்தாரையுடையையோநீ" என்றவழி அஃறிணையென்பதூஉம் உணரப்படும். "ஒருவரொருவரைச்சார்ந்தொழுகலாற்றின்" என்றவழிச் சொல்லுவாஞேடு கேட்டான் ஆடூஉ ஒருமைகுறித்தானென்பது விளங்கும். (௩௯)

கக௬. மகடூஉ மருங்கிற் பாறிரி கிளவி
மகடூ வியற்கை தொழில்வயி னான.

இஃது உயர்திணையொழிபு கூறுகின்றது.

(இ - ள்.) மகடூஉ மருங்கிற் பால் திரி கிளவி = மகடூஉப்பொருண்மைக்கட் பால் திரிந்து வரும் பெண்மகனென்னும்பெயர்: தொழில்வயினான மகடூஉ இயற்கை=தொழில்கொள்ளுமிடத்து மகடூஉவிற்கு உரிய தொழில்கொள்ளும். எ-று.

உ-ம். பெண்மகன்வந்தாள் என வரும். பொருள்பற்றி முடிபு கூறிற்று. (சு0)

கக௭. ஆவோ வாகும் பெயருமா ருளவே
யாயிட னறிதல் செய்யு ளுள்ளே.

இது பெயரீறு செய்யுளுட் திரியுமென்கின்றது.

(இ - ள்.) ஆ ஓவாகும் பெயருமாருள = ஆகாரம் ஓகாரமாய்த் திரியும் பெயரும் உள: ஆயிடன் அறிதல் செய்யுளுள்ளே = அத்திரியும் இடம் அறிக செய்யுளுள். எ-று.

உ-ம். "வில்லோன்காலனகழலே" "தொடியோண்மெல்லடிமேலவுஞ்சிலம்பே" "நல்லோர்யார்கொலளியர்தாமே" "கழனிநல்லூரமகிழ்நர்க்கென்னிழைநெகிழப்பருவரல்செப்பாதோயே" எனவரும்.

அழாஅன் கிழாஅன் என்னும் அளபெடைப்பெயர் அளபெடுத்தால் ஆ ஓவாகா. (சுக)

கக௮. இறைச்சிப் பொருள்வயிற் செய்யுளுட் கிளக்கு
மியற்பெயர்க் கிளவி யுயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கிற் றோன்ற லான.

இது விரவுப்பெயர் செய்யுளுள் வரும் முறைமை கூறுகின்றது.

(இ - ள்.) செய்யுளுள் இறைச்சிப் பொருள்வயின் கிளக்கும் இயற்பெயர்க்கிளவி = செய்யுளுட் கருப்பொருள் கூறும்வழிக் கிளக்கப்படும் இருதிணைக்கும் உரிய பெயர்: நிலத்துவழி மருங்கிற் தோன்றலான = நால்வகை ஒழுக்கங்களின் இடமாகிய இடத்தே அவற்றிற்கு உறுப்பாய்த் தோன்றலின்: உயர்திணை சுட்டா = உயர்திணையை உணர்த்தாது அஃறிணையை உணர்த்தும். எ-று.

உ-ம். "கடுவன்முதுமகன் கல்லாமூலற்கு - வதுவைவந்த வன்பறழ்க்குமரி" என்புழிக் கடுவன் மூலன் என்பன உயர்திணையாண்பால் உணர்த்தும் அன்னீற்றுப்பெயர் அஃறிணையாண்பாலையும் உணர்த்தி நிற்றலின் விரவுப்பெயராயினும், ஈண்டுப் பொருட்கு உபகாரப்படும் இறைச்சிப்பொருளாய் நிற்றலின் அஃறிணைப்பெயராம். குமரியென்பதூஉம் விரவுப்பெயர். (சுஉ)

கக௯. திணையொடு பழகிய பெயரலங் கடையே.

இஃது எய்தியது விலக்கிற்று.

(இ - ள்.) திணையொடு பழகிய பெயரல்லங்கடையே=கருப்பொருளுணர்த்தும் விரவுப்பெயர் உயர்திணைசுட்டாது அஃறிணைசுட்டிவருது திணைதோறும் உரிமைபூண்டு வழங்கப்பட்டுவரும் பெயரல்லாத இடத்து. எ-று.

எனவே திணைதோறும் உரிமைபூண்டு வழங்கப்பட்டுவரும் பெயர் உயர்திணையுஞ் சுட்டிவருமென்பதாம்.

உ-ம். "அவளுஞ் - செருமிகுமொய்ம்பிற்கூர்வேற்காளையொடு-திருந்துவேல்விடலைவருமெனத்தாயே" எனவரும். ஓரெருத்தையுங் காளை விடலை எனப்படுதலின் விரவுப்பெயராயிற்று. (சங)

பெயரியல் முற்றும்.

---

ஆறுவது

## வினையியல்.

உ00. வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்.

என்பதுசூத்திரம். இது நிறுத்தமுறையானே வினையிலக்கணம் உணர்த்தினமையின் இவ்வோத்து வினையியலெனக் காரணப்பெயர் பெற்றது. இச்சூத்திரம் வினைச்சொற்கெல்லாம் பொது இலக்கணம் உணர்த்துகின்றது.

(இ - ள்.) வினையெனப்படுவது வேற்றுமை கொளளாது = வினைச்சொல்லென்று சொல்லப்படுவது வேற்றுமையோடு பொருந்தாது: நினையுங்காலைக் காலமொடு தோன்றும்=ஆராயுங்காற் காலத்தோடு புலப்படும். எ-று.

வினையென்றது முதனிலையை. இஃது ஆகுபெயராய்த் தன்னிற் பிறக்கின்ற சொல்லையுணர்த்திற்று.

உண் தின் கரு செய் என்பன வினை; உண்டல் தின்றல் கருமை செம்மை என்பன அம்முதனிலையாற் பிறந்த வினைப்பெயர்; உண்டான் தின்றான் கரியன் செய்யன் என்பன அம்முதனிலையாற் பிறந்த வினைச்சொல். இங்ஙனம் வினையாற் பிறத்தலின் வினையியலென்றார். (க)

உ0௧. **கா**லந் தாமே மூன்றென மொழிப.

இது முற்கூறியகாலம் இனைத்தென்கின்றது.

(இ - ள்.) காலந் தாமே மூன்று என மொழிப=மேற் தோற்று வாய் செய்யப்பட்ட காலந்தாம் மூன்று என்று கூறுவர் புலவர். எ-று.

உ0உ. இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றா
வம்மூக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளு
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே.

இஃது அக்காலத்திற்குப் பெயரும் முறையுந் தொகையுங் கூறி அதுதான் குறிப்பிற்கும் உண்டென்கின்றது.

(இ - ள்.) இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா அம்மூக்கால மும்=இறப்பும் நிகழ்வும் எதிர்வுமென்று சொல்லப்படும் அம்மூன்று காலமும்: குறிப்பொடுங் கொள்ளும் மெய்ந்நிலை உடைய=வினைக்குறிப் போடும் பொருந்தும் உண்மைநிலைமையையுடைய: தோன்றலாறே= வினைச்சொல்லான் அக்காலங்கள் தோன்றும் நெறிக்கண். எ-று.

உ-ம். உண்டான் உண்ணாநின்றான் உண்பான் எனக் காலம் மூன்றுந் தோன்றிநின்றவாறு காண்க. கரியன் செய்யன் என்பன வினைக்குறிப்பு.

இறப்பாவது தொழிலது கழிவு; நிகழ்வாவது தொழில் தொடங்கி முற்றுப்பெறாமல் நடக்கின்ற நிலைமை; எதிர்வாவது தொழில் பிறவாமை.

தொழிலாவது பொருளினது புடைபெயர்ச்சி. இஃது இரண்டு கணங் காலத்தின்கண் நில்லாமையின் நிகழ்ச்சியென்பதொன்று இன்றாயினும் உண்ணாநின்றானெனப் பஃறொழிற்பகுதிபற்றி நிகழ்ச்சியும் உடைத்தாயிற்று. இதனானே நிகழ்காலம் இன்றென்பாரும் நிகழ்காலம் ஒன்றுமே உண்டென்பாருமெனப் பலபகுதியர் ஆசிரியரென்பது கொள்க. (௩)

உ0௩. குறிப்பினும் வினையினு நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் லெல்லா
முயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு

மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே.

இது வினைச்சொற்களது பாகுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக் காலமொடு வரூஉம் வினைச்சொல்லெல்லாம் = குறிப்புப்பொருண்மைக்கண்ணுந் தொழிற்பொருண்மைக்கண்ணும் முறைமைப்படத் தோன்றிக் காலத்தோடு வரும் எல்லாவினைச்சொல்லும்: உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும் ஆயிரு திணைக்குமோர் அன்ன உரிமையும் = உயர்திணைக்கு உரிமையுடைமையும் அஃறிணைக்கு உரிமையுடைமையும் அவ்விரண்டு திணைக்கும் ஒப்ப உரிமையுடைமையுமென: அம் மூ உருபின தோன்றலாறே = அம்மூன்று கூற்றினையுடையவாந் தோன்றுநெறிக்கண். எ-று.

உ-ம். உண்டான் கரியன் சென்றது செய்யது வந்தனை வெளியை எனவரும். காலமொடுவருமென்ப் பின்னுங் கூறினார், குறிப்பிற்குங் காலம் உண்டென்பது வலியுறுத்தற்கு.

இம்முக்காலத்தும் வருதற்கு உரிய காலங்காட்டும் எழுத்துக்களை ஆசிரியர் எடுத்து ஓதாராயினார் பின்னுள்ளோர் காலங்கட்கு உரியவாக எடுத்து ஓதிய எழுத்துக்கள் தம்முள் மயங்கியும் வருதலின். ஆசிரியர் அங்ஙனம் மயங்குதல்பற்றி எடுத்து ஓதாமையின் உரையாசிரியரும் அவ்வெழுத்துக்களைச் சிறிதே காட்டினார்.

இனிப் பின்னுள்ளோர் கூறினாரென்பதுபற்றியும் மாணாக்கர்க்கு உய்த்துணரும் உணர்வு இன்றென்பதுபற்றியும் யாமும் அவ்வெழுத்துக்களைப் பிரித்துக்காட்டுதும். சேனாவரையர் அவ்வாறு பிரித்துக் காட்டுகின்றவர் நெறிப்படத் தோன்றி என்பதனாற் காட்டுவர். அது பொருந்தாது, ஆசிரியர் எடுத்தோதாமல் மயங்குமென்று போதலின். இதனைச் "செய்யுண் மருங்கினும்" என்னும் அதிகாரப் புறனடையிற் "பிரித்தனர்காட்டல்" என்பதனாற் பிரித்துக்காட்டுதும். அதுமேற் கண்டுகொள்க. (ச)

உ0ச. அவைதாம்,
அம்மா மெம்மே மென்னுங் கிளவியு
மும்மொடு வரூஉங் கடதற வென்னு

மங்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே.

இது முறையானே உயர்திணை முற்றுவினை கூறுகின்றது.

(இ - ள்.) அவைதாம்=மேற் பகுக்கப்பட்ட வினையின் முப்பாற் பாகுபாடுமாகிய அவைதாம் ஆகுமாறு இனிச்சொல்லுவல்: அம் ஆம் எம் ஏம் என்னுங் கிளவியும்=அம் ஆம் எம் ஏம் என்னும் ஈற்ற வாகிய சொல்லும்: உம்மொடு வரூஉங் க ட த ற என்னும் அங்நாற் கிளவியொடு=உம்மென்னும் இறுதியிடைச்சொல்லின் உகரங் க ட த ற என்னும் ஒற்றின்மேல் ஏறிய கும்மும் டும்முந் தும்மும் றும் மும் என்னும் ஈற்றவாகிய அங்நான்கு சொல்லும்: ஆயெண் கிளவி யும்=ஆகிய அவ் எட்டுச்சொல்லும்: பன்மை உரைக்குந் தன்மைச் சொல்லே=சொல்லுவான் தன்னொடு பிறரையுங் கூட்டிப் பன்மை வினைச் சொல்லுந் தன்மைக்கு உரிய சொல்லாம். எ-று.

இச்சூத்திரம் முதலாக "முன்னிலைவியங்கோள்" ஈருக முற்று உணர்த்துகின்ருர், வினையெச்சமும் பெயரெச்சமும் ஒழித்து இச் சூத்திரத்தாற் பன்மைத்தன்மையும் மேலைச்சூத்திரத்தான் ஒருமைத் தன்மையும் உணர்த்துகின்ருர்.

முன்னர் நின்ற நான்கும் இறந்தகாலம்பற்றி வருங்கால் அம் ஆம் என்பன தன்னொடுமுன்னின்ருரையுந் தமராயவழிப் படர்க்கை யாரையும் உளப்படுத்திக், க ட த ற என்னுங் கால எழுத்தின்முன் அம் அன்பெற்றும் ஆம் அன்பெருதும் வரும்; எம் ஏம் என்பன படர்க்கையாரை உளப்படுத்தி அக்கால எழுத்தின்முன்னர் எம் அன்பெற்றும் ஏம் அன்பெற்றும் பெருதும் வரும்.

உ-ம். நக்கனம் உண்டனம் உரைத்தனம் தின்றனம் நக்கிலம் உண்டிலம் உரைத்திலம் தின்றிலம் நக்கனமல்லம் உண்டனமல்லம் உரைத்தனமல்லம் தின்றனமல்லம் எனவும், நக்காம் உண்டாம் உரைத்தாம் தின்ரும் நக்கிலாம் உண்டிலாம் உரைத்திலாம் தின்றி லாம் நக்காமல்லாம் உண்டாமல்லாம் உரைத்தாமல்லாம் தின்ருமல் லாம் எனவும், நக்கனெம் உண்டனெம் உரைத்தனெம் தின்றனெம் நக்கிலெம் உண்டிலெம் உரைத்திலெம் தின்றிலெம் நக்கனெமல்லெம் உண்டனெமல்லெம் உரைத்தனெமல்லெம் தின்றனெமல்லெம் என வும், நக்கனேம் நக்கேம் உண்டனேம் உண்டேம் உரைத்தனேம் உரைத்தேம் தின்றனேம் தின்றேம் நக்கிலேம் உண்டிலேம் உரைத்

திலேம் தின்றிலேம் நக்கேமல்லேம் உண்டேமல்லேம் உரைத்தேமல்லேம் தின்றேமல்லேம் எனவும் வரும்.

இனி அம் ஆம் என்பனவற்றிற்கு நீயும்யானுமுண்டனம் நீயும் யானுமுண்டாம் நீயும்யானுமவனுமுண்டனம் நீயும்யானுமவனுமுண்டாம் எனவரும். ஏனையவற்றோடும் ஒட்டுக. எம் ஏம் என்பனவற்றிற்கு யானுமவனுமுண்டனெம் யானுமவனுமுண்டனேம் யானுமவனுமுண்டேம் எனவரும். ஏனையவற்றோடும் ஒட்டுக.

அந்நான்கு ஈறும் ஏனையெழுத்தின்முன் ஙகாரமும் ழகாரமும் ஒழித்து இன்பெற்று வரும். அஞ்சினம் தப்பினம் எனவும், உரிஞினம் எண்ணினம் பொருநினம் திருமினம் பன்னினம் எனவும் போயினம் வாரினம் சொல்லினம் மேவினம் எள்ளினம் எனவும் வரும். ஒழிந்த மூவீற்றோடும் ஒட்டுக. கலக்கினம் தெருட்டினம் அருத்தினம் அரற்றினம் என்பன ககர ஈறும் டகர ஈறும் தகர ஈறும் றகர ஈறும் முதனிலைச்சொல்லாய்நின்று இன்பெற்றன.

இனி இவை நிகழ்காலம்பற்றி வருங்கால் நில் கின்று என்பனவற்றோடு வந்து முற்கூறியவாறே நிற்கும். நில்லென்பது லகரம் னகரமாய்த் தனக்கேற்ற றகரம்பெற்று நிற்கும். இனி நின் கின்னென்ன நிற்குமென்றுமாம். உண்ணாநின்றனம் உண்கின்றனம் உண்ணாநின்றிலம் உண்கின்றிலம் எனவும், உண்ணாநின்றாம் உண்கின்றாம் உண்ணாநின்றிலாம் உண்கின்றிலாம் என்வும், உண்ணாநின்றனெம் உண்கின்றனெம் உண்ணாநின்றிலெம் உண்கின்றிலெம் எனவும், உண்ணாநின்றனேம் உண்கின்றனேம் உண்ணாநின்றேம் உண்கின்றேம் உண்ணாநின்றிலேம் உண்கின்றிலேம் எனவும் வரும்.

உண்ணாகிடந்தான் உண்ணாவிருந்தான் எனக் கிட இருவென்பனவும் நிகழ்காலத்து வரும்.

உண்கிறேனெனக் கிறு என்பது நிகழ்காலம் உணர்த்துதல் இக்காலவழக்கு.

இனி இவை எதிர்காலம்பற்றி வருங்காற் பகரமும் வகரமும் பெற்று வரும். வகரம் ஏற்புழிக் குகரமும் உகரமும் அடுத்தும் நிற்கும். உண்பம் உண்குவம் உரிஞுவம் திருமுவம் உண்ணலம் எனவும், உண்பாம் உண்குவாம் உண்ணும் எனவும், உண்பேம் உண்குவேம் உண்ணலேம் எனவும், உண்பேம் உண்குவேம் உண்ணேம் எனவும் வரும்.

இனி அம் ஈறு வருங்கால் "அந்தணாளனைநகுகம்யாமே" எனவும், "பாடுகம்வம்மின்போதுகம்" எனவும், "பாடுகம்வாவாழிதோழி" எனவுங் ககரம் எதிர்காலமும் உணர்த்திவரும். கூறுவன் சொல்லுவன் போதுவன் எனவரும் வகரமும் எதிர்காலம் உணர்த்தும்.

இனி உம்மொடு வரூஉங் க ட த ற, உண்கும் உண்டும் வருதும் சேறும் எனவரும். யானுய்ந்நீயுமுண்கும் யானுமவனுநீயுமுண்கும் என எல்லாவற்றோடுமொட்டுக.

இக் க ட த றக்கள் முதனிலையை அடுத்துவருங்கால் இறப்பும் ஈற்றினை அடுத்துவருங்கால் எதிர்வும் உணர்த்தும். இனி இவற்றுட் சிறுபான்மை நிகழ்காலம் உணர்த்துவனவும் உள. அது "சிறுகண் யானையொடுபெருந்தேரெய்தியாமவணின்றும்வருதும்" என வரும். இனி உரிஞுதும் திருமுதும் என ஏனையெழுத்தின்முன் உகரம் பெற்று வரும். (ரு)

உ0ரு. கடதற வென்னு
மந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ
டென்னே னல்லென வரூஉ மேழுந்
தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே.

இது தனித்தன்மையாகிய முற்றுக் கூறுகின்றது.

(இ - ள்.) க ட த ற என்னும் அந்நான்கு ஊர்ந்த குன்றியலுகரமொடு = க ட த ற என்னும் அந்நான்கு மெய்யையும் ஊர்ந்து வந்த குற்றியலுகரத்தினை ஈறாகவுடைய அந்நான்கு சொல்லும்: என் ஏன் அல் என வரூஉம் ஏழும் = என் ஏன் அல் என்று சொல்லவருகின்ற மூன்று ஈற்றுச்சொல்லுமாகிய அவ்வேழுந்: தன்வினை உரைக்குந் தன்மைச்சொல்லே = பிறரை உளப்படுத்தாது தன்வினையை உணர்த்துந் தன்மைச் சொல்லாம். எ-று.

குற்றுகரம் நான்கும் பெரும்பான்மையும் எதிர்காலத்துஞ் சிறுபான்மை ஏனைக்காலத்தும் வரும்.

உ-ம். உண்கு உண்டு வருது சேறு உரிஞுகு திருமுகு என உம்மீறுபோல் எதிர்காலங்காட்டின. "கழிந்ததுபொழிந்தெனவான்கணமாறினுந் - தொல்லதுவிளைந்தெனநிலம்வளங்காப்பினும்" என்புழிப் பொழிந்தெனவும் விளைந்தெனவும் இறந்தகாலம் உணர்த்தின.

நிகழ்காலம் வந்துழிக் காண்க. "அழாற்கோவினிநோநொந்திறைவி" என்னுங் குறுந்தொகைப்பாட்டினுள் அழுதென்னும் உடம்பாட்டிற்கு அழாற்கென எதிர்மறைவந்தது.

இனி ஓசைவேற்றுமையாற் ககர உகரமும் றகர உகரமும் வியங்கோண்முற்றாயும் நிற்கும். "நெடுந்தேர்தாங்குமதிவலவவென்றினிதிழிந்தனன்" "தாங்குநின்னவலமென்றீர" எனவும், "நீகூறும் பொய்ச்சூளணங்காயின்மற்றிது-யார்மேல்விளியுமோகூறு" எனவும், வரும். என் ஏன் என்பன மூன்றுகாலமும்பற்றி வரும். இவை கால எழுத்துப் பெறுங்கால் என் ஈறு எம் ஈற்றோடும் ஏன் ஈறு ஏம் ஈறோடும் ஒக்கும். உண்டனென் உண்டிலென் உண்டனனல்லென் உண்ணாநின்றனென் உண்கின்றனென் உண்ணாநின்றிலென் உண்கின்றிலென் உண்பென் உண்குவென் உண்ணலென் எனவும், உண்டனேன் உண்டேன் உண்டிலேன் உண்டனேனல்லேன் உண்ணாநின்றனேன் உண்ணாநின்றேன் உண்கின்றனேன் உண்கின்றேன் உண்ணாநின்றிலேன் உண்கின்றிலேன் உண்பேன் உண்குவேன் உண்ணேன எனவும் வரும்.

இனிப் பகர வகரங்கள் நிகழ்காலத்தும் வரும். "கூடநீர்நின்ற பெற்றிகண்டிப்பாணனுக்குவேறகு" என்புழிப் பார்க்கின்றேற்கு எனப் பொருள் தந்தவாறு காண்க. பகரம் வந்துழிக்காண்க.

அல் ஈறு பகர வகரம் பெற்று எதிர்காலத்து வரும். உண்பல் வருவல் எனவரும். உண்ணாநிற்பலெனச் சிறுபான்மை நிகழ்கால மும்பெறும். ஒழிவல் தவிர்வல் எனவரும் மறைவாய்பாடும் அறிக.

வினைகொண்டு முடியுஞ் செய்கு என்பதனை உம் ஈற்றோடு இயையவைத்தமையாற் செய்குமென்பதூஉங் காண்குவந்தேமென வினைகொண்டுமுடியும். (சா)

உ0சா. அவற்றுள்,

செய்கென் கிளவி வினையொடு முடியினு
மவ்விய றிரியா தென்மனார் புலவர்.

இஃது அவற்றுட் ககர உகர ஈற்றிற்கு முடிபு வேற்றுமை கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் = முற்கூறிய ஒருமைத்தன்மைவினை ஏழனுள்: செய்கென்கிளவி வினையொடு முடியினும் = செய்கென்னும்

முற்றுச்சொற் பெயரோடு முடியாது வினையோடு முடியினும்: அவ்வியல் திரியாது என்மனார் புலவர்=அம்முற்றுச்சொல்லாந் தன்மையிற் திரியாதென்று கூறுவர் புலவர். எ-று.

உ-ம். "காண்குவந்திசிற்பெரும" எனவரும். "நோகோயானே" எனப் பெயர் கோடல் சிறுபான்மையாம். (எ)

௨0எ. அன்னா னள்ளா ளென்னு நான்கு
மொருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

இது படர்க்கையொருமை முற்று உணர்த்துகின்றது.

(இ-ள்.) அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்=அன் ஆன் அள் ஆள் என்னும் ஈற்றையுடைய நான்கு சொல்லும் ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே=ஒருவன் ஒருத்தியென்னும் உயர்திணையொருமைப்பாலிடத்துப் படர்க்கையை உணர்த்துஞ் சொல்லாம். எ-று

இந்நான்கு ஈறும் மூன்றுகாலமும்பற்றி வருங்கால் அன்னும் அள்ளும் அம்மீற்றோடும் ஆனும் ஆளும் ஆமீற்றோடும் ஒக்கும்.

உ-ம். உண்டனன் உண்டிலன் உண்ணாநின்றனன் உண்கின்றனன் உண்ணாநின்றிலன் உண்கின்றிலன் உண்பன் உண்குவன் உண்ணலன் எனவும், உண்டான் உண்டிலான் உண்ணாநின்றான் உண்கின்றான் உண்ணாநின்றிலான் உண்கின்றிலான் உண்பான் உண்குவான் உண்ணான் எனவும், உண்டனள் உண்டிலள் உண்ணாநின்றனள் உண்கின்றனள் உண்ணாநின்றிலள் உண்கின்றிலள் உண்பள் உண்குவள் உண்ணலள் எனவும், உண்டாள் உண்டிலாள் உண்ணாநின்றாள் உண்கின்றாள் உண்ணாநின்றிலாள் உண்கின்றிலாள் உண்பாள் உண்குவாள் உண்ணாள் எனவும் வரும். உண்டனனல்லன் உண்டானல்லன் உண்டனனல்லள் உண்டானல்லள் எனப்பிறவாய்பாட்டான் வரும் மறையும் அறிக. (அ)

௨0அ. அர் ஆர் ப என வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

இது படர்க்கைப்பன்மைமுற்று உணர்த்துகின்றது.

(இ-ள்.) அர் ஆர் ப என வரூஉம் மூன்றும் = அர் ஆர் ப என்னும் ஈற்றெழுத்தினையுடையவாய் வரும் மூன்றுசொல்லும்: பல்

லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே = பல்லோரிடத்துப் படர்க்கைப்பன்மையை உணர்த்துஞ் சொல்லாம். எ-று.

அர் ஆர் என்னும் இரண்டும் மூன்றுகாலமும் பற்றி வரும். இவை கால எழுத்துப் பெறுங்கால் அன் ஈற்றொடு அா ஈறும் ஆன் றொடு ஆர் ஈறும் ஒக்கும்.

உ-ம். உண்டனர் உண்டிலர் உண்ணாநின்றனர் உண்கின்றனர் உண்ணாநின்றிலர் உண்கின்றிலர் உண்பர் உண்குவர் உண்ணலர் எனவும், உண்டார் உண்டிலார் உண்ணாநின்றார் உண்கின்றார் உண்ணாநின்றிலார் உண்கின்றிலார் உண்பார் உண்குவார் உண்ணார் எனவும் வரும். உண்டனரல்லர் உண்டாரல்லர் எனவரும் மறைவிகற்பமும் அறிக.

பகரம் எதிர்காலம்பற்றி வருங்கால் உகரமுங் குகரமும் அடுத்தும் அடாதும் நிற்கும். உரிஞுப வருகுப எனவும் உண்ப எனவும் வரும். ஒழிப தவிர்ப என மறையும வரும். உண்ணுதொழிப என்பது எல்லாவற்றிற்கும்பொது. இஃது உண்ணாநிற்பவென நிகழ்காலத்தும் வரும். (௯)

உ0௯. மாரைக் கிளவியும பலலோா படாக்கை
காலக் கிளவியொடு முடியு மென்ப.

இதுவும் டன்மைக்கு உரிய ஈறும் அதன முடிபுவேற்றுமையுங் கூறுகின்றது.

(இ - ள்.) மாரைக் கிளவியும் பல்லோா படர்க்கை = முன்னையனவேயன்றி மார் ஈற்றுச் சொல்லும் பல்லோரை உணர்த்தும் படர்க்கைச்சொல்லாம: காலக் கிளவியொடு முடியும் என்ப = அஃது அவைபோலப் பெயர்கொள்ளாது வினைகொண்டு முடியும். எ-று.

மார் உகரம் அடுத்தும் அடாதும் நிறகும்.

உ-ம். "எள்ளுமார்வந்தாரேயீங்கு." "ஆர்த்தார்கொண்மார்வந்தார்" எனவரும். இஃது எதிர்காலம். "நிலவன்மாரேபுலவர்" "பாடின்மனனரைப்பாடன்மாரெமரே." "நோய்மலிவருத்தங்காணனமாரெமரே." என்பன நிலவுக பாடுக காண்க என்னும் வியங்கோட்கு எதிர்மறையென்று உணர்க. இனி நிலவுவார் பாடுவார் காண்பார் என்பன சில வியங்கோண்முற்றென்று கூறி அதற்கு எதி

மறையாய் நிலவாதொழிவார் பாடாதொழிவார் காணுதொழிவார் என ஏவற்பொருண்மையை உணர்த்திநின்றன என்றலும் ஒன்று. (கo)

உகo. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வந்நா லைந்து மூன்றுதலை யிட்ட
முன்னுறக் கிளந்த வுயர்திணை யவ்வே.

இது விரிந்தது தொகுத்துத் தெரிநிலைவினைகள் உயர்திணைக்கு உரிய என்கின்றது.

(இ - ள்.) பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த மூன்றுதலையிட்ட அந் நாலைந்தும் = பன்மையும் ஒருமையுமாகிய பால் அறிய வந்த இருபத்துமூன்று ஈற்று வினைச்சொல்லும்: முன்னுறக் கிளந்த உயர்திணைய = கிளவியாக்கத்துக் கூறப்பட்ட உயர்திணையை உடையனவாம். எ-று.

ஈண்டுக் கூறியதனாற் பயன் அன் ஆன் முதலிய இடைச்சொல் பற்றி உயர்திணைப்படர்க்கை வினைமுற்று உணர்த்துதல்; ஆண்டுக் கூறியதனாற் பயன் வழுக்காத்தற்கு அவற்றின் ஈறுகளைத் தொகுத்து இலக்கணவழக்கு உணர்த்துதல் என்றுணர்க. (கக)

உகக. அவற்றுள்,
பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி
யெண்ணியன் மருங்கிற் றிரிபவை யுளவே.

இஃது உளப்பாட்டுத் தன்மைக்குத் திரிபு கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள், பன்மை உரைக்குந் தன்மைக்கிளவி—முற்கூறப்பட்ட இருபத்துமூன்று சொற்களுட் பன்மையை உணர்த்துந் தன்மைச்சொல்: எண் இயல் மருங்கிற் திரிபவை உள = எண்ணுதல் நடக்கும் இடத்து அஃறிணையை உளப்படுத்தித் திரிவன உள. எ-று.

உ-ம். "யானுமென்னெஃகமுஞ்சாறும்" இஃது அஃறிணையை உளப்படுத்தல் "தன்மைச்சொல்" என்னுஞ் சூத்திரத்தான் வந்தது. ()

உகஉ. யாஅ ரென்னும் வினாவின் கிளவி
யத்திணை மருங்கின் முப்பாற்கு முரித்தே

இஃது உயர்திணை வினைக்குறிப்பினுள் ஒன்று கூறுகின்றது.

(இ - ள்.) யாஅர் என்னும் வினாவின் கிளவி அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே = யாரென்னும் வினாப்பொருளை உணர்த்துஞ் சொல் உயர்திணைமருங்கின் மூன்றுபாற்கும் உரித்து. எ-று.

உ-ம். அவன்யார் அவள்யார் அவர்யார்.

இது வினைக்குறிப்பாயினும் பல்லோர்படர்க்கையை உணர்த்தும் ஆர் ஈற்றான் மூன்று பாலையும் உணர்த்துதலின் அவற்றொடு வையாது ஈண்டு வைத்தார். உயர்திணைக்கு உரித்தெனவே அஃறிணைக்கு உரித்தன்றிச் சிறுபான்மை வருதல் கொள்க. அஃது "கோதைகூட்டுண்ணு முகுபனியாமத்தெங் - கோதைகூட்டுண்ணிய தான்யார்மன் - போதெலாந் - தாதொடுதாழுந்தார்க் கச்சிவளநாடன் - றாதொடுவாராதவண்டு" என உண்ணியவண்டுதான்யாரென அஃறிணைக்கண் வந்தது.

இது திணைவழுவமைதி என்றலும் ஒன்று. (கஙு)

உகடு. பாலறி மரபி னம்மூ வீற்று
மாவோ வாகுஞ் செய்யு ளுள்ளே.

இஃது அவ்விருபத்துமூன்று ஈற்றினுள் மூன்று செய்யுளுட் திரியுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) பால் அறி மரபின் அம்மூவீற்றும் = பால்விளங்க வரும் இயல்பையுடைய ஆன் ஆள் ஆர் என்னும் மூன்று ஈற்றின் கண்ணும்: ஆ ஓ ஆகுஞ் செய்யுளுள்ளே = ஆகாரம் ஓகாரமாஞ் செய்யுளிடத்து. எ-று.

உ-ம். "வினவிநிற்றந்தோனே" "நல்லைமன்னென நகூஉப்பெயர்ந்தோளே" "வாடாவள்ளியங் காடிறந்தோரே" எனவரும். வந்தோம் சென்றோம் என்னும் வழக்கு ஓம் ஈற்றின் சிதைவென மறுக்க. (கச)

உகச. ஆயென் கிளவியு மவற்றொடு கொள்ளும்.

இது விரவுவினையும் அம்முடிபுபெறும் என்கின்றது.

(இ - ள்.) ஆய் என் கிளவியும் அவற்றொடு கொள்ளும் = முன்னிலையீற்றுள் ஆயென்னும் ஈறு மேற்கூறப்பட்டனபோல ஆகாரம் ஓகாரமாஞ் செய்யுளுள். எ-று.

உ-ம். "வந்தோய்மன்றதெண்கடற்சேர்ப்ப" எனவரும்.

இவ்விரவுவினை உயர்திணைமேல் வந்தால் ஆ ஓவாமென்றற்கும் ஆ ஓவாதல் அதிகாரப்படுதலானும் ஈண்டுக்கூறினர். இவை தொழிற்பெயராயிற் பெயரியலுள் அடங்கும். (கரு)

உகரு. அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானுங்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானு
மொப்பி னானும் பண்பி னானுமென்
றப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும்.

இது நிறுத்தமுறையானே உயர்திணைவினைக்குறிப்பு உணர்த்துகின்றது.

(இ - ள்.) அதுச் சொல் வேற்றுமை உடைமையானும்= ஆறும் வேற்றுமையது உடைமைப்பொருட்கண்ணும்: கண் என் வேற்றுமை நிலத்தினானும்=ஏழாம்வேற்றுமையது நிலப்பொருண்மைக்கண்ணும்: ஒப்பினானும்=உவமத்தின்கண்ணும்: பண்பினானும்=பண்பின்கண்ணும்: என்று அப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும் = என அப்பொருட்பகுதிபற்றிவருஞ் சொல்லகத்துக் காலங் குறிப்பாற் தோன்றும். எ-று.

உடைமையென்பது உடைமைத்தன்மையும் உடைமைப்பொருளுமென இருவகைப்படும். உடைமைத்தன்மையாவது தன்செல்வத்தை நினைந்து இன்புறுதற்கு ஏதுவாகிய பற்றுள்ளம். அஃது "ஆங்கவையொருபாலாக" என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்து "உடைமையின்புறல்" என்பதனான் உணர்க. உடைமைப்பொருளாவது ஒன்றற்கு ஒன்றை உரிமைசெய்து நிற்பது. அஃது இப்பொருளினுடையது இப்பொருளென்றும் இப்பொருள் இப்பொருளினுடையதாயிருந்ததென்றும் இப்பொருளையுடையதாயிருந்தது இப்பொருளென்றும் மூன்றுவகைப்படும். அவை முறையே சாத்தனதாடையென ஆறனுருபாயும் ஆடைசாத்தனதெனவுங் குழையன்கச்சினனெனவும் வினைக்குறிப்பாயும் நிற்கும். உருபு உணர்த்தும்வழி ஆடைமுதலியன பின்னிற்குமாறுங் குறிப்புணர்த்தும்வழி ஆடைமுதலிய முன்னிற்குமாறும் உணர்க. குழையனென்புழி மேல் வந்து முடிக்கும் வினைமுதற்பெயரைத் தோற்றுவித்துநிற்கும் அன்னென்னும் பால்காட்டும் ஈறு நின்று உடைமைப்பொருளைத் தனக்கு உரிமைசெய்யும் உடைமையை விரித்துநிற்குமென்று உணர்க.

இனி இல்லத்தன் புறத்தன் எனவும் பொன்னன்னன் புலி போல்வான் எனவும் கரியன் செய்யன் எனவும் வரும். கரியனென்பது இவ்வண்ணமாய் இருப்பனென்னும் பொருள் உணர்த்தி முதனிலையாய் நிற்றலிற் பண்பாம். கருமையனென்பது பண்புப்பெயர் உடைமைப்பொருளாய்நின்று கருமையையுடையனென உருபேற்றுநிற்றலின் உடைமைப்பொருளாம். இவ்வாறன் உடைமைப்பொருட்கு இரண்டாவது விரியுமாறென்னையெனின், வனைந்தானென்னுந் தெரிநிலைமுற்றுச்சொற் செய்தானென்னுங் காரியத்தினைநிகழ்த்துங் காரணங்கள் எட்டினையும் உள்ளடக்கி வினைமுதலோடு அமைந்து மாறிநின்று அவாய்நிலை தோன்றியகாலத்துச் செயப்படுபொருள் முதலிய ஏழினையும் விரித்துநிற்குமாறுபோல உடையனென்னும் வினைக்குறிப்புமுற்றுச்சொல்லும் உடையனாயிருந்தானென விரிந்துழி உணரப்படுங் காரியத்தினை நிகழ்த்துங் காரணங்கள் எட்டினையும் உள்ளடக்கி வினைமுதலோடு அமைந்து மாறிநின்று அவாய்நிலை தோன்றியகாலத்துச் செயப்படுபொருள் முதலிய ஏழினையும் விரித்துநிற்குமாதலான் உடையனென்பதனுள் அடங்கிநின்ற செயப்படுபொருள் குழையையென உருபைவிரித்தல் அதற்கு இயல்பென்று உணர்க. இத்தெரிநிலையுங் குறிப்பும் இங்ஙனம் உருபைவிரித்துநிற்றலினன்றே ஆசிரியர் "ஐயெனப்பெயரிய வேற்றுமைக்கிளவி - யெவ்வழிவரினும்வினையேவினைக்குறிப் - பவ்விருமுதலிற்றோன்றுமதுவே." என்றது.

தெரிநிலைவினைத்தொழிற்பெயர் காலந்தோன்றிநின்றாற்போலக் கச்சினன் இல்லத்தான் என்றாற்போலுங் குறிப்புப்பெயருங் காலந் தோன்றிநிற்குமென்று உணர்க.

தன்னினமுடித்தலென்பதனால் ஐயாட்டையன் துணங்கையன் எனச் சிறுபான்மை காலமும் வினைசெய்யிடமும்பற்றி வருவனவுங் கொள்க.

ஒப்பினும் என்பதற்கு உதாரணமாகிய பொன்னன்னனென்பது ஒப்புமைக்குணப்பண்பாதலின் வினைக்குறிப்பிற்கும் குணப்பண்பிற்கும் உரியவாக மேற்கூறுகின்ற வன்மைமுதலியவற்றோடு வைக்கவெனின் இக்குணம் உவமைக்கும் உவமிக்கும் பொருட்கும் ஒப்பநிற்றலின் ஈண்டு வைத்தார், அவற்றின்வேறென்று கருதி. (கசு)

உகக அன்மையி னின்மையி னுண்மையின் வன்மையி
னன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளு
மென்ன கிளவியுங் குறிப்பே காலம்.

இதுவும் அது.

(இ - ள்.) அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின் = அன்மை இன்மை உண்மை வன்மை என்னும் பொருள் பற்றி வருவனவும்: அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும் என்ன கிளவியும் = அவைபோல்வன பிறவுமாய்க் குறிப்புப்பொருண்மையொடு பொருந்தும் எல்லாச்சொல்லும்: காலங் குறிப்பு = காலங் குறிப்பான் உணரப்படுஞ் சொல்லாம். எ-று.

பண்பாவது ஒருபொருள் தோன்றுங் காலத்து உடன்றோன்றி அது கெடுந்துணையும் நிற்பது. குறிப்பாவது பொருட்குப் பின்றோன்றிச் சிறிதுபொழுது நிகழ்வது. அன்மையாவது "எப்பொருளுமல்லனிறைவன்" என்றாற் பண்பை உணர்த்தியும் அவைதாம் இவனல்லனென்றாற் குறிப்பை உணர்த்தியும் நிற்கும். இதற்கு உடம்பாடு ஆவன் என்பதாம். இனி உண்மைக்கு இன்மை மறையென்றுணர்க. உண்மைதான் மூவகைய, அவை ஆவுண்டென உண்மையை உணர்த்தியும் "எவ்வுயிர்க்கண்ணும் இறைவனுளன்" எனப் பண்பை உணர்த்தியும் "ஆற்றருந்துப்பின்மாற்றோர்பாசறையுளன்" எனக் குறிப்பை உணர்த்தியும் நிற்கும். இன்மையாவது "பொய்யாநெஞ்சிற்புனிதனிலன்" எனப் பண்பை உணர்த்தியும் மாற்றோர் பாசறையிலன் எனக் குறிப்பை உணர்த்தியும் நிற்கும். இவ்வின்மைதான் குழையிலன் கச்சிலன் என உடைமைக்கு மறையாயும் நிற்கும். இவற்றிற்குப் பொருள் உரைக்குங்காற் குழையையுடையனல்லனென ஆன்மைவருமாறும் உணர்க. வன்மையென்றது வலியும் ஒன்றனை வல்லுதலுமாம். அது மெய்வலியனெனப் பண்பை உணர்த்தியுஞ் சொல்வல்லனெனக் குறிப்பை உணர்த்தியும் நிற்கும். இதற்கு மறை வல்லனல்லனெனபதாம். அல்லள் அல்லர் இல்லள் இல்லர் உளள் உளர் வல்லள் வல்லர் என ஒட்டுக. இவ்வன்மைமுதலிய நான்கினது பண்பையுங் குறிப்பையும் ஈண்டுங் கொள்க.

அன்னபிறவும் என்றதனால் நல்லன் நல்லள் நல்லர் தீயன் தீயள் தீயர் உடையன் உடையள் உடையர் என்னுந் தொடக்கத்தனவுங்கொள்க.

இவ்விரண்டு சூத்திரத்தாற் கூறியவற்றை அம் ஆம் என்பன முதலியவற்றுள் ஏற்பனவற்றோடு படுத்து ஒட்டிக்கொள்ளுமாறு மேற்கூறுப. (கஎ)

உகஎ. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வன்ன மரபிற் குறிப்பொடு வருஉங்
காலக் கிளவி யுயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

இது முற்கூறிய வினைக்குறிப்பிற்கு ஈறுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த = பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறியவந்த: அன்ன மரபிற் குறிப்பொடு வருஉங் காலக் கிளவி = அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய காலங்குறித்துக்கோடலோடு வரும் வினைச்சொற்கள்: உயர்திணை மருங்கின் மேலைக் கிளவியொடு வேறுபாடு இல = உயர்திணையிடத்து மேற்கூறிய தெரிநிலைவினையின் ஈறுகளோடு ஈறு வேறுபாடின்றித் தமக்கு ஏற்பனவற்றைக் கொள்ளும். எ-று.

அவை அம் ஆம் எம் ஏம் என் ஏன் என்னுந் தன்மையீறு ஆறும் அன் ஆன் அள் ஆள் அர் ஆர் என்னும் படர்க்கையீறு ஆறுமாம். கரியம் கரியாம் கரியெம் கரியேம் கரியென் கரியேன் எனவும், கரியன் கரியான் கரியள் கரியாள் கரியர் கரியார் எனவும் வரும். உடையம் நிலத்தம் பொன்னன்னம் அல்லம் என ஒழிந்தவற்றோடும், ஒட்டுக. (கஅ)

உகஅ. அ ஆ வ என வருஉ மிறுதி
யப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை.

இது முறையானே அஃறிணைத் தெரிநிலைவினை கூறுகின்றது.

(இ - ள்.) அ ஆ வ என வருஉம் இறுதி அப்பால் மூன்றே = அகரமும் ஆகாரமும் வகர உயிர்மெய்யுமாகிய ஈற்றையுடைய அக்கூற்று மூன்று சொல்லும்: பலவற்றுப் படர்க்கை = அஃறிணைப் பன்மைப் படர்க்கைவினையாம். எ-று.

அகரம் இறந்தகாலம்பற்றி வருங்காற் க ட த ற என்னும் அந் நான்கின்முன் அன்பெற்றும் பெறாதும் ஏனையெழுத்தின்முன் நகார

ழகாரம் ஒழித்து இன்பெற்றும் யகரத்தின்முன் சிறுபான்மை இன்னேயன்றி அன்பெற்றும் பெருதும் வரும்.

உ-ம். தொக்கன தொக்க தொக்கில உண்டன உண்ட உண்டில வந்தன வந்த வந்தில சென்றன சென்ற சென்றில எனவும், அஞ்சின தப்பின எனவும் உரிஞின நண்ணின பொருநின செருமின துன்னின எனவும், போயின சேரின சொல்லின மேவின துள்ளின எனவும் போயன போய எனவும் வரும்.

இனி அகரம் நிகழ்காலம்பற்றி வருங்கால் நில் கின்று என்பனவற்ருேடு அன்பெற்றும் பெருதும் வரும். உண்ணாநின்றன உண்ணாநின்ற உண்ணாநின்றில உண்கின்றன உண்கின்ற உண்கின்றில எனவரும்.

இனி அகரம் எதிர்காலம்பற்றி வருங்காற் பகர வகரத்தோடு அன்பெற்றும் பெருதும் வரும். உண்பன உண்ப உண்ணல வருவன வருவ எனவரும். உரிஞுவன உரிஞுவ என உகரம்பெற்று ஏனே எழுத்தின்கண் வருதலும் ஏற்புழிக்கொள்க.

இனி ஆகாரங் கால எழுத்துப்பெருது எதிர்காலத்துப் பயின்று மறையாய் வரும். உண்ணு தின்னு எனவரும்.

இனி வகரம் எதிர்காலத்திற்கு உரித்தாய்க் குகரம் பெற்றும் பெருதும் ஏற்றவழி உகரம் பெற்றும் வரும். உண்குவ தின்குவ உண்ணல எனவும், ஓடுவ தாவுவ எனவும், உரிஞுவ செருமுவ எனவும் வரும். உண்டனவல்ல உண்டனவில்லை எனப் பிறவாய்பாட்டு மறையும் அறிக. (கசு)

உகக. ஒன்றன் படர்க்கை த ற ட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

இஃது ஒருமை வினை கூறுகின்றது.

(இ - ள்.) ஒன்றன்படர்க்கை = ஒன்றனையுணர்த்தும் படர்க்கை வினையாவது: த ற ட ஊர்ந்த குன்றியலுகரத்து இறுதி ஆகும் = த ற ட என்னும் ஒற்றுக்களை ஊர்ந்துநின்ற குற்றியலுகரத்தினை ஈருகவுடைய சொல்லாம். எ-று.

தகர உகரம் இறந்தகாலத்துவருங்காற் க ட த றக்கள் அகரம் பெற்றும் ஏனையெழுத்தின்முன் இகரமும் யகர உயிர்மெய்யும் பெற்றும் யகர உயிர்மெய்யே பெற்றும் வரும்.

உ-ம். புக்கது புக்கிலது உண்டது உண்டிலது வந்தது வந்திலது சென்றது சென்றிலது எனவும், எஞ்சியது தப்பியது எனவும், உரிஞியது நண்ணியது பொருநியது செருமியது துன்னியது எனவும், போயது கூறியது சொல்லியது மேவியது துள்ளியது எனவும் வரும்.

இனி நில் கின்று என்பனவற்றோடு நிகழ்காலத்தின்கண் அகரம்பெற்று வரும். நடவாநின்றது நடவாநின்றிலது நடக்கின்றது நடக்கின்றிலது உண்ணாநின்றது உண்ணாநின்றிலது உண்கின்றது உண்கின்றிலது எனவரும்.

இனி எதிர்காலத்தின்கண் உயிர்மெய்யான பகர வகரம்பெற்று உண்பது செல்வது எனவரும்.

றகர உகரங் க ட த ற என்பனவற்றின்முன் அன்னும் இன்னும் பெற்றும் ஏனையெழுத்தின்முன் இன்பெற்றும் அவ இன்னின் னகரந் திரிந்தும் இறந்தகாலம்பற்றிவரும். புக்கன்று புக்கின்று உண்டன்று உண்டின்று வந்தன்று வந்தின்று சென்றன்று சென்றின்று எனவரும். கூயின்று கூயிற்று போயின்று போயிற்று என ஏனை எழுத்தோடும் ஒட்டிக்கொள்க. வந்தின்றென்பது இல்லினது லகரம் னகரமாய்த் திரிந்த எதிர்மறைவினையாதல் வந்தில வந்திலன் வந்திலள் வந்திலர் என்னும் ஏனைப்பாற்சொல்லான் அறிக. இந்த றகர உகரங் "தாலி களைந்தன்றுமிலனே" எனவும் "வியந்தன்றுமிழிந்தன்றுமிலனே" எனவும் உயர்திணைக்கண்ணும் வந்ததாலெனின், அவை களைந்தான் வியந்தான் இழிந்தான் என்பனவற்றிற்கு மறையாய்க் களைந்திலன் வியந்திலன் இழிந்திலன் என நிற்கின்றவை களைந்தன்றுமிலன வியந்தன்றுமிலன் இழிந்தன்றுமிலன் என முற்றுவினைத்திரிசொல்லாய் நின்றன.

இனி டகர உகரம் மூன்றுகாலத்திற்கும் உரிய வினைக்குறிப்பாய்க் குண்டுகட்டு குறுந்தாட்டு எனவரும.

மேற் குறிப்பினைத் தெரிநிலைவினையோடு மாட்டெறியுமாதலின் இத்தெரிநிலைவினையுள் டகர உகர ஈறு இல்லது கண்டு ஆண்டு மாட்டேறு ஏலாதென ஈண்டுக் கூறினாரென உணர்க.

கிளவியாக்கத்துத் திணையும்பாலும் அறிவிப்பான் இவ்வீறுகளை விதந்தோதினார்; ஈண்டு இவை இன்ன இடம்பற்றி உணர்த்துமென்றார். (௨0)

உஉ0. பன்மையு மொருமையும் பாலறி வந்த
வம்மூ விரண்டு மஃறிணை யவ்வே.

இது விரிந்தது தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

(இ - ள்.) பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த = பன்மையும் ஒருமையுமாகிய பால் அறியவந்த: அம் மூவிரண்டும் அஃறிணை யவ்வே = அவ் ஆறீற்றுச் சொல்லும் அஃறிணையுடையனவாம். எ-று.

உஉக. அத்திணை மருங்கி னிருபாற் கிளவிக்கு
மொக்கு மென்ப வெவனென் வினாவே.

இஃது அஃறிணை இருபாற்கும் உரியதோர் வினைக்குறிப்புக் கூறுகின்றது.

(இ - ள்.) எவன் என் வினா = எவனென்னும் வினாச்சொல்: அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும் ஒக்கும் என்ப = அஃறிணையிடத்து ஒருமை பன்மையாகிய இருபாற்பொருண்மைக்கும் பகுதி குறைவின்றி ஒக்கும் என்று கூறுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். அஃதெவன் அவையெவன் எனவரும். னகர ஈறாய் இருபாற்கும் பொதுவாய் வருதலின் வேறே கூறினார். நுமக்கிவனெவ னுமென்பது முறைபற்றி நிற்றலின் அஃறிணைக்கண் வந்ததாம். படுத்தலோசையால் எவனென்பது பெயருமாம். அஃது இக்காலத்து என்னென்றும் என்னையென்றும் மருவிற்று. (உ0)

உஉஉ. இன்றில வுடைய வென்னுங் கிளவியு
மன்றுடைத் தல்ல வென்னுங் கிளவியும்
பண்புகொள் கிளவியு முளவென் கிளவியும்
பண்பி னாகிய சினைமுதற் கிளவியு
மொப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
யப்பாற் பத்துங் குறிப்பொடு கொள்ளும்.

இஃது அஃறிணைவினைக்குறிப்புக் கூறுகின்றது.

(இ - ள்.) இன்று இல உடைய என்னுங் கிளவியும் = இன்று இல உடைய என்னுஞ் சொற்களும்: அன்று உடைத்து அல்ல என்னுங் கிளவியும் = அன்று உடைத்து அல்ல என்னுஞ் சொற்களும்: பண்பு கொள் கிளவியும் = நிறப்பண்பைத் தனக்கு அடியாகக்

கொண்ட சொல்லும்: உள என் கிளவியும் = உள என்னுஞ் சொல்லும்: பண்பின் ஆகிய சினைமுதற் கிளவியும் = நிறப்பண்பாலுங் குணப்பண்பாலும் உளதாகிய சினையொடு முதலை உணர்த்துஞ் சொல்லும்: ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ = உவமப் பொருள்பற்றி வருஞ் சொல்லோடே தொக்கு: அப்பாற் பத்துங் குறிப்பொடு கொள்ளும் = அக்கூற்றுப் பத்துச் சொல்லுங் காலங்குறித்துக்கோடலோடு வரும் வினைச்சொல்லாகக் கொள்ளப்படும். எ-று

உ-ம். இன்று இல உடைத்து உடைய அன்று அல்ல உள என்பன ஒருமையும் பன்மையுமாகிய வாசகத்தை உணர்த்திநின்றன. அல்லன பொருளுணர்த்திநின்றன. உண்டென்னுஞ் சொல் உண்மையை உணர்த்துங்கால் இன்றென்னுஞ்சொல்லும் அதற்கு மறையாய் முயற்குக்கோடின்றெனப் பொய்ம்மையொருமை உணர்த்தியும் அவ உண்டென்னுஞ் சொற் பண்பை உணர்த்துங்கால் அவ இன்றென்னுஞ் சொல்லும் அதற்கு மறையாய் இக்குதிரைக்கெக்காலமு நடையின்றெனப் பண்பை உணர்த்தியும் அவ உண்டென்னுஞ் சொற் குறிப்பை உணர்த்துங்கால் இன்றென்னுஞ் சொல்லும் அதற்கு மறையாய்க் குதிரைக்கீண்டு நடையின்றெனக் குறிப்பை உணர்த்தியும் நிற்கும். "பொருண்மைசுட்டல்" என்பதனான் உண்மை உணர்த்தலும் "உண்டென்கிளவியுண்மைசெப்பின்" என்பதனான் வினைக் குறிப்பும் பண்பும் உணர்த்தினமையும் பெற்றாம்.

இனி உளவென்னும் பன்மைக்கு இலவென்னும் பன்மை மறையாம். இதற்கு உளதென்னும் ஒருமையீறு சிறுபான்மையாதலிற் கூறிற்றிலர். அதுதான் மாவுள எனப் பண்பு உணர்த்தியும் ஈண்டு நெல்லுள எனக் குறிப்பு உணர்த்தியும் நிற்கும். இனி அறஞ் செய்வார்க்குத்துன்பங்களில எனப் பண்பு உணர்த்தியும் ஈண்டு ஊழுந்தில எனக் குறிப்பு உணர்த்தியும் நிற்கும்.

இனி உடைத்து உடைய என்னும் ஒருமையும் பன்மையும் பெரும்பான்மை உறுப்பின்கிழமையும் பிறிதின்கிழமையும் பற்றிவரும். இவ்வெருது கோடுடைத்து இவ்வெருதுகள் கோடுடைய எனப் பண்பு உணர்த்தியுங் "குருதிபடிந்துண்டகாகங்குக்கிற்புறமுடைத்து" உடைய எனக் குறிப்பு உணர்த்தியும் நிற்கும். இன்று இலவென்பன இவ்வுடைமைக்கு மறுதலையாய்க் கோடின்று கோடில என நிற்கும். இவற்றிற்குப் பொருள் உரைக்குங்காற் கோடுடைத்தன்று கோடுடையவல்ல என அன்று அல்ல என்னும் வாசகம் வருமாறும் உணர்க.

இனி அன்று அல்ல என்பன ஒருமையும் பன்மையும் உணர்த்தும். உழுந்தன்றுபயறு உழுந்தல்லபயறு எனப் பண்பு உணர்த்தியும் வேலன்றுவென்றிதருவது படையல்லவென்றிதருவன எனக் குறிப்பு உணர்த்தியும் நிற்கும்.

ஒன்றெனமுடித்தலான் நன்று தீது நல்ல தீய என்பனவுங் கொள்க.

பண்புகொள்கிளவி கரிது கரிய; பண்பினாகியசினைமுதற்கிளவி வெண்கோட்டது வெண்கோட்டன நெடுஞ்செவித்து நெடுஞ்செவிய; ஒப்பொடுவரூஉங்கிளவி பொன்னன்னது பொன்னன்ன என வரும்.

இனி "அறிந்தமாக்கட்டாகுகதில்ல" "மெல்விரன்மந்திகுறை கூறுஞ்செம்மற்றே." மேற்று வைகற்று "அணித்தோசேய்த்தோகூறுமினெமக்கே" என்பன பிறிதின்கிழமையாகிய உடைமைப்பொருள் படநின்றன. வடாஅது தெனாஅது என்பன ஏழனுருபின் பொருள் பட வந்தன. மூவாட்டையது செலவிற்று என்பன காலமுந் தொழிலும்பற்றி வந்தன. இவையெல்லாம் உரையிற்கோடலாம். (உ௩)

உஉ௪. பன்மையு மொருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉங்
காலக் கிளவி யஃறிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே

இஃது அவ்வினைக்குறிப்பிற்கு ஈறுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த = பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறிய வந்த: அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉங் காலக்கிளவி = அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய காலங்குறித்துக்கோடலோடு வரும் வினைச்சொற்கள்: அஃறிணை மருங்கின் மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே = அஃறிணையிடத்து மேற்கூறிய தெரிநிலைவினையின் ஈறுகளோடு ஈறு வேறுபாடு இல. எ-று.

அகரமுந் தகர றகர உகரமும் பெரும்பான்மை அவ் ஈறுபற்றிப் பாலும் இடமும் உணர்த்துதல் முற்காட்டியவற்றுட் காண்க.

இனி ஆகாரம் இம்மணிநல்ல என்னும் உடம்பாட்டுக் குறிப்பிற்கு இம்மணிபொல்லா என வரும்.

இனி வகரங் "கதவவாற்றக்கவோகாழ்கொண்டவனமுலை" என்புழிக் கதத்தினையுடைய எனவரும்.

இனித் தெரிநிலையுடன்கூடிய டகர உகரம் பூணையுடைத்தென்னும்பொருண்மைக்கட் பூட்டு எனவும், இடத்தென்னும் பொருண்மைக்கண் "வகைதெரிவான்கட்டேயுலகு" எனவும், எந்நாளதென்னும் பொருண்மைக்கண் "எந்நாட்டாகுநும்பேரூரே" எனவும், வினை வினையுடைத்தென்னும் பொருண்மைக்கண் "வேலியாயிரம்விளையுட்டாக" எனவும், குழிவினையுடைய கண்ணையுடைத்தென்னும் பொருண்மைக்கட் குண்டுகட்டு எனவும் பொருளிடங்காலந்தொழிலுறுப்பென்னும் ஐவகைப்பெயரும் அடியாகவரும். ஓடவற்று ஓடவல்ல ஓடவல்லாது ஓடவல்லா என்பனவுங் கொள்க. (உச)

உஉச. முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
யின்மை செப்பல வேறென் கிளவி
செய்மமன செய்யுஞ் செய்த வென்னு
மம்முறை நின்ற வாயெண் கிளவியும
பிரிபுவேறு படூஉஞ் செய்திய வாகி
யிருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமைய

இது நிறுத்த முறையானே விரவுவினை உணர்த்துகின்றவற்றின் பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றது.

(இ - ள்.) முன்னிலை=எதிர்முகமாக நின்றபொருளினது தொழிலுணர்த்தும் முற்றுச்சொல்லும்: வியங்கோள்=படர்க்கைப்பொருண்மேல் ஏவற்பொருண்மையைக்கொண்டுவரும் முற்றுச்சொல்லும்: வினையெஞ்சு கிளவி=முடிக்கும் வினையை ஒழிபாகவுடைய வினைச்சொல்லும்: இன்மைசெப்பல்=இன்மையென்னும் பண்பினை உணர்த்தும் இல்லையென்னும் வினைக்குறிப்புமுற்றுச்சொல்லும்: வேறு என் கிளவியும்=வேறென்னும் வேறுபாடு தன்னை உணர்த்திநிற்கும் வினைக்குறிப்புமுற்றுச்சொல்லும்: செய்ம்மன=மன ஈற்றெச்சமாய் எதிர்காலம் உணர்த்துஞ் செய்ம்மன என்னுஞ்சொல்லும்: செய்யும்=முற்றும் எச்சமுமாய் உம் ஈற்றுசல் நிகழ்காலம் உணர்த்துஞ்

செய்யுமென்னுஞ்சொல்லும்: செய்த=அகர ஈற்று எச்சமாய் இறந்த காலம் உணர்த்துஞ் செய்த என்னுஞ் சொல்லும்: என்னும் அம்முறை நின்ற அ எண் கிளவியும் = என்றுசொல்லப்படுகின்ற அவவ டைவின்கணின்ற அவவெட்டுச்சொல்லும்: பிரிவு வேறுபடூஉஞ் செய்திய ஆகி=பொதுமையிற் பிரிந்து ஒருகால் உயர்திணையையும் ஒருகால் அஃறிணையையும் உணர்த்தி வேறுபடுந் தொழிலையுடையவாய்: இருதிணைச்சொற்குமோர் அன்ன உரிமைய=இருதிணையை உணர்த்துஞ் சொல்லாதற்கும் ஒத்த உரிமையவாம். எ-று.

என்செய்யாநின்றானென்று வினயவழி உண்ணாநின்றானெனச் செப்புதலிற் செய்யென்னும் வாசகம் எல்லாத்தொழிலினையும் அகப்படுத்திநிற்றல் பெற்றாம். இருதிணைக்கும் பொதுவாயதோர் பொருளின்மையான் அதனால் நிகழும் விரவுத்தொழிலென்பது ஒன்றின்றாலெனின், அவ்விரவுத்தொழிலைக் கூறுகின்றவன் அதனை நிகழ்த்திய வினைமுதல் உயர்திணை அஃறிணையென்பது உணர்ந்தே கூறுமாயினும் பால்காட்டும் ஈறின்மை காரணத்தாற் கேட்டோர் உணர்வு இருதிணை வினைமுதன்மேலும் ஒருங்குசேறலான் அவ்வினைமுதற் பொதுமையால் நிகழும் விரவுத்தொழிலும் உளவாயின. (உரு)

உஉரு. அவற்றுள்,
முன்னிலைக் கிளவி
இ ஐ ஆயென வரூஉ மூன்று
மொப்பத் தோன்று மொருவற்கு மொன்றற்கும்.

இது முறையானே முன்னிலையொருமைவினை கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் முன்னிலைக் கிளவி = அவ எட்டனுள் முன்னிலைச்சொல்லாமாறு சொல்லுவல்: இ ஐ ஆய் என வரூஉம் மூன்றும்=இ ஐ ஆய் என்று சொல்லவருகின்ற மூன்று ஈற்றுச்சொல்லும்: ஒருவற்கும் ஒன்றற்கும் ஒப்பத் தோன்றும்=உயர்திணையாண்பாலும் பெண்பாலுமாகிய ஒருமைப்பாற்கும் அஃறிணையொருமைப்பாற்கும் மிகுதி குறைவின்றி ஒப்பத் தோன்றும். எ-று.

இகரம் ட த ற ஊர்ந்து எதிர்காலம்பற்றி வரும்.

உ-ம். உண்டி உரைத்தி தின்றி; இவற்றை உண்பை உரைப்பை தின்பை என விரிக்க. இனி உரைக்கிற்றி "நன்றும்மன்னிது நாடாய்கூறி" என நிகழ்வுபற்றியும் வரும். இவைதாம் எடுத்தலோ

சையாற் கூறும்வழி உண்பாய் உரைப்பாய் தின்பாய் என ஏவற் பொருண்மையும் உணர்த்தும். இனி "ஐயசிறிதென்னைநோக்கி" எனவும் "ஈதன்மாட்டொத்திபெரும" எனவுங் ககரமுந் தகரமும் பெற்ற இகரம் ஏவல் கண்ணியே நிற்கும். இதற்குப் "பிரிந்துறைசூழாதி" என்பது மறை.

இனி ஐகாரம் அம் ஈற்றுக்கு உரிய எழுத்துப்பெற்றும் ஆயீறு ஆமீற்றுக்கு உரிய எழுத்துப்பெற்றும் மூன்றுகாலத்தும வரும். உண்டனை உண்ணாநின்றனை உண்பை உண்குவை கரியை எனவும், உண்டாய் உண்ணாநின்றாய் உண்பாய் கரியாய் எனவும் வரும். உரிஞினை உரிஞாய் என ஏனை எழுத்தோடும் ஒட்டுக. உரை என்றால் ஏவல் கண்ணுமாறும் உணர்க. உண்ணாநிற்றி என்பது எதிர்காலத்துப் பிறந்த நிகழ்காலம். இனி உண்டிலை உண்ணாநின்றிலை உண்ணலை எனவும், உண்டிலாய் உண்ணாநின்றிலாய் உண்ணலாய் எனவும் மறை வரும். (உ௬)

உஉ௬. இர் ஈர் மின்னென வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினுஞ்
சொல்லோ ரனைய வென்மனார் புலவர்.

இது முன்னிலைப்பன்மை கூறுகின்றது.

(இ - ள்.) இர் ஈர் மின் என வரூஉம் மூன்றும் = இர் ஈர் மின் என்று சொல்லவருகின்ற மூன்று ஈற்றுச் சொல்லும்: பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும் = உயர்திணைக்கட் பல்லோரிடத்தினும் அஃறிணைக்கட் பலவற்றிடத்தினும்: சொல்லோர் அனைய என்மனார் புலவர் = சொல்லுதலை ஒருதன்மையாக உடையவென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

இர் ஈறு அர் ஈற்றுக்கு உரிய எழுத்தும் ஈர் ஈறு ஆர் ஈற்றுக்கு உரிய எழுத்தும் பெற்று மூன்றுகாலத்தும் வரும்.

உ-ம். உண்டனிர் உண்ணாநின்றனிர் உண்பிர் உண்குவிர் எனவும், உண்டீர் உண்ணாநின்றீர் உண்பீர் உணகுவீர் எனவும் வரும். மின் பிற எழுத்துப் பெறாது ஏற்றுழி உகரம் பெற்று எதிர்காலத்து வரும். உண்மின்களே அடுமின்சோறே உரிஞுமின் எனவரும். இதற்கு உண்பீர் அடுவீர் உரிஞுவீர் எனவிரிக்க. "கானங்கடத்தி

ரெனக்கேட்பின்'' என்புழிக் கடவாநின்றீரென நிகழ்காலத்துத் தகரம்வந்தது. இஃது எதிர்காலத்தும் வரும்.

இனி முன்னிலைவினைக்குறிப்பு உயர்திணைவினைக்குறிப்பிற்கு ஓதிய பொருள்பற்றி ஐயும் ஆயும் இருவும் ஈரும் என நான்கு ஈற்றவாய்க் கழலினை நாட்டை பொன்னன்னை கரியை, கழலினாய் நாட்டாய் பொன்னன்னாய் கரியாய், கழலினிர் நாட்டினிர் பொன்னன்னிர் கரியிர், கழலினீர் நாட்டினீர் பொன்னன்னீர் கரியீர் என வரும். போறி என்பது போன்றனன் போன்றான் என்பதுபோல வந்த தெரிநிலைவினை. இனி உண்டிலிர் உண்ணாநின்றிலிர் உண்ணலிர் உண்டிலீர் உண்ணாநின்றிலீர் உண்ணலீர் உண்ணன்மின் என மறை வரும்.

மேல் எச்சவியலுள் "முன்னிலைமுன்னர்'' என்னுஞ் சூத்திரத்தாற் பெற்ற முன்னிலைகளுள் மொழிக்கு ஈறாமெனப்பட்ட நட வா விரி ஈ கொடு கூ மே கை நொ போ வெள என்னும் உயிரீறு பதினொன்றும் உரிஞ் மண் பொருந் திரும் தின் தேய் பார் செல் வவ் தாழ் கொள் என்னும் புள்ளியீறு பதினொன்றும் போக்கு பாய்ச்சு ஊட்டு நடத்து எழுப்பு தீற்று வெஃகு என எழுவகையவாகிய குற்றியலுகர ஈறு ஒன்றுமாக எழுத்து வகை இருபத்துமூன்றும் எடுத்தலோசையான் முன்னிலையேவலொருமைமுற்றாய் நிற்கும். இவை தாமே படுத்தலோசையால் அச்செய்கைமேற் பெயர்த்தன்மைபட முதனிலையாயும் நிற்கும். அங்ஙனம் முதனிலையாய் நிற்குங்கால் நடந்தான் வந்தான் விரிந்தான் ஈந்தான் கொடுத்தான் கூவினான் மேவினான் கைத்தான் நொந்தான் போயினான் வெளவினான் என உயிரீறு பதினொன்றும் உரிஞினான் மண்ணினான் பொருநினான் திருமினான் தின்றான் தேய்த்தான் பார்த்தான் சென்றான் வவ்வினான் தாழ்ந்தான் கொண்டான் எனப் புள்ளியீறு பதினொன்றும் போக்கினான் பாய்ச்சினான் ஊட்டினான் நடத்தினான் எழுப்பினான் தீற்றினான் வெஃகினானெனக் குற்றியலுகரவீறு ஒன்றுமாக முற்றுச்சொல் விரிந்து நின்றவாறு காண்க. நடந்துவந்தான் வந்துபோனான் விரிந்துகிடந்தான் ஈத்துவந்தான் எனவும், நடந்தசாத்தன் வந்தசாத்தன் விரிந்தசாத்தன் ஈத்தசாத்தன் எனவும், உரிஞிவந்தான் பொருநிவந்தான் எனவும், உரிஞினசாத்தன் பொருநினசாத்தன் எனவும், வினையெச்சத்திற்கும் பெயரெச்சத்திற்கும் இவ்வாறே ஒழிந்த முதனிலைகளையும் விரித்துக்கொள்க.

முற்காட்டிய முன்னிலையேவலொருமைமுற்றுக்கள் ஒருவனை நோக்கி ஒன்றனை ஒருதொழிலைச்செய்வியென்னும் பொருண்மைக்கண் நடத்துவி நடப்பி வருவி விரிவி விரிப்பி ஈப்பி கொடுப்பி கூவுவி மேவுவி கைப்பி நொவ்வுவி போக்குவி வௌவுவி உரிஞுவி மண்ணுவி பொருநுவி திருமுவி தின்பி தேய்ப்பி பார்ப்பி செலுத்துவி வவ்வுவி தாழ்த்துவி கொள்ளுவி வெஃகுவி என எதிர்காலத்திற்கு உரிய வகரமும் பகரமும் முன்னிலைக்கு உரிய இகரம் ஏறி இடைநிலைக்கு உரிய எழுத்துக்களும் பெற்று எடுத்தலோசையான் நிற்குமென்று உணர்க.

இன்னும் அவைதாம் படர்க்கையிடத்துப் பால்காட்டும் முற்றாய் நடத்துவித்தான் நடப்பித்தான் வருவித்தான் விரிவித்தான் விரிப்பித்தான் ஈப்பித்தான் கொடுப்பித்தான் கூவுவித்தான் மேவுவித்தான் கைப்பித்தான் நொவ்வுவித்தான் போக்குவித்தான் வௌவுவித்தான் உரிஞுவித்தான் மண்ணுவித்தான் பொருநுவித்தான் திருமுவித்தான் தின்பித்தான் தேய்ப்பித்தான் பார்ப்பித்தான் செலுத்துவித்தான் வவ்வுவித்தான் தாழ்த்துவித்தான் கொள்வித்தான் வெஃகுவித்தான் என வருங்கால் இடைநிலையாகிய எழுத்துக்களும் பெற்று முன்னர் எடுத்தலோசையாய் இடைநின்ற ஈறாகிய இகரம் படுத்தலோசைப்பட்டு இடைநிலையாய்நிற்குமென்று உணர்க.

இனி நடத்துவிப்பி வருவிப்பி நடப்பிப்பி எனவும் வருமென்று கூறி இவற்றை இருமடியேவலென்பாரும் உளர். இவற்றை இருகாலேவுதல் கூறியதுகூறலாமாதலின் இவை இழிவழக்கென மறுக்க. இனிஉண்ணுந் தின்னுமெனப் பன்மைக்கண் வரும் உம் ஈறும் உண்ணலெனவரும் அல்லீற்று மறையும் மாறெனவரும் ஆலீறும் "அகையேல்" "மாதோழியமேல்" எனவரும் ஏலீறும் உண்டுகாண் சொல்லிக்காண் எனவருங் காணீறுமாகிய சொல்வகை ஐந்தும் முன்னிற்சூத்திரத்து எதிர்காலமொன்றினும் வரும் இகரம் முற்கூறிய முறையன்றிக்கூற்றினுற் கொள்க.

முற்கூறிய எழுத்து வகை இருபத்துமூன்றுஞ் சொல்வகை ஐந்துமாகிய இருபத்தெட்டும் முன்னிலையேவலொருமைமுற்றென்று உணர்க. நடவாய் வாராய் உண்ணாய் தின்னாய் என்னுஞ் சொற்கள் ஆயீறு கெட்டு நட வா உண் தின் என நிற்குமென்று சேனாவரையர் கூறினாரலெனின் அது பொருந்தாமை எச்சவியலுட்

"செய்யாவென் னுமுன்னிலைவினைச்சொல்" என்னுஞ் சூத்திரத்துட் கூறுதும். (உஎ)

உஉஎ. எஞ்சிய கிளவி யிடத்தொடு சிவணி
ஐம்பாற்கு முரிய தோன்ற லாறே.

இது முன்னிலையொழிந்தவற்றின் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) எஞ்சிய கிளவி = முன்னிலைவினையொழித்து ஒழிந்த ஏழுவினைச்சொல்லும்: இடத்தொடு சிவணி ஐம்பாற்கும் உரிய = மூன்றிடத்தோடும் பொருந்தி ஐந்துபாற்கும் உரியவாம்: தோன்றலாறே = அவை தத்தம் பொருட்கட் தோன்றும் இடத்து. எ-று.

மேல் விலக்குவன ஒழிந்தன ஈண்டுக்காட்டுதும். அவன்செல்க அவள்செல்க அவர்செல்க அதுசெல்க அவைசெல்க எனவும், உழுது வந்தேன் உழுதுவந்தேம் உழுதுவந்தாய் உழுதுவந்தீர் உண்டுவந்தான் உண்டுவந்தாள் உண்டுவந்தார் உழுதுவந்தது உழுதுவந்தன எனவும், யானில்லை யானுநீயுமில்லை யானுமவனுமில்லை யானுநீயுமவனுமில்லை நாமில்லை யாமில்லை நீயில்லை நீயிரில்லை அவனில்லை அவளில்லை அவரில்லை அதுவில்லை அவையில்லை எனவும், யான்வேறு யானுநீயும் வேறு யானுமவனும்வேறு யானுநீயுமவனும்வேறு நாம்வேறு யாம் வேறு நீவேறு நீயிர்வேறு அவன்வேறு அவள்வேறு அவர்வேறு அது வேறு அவைவேறு எனவும், யானுண்மன யானுநீயுமுண்மன யானு மவனுமுண்மன யானுநீயுமவனுமுண்மன நாமுண்மன யாமுண்மன நீயுண்மன நீயிருண்மன அவனுண்மன அவளுண்மன அவருண்மன அதுவுண்மன அவையுண்மன எனவும், யானுண்ணுமூண் யானுநீயு முண்ணுமூண் யானுமவனுமுண்ணுமூண் யானுநீயுமவனுமுண்ணு மூண் நாமுண்ணுமூண் யாமுண்ணுமூண் நீயுண்ணுமூண் நீயிருண் ணுமூண் அவனுண்ணுமூண் அவளுண்ணுமூண் அவருண்ணுமூண் அதுவுண்ணுமூண் அவையுண்ணுமூண் எனவும், அவன்வரும் அவள் வரும் அதுவரும் அவைவரும் எனவும், யானுண்டவூண் யானுநீயு முண்டவூண் யானுமவனுமுண்டவூண் யானுநீயுமவனுமுண்டவூண் நாமுண்டவூண் யாமுண்டவூண் நீயுண்டவூண் நீயிருண்டவூண் அவ னுண்டவூண் அவளுண்டவூண் அவருண்டவூண் அதுவுண்டவூண் அவையுண்டவூண் எனவும் வரும்.

வியங்கோளும் மன ஈறும் எதிர்காலம் உணர்த்தும். இன்மை செப்பலும் வேறென்பதும் மூன்றுகாலமும் உணர்த்தும். உண்மன

என்பது யானுண்ணும் நீயுண்ணும் அவனுண்ணும் என்னும் பொருண்மை உணர்த்தி எச்சநீர்மைத்தாய் இறந்தவழக்கிற்றாய் வரும். இச்செய்யுமென்னும் வாசகத்துக்கு அக்காலத்து மனவென்னும் வாசகத்தாலும் வழங்குதலின் ஆசிரியர் மன என்பதனை ஈண்டு வேறாக ஓதி எழுத்தோத்தினுள்ளுஞ் "செய்ம்மன என்னுந் தொழிலிறு சொல்லும்" என்றார். யாம் நாம் என்பதனை இன்மைசெப்பன் முதலியவற்றோடும் ஒட்டுக. (உஅ)

உஉஅ. அவற்றுள்,

முன்னிலை தன்மை யாயீ ரிடத்தொடு
மன்னு தாகும் வியங்கோட் கிளவி.

இஃது எய்தியது விலக்கிற்று.

(இ - ள்.) அவற்றுள்=மேல் எஞ்சியகிளவியென்னப்பட்ட ஏழனுள்: வியங்கோட் கிளவி=ஏவற்பொருண்மையை முற்ற முடித்தலை உணர்த்துஞ்சொல்: முன்னிலை தன்மை ஆயீரிடத்தொடும் மன்னுதாகும்=முன்னிலையுந் தன்மையுமாகிய அவ்விரண்டிடத்துப்பொருளொடும், அஃறிணைக்கட் பெரும்பான்மையும் நிலைபெறாது, உயர்திணைக்கட் பெரும்பான்மையும் நிலைபெறும். எ-று.

எனவே படர்க்கைப்பொருட்கண் "இருதிணைச்சொற்குமோரன்னவுரிமைய" ஆம். இதற்கு உதாரணம் முன்னர்க்காட்டினும்.

"நோயுமின்பமும்" என்னும்பொருளியற்சூத்திரத்திற் "சொல்லாமரபினவற்றொடுகெழீஇச்-செய்யாமரபிற்றொழிற்படுத்தடக்கியும்" என்றும் "ஞாயிறுதிங்கள்" என்னுஞ் செய்யுளியற்சூத்திரத்துச் "சொல்லியாங்கமையுமென்மனார்புலவா" என்றும் அஃறிணை ஏவற்பொருண்மையை முற்ற முடியாமையைக் கூறுகின்ற ஆசிரியர் அவற்றிற்கு ஏற்ப ஈண்டும் முன்னிலைக்கண் வரும் அஃறிணை ஏவற்பொருண்மையை முற்ற முடியாதென்பது உணர்த்துதற்கு மன்னுதாகும் என்றார். எனவே அஃறிணைக்கண்வரும் முன்னிலைவியங்கோட்கு ஓரன்ன உரிமை இன்றென்றாராயிற்று. தன்மையஃறிணைக்கு இன்மை கூறல்வேண்டாவாயினும் உயர்திணைக்கட்சிறுபான்மை வழங்குதல்பற்றி உடனோதினார்.

முற்கூறிய நட வா முதலிய இருபத்துமூன்று ஈற்று முன்னிலையேவலொருமையும் அஃறிணைக்கண்வருங்கால் ஏவல்வினையை

உணர்ந்து அவை முற்ற முடியா என்பதனை உணர்த்தும் அதனை ஏவு தல் மரபன்றென்று கருதி ஆசிரியர் இங்ஙனம் ஓதினார்.

அவைதாங் கூறுகின்றவர் கருத்தான் ஏவல்கண்ணியே வரும். உயர்ந்தான் இழிந்தானை இன்னதுசெய்கவென விதித்தல் ஏவல்கண் ணியது. இழிந்தான் உயர்ந்தானை இன்னதுசெய்யவேண்டுமென வேண்டிக்கோடலும் ஏவல்கண்ணிற்று. இனி உயர்திணைப்பொருளா கிய முன்னிலைக்கண் வாழ்க வாழிய என வாழ்த்துப்பொருண்மைக் கண் வந்ததும் ஏவல்கண்ணிற்று. "கடாவுகபாகநின்கால்வனெடுந் தேர்" என வேண்டிக்கோடற்பொருண்மைக்கண் வந்ததும் ஏவல் கண்ணிற்று. இனி உயர்திணைத்தன்மைக்கண் "யானுநின்னோடுடனு றைக" என வேண்டிக்கோடற்பொருண்மைக்கண் வந்ததும் ஏவல் கண்ணிற்று. இது சிறுபான்மையென்பது உணர்த்துதற்கு முன்னிலை யை முற்கூறினார்.

இனி எழுத்தோத்தினுள் "ஏவல்கண்ணிய வியங்கோட்கிளவி யும்" என அகர ஈற்றுள் எடுத்தோதினமையாற் பொருந்திய மெய்யை ஊர்ந்து அகர ஈறாய் வருதலும் உடம்பொடுபுணர்த்தலென்பதனால் "வழாஅலோம்பல்" எனவும் "இற்றெனக்கிளத்தல்" எனவும் "ஆக்க மொடுகூறல்" எனவும் வந்த அல்லீறும் "பரீஇயதொரால்" என வரும் ஆலீறுமாய்வருதலும் ஒன்றெனமுடித்தலென்பதனான் வாழிய ரென அர் ஈறு மறைக்கட் "காணன்மாரெமர்" என்னும் ஆர் ஈறும் "வாழ்தல்வேண்டுமிவண்வரைந்தவைகல்" என உம்மீறும் "அஞ் சாமை யஞ்சுவதொன்றின்" என ஐகார ஈறுமாய் வருதலுங் கொள்க.

இன்னும் இதனானே "மகனெனல்மக்கட்பதடியெனல்" என உடம்பாடும் மறையுமாய் வருதலுங் கொள்க.

இன்னும் இதனானே நாடாகொன்றோ காடாகொன்றோ என் பனவற்றையும் நாடேயாக காடேயாக என இதன்பாற்படுத்துக. இவற்றுள் ஏவல்கண்ணாதது இதுவென உணர்க. (உகூ)

உஉகூ. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா.

இதுவும் அது.

(இ - ள்.) பல்லோர்படர்க்கை முன்னிலை தன்மை அவ்வயின் மூன்றும்=பல்லோரதுபடர்க்கையும் முன்னிலையுந் தன்மையுமாகிய அவ் வெஞ்சிய கிளவிக்கண் வரும் மூன்றும்: நிகழுங் காலத்துச் செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா = நிகழுங்காலத்துவருஞ் செய்யு மென்னும் முற்றுச்சொல்லோடு பொருந்தா. எ-று.

உ-ம். "ஓஒதல்வேண்டுமொளிமாழ்குஞ்செய்வினை-யாஅதுமென் னுமவர்." "என்குறைசொல்லல்வேண்டுமோர்வலவ" யான்போதல் வேண்டும் என வருவனவற்றிற்குத் தவிர்வாராக எனவுஞ் சொல்வா யாக எனவும் போவேனாக எனவும் பொருளுரைக்க. (௩௦)

உ௩௦. செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
வவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி.

இது முறையானே வினையெச்சம் உணர்த்துகின்றவற்றுட் சிறந் தன தொகுத்து உணர்த்துகின்றது.

(இ - ள்.) செய்து செய்யூ செய்பு செய்தென செய்யியர் செய் யிய செயின் செய செயற்கு என அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி=செய்தென்பது முதலாகச் சொல்லப்பட்ட அக்கூற்று ஒன் பது வாய்பாடும் முற்கூறிய வினையெச்சமாம். எ-று.

இது தொகுத்தமொழியின்வகுத்தனர்கோடல். செய்யென்னும் வாய்பாட்டினை உகரமும் ஊகாரமும் புகரமும் எனவும் இயரும் இய வும் இன்னும் அகரமுங் குகரமும் என்னும் இறுதியிடைச்சொல் லான் வேறுபடுத்தினர். செய்தென்பது இறந்தகாலம்பற்றி வருங் காற் குற்றுகரத்தான் ஊரப்பட்ட க ட த ற என்னும் நான்கும் இகர ஈறும் யகர ஈறுமென அறுவகைத்தாமேனும் இகர ஈறும் யகர ஈறுஞ் செய்தென்னும் வாசகத்தைத் தந்தே நிற்றலிற் பொ ருண்மையான் ஒன்றாக அடக்கப்பட்டன.

உ-ம். நக்கு உண்டு வந்து சென்று எஞ்சி தப்பி உரிஞி ஓடி ஆய் போய் எனவரும்.

இவற்றுள் உகரம் இகரமாய்த் திரிந்ததெனின், உரிஞி என்ப தனை "ஞகாரையொற்றிய" என்னுஞ் சூத்திரத்தான் உரிஞ் என நிறுத்தி நிலைமொழித்தொழிலாகிய உகரம் பெறுமென விதித்தலின்

உரிஞு என்னும் முற்றுகரந் திரிந்து உரிஞி என நின்றதென்றல் பொருந்தாமை உணர்க.

இனி ஆகு போகு எனக் குற்றுகர ஈற்றுன் முதனிலையாயிற் றெனில், ஆகினான் போகினான் என முற்றும் அதன்கண்ணே தோன் றுதல் வேண்டும். அங்ஙனம் வழங்காமையின் ஆ போ என்பன முத னிலையாய்க் காலங்காட்டும் யகர ஒற்றுப் பெற்று ஆயினான் போயி னான் என முற்றும் அதன்கண்ணே தோன்றுதலின் ஆகு போகு எனக் குற்றுகர ஈற்று முதனிலை இன்றாமென்று உணர்க. இத னானே வினையெச்சம் முற்றாய்த் திரியுமென்பது உணர்க. அவை தூயினான் தாயினான் மேயினான் ஏயினான் சினைஇயினான் முனைஇயி னான் உரைஇயினான மரீஇயினான் உடீஇயினான் கடைஇயினான் தழீஇயினான் குழீஇயினான் பராயினான் விராயினான் நிலாயினான் கலாயினான் எனவரும். இவை இங்ஙனம் முற்றாய்த் திரிதலிற் பெ யர்கொண்டு முடிவன ஆயின. ஆய் போய் என்பன "வினையெஞ்சு கிளவியும் வேறுபல்குறிய" என்பதனாற் திரிந்துநிற்குமென்பது கோ டலிற் திரிந்துநின்றன. அச்சூத்திரத்து வினையெச்சம் முற்றுவினை கொள்ளுமாறுங் காட்டுதும். முன்னர்க் காட்டிய உதாரணங்களுள் உகரம் இகரமாய்த் திரியாமையும் இவவாறே பிரித்து உணர்ந்து கொள்க.

"விருந்தின்றியுண்டபகலும்" எனவும், "நாளன்றுபோகி" என வும் வருவன செய்தெனெச்சக்குறிப்பு. செய்தென்பதற்கு ஓடாநின்று போயினான் எனவும் "அகலிருவிசும்பிற்பாயிருள்பருகிப் பகல்கான் றெழுதரும்" எனவும் "தலைப்பெயற்கரும்பீன்றுமுளிமுதற்பொது ளியமுட்புறப்பிடவமும்" எனவும் நிகழ்காலவாய்பாடுஞ் சிறுபான்மை உளதென்று உணர்க. நக்கு என்பது நகு என்னும் முதனிலைக்கண் விரிந்த நகுதலென்னும் வினைப்பெயரடியாகச் செய்தென்னும் வினை யெச்சந் தோன்றி நகுதலைச்செய்தெனனும் பொருள்தந்து நின்றது. இனி ஊகாரம் உண்ணூவந்தான் எனவும்"படுமகன்கிடக்கைகாணூஉ" எனவும் "நிலம்புடையூவெழுதருவலம்படுகுஞ்சரம்" எனவும் பின்வ ருந் தொழிற்கு இடையின்றி விரைவு உணர்த்தி முன்வருந் தொழின் மேல் இறந்தகாலம்பற்றி வரும். உண்ணூ எனவும் "கல்லாக்கழிப் பர்" எனவும் "நிலங்கிளையாநாணிநின்றோள்" எனவும் ஆகாரம் வினையெச்சமாய் வருதல் "செய்யாவென்னும்வினையெஞ்சுகிளவியு - மவ்வியறிரியாவென்மனார்புலவர்" என்பதனாற் பெறப்படும். இனிப்

பகர உகரம் "பல்கால்வாக்குபுதரத்தரவருத்தம்வீடவர்ரவுண்டு" எனவும் "புலராப்பசசிலையிடையிடுபுதொடுத்த" எனவும் பெரும்பான்மை இறந்தகாலத்துவரும். அப்புகரம் நகுபுவந்தான் என்புழி நகாநின்றுவந்தானென்று முடிக்குஞ்சொல்லால் உணரப்படுந் தொழிலோடு உடனிகழ்ந்து நிகழ்காலத்தும் வரும். அது "வாடுபுவனப்போடி" எனவும் வரும். உரிஞுபு என உகரமுங் கற்குபு எனக் குகரமும் ஏற்புழி வரும். இனி என என்பது "க ட த ற வூர்ந்து இறந்தகாலம்பற்றி முடிக்குஞ் சொல்லால் உணரப்படுந் தொழிற்குத் தன் முதனிலைத்தொழில் காரணமாய விரைவுபொருளுணர்த்தும். சோலைபுக்கெனவெப்புநீக்கிற்று உண்டெனப்பசிகெட்டது உரைத்தெனவுணர்ந்தான் மருந்துதின்றெனப்பிணிநீங்கிற்று எனவரும். எஞ்சியென எனவும் உரிஞியென எனவும் எனையெழுத்தோடும் ஒட்டுக. இனி இயர் இய என்பன உண்ணியர் தின்னியர் எனவும் உண்ணிய தின்னிய எனவும் எதிர்காலம்பற்றிவரும். போகியர் போகிய என ஏற்புழிக் ககரமும்பெறும். இனி இன் எதிர்காலம் பற்றிக் காரணப்பொருட்டாய் வரும். மழைபெய்யிற்குளநிறையும் மெயயுணரின்வீடெளிதாம் எனவரும். நடப்பின உரைப்பின் என ஏற்புழிப் பகரமும்பெறும். இது "எனவிற்புணர்ச்சிநடக்கலுமாங்கே" என உம்மீறுதலும் "அற்றாலளவறிந்துண்க" என ஆலீறுதலும் "வினையெஞ்சுகிளவியும்வேறுபல்குறிய" என்பதனாற் பெறப்படும். "அவாவுண்டேலுண்டாம்." என்னும் ஏலும் "அவளொள்ளுமேனும்வரும்" என்னும் ஏனும் இதன் குறிப்பு. "ஒன்றானுந்தீச்சொல்" என்புழி ஆயினுமென்பது ஆனுமெனக் குறைந்துநின்றது. "நுணங்கியகேள்வியரல்லாலென்பதன்றி" என்னுஞ் செய்தெனெச்சக்குறிப்பு உணர்த்துவதோர்வாய்பாடு அல்லாவாயினென்று பொருளாயின் இதன்குறிப்பாம். இனி அகரம் இறந்தகாலத்துக்கண் மழைபெய்யக்குளநிறைந்தது எனக் காரணப்பொருளாயுங் குளநிறையமழைபெய்தது எனக் காரியப்பொருளாயும் வரும். இனி நிகழ்காலத்துக்கண் ஞாயிறுபடவந்தானென்பது நிகழாநிற்கவந்தானென்னும் பொருட்டாய் வரும். "வாழச்செய்தநல்வினையுலகம்" என்பதும் அது. இனி எதிர்காலத்துக்கண் உண்ணவந்தான் என அதற்பொருட்டாய் வரும். உரைப்ப உரைக்க என ஏற்புழிப் பகரமுங் ககரமும் வரும். இனித் "துன்னிப் பெரியவோதினுஞ்சிறியவுணரா" என அகரம்வினைக்குறிப்புப் பற்றி வருவனவுஞ் "செவ்வன்றெரிகிற்பான்" எனவும் "புதுவதினியன்றவணியன்" எனவும் "புதுவதுபுனைந்தவெண்கையாப்பு" என

வும் "பொய்கைப்பூப்புதிதீன" எனவும் "பெருங்கையற்றவென் புலம்பு" எனவும் "சிறுநனிநீதுஞ்சியேற்பினும்" எனவும் "ஒல்லேக் கொண்டான்" எனவும் அகர ஈறன்றிப் பிற ஈறுகளான் முடிக்குஞ் சொல்லை விசேடித்துவருவனவும் "வினையெஞ்சுகிளவியும்வேறுபல் குறிய" என்பதனுற் பெறப்படும். இது மறைக்கட் "கூறுமற் குறித்ததன்மேற்செல்லுங்கடுங்கூளி" என அல்லீறும் "கூறுமை நோக்கிற்குறிப்பறிவான்" என மகர ஐகார ஈறும் வரும். இனிக் குகரம் உணற்குவந்தான் என எதிர்காலத்து வரும். உண்டான் உண்டவன் என்னுந் தொழிற்பெயர்கள் உண்டாற்கு உண்டவற்கு என நான்கனுருபையேற்றுழிச் செயற்கு எனும் எச்சப்பொருள் தரும் மயக்கமின்மையும் உணவென்னும் வினைப்பெயர் குகரம் அடுத்துழி உண்டலைச்செய்தற்கென்னும் பொருள் தந்து எச்சப்பொருட்டாயே நிற்றலின் வினைப்பெயர் நான்கனுருபு பெற்று நின்றதென்னும் மயக்கம் இதற்கு இன்மையும் உணர்க. எற்றுக்குவந்தானென்பது எக்காரியஞ்செயதற்குவந்தானென்னும் பொருட்டாய் இவ்வெச்சக்குறிப்பாய் நிற்கும். எவற்றுக்கு என்பதும் அது.

இவ்வினையெச்சங்கட்கு எஞ்சிநிற்கும் வினைகளும் அறுவகைப் படும். அவை தெரிநிலைமுற்றுங் குறிப்புமுற்றும் பெயரெச்சமும் பெயரெச்சக்குறிப்பும் வினையெச்சமும் வினையெச்சக்குறிப்புமாம். ஓதிவந்தான் இது தெரிநிலைமுற்று, ஓதிநல்லன் இது குறிப்புமுற்று, ஓதிப்பெற்றபொருள் இது பெயரெச்சம், ஓதிநல்லசாத்தன் இது பெயரெச்சக்குறிப்பு, உழுதுபயன்கொண்டு இது வினையெச்சம், உழுதன்றியுண்ணுன் இது வினையெச்சக்குறிப்பு. (௯௧)

உ௯௧. பின்முன் கால்கடை வழியிடத் தென்னு
மன்ன மரபிற் காலங் கண்ணிய
வென்ன கிளவிு மவற்றியல் பினவே.

இதுவும் ஒருசார் வினையெச்சம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) பின் முன் கால் கடை வழி இடத்து என்னுங் கிளவியும்=பின்னும் முன்னுங் காலுங் கடையும் வழியும் இடத்தும் என்னும் ஈற்றவாகிய சொற்களும்: அன்ன மரபிற் காலங் கண்ணிய என்ன கிளவியும் = அம்முறைமைபோலக் காலத்தைக் குறித்த எல்லாச்சொற்களும்: அவற்று இயல்பின = முற்கூறிய ஒன்பதும்போல வினையெச்சத்திற்கு வாய்பாடாம் இயல்பையுடைய. எ-று.

உ - ம். பின் "நீயிர்பொய்கூறியபின்மெய்கூறுவார்யார்" "இளமையுந்தருவதோவிறந்தபின்னே" என இறப்பும் நீயிவ்வாறு கூறுகின்றபினுரைப்பதுண்டோ எனநிகழ்வும் பற்றிவரும். முன் "வருமுன்னர்க்காவாதான்வாழ்க்கை" என இறப்புபற்றி வரும். இவை பின்னர் பின்னை முன்னர் முன்னை எனத் திரிந்தும் வரும். கால் "வலனாகவினையென்றுவணங்கிநாம்விடுத்தக்கால்" என இறப்பும் "அகன்றவர்திறத்தினிநாடுங்கால்" என நிகழ்வும் எதிர்வும் பற்றி வரும். கடை "தொடர்கூரத்துராவாமைவந்தக்கடை" என இறப்புப் பற்றி வரும். வழி "விடுவழிவிடுவழிசென்றாங்கவர் - தொடுவழி தொடுவழிநீங்கின்றாற்பசப்பே" என இறப்பும் "அவளாடுவழியாடு வழியகலென்மனனே" என நிகழ்வும் உரைக்கும்வழியென நிகழ்வும் எதிர்வும் பற்றி வரும். இடம் "களையுநர்கைகொல்லுங்காழ்த்த விடத்து" என இறப்பும் உரைக்குமிடத்தென நிகழ்வும் எதிர்வும் பற்றி வரும்.

அன்னமரபினென்றதனாற் பான் பாக்கு வான் வாக்கு என்பனவுங் கொள்க. "அலைப்பான்பிறிதுயிரையாக்கலுங்குற்றம்" "திருவிற்றன்மாரிகற்பான்றுவலைநாட்செய்ததேபோல்" "புணர்தருசெல்வந்தருபாக்குச்சென்றான்" "கொல்வான்கொடித்தானை கொண்டெழுந்தான்" கொள்வாக்குவந்தான் எனவரும். அல்லது அல்லால் என வருங்குறிப்பெச்சமுங் கொள்க. இவை பெயர்த்தன்மையும் உடையவாய் நின்று முன் வந்த வினையின் காலத்தை உணர்த்திநிற்றலின் வேறு ஓதினர். "வேபாக்கறிந்து" என்பது வேதலை அறிந்தென்னும் பொருள் தருதலின் எச்சமன்று. இவற்றைக் 'காலங்கண்ணிய' என்றது கூதிர்பொயபின்வந்தானெனவும் நின்றவிடத்துநின்றான் எனவும் பின் முதலியன பெயரெச்சத்தோடு வந்துழி இறப்பு முதலியன கண்ணுமையின். (௩௨)

உ௩௨. அவற்றுள்,

முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின.

இது முதல் நின்ற மூன்றற்கும் முடிபு கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் முதனிலை மூன்றும் = முற்கூறிய பதினைந்தினுள் முதற்கணின்ற செய்து செய்யூச் செய்பு என்னும் மூன்றும்: வினைமுதல் முடிபின = அவ்வெச்சவினையை நிகழ்த்தின கருத்தாவினது வினையினை உணர்த்துஞ் சொல்லினையே முடிபாகக் கொண்டு முடிதலையுடைய. எ - று.

உ-ம். உண்டுவந்தான் உண்ணாவந்தான் உண்குபுவந்தான் எனவும், கற்றுவல்லனாயினான் கல்லாவல்லனாயினான் கற்குபுவல்லனாயினான் எனவும் வரும்.

ஒன்றெனமுடித்தலென்பதனாற் செய்யா என்பதற்கும் உண்ணாவந்தானென இம்முடிபு கொள்க.

இனிச் செய்தெனெச்சக்குறிப்பாகிய இன்றி அன்றி என்பனவுந் "தம்மின்றமையாநந்நயந்தருளி" "தொல்லெழில்வரைத்தன்றிவயவுநோய்நலிதலின்" என வினைமுதல்வினையான் முடியும். (கக)

உ௩௩. அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றிற்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய வென்மனார் புலவர்.

இதுவும் அம்மூன்றற்கும் முடிபுவேற்றுமை கூறுகின்றது.

(இ - ள்.) அம்முக்கிளவியும் = வினைமுதல் முடிபின என்ற அம்மூன்று சொல்லும்: சினைவினை தோன்றிற் சினையொடுமுடியா = சினைப்பொருளிடத்து வினையெச்சமாய்த்தோன்றிற் தமக்கு உரிய சினைவினைகொண்டு முடியா முதல்வினைகொண்டே முடியும்: வினைமுதலொடு முடியினும் = அவ்வெச்சங்கள் தாந் தத்தமக்கு உரிய வினைமுதலானன்றிப் பிறவினைமுதலான் முடியினும் பிறவாற்றான் முடியினும்: ஓரனைய என்மனார் புலவர் = தத்தமக்கு உரிய வினைமுதல்கொண்டதன்மையோடு ஒருதன்மையையுடைய என்று கூறுவர் புலவர். எ-று.

சினையொடுமுடியா எனவே முதலொடுமுடிதல் பெற்றாம். உம்மை எதிர்மறை.

உ - ம். கண்ணொந்துகிடந்தான் வயிறுநொந்துகிடந்தான் எனவும், கண்வலியூக்கிடந்தான் எனவும், வயறுகுத்துபுகிடந்தான் எனவும், "கண்டுயின்றுமுன்றிற்போகாமுதிர்வினள்யாயும்" "தாளொற்றித்தப்பிவீழ்ந்தார்தறிவலைமானிறப்பட்டார" எனவும், சினைப்பொருட்கண் வந்த வினையெச்சங் காரணகாரியப்பொருட்டாய் வினைமுதலோடு முடிந்தன. "அகனமர்ந்துசெய்யாளுறையுமுகனமர்ந்து-நல்விருந்தோம்புவானில்." "காமன்கணையொடுகண்சிவந்துபுலந்தாள்" என்பன காரணகாரியமின்றி அங்ஙனம் வந்தன. இனித் தலைவன்பிரிந்து 'வருந்தினாள் எனவும், "மாஅல்யானையொடுமறவர்மயங்கித் - தூறதர்ப்

பட்டவாறுமயங்கருஞ்சுரம்'' எனவும், ''உடம்புயங்கியானைகடுந்தாம் பதிபாக்குக் - கைதெறப்பட்டுவெறிநிரைவேறுகிச் - சாரச்சாரலோடி நெறிமயங்குற்ற'' எனவும் காரணகாரியப்பொருட்டாய்த் தமக்கு உரிய வினைமுதலானன்றிப் பிறவினைமுதலான் முடிந்தன. ஞாயிறு பட்டுவந்தான் ஞாயிறுபடூஉவந்தான் ஞாயிறுபடுபுவந்தான் என்பன காரணகாரியமின்றி அங்ஙனம் வந்தன. ''உரற்கால்யானையொடித் துண்டெஞ்சியயா'' என்பதும் அது. இனி ''ஆடிடந்துசெறுவிளைந் தது'' என்றது இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்திற்கேற்றிச் செறுவின் வினையொடு முடிந்தது. இதற்கு வினைமுதல்தானே செ ப்படுபொருளாயிற்று. ''பூணணிந்துவிளங்கியபுகழ்சான்மார்ப'' என அணிந்தென்னும் முதல்வினை சினைவினைகொண்டது. உண்டுபசி கெட்டதும் அது. இவை காரணகாரியப்பொருட்டாய்ப் பிறவாற்றான் முடிந்தன.

ஏனை வினையெச்சங்கட்கு வினைமுதல்வினையும் பிறவினையும் ஒப்ப உரியவாய் வருதலின் ஒருசூத்திரத்தாற் கூறினர். இம் மூவகை யெச்சமும் வினைமுதல்கொள்ளுங்காற் காரணகாரியப்பொருட்டா காது வருதலின், அதனையும் வேறுகூறிச், சினைவினை முதல்வினை யோடு முடியுங்காற் பெரும்பான்மை காரணகாரியப்பொருட்டாயே வருதலானும் முதல்வினை தான் பிறவினைமுதலான் முடியும்வழிப் பெரும்பான்மை காரணகாரியப்பொருட்டாயே வருதலானும் இரண்டு சூத்திரத்தாற்கூறினர். ''வினையெஞ்சுகிளவியும் - வேறுபல்குறிய'' என்ற சூத்திரத்தான் வினையெச்சங்களெல்லாம் பெயர்வேறுபட்டும் ஈறுவேறுபட்டுஞ் சிறுபான்மை வருமென்று பொதுவாகக் கூறினா ராதலின் அதன் கண்ணே பிறவினைமுதல்கொண்டனவற்றையும் அடக்குதல் பொருந்தாது. என்னை? அவை வழக்கிடத்துஞ் செய்யு ளிடத்தும் பெரும்பான்மை வருதலானும் ''வினைமுதன்முடிபின'' என்ற விதி பிறவினைமுதல்கொள்ளாமையை வலியுறுத்து நிற்றலிற் சூத்திரவிதி வேண்டுமாதலானும் என்பது. (௩௪)

உ௩௪. ஏனை யெச்சம் வினைமுத லானு
மானவந் தியையும் வினைநிலை யானுந்
தாமியன் மருங்கின் முடியு மென்ப.

இஃது ஒழிந்த எச்சங்கட்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்.) ஏனை எச்சம் = முதனிலை மூன்றும் அல்லாத பிறவினை யெச்சம்: வினைமுதலானும் = வினைமுதல்வினையானும்: ஆன வந்து

இயையும் வினைநிலையானும் = ஆண்டு வந்து பொருந்தும் பிறவினை யானும்: தாம் இயல் மருங்கின் முடியும் என்ப=வரையறையின்றித் தாம் இயலுமாற்றான் முடியுமென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். மழைபெய்தெனப்புகழ்பெற்றது மழைபெய்தெனமரங் குழைத்தது எனவும், மழைபெய்யியரெழுந்தது மழைபெய்யியர்பலி கொடுத்தனர் எனவும், மழைபெய்யியமுழங்கும் மழைபெய்யியவான் பழிச்சுதும் எனவும், மழைபெய்யிற்புகழ்பெறும் மழைபெய்யிற்குள நிறையும் எனவும், மழைபெய்யப்புகழ்பெற்றது மழைபெய்யமரங்கு ழைத்தது எனவும், மழைபெய்தற்குமுழங்கும் மழைபெய்தற்குக்கட வுள்வாழ்த்துதும் எனவும், இறந்தபினிளமைவாராது கண்வனினி துண்டபின்காதலிமுகமலர்ந்தது எனவும், கடுத்தின்றுமுன்றுவர்த்தது மருந்துதின்றுமுன்னோய்தீர்ந்தது எனவும், உரைத்தக்காலுரைபல்கும் "வலனுகவினையென்றுவணங்கிநாம்விடுத்தக்காற் - சுடரிழாய்நமக்கவர் வருதுமென்றுரைத்ததை" எனவும், நல்வினைதானுற்றக்கடையுதவும் நல்வினைதானுற்றக்கடைதீவினைவாரா எனவும், நல்வினைதானுற்றவ ழியுதவும் நல்வினைதானுற்றவழித்தீவினைவாரா எனவும், நல்வினைதா னுற்றவிடத்துதவும் நல்வினைதானுற்றவிடத்துத்தீவினைவாரா எனவும் வரும். கற்பானூல்செய்தான் செல்வந்தருபாக்குயாம்விரும்புதும் நமதுநலனுகர்வான்யாம்விரும்புதும் இவைபிறவினைகொண்டன. இவை வினைமுதல்வினைகொண்டவாறு முன்னர்க் காட்டினும். (ந௫)

உ௩௫. பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினு
முன்னது முடிய முடியுமன் பொருளே.

இஃது அவ்வெச்சங்கள் அடுக்கியவழிப் படுவதோர் முறைமை கூறுகின்றது.

(இ-ள்.) வினையெஞ்சு கிளவி சொன்முறை முடியாது = வினையெச்சமாகிய சொற்கள் ஒன்றற்கொன்று முடிக்கும்வினை வந்து முடியாது: பன்முறையானும் அடுக்குந வரினும் = ஒருவாய்பாட்டா னன்றிப் பலவாய்பாட்டானும் அடுக்கிவரினும்: முன்னது முடிய முடியுமன் பொருளே = முன்னின்ற எச்சம் முடிய ஏனையவும் பொருள் முடிந்தனவாம். எ-று.

உ-ம். உண்டுதின்றோடிப்பாடிவந்தான் உண்டுபெருகூஉத்தின்குபு வந்தான் உழுதுண்பானூடுவினாஇவந்தான் எனவரும். "பசந்த

மேனியொடெடரடவருந்தி - மருங்கிற்கொண்டபல்குறுமாக்கள் பிசைந்துதினவாடியமுலையள் பெரிதழிந்து - குப்பைக்கீரைகொய்தன ண்கைத்த - முற்முவிளர்தளிர்கொய்துகொண்டுப்பின்று - நீருலையாக வேற்றியோரின் - றவிழ்பதமறந்துபாசடகுமிசைந்து - மாசொடுகுறைந் தவுடுக்கையளறம்பழியாத்-துவவாளாகியவென்வெய்யொளும்'' எனச் செய்தெனெச்சத்திடையே அவவினையெச்சமுற்றும் அதன்குறிப்பெச் சமும் உடன் அடுக்கி முடிந்தனவும் பிறவும் பன்முறையானுமென் றதனாற்கொள்க.

வினையெச்சம் பன்முறையான் அடுக்கி ஒருசொல்லான் முடியு மெனவே, பெயரெச்சம் பலமுறையான் அடுக்கி ஒருசொல்லான்முடி. யுமென்பதாம். "நெல்லரியுமிருந்தொழுவா" என்னும்புறப்பாட்டினுட் பாயுந்து, தூங்குந்து, தரூஉந்து, பாயுமென்னும் பெயரெச்சம் அடுக்கி மிழலையென்னும் ஒருபெயர்கொண்டு முடிந்தன. ஆண்டு நல்லூர் கெழீஇப என்னும் பெயரெச்சம் இடைநிலையாய்வந்தது. (௩௬)

உ௩௬. நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும வினை யு முளப்பட
வவ்வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய
செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே.

இது செய்யுஞ் செய்த எனனும் பெயரெச்சத்திற்குப் பொருள் முடிபு கூறுகின்றது.

(இ - ள்.) செய்யுஞ் செய்த என்னுஞ் சொல்லே = செய்யுஞ் செய்த என்னுஞ் சொற்கள் இன்னதற்கு இதுபயன் என்னும் இரண் டொழித்து = நிலனும் பொருளுங் காலமுங் கருவியுங் வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட அவ்வறுபொருட்குமோர் அன்ன உரி மைய = நிலப்பொருளுஞ் செயப்படுபொருளுங் காலப்பொருளுங் கருவிப்பொருளும் வினைமுதற்பொருளுமென்ற ஐந்துடனே வினைப் பொருளுங் கூடச் சொல்லப்பட்ட அவ்வறுவகைப்பொருட்கும் ஒத்த உரிமையினையுடையவாம். எ-று.

உ-ம். வாழுமில் கற்குநூல் துயிலுங்காலம் வனையுங்கோல் ஓதும் பார்ப்பான் உண்ணுமூண் என உம் ஈறு கால எழுத்துப்பெறுது ஆறுபொருட்கும் உரித்தாய்வந்தது. புக்கவில் உண்டசோறு வந்த நாள் வென்றவேல் ஆடியகூத்தன் போயினபோக்கு என அகர ஈறு

கடதறவும் யகர னகரமும் ஊர்ந்து ஆறுபொருட்கும் உரித்தாய் வந்தது. இவற்றுள் வினைமுதற்கிளவி ஒழிந்தனவற்றிற்கு வினைமு தற்பொருள் முன்வந்தே பின்வரும் வினையோடு முடிந்து பொருள் தருதலும் வினைமுதற்கிளவியாயின் பின்வரும் வினையோடு முடிந்தே பொருள் தருதலுங் கொள்க. இவற்றிற்குச் செய்யாநிற்கும் எனவுஞ் செய்யாநின்ற எனவும் வரும் வாய்பாட்டு வேற்றுமை ஒன்றெனமுடித்தலாற் கொள்க. "மற்றிந்நோய்தீருமருந்தருளாயொண்டொடீ" "நின்முகங்காணுமருந்தினெனென்னுமால்" என்புழி நோய் தீர்தற்குக் காரணமாகிய மருந்தென வருங் காரணத்தைக் கருவிக்கண்ணும், நின்முகத்தைக்காண்டல் காரணமாக அதன்காரியமாகப் பிறந்த அருளை மருந்தாதற் றன்மையாக உடையனென வருங் காரியத்தை ஒன்றெனமுடித்தற்கண்ணும் அமைத்துக்கொள்க. "தேரோடும்புறங்காணேனாயினேன்" என்பதூஉம் "நீலம்பூத்தமரமாயின்" என்பதூஉங் காரணத்தின்கண்ணும் ஆறுசென்றவியர் என்றதனை ஆறுசேறலான் வந்த வியரெனக் காரியத்தின்கண்ணும் அடக்குக. ஆர்களிறுமிதித்த நீர் எள்ளாட்டின எண்ணெய் உண்ட எச்சில் என்பனவுங் காரியத்தின்கண் அடக்குக. "குண்டுசுனைப்பூத்தவண்டுபடு கண்ணி" "நூலாக்கலிங்கம்வாலரைக்கொளீஇ" என்பன பூத்தபூவான் இயன்றகண்ணி நூலாதநூலான் இயன்றகலிங்கம் என ஒற்றுமைநயம்பற்றிச் செயப்படுபொருண்மேல் நின்றன. "பொச்சாவாக் கருவியாற்போற்றிச்செயின்" என்பது கருவிக்கண் அடங்கும். அரசன் ஆ கொடுக்கும் பார்ப்பான், ஆ கொடுத்த பார்ப்பான் எனவும் ஆடை ஒலிக்குங் கூலி, ஒலித்த கூலி எனவும் ஒத்த உரிமைய அன்றிச் சிறுபான்மை இன்னதற்கு இதுபயன் என்பனவற்றின்கண்ணும் வரும். இன்னும் பழம் உதிருங் கோடு, உதிர்ந்த கோடு எனச் சிறுபான்மை நீர்தற்பொருண்மைபற்றி வருதலுங் கொள்க. இனிச் செய்த என்பதன் குறிப்பாய் இன்ன அன்ன என்ன எனவுங் கரிய செய்ய எனவும் வருவனவுங் கொள்க. அவை "இன்னதன்மையினருமையின்" "அன்னதன்மையினறிந்தியார்" எனவும், "என்ன கிளவியும்பண்பின்றொகையே" எனவும் கரியமாநெடுங்கண் எனவும் செய்யகோலெனவும் வந்தவாறு காண்க. (௩எ)

உ௩எ. அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்று முரித்தே.

இது செய்யுமென்பதற்கோர் முடிபுவேற்றுமை கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றொடு வருவழி = அந்நிலம் முதலிய பொருள்களோடு வருங்கால்: செய்யும் என் கிளவி = செய்யுமென்னுஞ் சொல்: முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்து = மேல் விலக்கப்பட்ட பல்லோர்படர்க்கை முன்னிலை தன்மை என்னும் மூவகைக்கும் உரித்து. எ-று.

அவை "எஞ்சியகிளவி" என்பதனுட் காட்டினும்.

ஈண்டுக் கூறிய விதி எச்சத்திற்கும் ஆண்டு விலக்கியது முற்றிற்குமென்று உணர்க. இனி அவற்றிற்கு வேறுபாடு கூறுதும். இருதிணைக்கும் பொதுவாகிய செய்யுமென்னுஞ்சொல் உண்ணுமென நின்றுழித் தானே தன் தொடாப்பொருளுணர்த்தலாற்றாது நின்றதனை அவன் அது என்னும் வினைமுதல் வந்து திணையும் பாலும் விளக்கித் தன தொடர்ப்பொருளுணர்த்தி எடுத்தலோசையான் மற்றோர்சொல் நோக்காது செய்புமுயிற்றுப்போல அமைந்து மாறிநிற்றல் முற்றிற்கு இலக்கணம்; அச்செய்யுமென்னுஞ்சொல் வாழுமில்லெனப் படுத்தலோசையாற் கூறியவழி அம்முடிக்குஞ் சொல்லான் அமையாது நன்றென மற்றுமோர் சொல் நோக்கி நிற்றல் எச்சத்திற்கு இலக்கணம்.

இனி அம்மீறு முதலிய முற்றுச்சொற்கள் எங்ஙனம் முற்றிநிற்குமெனின்: "எத்திறத்தானும்பெயர்முடிபினவே" என்பதனை வினைமுதலோடு முடிந்து ஈண்டுக் கூறியவாறே முற்றிநிற்குமென்க. பெயர்பற்றிநில்லாது தாமேயுந் தொடர்ப்பொருளுணர்த்தி முற்றிநிற்குமெனச் சேனாவரையர் கூறினாரலெனின் சாத்தற்குச் சோறிடுக என ஒருவன் ஏவியவழி அவவேவப்பட்டான் அவற்கு அதனை ஈத்துவந்து உண்டானென்றவழி யான் கூறிய சாத்தனுண்டானென வினைமுதற் தொடர்ப்பொருள் அவன்மனத்தின்கண் உணர்த்தி நிற்பதல்லது நன்மக்கள் குழீஇயவழி ஒருவன்வந்துநின்று உண்டானென்றவழி அவவினைமுதற்றொடர்ப்பொருளுணர்த்தாது பால் மாத்திரம் உணர்த்திநிற்குமென்பது கருதி "எத்திறத்தானும்பெயர்முடிபினவே" என்றாராகலின் அது பொருத்தமின்றென்க. (ரு௪)

உருஅ. பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியு
மெதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா.

இஃது இருவகையெச்சத்திற்கும் எதிர்மறைவினையும் முடிவா மென்கின்றது.

(இ - ள்.) பெயரெஞ்சுகிளவியும் வினையெஞ்சுகிளவியும்=பெயரெச்சமாகியசொல்லும் வினையெச்சமாகியசொல்லும்: எதிர்மறுத்து மொழியினும் = செய்தற்றொழிலினை எதிர்மறுத்துச் சொல்லினும்: பொருணிலை திரியா = தத்தம் எச்சமாகிய பெயரையும் வினையையுங்கொண்டல்லது அமையாத நிலைமையின் வேறுபடா. எ-று.

உ - ம். உண்ணாவில்லம் உண்ணாச்சோறு உண்ணாக்காலம் வளையாக்கோல் ஓதாப்பார்ப்பான் உண்ணாவூண் எனவரும். உண்ணா என்பது உண்ணும் உண்ட் என்னும் இரண்டற்கும் மறை. உண்ணாத என்பது உண்ட என்பதற்கு மறை. உண்ணாது என்பது உண்டு உண்ணூ உண்ணா உண்குபு என்பனவற்றிற்கு மறை. இதனுண் செய்பு என்பது இறந்தகாலம் உணர்த்துதல் பெற்றாம். இனிச் செய்தென என்பது வினைமுதலோடு வருவழி மழைபெய்யாதறம்பெறாதாயிற்று எனச் செய்தென்பதன் மறையே வருதலும் அது பிறவினையோடு வருவழி மழைபெய்யாமல்மரங்குழையாதாயிற்று என இறந்தகாலம் உணர்த்துஞ் செய்தெனெச்சத்து எதிர்மறையே தனக்கு மறையாய் வருதலுங் கொள்க. இவ்விரண்டெச்சத்திற்குஞ் செய்யாமை என்பதூஉம் மறை. இனி உண்ணாமைக்கு என்பது உண்ணியர் உண்ணிய உண்ணற்கு என்பனவற்றிற்கும் உண்ண என எதிர்காலம் உணர்த்துஞ் செயவெனெச்சத்திற்கும் மறையாம். இனிச் செயினென்பதற்கு மழைபெய்யாவிடினறம்பெறாது மழைபெய்யாவிடின்மரங்குழையாது எனப் பிறசொல்லான் மறைவரும். இனி உண்ணாதபின் உண்ணாதமுன் உண்ணாக்கால் உண்ணாக்கடை உண்ணாவழி உண்ணாவிடத்து எனவும் வரும். இனிக் கொள்ளாதொழிவான் என ஏனையவற்றிற்கும் வரும். இனிக் கரியசாத்தற்குச் செய்யசாத்தன் எனவும் நல்லசாத்தற்குப் பொல்லாச்சாத்தன் எனவும் வரும் பெயரெச்சக் குறிப்பு மறைவிகற்பமும் அறிக. இனிச் சோறுண்டாயிருந்தது சோறாவதாயிருந்தது என்பனவற்றிற்குச் சோறின்றி சோறன்றி என வினையெச்சக்குறிப்பு மறையாதலுங் கொள்க. "எதிர்மறுத்து மொழியினுந்தத்தமரபிற் - பொருணிலைதிரியா வேற்றுமைச்சொல்லே" என்று வேற்றுமையினை எதிர்மறுத்துவருமெனவே அவ்வேற்றுமையேற்றசொல் முற்றுச்சொல்லேயாதலின் முற்றுச்சொற்கும் மறை வருமென்பது கூறினாராயிற்று. இனிச் செய்யுமென்னும் முற்றிற்கும் உண்ணாளவள் உண்ணாதது எனவரும் மறை ஒன்றெனமுடித்தலாற் கொள்க. (நக)

உ௩௯. தத்த மெச்சமொடு சிவணுங் குறிப்பி
னெச்சொல் லாயினு மிடைநிலை வரையார்.

இஃது அவ்வெச்சங்களின் இடைநிகழும் முடிபுவேற்றுமை கூறுகின்றது.

(இ - ள்.) தத்தம் எச்சமொடு சிவணுங் குறிப்பின் எச்சொல் லாயினும் = தத்தம் எச்சமாகிய வினையொடும் பெயரொடும் பொருள் இயையுங் கருத்தினையுடைய எவ்வகைச்சொல்லாயினும்: இடைநிலை வரையார் = அவ்வெச்சத்திற்கும் அவற்றான் முடிவனவாகிய தமக்கும் இடைநிற்றலை நீக்கார் கொள்வர் ஆசிரியர். எ-று.

உ - ம். உழுதுசாத்தன்வந்தான் உழுதேரொடுவந்தான் கொல்லுங்காட்டுள்யானை கொன்றகாட்டுளயானை எனவரும்.

ஒருதலையாக எச்சத்தோடு இயையாது முடிக்கப்படுஞ் சொல்லோடும் இயைந்து கவர்பொருட்படுவன சிவணுக்குறிப்பினவாம். அவை உண்டுவிருந்தொடுவந்தான் "வல்லமெறிந்தநல்லிளங்கோசர் தந்தை மல்லல்யானைப்பெருவழுதி" என்புழி விருந்தோடுண்டெனவும் வல்லமெறிந்தகோசரெனவுங் கவர்பொருட்பட்டு வரும்.

எச்சொல்லாயினும் என்றதனால் உழுதோடிவந்தான் கவளங் கொள்ளாக்களித்தயானை என எச்சம் இடைநிலையாதல் கொள்க. அறத்தையரைசன்விரும்பினான் உண்டான்பசித்தசாத்தன் என எனத்தொடர்க்கண்ணும் பிறசொல் இடைநிற்றல் ஒன்றெனமுடித்த லாற் கொள்க. (௪௦)

உ௪௦. அவற்றுள்,
செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகர
மவ்விட னறித லென்மனார் புலவர்.

இது செய்யுமென்பதற்கு ஈறுகெடுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் = முற்கூறிய இருவகையெச்சங்களுள்: செய்யுமென்னும் பெயரெஞ்சுகிளவிக்கு = செய்யுமென்னும் பெயரெச்சத்திற்கு: ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெடும் = ஈற்றெழுத்தின்மேல் நின்ற உகரந் தன்னான் ஊரப்பட்ட மெய்யொடுங் கெடும்: அவ்விடன் அறிதல் என்மனார் புலவர் = அக்கெடுமிடம் அறிக என்று கூறுவர் புலவர். எ-று.

உ - ம். வாவும்புரவி வழூதியோடெம்மிடையான்போகும்புழை என்பன வாம்புரவி போம்புழை என நின்றன.

செய்யுமென்னும் பெயரெஞ்சுகிளவிக்கு ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெடுமெனவே செய்யுமென்னும் முற்றுச்சொற்கு ஈற்று மிசை உகரம் மெய்யொடுங் கெடும் மெய்யொழித்துங் கெடுமென் பது பெறுதும். "ஆம்பலூருமவனொடுமொழிமே" "சாரநாடவென் ஞேழியுங்கலுழ்மே" எனவரும். (சக)

உ.சக. செய்தெ னெச்சத் திறந்த கால
மெய்திட னுடைத்தே வாராக் காலம்.

இஃது இறந்தகாலச் சொல் ஏனைக்காலச் சொல்லோடு இயை யுமென்கின்றது.

(இ - ள்.) செய்தெனெச்சத்து இறந்தகாலம் = செய்தென்னும் வினையெச்சத்தினது இறந்தகாலந் தன் இறந்தகாலத்தினை நீங்காது நின்று: வாராக் காலம் எய்திடன் உடைத்து = முடிக்குஞ் சொல் லின் எதிர்காலத்தைப் பொருந்தும் இடமுடைத்து. எ-று.

உ-ம். நீ உண்டுவருவாய் என்பது நாளை உண்டுவருவாய் என் னும் பொருள் உணர்த்தவும் வருதற்றொழிற்கு உண்டற்றொழில் முன் நிகழ்ந்து ஆண்டுத் தன் இறந்தகாலமே உணர்த்திற்றும். கொடி யாடித்தோன்றும் என்புழித் தோற்றமும் ஆட்டமும் உடனிகழ்த லிற் செய்தென்பது நிகழ்காலத்திற்கும் உரித்தாதல் வாராக்காலமெ னவே அடங்கும். "வறிதினீந்திநீசெல்லுநீளிடைநினைப்பவும்" என்ப தும் அது.

ஒன்றெனமுடித்தலாற் செய்யூ செய்பு என்பனவற்றிற்கும் ஒழிந்த எச்சங்கட்கும் இம்மயக்கங் கொள்க. (சஉ)

உசஉ. முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை
யெம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்.

இது நிகழ்காலச்சொல் ஏனைக்காலங்களையும் உணர்த்துமென் கின்றது.

(இ - ள்.) முந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை எம்முறைச் சொல்லும் = மூன்றுவகைப்பட்ட நிலைமையினையுடைய காலத்தும்

டளதாம் இயல்பையுடைய எவ்வகைப்பட்ட பொருள்களையும்: நிக ழுங் காலத்து மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்= நிகழ்காலத்திற்கு உரித்தாய் நின்றும் ஏனைக்காலங்களையும் உள்ள டக்கி நிற்கும் பொருள் நிலைமையினையுடைய செய்யுமென்னுஞ் சொல்லாற் சொல்லுதலை விரும்பும் ஆசிரியன். எ-று.

முக்காலத்திற்கும் பொதுவாய் முற்றும் எச்சமுமாய நிற்றலை நோக்கிப் பொதுச்சொல்லெனறார்.

உ-ம். மலைநிற்கும் தீச்சுடும் ஞாயிறியங்கும் திங்களியங்கும் என வும் "வெவ்கதிர்க்கனலியொடுமதிவலந்திரிதருந் தண்கடல்வரைப்பு" எனவும் வரும். தீச்சுடுமெனறாற் பண்டும் இன்றும் மேலுஞ் சுடு மென்பதனை நப்ப விளக்கியவாறு காண்க. மெய்ந்நிலையென்றது ரனை நிகழ்காலசசொல்லோடு ுயவாமையை உணர்த்துதற்கு.(சங)

உசந. வாராக் காலத்து நிகழுங் காலத்து
மோராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
யிறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல
விரைந்த பொருள வென்மனார் புலவர்.

இது விரைவின்கண் எதிர்வும் நிகழ்வும் இறப்பொடு மயங்கு மென்கின்றது.

(இ-ள்.) வாராக்காலத்தும நிகழுங காலத்தும் ஓராங்கு வரூஉம் வினைச்சொற்கிளவி=எதிர்காலத்தும நிகழ்காலத்தும் ஒருபடி யாகவருகினற வினைச்சொல்லாகிய சொல்லின் பொருண்மையை: இறந்தகாலத்துக் குறிப்பொடு கிளத்தல் = தொழில் இறந்தின்றே னுஞ் சொல்லுவான் கருத்துவகையாற் தொழில் இறந்தனவாகக் கரு திக்கூறல்: விரைந்தபொருள என்மனார் புலவர் = விரைவுபொருண் மையை உடைய என்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். சோறுபாணித்தவழி உண்ணாதிருந்தானைப் போதல் வேண்டுங் குறையுடையானொருவன் இன்னும் உண்டிலையோ என்ற வழி உண்டேன் போந்தேன் என்னும்; உண்ணாநின்றானும் உண் டேன் போந்தேன் என்னும். (சச)

உசச. மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
யப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி

செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே.

இது மிக்கதொன்றன்கண்ணே இறப்பும் எதிர்வும் நிகழ்வோடு மயங்குமென்கின்றது.

(இ - ள்.) மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி = இருவினைகள் பலவற்றுள்ளுஞ் சிறந்த இருவினைக்கண்ணே நிகழும் வினைச்சொல்லை நோக்கி: அப்பண்பு குறித்த வினைமுதற்கிளவி = திரிவின்றிப் பயக்கும் அம்மிக்க தனது பண்பைக்குறித்து வரும் வினைமுதற்சொல்: செய்வது இல்வழி = சுட்டிச்சொல்லப்படுவதோர் வினைமுதல் இல்லாத இடத்து: நிகழுங்காலத்து மெய்பெறத் தோன்றும் பொருட்டு ஆகும்மே = நிகழ்காலத்தான் யாப்புறத்தோன்றும் பொருளையுடைத்தாம். எ-று.

உ-ம். தவஞ்செய்தான் செய்வான் தாயைக்கொன்றான் கொல்வான் என்பன முதலியன மிக்கவினைச்சொல். சுவர்க்கம்புகாநிற்பன் நிரயம்புகாநிற்பன் என்பன அவ்வப் பண்புகுறித்த வினைமுதற்கிளவி. இவை சுட்டியொருவர்பெயர்கொள்ளாமல், யாவன் தவஞ்செய்தான் அவன் சுவர்க்கம் புகும், யாவன் தாயைக்கொன்றான் அவன் நிரயம்புகும் எனவும், ஒருவன் தவஞ்செய்யிற் துறக்கம் புகும், தாயைக் கொல்லின் நிரயம் புகும் எனவும் வரும். இங்ஙனம் பொதுவகையாற்கூறாது சாத்தன் தவஞ்செய்து துறக்கம்புக்கான் தவஞ்செய்யிற்துறக்கம்புகுவனெனச் சுட்டியொருவர்பெயர்கொண்டவழி ஏனைக் காலங்களாற் கூறப்படுதலிற் செய்வதில்வழி என்றார். வினைச்சொல் லென்றாரேனுந் தவஞ்செய்தான் தாயைக்கொன்றான் என வினைப்பெயராய் வருதலுங் கொள்க. (சஎ)

உசஅ. இதுசெயல் வேண்டு மென்னுங் கிளவி
யிருவயி னிலையும் பொருட்டா கும்மே
தன்பா லானும் பிறன்பா லானும்.

இது முற்றுச்சொற் பொருள்தரும் வேறுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) இது செயல் வேண்டுமென்னுங் கிளவி = இக்காரியத்தினைச் செயல்வேண்டுமென்று சொல்லப்படும் முற்றுச்சொல்: தன்பாலானும் பிறன்பாலானும் இருவயினிலையும் பொருட்டு ஆகும்மே = அக்காரியத்தினைச் செய்வான்தன்னிடத்தும் அவன்செயலை

வேண்டியிருப்பான் பிறனொருவனிடத்துமென்ற இரண்டிடத்தும் நிலைபெறும் பொருண்மையையுடையதாம். எ-று.

உ-ம். சாத்தன் ஓதல்வேண்டும் என்புழி வேண்டுமென்னும் முற்றுச்சொல் ஒருவழிச் சாத்தனென்பது எழுவாயாய் வேண்டு மென்னும் பயனிலையோடு முடிந்துழி அவ்வேண்டுதல் சாத்தனதாயுஞ், சாத்தனென்னும் எழுவாய் ஓதுதலென்னும் வினைப்பெயர் கொண்டவழி இவ்வேண்டுதல் தந்தைதாய்மேலும் நின்றவாறு காண்க. (சசு)

உ-சசு. வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொ
லெதிர்மறுத் துணர்த்துதற் குரிமையு முடைத்தே.

இதுவும் வினைச்சொற் பொருள்படும் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல் = ஒருவன் இன்னாங்கு உரைத்தானென்று ஒருவன் மனங்கொண்டிருந்தவழித் தான் அவ்வின்னாங்கு உரையாமையை அவன்மனத்து வலியுறுத்து தற்கு வரும் வினாவினையுடைய வினைச்சொல்: எதிர்மறுத்து உணர்த்துதற்கு உரிமையும் உடைத்து = அவ்வுரையாமையை உணர்த்து நின்ற நிலைமையை மறுத்துத் தான் உரைத்தானாக உடம்பட்டமையை அவர்க்கு உணர்த்துதற்கு உரிமையினையும் உடைத்து. எ-று.

உம்மை எதிர்மறையாகலான் மறுத்தல் பெரும்பான்மை, நேர்தல் சிறுபான்மையாம்.

ஆ ஏ ஓ என்பன வினா. ஒருவன் கதத்தானாக களியானாக மயங்கி இன்னாங்கு உரைத்துப் பின் தெருண்டவழி அவ்வின்னாங்கு உரைக்கப்பட்டான் நீ என்னை வைதாயென்றக்கால், யான் வைதேனோ எனத் தான் வையாமையை வலியுறுத்துதற்குக் கூறியதுதானே, அப்பொழுது வைதேன் நோகாதே என நேர்ந்தமைபடவும் நிற்கும். இனித் தான் வைதமையை வலியுறுத்துதற்கு வரும் வைதேனோ என்னுஞ்சொல் வைதிலேனென்னும் எதிர்மறையை உணர்த்திநிற்கும் என்றலுமாம். (சஎ)

உ-சஎ. வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
யிறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்று
மியற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை.

இஃது எதிரவு இறப்போடும் நிகழ்வோடும் மயங்குமென் கின்றது.

(இ - ள்.) வாராககாலத்து வினைச்சொற்கிளவி = எதிர்காலத் திற்கு உரிய வினைச்சொல்லாகிய சொல்லின் பொருண்மை: இறப் பினும் நிகழ்வினுஞ் சிறப்பத்தோன்றும் இயற்கையுந் தெளிவுங் கிளக் குங் காலை = வழங்கலாற்றான் இஃது இப்பெற்றித்தெனப் பெற்றி யான் அறிந்திருந்த இயல்பாகலும் இது நிகழின் அது நிகழுமென நூல் நெறியாற் தெளியப்படுதலுஞ் சொல்லுமிடத்து இறந்தகாலச் சொல்லானும் நிகழ்காலச்சொல்லானும் விளங்கத்தோன்றும். எ-று.

உ - ம். இக்காட்டுட் போகிற் கூறைகோட்படுவன் எனற்பா லது கூறைகோட்பட்டான் கூறைகோட்படுகின்றான் எனக் கூறு தல் இயற்கை. எறும்பு முட்டைகொண்டு திட்டையேறியது கண் டுழி மழைபெய்வதாம் என்றது மழைபெய்தது மழைபெய்கின்றது எனக் கூறுதல் தெளிவு. (சஅ)

உசஅ. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே

இது வினைச்சொற்கண் மரபுவழுமைதி கூறுகின்றது.

(இ - ள்.) செயப்படுபொருளை = ஒருவினைமுதல் ஒருதொழில் செய்வதனை உறுவதாகிய பொருளை: செய்தது போலத் தொழிற படக் கிளத்தலும் = தான் அத்தொழிலினைச் செய்த வினைமுதல் போல அத்தொழில் அதன்மேற்படக் கூறுதலும்: வழக்கியல் மரபே = வழக்கின்கண்ணே நடக்கும் முறைமை. எ-று.

எனவே இலக்கணம் அன்றாயிற்று.

உ - ம். இல்லம் மெழுகப்பட்டதென்றது இல்லம் மெழுகிற் றென்றலாம். இங்ஙனம் வினைமுதல்வாய்பாட்டாற் கிளத்தலே யன்றி எளிதின் அடப்படுவதனை நோக்கி அரிசி தானே அட்ட தெனச் செயப்படுபொருளை வினைமுதலாகக் கூறலும் அடங்குதற்குத் தொழிற்படக்கிளத்தலும் என்றார். இவை கருமக்கருத்தா.

இனி ஒன்றெனமுடித்தலான் இவ்வாளெறியும் எனக் கரு வியைத்தானே செய்வதாகக் கூறுங் கருவிக்கருத்தாவும் அரசன் எடுத்த ஆலயம் என ஏவினோனை வினைக்கருத்தாவாகக் கூறும் ஏதுக் கருத்தாவுங் கொள்க. (சக)

உசக. இறப்பே யெதிர்வே யாயிரு காலமுஞ்
சிறப்பத் தோன்று மயங்குமொழிக் கிளவி.

இஃது ஓர் பொருண்மைகுறியாது இறப்பும் எதிர்வும் மயங்கு மென்கின்றது.

(இ - ள்.) இறப்பே எதிர்வே ஆயிரு காலமும் = இறப்பும் எதிர்வுமாகிய இரண்டுகாலமும்: மயங்கும் மொழிக்கிளவி சிறப்பத் தோன்றும் = தம்முள் மயங்கும் மொழிப்பொருளாய் விளங்கத் தோன்றும். எ-று.

உ-ம். இவர் பண்டு இப்பொழிடத்து விளையாடுவர், நாளை அவன் வாளொடுவெகுண்டுவந்தான் பின் நீ என்செய்குவை எனவ ரும். அவை வினைப்பெயரும் வினையுமாய் மயங்குதலின் மயங்கும் வினைச்சொற்கிளவி என்னாது பொதுப்பட மயங்கும் மொழிக்கிளவி யென்றார். (ரு0)

உரு0. ஏனைக் காலமு மயங்குதல வரையார்.

இது நிகழ்வு ஏனையவற்றோடு மயங்குமென்கின்றது.

(இ - ள்.) ஏனைக் காலமும் மயங்குதல் வரையார் = நிகழ்கா லமும் இறப்போடும் எதிர்வோடும் மயங்குதலை நீக்கார் கொள்வர் ஆசிரியர். எ-று.

உ - ம். இவன் பண்டு இப்பொழிலகத்து விளையாடும், நாளை வரும் எனவரும்.

மூன்றுகாலமும் வினைப்பெயரோடு மயங்கும் என்றாரேனும் ஏற்றனவே கொள்க. (ருக)

வினையியல் முற்றும்.

---

ஏழாவது

## இடைச்சொல்லியல்.

உருக. இடையெனப் படுப பெயரொடும் வினையொடு
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே.

என்பது சூத்திரம். நிறுத்தமுறையானே இடைச்சொல் உணர்த்துகின்றமையின் இவ்வோத்து இடைச்சொல்லோத்தென்னும்

பெயர்த்தாயிற்று. இச்சூத்திரம் இடைச்சொற்கெல்லாம் பொது இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) இடையெனப்படுப=இடைச் சொல்லென்று சொல்லப்படுவன: பெயரொடும் வினையொடும் நடைபெற்று இயலும் = பெயரும் வினையும் உணர்த்தும் பொருளைச் சார்ந்துநின்று அவற்றையே வெளிப்படுத்து நடக்கும்: தமக்கு இயல்பு இல=தமக்கென வேறோர்பொருளை உணர்த்தும் இலக்கணமுடைய அல்ல. எ-று.

முன்னும் பின்னும் நிற்குமேனும் பெரும்பான்மையும் இடையேநிற்றலின் இடைச்சொல்லென்றார்.

உ - ம். "அதுகொறோழிகாமநோயே" "வருகதில்லம்மவெஞ் சேரிசேர" எனப் பெயரும் வினையுஞ் சார்ந்து நின்று அவற்றின் பொருளை விளக்கின. தமக்கு இயல்பில எனப் பொதுப்படக்கூறியவதனாற் சாரப்படுஞ் சொல்லின் வேறாய் நிற்றலேயன்றி உண்டான் என்றிசினோரே அருங்குரைத்து என்பனவற்றிற்கு உறுப்பாய் வருதலுங்கொளக. (க)

உ௱௫உ. அவைதாம்,

புணரிய னிலையிடைப் பொருணிலைக் குதநவும
வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயி னுருபா குநவு
மசைநிலைக் கிளவி யாகி வருநவு
மிசைநிறைக் கிளவி யாகி வருநவுந்
தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவு
மொப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலே.

இஃது அவ இடைச்சொற்களின் பாகுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) அவைதாம் = முற்கூறிய இடைச்சொற்கள்தாம் புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதநவும் = இருமொழி தம்மிற் புணர்தல் இயன்ற நிலைமைக்கண் அவற்றின் பொருணிலைக்கு உதவிசெய்து வருவனவும்: வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும் = முதனிலை நின்று காரியத்தினைத் தோற்றுவிக்கும் இடத்துக் காலங்காட்டும் இடைச்சொற்களோடே பாலும் இடமுங் காட்டும் இடைச்சொற்களாய் வருவனவும்; வேற்றுமைப் பொருள்வயின் உருபு

ஆகுநவும் = வேறுபடச்செய்யுஞ் செயப்படுபொருள் முதலாயவற்றின்கண் உருபென்னுங் குறியாய் வருவனவும்: அசைநிலைக் கிளவி ஆகி வருநவும் = தமக்கோர் பொருளின்றித் தாஞ் சார்ந்த பெயர் வினைகளை அசையப்பண்ணும் நிலைமையவாய் வருவனவும்: இசை நிறைக் கிளவி ஆகி வருநவும் = செய்யுட்கண் இசைநிறைத்தலே பொருளாக வருவனவும்: தத்தங் குறிப்பிற் பொருள் செய்குநவும் = கூறுவார் தாந்தாங் குறித்த குறிப்பினாலே அவர் குறித்த பொருளை விளக்கிநிற்பனவும்: ஒப்பு இல் வழியாற் பொருள் செய்குநவும் = நாடக வழக்கினான் உய்த்துணரினன்றி உலகியல்வழக்கினாற் காட்டப்படுவதோர் ஒப்பின்றி நின்ற ஒப்புமைப்பொருண்மையை உணர்த்திவரும் உவமவுருபுகளும்: என்று அப்பண்பினவே நுவலுங் காலை = என்று சொல்லப்பட்ட அவ ஏழியல்பினையுடைய சொல்லுமிடத்து. எ-று.

பொருணிலைக்குதவுவன, எல்லாம் என்பதனை வற்றுச்சாரியை அஃறிணையாக்கியும் நம்முச்சாரியை உயர்திணையாக்கியும் நிற்பன போல்வன. இதனானே காரங் கரம் முதலிய எழுத்துச்சாரியையுங் கொள்க.

உ-ம். உண்டான் என்புழி உண்ணென்னும் முதனிலை காலங் காட்டுகின்ற டகரத்தினையும் பாலும் இடமுங் காட்டும் ஆனினையும் விரித்துநின்றவாறு காண்க. உண்டு என்னும் எச்சம் முதலியனவும் பாலும் இடமும் உணர்த்துமென்பது வந்தான் வந்தது என்னும் வினைகளாற் பெறுதல் "பிரிவுவேறுபடூஉஞ் செய்தியவாகி" என்பதனாற் கொள்க. தன்வினைமுடித்தலென்பதனான் உண்டவனென்றாற் போலுந் தொழிற்பெயரும் நம்பி நங்கை என்னும் பெயர்ப்பெயரும் இவ்விடைச்சொற் பெற்று வருதல் கொள்க. கண்ணகன்ஞாலம் என்புழிக் கண் இடப்பொருளுணர்த்துதலும் ஊர்க்கால் என்புழிக் கால் உருபாகலும் முற்கூறினாம். "அனையையாகன்மாறே" "சிறந்தோன்பெயரன்பிறந்தமாறே" என்புழி மாறென்னும் இடைச்சொல் வினையை அடுத்துக் காரணப்பொருள் உணர்த்திநிற்றலின் மூன்றும் வேற்றுமைப்பொருள் உணர்த்திநின்றதல்லாமை உணர்க. அது மூன்றுவதன்பொருள் உணர்த்திற்றேற் "கூறுய்தோழியாம்வாழுமாறே" என்புழி வாழுமாற்றை என இரண்டாவது விரியாதாம். "மந்திரவிதியின்மரபுளிவழா" என்புழி முறைமையின் வழுவாத அந்தணரென ஐந்தாவது விரிதலானும் "இயல்புளிகோலோச்சுமன்னவன்" என்புழி முறைமையிலே செங்கோல் நடாத்தும் என ஏழனுருபு விரிதலானும் உளியென்பது மூன்றனுருபின் பொருள்பட வந்ததன்று,

பகுதிப்பொருள்விகுதியாய்நின்று தனக்கேற்ற உருபை ஏற்றுநின்றது. இம்மூன்றும் புணரியலுள்ளும் வினையியலுள்ளும் வேற்றுமையோத்தினுள்ளுங் கூறி இடைநின்ற மூன்று ஈண்டுக்கூறினார். இறுதிநின்ற ஒப்பில்வழியாற் பொருள்செய்யும் உவமவுருபுகள் "அன்ன ஏய்ப்ப" என்னுஞ் சூத்திரத்தான் உவம இயலுட் கூறுப. அவை ஒப்பின்றி ஒப்புணர்த்துதல் "ஒப்புமுருவும்வெறுப்புமென்றா" என்னும் பொருளியற் சூத்திரத்தான் உணர்க. (௨)

௨௫௩. அவைதாம்,

முன்னும் பின்னு மொழியடுத்து வருதலுந்
தம்மீறு திரிதலும் பிறிதவ ணிலையலு
மன்னவை யெல்லா முரிய வென்ப.

இஃது இன்னும் அவற்றுக்கோர் பொதுவிதி கூறுகின்றது.

(இ - ள்.) அவைதாம் = முற்கூறிய இடைச்சொற்கள்தாம் இடைவருதலேயன்றி: மொழி முன்னும் பின்னும் அடுத்து வருதலும் = தம்மாற்சாரப்படுஞ் சொற்களை முன்னும் பின்னுந் தாம் அடைந்து வருதலும்: தம் ஈறு திரிதலும் = தம் ஈற்றெழுத்து வேறுபட்டு வருதலும்: பிறிது அவண் நிலையலும் = ஓர் இடைச்சொல் நிற்கின்ற இடத்தே மற்றோர் இடைச்சொல் நிற்றலுமாகிய: அன்னவை எல்லாம் உரிய என்ப = அத்தன்மையையுடைய இலக்கணங்களெல்லாம் இவ்விடைச்சொற்கு உரிய என்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். அதுமன் கேண்மியா இவை முன் அடுத்தன; "கொன்னூர்துஞ்சினும்" "ஓஒவினிதே" இவை பின் அடுத்தன; "உடனுயிர்போகுகதில்ல" இது திரிந்தது; "வருகதில்லம்ம வெஞ்சேரி சேர" "பண்டறியாதீர்போற்படர்கிற்பிர்மற்கொலோ" இவை பிறிது நின்றன. அன்னவையெல்லாம் என்றதனான் "மன்னைச்சொல்லே" "கொன்னைச்சொல்லே" எனத் தம்மை உணர நின்றவழி ஈறுதிரிதலும் "னகாரைமுன்னர்" என எழுத்துச்சாரியை ஈறுதிரிதலுங் கொள்க. (௩)

௨௫௪. கழிவே யாக்க மொழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே.

இது தத்தங் குறிப்பிற் பொருள்செய்வனவற்றுள் ஒன்றன் பொருட்பாகுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) மன்னைச் சொல் கழிவே ஆக்கம் ஒழியிசைக்கிளவி என்று அம்மூன்று என்ப = மன்னைச்சொல் கழிவுபொருண்மையும் ஆக்கப்பொருண்மையும் எச்சமாய் ஒழிந்துநின்றசொற்பொருண்மை யுமென்று சொல்லப்பட்ட அம்மூன்று கூற்றையுடையதென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். "சிறியகட்பெறினேயெமக்கீயுமன்னே" 'பொதுமலரணி யவின்றுவரினதுமன்னே" "பரிசிலராவியாகியகோவே - கூரியதோர் வாண்மன்திட்டபமின்று" எனவரும். (ச)

உருரு. விழைவே கால மொழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப தில்லைச் சொல்லே.

இதுவும் அது.

(இ - ள்.) தில்லைச்சொல் விழைவே காலம் ஒழியிசைக்கிளவி என்று அம்மூன்று என்ப = தில்லைச் சொல் விருப்பமுங் காலமும் ஒழிந்துநின்றபொருண்மையுமென்று சொல்லப்பட்ட அம்மூன்று கூற்றையுடையதென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். "வார்ந்திலங்குவையெயிற்றுச்சின்மொழி - யரிவையைப் பெறுகதில்லம்மயானே" எனப் பெறுதற்கண் உளதாகிய விருப்பங் கூறிற்று. "வருகதில்லம்மவல்லேவருகதில்லம்மவல்லே" என வேந் துவிவெழுத்தூது ஆங்கு இசைப்ப நூலரிமாலைசூடிக் காலிற் தமி யன்வந்த இது காலங்குறித்தது. "வருகதில்லம்மவெஞ்சேரிசேர' என வந்தக்கால் இன்னதுசெய்வலென ஒழியிசைகுறித்தது. (ரு)

உருசு. அச்சம் பயமிலி காலம் பெருமையென்
றப்பா ணன்கே கொன்னைச் சொல்லே.

இதுவும் அது.

(இ - ள்.) கொன்னைச் சொல் அச்சம் பயமிலி காலம் பெருமை யென்று அப்பால் நான்கே=கொன்னைச்சொல் அச்சப்பொருள் பய மின்மைப்பொருள் காலப்பொருள் பெருமைப்பொருளென்று கூறப் பட்ட அக்கூற்று நான்கேயாம். எ-று.

உ-ம். "கொன்முனையிரவூர்போல" என அச்சமுங் "கொன்னே கழிந்தன்றிளமையும்" எனப் பயமின்மையுங் "கொன்வரல்வாடை" எனக் காதலன் நீங்கிய காலம் அறிந்து வருதலையுடைய வாடை

யெனக் காலமுங் "கொன்னூர்துஞ்சினும்" எனப் பெருமையும் உணர்த்திற்று. (௬)

௨௫௭. எச்சஞ் சிறப்பே யைய மெதிர்மறை
முற்றே யெண்ணே தெரிநிலை யாக்கமென்
றப்பா லெட்டே யும்மைச் சொல்லே.

இதுவும் அது.

(இ - ள்.) உம்மைச்சொல் எச்சஞ் சிறப்பே ஐயம் எதிர்மறை முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்று அப்பால் எட்டே = உம்மென்னுஞ் சொல் எச்சத்தைக் குறிப்பதுஞ் சிறப்பைக் குறிப்பதும் ஐயத்தைக் குறிப்பதும் எதிர்மறையைக் குறிப்பதும் முற்றைக் குறிப்பதும் எண்ணைக் குறிப்பதுந் தெரிநிலையைக் குறிப்பதும் ஆக்கத்தைக் குறிப்பதுமென அக்கூற்று எட்டாம். எ-று.

எச்சம் இறந்ததுதழீஇயதும் எதிரதுதழீஇயதுமென இருவகைத்து. சாத்தனும்வந்தான் என்னும் உம்மை கொற்றனும்வந்தான் என எதிரதுதழீஇயிற்று. பின் வந்த கொற்றனும்வந்தான் என்பது முன் நின்ற சாத்தனும் வந்தான் என்பதனைத் தழுவுதலின் இறந்தது தழீஇயிற்று. இனி இவவிரண்டினையும் எதிர்காலந் தழீஇயினவாக்கி இன்று சாத்தனும்வரும் நாளைக் கொற்றனும்வரும் என்பன எதிரதுதழீஇயின என்றுமாம். இன்னும் இவ்வெச்சந்தான் யான் கருவூர்க்குச்செல்வல் என்றாற்கு யானும் அவ்வூர்க்குப் போதுவலென முழுவதூஉந் தழுவுவதும் அவ்வாறு கூறினாற்கு யானும் உறையூர்க்குப் போதுவலென ஒருபுடை தழுவுவதுமென இருவகைத்தாம். சிறப்பு உயர்வுசிறப்பும் இழிவுசிறப்புமென இருவகைத்து. "உப்பொடுநெய்பாறயிர்காயம்பெய்தடினுங் - கைப்பறாபேய்ச்சுரையின் காய்" "குறவருமருளுங்குன்றத்துப்படினே" "ஊர்க்குமணித்தே பொய்கை" என்பன உயர்வு. அவ்வூர்ப்பூசையும் புலால் தின்னாது என்பது இழிவு. "ஒன், றிரப்பான்போலெளிவந்துஞ்சொல்லுமுலகம்-புரப்பான்போல்வதோர்மதுகையுமுடையன் - வல்லாரைவழிபட்டொன்றறிந்தான்போல - நல்லலார்கட்டோன்றுமடக்கமுமுடைய-னில்லோர் புன்கணீகையிற்றணிக்க - வல்லான்போல்வதோர்வண்மையுமுடையன்னொருவன்" என்புழி இன்னானென்று துணியாமைக்கண் வருதலின் ஐயம். "பொய்கைக்குச்-செய்ததுமன்றேசிறுகான்யாறே" என்பதும் அது. சாத்தன்வருதற்குமுரியன் என்பது வாராமைக்கும்

உரியனென எதிர்மறையை ஒழிபாக உடைத்தாய்நிற்றலின் எதிர்மறை. இஃது "அஃறிணை விரவுப்பெயரியல்புமாருளவே" எனப் பண்புபற்றியும் வரும். இது பிறிதோர்பொருளினைத் தழுவாது ஒருபொருளின்வினையை மறுத்துநிற்றலின் எச்சத்தின் வேறுபாயிற்று. மேல் ஆசிரியர் "எதிர்மறையெச்சம்" என்றமையின் இஃது எச்சத்தின் கூறும். தமிழ்நாட்டுமூவேந்தரும்வந்தார் "யாதுமூரே" "நாளுமன்னன்புகழுமன்னை" என்பன முற்றும்மை. "நிலனுநீருந்தீயும்வளியு-மாகாயமுமெனப்பூதமைந்து" என்பது எண். "மண்டிணிந்தநிலனுநிலனேந்தியவிசும்பும் விசும்புதைவருவளியும்" என்பதும் அது. "இருநிலமடிதோய்தலிற்றிருமகளுமல்ல - ளரமகளுமல்லளிவள்யாராகும்" என்பது திருமகளோ அரமகளோ என ஐயுறுது ஆராய்தற்கண் வருதலிற் றெரிநிலை. "ஐதேய்ந்தன்றுபிறையுமன்று-மைதீர்ந்தன்றுமதியுமன்று - வேயமன்றன்றுமலையுமன்று - பூவமன்றன்றுசுனையுமன்று" என்பதும் அது. நெடியனும் வலியனுமாயினான் என்பது ஆக்கம். "செப்பேவழீஇயினும்வரைநிலையின்றே" எனபது இலக்கணமாக்கிக்கோடல் குறித்தமையின் ஆக்கமுமாம். (எ)

உருஅ. பிரிநிலை வினாவே யெதிர்மறை யொழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
யிருமூன் றென்ப வோகா ரம்மே.

இதுவும் அது.

(இ - ள்.) பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ இருமூன்று எனப ஓகாரம்மே = பிரிநிலைப்பொருண்மை வினாப்பொருண்மை எதிர்மறைப்பொருண்மை எஞ்சிநின்றசொற்பொருண்மை ஆராயுநிலைமையையுடையபொருண்மை என்கின்ற இவற்றை மிகுதிப்பொருண்மையோடே தொகுத்து ஓகாரப்பொருண்மை ஆறு என்று கூறுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். "யானோதேறேனவர்பொய்வழங்கலரே" இது தேறுவார் பிறரிற் பிரித்தலிற் பிரிநிலை. சாத்தனுண்டானோ இது வினா. யானோ கொள்வேன் இஃது எதிர்மறை. கொளலோகொண்டான் இது கொண்டுய்யப்போகலானாயினான் என்றலின் ஒழியிசை. திருமகளோ அல்லள் அரமகளோ அல்லள் இவள்யார் எனபது தெரிநிலை. "ஒஒவுவமையுறழ்வின்றியொத்ததே" இது மிகுதி உணர்த்தலிற் சிறப்பு.

"மாறுகொளெச்சமும்வினாவுமையமும்" என்னுஞ் சூத்திரத்தால் ஐயமுங்கொண்டார். அது பத்தோபதினொன்றோ எனவரும்.()

உருகூ. தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே
யீற்றசை யிவ்வைந் தேகா ரமமே.

இதுபெரும்பான்மை பொருள்படுமாறுஞ் சிறுபான்மை அசைநிலையாமாறுங் கூறுகின்றது.

(இ - ள்.) தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே ஈற்றசை இவவைந்து ஏகாரம்மே = தெளிவுபொருண்மை வினாப்பொருண்மை பிரிநிலைப்பொருண்மை எண்ணுப்பொருண்மை ஈற்றசையாதலென இவவைந்து வகைப்படும் ஏகாரம். எ-று.

உ-ம். உண்டேமறுமை நீயேயுண்டாய் அவருளிவனேகள்வன் "நிலனேநீரேதீயேவளியே" "கடல்போறோன்றல்காடிறந்தோரே" எனவரும். ஈற்றசை என்றதனைச் செய்யுள் ஈற்றிற்கணன்றி "வாடாவள்ளியங்காடிறந்தோரே" எனச் சொல்லின் ஈற்றினுங் கொள்க. யானேகொண்டேன் என்புழி நீயே கொண்டாயென்னும் எதிர்மறைப்பொருள் தருதல் "மாறுகொளெச்சமும்வினாவும்" என்பதனாற் கொள்க. (கூ)

உகூ௦. வினையே குறிப்பே யிசையே பண்பே
எண்ணே பெயரோ டவ்வறு கிளவியுங்
கண்ணிய நிலைத்தே யெனவென் கிளவி.

இது பொருள்படுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) வினையே குறிப்பே இசையே பண்பே எண்ணே பெயரோடு அவ்வறு கிளவியுங் கண்ணிய நிலைத்தே என என் கிளவி = வினைச்சொல்லின் பொருண்மையும் குறிப்பாய்வரும் உரிச்சொல்லின் பொருண்மையும் இசைக்கண் வரும் உரிச்சொல்லின் பொருண்மையும் பண்பின்கண் வரும் உரிச்சொல்லின் பொருண்மையும் எண்ணுப்பொருண்மையும் பெயர்ப் பொருண்மையோடே கூடி அவ்வாறு பொருண்மையுந் தான் இடைநின்று கருதிப் பின் வருஞ்சொல்லோடு இயைவிக்கும் நிலைமையையுடைத்து என என்னுஞ்சொல். எ-று.

உ-ம். கார்வருமெனக்கருதிநொந்தாள் "துண்ணெனத்துடித்தது மனம்" ஒல்லெனவொலித்து வெள்ளெனவிளர்த்தது நிலனென நீரெனத்தீயெனவளியென "அழுக்காறெனவொருபாவி" எனவரும். "நெடுநீர்க்குட்டத்துத்துடுமெனப்பாய்ந்து" எனபதும் இசை. (சு௦)

உகூக. என்றென் கிளவியு மதனோ ரற்றே.

இதுவும் அது.

(இ - ள்.) என்று என்கிளவியும் அதனோரற்றே = என்று என்னும் இடைச்சொல்லும் என என்பதுபோல் அவ்வாறு பொருளுங் குறித்துவரும். எ-று.

உ-ம். "நரைவருமென்றெண்ணி" "விண்ணென்றுவிணைத்தது" "ஒல்லென்றொலிக்குமொலிபுனலூரற்கு" பச்சென்றுபசத்தது நிலனென்றுநீரென்று "பாரியென்றொருவனுளன்" எனவரும். (கக)

உகூஉ. வினையி னில்லை தன்னிடத் தியலும்.

இது முற்கூறிய இல்லென்பதற்குப் புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) வினையின் இல்லை தன்னிடத்து இயலும் = "அம் மூன்றென்பதில்லைச்சொல்லே" என்ற மூன்றனுள் வினையின்கண் வரும் இல்லை தன்மைக்கண் அல்லது வாராது. எ-று.

உ-ம். முற்காட்டியது.

எனவே ஏனைய எல்லாவிடத்திற்கும் உரியவாயின. (கஉ)

உகூங. தெளிவி னேயுஞ் சிறப்பி னோவு
மளபி னெடுத்த விசைய வென்ப.

இஃது ஏகார ஓகாரங்கட்குப் புறனடைகூறுகின்றது.

(இ - ள்.) தெளிவின் ஏயுஞ் சிறப்பின் ஓவும் அளபின் எடுத்த இசைய என்ப = முற்கூறிய தெளிவின்கண் வரும் ஏகாரமுஞ் சிறப்பின்கண் வரும் ஓகாரமும் இரண்டுமாத்திரையின்மிக்கு மூன்று மாத்திரையினையுடைய என்று கூறுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். முற்காட்டியன. (கங)

உகூச. மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
யப்பா லிரண்டென மொழிமனார் புலவர்.

இதுபொருள்படுமாறும் அசைநிலையுங் கூறுகின்றது.

(இ - ள்.) மற்று என் கிளவி வினைமாற்று அசைநிலை அப்பால் இரண்டென மொழிமனார் புலவர் = மற்று என்னுஞ் சொல் முன்

சொல்கின்றது ஒழிய இனி வேறொன்று என்னும் பொருண்மையும் அசைநிலைபாதலும் என்னும் அக்கூற்று இரண்டாம் என்று கூறுவர் புலவர், எ-று.

உ-ம். "இனிமற்றொன்றுரை" "மற்றறிவாநல்வினையாமிளையம்" "மற்றுங்கூட்டுமேனைமடிதுயிலே" எனத் தொழிலுங் காலமும் இடமும்பற்றி வரும். "அதுமற்றவலங்கொள்ளாது" என்பது அசைநிலை.

உரையாடாநின்றுழிப் பொருள் குறியாது மற்றோ எனவும் அசைநிலை வரும் என்பாரும் உளர். (கச)

உகரு. எற்றென் கிளவி யிறந்த பொருட்டே.

இது பொருள்படுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) எற்று என் கிளவி இறந்த பொருட்டே = எற்று என்னுஞ் சொல் ஒன்றினிடத்து நின்றும் ஒன்று போயிற்று என்னும் பொருண்மை உணர்த்துதலுடைத்து. எ-று.

உ-ம். "எற்றெனுடம்பினெழினலம்" இஃது என் நலம் இறந்ததென நின்றது. "எற்றேற்றமில்லாருள்யானேற்றமில்லாதேன்" என்பதூஉம் இதுபொழுது துணிவில்லாருட் துணிவில்லாதேன் யான் என்று துணிவிறந்ததென்பதுபட நின்றது. (கரு)

உகசு. மற்றைய தென்னுங் கிளவி தானே
சுட்டுநிலை யொழிய வினங்குறித் தன்றே.

இதுவும் அது.

(இ - ள்.) மற்றையது என்னுங் கிளவிதானே = மற்றையது எனப் பெயர்க்கு முதனிலையாய் வரும் மற்றை என்னும் ஐகார ஈற்று இடைச்சொல்: சுட்டுநிலை ஒழிய இனங் குறித்தன்றே = ஒருவன் முன்னர்க் கருதப்பட்டபொருளொழிய அதன் இனப்பொருளைக் கருதிநிற்கும். எ-று.

உ-ம். ஆடை கொணர்ந்தவழி அவவாடை வேண்டாதார் மற்றையது கொண்டுவா என்றால் அதற்கு இனமாகிய பிற ஆடைகுறித்துநிற்கும். இனிச் சிறுபான்மை மற்றையாடை எனத் தானேயும் வரும்.

அஃது அவன் என்னுந் தொடக்கத்தனவற்றிற்கு மற்றையஃது மற்றையவன் என அவ்விடைச்சொல் முதனிலையாய் வருதலின்

மற்றையெனு இடைச்சொல்லைப் பிரித்தோதாது மற்றையதென ஒன்றாக ஓதினார். (கசா)

உசுஎ. மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்.

இதுவும் அது.

(இ-ள்.) மன்ற என் கிளவி தேற்றஞ் செய்யும் = மன்ற என்னுஞ் சொல் தெளிவுப் பொருண்மையை உணர்த்தும். எ-று.

உ-ம். "மடவைமன்றவாழியமுருகே" என மன்ற அறியாமையையே தெளிவித்தது. (கஎ)

உசுஅ. தஞ்சக் கிளவி யெளிமைப் பொருட்டே.

இதுவும் அது.

(இ-ள்.) தஞ்சக் கிளவி எளிமைப் பொருட்டே = தஞ்சம என்னுஞ் சொல் எளிது என்னும பொருண்மையையுடைத்து. எ-று.

உ-ம். "முரசுகெழுதாயத்தரைசேதஞ்சம்" எனத் தஞ்சம் அரசு கொடுத்தல் எளிதென நின்றது. (கஅ)

உசுகூ. அந்தி லாங்க வசைநிலைக் கிளவியென்
றாயிரண் டாகு மியற்கைத் தென்ப

இது பொருள்படுமாறும் அசைநிலையுங் கூறுகின்றது.

(இ-ள்.) அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவி என்று ஆயிரண்டு ஆகும் இயற்கைத்து என்ப = அந்தில் என்னுஞ் சொல் ஆங்க எனனும் இடப்பொருள் உணர்த்துதலும் அசைநிலைச்சொல்லாதலும் எனனும அவ்விரண்டு கூறும இயற்கையையுடைத்து என்று கூறுவா புலவர். எ-று.

உ-ம். "வருமேசேயிழையந்தில்" "அந்திபகச்சினன்கழலினன்" என இடமும் அசைநிலையுமாய் நினறது. (ககூ)

உஎ0. கொல்லே யையம்.

இது பொருள்படுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) கொல்லே ஐயம் = கொல் என்னுஞ் சொல் ஐயப் பொருண்மையை உணர்த்தும். எ-று.

உ-ம். "யாதுகொன்மற்றவர்நிலையே."

"இதனளவுண்டுகொன்மதிவல்லோர்க்கே" எனத் துணிவின் கண் ஐயஞ் சிறிதுநினைத்தலும் ஒன்றெனமுடித்தலாற் கொள்க.(உ0)

உஎக. எல்லே யிலக்கம்.

இதுவும் அது.

(இ - ள்.) எல்லே இலக்கம் = எல் என்னுஞ் சொல் விளங்கு தற் பொருண்மை உணர்த்தும். எ-று.

உ-ம். "எல்வளையெம்மொடுநீவரின்" எனவரும். (உக)

உஎஉ. இயற்பெயர் முன்ன ராரைக் கிளவி
பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே.

இஃது ஆர் என்னும் இடைச்சொன்முடிபு கூறுகின்றது.

(இ - ள்.) இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி = இருதிணைக்கும் இயலும் பெயர்க்கும் அஃறிணை இருபாற்கும் இயலும் பெயர்க்கும் முன்னர் வரும் ஆர் என்னும் இடைச்சொல்: பலர்க்கு உரி எழுத்தின் வினையொடு முடிமே = ரஃகான் ஒற்றினை ஈறாக உடைய வினைச் சொல்லான் முடியும். எ-று.

உ-ம். பெருஞ்சேந்தனார்வந்தார் முடவனார்வந்தார் முடத்தாமக் கண்ணியார்வந்தார் தந்தையார்வந்தார் எனவும், கிளியார்வந்தார் எனவும் வரும்.

பெரும்பான்மை இயற்பெயர் கூறவே நம்பியார்வந்தார் நங்கையார்வந்தார் எனச் சிறுபான்மை உயர்திணைப்பெயர் முன்னரும் வருதல் ஒன்றெனமுடித்தலாற் கொள்க. இவை தாம் ரகர ஈற்றுப் பெயரன்மையின் விளியேற்கும் இடத்து இகர ஈறும் ஐகார ஈறுமாய் நின்றே விளியேற்குமென்று உணர்க. ஒருமைப்பெயர்நின்று ஆரைக் கிளவியை ஏற்றலின் இவை ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவியின் வேறாயின. (உஉ)

உஎ௩. அசைநிலைக் கிளவி யாகுவழி யறிதல்.

இது மேலதற்குப் புறனடை.

(இ - ள்.) அசைநிலைக் கிளவி ஆகுவழி அறிதல் = அவ ஆரென்னுஞ்சொல் அசைநிலைச்சொல்லாம் இடம் அறிக. எ-று.

'ஆகுவழியறிதல்' என்றதனான் உம்மைமுன்னரும் ஈற்று வினைமுன்னரும் வருதல் கொள்க.

உ-ம். "பெயரினாகியதொகையுமாருளவே." "எல்லாவுயிரொடுஞ்செல்லுமார்முதலே" எனவரும். (உங)

உஎச. ஏயுங் குரையு மிசைநிறை யசைநிலை
யாயிரண் டாகு மியற்கைத் தென்ப.

இஃது இசைநிறையும் அசைநிலையுங் கூறுகின்றது.

(இ - ள்.) ஏயுங் குரையும் இசைநிறை அசைநிலை ஆயிரண்டு ஆகும் இயற்கைத்து என்ப = ஏ என்னும் இடைச்சொல்லுங் குரை என்னும் இடைச்சொல்லும் இசைநிறையும் அசைநிலையுமென ஒரோவொன்று அவ்விரண்டு இயல்பினையுடைத்து என்று கூறுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். "ஏஎயிஃதொத்தனாணிலன்றன்னொடு" இஃது இசைநிறை. ஏஎயெனச்சொல்லியது இஃது அசைநிலை. "அளிதோதானே யதுபெறலருங்குரைத்தே" இஃது இசைநிறை. "பல்குரைத்துன்பங்கள்சென்றுபடும்" இஃது அசைநிலை. தேற்றேகாரம் முதலியனபோலச் சார்ந்தமொழியோடு ஒன்றுபட்டு இசையாது தொடர்மொழி முதற்கட் பிரிந்திசைத்தலின் வேறுகூறினார். (உச)

உஎரு. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல்.

இஃது அசைநிலை கூறுகின்றது.

(இ - ள்.) மா என் கிளவி வியங்கோள் அசைச்சொல் = மா என்னும் இடைச்சொல் பெரும்பான்மை வியங்கோளைச் சார்ந்து அசைநிலையாய் வரும். எ-று.

உ-ம். "புற்கையுண்கமாகொற்கையோனே" எனவரும். (உரு)

உஎசு. மியாயிக மோமதி யிகுஞ்சின் னென்னு
மாவயி னாறு முன்னிலை யசைச்சொல்.

இதுவும் அது.

(இ - ள்.) மியா இக மோ மதி இகுஞ் சின் என்னும் ஆவயின் ஆறும் = மியா இக மோ மதி இகும் சின் என்றுசொல்லப்பட்ட அவ்விடத்து இடைச்சொல் ஆறும்: முன்னிலை அசைச்சொல் = முன்னிலைப்பொருளை உணர்த்தும் அசைச்சொல்லாம். எ-று.

உ-ம். கேண்மியா சென்மியா எனவும், "கண்பனியான்றிக வென்றிதோழி" எனவும் "காமஞ்செப்பாதுகண்டதுமொழிமோ"என வும், "உரைமதிவாழியோவலவ" எனவும், "மெல்லம்புலம்பகண்டி கும்" எனவும் (இது காணென்றவாறு), "காப்புப்பூண்டிசிற்கடையும் போகல்" எனவும் வரும். (உசு)

உஎஎ. அவற்றுள்,
இகுமுஞ் சின்னு மேனை யிடத்தொடுந்
தகுநிலை யுடைய வென்மனார் புலவர்.

இது மேலதற்குப் புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் இகுமுஞ் சின்னும் = முற்கூறிய ஆற னுள் இகுமுஞ் சினனும்: ஏனை இடத்தொடுந் தகுநிலை உடைய என்மனார் புலவர் = ஒழிந்த தன்மைச்சொல்லோடும் படர்க்கைச் சொல்லோடும் பொருந்தும் நிலைமையுடைய என்று கூறுவர் புல வர். எ-று.

உ-ம். "கண்டிகுமல்லமோ" "கண்ணும்படுமோவென்றிசின்யா னே" எனத் தன்மைக்கண்ணும், "புகழ்ந்திகுமல்லரோபெரிதே" "யாரஃதறிந்திசினோரே" எனப் படர்க்கைக்கண்ணும் வந்தன.

முருகாற்றுப்படையுள் "விளிவின் - றிருணிறமுந்நீர்வளைஇய வுலகத் - தொருநீயாகித்தோன்றவிழுமிய - பெறலரும்பரிசினல்குமதி பலவுடன் * * * மலைகிழவோனே." என மதி படர்க்கைக்கண்ணும் வந்ததனைத் 'தகுநிலையுடைய' என்றதனானுதல் "அவ்வச்சொல்லிற் கவையவை" என்னுஞ் சூத்திரத்தானுதல் அமைத்துக்கொள்க. அன்றி மதியை அறிவாக்கிப் பல அறிவுடனே நீயொருவனேயாகப் பரிசில் நல்கும் எனப் பொருள்கூறுவாரும் உளர்.

"ஊனுமூணுமுனையின்" என்னும் புறப்பாட்டினுட் "சென்மோ பெருமவெம்விழைவுடைநாட்டென" என்பதனையுந் தன்மைக்கண் மோவருமென இவ்வாறு அமைத்தலும் ஒன்று; அன்றிப் பெரும எம் விழைவுடைநாட்டே நீசெல்லென்று சுற்றத்தார் தலைவனைநோக்கிக்

கூற அப்பொருளனும் பாட்டுடைத்தலைவனைநோக்கிப் பின்னுங் கூறினுகைப் பொருள்கூறுதலும் ஒன்று. (உஎ)

உஎஅ. அம்ம கேட்பிக்கும்.

இது பொருள்படுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அம்ம கேட்பிக்கும் = அம்ம என்னுஞ் சொல் யான் கூறுகின்றதனைக் கேளென்று ஒருவர்க்குக் கேட்பிக்கும் பொருண்மையினை உணர்த்திநிற்கும். எ-று.

சொல்லொடு பொருட்கு ஒற்றுமைகருதிக் கேட்பிக்குமென்றார்.

உ-ம். "அம்மவாழிதோழி."

"அம்மவென்னுமசைச்சொனீட்டம்" என்புழியும் பொருள் தந்தே நிற்குமாறு கூறியவாறு ஆண்டு உணர்க. (உஅ)

உஎகூ. ஆங்க வுரையசை.

இதுவும் அது.

(இ - ள்.) ஆங்க உரையசை = ஆங்க என்னும் இடைச்சொல் கட்டுரைக்கண்ணே அசைத்தநிலையாய் வரும். எ-று.

கட்டுரை, புனைந்துரை; அசைத்தல் சேர்த்துதல்.

உ-ம். ஆங்கக்குயிலுமயிலுங்காட்டிக்-கேசவனைவிடுத்துப்போகியோளே" என்புழி அங்ஙனேயெனப் புனைந்துரைத்துநின்றது. சிறிது பொருளுணர்த்துவனவற்றை உரையசையென்றும் பொருளுணர்த்தாது சொற்களை அசைத்துநிற்பனவற்றை அசைநிலையென்றுங் கூறுதல் ஆசிரியர் கருத்தாதலை இரண்டு அதிகாரத்துங் கண்டுகொள்க. (உகூ)

உஅ0. ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்.

இதுவும் அது.

(இ - ள்.) ஒப்பில் போலியும் அப்பொருட்டு ஆகும் = ஒன்றற்கொன்று ஒக்குமென்னும் பொருள் தன்கணின்றி வரும் போலியென்னுஞ் சொல்லும் அக்கட்டுரைக்கண்ணே அசைத்தநிலையாகிய பொருளையுடைத்தாய் வரும். எ-று.

அப்பொருட்டு எனவே ஆங்கவும் பொருள் தருதல் பெற்றும்.

உ-ம். "மங்கலமென்பதோரூருண்டுபோலும்" "நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல்வதூஉ - மெரிப்பச்சுட்டெவ்வநோயாக்கும்" எனப் போலுமென்னும் இடைச்சொல் ஊரையும் நெய்யையும் புணர்ந்து நின்றவாறு காண்க. (௩0)

உஅக. யாகா,
பிறபிறக் கரோபோ மாதென வரூஉ
மாயேழ் சொல்லு மசைநிலைக் கிளவி.

இஃது அசைநிலை கூறுகின்றது.

(இ - ள்.) யா கா பிற பிறக்கு அரோ போ மாது என வரூஉம் ஆயேழ் சொல்லும் அசைநிலைக்கிளவி = யா கா பிற பிறக்கு அரோ போ மாது என்று சொல்லவருகின்ற அவ்வேழுசொல்லுந் தாஞ் சேர்ந்தசொல்லை அசைத்துநிற்கும் நிலைமையையுடைய சொல்லாம்.

உ-ம். யாபன்னிருவர் மாணுக்கருளரகத்தியனுர்க்கு எனவும் "இன்னுந்தோழியாசுவாகதம்போதுகவீங்கென" என்று பாடமாயின் அதுவும் இதற்குதாரணம், "புறநிழற்பட்டாளோவிவளிவட்டகாண் டிகா" எனவும் "தான்பிறவரிசையறிதலிற்றன்னுந்தூக்கி" எனவும் "நசைதரவந்தோர்நசைபிறக்கொழிய" எனவும் "நோதகவிருங்குயி லாலுமரோ" எனவும் "பிரியின்வாழாதென்போதெய்ய" எனவும் "விளிந்தன்றுமாதவர்த்தெளிந்தவென்னெஞ்சே" எனவும் வரும். ()

உஅஉ. ஆக வாக லென்ப தென்னு
மாவயின் மூன்றும் பிரிவி லசைநிலை.

இது தாஞ் சார்ந்துநின்ற சொல்லின் பொருண்மையை உணர்த்திநிற்கும் இடைச்சொற்களைக் கூறுகின்றது,

(இ - ள்.) ஆக ஆகல் என்பது என்னும் ஆவயின் மூன்றும் = ஆக ஆகல் என்பது என்று சொல்லப்படுகின்ற அவ்விடத்து மூன் றும்: பிரிவில் அசைநிலை = தாஞ் சார்ந்த சொற்களின் பொருள் களைப் பிரிதலின்றி உணர்த்தும் அசைநிலையாம்.

உ-ம். "காரெதிர்கானம்பாடினேமாக" "இனைதலானுளாக" "சொல்லிற்பாணிநின்றன்னுக" எனச் செயவெனெச்சம் முற்றாய்த்

திரிவுழி ஆகவென்னும் இடைச்சொல் வந்து அவற்றின் பொருளே உணர்த்திச் செயவெனெச்சமாய் நின்றன. இவ்வினையெச்சம் முற்று வினைமுதலைக் கொள்ளும் வழி ஆகலென்னும் இடைச்சொல்லைப் பெற்றுநிற்கும். "அருளாயாகலோகொடிதே" "தன்பெயராகலினாணி" "அனையையாகன்மாறே" என ஆகலென்னும் வினைக்குறிப்புச்சொல் சார்ந்துநின்ற சொற்பொருளையே உணர்த்திநின்றன. தெரிநிலைக்குங் குறிப்பிற்கும் உரிய இவ்விரண்டு இடைச்சொற்களுஞ் சிறுபான்மை யவாகலின் வினையியற்கண் எடுத்து ஓதாராயினர்.

"நடுங்குநோய்தீர்க்குநின்குறிவாய்த்தாளென்பதோதுறந்தவை" "எறிதிரையிமிழ்கானலெதிர்கொண்டாளென்பதோதுறந்தவை" என்புழி என்பதென்றது என்றுசொல்லப்படுவதென்னும் பொருள் தந்து நில்லாது வாய்த்தாள் எதிர்கொண்டாள் என்னுஞ் சொற்கள் உணர்த்திய செய்ந்நன்றியைத் தானும் உணர்த்திநின்றவாறு காண்க.

இவை தாஞ் சார்ந்த சொல்லை அசைத்தேநிற்குமென்றலிற் பிரிவிலசைநிலை என்றார். இங்ஙனம் நில்லாது வழக்கின்கண் ஆகஆக என அடுக்கிவந்து உடம்படாமையும் ஆதரமின்மையுமாகிய பொருள் தந்து நிற்குமென்றல் அசைநிலைக்கு ஆகாமையின் அவவாறு கூறுதல் பொருளன்மை உணர்க. (௩௨)

உ௮௩. ஈரள பிசைக்கு மிறுதியி லுயிரோ
யாயிய னிலையுங் காலத் தானு
மளபெடை நிலையுங் காலத் தானு
மளபெடை யின்றித் தான்வரு காலையு
முளவென மொழிப பொருள்வேறு படுதல்
குறிப்பி னிசையா னெறிப்படத் தோன்றும்.

இது பொருள்வேறுபடுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) ஈரளபு இசைக்கும் இறுதியில் உயிரே = இரண்டு மாத்திரையை இசைக்கும் "உயிர்ஔவெஞ்சியவிறுதியாகும்" என்றதனான் மொழிக்கு ஈறாகாதென்ற ஔகாரம்: ஆயியல் நிலையுங் காலத்தானும் = "கவவோடியையின்ஔவுமாகும்" என்ற இயல்பின்கண்ணே கௌ வௌ என மொழிக்கு ஈறாய்நிற்குங் காலத்துக்கண்ணும்: எவ்வாறு நிற்குமெனின்; அளபெடை நிலையுங் காலத்தானும் அளபெடை இன்றித் தான் வரு காலையும் உள என மொழிப பொருள்

வேறுபடுதல் = அவை அளபெடுத்துநிற்குங் காலத்தினும் அவை அளபெடாது தானே வந்துநிற்குங் காலத்தினும் பொருள் வேறுபடுதல் உள என்று கூறுவர் ஆசிரியர்: குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும் = அப்பொருள் வேறுபாடுதான் சொல்லுவான் குறிப்பினான் உளதாம் ஓசைவேறுபாட்டான் வழிப்படப் புலப்படும். எ-று.

முன்னர்நின்ற உம்மை சிறப்பும்மை, பின்னர் நின்ற இரண்டும் எண்ணும்மை.

ஆசிரியர் முன்னர்க் கூறியதனை ஈண்டும் இறுதியிலுயிரே என்று ஒருதலைமொழியென்னும் உத்தியாகக் கூறினமையானும் உரையாசிரியரும் "நெட்டெழுத்தேழேயோரெழுத்தொருமொழி" என்புழி ஔகாரத்தினை உதாரணங் காட்டாது "கவவோடியையின்" என்பதனுற் கௌ வௌ என உதாரணங் காட்டினமையானும் ஈண்டு 'ஆயியனிலையுங்காலத்தானுமளபெடையின்றித்தான்வருகாலையும்' என்னும் இரண்டற்கும் ஔஉ ஔ என்று உயிரையே உதாரணமாகக்காட்டுதல் மாறுகொளக்கூறலாமென்று உணர்க.

உ-ம். கௌஉ என அளபெடுத்தவழிக் கைக்கொண்டேவிடு எனத் துணிவுங், கௌ என அளபெடாதவழி நினக்குக் கருத்தாயிற் கைக்கொள்ளென ஐயமும் உணர்த்தும். இது வௌ என்பதற்கும் ஒக்கும். இனி ஔகாரம் அளபெடுத்துழி உகர ஈறேயே நிற்றலின் ஔஉ என உகர ஈறாகிய ஔகாரமும் ஈண்டுக்கோடும். இது வியப்புணர்த்தும் அளபெடா ஔகாரமாகாதென்று உணர்க. (௯௩)

உஅச. நன்றீற் றேயு மன்றீற் றேயு
மந்தீற் றோவு மன்னீற் றோவு
மன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்.

இதுவும் அது.

(இ - ள்.) நன்று ஈற்று ஏயும் = நன்றினது ஈற்றின்கண் வந்த ஏயும்: அன்று ஈற்று ஏயும் = அன்றினது ஈற்றின்கண் வந்த ஏயும்: அந்து ஈற்று ஓவும் = அந்தினது ஈற்றின்கண் வந்த ஓவும்: அன் ஈற்று ஓவும் = அன்னினது ஈற்றின்கண் வந்த ஓவும்: அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும் = அவைபோல்வன பிறவுஞ் சொல்லுவான் குறிப்போடு பொருள் உணர்த்திநிற்கும். எ-று.

ஒருவன் கொலை களவு கட் காமம் பொய் என்பனவற்றை விரும்புக என்றவழி, அவற்றை விரும்புதல் நன்றே என்றால் மேவா மைக்குறிப்பு உணர்த்தும். "நின்றேயெறிபபறையினைநன்றேகாண்" என்பது தீதென்னுங் குறிப்பு உணர்த்தும். இஃதூழன்றே என்றால் அஃது இங்ஙன் நுகர்வியாதொழியுமோ என்னுங் குறிப்பு உணர்த்தும். "அந்தோவெந்தையடையாப்பெயரில்" "அன்னோவென் னுவதுகொல்லோ" என்பன இரக்கக்குறிப்பு உணர்த்தும். இவ்வே கார ஓகாரங்கள் பலசொல்லொடு அடுத்துவராது இச்சொற்களையே அடுத்துப் பொருள்வேறுபட்டு நிற்றலின் அவற்றைப் பெயர் தந்து வேறுகூறினர்.

அன்னபிறவும் என்றதனான் "அன்னுவலமருமாருயிரும்" என் புழி அன்னு இரக்கக்குறிப்பு உணர்த்துதல் கொள்க. இதனை ஓகாரம் ஆகாரமாய்த் திரிந்ததென்றலுமாம். "ஏஎயிவளொருத்திபே டியோவென்றார்" என ஏகாரத்தின்பின்வந்த எ இழிபுணர்த்துதலும், "அஆவிழந்தான்" எனவும் "ஐயாவென்னையாவெனையாவகன்றனை யே" எனவும் "ஆவம்மாவம்மாவென்னம்மாவகன்றனையே" எனவும் ஆகாரம் இரக்கக்குறிப்பு உணர்த்துதலும் பிறவுங்கொள்க. (௩௪)

உ௮௫. எச்ச வும்மையு மெதிர்மறை யும்மையுந்
தத்தமுண் மயங்கு முடனிலை யிலவே.

இஃது முற்கூறிய உம்மைகள் மயங்கும் என்கின்றது.

(இ - ள்.) எச்ச உம்மையும் = எச்சப்பொருண்மையினையுடைய உம்மையும்: எதிர்மறை உம்மையும் = அதனைமுடிக்கவரும் எதிர்மறைப் பொருண்மையினையுடைய உம்மையும்: தத்தமுள் மயங்கும் = தொடராய்வந்து தம்முள் மயங்கும்: உடனிலை இலவே = அங்ஙனம் மயங் கிற்றேனும் தன் வினையொன்றிய முடிபுகொள்ளா. எ-று.

உ-ம். சாத்தனும்வந்தான் இனிக்கொற்றனும்வரினும்வரும் என் புழிச் சாத்தனுங் கொற்றனும் என்னும் எச்சவும்மைகள் வரினுமென் னும் எதிர்மறையும்மையோடு தொடர்ந்துநின்று ஒருவினைகொள்ளாது இறப்பும் எதிர்வும் பற்றி வரும் வேறுவினைகொண்டவாறு காண்க. இங்ஙனம் உலகவழக்கு உண்மையானும் ஆசிரியர் மயங்கியுடனிலை யில என்னாது மயங்குமுடனிலையில எனச் சூத்திரஞ்செய்தமையா னும் இதுவே பொருளென்று உணர்க. இவ்விரண்டு உம்மையும் எச்சமாதலின் இவற்றிற்கே மயக்கம் உளதென்று கூறினர்.

ஒன்றெனமுடித்தல் என்பதனான் வடுகரசரும்வந்தார் இனித் தமிழ்நாட்டுமூவேந்தரும்வரினும்வருவர் என எச்சவும்மையோடு முற்றும்மை தொடர்ந்து வேறுவினைகோடலுங் கொள்க. (௩௫)

உ௮௬. எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்.

இஃது எச்சவும்மைக்கட் சொல்லுதல்வகைமை கூறுகின்றது.

(இ - ள்.) எஞ்சுபொருட்கிளவி=எச்சவும்மையாற் தழுவப்படும் எஞ்சுபொருட்கிளவி: செஞ்சொல் ஆயிற் பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்=உம்மையில் சொல்லாயின் அவ்வும்மையில் சொல்லை அவ்வும்மைத்தொடர்க்குப் பின்சொல்லாது முன்சொல்லுக. எ-று.

உ - ம். சாத்தன்வந்தான்கொற்றனும்வந்தான் "அடகுபுலால் பாகுபாளிதமுமுண்ணான்-கடல்போலுங்கல்வியவன்" எனவரும். பிற்படக் கிளப்பிற் பொருள்கொள்ளாமை காண்க. செஞ்சொலாயின் முற்படக் கிளக்க எனவே உம்மையோடு வரிற் பிற்படக் கிளக்க என்றவாறும். (௩௬)

உ௮௭. முற்றிய வும்மைத் தொகைச்சொன் மருங்கி
னெச்சக் கிளவி யுரித்து மாகும்.

இது முற்றும்மை எச்சவும்மையாம் பொருள் தருமென வழுவமைக்கின்றது.

(இ - ள்.) முற்றிய உம்மைத் தொகைச்சொல் மருங்கின்=முற்றும்மை அடுத்துநின்ற பெயரும் வினையுஞ் சார்ந்த சொல்லிடத்து: எச்சக் கிளவி உரித்து மாகும்=எச்சச்சொல் உரித்துமாகும். எ-று.

எனவே எச்சப்பொருள் குறியாது நிற்றலே பெரும்பான்மை. ஏற்புழிக்கோடலால் இஃது எதிர்மறைக்கண்ணதெனக் கொள்க.

உ-ம். பத்துங்கொடால் அனைத்துங்கொடால் என்னும் முற்றும்மைகள் சிலகொடுக்கக் கொடு என எச்சப்பொருள் உணர்த்திநின்றவாறு காண்க. தொகைச்சொல் என்றதனானே எல்லாரும்வாராரெனப்பொருட்பெயர்க்கண்ணுங் கொள்க. பத்துங்கொடு பிறவுங்கொடு என்பது கருத்தாயின் அஃது எச்சவும்மையாம். (௩௭)

உ௮௮. ஈற்றுநின் றிசைக்கு மேயெ னிறுதி
கூற்றுவயி னோரள பாகலு முரித்தே.

இஃது ஈற்றசையேகாரத்திற்கு வேறோர் இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) ஈற்று நின்று இசைக்கும் ஏ என் இறுதி = செய்யுளிறுதிக்கண் நின்று இசைக்கும் ஈற்றசையேகாரம்: கூற்றுவயின் = அச்செய்யுளிடத்துப் பாவென்னும் உறுப்பினை நிலைபெறக்கூறுமிடத்து: ஓர் அளபு ஆகலும் உரித்தே = தனக்கு உரிய இரண்டுமாத்திரையேயன்றிப் பின்னரும் ஒருமாத்திரை உண்டாய் வருதலும் உரித்து. எ-று.

உம்மையான் மூன்றுமாத்திரை பெறாது இரண்டுமாத்திரை பெற்று வருதலும் உரித்தாயிற்று. பாவெனனும உறுப்பினை நிலை பெறக் கூறுமிடத்து மூன்றுமாத்திரை பெறுவது செய்யுளிறுதிக் கண் நிற்கும் ஈற்றசையே என்பது அறிவித்தற்கு ஏயெனிறுதியென்று மீட்டுங் கூறினார்.

உ-ம். "கடல்போறோன்றல்காடிறந்தோரே" "அகில்படுகள்ளியங்காடிறந்தோரே" "தண்கடல்வேலிநின்குடநாடற்றே" இவை போல்வன பிற சான்றோர் செய்யுட்களெல்லாம் மூன்றுமாத்திரை பெற்றுப் பாவென்னும் உறுப்பை விளக்கிநிற்குமாறு காண்க.

இனி "அவரேஎஎ, கேடில்விழுப்பொருடருமாாபாசிலை-வாடாவள்ளியங்காடிறந்தோரே" எனச் செய்யுளிடைக்கண் வரும் ஈற்றசையேகாரம் இரண்டுமாத்திரை பெற்றுப் பாவென்னும் உறுப்பை விளக்கிநின்றவாறு காண்க. இஃது ஈற்றசையாகலிற் செய்யுளியலிற் கூறும் மாத்திரையென்னும் உறுப்பின்கண் அடங்காதென்று ஈண்டுக்கூறினார், அது பெரும்பான்மை பொருள் தருஞ் சொற்கே விதியாகலின். (௩அ)

உ௮௬. உம்மை யெண்ணு மெனவெ னெண்ணுந்
தம்வயிற் றொகுதி கடப்பா டிலவே.

இஃது எண்களுக்கு முடிபுவேறுமை கூறுகின்றது.

(இ - ள்.) உம்மை எண்ணும் என என் எண்ணும் = உம்மையான் வரும் எண்ணும் எனவான் வரும் எண்ணும்: தம் வயிற் றொகுதி கடப்பாடு இலவே = தத்தம் இறுதிக்கட் தொகைச்சொற் பெறுதலை முறைமையாக உடையவல்ல. எ-று.

எனவே தொகைபெற்றும் பெறாதும் வருமென்பதாம். "உயர்திணைக்குரிமையுமஃறிணைக்குரிமையு - மாயிருதிணைக்குமோரன்னவுரிமையு மம்மூவுருபின" "இசையினுங்குறிப்பினும்பண்பினுந்தோன்றி" "நிலனெனநீரெனத்தீயெனவளியெனநான்கும்" "உயிரெனவுடலெனவின்றியமையா" எனவரும். தொகையெனப் பொதுப்படக் கூறியவதனால் எண்ணுப்பெயரேயன்றி அனைத்தும் எல்லாம் என்னுந் தொடக்கத்தனவுங் கொள்க. (௩௯)

உ௪௦. எண்ணேகார மிடையிட்டுக் கொளினு
மெண்ணுக்குறித் தியலு மென்மனார் புலவர்

இஃது எண்ணிடத்து வழுவமைக்கின்றது.

(இ - ள்.) எண் = உம்மையும் ஏகாரமும் எனவும் என்றும் எனாவும் என்றாவுஞ் செவ்வெண்ணுமாகிய ஏழுவகையெண்களுள் ஒன்று முதல் நின்று: ஏகாரம் இடையிட்டுக்கொளினும் = ஏகாரவெண்ணைத் தன்னிடத்தே அழைத்துக்கொண்டு நிற்பினும் பிற எண்களைத் தன்னிடத்தே அழைத்துக்கொண்டு நிற்பினும்: எண்ணுக் குறித்து இயலும் என்மனார் புலவர் = பல எண் வந்தனவென்று குற்றமாகா தான் உணர்த்தும் எண்ணுப்பொருளையே அப்பலவுங் குறித்துநடக்கும் என்றுகூறுவர் புலவர். எ - று.

உ - ம். "மலைநிலம்பூவேதுலாக்கோலென்றின்ன - மலைவிலுணர்வுடையோர்" "தோற்றமிசையேநாற்றஞ்சுவையே யுறலோடாங்கைம்புலனெனமொழிப." இவை செவ்வெண் நின்று ஏகார எண்ணை இடையிட்டன. "மாத்திரையெழுத்தியலசைவகையெனாஅ" என்பது செவ்வெண் நின்று எனாவெண்ணை இடையிட்டது. "வண்ணம்வடிவேயளவேசுவையே" என்னுஞ் சூத்திரம் ஏகாரவெண் நின்று செவ்வெண்ணையும் என்றா என்னும் எண்ணையும் இடையிட்டது. "யாத்தசீரேயடியாப்பெனாஅ" என்பது ஏகாரவெண் செவ்வெண்ணையும் எனாவையும் இடையிட்டது. ஒழிந்த எண்களும் இவ்வாறு வருமாறு சூத்திரங்களுள்ளுஞ் செய்யுட்களுள்ளுங் காண்க. (௪௦)

உ௪௧. உம்மை தொக்க வெனாவென் கிளவியு
மாவீ றாகிய வென்றென் கிளவியு
மாயிரு கிளவியு மெண்ணுவழிப் பட்டன.

இஃது எண்ணும்மை பிற எண்ணோடு மயங்குங்காற் சிறந்து வரும் என்கின்றது.

(இ - ள்.) உம்மை தொக்க எனு என் கிளவியும் = முன்னர் எண்ணும்மை அடுக்கின்ற எனு என்னும் இடைச்சொல்லும்: ஆ ஈறு ஆகிய என்று என் கிளவியும் = முன்னர் எண்ணும்மை அடுக்கின்ற ஆகாரத்தை ஈறாகவுடைய என்று என்னும் இடைச்சொல்லும்: ஆயிரு கிளவியும் எண்ணுவழிப் பட்டன = அவ்விரண்டு சொல்லும் எண்ணுமிடத்தே சிறந்தனவாம். எ-று.

உ-ம். "ஒப்புமுருவும் வெறுப்புமென்றா" என்னுஞ் சூத்திரம் உம்மை தொக்க என்றா. உம்மை தொக்க எனு வந்தவழிக் காண்க.

இனி உம்மை தொக்க என்பதற்கு நிலனெனவும் என ஈற்று நின்ற உம்மை தொக்கு நிலனென்று எனறல் வழக்கமின்மையானும் எனவும் என்றாவும் எண்ணிடைச்சொல்லாதல் மேல்சூத்திரத்தாற் பெறப்படுதலானும் இதுவே ஆசிரியர் கருத்து. (சக)

உகூஉ. அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்
பெயர்க்குரி மரபிற் செவ்வெண் இறுதியும்
ஏயின் ஆகிய எண்ணின் இறுதியும்
யாவயின் வரினுந் தொகையின் றியலா.

இது எண்ணிடைச்சொற்கட்கு முடிபுவேற்றுமை கூறியது.

(இ - ள்.) அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும் = முற்கூறிய எனு என்றா என்னுமிரண்டானும் வரும் எண்ணுச்சொற்களின் இறுதியும்: பெயர்க்குரி மரபிற் செவ்வெண் இறுதியும் = இடைச்சொல்லானன்றிப் பெயரான் எண்ணப்படுஞ் செவ்வெண்ணின் இறுதியும்: ஏயின் ஆகிய எண்ணின் இறுதியும் = ஏகாரத்தான் வரும் எண்ணுச்சொற்களின் இறுதியும்: யாவயின் வரினுந் தொகையின்று இயலா = யாதானும் ஓரிடத்து வரினுந் தொகையின்றி நடவா. எ-று.

உ-ம். நிலனெனு நீரெனு இரண்டும்; நிலனென்றா நீரென்றா இரண்டும்; நிலநீரென இரண்டும்; நிலனே நீரே யென இரண்டும் என வரும்.

இறுதியுமென்றது அவ்வெண்ணுக்கண் இறுதி தொகைபெறும் என்றற்கு. பெயர்க்குரிமரபினென்றது மற்றைய எல்லாம் இடைச்சொல், செவ்வெண்ணுப்பெயர் தம்மாலே ஆமென்றற்கு. (சஉ)

உகூங. உம்மை யெண்ணி னுருபுதொகல் வரையார்.

இஃது உம்மையும் உருபுந் தொக்கவழியும் உருபுதொகையெனப் படுமென வழுவமைத்தது.

(இ - ள்.) உம்மை எண்ணின் = உம்மையான்வரும் எண்ணின் கண்: உருபு தொகல் வரையார் = இரண்டாவதும் ஏழாவதுந் தொக்கு நிற்றலை நீக்கார் ஆசிரியர். எ-று.

உம்மையெண்ணெனப் பொதுப்படக் கூறுதலின் உம்மை தொக்குழியும் விரிந்துழியும் உருபு தொகுதல் கொள்க.

உ-ம். புலிவிற்கெண்டை யானைதேர்குதிரைகாலாள் என்னும் பலபெயர் உம்மைத்தொகைகள் ஒருசொல் நடையவாய்க் கிடந்தன வந்தன என்னுந் தன்வினையாகிய பயனிலைகளைக் கொள்ளும் வழியும், புலியும்வில்லுங்கெண்டையுங்கிடந்தன யானையுந்தேருங்குதிரையுங்காலாளும்வந்தன என உம்மை விரிந்துநின்ற பொருளைத் தந்தே நிற்குமாறுபோல, அவ்வும்மைத்தொகைகள் புலிவிற்கெண்டைவைத்தான் யானைதேர்குதிரைகாலாளெறிந்தான் என உருபு ஏற்று நின்ற வழியும், புலியும்வில்லுங்கெண்டையும்வைத்தான் யானையுந்தேருங் குதிரையுங்காலாளுமெறிந்தான் என உம்மை விரிந்துநின்ற பொருளைத் தந்தே நிற்றல் வேண்டும். அங்ஙனம் உம்மை விரிந்துநிற்கும் இடத்து வைத்தானென்னும் வினைமுதல்வினைக்குப் புலியும்வில்லுங் கெண்டையுஞ் செயப்படுபொருளாய் இரண்டாமுருபே விரிந்துநிற்றலும், எறிந்தானென்னும் வினைமுதல்வினைக்கு யானைமுதலியன செயப்படுபொருளாய் இரண்டாமுருபே விரிந்துநிற்றலும் உணர்க. "குன்றிகோபங் கொடிவிடுபவள - மொண்செங்காந்த ளொக்குநின்னிறம்" என்னும் பலபெயர் உம்மைத்தொகைக்கும் உம்மையும் உருபும் விரித்தே பொருளுரைக்க. இக்குன்றிமுதலியவற்றைச் செவவெண்ணாக்கி இவற்றையெனத் தொகைகொடுத்து உருபுவிரித்துழியும் அச்சுட்டு அக்குன்றிமுதலியவற்றையே சுட்டுதலின் அக்குன்றிமுதலியன செயப்படுபொருளாயே நிற்குமாறு உணர்க. அன்றி அவை செவவெண்ணாயின் "நிலநீர்வளிவிசும்பென்றநான்கி னளப்பரியை" என்றாற்போல உம்மையும் உருபும் விரித்தற்குப் பொருந்தாது எழுவாயாய் நான்கென்னுந் தொகைச்சொற் பயனிலைகொண்டு நிற்றல் வேண்டுமென்று உணர்க. இவை உம்மைத்தொகைக்கண் உருபு தொக்கன. இங்ஙனம் இரண்டு தொக்கனவற்றை என்னதொகையென்று கோடுமோவெனின் புலியையும்வில்லையுங்கெண்டையையும் வைத்தானென விரித்துழி எண்ணுப்பொருள் தந்துநிற்கும் உம்மை

யினுஞ் சொற்றொடர்ப்பொருளை உணர்த்திநிற்பது உருபாதலின் அச் சிறப்புநோக்கி உருபுதொகையென்றே கோடும்.

இனிப் "பாட்டுங்கோட்டியுமறியாப்பயமி - நேக்குமரப்பொனி டியவொருவன்" "இசையினுங்குறிப்பினுமபணபினுந்தோன்றி" இவை உம்மை விரித்துநின்று உருபுதொக்கன. (சுஙு)

உசுச. உம்முந் தாகு மிடனுமா றுண்டே.

இஃது உம்மென்னும் இடைச்சொல் திரியும் என்கின்றது.

(இ - ள்.) உம் உந்து ஆகும் இடனுமாருணடே = "வினைசெயன் மருங்கிற் காலமொடு வரு" வனவற்றுள் உம் ஈறு உந்தாய்த் திரிதலும் உடைத்து. எ-று.

உ-ம். "நீர்க்கோழிகூப்பெயர்க்குந்து" "நாரரிநறவிருண்மகிழ் தூங்குந்து" எனவரும்.

இடனுமாருண்டே என்றதனன் இத்திரிபு பெயரெச்சத்திற்கே கொள்க. (சுசு)

உசுரு. வினையொடு நிலையினு மெண்ணுநிலை திரியா
நினையல வேண்டு மவற்றவற் றியல்பே.

இஃது எண்ணிடைச்சொற்கள் வினைச்சொற்கண்ணும் வரும் என்கின்றது.

(இ - ள்.) எண்ணு வினையொடு நிலையினும் நிலைதிரியா = எண் ணிடைச்சொற்கள் பெயர்ச்சொல்லோடன்றி வினைச்சொல்லோடு நிற்பினுந் தத்தம் நிலைமையிற் திரியா: அவற்றவற்று இயல்பு நினை யல் வேண்டும் = அவற்றவற்று இலக்கணங்களை ஆராய்ந்து அறிதலை வேண்டும் ஆசிரியன். எ-று.

உ-ம். "உண்டுந்தின்றுமூர்ந்துமாடுகெஞ்செல்வத்தயாமே" உண் ணவெனத் தின்னவெனப் பாடவெனவந்தான் எனவரும். ஏழிந்த எண் வினையோடு வந்தன உளவேற் காண்க.

உண்டுதின்றோடிவந்தான் என்பது தொகையின்றேனுஞ் செவ வெண்ணுஞ், சிறுபான்மை முற்றுந் தொகைபெற்று வருதலின். சாத்தன்வந்தான் கொற்றன்வந்தான் வேடன்வந்தான் மூவரும் வந் தமையாற் கலியாணம் பொலிந்ததென முற்றுச்செவவெண் தொ

கைபெற்றுவரும். இவை எழுவாயும் பயனிலையுமாய் நிற்றலின் எண்ணப்படாவெனின், ஒரு பொருள்வேறுபாட்டான் எண்ணினார். இதனை இம்மூவரும் உடன்வரிற் கலியாணம் பொலியுமென்று இருக்கின்றான் கூற்றாகக்கொள்க. என்னை? முன்னர்ச்சாத்தன்வந்தான் பின்னர்க்கொற்றன்வந்தான் அதன்பின்னர்வேடன்வந்தான் இவர்கள் ஒருங்கு வந்திலரேனும் முடிவில் வந்துநிற்றலின் அது முடிபு போயிற்றென்று கூறினானாதலின். இம்மூவரென்றமையாற் பெயர் தொகைபெற்றதேனும் வந்தமையானென்றதனான் வினையுந் தொகை பெற்று அவ்வினையாற் கலியாணம் முடிந்தவாறும் உணர்க. இம் முற்று அடுக்கி வந்தன்வுஞ் செவ்வெண்ணும். இனி யாங் கண்ட பொழுது இம்மாடத்துமேல் நின்றானும் இருந்தானுங் கிடந்தானும் இவனென முற்றுச்சொற்கண்ணும் எண்ணும்மை வருதல் கொள்க.

பெயரெச்சத்தில் எண்ணிடைச்சொல்வாரா. (சரு)

உசுசு. என்று மெனவு மொடுவுந் தோன்றி
யொன்றுவழி யுடைய வெண்ணினுட் பிரிந்தே.

இஃது எண்ணிடைச்சொற்கள் பிரிந்து சென்று ஒன்றும் என்கின்றது.

(இ - ள்.) என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி=என்றும் எனவும் ஒடுவும் என்பன ஒருவழித்தோன்றி: எண்ணினுட் பிரிந்து ஒன்றுவழி உடைய=எண்ணுட் பிறவழியும் பிரிந்து சென்று ஒன்றும் இடமுடைய. எ-று.

உ-ம். "வினைபகையென்றிரண்டினெச்சம்" "கண்ணிமைநொடியென" "பொருள்கருவிகாலம்வினையிடனொடைந்தும்" என்புழி வினையென்று கண்ணிமையென பொருளொடுகருவியொடுகாலத்தொடுவினையொடு என்று பிறவழிச்சென்று ஒன்றியவாறு காண்க.

ஒன்றுவழியுடைய என்றதனாற் சொற்றொறுநிற்றல் பெரும்பான்மை. அஃது இக்காலத்து அரிது. (சசு)

உசுஎ. அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த வியல வாயினும்
வினையொடும் பெயரொடு நினையத் தோன்றித்
திரிந்துவேறு படினுந் தெரிந்தனர் கொளலே.

இஃது எழுவகை இடைச்சொற்கும் பொருட்புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) அவ்வச் சொல்லிற்கு அவையவை பொருளென மெய்பெறக் கிளந்த இயலவாயினும்=முற்கூறிய இடைச்சொற்கள் தாம் அவ்வச்சொற்குக் கூறிய அவையே பொருளென நிலைபெறச் சொல்லப்பட்ட இயல்பையுடையவாயினும்: வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித் திரிந்து வேறுபடினும்=தாம் அடைந்துவரும் வினையோடும் பெயரோடும் ஆராய்ந்து உணரததோன்றி வேறு பொருளவாயும் அசைநிலையாயுந் திரிந்து வரினும்: தெரிந்தனர் கொளல்=ஆராய்ந்துகொள்க. எ-று.

வேறுபொருளவென்று உணாதற்குச் சார்பு வினையும்பெயரும்.

உ-ம். ஒகாரஞ் "சென்றீபெருமநிற்றகைக்குநர்யாரோ" என ஒழியிசையாயுங் "கலக்கொண்டன்கள்ளென்கோகாழ்க்கொண்டனகூடென்கோ" என எண்ணாயும் "நீயுங்ளோவென்பூங்கணுளே" என இரக்கக்குறிப்பாயுமவந்தது. என என்பது "ஊரெனப்படுவதுறையூர்" எனச் சிறப்பின்கண் வந்தது. அவாநமக்குத்தஞ்சமல்லர் எனத் தஞ்சக்கிளவி பற்றலா எனநின்றது. மா "ஓரகமாதோழியவர்தேர்மணிக்குரலே" என முன்னிலையசைச்சொல்லாயும் "ஒக்கல்வாழ்க்கைதட்குமாகாலே" என முன்னிலையன்றி அசைச்சொல்லாயும் வந்தது. "அதுமற்கொண்கன்றேரே" என மன் அசைநிலையாய் வந்தது. சாரியை இன் "காப்பினுைப்பின்" என அசைநிலையாயும் வந்தது. இனி உருபுபொருண்மை நோக்கிய ஐகாரமும் "நேரைநோக்கநாரரிபருகி" எனவும "வருபமுனையுண்டவருருகும்பசுந்தினைப்பிண்டியும்" எனவும் அசைநிலையாய் வருதலுங்கொள்க. "தண்ணென்றிசினேபெருந்துறைப்புனலே" "விசும்பழித்தோகைச்சீர்போன்றிசினே" என்பன தண்ணென்றது போன்றது என முற்றுச்சொற்சின் அசைக்கட்படுதலுங்கொள்க. பிறவுஞ் செய்யுட்கண் வேறுபடுவன எல்லாம் இதனை அமைத்துக்கொள்க. (௪௭)

௨௯௮. கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே.

இஃது அவற்றிற்குச் சொற்புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) கிளந்த அல்ல வேறு பிறதோன்றினும்=மேற் சார்பும் இடமுங் குறிப்பும் பற்றிச் சொல்லப்பட்டன அன்றி அவை போல்

வன பிற வரினும்: கிளந்தவற்று இயலான் உணர்ந்தனர் கொளல்= அவற்றையும் அச்சொற்களின் மூவகையவாகக் கூறிய இலக்கணத்தான் உணர்ந்துகொள்க. எ-று.

உ-ம். "சிறிதுதவிர்ந்தீகமாளநின்பரிசிலருய்ம்மார்" என மாளவும் "சொல்லென்றெய்யநின்னொடுபெயர்ந்தே" எனத் தெய்யவும் "அறிவார்யாரஃதிறுவுழியிறுகென" என எனவும் "அஞ்சுவதோருமறனே" என ஒரும் "சொல்லீயத்தைநின்வெகுளி" என அத்தையும் "செழுந்தேரோட்டியும்வென்றி" என ஈகாரமும் "காதனன்மாநீமற்றிசினே" என இசினும் "பணியுமாமென்றும்பெருமை" என ஆமும் "ஈங்காயினவாலென்றிசின்யானே" என ஆலும் "புனற்கன்னிகொண்டிழிந்ததென்பவே" என என்பவும் "சேவடிசேர்துமன்றே" என அன்றும் அசைநிலையாய் வந்தன.

"குன்றுதொறாடலுநின்றதன்பண்பே" எனத் தொறு தான் சார்ந்த மொழிக்குப் பன்மையும் இடமும் உணர்த்திற்று. இது "நாடோறுநாடி" என நீண்டும் நிற்கும்.

ஆ என்பது வியப்பு உள்வழியும் மறுத்தல் உள்வழியும் பொருளுணர்த்துதலும் ஐயென்றது இசை உள்வழியும் வருத்தம் உள்வழியும் பொருளுணர்த்துதலுங் கொள்க.

பொள்ளென பொம்மென கதுமென இவை விரைவு உணர்த்தின. கொம்மென என்பது பெருக்கமென்னுங் குறிப்பு உணர்த்திற்று. ஆனம் ஏனம் ஓனம் என்பன எழுத்துச்சாரியை. "எப்பொருளாத் தன்மைத்தாயினும்" எனவரும் எகரவினாவுங் கொள்க. அங்கு இங்கு உங்கு எங்கு என எழுத்தினுள் இடப்பொருள் உணர்த்துமென்றனவும் இவை நீண்டுவருவனவும் பிறவாற்றான் வருவனவும் இதனாற் கொள்க. (சஅ)

இடைச்சொல்லியல் முற்றும்.

---

எட்டாவது

## உரிச்சொல்லியல்.

உகூகூ. உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
யிசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினு மெய்தடு மாறி

யொருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் லொருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மரபிற் சென்றுநிலை மருங்கி
னெச்சொ லாயினும பொருள்வேறு கிளத்தல்.

என்பது சூத்திரம். இது தமக்கு இயல்பில்லா இடைச்சொற் போலாது இசை குறிப்புப் பண்பென்னும் பொருட்கு உரியவாய் வருதலின் உரிச்சொல்லோத்தெனனும் பெயாத்தாயிற்று. ஈறுபற்றிப் பலபொருள்விளக்கலும் உருபேற்றலுமின்றிப் பெயரையும் வினையையுஞ் சார்ந்து பொருட்குணத்தை விளக்கலின் உரிச்சொல் பெயரின்வேறென்று உணர்க. இச்சூத்திரம் உரிச்சொற்கெல்லாம் பொது இலக்கணங்கூறுகின்றது.

(இ - ள்.) உரிச்சொற்கிளவி விரிக்குங்காலை=உரிச்சொல்லாகிய சொல்லை விரித்துணாத்துமிடத்து: ஒருசொற் பலபொருட்கு உரிமை தோன்றினும் பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்= அஃது ஒருசொல் ஒருபொருட்கு உரிததாய்வாராது பலபொருட்கு உரித்தாய் மயங்கிவரினும் பலசொல் ஒருபொருட்கு உரியவாய் மயங்கிவரினும்: இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப் பெயரினும் வினையினும் மெய்தடுமாறித் தத்தம் மரபிற் சென்று நிலைமருங்கின் = இசைப்பொருண்மைக்கண்ணும் மனத்தாற்குறித்து உணரும் பொருண்மைக்கண்ணும் பண்புப்பொருண்மைக்கண்ணும் வெளிப்பட்டுப் பெயர்வினைகள் போன்றும் அவற்றிற்கு முதனிலையாயுந் தம்முருபு தடுமாறித் தத்தமக்கு உரிய முறைமையாற் சென்றுநிற்கும் நிலைக்களங்களாலே: எச்சொல்லாயினும் பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்திப் பொருள் வேறு கிளத்தல்=கேட்போனாற் பொருளுணரப்படாத எவ்வகைப்பட்ட சொல்லாயினும் பயிலப்படாதசொல்லைப் பயின்றவற்றோடு சேர்த்திப் பொருளை வேறு வேறுசொல்லுக. எ-று.

அது மயங்கிவரினும் நிலைக்களங்களாலே சேர்த்தி வேறுவேறு கிளத்தலென வினைமுடிபுசெய்க.

பண்பு பொறியான் அறியப்படுங் குணம். கறுப்பு பெயர்ப் போலி. தவ வினைப்போலி. துவைத்தல் பெயர்க்கு முதனிலை. தாவாத வினைக்குமுதனிலை.

பலவும் ஓதினுரேனும் உரிச்சொற்கு இலக்கணம் மூவகைப்பொருளும்பற்றி வருதலேயாம். (க)

ந00. வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா வுரிச்சொன் மேன.

இஃது உரிச்சொற்களுள் யான் கூறப்படுவன இவையென்கின்றது.

(இ - ள்.) வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா = பொருள்புலப்பட்ட உரிச்சொற்கள் எல்லாரும் அறிதலின் எடுத்தோதிப் பொருளுணர்த்துதல் வேண்டா: வெளிப்பட வாரா உரிச்சொல் மேன = பொருள்புலப்பட வாராத உரிச்சொல்மேற்று யான் பொருள் புலப்பட ஓதுதல். எ-று. (உ)

ந0க. அவைதாம்,
உறுதவ நனியென வரூஉ மூன்று
மிகுதி செய்யும் பொருள வென்ப.

இது குறிப்புப்பற்றி வரும் உரிச்சொற் பொருள்படுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அவைதாம் = வெளிப்பட வாராத உரிச்சொற்கடாம் யாவையெனின்: உறு தவ நனி என வரூஉம் மூன்றும் = உறுவெனத் தவவென நனியென வருகின்ற மூன்று உரிச்சொற்களும்: மிகுதி செய்யும் பொருள என்ப = மிகுதியென்னும் உரிச்சொல் காட்டுங் குறிப்புப்பொருளையுடைய என்று கூறுவர் ஆசிரியர். எ-று.

குறிப்புச்சொல் பரப்புடைமையின் முற்கூறினுர்.

உ-ம். "உறுகாலொற்றவொல்கியாம்பல்;" "ஈயாதுவீயுமுயிர்தவப்பலவே;" "வந்துநனிவருந்தினைவாழியநெஞ்சே" எனவரும். (ந)

நOஉ. உருவுட் காகும் புரையுயர் வாகும்.

இதுவும் அது.

(இ - ள்.) உரு உட்கு ஆகும் = உருவென்னும் உரிச்சொல் உட்குதலென்னும் உரிச்சொல்லது குறிப்புப்பொருட்டாம்: புரை உயர்வு ஆகும் = புரையென்னும் உரிச்சொல் உயர்வென்னும் உரிச்சொல்லது குறிப்புப்பொருட்டாம். எ-று.

உ-ம். "உருகெழுஞாயிற்றொண்கதிர்மிசைசந்த"; "புரையமன்ற புரையோர்கேண்மை" எனவரும். "உருவக்குதிரைமழவரோட்டிய"; "உருவமென்றுரைத்தியாயின்" என உரு வடிவழகையும் "புரைதீர் கேள்விப்புலவரான" எனப் புரை குற்றத்தையும் உணர்த்துதல் "கூறியகிளவிப்பொருணிலையல்ல" என்னுஞ் சூத்திரத்தாற் கொள்க.

௩0௩. குருவுங் கெழுவு நிறனா குும்மே.

இது பண்பு.

இ - ள்.) குருவுங் கெழுவும் நிறன் ஆகும்மே=குருவென்னும் உரிச்சொல்லுங் கெழுவென்னும் உரிச்சொல்லும் நிறனென்னும் உரிச்சொலது பண்புப்பொருளாம். எ-று.

உ-ம். "குருமணித்தாலி"; "நறுஞ்சாந்துபுலர்ந்தகேழ்கிளரகலம்" எனவரும். "குருத்துளிபொழிந்தகுரூஉக்கணிற்படியபொம்மல்" எனக் குரு நீடலுங் கெழு கேழெனநீடலும் ஈறுகெடுதலும் "எழுத்துப்பிரிந்திசைத்தலிவணியல்பின்றே" என்பதனாற் கொள்க. கெழுவென்றுவரும் இடம் உளதாயிற் கொள்க. இக்கெழு பொருத்தத்தை உணர்த்துதலுங் கெழுமுதலென்னும் வழக்கிற்கு முதனிலையாய்நிற்றலுங் "கூறியகிளவி" என்பதனாற் கொள்க. மேல்வருஞ் சூத்திரங்கட்கும் இவ்வாறே பொருள்கூறுக. (௫)

௩0௪. செல்ல லின்ன லின்னா மையே.

இது குறிப்பு.

(இ - ள்.) செல்லல் இன்னல் இன்னாமையே = செல்லலும் இன்னலும் இன்னாமையென்னுங் குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "மணங்கமழ்வியன்மார்பணணங்கியசெல்லல்" "வெயில்புறந்தரூஉமின்னலியக்கத்து" எனவரும். (௬)

௩0௫. மல்லல் வளனே யேபெற் றாகும.

இதுவும் அது.

(இ - ள்.) மல்லல் வளனே=மல்லல் செல்வமென்னுங் குறிப்பினையும்: ஏ பெற்று ஆகும்=ஏ என்பது பெருக்கமென்னுங் குறிப்பினையும் உணர்த்தும். எ-று.

பெற்று அடுக்குதலுமாம்.

உ-ம். "மல்லன்மார்படுத்தனன்புல்லுமாறெவனோ" "ஏகலடுக்கத்திருளளைச்சிலம்பின்" எனவரும். (எ)

ஙு0சு. உகப்பே யுயர்த லுவப்பே யுவகை.

இதுவும் அது.

(இ - ள்.) உகப்பே உயர்தல் உவப்பே உவகை = உகப்பு உயர்வென்னுங் குறிப்பினையும் உவப்பு உவகையென்னுங் குறிப்பினையும் உணர்த்தும். எ-று.

உ-ம். "விசும்புகந்தாடாதிரைதேர்ந்துண்ணாது" "உவந்துவந்தார்வநெஞ்சமொடாய்நலனளைஇய" எனவரும். (அ)

ஙு0எ. பயப்பே பயனும்.

இதுவும் அது.

(இ - ள்.) பயப்பே பயனும் = பயப்பு பயனென்னுங் குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "பயவாக்-களரனையர்கல்லாதவர்." எனவரும். (கூ)

ஙு0அ. பசப்பு நிறனாகும்.

இது பண்பு.

(இ - ள்.) பசப்பு நிறனாகும் = பசப்பு நிறனென்னும் பண்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "மையில்வாண்முகம்பசப்பூரும்மே" எனவரும். (க0)

ஙு0கூ. இயைபே புணர்ச்சி.

இது குறிப்பு.

(இ - ள்.) இயைபே புணர்ச்சி = இயைபு கூட்டமென்னுங் குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "வளமலியுறுக்குமுளமிலாளரொ-டியைந்தகேண்மையில்லாகியரோ" எனவரும். (கக)

௩௧0. இசைப்பிசை யாகும்.

இஃது இசைகூறுகின்றது.

(இ - ள்.) இசைப்பு இசையாகும் = இசைப்பு இசைப்பொருண்மையை உணர்த்தும். எ-று.

உ-ம். "வாயிற்றோன்றியாழிசையூப்புக்கு" எனவரும். (௧௨)

௩௧௧. அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி

இது குறிப்பு.

(இ - ள்.) அலமரல் தெருமரல் ஆயிரண்டுஞ் சுழற்சி = அலமரல் தெருமரலாகிய அவ்விரண்டும் மனத்தடுமாற்றமாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "அலமரலாயம்" "தெருமரலுள்ளமொடன்னையுந்துஞ் சாள்" எனவரும். லமரல் சொற்புறனடையாற் கொள்க. (௧௩)

௩௧௨. மழவுங் குழவு மிளமைப் பொருள.

இதுவும் அது.

(இ - ள்.) மழவும் குழவும் இளமைப் பொருள = மழவுங் குழவும் இளமையென்பதன் குறிப்புப்பொருண்மையை யுடைய. எ-று.

உ-ம். "வரைபுரையு மழகளிற்றின்மிசை - யுருவக்குதிரைமழவ ரோட்டிய" "தடமருப்பெருமைமடநடைக்குழவி" எனவரும். (௧௪)

௩௧௩. சீர்த்தி மிகுபுகழ் மாலை யியல்பே.

இதுவும் அது.

(இ - ள்.) சீர்த்தி மிகு புகழ் மாலை இயல்பே = சீர்த்தி மிகு புகழும் மாலை இயல்புமாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "வயக்கஞ்சால்சீர்த்தி" "இரவரன்மாலையனே" என வரும். (௧௫)

௩௧௪. கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும்.

இதுவும் அது.

(இ - ள்.) கூர்ப்புங் கழிவும் உள்ளது சிறக்கும்=கூர்ப்புங் கழிவும் முன்சிறவாது உள்ளதொன்று சிறத்தலாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "இயங்காவையத்துவள்ளியோர்நசைஇத் துனிகூரெவ்வமொடு" "சினனேகாமங்கழிகண்ணோட்டம்" எனவரும். (கசு)

௩கரு. கதழ்வுந் துனையும் விரைவின் பொருள.

இதுவும் அது.

(இ - ள்.) கதழ்வுந் துனையும் விரைவின் பொருள = கதழ்வுந் துனையும் விரையென்னுஞ் சொல்லினது குறிப்புடைய. எ-று.

உ-ம். "அண்டர்கயிறரிஎருத்திற்கதழுந்துறைவன்" "துனைபரிதுரக்குந்துஞ்சாச்செலவின்" எனவரும். (கஎ)

௩கசு. அதிர்வும் விதிர்ப்பு நடுக்கஞ் செய்யும்.

இதுவும் அது.

(இ - ள்.) அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும் = அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கமாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "அதிரவருவதோர்நோய்" "விதிர்ப்புறவறியாவேமக்காப்பினை" எனவரும். (கஅ)

௩கஎ. வார்தல் போகல் லொழுகன் மூன்று
நேர்பு நெடுமையுஞ் செய்யும் பொருள.

இது பண்பு.

(இ - ள்.) வார்தல் போகல் ஒழுகல் மூன்றும் நேர்பும் நெடுமையுஞ் செய்யும் பொருள = வார்தல் போகல் ஒழுகலென்னும் மூன்றுசொல்லும் நேர்மையும் நெடுமையும் உணர்த்தும் பண்பினைத் தமக்குப் பொருளாக உடைய. எ-று.

உ-ம். "வார்ந்திலங்குவையெயிற்றுச் சின்மொழியரிவையை" "தெள்ளற்றழீஇயவார்மணலடைகரை" எனவும், "போகுகொடிமருங்குல்" "திரிகாயவிடத்தேரொடுகொருடைபோகி" எனவும் "ஒழுகுகொடிமருங்குல்" "மால்வரையொழுகியவாழை" எனவும் வரும்.()

௩௧அ. தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்.

இது குறிப்பு.

(இ - ள்.) தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட்டு ஆகும்=தீர்தலுந் தீர்த்தலும் விடலென்னும் உரிச்சொல்லது குறிப்புப்பொருண்மையுடைத்தாம். எ-று.

உ-ம். "துனையிற்றீர்ந்தகடுங்கண்யானை" "நங்கையைச்செற்றதீங்குதீர்த்தனாகொண்மின்" எனவரும்.

இதனானே விடலென்னும் உரிச்சொலடியாகப் பிறக்கும் பெயரும் வினையுந், தன்வினையும் பிறவினையும் பற்றிப் பிறக்குமென்பது உணர்த்தற்கு விடற்பொருட்டு என்றார். இயைபென்பதற்கு இயைப்பென வழங்காது இயைக்க இயைவிக்க என வேறுபட்டு வழங்குதலிற் தன்வினை பிறவினையுடன் ஓதாராயினர். ஒன்றெனமுடித்தலாற் பிளத்தல் அணங்கலென்றாறபோலத் தன்வினை பிறவினைக்குப் பொதுவாய் வருவனவுங் கொள்க. இப்பிறவினை தீர்வித்தல் தீர்ப்பித்தலென வாய்பாடு வேறுபட்டு இக்காலத்து வழங்குமாறும் உணர்க. ()

௩௧௯. கெடவரல் பண்ணை யா யிரண்டும் விளையாட்டு.

இதுவும் அது.

(இ - ள்.) கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு=கெடவரல் பண்ணை என்னும் அவ்விரண்டும் விளையாட்டாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "கெடவரலாயமொடு" "பண்ணைத்தோன்றியவெண்ணான்குபொருளும்" எனவரும். விளையாட்டென்றது விளையாட்டுக் கருத்தினை. (உக)

௩உ0. தடவுங் கயவு நளியும் பெருமை.

இது பண்பு.

(இ - ள்.) தடவுங் கயவும் நளியும் பெருமை=தடவுங் கயவும் நளியும் பெருமையாகிய பண்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "வலிதுஞ்சுதடக்கைவாய்வாட்குட்டுவன்" "இரும்பிடிகன்றொடுவிரைஇக்கயவாய்ப்பெருங்கையானை" "நளிமலைநாடனளியவனெனவே" எனவரும்.

கயவரென்பது வழக்கு. (உஉ)

௩உ௧. அவற்றுள்,
தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும்.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ - ள்.) அவற்றுள் தட என் கிளவி கோட்டமுஞ் செய்யும்=முற்கூறிய மூன்றனுட் தடவென்னுஞ் சொல் கோட்டமென்னும் பண்பினையும் உணர்த்தும். எ-று.

உ-ம். "தடமருப்பெருமை" எனவரும். (உ௩)

௩உஉ. கயவென் கிளவி மென்மையுஞ் செய்யும்.

இதுவும் அது.

(இ - ள்.) கய என் கிளவி மென்மையுஞ் செய்யும்=கயவென்னுஞ்சொல் மென்மையென்னும் பண்பினையும் உணர்த்தும். எ-று.

உ-ம். "கயந்தலைமடப்பிடி" எனவரும். (உ௪)

௩உ௩. நளியென் கிளவி செறிவு மாகும்.

இதுவும் அது.

(இ - ள்.) நளி என் கிளவி செறிவும் ஆகும்=நளியென்னுஞ் சொல் செறிவென்னுங் குறிப்பினையும் உணர்த்தும். எ-று.

உ-ம். "சிலைப்புவல்லேற்றித்தலைக்கைதந்துநீ - நளிந்தனைவருத லுடன்றனளாகி" எனவரும். (உ௫)

௩உ௪. பழூது பயமின்றே.

இது குறிப்பு.

(இ - ள்.) பழுது பயமின்றே = பழுது பயமின்மையாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "பழுதுகழிவாழ்நாள்" எனவரும்.

பழுது குற்றத்தை உணர்த்துதல் வழக்கு. (உ௬)

௩உ௫. சாயன் மென்மை.

இது பண்பு.

(இ - ள்.) சாயல் மென்மை = சாயலென்னுஞ் சொல் மெய் வாய்கண்மூக்குச்செவியென்னும் ஐம்பொறியான் நுகரும் மென்மையை உணர்த்தும். எ-று.

உ-ம். "மயிற்சாயன்மகள்வேண்டிய" "சாயன்மார்புநனியலைத்தன்றே" என இவை ஒளியானும் ஊற்றானும் பிறந்த மென்மை உணர்த்தின. "அமிர்தன்னசாயல்" என்பது தன்னைநுகர்ந்தார் பிறிது நுகராமற் தடுக்கும் மென்மையை உணர்த்தவே பல மென்மையும் அடங்கின. ஒழிந்தன வந்துழிக் காண்க. (உஎ)

௩உசு. • முழுதென் கிளவி யெஞ்சாப் பொருட்டே.

இது குறிப்பு.

(இ - ள்.) முழுது என் கிளவி எஞ்சாப் பொருட்டே=முழுதென்னுஞ்சொல் எஞ்சாமையாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "மண்முழுதாண்டநின்முன்னோர்போல" எனவரும். ()

௩உஎ. வம்புநிலை யின்மை.

இதுவும் அது.

(இ - ள்.) வம்பு நிலையின்மை=வம்பு நிலையின்மையாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "வம்புமாரியைக்காரெனமதித்தே" எனவரும். (உகூ)

௩உஅ. மாதர் காதல்.

இதுவும் அது.

(இ - ள்.) மாதர் காதல் = மாதர் காதலென்னுங் குறிப்பினை உணர்த்தும். எ-று.

உ-ம். "மாதர்கொண்மானோக்கின்மடநல்லாய்" எனவரும். ()

௩உகூ. நம்பு மேவு நசையா கும்மே.

இதுவும் அது.

(இ - ள்.) நம்பும் மேவும் நசை ஆகும்மே=நம்பும் மேவும் நசையென்னுங் குறிப்பினை உணர்த்தும். எ-று.

உ-ம். "நயந்துநாம்விட்டநன்மொழிநம்பி" எனவும் "பேரிசை நவிரமேஎவுங்காரியுண்டி" எனவும் வரும். (௩௧)

௩௩0. ஓய்த லாய்த னிழத்தல் சாஅ
யாவயி னான்கு முள்ளத னுணுக்கம்.

இதுவும் அது.

(இ-ள்.) ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் ஆவயின் நான்கும் = ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅயென்னும் உரிச்சொல் முதனிலையாகிய அவ்விடத்து வந்த குறிப்புப்பெயர் நான்கும்: உள்ளதன் நுணுக்கம் = பண்டு உள்ளதொன்றது நுணுகுதலை உணர்த்தும். எ-று.

சாய்தல் விகாரப்பட்டது.

உ-ம். "வேனிலுழந்தவறிதுயங்கோய்களிறு" "பாய்ந்தாய்ந்த தானைபரிந்தானைமைந்தனே" "நிழத்தயானைமேய்புலம்படாஅ" "கயலறலெதிரக்கடும்புனல்சாஅய்" எனவரும். ஆயந்ததானையென்றது பொங்குதல் விசித்தலான் நொசிந்த துகிலென்றவாறு. (௩௨)

௩௩௧. புலம்பே தனிமை.

இதுவும் அது.

(இ-ள்.) புலம்பே தனிமை = புலம்பு தனிமையென்னுங் குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "புலிப்பற்கோத்தபுலம்புமணித்தாலி" எனவரும். தமியென்பது சொற்புறனடையாற் கொள்க. (௩௩)

௩௩உ. துவன்று நிறைவாகும்.

இதுவும் அது.

(இ-ள்.) துவன்று நிறைவு ஆகும் = துவன்று நிறைவென்னுங் குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "ஆரியர்துவன்றியபேரிசையிமயம்" எனவரும். (௩௪)

௩௩௩. முரஞ்சன் முதிர்வே.

இதுவும் அது.

(இ - ள்.) முரஞ்சல் முதிர்வே = முரஞ்சல் முதிர்வென்னுங் குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "கோடுபலமுரஞ்சியகோளியாலத்து" எனவரும். (௩௫)

௩௩௪. வெம்மை வேண்டல்.

இது பண்பு.

(இ - ள்.) வெம்மை வேண்டல் = வெம்மை விரும்புதலாகிய பண்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "ஏமவெங்காமமியைவதாயினும்" எனவரும். இது "குழை மாண்ஞெள்ளிழைநீவெய்யோளொடு" எனத் திரிந்தும் நிற்கும்.

வெம்மை வெப்பமுணர்த்துதல் வழக்கு. (௩௬)

௩௩௫. பொற்பே பொலிவு.

இது குறிப்பு.

(இ - ள்.) பொற்பே பொலிவு = பொற்புப் பொலிவென்னுங் குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "பெருவரையடுக்கம்பொற்பச்சூர்மகள்" எனவரும். ()

௩௩௬. வறிது சிறிதாகும்.

இதுவும் அது.

(இ - ள்.) வறிது சிறிதாகும் = வறிது சிறிதென்னுங் குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "வறிதுவடக்கிறைஞ்சியசீர்சால்வெள்ளி" எனவரும். ()

௩௩௭. ஏற்ற நினைவுந் துணிவு மாகும்.

இதுவும் அது.

(இ - ள்.) ஏற்றம் நினைவுந் துணிவும் ஆகும் = ஏற்றம் நினைவுந் துணிவுமாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "கானலஞ்சேர்ப்பன்கொடுமையேற்றி" "ஏற்றமிலாட்டி யென்னேமுற்றாள்" எனவரும். (௩௯)

௩௩அ. பிணையும் பேணும் பெட்பின் பொருள.

இது குறிப்பும் பண்பும் உணர்த்துகின்றது.

(இ-ள்.) பிணையும் பேணும் பெட்பின் பொருள = பிணையும் பேணும் பெட்பென்னும் உரிச்சொல்லினது பொருளையுடையவாம். எ-று.

பெட்பென்பது புறந்தருதலும் விரும்புதலுமாகிய குறிப்பும் பண்பும் உணர்த்துமென்றறிக. சிறுபான்மை "பெட்பகும்" எனப் பெருமையும் உணர்த்தும்.

உ-ம். "அரும்பிணையகற்றிவேட்டஞாட்பினும்" "யானும்பேணினெனல்லனோமகிழ்ந" இவை புறந்தருதல் உணர்த்தின. "பெற்றோற் பெட்கும்பிணையையாகென" என்பழிக் கணவனைப் புறந்தரும் விருப்பத்தையுடையையாவாய் எனப் பிணை விருப்பத்திற்கு வந்தது. "அமரர்ப்பேணியுமாகுதியருத்தியும்" இது விருப்பம் உணர்த்திற்று.

"பெட்டவாயில்பெற்றிரவுவலியுறுப்பினும்" "காய்தலுமுவத்தலும்பிரித்தலும்பெட்டலும்" என ஆசிரியர் பெட்பின் பகுதியாகிய பெட்டென்னும் உரிச்சொல்லை உடம்பொடுபுணர்த்து ஓதியவாறுங் காண்க. (௪0)

௩௩௯. பணையே பிழைத்தல் பெருப்பு மாகும்.

இது குறிப்பு.

(இ-ள்.) பணையே பிழைத்தல் பெருப்பும் ஆகும் = பணை பிழைத்தலாகிய குறிப்பு உணர்த்துதலேயன்றிப் பெருப்பாகிய குறிப்பும் உணர்த்தும். எ-று.

பெருமையாகிய பண்பு உணர்த்தாது பெருத்தலாகிய குறிப்பு உணர்த்துதற்குப் பெருப்பென்றார்.

உ-ம். "அமர்க்கண்ணுமானருநிறமூழ்காது-பணைத்துவீழ்பகழிப் போக்குநினைந்து-கானவன்" "வேய்மருள்பணைத்தோணெகிழச்சேய் நாட்டு" எனவரும்.

இப்பணை மூங்கிலினை உணர்த்தல் உரிச்சொலன்மை உணர்க.

௩௪0. படரே யுள்ளல் செலவு மாகும்.

இதுவும் அது.

(இ - ள்.) படரே உள்ளல் செலவும் ஆகும் = படர் உள்ளுத லென்னுங் குறிப்பு உணர்த்துதலேயன்றிச் செலவென்னுங் குறிப்பும் உணர்த்தும். எ-று.

உள்ளல் வருத்தக்குறிப்பான் உள்ளுதலும் வருத்தக்குறிப் பின்றி உள்ளுதலுமென இருவகைத்தாகலிற் செலவுப்பொருட்டா கிய படரும் இவ்விருவகையுமுடைத்து.

உ-ம். "வள்ளியோர்ப்படர்குவர்புலவர்யானும்" "பசந்தமேனி யொடுபடரடவருந்தி" எனவும் "கறவைகன்றுவயிறபடர" எனவும் வரும். (சஉ)

ருசக. பையுளுஞ் சிறுமையு நோயின் பொருள.

இதுவும் அது.

(இ - ள்.) பையுளுஞ் சிறுமையும் நோயின் பொருள=பையு ளுஞ் சிறுமையும் நோயாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "பையுண்மாலைப்பழுமரம்படரிய" "சிறுமையுறுபசெய் பறியலரோ" எனவரும். (சங)

ருசஉ. எய்யா மையே யறியா மையே.

இதுவும் அது.

(இ - ள்.) எய்யாமையே அறியாமையே=எய்யாமை அறியா மையாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "எய்யாமையல்லைநீயும்வருந்துதி" எனவரும்.

அறிதலென்னும் உடம்பாட்டிற்கு மறையாகிய அறியாமை யென்னும் உரிச்சொல்லான் எய்யாமையை உணர்த்தவே அவவெய் யாமை மறைச்சொலென்பதூஉம் அதற்கு எய்த்தலென்னும் உடம் பாட்டுச்சொல் உளதென்பதூஉம் பெற்றாம். அவ்வுடம்பாட்டை ஓதாது மறையை ஓதினார் மறைச்சொல்லும் உரிச்சொல்லாய் வரு மென்றற்கு. "எய்த்துநீர்ச்சிலம்பின்குரைமேகலை" என்புழி எய்த் தென்பது அறிந்தென்னும் பொருளுணர்த்திற்று. (சச)

ருசங. நன்றுபெரி தாகும்.

இதுவும் அது.

(இ - ள்.) நன்று பெரிதாகும்=நன்று பெரிதென்னுங் குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "நன்று மரிதுற் றனையாற் பெரும" எனவரும்.

பெருமையென்னுது பெரிதென்றதனுன் நன்றென்பது வினையெச்சமாயிற்று. (சரு)

௩சச. தாவே வலியும் வருத்தமு மாகும்.

இதுவும் அது.

(இ - ள்.) தாவே வலியும் வருத்தமும் ஆகும் = தா வலியும் வருத்தமுமாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "தாவினன்பொன்றைஇயபாவை" "தாவாக்கொள்கைத் தகைசால்சிறப்பின்." தாவாக்கொள்கை வருத்தமில்லாத விரதம்.

இனிக் "கருங்கட்டாக்கலைபெருமபிறிதுற்று" எனத் தாவுதலுங் "தாவாதவில்லைவலிகளும்" எனக் கேடும் உணர்த்துதல் "கூறிய கிளவி" என்பதனுற்கொள்க. (சசு)

௩சரு. தெவுக்கொளற் பொருட்டே.

இதுவும் அது.

(இ - ள்.) தெவு கொளற் பொருட்டே=தெவு கொள்ளுதலாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "நீர்தெவுநிரைத்தொழுவர்" எனவரும். (சஎ)

௩சசு. தெவ்வுப்பகை யாகும்.

இதுவும் அது.

(இ - ள்.) தெவவு பகையாகும்=தெவ்வு பகையாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "தெவவுப்புலஞ்சிதையவெய்கணைசிதறி" எனவரும். ()

௩சஎ. விறப்பு முறப்பும் வெறிப்புஞ் செறிவே.

இதுவும் அது.

(இ - ள்.) விறப்பும் உறப்பும் வெறிப்புஞ் செறிவே=விறப்பும் உறப்பும் வெறிப்புஞ் செறிவென்னுங் குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "விறந்தகாப்போ டுண்ணின் று வலியுறுத்து" "உறந்தவிஞ்சியுயர்நிலைமாடத்து" "வெறுத்தகேள்விவிளங்குபுகழ்க்கபிலன்" என வரும். (சக)

ருசஅ. அவற்றுள்,

விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும்.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் வியப்பே வெரூஉப் பொருட்டும் ஆகும்= அம்மூன்றனுள் விறப்புச் செறிவேயன்றி வெருவுதற் குறிப்பும் உணர்த்தும். எ-று.

உ-ம். "அவலெறியுலக்கைப்பாடுவிறந்தயல" எனவரும். (ருo)

ருசகூ. கம்பலை சும்மை கலியே யழுங்க
லென்றிவை நான்கு மரவப் பொருள.

இஃது இசை.

(இ - ள்.) கம்பலை சும்மை கலியே அழுங்கல் என்று இவை நான்கும் அரவப் பொருள=கம்பலை சும்மை கலியே அழுங்கலென்று சொல்லப்பட்ட இந்நான்கும் அரவமாகிய இசைப்பொருண்மையை உணர்த்தும். எ-று.

உ-ம். "களிறுகவர்கம்பலைபோல" "துளிமழைதோயுந்தண்பரங்குன்றிற் - கலிகொள்சும்மையொலிகொளாயம்" "கலிகொளாயமலிதொகுபெடுத்த" "உயவுப்புணர்ந்தன்றிவ்வழுங்கலூரே" என வரும். "கலிகொள்சும்மை" என்பதனுட் கலி செருக்கினையுணர்த்துதல் "கூறியகிளவி" என்பதனாற்கொள்க. (ருக)

ருருo. அவற்றுள்,

அழுங்க லிரக்கமுங் கேடு மாகும்.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ - ள்.) அவற்றுள் அழுங்கல் இரக்கமுங் கேடும் ஆகும்= அந்நான்கனுள் அழுங்கல் அரவமேயன்றி இரக்கமுங் கேடுமாகிய குறிப்பும் உணர்த்தும். எ-று.

உ-ம். "பழங்கணோட்டமுதலிய - வழங்கினனல்லனோவயர்ந் தனன்மனனே" "குணனழுங்கக்குற்றமுழைநின்றுகூறுஞ்சிறியவர் கட்கு" எனவரும். (ருஉ)

ஙரு௧. கழுமென் கிளவி மயக்கஞ் செய்யும்.

இது குறிப்பு.

(இ - ள்.) கழுமு என் கிளவி மயக்கஞ் செய்யும் = கழுமு என்னுஞ் சொல் மயக்கமாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "கழுமியஞாட்பினுண்மைந்திழைத்தாரிட்ட" எனவரும்.

இது "கழுமமுடித்துக்கண்கூடுகூழை" எனத் திரட்சியை உணர்த்துதல் "கூறியகிளவி" என்பதனாற்கொள்க. (ருங)

ஙருஉ. செழுமை வளனுங் கொழுப்பு மாகும்.

இதுவும் அது.

(இ - ள்.) செழுமை வளனுங் கொழுப்பும் ஆகும் = செழுமை வளனுங் கொழுப்புமாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "செழுஞ்செந்நெல்லின்சேயரிப்புனிற்றுக்கதிர்" "செழுந் தடிதின்றசெந்நாயேற்றை" எனவரும்.

வளத்தொடு கொழுப்பிடை வேற்றுமையென்னையெனின் வள மென்பது ஆக்கம்; கொழுப்பென்பது உடம்பொடுபட்டக்கத்தனவற்றது "திணங்கோடலிழுதிருப்பு." (ருச)

ஙருங. விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்.

இதுவும் அது.

(இ - ள்.) விழுமஞ் சீர்மையும் சிறப்பும் இடும்பையும் = விழு மஞ் சீர்மையுஞ் சிறப்பும் இடும்பையுமாகியகுறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "விழுமியோர்காண்டொறுஞ்செய்வர்சிறப்பு" "வேற்று மையில்லாவிழுத்திணைப்பிறந்து" "நின்னுறுவிழுமங்களைந்தோன்" எனவரும். (ருரு)

ஙருச. கருவி தொகுதி.

இதுவும் அது.

(இ - ள்.) கருவி தொகுதி = கருவி தொகுதியாகிய குறிப்பு உணர்த்தும். எ - று.

உணர்த்துங்கால் பலவற்றது கூட்டத்தை விளக்கும்.

உ-ம். "கருவிவானங்கதழுறைசிதறி" எனவரும். ஆண்டு மின்னும் முழக்குங் காற்றுமென்பன இத்தொகுதி. (ருசு)

ஙருரு. கமநிறைந் தியலும்.

இதுவும் அது.

(இ - ள்) கம நிறைந்து இயலும் = கம நிறைவாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

சொல்லொடு பொருட்கு ஒற்றுமை கருதி நிறைந்தியலுமெனப் பொருளின் தொழிலைச் சொன்மேல் ஏற்றினார்.

உ-ம். "கார்கோண்முகந்தகமஞ்சூன்மாமழை" எனவரும். (ருஎ)

ஙருசா. அரியே யைம்மை.

இதுவும் அது.

(இ - ள்.) அரியே ஐம்மை=அரி ஐம்மையாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "அரிமயிர்த்திரண்முன்கை" எனவரும். (ருஅ)

ஙருஎ. கவவகத் திடுமே.

இதுவும் அது.

(இ - ள்.) கவவு அகத்திடுமே = கவவு அகத்தீடாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "கவவுக்கடுங்குரையள்காமர்வனப்பினள்" எனவரும். இது "கழுவிளங்காரங்கவைஇயமார்பே" என எச்சமாங்காற் றிரிந்து நிற்கும். (ருகூ)

ஙருஅ. துவைத்தலுஞ் சிலைத்தலு மியம்பலு மிரங்கலு
மிசைப்பொருட் கிளவி யென்மனார் புலவர்.

இஃது இசை.

(இ - ள்.) துவைத்தலுஞ் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும் இசைப்பொருட் கிளவி என்மனார் புலவர் = துவைத்தல் முதலிய நான்கும் இசைப்பொருளை உணர்த்துஞ் சொல்லாமென்று கூறுவர் புலவர். எ-று.

உ-ம். "முரசுகடிப்பிகுப்பவும்வால்வளைதுவைப்பவும்" "ஆமாநல்லேறுசிலைப்ப" "கடிமரந்தடியுமோசைதன்னூர் - நெடுமதில்வரைப் பிற்கடிமனையியம்ப" "ஏறிரங்கிருளிடையிரவினிற்பதம்பெறான்" எனவரும். (௬0)

௩௫௪. அவற்றுள்,
இரங்கல் கழிந்த பொருட்டு மாகும்.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ - ள்.) அவற்றுள் இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும் = அந்நான்கனுள் இரங்கல் இசையேயன்றி ஒருபொருளது கழிவாற் பிறந்த வருத்தமாகிய குறிப்பும் உணர்த்தும். எ-று.

உ-ம். "செய்திரங்காவினைச்சேண்விளங்கும்புகழ்" எனவரும். இஃது "இனிநினைந்திரக்கமாகின்று" என இரக்கமெனவும் நிற்கும்.

உம்மை இறந்தது தழீஇயிற்று. (௬க)

௩௬0. இலம்பா டொற்கமா யிரண்டும் வறுமை.

இதுவும் அது.

(இ - ள்.) இலம்பாடு = இலமென்னுஞ் சொற் குறிப்புச்சொற் றன்மைப்பட்டு இன்மையென்னும் உரிச்சொல்லாய்நின்றதுவும்: ஒற்கம் = ஒற்கமென்னும் உரிச்சொல்லும்: ஆ இரண்டும் வறுமை = ஆகிய அவவிரண்டும் வறுமையென்னும் உரிச்சொற்பெயரது குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "இலம்படுபுலவரேற்றகைநிறைய" "ஒக்கலொற்கஞ்சொலியதனூர்க" எனவரும்.

இலம்படுபுலவரென்பதற்கு இல்லாமை உண்டாகின்ற புலவரென அல்வழியாகப் பொருளுரைக்க. இதற்கு உரையாசிரியர் இலத்தாற் பற்றப்படும் புலவரென வேற்றுமையாகப் பொருள்கூறினாராலெனின், ஆசிரியர் "அல்வழியெல்லாமெல்லெழுத்தாகும்" என

அல்வழியே கூறத் தொடங்கி "அகமென்கிளவிக்குக்கைமுன்வரின்" எனப் பண்புத்தொகையும் "இலமென்கிளவிக்கு" என அல்வழிக்கண் வரும் உரிச்சொல்லுங் கூறிப், பின்னர் எண்ணுப்பெயரும் அளவுப் பெயரும் நிறைப்பெயருங்கூறிப் "படர்க்கைப்பெயரும்" என்னுஞ் சூத்திரத்தின் "வேற்றுமையாயின்" என மீட்டும வேற்றுமையை எடுத்து ஓதினமையின் இலமென்பதனை வேற்றுமையென்றல் பொருந்தாமை உணர்க. இலமென்னுஞ் சொல் யாம் பொருளிலமென முற்றுச்சொல்லாயும் ஒருகால் உரிச்சொல்லாயும் நிற்குமென்பது உணர்த்துதற்கு இலத்திற்கு உரிச்சொற்றனைப்பட்டு நிற்குமிடத்து என்றார். "இலமென்கிளவிக்குப்படுவருகாலை" என நிலைமொழி வருமொழி செய்து முன்னர் ஆசிரியர் புணர்த்தமையின் இலம்பாடென ஒருசொல்லாக ஓதாமை உணர்க. "இலம்பாடுநாணுத்தரும்" என்றதோவெனின், இல்லாமை உண்டாதல் நாணுத் தருமெனப் பொருள்கூறிக்கொள்க. (௬௨)

௩௬௧. ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள.

இதுவும் அது.

(இ - ள்.) ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள = ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தலாகிய குறிப்புப்பொருண்மையை உடைய. எ-று.

உ-ம். "கருமணன்ஞெமிரியதிருநகர்முற்றத்து" "புண்ணுமிழ் குருதிமுகடபாய்ந்திழிதர" எனவரும. (௬௩)

௩௬௨. கவர்வுவிருப் பாகும.

இதுவும் அது.

(இ - ள்.) கவர்வு விருப்பாகும் = கவர்வு விருப்பாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "கவர்நடைப்புரவி" எனவரும்.

இனிக் "கொள்ளைமாந்தரின் ஆனாதுகவரும்" எனக் கைக்கொள்ளுதல் "கூறியகிளவி' என்பதனாற் கொள்க. "கருமறிக்காரததிற்கவையடிப்பேய்மகள்" எனக் கவைத்தல் சொற்புறனடையாற் கொள்க. ()

௩௬௩. சேரே திரட்சி.

இதுவும் அது.

(இ - ள்.) சேரே திரட்சி=சேர் திரட்சியாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "சேர்ந்துசெறிகுறங்கின்" எனவரும். (சுரு)

௩சுசு. வியலென் கிளவி யகலப் பொருட்டே.

இதுவும் அது.

(இ - ள்.) வியல் என் கிளவி அகலப் பொருட்டே = வியல் என்னுஞ் சொல் அகலமாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "இருங்கல்வியலறைக்கிடப்பிவயிறுதின்று" எனவரும். இது "வியன்ருனைவிறல்வேந்தே" எனத் திரிந்தும் நிற்கும். (சுசு)

௩சுரு. பேநா முருமென வரூஉங் கிளவி
யாமுறை மூன்று மச்சப் பொருள.

இதுவும் அது.

(இ - ள்.) பே நாம் உரும் என வரூஉங் கிளவி ஆமுறை மூன்றும் அச்சப் பொருள = பே நாம் உருமென்று சொல்லவருகின்ற கிளவியாகிய அம்முறைமையினையுடைய மூன்றும் அச்சமென்னும் உரிச்சொல்லது குறிப்புப்பொருண்மையை உடைய. எ-று.

உ-ம். "மன்றமார்ந்தபேமுதிர்கடவுள்" "நாமநல்லார்க்கதிர்படவுமிழ்ந்த" "உருமில்சுற்றமொடு" எனவரும். நாம் நாமமெனத் திரிந்து வழங்கிற்று. (சுஎ)

௩சுசு. வயவலி யாகும.

இதுவும் அது.

(இ - ள்.) வய வலியாகும் = வய வலியாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "துன்னருந்துப்பின்வயமான்ருேன்றலை" எனவரும். ()

௩சுஎ. வாளொளி யாகும்.

இது பண்பு.

(இ - ள்.) வாள் ஒளியாகும்=வாள் ஒளியாகிய பண்பு உணர்த்தும். எ-து.

உ-ம். "கண்ணேநோக்கிவாளிழந்தனவே" எனவரும். (சுகூ)

௩௬அ. துய்வென் கிளவி யறிவின் றிரிபே.

இது குறிப்பு.

(இ - ள்.) துய்வு என் கிளவி அறிவின் திரிபே = துய்வென்னுஞ் சொல் அறிவினது திரிதலாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "துய்வுற்றேம்யாமாக" எனவரும். (௭௦)

௩௬௯. உயாவே யுயங்கல.

இதுவும் அது.

(இ - ள்.) உயாவே உயங்கல் = உயா வருத்தமாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "பருந்திருந் - துயாவிளிபயிற்றுமியாவுயர்நனந்தலை" எனவரும். (௭௧)

௩௭௦. உசாவே சூழ்ச்சி.

இதுவும் அது.

(இ - ள்.) உசாவே சூழ்ச்சி = உசா சூழ்ச்சியாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "உசாத்துணை" எனவரும். (௭௨)

௩௭௧. வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்.

இதுவும் அது.

(இ - ள்.) வயா என் கிளவி வேட்கைப் பெருக்கம் = வயா என்னுஞ் சொல் வேட்கையினது பெருக்கமாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "வயாவும்வருத்தமுமீன்றக்காலேவும்" எனவரும். இது "வயவுறுமகளிர" எனத்திரிந்தும் நிற்கும். ஈண்டு வேட்கையென்றது கருப்பந்தங்கி வருத்தமுற்று நுகரப்படும் பொருண்மேற் செல்லும் வேட்கையை. (௭௩)

௩௭௨. கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள.

இதுவும் அது.

(இ - ள்.) கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள=கறுப்புஞ் சிவப்பும் வெகுளியாகிய குறிப்புப்பொருண்மையையுடைய. எ-று.

உ-ம். "நிற்கறுத்தோருங்குடிமுனையாள்போல" "நீசிவந்திறுத்தநீரழிபாக்கம்" எனவரும். கருமை செய்மை என்றது கறுப்புச் சிவப்பெனத் தொழிற்படுத்தினர் அவை வெகுளியை உணர்த்தினமையின். (எ௩)

ௐஎ௩. நிறத்துரு வுணர்த்தற்கு முரிய வென்ப.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ - ள்.) நிறத்து உரு உணர்த்தற்கும் உரிய என்ப=கறுப்புச் சிவப்பெனத் தொழிற்படுத்துக் கூறிய சொற்கள் வெகுளியேயன்றி நிறவேறுபாடாகிய பண்பு உணர்த்துதற்கும் உரியவென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

இவை தொழிற்பட்டுழியும் பண்பு உணர்த்துமென வெளிப்படு சொல்லையுங் கூறினர் ஐயம் அகற்றுதற்கு.

உ-ம். "கறுத்தகாயா" "சிவந்தகாந்தள்" எனவரும். முதல் சினை முதல். (எ௪)

ௐஎ௪. நொசிவு நுழைவு நுணங்கு நுண்மை.

இதுவும் அது.

(இ - ள்.) நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை=நொசிவு முதலியன நுண்மையாகிய பண்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "நொசிபடிமருங்குல்கசிவுறக்கைதொழா" "இழைமருங்கறியாநுழைநூற்கலிங்கம்" "நுணங்குதுகினுடக்கம்போல" எனவரும். "நுணங்குநுண்கொடிமின்னோர்மழைமிசை" என நுணங்கு நுடக்கத்தை உணர்த்துதல் "கூறியகிளவி" என்பதனாற்கொள்க. (எரு)

ௐஎரு. புனிறென் கிளவியீன் றணிமைப் பொருட்டே.

இது குறிப்பு.

(இ - ள்.) புனிறு என் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே=புனிறென்னுஞ் சொல் ஈன்றணிமையாகிய குறிப்புப்பொருளை உடைத்து. எ-று.

உ-ம். "புனிறுதீர்குழவிக்கிலிற்றுமுலைபோல" "புனிற்றுப்பாய்ந் தெனக்கலங்கி" எனவரும். (எஎ)

௩எகூ. நனவே களனு மகலமுஞ் செய்யும்.

இதுவும் அது.

(இ - ள்.) நனவே களனும் அகலமுஞ் செய்யும்=நனவு களனும் அகலமுமாகிய குறிப்புப்பொருண்மையை உணர்த்தும். எ-று.

உ-ம். நனவுப்புகுவிறலியிற்றோன்றுநாடன்" "நனந்தலையுலகம் வளைஇய". எனவரும். (எஅ)

௩எஎ. மதவே மடனும வலியு மாகும்.

இதுவும் அது.

(இ - ள்.) மதவே மடனும் வலியும் ஆகும்=மத மடனும் வலியுமாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "பதவுமேய்ந்தமதவுநடைநல்லான்" "கயிற்றிடுகதச்சேப் போலமதமிக்கு" எனவரும். "மதவுநடை" என்பதில் மத மதவு என ஈறுதிரிந்து நின்றது. (எகூ)

௩எஅ. மிகுதியும வனப்பு மாகலு முரித்தே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ - ள்.) மிகுதியும் வனப்பு மாகலும் உரித்தே=மத மடனும் வலியுமேயன்றி மிகுதியும் வனப்புமாகிய குறிப்புஞ் சிறுபான்மை உணர்த்தும். எ-று.

உ-ம். "போராரவேற்றின்பொருநாகிளம்பாண்டி - றேருரச்செம் மாந்ததுபோன்மதைஇயினள்" "மாதாவாண்முகமதைஇயநோக்கே" எனவரும். இவையும் ஈறுதிரிந்தன. (அ0)

௩எகூ. புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி.

இதுவும் அது.

(இ - ள்.) யாணர்க் கிளவி புதிதுபடற் பொருட்டே = யாணரென்னுஞ் சொல் வருவாய் புதிதாகப் படுதலாகிய குறிப்பை உடைத்து. எ-று.

உ-ம். "வீகொடுசென்றவட்டிற்பறபல - மீனொடுபெயரும்யாண ரூர" எனவரும். (அக)

௩அ0. அமர்தன் மேவல்.

இதுவும் அது.

(இ - ள்.) அமர்தல் மேவல் = அமர்தல் மேவுதலாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "அகனமர்ந்துசெய்யாளுறையும" எனவரும். (அஉ

௩அக. யாணுக் கவினாகும்.

இதுவும் அது.

(இ - ள்.) யாணு கவினாகும் = யாணென்னுஞ் சொல் கவினாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "யாணதுபசலையென்றனென்" எனவரும். (அ௩)

௩அஉ. பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள.

இதுவும் அது.

(இ - ள்.) பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள = பரவும் பழிச்சும் வழுத்துதலென்னுஞ் சொல்லினது குறிப்புப்பொருளை உடைய. எ-று.

உ-ம். "கல்லேபரவினல்லது - நெல்லுகுத்துப்பரவுங்கடவுளுமி லவே" "செறிவளைவிறலியர்கைதொழூஉப்பழிச்சி - வறிதுநெறியொ ரீஇ" எனவரும். (அச)

௩அ௩. கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்க மிகுதி சிறப்பே
யச்ச முன்றேற் றாயீ ரைந்து
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே.

இது பெரும்பான்மை குறிப்புஞ் சிறுபான்மை பண்பும் உணர்த்துகின்றது.

(இ - ள்.) கடி என் கிளவி வரைவே கூர்மை காப்பே புதுமை விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே அச்சம் முன்றேற்று ஆயீரைந்

தும் மெய்ப்படத் தோன்றும் பொருட்டு ஆகும்மே=கடியென்னுஞ் சொல் வரைவு கூர்மை காப்பு புதுமை விரைவு விளக்கம் மிகுதி சிறப்பு அச்சந் தெய்வமுதலியவற்றைமுன்னின்றுதெளிவித்தல் என்றுகூறப்படுகின்ற அப்பத்துச்சொல்லும் மெய்ம்மைப்படத் தோன்றும் பொருண்மையினையுடைத்து. எ-று.

உ-ம். "கடிந்தகடிந்தொரார்செய்தார்க்கு" "கடிநுனைப்பகழி" "கடிமரந்தடியுமோசை" "கடியுண்கடவுட்கிட்டசில்குரல்" "கடுந்தேர்குழித்தஞெள்ளலாங்கண்" "கடும்பகல்ஞாயிறு" "கடுங்காலொற்றலிற்சுடர்சிறந்துருத்து" "அம்புதுஞ்சுங்கடியரணால்" "கடியுருமினுரறிக்கடிப்புச்சேர்பு - கடியமன்றநின்றழங்குகுரன்முரசம்" "கொடுஞ்சுழிப்புகார்த்தெய்வநோக்கிக் - கடுஞ்சூடாருகுவனினக்கேகானல்" என வரும். இவ்வுரிச்சொல் பெரும்பான்மை திரிந்துநிற்கும். (அரு)

௩அச. ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ - ள்.) ஐயமுங் கரிப்பும் ஆகலும் உரித்தே=கடியென்னுஞ் சொல் முற்கூறிய பத்துமேயன்றிச் சிறுபான்மை ஐயமாகிய குறிப்புங் கரிப்பாகிய பண்பும் உணர்த்துதற்கும் உரித்து. எ-று. (அசு)

உ-ம். "கடித்தனளல்லளோவன்னை" "கடிமிளகுதின்றகல்லாமந்தி" எனவரும்.

௩அரு. ஐவியப் பாகும்.

இது குறிப்பு.

(இ - ள்.) ஐ வியப்பு ஆகும்=ஐ வியப்பாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "ஐதேயம்மயானே" எனவரும். (அஎ)

௩அசு. முனைவுமுனி வாகும்.

இதுவும் அது.

(இ - ள்.) முனைவு முனிவாகும்=முனைவென்னுஞ் சொல் முனிவாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

முனை என்றும் பாடம்.

உ-ம். "சேற்றுநில முனைஇய செங்கட் காரான்" எனவரும். ()

௩அஎ. வையே கூர்மை.

இதுவும் அது.

(இ-ள்.) வையே கூர்மை = வை கூர்மையாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "வைநுனைப்பகழிமூழ்கலிற்செவிசாய்த்து" எனவரும். ()

௩அஅ. எறும்வலி யாகும்.

இதுவும் அது.

எறும் வலியாகும் = எறும் வலியாகிய குறிப்பு உணர்த்தும். எ-று.

உ-ம். "சிலைகவிலெறுழ்த்தோளோச்சிவலன்வளையூ" எனவரும்.

௩அகூ. மெய்பெறக் கிளந்த வுரிச்சொல் லெல்லா
முன்னும் பின்னும் வருபவை நாடி
யொத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்த
றத்த மரபிற் றோன்றுமன் பொருளே.

இஃது உரிச்சொற்கெல்லாம் புறனடை கூறுகின்றது.

(இ-ள்.) மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம் = ஒரு சொற் பலபொருட்கு உரிமை தோன்றியும் பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றியும் வருமென இருகூறுசெய்து பொருள்பெறக் கூறப்பட்ட உரிச்சொல் எல்லாவற்றையும்: முன்னும் பின்னும் வருபவை நாடி = தத்தமக்கு முன்னும் பின்னும் வரும் மொழிகளை ஆராய்ந்து: ஒத்த மொழியாற் புணர்த்தனர் உணர்த்தல் = அம்மொழிகளுட் தமக்குப் பொருந்தின மொழியோடுகூட்டிப் பொருளுணர்த்துக: மரபின் = அங்ஙனம் உணர்த்திய வரலாற்றுமுறைமையானே: தத்தம் பொருள் மன் தோன்றும் = தத்தமக்கு உரிய பொருள் விளங்கித் தோன்றும். எ-று.

எனவே உரிச்சொல் ஆணையாற் பொருளுணர்த்தாது வரலாற்று முறைமையாற் பொருளுணர்த்துமென்றார்.

உ-ம். "போகுகொடிமருங்குல்" என்பதிற் "போகல்" என்பது முன்வருஞ் சொல்லான் நேர்மையை உணர்த்திற்று. "திரிகாய் விடத்தேரோடுகொருடைபொகி" என்பதிற் போகலென்பது பின்

வருஞ்சொல்லான் நெடுமையை உணர்த்திற்று. "உறுகால்" என்பது முன்வருங் காலென்னுஞ்சொல்லான் மிகுதியை உணர்த்திற்று. "அணங்கியசெல்லல்" என்பது பின்வரும் அணங்கிய என்னுஞ் சொல்லான் இன்னுமையை உணர்த்திற்று. இங்ஙனங் கூறவே "முன்னும்பின்னுமொழியடுத்துவருதலும்" என இடைச்சொற்கு ஓதிய விதி இதற்குங் கூறினாராயிற்று. (கூக)

ஙகூ0. கூறிய கிளவி பொருணிலை யல்ல
வேறுபிற தோன்றினு மவற்றொடு கொளலே.

இதுவும் அது.

(இ - ள்.) கூறிய கிளவி பொருணிலை அல்ல வேறு பிற தோன்றினும் = முன்னும் பின்னும் வருபவை நாடியவழி முற்கூறிய உரிச்சொற்களின் பொருணிலைமையல்லாத வேறுபிறபொருள் தோன்றுமாயினும்: அவற்றொடு கொளல் = அக்கூறப்பட்டனவற்றோடே அவற்றையும் உரிச்சொலலாகக் கொள்க. எ-று.

உ-ம். "கடிநாறும்பூந்துணர்" என்றால் முற்கூறியவற்றிற்கு ஏலாது மணப்பொருட்டு ஆயிற்று. "மரம்புரைப்பட்டது" என்பது உயர்வுபொருள் குறித்ததென்று கொள்ளற்க, பொந்துபட்டதென்னும் பொருட்டு ஆயிற்று. இவையேயன்றி வேறுபிற தோன்றினவை அவ்வச்சூத்திரங்களுட் காட்டிப் போந்தாம்; அவற்றான் உணர்க. (கூஉ)

ஙகூக. பொருட்குப்பொரு டெரியி னதுவரம் பின்றே.

இச்சூத்திரம் முதல் "எழுத்துப்பிரிந்திசைத்தல்" என்னுஞ் சூத்திரத்தளவும் முற்கூறிய நால்வகைச் சொல்லையும் உணருமாறும் உணர்த்துமாறும் அவற்றின் தன்மையும் உணர்த்துகின்றார், மேற்கூறுகின்ற பொது இலக்கணமாகிய எச்ச இயற்கு ஏற்ப அதிகாரப்பட்டமை கருதி.

(இ - ள்.) பொருட்குப் பொருள் தெரியின் = ஒருசொல்லை ஒருசொல்லானும் பலசொல்லானும் உணர்த்தியவழிப் பொருளுணர்த்த வந்த சொற்கும் பொருள்யாதெனப் பொருள் தெரியுமாயின்: அது வரம்பின்று = அங்ஙனந் தெரிதல் வரம்பின்றாகும், அதனாற் பொருட்குப் பொருள் தெரியற்க. எ-று.

ஒருசொற்கு ஒருசொல்லானும் பலசொல்லானும் பொருளுணர்த்திறுலும் உணரும் உணர்வில்லாதானை உணர்த்துமாறு மேற்கூறுகின்றார். (௯௩)

௩௯௨. பொருட்குத்திரி பில்லை யுணர்த்த வல்லின்.

இதுவும் அது.

(இ - ள்.) உணர்த்த வல்லின் பொருட்குத் திரிபில்லை = மாணாக்கன் உணருமாறு அறிந்து ஆசிரியன் உணர்த்த வல்லனாயின் இச்சொல் இப்பொருட்டு என்று தான் கூறிய பொருட்குத் திரிபின்றாம். எ-று.

யாம் என்பது படர்க்கையுளப்பாட்டுத்தன்மைப்பெயரென்றால் உணராதானை அது சேய்மைக்கண் நின்றாரைத் தன்னோடு கூட்டிக் கூறப்பட்டுப் புடைபெயர்ச்சியின்றி நின்றதோர்பொருளை உணர்த்திற்றுக்காணெனத் தொடர்மொழி கூறியானுஞ் சேய்மைக்கண் நின்றாரைத் தன்னோடு சேர்த்துக்காட்டியானும் பொருளுணர்த்துக. உண்டேமென்பது பன்மைத்தன்மையென்றாற் பொருளுணராதானை இது யானும் இவனும் அவனும் உண்டற்றொழிலைச் செய்தேமென்னும் பொருளுணர்த்திற்றுக்காணெனத் தொடர்மொழி கூறியானும் அவரைத் தன்னொடு சேர்த்தித் தொழினிகழ்த்திக்காட்டியானும் பொருளுணர்த்துக. "சிறியகட்பெறினேயெமக்கீயுமன்னே" எனபுழி மன்னைச்சொல் இனியதுகழிந்ததென்னும் பொருள் குறித்து நின்றது காணென்றாற் பொருளுணராதானை அரிதாகப்பெற்ற கள்ளை எக்காலமும் எமக்குத் தருகின்றவன் துறக்கத்துச் சேறலின் எமக்குக் கள்ளுண்டல் போயிற்றென்றல் இதன்பொருளெனத் தொடர்மொழி கூறிப் பொருளுணர்த்துக. "உறுகால்" எனபுழி உறு என்பது மிகுதியென்றால் உணராதானைக் கடுங்காலினது வலிகண்டாய் ஈண்டு உறுவெனபதற்குப்பொருள் அஃதென்று தொடர்மொழி கூறியானுங் கடுங்கால் உள்வழிக் காட்டியானும் உணர்த்துக. இங்ஙனம் நால்வகைச் சொல்லையும் மாணாக்கன் உணருமாறு அறிந்து உணர்த்தவே பொருட்குத் திரிபின்றாம்.

இங்ஙனம் உணர்த்தவும் உணராதானை உணர்த்தற்பாலனல்லனென்கின்றது மேல்வருகின்ற சூத்திரம். (௯௪)

௩௯௩. உணர்ச்சி வாயி லுணர்வோர் வலித்தே.

இதுவும் அது.

(இ - ள்.) உணர்ச்சிவாயில் = நால்வகைச்சொல்லையும் மாணாக்கன் உணர்தற்குக் கூறிய இவ்விலக்கணம்: உணர்வோர் வலித்து = தன்னை உணர்வோரது உணர்வைத் தனக்கு வலியாக உடைத்து. எ-று.

எனவே தன்னை உணரும் உணர்வில்லாதார்க்குத் தான் சொல்வது பயன்படாதாகலின் அதனை அவர்க்கு உணர்த்தற்கவென்பது பொருளாயிற்று.

இத்துணையும் உணருமாறும் உணர்த்துமாறும் உணர்த்தினார். ()

௩௯௪. மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா.

இது சொற்பொருள் உணர்த்துங் காரணம் ஆசிரியர்க்கே புலப்படுமென்கின்றது.

(இ - ள்.) மொழிப்பொருட் காரணம் = நால்வகைச்சொல்லுக்கும் பொருளை அறிவித்து நிற்கின்றதோர் காரணம் உண்டாந்தன்மை: விழிப்பத் தோன்றா = நுண்ணுணர்வில்லாதோர்க்கு மரபென்று கொள்வதல்லது விளங்கத்தோன்றா. எ-று.

எனவே நுண்ணுணர்வுடையோர்க்குக் காரணமுண்டாந்தன்மை விளங்கத்தோன்றுமென்பது பொருளாயிற்று.

இது மரபென்று கோடல் "நிலந்தீநீர்வளி" என்னும் மரபியற் சூத்திரத்தினாலும் ஆசிரியர் உணர்த்தினார்.

உலகத்துப்பொருள்களின் நிகழ்ச்சிக்குச் சொல் காரணமாதலின் மொழிப்பொருட்காரணமென்றார். இக்காரணம் அக்காரியங்களோடு இயைந்துநிற்கின்ற தன்மை ஆசிரியர்க்கல்லது புலப்படாமையின் விழிப்பத்தோன்றா என்றார். (௯௫)

௩௯௫. எழுத்துப்பிரிந் திசைத்த லிவணியல் பின்றே.

இஃது உரிச்சொற்கு எழுத்துப்பிரிந்திசைத்தல் இன்று என்கின்றது.

(இ - ள்.) எழுத்துப்பிரிந்திசைத்தல் இவண் இயல்பு இன்று = எழுத்துக்கள் முதனிலையும் இறுதிநிலையுமாகப் பிரிந்து வேறுவேறு பொருளுணர்த்துதல் உரிச்சொல்லிடத்து இயல்புடைத்தன்று. எ-று.

எனவே எழுத்துக்கள் திரிந்து பொருளுணர்த்துதல் உரிச்சொலிடத்து இயல்புடைத்தென்றவாறும்.

எழுத்துக்கள் பிரிந்திசைத்தன வினைச்சொல்லும் ஒட்டுப்பெயரும். அவற்றுள், வினை பிரிந்தன வினையியலுள் ஈறுபற்றி ஓதிப் பிரித்துக்காட்டினர். பெயர் பிரிந்தன "நம்மூர்ந்துவரூஉமிகரவைகாரமும்" என்பன முதலியவற்றாற் காட்டினர். வெற்பன் பொருப்பன் என்பன முதனிலை பிரிப்பப் பிரியுமேனும் அவையும் ஒட்டுப்பெயரென்று உணர்க.

தாமாகப்பொருளுணர்த்தாமையின் பிரிதலும் பிரியாமையும் இடைச்சொற்கு இன்று.

இனி உரிச்சொல் எழுத்துத் திரிந்திசைத்தன எல்லாம் இவ்வோத்தினுட் காட்டிப்போந்தவற்றான் உணர்க. (கூஎ)

௩௯௯. அன்ன பிறவுங் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉ
முரிச்சொல் லெல்லாம் பொருட்குறை கூட்ட
வியன்ற மருங்கி னினைத்தென வறியும
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்த லென்மனார் புலவர்.

இஃது உரிச்சொற்கெல்லாம் புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) கிளந்த அல்ல அன்ன பிறவும் = சொல்லப்பட்டனவேயன்றி அவைபோல்வன பிறவுமாய்: பன்முறையானும் பரந்தன வரூஉம் உரிச்சொல் எல்லாம் = ஈறுபற்றி உணர்த்தற்கு அடங்காது பலவாற்றானும் பரந்து வரும் உரிச்சொல்லெல்லாம்: பொருட்குறை கூட்ட = பொருளைச் சொல்லின்றியமையாக் குறைபாடு தீரப் பொருளை அதனோடு கூட்டி உணர்த்த: இயன்ற மருங்கின் இனைத்தென அறியும் வரம்பு தமக்கு இன்மையின் = இசை குறிப்புப் பண்பு பற்றித் தாம் இயன்ற நிலத்து இத்துணையென வரையறுத்து உணரும் எல்லை தமக்கு இன்மையான் எஞ்சாமற் கிளத்தல் அரிதாகலின்: வழிநனி கடைப்பிடித்து = அவற்றை அறிவதற்கு ஓதிய வழிகளைச் சோராமல் மிகவுங் கடைப்பிடித்து: ஓம்படை ஆணையிற் கிளந்தவற்று இயலாற் பாங்கு உற உணர்தல் என்மனார் புலவர் = பாதுகாவலாகிய

ஆணையிற் கிளந்தவற்றின் இயல்பாலே அவற்றையும் பகுதியுற உணர்க என்று சொல்லுவர் புலவர். எ-று.

ஆதலால் யானும் அவவாறே கூறினேனென்றார் எனக் குறிப் பெச்சமாக உரைக்க.

எனவே "பெயரினும்வினையினுமெய்தடுமாறி" எனவும் "முன் னும்பின்னும்வருபவைநாடி" எனவும் யான் கூறிய நெறியைச் சோ ராமற் கடைப்பிடித்து "எச்சொல்லாயினும்பொருள்வேறுகிளத்தல்" எனவும் "ஒத்தமொழியாற்புணர்த்தனருணர்த்த-றத்தமரபிற்றோன்று மன்பொருளே" எனவும் என்றுற் தரப்பட்ட பாதுகாவலாணையாற் கிளந்தவற்று இயலாற் பாங்குற உணர்க என்பது இதன் கருத் தாயிற்று.

உரிச்சொலெல்லாங் கூட்ட வரம்பு தமக்கு இன்மையிற் கடைப் பிடித்து இயல்பாகவே அவற்றை உணர்க என வினைமுடிபு செய்க.

இருமையென்பது கருமையும் பெருமையுமாகிய குறிப்புஞ், சேணென்பது சேய்மையாகிய குறிப்புந், தொன்மையென்பது பழ மையாகிய குறிப்பும் உணர்த்துதலும்; இறைல் உலோபமும், "நொறி வியற்புரவியதிபர்கோமான்" என நொறில் நுடக்கமும், "நொறிலியற் புரவிக்கழற்காலிளையோர்" என நொறில் விரைவுந், தெவிட்டுதல் அடைதலும், மவிதல் நெருங்குதலும், மாலை குற்றமும் உணர்த்துத லும்; பிறவுங் "கிளந்த அல்ல" என்பதனுற்கொள்க. (௬௪)

உரிச்சொல்லியல் முற்றும்.

---

ஒன்பதாவது

# எ ச் ச வி ய ல்.

௩௯௭. இயற்சொ றிரிசொ றிசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே.

என்பது சூத்திரம். முற்கூறிய எண்வகை ஒத்தினுள்ளும் உணர்த்துதற்கு இடமின்றி எஞ்சிநின்ற சொல்லிலக்கணங்களைத் தொகுத்து உணர்த்துதலின் இஃது எச்சவியலென்னும் பெயர்த்தா யிற்று. செய்யுட்கு உரிய சொல்லும் அவற்றிலக்கணமும் அவற் றின் விகாரமும் அச்செய்யுட்பொருள்கோளும் முதலுணர்த்துகின்

ரூர். இச்சூத்திரஞ் செய்யுள்விதியொழிபு பெரும்பான்மைத்தாதலிற் செய்யுட் செய்தற்கு உரிய சொற்கள் இவையென அவற்றின் வரையறை கூறுகின்றது.

(இ - ள்.) இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று அனைத்தே = இயல்பாகிய சொல்லும் அதுதான் திரிந்து வருஞ் சொல்லுந் திசைக்கண் வழங்குஞ் சொல்லும் ஆரியச்சொல் லும் என்று கூறிய அத்துணையே: செய்யுள் ஈட்டச் சொல்லே= ஒருபொருண்மேல் நிகழுஞ் செய்யுளை ஈட்டுதற்கு உரிய சொல்லா வன. எ-று.

எனவே பிறபாடைச்சொற்கள் ஈட்டுதற்கு உரியவன்றிச் சிறு பான்மை வருமாயின. அவை செப்பு குளிரு சிக்கு அந்தோ என் ருற்போல்வன பிறவுமாம். இயல்பாகிய சொல் முற்கூறிய நால் வகைச் சொல்லேயாய் நின்று செய்யுட்கு உரித்தாம். அவ்வியற் சொல் திரிசொல்லாங்காற் பெரும்பான்மை பெயராகவுஞ் சிறு பான்மை வினைத்திரிசொல்லாகவுந் திரிதலன்றி இடையும் உரியு மாகத் திரிந்துவாரா. திசைச்சொல்லும் வடசொல்லும் பெரும் பான்மை பெயர்ப்பெயராயுஞ் சிறுபான்மை தொழிற்பெயராயும் வருதலன்றி ஏனையவாய் வாரா. (க)

௩௯௮. அவற்றுள், இயற்சொற் ருமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே.

இது நிறுத்தமுறையானே இயற்சொற்கு இலக்கணங் கூறு கின்றது.

(இ - ள்.) அவற்றுள் இயற்சொற்ருமே=அந்நான்கனுள் இயற் சொல்லென்று கூறிய சொற்ரும்; செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி = செந்தமிழ்நிலத்தின்கண்ணே வழங்குதலோடு பொருந்தி: தம் பொருள் வழாமை இசைக்குஞ் சொல்லே=அச்செந்தமிழ்நிலத் துங் கொடுந்தமிழ்நிலத்துங் கேட்டோர்க்குத் தத்தம்பொருள் வழு வாமல் ஒலிக்குஞ் சொல்லாம். எ-று.

திரிபின்றி இயல்பாகிய சொல்லாவன நிலம் நீர் தீ வளி சோறு கூழ் பால் மக்கள் மரம் தெங்கு கமுகு என்னுந் தொடக்கத்தன.

செந்தமிழ்நிலமாவது வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்குங் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம். (உ)

௩௯௯. ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த வொருசொல் லாகியு
மிருபாற் றென்ப திரிசொற் கிளவி.

இது திரிசொற்கு இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) திரிசொற் கிளவி = அவ்வியற்சொல் திரிந்த திரிசொல்லாகிய சொல்லை; ஒரு பொருள் குறித்த வேறு சொல் ஆகியும் வேறு பொருள் குறித்த ஒரு சொல் ஆகியும் இரு பாற்று என்ப=ஒருபொருளைக் குறித்து வரும் பலசொல்லாயும் பலபொருளைக் குறித்து வரும் ஒருசொல்லாயும் இருவகைப்படுமென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

அவ்வியற்சொல்லைத் திரிக்குங்காற் தம் எழுத்துச் சிறிதுநிற்பத் திரிப்பனவும் அவ்வியற்சொற்றம்மையே பிறசொற் கொணர்ந்து முழுவதூஉந் திரிப்பனவுமென இருவகையவாம்.

உ-ம். கிளி மயில் என்பவற்றைக் கிள்ளை மஞ்ஞை எனச் சிறிது நிற்பத் திரித்தும் அவற்றைத் தத்தை பிணிமுகம் எனப் பிறசொற் கொணர்ந்து முழுவதூஉந் திரித்துங் கூறுதல். மலைக்கு வெற்பு விலங்கல் விண்டு என்பன முழுவதூஉந் திரித்தன. இவை ஒருபொருள் குறித்த வேறுசொல். உந்தியென்பது யாழ்ப்பத்தலுங் கொப்பூழுந் தேர்த்தட்டுங் கானியாற்றிடையும் உணர்த்துதல் முழுவதூஉந் திரித்தது. இது வேறுபொருள் குறித்த ஒருசொல். அளகென்பது கோழி கூகை மயிலென்னும் மூன்றுசாதியிற் பெண்பாற்கும் பெயராதலின் இதுவும் வேறுபொருள் குறித்ததாம். இவை முழுவதூஉந் திரித்தன. இவையெல்லாம் பெயர்த்திரிசொல்.

கேட்டைவாயாயின் செப்பீமன் ஈங்குவந்தீத்தாய் புகழ்ந்திகுமல்லரோ என்மனுர் என்றிசினேரே பெறலருங்குரைத்து என்பன போல்வன வினைத்திரிசொல். இவை சிறிதுநிற்பத் திரித்தன.

பைங்கண் பைந்தார் பச்சிலை காரா சேதா என்றாற்போலும் பண்புத்தொகையாகிய சொற்களைப் பசுமை கருமை செம்மை எனப் பண்புப்பெயராக நிறுத்தி ஈற்றுயிர்மெய்யும் ஈற்றயலுயிருங் கெட்டு வருமொழிக்கேற்ப ஒற்றுத் திரிந்துந் திரியாதும் ஆதி நின்ற அகரம்

ஐகாரமாயுந் திரிந்தனவென்றும், ஈற்றுயிர்மெய்யும் ஈற்றயலுயிருங் கெட்டு ஆதி நீண்டதென்றும், ஈற்றுயிர்மெய்யும் இடையிலொற்றுங் கெட்டு ஆதி நீண்டதென்றும், பின்னுள்ளோர் சந்திமுடிக்கின்றது பொருந்தாது; என்னை? பைங்கணென்புழிப் பசியதாகிய கண்ணெனப் பண்புணர்த்தும் ஈற்றை விரித்தலன்றிப் பசுமைக்கண்ணெனத் தாந் தொகுத்த பண்புப்பெயரை விரித்தலாகாமையின். இவை செய்யுட்குப் புலவர் சிறிதுநிற்பத் திரித்துக்கொண்ட பெயரெச்ச வினைக்குறிப்புப்பெயரென்று உணர்க. எழுத்ததிகாரத்துச், செய்யுட்கு இவ்வாறு முடிக்கவென ஆசிரியர் முடிபு கூறியவற்றையெல்லாஞ், செய்யுண்முடிபென்று கூறலும், வழக்குச்சொல் இவ்வாறு திரிந்து வந்தனவற்றை வினைத்திரிசொல்லென்று பெயர்கூறலும் ஆசிரியர் கருத்தாம்.

இடையும் உரியுந் திரிசொல்லாய் வருமேனும் உணர்க. (௩)

௪00. செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி.

இது திசைச்சொற்கு இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) திசைச்சொற் கிளவி=திசைச்சொல்லாகிய சொல்: செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந் தங்குறிப்பினவே=செந்தமிழ்நாட்டைச் சூழ்ந்த பன்னிரண்டு நிலத்தும் பன்னிரண்டையும் புறஞ்சூழ்ந்த பன்னிரண்டுநிலத்துந் தாந்தாங் குறித்தபொருளையே விளக்குந் தன்மையையுடையன. எ-று.

உம்மையை எச்சவும்மையாக்கிப் பொருளுரைக்க. எனவே இயற்சொற்போல எந்நிலத்துந் தம்பொருள் விளக்காவாயின.

பன்னிருநிலமாவன: பொங்கர்நாடு ஒளிநாடு தென்பாண்டிநாடு குட்டநாடு குடநாடு பன்றிநாடு கற்காநாடு சீதநாடு பூழிநாடு மலையமாநாடு அருவாநாடு அருவாவடதலை எனத் தென்கீழ்பால் முதலாக வடகீழ்பாலிறுக எண்ணுக.

இனிப் பன்னிரண்டையுஞ் சூழ்ந்த பன்னிரண்டாவன: சிங்களமும் பழந்தீவுங் கொல்லமுங் கூபமுங் கொங்கணமுந் துளுவுங் குடகமுங் கருநடமுங் கூடமும் வடுகுந் தெலுங்குங் கலிங்கமுமாம்.

தென்பாண்டிநாட்டார் ஆ எருமை என்பனவற்றைப் பெற்றமென்றுங், குட்டநாட்டார் தாயைத் தள்ளையென்றும் நாயை

ஞெள்ளையென்றுங், குடநாட்டார் தந்தையை அச்சனென்றுங், கற்கா நாட்டார்* வஞ்சரைக் கையரென்றுஞ், சீதநாட்டார் ஏடாவென்ப தனை எலுவனென்றுந் தோழியை இகுளையென்றுந் தம்மாமியென் பதனைத் தந்துவையென்றும், பூழிநாட்டார் நாயை ஞமலியென்றுஞ் சிறுகுளத்தைப் பாழியென்றும், அருவாநாட்டார் செய்யைச் செறு வென்றுஞ் சிறுகுளத்தைக் கேணியென்றும், அருவாவடதலையார் குறுணியைக் குட்டையென்றும் வழங்குப.

இனிச் சிங்களம் அந்தோவென்பது; கருநடங் கரைய சிக்க குளிர என்பன, வடுகு செப்பென்பது; தெலுங்கு எருத்தைப் பாண் டிலென்பது; துளு மாமரத்தைக் கொக்கென்பது. ஒழிந்தவற்றிற்கும் வந்துழிக் காண்க. (௪)

௪0௧. வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.

இது வடசொற்கு இலக்கணங் கூறுகின்றது.

(இ - ள்.) வடசொற் கிளவி = வடசொல்லாகிய சொல்: வட வெழுத்து ஒரீஇ = உரப்பியும் எடுத்துங் கனைத்துங் கூறும் வடவெ ழுத்துக்களின் நீங்கி: எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்=இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தான் இயன்ற சொல்லாம். எ-று.

அவை வாரி மேரு குங்குமம் மணி மானம் மீனம் வீரம் வேணு காரணம் காரியம் நிமித்தம் காரகம் என்றாற்போலச் சான்றோர்செய் யுட்கண் வருவன.

இனி ஒழிந்தோர் செய்யுட்கண் வருவன கமலம் அமலம் மூலம் கோபம் ஞானம் ஞேயம் தமாலம் தாரம் திலகம் நாமம் யானம் யோனி உற்பலம் இவை போல்வன பிறவுமாம். (௫)

௪0௨. சிதைந்தன வரினு மியைந்தன வரையார்.

இதுவும் அது.

(இ - ள்.) சிதைந்தன வரினும்=பொது எழுத்தான் இயன்ற னவேயன்றி வடவெழுத்தான் இயன்ற வடசொற் சிதைந்துவரி னும்: இயைந்தன வரையார்=பொருத்தமுடையன செய்யுளிடத்து நீக்கார். எ-று.

உ-ம். "அரமியம்வியலகத்தியம்பும்" "தசநான்கெய்தியபணைமருளுனொன்றாள்" "வாதிகையன்னகவைக்கதிரிறைஞ்சி" "கடுந்தேரிராமனுடன்புணர்சீதையை" "பேதையல்லைமேதையங்குறுமகள்" "தைப்பமைசருமத்து" என்றாற்போல்வன சான்றோர் செய்யுட்கட் சிதைந்து வந்தன.

இனித் தந்திரம் சூத்திரம் விருத்தி அருத்தாபத்தி உத்தி என்றாற்போல்வன நூலுட் சிதைந்து வந்தன; பங்கயம் இடபம் விசயம் இருடிகள் மேகம் பந்தம் மயானம் விடம் துங்கம் பலம் பாரம் சர்ச்சரை சாதி சேனை சித்தி சாதனம் அயன் அரி அரன் ஆரம் அருகம் சிங்கம் மோக்கம் கர்மம் பக்கம் சூலம் சதம் போதகம் போகம் சுத்தம் சலம் மோகம் யோகம் வந்தனை வேலை சாலை மாலை உவமை வனிதை புரி மேதினி குமரி நதி அரங்கம் இலங்கை இயக்கன் உலோபம் உலோகம் நிருத்தம் கீதம் வாச்சியம் வச்சிரம் அருத்தம் கருமம் கருப்பம் காப்பியம் பருப்பதம் என்றாற்போல்வன பின்னுள்ளோர்செய்யுட்கட் திரிந்து ஏற்கும் எழுத்துக்களான் மருவி வந்தன.

இனிச் 'சிதைந்தனவரினும்' எனப் பொதுப்படக் கூறியவதனால் ஆணை வட்டம் நட்டம் கண்ணன் எனப் பாகதமாகச் சிதைந்தனவுங் கொள்க. (௬)

௪௦௬. அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை
வலிக்கும்வழி வலித்தலு மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலுந் தொகுக்கும்வழித் தொகுத்த [லும்
நீட்டும்வழி நீட்டலுங் குறுக்கும்வழிக் குறுக்கலு
நாட்டல் வலிய வென்மனார் புலவர்.

இது செய்யுள்விகாரமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை = முற்கூறிய நான்கு சொல்லையுஞ் செய்யுளாகத் தொடுக்குங்கால்: வலிக்கும்வழி வலித்தலும் = மெல்லொற்றை வல்லொற்றாக்க வேண்டும்வழி வல்லொற்றாக்கலும்: மெலிக்கும்வழி மெலித்தலும் = வல்லொற்றை மெல்லொற்றாக்க வேண்டும்வழி மெல்லொற்றாக்கலும்: விரிக்கும்வழி விரித்தலும் = சந்தி நிரம்புதற்கு ஓர்சொல்லை விரிக்க வேண்டும்வழி விரித்தலும்: தொகுக்கும்வழித் தொகுத்தலும் = சந்தம் உளவாதற்கு ஓர் சொல்லைத் தொகுக்க வேண்டும்வழித் தொகுத்தலும்; நீட்டும்வழி

நீட்டலும்=குற்றெழுத்தினை நீட்ட வேண்டும்வழி நீட்டலும்: குறுக்கும்வழிக் குறுக்கலும்=நெட்டெழுத்தினைக் குறுக்க வேண்டும்வழிக் குறுக்கலுமாகிய அறுவகை விகாரமும்: நாட்டல் வலிய என்மனார் புலவர்=செய்யுளின்பம் பெறச் செய்வார் நாட்டுதலை வலியாகவுடைய என்று கூறுவர் புலவர். எ-று.

உ-ம். "முத்தைவரூஉங்காலந்தோன்றின்" "குன்றியலுகரத்திறுதியாகும்" "தண்ணந்துறைவர்கொடுமை" "இடையெனப்படுப" "வெள்வளைநல்காள்வீடுமென்னுயிரே" "திருத்தார்நன்றென்றேன்றியேன்" என முறையே காண்க.

பரிசிலை அழுந்துபடுவிழுப்புண் என்றாற்போல இரண்டு விகாரம் வருவனவற்றை 'நாட்டல்வலிய' என்றதனாற் கொள்க. (எ)

சo௪. நிரனிறை சுண்ண மடிமறி மொழிமாற்
றவைநான் கென்ப மொழிபுண ரியல்பே.

இது செய்யுள் செய்வழி அதன் பொருட்கிடை கூறுகின்றது.

(இ - ள்.) இயல்பு புணர் மொழி=இயற்கையாகவே தம்முட் கூடிய பொருளுணர்த்துஞ் சொற்கள் அங்ஙனம் இயற்கையாகக் கூடிப் பொருளுணர்த்தாது விகாரப்பட்டுப் பொருளுணர்த்துங்கால்: அவை = அவ்விகாரவகை: நிரனிறை சுண்ணம் அடிமறி மொழி மாற்று நான்கு என்ப=நிரனிறையுஞ் சுண்ணமும் அடிமறியும் மொழிமாற்றுமென நான்கென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

நிரனிறையுஞ் சுண்ணமும் நிரலேநிறுத்தலுந் துணித்துக் கூட்டுதலுமாகிய வேறுபாடுடைமையின் மொழிமாற்றின் வேறாயின.(அ)

சoரு. அவற்றுள், நிரனிறைதானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்.

இது நிறுத்தமுறையானே நிரனிறை கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் நிரனிறைதானே = அந்நான்கனுள் நிரனிறையாவது: வினையினும் பெயரினும் நினையத் தோன்றி=வினையானும் பெயரானும் ஆராயத் தோன்றி: சொல் வேறு நிலைஇப் பொருள் வேறு நிலையல் = முடிக்கப்படுஞ் சொல்லும் வேறே நிலை பெற்று முடிக்குஞ் சொல்லும் வேறே நிற்றலாம். எ-று.

தொடர்மொழிப்பொருள்* முடிக்குஞ் சொற்கண்ணதாகலான் முடிக்குஞ் சொல்லைப் பொருளென்றார்.

'வினையினும் பெயரினும்' என்றதனான் வினைச்சொல்லான் வருவதூஉம் பெயர்ச்சொல்லான் வருவதூஉம் அவ்விருசொல்லான் வருவதூஉம் என நிரனிறை மூன்றும்.

உ-ம். "மாசுபோகவுங்காய்பசிநீங்கவுங் கடிபுனன்மூழ்கியடிசில் கைதொட்டு" என்புழி முடிவனவும் முடிப்பனவுமாகிய வினைச்சொல் வேறுவேறு நிற்றலின் வினைநிரனிறை. "கொடிகுவளைகொட்டை நுசுப்புண்கண்மேனி" என முடிவனவும் முடிப்பனவுமாகிய பெயர்ச் சொல் வேறுவேறு நிற்றலிற் பெயர்நிரனிறை. "உடலுமுடைந்தோடு மூழ்மலரும்பார்க்கும் - கடலிருளாம்பல்பாம்பென்ற-கெடலருஞ்சீர்த் திங்க டிருமுகமாச் சேத்து" என்புழி முடிவனவாகிய பெயரும் முடிப்பனவாகிய வினையும் வேறுவேறு நிற்றலிற் பொது நிரனிறை.

நினைய என்றதனாற் சொல்லும் பொருளும் நிரல்பட நில்லாது "களிறுங் கந்தும் போல-நளிகடற் கூம்புங் கலனுந் தோன்றும்" என மயங்கி வருதலுங் கொள்க. (௯)

௪0௯. சுண்ணந் தானே
பட்டாங் கமைந்த வீரடி யெண்சீ
ரொட்டுவழி யறிந்து துணித்தன ரியற்றல்.

இது சுண்ணமாமாறு கூறுகின்றது.

(இ-ள்.) சுண்ணந்தானே = சுண்ணமாவது: பட்டாங்கு அமைந்த ஈரடி எண்சீர் = இயல்பாக அமைந்த ஈரடிக்கண் உளவாகிய எண்சீரை: துணித்தனர் ஒட்டுவழி அறிந்து இயற்றல் = துணித்து இயையும்வழி அறிந்து கூட்டி இயற்றப்படுவதாம். எ-று.

ஈரடி எண்சீர் அளவடியல்லா விகார அடியானும் பெறப்படுதலின் அவற்றை நீக்குதற்கு அளவடியான் அமைந்த என்பார் "பட்டாங்கமைந்தவீரடி" என்றார்.

உ-ம். "சுரையாழவம்மிமிதப்பவரையனைய - யானைக்குநீத்து முயற்குநிலையென்ப - கானகநாடன்சுனை." சுரை மிதப்ப அம்மி ஆழ யானைக்கு நிலை முயற்கு நீத்தெனத் துணித்துக் கூட்ட இயையும். சுண்ணம்போலச் சிதர்ந்து கிடத்தலிற் சுண்ணமாயிற்று. இதனுள்

ஆழவம்மி' 'நீத்துமுயற்கு' என ஒட்டிப் பொருள் தந்து நின்றன வேனுஞ் சுரைக்கும் யானைக்குஞ் சொன்முடிபு நோக்குப்படநின்று பொருளுணர்த்தாமையின் மாறவேண்டிற்று. (௧௦)

௪௦எ. அடிமறிச் செய்தி யடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே.

இஃது அடிமறியாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) அடிமறிச் செய்தி = அடிமறையென்பதன் செய்தி: சீர்நிலை திரியாது அடிநிலை திரிந்து தடுமாறும்=சீர் நின்றாங்கு நிற்ப அடிகள் தத்தம் நிலையிற் திரிந்து ஒன்றன் நிலைக்களத்து ஒன்று சென்றுநிற்கும். எ-று.

உ-ம். "மாறாக்காதலர்மலைமறந்தனரே - யாறாக்கட்பனிவரலா னுவே - யேறாமென்றோள்வளைநெகிழும்மே - கூறாய்தோழியான்வாழு மாறே." இது சீரும் பொருளுந் திரியாது அடிதிரிந்தவாறு காண்க. இது நான்கடிச்செய்யுட்கல்லது பெரும்பான்மை வாராது. (௧௧)

௪௦அ. பொருடெரி மருங்கி
னீற்றடி யிறுசீ ரெருத்துவயிற் றிரியுந்
தோற்றமும் வரையா ரடிமறி யான.

இது மேலதற்கு ஓர் புறனடை.

(இ - ள்.) அடிமறியான=அவ்வடிமறிச் செய்யுளிடத்து: பொருள் தெரி மருங்கின்=பொருண்முடிவை ஆராயுமிடத்து: ஈற்றடி= அப்பொருண்முடிவினையுடைய அடியில்: எருத்துவயின் இறுசீர்= முடிக்கின்ற சீர்க்கு முதற்சீரிடத்துப் பொருளே தன்பொருளாய் இறுஞ்சீர்: திரியுந் தோற்றமும் வரையார் = ஏனையடிகள்போல நேராய் முடியாது மீண்டுசென்று முன்னின்றதோர் சொல்லோடே பொருண்முடியுந் தோற்றரவு நீக்கார் ஆசிரியர். எ-று.

"கூறாய்தோழியாம்வாழுமாறே" என்பது யாண்டு நிற்பினும் பாட்டிற் பொருள் முடிக்கின்ற அடி; அதில் வாழுமென்பது எருத் துச்சீர்; மாறென்னும் இடைச்சொல்லாகிய இறுதிச்சீர் தான் பிரிந்து நின்று உணர்த்துதற்குத் தனக்கோர் *பொருளின்றி வாழும்படியை யென எருத்துச்சீரின் பொருளையேயுணர்த்தி உருபையேற்றுக் கூறு

யென முன்னின்ற சொல்லோடு முடிந்தவாறு காண்க. உம்மை யான் இங்ஙனம் முடிதல் சிறுபான்மையாயிற்று. (௬உ)

௪0௩. மொழிமாற் றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதி ரியைய
முன்னும் பின்னுங் கொள்வழிக் கொளாஅல்.

இது மொழிமாற்றுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) மொழிமாற்று இயற்கை=மொழிமாற்றினது இயல்பாவது: சொல் நிலைப் பொருள் எதிர் இயைய முன்னும் பின்னும் மாற்றி=செய்யுட்கட் பாவென்னும் உறுப்பிற்கு ஏற்பச் சொல் நின்ற நிலை பொருள் தாராதவழிச் சொல் நின்ற நிலைக்குப் பொருள் எதிரே வந்து பொருந்தும்படி அச்சொல்லின் முன்னின்ற சொல்லைப் பின்னேயும் பின்னின்ற சொல்லை முன்னேயும் மாற்றி: கொள்வழிக் கொளாஅல் = பொருள்கொள்ளுமிடத்தே கொளுத்துதலாம். எ-று.

உ-ம். "குரங்குளைப்பொலிந்தகொய்சுவற்புரவி - நரம்பார்ப்பன்ன வாங்குவள்பரிய" புரவியினது வாங்குவள் நரம்பார்ப்பன்ன பரிய என முன்னின்ற சொல்லைப் பின்னே மாற்றியவாறு காண்க. இச் சூத்திரமும் அது. "இடைமுலைக்கிடந்து" என்பது முலையிடையெனப் பின்னின்ற மொழியை முன்னே மாற்றியவாறு காண்க. "கடற் படைகுளிப்பமண்டி" என்பதும் அது. "இரும்புதிரித்தன்னமாயிரு மருப்பிற் - பரலவலடையவிரலைதெறிப்ப" என்பதும் அது. "பொன் னேடைப்புகரணிநுதற்-றுன்னருந்திறற்கமழ்கடாஅத் - தெயிறுபடை யாகவெயிற்கதவிடாக் - கயிறுபிணிக்கொண்டகவிழ்மணிமருங்கிற்-பெருங்கையானையிரும்பிடர்த்தலையிருந்து - மருந்தில்கூற்றத்தருந்தொழில்சாவா" என்றாற்போல வருவனவெல்லாம் அணுகிவந்த மாட்டென்னும் உறுப்பு. "ஆரியமன்னர்பறையினெழூஉந்தியம்பும்" என்பதும் அது. அகன்றுவந்த மாட்டு முருகாற்றுப்படை முதலியவற்றுட் காண்க.

மொழிமாற்றுவது கேட்டோர் கூட்டியுணருமாற்றான் ஈரடிக் கண்ணே வருவதென்றும், மாட்டென்னுமுறுப்பாவது இரண்டிறந்த பலவடிக்கண்ணும் பல செய்யுட்டொடரின்கண்ணும் அகன்றும் அணுகியும் வருமென்றும் உணர்க. அஃது "அகன்றுபொருள்கிடப் பினுமணுகியநிலையினு-மியன்றுபொருண்முடியத்தந்தனருணர்த்தன்

மாட்டெனமொழிபபாட்டியல்வழக்கின்" என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்தான் உணர்க. உதாரணங்கள் ஆண்டுக் காட்டுதும்.

பூட்டுவிற்பொருள்கோளும் அளைமறிபாப்புப்பொருள்கோளுந் தாப்பிசைப்பொருள்கோளுங் கொண்டுகூட்டுப்பொருள்கோளும் மாட்டென்னும் உறுப்பின்கண் அடங்குமாறும், யாற்றொழுக்குப்பொருள்கோள் யாப்பென்னும் உறுப்பின்கண் அடங்குமாறும் உணர்க. (௩௯)

சகo. தநநு எஎனு மவைமுத லாகிய
கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா.

இது மேற் தொகைச்சொற் கூறுவான தொகைபோல இரு பொருள் படுவன இவையென்கின்றது.

(இ - ள்.) த ந நு எ எனும் அவைமுதலாகிய கிளைநுதற்பெயரும் = த ந நு எ என்கின்ற எழுத்துக்களை முதலாகவுடைய ஒருவரோடு ஒருவர்க்கு உள்ள தொடர்ச்சிக் கிழமையைக் கருதின ஓட்டுப்பெயர்களும்: பிரிப்பப் பிரியா = தொகைச்சொற்போல இருபொருள்பட்டு நிற்பினும் அவைபோலப் பின்வருஞ் சொல் தம்பொருள் உணர்த்தாமையிற் பிரிக்கப்படா ஒருசொல்லேயாய் நிற்கும். எ-று.

உ-ம். தமன் தமள் தமர் நமன் நமள் நமர் நுமன் நுமள் நுமர் எமன் எமள் எமர் எனவரும். விளிமரபில் முதலும் ஈறும் பற்றி ஓதி இடையின் விகற்பங் கூறாமையிற் தம்மான் நம்மான் நும்மான் எம்மான் என்றாற்போலும் வாய்பாட்டு விகற்பமுங் கொள்க.

சேனாவரையர் தங்கிளை நங்கிளை நுங்கிளை எங்கிளை என்பனவற்றை ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய்நிற்குமென்றாராலெனின், ஆசிரியர் "தாமென்கிளவிபன்மைக்குரித்தே" "யாம்நாமெனவரூஉம்பெயரும்" என்று இவ்வதிகாரத்து எடுத்தோதிய பன்மைச் சொற்களை எழுத்ததிகாரத்துள் அவை எழுவாயும் பயனிலையுமாய் நிற்கும்வழித் திரியாதுபுணருமென்று கூறித் "தாம்நாமென்னுமகர விறுதியும்" என்னுஞ் சூத்திரத்தான் உருபேற்கும்வழித் திரிந்து புணருமென்று கூறி நும்மென்பதனை "நும்மெனொருபெயர்" என்னுஞ் சூத்திரத்தான் உருபேற்குமாறு கூறி "அல்லதன்மருங்கின்" என்னுஞ் சூத்திரத்தான் அஃது எழுவாயும் பயனிலையுமாய் நிற்கும் வழி நீயிரெனத் திரிந்து பன்மையாயே நிற்குமெனவுங் கூறிப்போந்தாராதலின் ஈண்டும் அதற்கேற்பத் தம்முடையகிளை எம்முடையகிளை எனப் பன்மையுணர்த்துதலன்றி ஒருமையுணர்த்தாமை உணர்க.

ஏனையவும் அன்ன. "தம்பொருளென்பதம்மக்கள்" எனவும் "நம்ம ேனார்க்கே" எனவும் "நம்மனோருமற்றினையராயி-னெம்மனோரிவட் பிறவலர்மாதோ" எனவும் இந்நான்கு சொல்லும் அம்முடிபுபெற்று முதனிலை திரிந்துநின்று பன்மைப்பொருள் உணர்த்தியவாறு காண்க.

ஈண்டு இவை வெற்பன் பொருப்பன் போலத் தம் நம் நும் எம் என்பன பிரிந்துநின்று பொருளுணர்த்திப் பின்வருகின்ற அன் அள் அர் என்பன பொருளுணர்த்தாது இடைச்சொல்லாயே நிற்ற லிற் பிரிப்பப் பிரியா என்றார்.

இனி உம்மையை எச்சப்படுத்திப் பிற ஒட்டுப்பெயர்களும் பிரிப் பப் பிரியா எனப் பொருள்கூறி, இம்பர் உம்பர் இம்மை உம்மை எம் மை என்றாற்போல்வன பிறவும் இவ்விடம் உவவிடம் இப்பிறப்பு உப்பிறப்பு எப்பிறப்பு என்னும் பொருளுணர்த்தி நிற்குமென்று கொள்க. (௧௪)

௪௧௧. இசைநிறை யசைநிலை பொருளொடு புணர்தலென் றவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே.

இதுவுந் தொகைச்சொற்போல அடுக்கிவருவன கூறுகின்றது.

(இ - ள்.) ஒருசொல் அடுக்கே=ஒருசொல்லை அடுக்கும் அடுக்கு: இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்று அவை மூன்று என்ப=இசைநிறையும் அசைநிலையும் பொருளொடுபுணர்தலுமென்று சொல்லப்பட்ட அவைமூன்றுமென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். "ஏஏ ஏஏ யம்பன் மொழிந்தனள்" இஃது இசைநிறை. "மற்றோமற்றோ" இது அசைநிலை. "வந்ததுவந்ததுகூற்று" அவன் அவன் வைதேன்வைதேன் போம்போம் என்பன விரைவுந் துணி வும் உடம்பாடும் ஒருதொழில் பலகால் நிகழ்தலுமாகிய பொருள் வேறுபாடு உணர்த்தலிற் பொருளொடுபுணர்தல். (௧௫)

௪௧௨. வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே
வினையின் றொகையே பண்பின் றொகையே
யும்மைத் தொகையே யன்மொழித் தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே.

இது தொகைச்சொற்குப் பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றது.

(இ - ள்.) வேற்றுமைத்தொகையே = வேற்றுமையுருபுகள் தொக்க தொகை: உவமத்தொகையே=உவமவுருபுகள் தொக்க தொகை: வினையின்றொகையே=வினைச்சொல் ஈறுகள் தொக்க தொகை: பண்பின்றொகையே=பண்பு உணர்த்தும் ஈறுகள் தொக்க தொகை: உம்மைத்தொகையே=உம்மென்னும் இடைச்சொல் தொக்க தொகை: அன்மொழித்தொகை = இத்தொகைச் சொற்களின் இறுதிக்கண் வந்து பொருள் தரும் வேறோர்சொல் தொக்க தொகை: என்று அவ்வாறு என்ப=என்று சொல்லப்பட்ட அவ்வாறுமென்று சொல்லுவர் ஆசிரியர்: தொகைமொழி நிலையே = தொகைச்சொல்லினது நிலைமையை. எ-று.

"ஐம்பாலறியும்பண்புதொகுமொழியும்" எனவும் "செய்யுஞ் செய்தவென்னுங்கிளவியின் - மெய்யொருங்கியலுந்தொழிறொகுமொழியும்" எனவும் "உருபுதொகவருதலும்" எனவும் "மெய்யுருபுதொகாவிறுதியான" எனவும் "பண்புதொகவரூஉங்கிளவியானும்" எனவும் "உம்மைதொக்கபெயர்வயினானும்" எனவும் "வேற்றுமைதொக்க பெயர்வயினானும்" எனவும் "உம்மையெஞ்சியவிருபெயர்த்தொகைமொழி" எனவும் ஆசிரியர் தொக்கே நிற்குமெனச் சூத்திரஞ்செய்தலின் வேற்றுமையுருபும் உவமவுருபும் உம்மும் வினைச்சொல்லீறும பண்புணர்த்தும் ஈறும் இத்தொகைச்சொற்கள் அல்லாததோர் சொல்லுந் தொக்குநிற்றலிற் தொகைச்சொல்லென்பதே அவர் கருத்தாயிற்று. ஆயிற் "கேழற்பன்றி" "வேழக்கரும்பு" என்பனவற்றிற்குத் தொக்கன இன்மையிற் தொகைச்சொல்லாமாறு என்னையெனின், அவற்றிற்கும ஒன்றையொன்று விசேடித்துநிற்கின்ற தன்மையை யுணர்த்துதற்கு வரும ஆகிய என்னும் வாசகந் தொக்குநின்றதென்றே கோடும். அன்றித் தன்கட் தொக்கன இன்றி அங்ஙனம் வாசகந் தொக்குநின்றது தொகையென்றற்குச் சாலாமையின் அதனை ஒட்டி ஒருசொல்லாய்நின்று தம்பொருள் உணர்த்துமென்று கொண்டு ஏனையவற்றையும் அவ்வாறே கோடுமெனின், எடுத்தோத்தினும் இலேசு சிறத்தல் யாண்டும் இன்மையின் அதுபொருந்தாது, என்னை? அவ்விருபெயரொட்டுப்பண்புந்தொகை அறுவகைந் தொகைச் சூத்திரங்களுள் எடுத்தோத்தின்றி "என்னகிளவியும்" என்ற இலேசினாற் கொண்டதாகலின். ஆயின் "வண்ணத்தின்வடிவின்" என்ப தன்கண் இருபெயரொட்டாய் ஐம்பால் அறியாத வடிவினையும் எடுத்தோதினாராலெனின் வடிவுமுதலியவற்றிற்கும் அறுவகைத் திரிபினுள் ஏற்பன கொணர்ந்து முடித்தலிற் குன்றலுந் தொகையா

மென்று உணர்க. "என்னகிளவியும்" என்றதனாற்கொள்வன வருமொழியின்றி நிலைமொழியும் பொருளுணர்த்தி நிற்குமென்பது ஆண்டுக்கூறுதும்.

அன்றியுஞ் செய்தான்பொருள் இருந்தான்குன்றத்து என வழங்குவன ஒட்டி ஒருசொல்லாகாமையுஞ், செய்யுட்கட் "கழுவிளங்காரங்கவைஇயமார்பே" எனவும் "ஒற்றுமைக்கொண்டவழி" எனவும் இறுதிக்கண் இரண்டாவதுதொக்கன "முயங்கினெனல்லனே" எனவும் "போற்றாய்" எனவும் வரும் முடிக்குஞ் சொற்களோடு ஒட்டி ஒருசொல்லாகாமையுந், "தோன்றன்மறந்தோர்துறைகெழுநாட்டே" எனவுஞ் "சிறுகுரலெய்தலெம்பெருங்கழிநாட்டே" எனவும் இறுதிக்கண் ஏழாவது தொக்கன "தோன்றும்" எனவும் "சேர்ந்தனைசெலினே" எனவும் வரும் முடிக்குஞ் சொற்கள் ஒட்டி ஒருசொல்லாகாமையும் உணர்க.

இன்னும் "வல்லேமறவலோம்புமதியெம்மே" என இடைக்கட்தொக்கனவும் "பொன்னோடைப்புகரணிநுதற் - றுன்னருந்திறற்கமழ்கடாஅத் - தெயிறுபடையாகவெயிற்கதவிடாக் - கயிறுபிணிக்கொண்டகவிழ்மணிமருங்கிற் - பெருங்கையானை" என அடுக்கிவருவனவும் ஒட்டி ஒருசொல்லாகாமையும் உணர்க.

"அதுவென்வேற்றுமை" என்னுஞ் சூத்திரத்து "அதுவெனுருபுகெட" என்றதனால் அதுவெனுருபு நின்றாலல்லது கெடுதலின்மையின் அது நின்றுகெட்டதென்னும் பொருள் தரல் ஆண்டுக்கூறிப்போந்தாம். அதனால் ஈண்டுச் சேனாவரையர் கூறிய பொருட்கு விடையின்மை உணர்க. இவற்றுள் வினைத்தொகையும் பண்பின்றொகையுஞ் சிறிது தொக்குத் தொகையாதலும் ஏனைய முழுவதூஉந் தொக்குத் தொகையாதலும் உணர்க. (கசு)

சகஎ. அவற்றுள்,

வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல.

இது முறையானே வேற்றுமைத்தொகை கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் = முற்கூறிய ஆறனுள்: வேற்றுமைத் தொகை = வேற்றுமையுருபுகள் தொக்க தொகைச்சொற்கள்: வேற்றுமை இயல = அவ்வுருபுகள் தொக்கனவேனுந் தொகாது நின்றாற்போலப் பொருளுணர்த்தும் இயல்பின, எ-று.

உ-ம். "பகடுநடந்தகூழ்பல்லாரோடுண்க" "ஒருகுழையொருவன்போல" எனவும், "வல்லவர்செதுமொழிச்சீத்தசெவி" எனவும், "பருத்திவேலிக்கருப்பைபார்க்கும்" எனவும், "வரையிழிமயிலினெல்குவள்" எனவும், "நின்மைந்துடைமார்பிற்சுணங்கு" எனவும், "மன்றவேம்பினொண்குழைமலைந்து" எனவும் வரும். வழக்குதாரணம் வேற்றுமைமயங்கியலுட் காட்டினும்.

சாத்தனொடுவந்தான் சாத்தற்குக்கொடுத்தான் என்றாற்போல் வன தொக்காற் றொகைப்பொருள் உணர்த்தாது எழுவாயும் பயனிலையுமாய் நிற்றலின் இந்நிகரன தொகாவென்று உணர்க. (கஎ)

சகச. உவமத் தொகையே யுவம வியல.

இஃது உவமத்தொகை கூறுகின்றது.

(இ-ள்.) உவமத்தொகையே=உவம உருபுகள் தொக்க தொகைச்சொற்கள்: உவம இயல=அவ்வுவம உருபுகள் தொக்கன்வேனுந் தொகாது நின்றாற்போலப் பொருளுணர்த்தும் இயல்பின. எ-று.

மேல் உவமவியலுள் "வினைபயன்மெய்யுரு" என்னுஞ் சூத்திரத்தான் உவமை நால்வகையவென்றும் "அவைதாம் அன்னவேய்ப்ப" என்னுஞ் சூத்திரத்தான் அவற்றின் உருபு முப்பத்தாறென்றுங் கூறுகின்ற ஆசிரியர் ஈண்டு அவவுருபுகள் தொக்குநிற்குமாறு கூறுகின்றார். ஒப்பில்வழியாற் பொருள்செய்யும் அவ்வுவம உருபுகள் தாம் முதனிலையாய்நின்றும், பெயரெச்சங்கட்கும் முற்றிற்கும் வினையெச்சங்கட்கும் உரிய ஈறுகளை ஏற்ற சொல்லாயே நின்று அவற்றிற்கு ஏற்ற முடிபுகொள்ளுமென்று உணர்க. ஆசிரியர் செய்யுளின்பம் நோக்கி அவ்வுவம உருபுகளைப் பெரும்பான்மை செயவெனெச்சவாய்பாட்டானுஞ் சிறுபான்மை செய்தவென்னும் பெயரெச்சவாய்பாட்டானும் ஓதினாரேனும் ஏனைவாய்பாடுகளும் அம்முதனிலைக்கண் விரியுமாறு ஆண்டு உணர்க.

புலிப்பாய்த்துள் மழைவண்கை துடிநடுவு பொன்மேனி என வினைபயன்மெய்யுருவின்கண் வந்த இவ்வுவமத்தொகைகள் விரிந்துழிப் போலுமென்னும் உருபானும் அன்னவென்னும் உருபானும் பிற உருபானும் விரிந்து செய்யுஞ் செய்த என்னும் பெயரெச்சக்குறிப்பாமாறு உணர்க. அவற்றுட் போலுமென்பது செய்யுமென்னுங் குறிப்பு முற்றாமாறும் உணர்க. உணர்த்துங்காற் புலிபோலும்பாய்த்துள் புலி

யன்னபாய்த்துளென விரித்தால் உணராதானே, இதன்பொருள் புலியினது பாய்த்துளை ஒக்கும் பாய்த்துள், புலியினது பாய்த்துளையொத்த பாய்த்துள், என்றவாறு காணென, ஒப்பென்னும் வழக்குவாசகத்தாற் செய்யும் செய்த என்னும் பெயரெச்சக்குறிப்புவாசகந்தோன்ற உணர்த்துக. "முறிமேனிமுத்தமுறுவல்வெறிநாற்றம் - வேலுண்கண் வேய்த்தோளவட்கு" என்புழி வேய்த்தோளாட்கு முறிபோலும் மேனி முத்தம்போலும் முறுவல் தெய்வமணம்போலுமியற்கைநாற்றம் வேல்போலுங்கண்ணென விரித்தால் உணராதானே, இதன்பொருள், வேய்த்தோளாட்குத் தளிரினதுநிறத்தையொக்கும் நிறம், முத்தினதுநிறத்தையொக்கும்பல்லு, தெய்வமணத்தையொக்குமியல்பான நாற்றம், வேலினதுகொலைத்தொழிலையொக்குங்கண், என்றவாறு காணென, ஒப்பென்னும் வழக்குவாசகத்தாற் செய்யுமென்னுங் குறிப்பு முற்றுவாசகந் தோன்ற உணர்த்துக. "கண்மலர்ந்தகாவி" என்புழிக் கண்போலமர்ந்தகாவியென்றால் உணராதானே, இதன்பொருள், கண்ணையொக்கமலர்ந்தகாவியென்றவாறு காணென, ஒப்பென்னும் வழக்கு வாசகத்தாற் செயவெனெச்சவாசகந் தோன்ற உணர்த்துக. இங்ஙனங் கூறிய இருவகையெச்சத்தையும் முற்றையும் இவ்வுவமவுருபுகள் தருமாறுகாண்க.

இனி "முறிமேனி" முதலியன உருவகமாமெனின் ஆசிரியர்க்கு உருவகமும் உவமையாமாறு ஆண்டு உணர்க.

இங்ஙனம் வேற்றுமையுருபும் உவமவுருபும் விரித்துழி வேற்றுமைத்தொகையென்று கோடுமோ உவமத்தொகையென்று கோடுமோவெனின், ஆசிரியர்தாம் மேற்கூறும் உவம உருபுகளிற் சில இரண்டாவதற்கு முடிபாமென்பது உணர்த்துதற்கு உவமவுருபிற்கெல்லாம் பொதுவாய் வழக்குவாசகமாய் நிற்கும் ஒப்பென்னும் உருபினைக் "காப்பினொப்பின்" என எடுத்து ஓதினாராதலின் அவவிரண்டாவது அவ்வுவமவுருபுகளான் முடிந்துநின்றுழி உவமத்தொடர்மொழி ஒப்புமைப்பொருளே தந்துநிற்றலின் உவமத்தொகையென்று கோடும்.

ஆயின் எடுத்து ஓதிய ஒப்பென்பதனோடன்றி ஏனையுருபுகளோடும் இரண்டாவது முடியுமோவெனின், முடியும்; "தீயினன்ன வொண்செங்காந்தள்" எனவும், "கயமூழ்குமகளிர்கண்ணின்மானும்" எனவும், "மானோக்குநோக்குமடநடையாயத்தார்" எனவும், "எழிலி வானமெள்ளினன்றரூஉங் - கவிகைவண்கைக்கமோன்றேன்றல்" என

வும், "வீங்குசுரைநல்லான்வென்றவீகை" எனவும் வருவனவற்றின் கண் அன்ன மானும் நோக்கு எள்ளி வென்ற என்னும் உவமவுருபு களை இரண்டாவதுகொண்டு முடித்தவாறுகாண்க. இவற்றுள் எள்ளி யென்பது செய்தெனெச்சமாகிய உவமவுருபு. இங்ஙனம் உவமவுருபு விரிந்துழி நின்று உவமப்பொருள் தருகின்ற இரண்டாவது தொக் குழியும் அவ்வுவமப்பொருள் தந்தேநிற்குமென்று உணர்க. "என் போற்பெருவிதுப்புறுக" என்புழிப் போலென்பது போலவென்னுஞ் செயவெனெச்சக்குறிப்பாகிய உவமவுருபு. "நும்மனோருமற்றினைய ராயின்" எனபுழி அன்னோரென்பது உவமவுருபாகிய இடைச்சொன் முதனிலையாகப் பிறந்த பெயர். இனிச் சிறுபான்மை ஏனையுருபு கள் இதொகைக்கண் விரியுமாறு உவம இயலுட் காண்க.

சேனாவரையர் இவற்றை உவமவுருபன்றென்றும் உவமவுருபு களை இரண்டாவதுகொண்டு முடியாதென்றுங் கூறினாரெனின், அவர் ஆசிரியர் கருத்துஞ் சான்றோர் செய்யுள்வழக்கமும் உணராமற் கூறினாரெனபது இக்கூறியவாற்றான உணர்க. (கஅ)

௪௧௫. வினையின் றொகுதி காலத் தியலும்.

இது வினைத்தொகை கூறுகின்றது.

(இ - ள்.) வினையின் தொகுதி = வினைச்சொல்லினது ஈறுய்த் தொக்குநிற்கும் எழுத்துக்கள்: காலத்து இயலும் = காலத்தின்கண் ணே தொக்குநிற்கும். எ-று.

வினையெனறது உண் தின் முதலிய முதனிலைகளை. அவை ஈண்டும் ஆகுபெயராய்த் தன்றாற் பிறந்த பெயரெச்சததை உணர்த் தின. தொகுதியாவன அகரமும் நில் கின்று என்பனவும் உம்மு மாம். அவை காலத்தியலுதலாவது கொல்யானையெனத் தொகுத் துக் கொன்றயானை என விரிததாற் செய்த என்னும் பெயரெச்ச வாய்பாட்டுத் தகர ஈறு இறந்தகாலம் உணர்த்துதலுங், கொல்லா நின்றயானை கொல்கின்றயானை என விரித்தால் நின்ற கின்ற என் னும்பெயரெச்சம் நிகழ்காலம் உணர்த்துதலுங், கொல்லும்யானை என விரித்தாற் செய்யுமென்னும்பெயரெச்சத்து உம்மீறு நிகழ்வும் எதிர் வும் உணர்த்துதலுமாம். ஆயின் உம்மீறு எதிர்காலம் உணர்த்துதல் யாண்டுப் பெறுதுமெனின், காலத்தியலுமென மூன்றுகாலத்திற்கும் பொதுவாகக் கூறியவதனாற் பெறுதும். இக்கருத்தானே பின்பு நூல் செய்தவர்கள் எல்லாரும் உம்மீறு எதிர்காலமே உணர்த்துமென்றார்.

சேனாவரையரும் இக்கருத்தானே "அகன்றவர்திறத்தினிநாடுங்கால்" என்பதே நிகழ்விற்கும் எதிர்விற்குங் காட்டினார். கொல்யானை என் பது அக்காலத்து அஃது உதிரக்கோட்டோடு வந்ததேல் இறப்பும், அதன் தொழிலைக் கண்டுழி நின்றுழி நிகழ்வும், அது கொல்ல ஓடுவ தனைக் கண்டுழி எதிர்வும் விரியும். இனிக் கொல்யானை என்பதன் கண் இரண்டு ஈறும் ஒருங்கு தொக்குநின்றதென்றற்கு விதி "செய் யுஞ்செய்தவென்னுங்கிளவியின் - மெய்யொருங்கியலுந்தொழிறொரு மொழியும்" என்றதாம். என்றதன்பொருள் செய்யுஞ் செய்த என் னும் பெயரெச்சச் சொற்களினுடைய காலங் காட்டும் உம்மும் அகர மும் ஒருசொற்கண்ணே சேர நடக்கும் புடைபெயர்ச்சி தொக்குநிற் குஞ் சொற்களென்றவாறு. இங்ஙனம் இரண்டு பெயரெச்ச வாசக முஞ் சேரத் தொக்குநிற்றலான் ஆசிரியர் ஒருசொல்லாக்கிப் புணர்க்க லாகாதென்று "புணரியனிலையிடையுணரத்தோன்றா" என்றார். இவ்வெழுத்ததிகாரச் சூத்திரத்தானே பெயரெச்சம் நின்று தொக்க தென்னாது பெயரெச்சப்பொருளவாய்நின்று இரண்டு சொற் றொகு மென்று சேனாவரையர் கூறியது பொருந்தாமை உணர்க. அவை தொகுங்காற் றத்தமக்கு உரியவாறு பொருட்கண்ணுந் தொகும்.

உ-ம். ஆடரங்கு செய்குன்று புணர்பொழுது அரிவாள் கொல் யானை செல்செலவு எனவும், "உறைபதியன்றித்துறைகெழுசிறுகுடி" "செய்பொருட்சிறப்பெண்ணி" "வான்மடிபொழுதினினீர்நசைஇக் குளித்த" "வெல்வேலண்ணற்காணுவாங்கே" "நெல்லரிதொழுவர் கூர்வாண்மழுங்கின" "வெல்போர்ச்சோழன்" எனவும் வரும். இவற் றிற்குப் பொருட்கு ஏற்ற காலங்களை விரிக்க. (கக)

சகக. **வண்ணத்தின் வடிவி னளவிற் சுவையினென்**
றன்ன பிறவு மதன்குண நுதலி
யின்ன திதுவென வரூஉ மியற்கை
யென்ன கிளவியும் பண்பின் றொகையே.

இது பண்புத்தொகை கூறுகின்றது.

(இ - ள்.) இன்னது இது என = ஒருபொருட்குப் பொதுமை உள்வழி இப்படியிருப்பது இப்பொருளென்று அதனை விசேடித்துக் கூறும்படியாக: அதன் குணம் நுதலி = பின்வருகின்ற அப்பொரு ளின் குணத்தைத்தான் கருதி: வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையின் வரூஉம் இயற்கைக் கிளவியும் = அப்பொருட்குணமாகிய

வண்ணத்தின்கண்ணும் வடிவின்கண்ணும் அளவின்கண்ணுஞ் சுவையின்கண்ணும் வரும் இயல்பாகிய கிளவியும்: அன்ன பிறவுமென்றுழூஉங் கிளவியும்=அவைபோல்வன பிறவுமென்று சொல்லப்பட்டு வருங் கிளவியும்: என்ன கிளவியும் = எத்தன்மையவாகிய சொற்களும்: பண்பின் தொகை=பண்புச்சொல் தொக்க தொகையாம். எ-று.

பண்பெனப் பண்புச்சொல்லை உணர்த்திற்று ஆகுபெயராய். எழுத்ததிகாரத்து "உயர்திணையஃறிணையாயிருமருங்கி - னைம்பாலறியும்பண்புதொகுமொழியும்" என்புழிப் பண்புத்தொகை ஐந்துபாலையும் உணரநிற்றலின் அங்ஙனம் நின்றன பிரித்துப் புணர்த்தற்கு இயையாவென்றமையான் ஈண்டும் அதற்கு ஏற்ப இயற்கையென்றார். "ஐம்பாலறியும்பண்புதொகுமொழியும்" என்றதன் பொருள் ஐந்துபாலையும் ஒருவன் அறிதற்குக் காரணமாகிய பண்புச்சொல் தொக்க தொகைச்சொல்லும் என்றவாறாம். பண்பு உணர்த்துகின்ற ஐம்பால் ஈறுகள் தொக்குநின்றே விரியுமென்பது உணர்த்துதற்கு அவ்வாசகந் தோன்ற இன்னதென்றார். ஐம்பாலும் பொருளென்றால் அஃறிணைபாய் அடங்குமாதலிற் பொருளாக்கி இதுவென்று அஃறிணையாற் கூறினார். இந்நான்கனுள் வண்ணமும் அளவுஞ் சுவையும் ஐம்பாற்கண்ணும் வரும்.

உ-ம். வண்ணம்:—கரும்பார்ப்பான் கரும்பார்ப்பனி கரும்பார்ப்பார் கருங்குதிரை கருங்குதிரைகள் என்னும் பண்பு உணர்த்தும் ஈறுகள் தொக்கனவற்றை விரிப்புழிக், கரியனாகியபார்ப்பான் கரியளாகியபார்ப்பனி கரியராகியபார்ப்பார் கரியதாகியகுதிரை கரியனவாகியகுதிரைகள் எனப் பண்பு உணர்த்தும் ஐம்பால் ஈற்றினையும் விரித்தவாறு காண்க. கரியபார்ப்பானென்பது ஈறு தோன்றாத பெயரெச்சக்குறிப்பாய் நிற்கும். இனி வெண்மைமுதலியவற்றிற்கும் இவ்வாறே ஒட்டுக. இவற்றுட் கரு ஒழிய ஏனைய தொக்கவாறு காண்க. இவற்றுள் அஃறிணைக்கண் வரும் ஈறுகள் பண்புகொள் பெயராய் நிற்குமாறும் உணர்க. இனி அளவு:—குறுமுனி குறுமகளாடிய ஊர்க்குறுமாக்கள் குறுந்தாட்கூதலிர் குறுங்கோட்டன என்பனவற்றையும் அவ்வாறே விரிக்க. இனி நெடுமை முதலியவற்றிற்கும் இவ்வாறே ஒட்டுக. இனிச் சுவை:—ஐம்பொறியான் நுகர்தற்கு உரிய இனிமைகளை உணர்த்துஞ் "சாயன்மார்பிற்கமழ்தார்குழைத்த" எனவும், "தீங்கரும்பனுக்கிய" எனவும் "தீம்புகைகமழவூட்டி" எனவும் "உடைதிரைத்திவலையரும்புந்தீநீர்" எனவும் "தீந்தொடைநரம்பின்" எனவும் மெய்யானும் நாவானும் மூக்கானுங் கண்ணுஞ்

செவியானும் நுகரும் இனிமையை உணர்த்தின. இவற்றை விரிப் புழி அஃறிணை இருபாற்கும் ஏற்ப இனிதாகியமார்பு தீவியனவாகிய கரும்புகள் தீவிதாகியபுகை தீவிதாகியநீர் தீவியனவாகியநரம்புகள் என விரிக்க. இனிக் கட்கின்புதல்வன் கட்கின்புதல்வி கட்கின் புதல்வர் எனக் கண்ணால் நுகரும் இனிமைக்கண் உயர்திணைமுப் பாற்கும் ஏற்ப இனியனாகியபுதல்வன் இனியளாகியபுதல்வி இனிய ராகியபுதல்வர் என விரிக்க. இனிவடிவு; இது வட்டஞ் சதுரங் கோண் முதலியனவாம். வட்டப்பலகையென்பது வட்டமாகியபல கையென விரிந்து தனக்கேற்ற ஒருமை பன்மையை உணர்த்தும் ஈறுகளின்றி நிற்றலின் இஃது ஐம்பால் அறியாத பண்புத்தொகை யாயிற்று. இங்ஙனம் ஐம்பால் அறியாத பண்புத்தொகையை ஆசி ரியர் எழுத்தின்கண் நிலைமொழி வருமொழி செய்து புணர்த்தார். அவை அகங்கை முதலியனவாம்.

கரும்பார்ப்பானென்புழிக் கருமையும் பார்ப்பானுந் தம்மின் வேறின்றி நின்று மகனாகிய பொருளையே உணர்த்தியவாறுங், கரு மை பார்ப்பான் பொதுமையை விசேடித்தவாறும், பார்ப்பான் கரு மையின் பொதுமையை விசேடியாதவாறுங் காண்க. இவை தொ குங்காற், கருவென்னும் பண்புமாத்திரம் நின்று, பண்புப்பெயராங் காற் பெற்றுநிற்குங் கருமையென்னும் மகர ஐகாரந் தொக்குநிற்கு மென்முற், கரியது வெளியது கரியன வெளியன என்னும் பண்பு உணர்த்தும் ஈறுகளின்கண்ணும் அவை தொக்கு இவையுந் தொ கைச்சொல்லாவான் சேறலின் அது பொருந்தாது. கரியன் கரியள் கரியர் கரியது கரியன என்னும் பண்பு உணர்த்தும் ஈறுகளே தொக்குநிற்பன என்று உணர்க. என்னை? ஆசிரியர் இப்படி இருப் பது இப்பொருளென்று வினைக்குறிப்பிற்கு ஏற்ற விரிவு தோன்றச் சூத்திரஞ்செய்தாராகலின். இன்னதிதுவென ஒருபொருண்மேல் நிற்றலின் இப்பண்புத்தொகைகளெல்லாம் பெயரெச்சவினைக்குறிப் பாய் நிற்பதோர் பெயரென்று உணர்க; அஃது உருபு ஏற்றும் பய னிலைகொண்டு நிற்றலின். உயர்திணையென்பது வினைத்தொகை யோ பண்புத்தொகையோ எனின், உயரென்னும்முதனிலை நின்று உயர்ந்த திணையென அகர ஈற்றுப்பெயரெச்சமாய் இறந்தகாலந் தொக்குநிற்றலின் வினைத்தொகையாம். இதற்கு ஏனைக்காலமுந் தொகுமாறு அறிக. இதனைப் பண்புத்தொகையாக்கி விரிக்குங்காற் கரியதாகியகுதிரையென விரிந்தாற்போல விரியாது உயர்ந்ததாகிய திணையென விரிக்கவேண்டும். அங்ஙனம்விரிந்துழி அஃது உயரென்

னும் முதனிலைப்பின்வந்த தகர அகரம் இறந்தகாலம் உணர்த்தியே நிற்றலிற் பண்புத்தொகையாகாமை உணர்க. என்னை? பண்பும் வினைக்குறிப்பும் முக்காலமும் புலப்படாமை நிற்குமென்றே முற் கூறலின். அன்றியுங் காலம் புலப்பட நின்றதன்மேற் பண்புகொள் பெயர் விரியாமை உணர்க.

இனி அன்னபிறவும் என்றதனான் நண்டூரல் பராரை நல் லாடை வெந்தீ தண்ணீர் நறும்பூ என்னுந் தொடக்கத்தன கொள்க.

மெல்லிலை வினைத்தொகையுமாம்.

இத்தொகையை வேற்றுமைத்தொகையென்பார் கருமையை யுடையபார்ப்பானென்று பண்புப்பெயராக்கி விரிப்பர். அது பொருந்தாது. கருவென்னும் முதனிலை பண்பினை உணர்த்தி இதனை யுடையது இதுவென நில்லாது கரியதெனப் பண்புடைய பொருளை நோக்கி நிற்றலின் வேற்றுமைப்பொருண்மை ஆண்டு இன்றென உணர்க. என்னகிளவியும் என்றதனாற் சாரைப்பாம்பு கேழற்பன்றி வேழக்கரும்பு இடைச்சொற்கிளவி உரிச்சொற்கிளவி என்றாற்போலப் பண்பு உணர்த்தும் ஈறுகள் தொகாது தம்பொருள் உணர்த்தும் பெயர்ப்பெயர் இரண்டு கூடிநின்று விசேடித்தலை உணர்த்தும் இருபெயரொட்டுப்பண்புத்தொகையுங் கொள்க. அவை சாரை எனவுங் கேழலுழுதகரிப்புனக்கொல்லை எனவும் வேழந்தீவியது எனவும் இடைச்சொல்லெல்லாம் எனவும் உரிச்சொன்மருங்கினும் எனவும் பின்வருஞ் சொல்லின்றியுந் தம்பொருள் உணர்த்துதற்பற்றி எடுத்தோத்தினுள் முடியாமையின் இலேசாற் கொண்டார். பட்டப் பலகை அகங்கை முதலியன பின்வருஞ் சொல்லோடன்றித் தம் பொருளுணர்த்தாமையின் நிறுத்தசொல்லுங் குறித்துவருகிளவியு மாய் நிற்குமென்று அவற்றை முடித்தார். இவற்றிற்குப் பின்வருஞ் சொல் முன்வருமொழியை விசேடியாது நிற்கும். இங்ஙனம் வரு மென்றற்கு அன்றே ஆசிரியர் இன்னதிதுவென்று முன்மொழியை விசேடிப்பதாகவும் பின்மொழியை விசேடிக்கப்படுவதாகவுங் கூறுவா ராயிற்றென்று உணர்க. (உ0)

சகள. இருபெயர் பலபெயர் அளவின் பெயரே
யெண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
யெண்ணின் *பெயரோ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே யும்மைத் தொகையே.

இஃது உம்மைத்தொகை கூறுகின்றது.

(இ - ள்.) உம்மைத்தொகை=உம்மைதொக்குநிற்குந் தொகை: இருபெயர்=இரண்டாகிய பெயரும்: பலபெயர் = பலவாகிய பெயரும்: அளவின்பெயர்=அளத்தலால் உளதாகிய பெயரும்: எண்ணியற்பெயர்=எண்ணியலானாகிய உயர்திணைப்பெயரும்: நிறைப்பெயர்க்கிளவி=நிறுத்தலானாகிய பெயர்ச்சொல்லும்: எண்ணின்பெயரொடு= எண்ணினான் உளதாகிய அஃறிணைப்பெயரோடே கூடப்பட்ட: அவ்வறு கிளவியுங் கண்ணிய நிலைத்து=அவ்வாறுசொல்லையுங் கருதின நிலைமையையுடைத்து. எ-று.

உ-ம். உவாஅப்பதினான்கு புலிவிற்கெண்டை தூணிப்பதக்கு முப்பத்துமூவர் தொடியரை பதினைந்து. இவற்றை உம்மை விரித்துக்கொள்க.

பலபெயரெனவே இருபெயரும் அடங்குமேனும் இரண்டாகிய பல்பெயரினும் இரண்டிறந்த பலபெயரினுந் தொகுமெனற்கு இருபெயர் பலபெயர் என்றார். அளவுப்பெயர் முதலியன இருபெயர்க்கண் அடங்குமெனினும் முன்னர் யாண்டும் பொருள்வேற்றுமையே பற்றி வேறாக ஓதுதலின் ஈண்டும் எடுத்தோதினார். (உக)

சகஅ. பண்பு தொகவருஉங் கிளவி யானு
முமமை தொக்க பெயர்வயி னானும
வேற்றுமை தொக்க பெயர்வயி னானு
மீற்றுநின் றியலு மன்மொழித் தொகையே.

இஃது அன்மொழித்தொகை கூறுகின்றது.

(இ - ள்.) அன்மொழித்தொகை = ஒருவன் கூறுஞ் சொற்கணன்றிப் பின்னர் வேறோர் சொற் தொக்குநிற்குந் தொகை: பண்பு தொக வருஉங் கிளவியானும் = பண்புச்சொற் தொக வருந் தொகைப்பெயர்க்கண்ணும்: உம்மை தொக்க பெயர்வயினானும் = உம்மென்னும் இடைச்சொற் தொக்க தொகைப்பெயர்க்கண்ணும்: வேற்றுமை தொக்க பெயர்வயினானும் = வேற்றுமையுருபுகள் தொக்க தொகைப்பெயர்க்கண்ணும்: ஈற்று நின்று இயலும்=இறுதிச்சொற்கண்ணே நின்று நடக்கும். எ-று.

முன்னர் அன்மொழியான் உணரும் பொருள்களை மனத்தான் உணர்ந்துதான் பின்னர்ப் பண்புத்தொகை முதலியனவற்றாற்

கூறக் கருதியவழி அத்தொகைகளின் இறுதிச்சொற்கண் எழுந்து படுத்தலோசையான் அத்தொகைச்சொற் றோன்றிப் பொருள் விளக்குதலின் ஈற்றுநின்று இயலுமென்றார்.

உ-ம். வெள்ளாடை தகரஞாழல் பொற்றொடி எனவரும். இவை வெள்ளாடையுடுத்தாள் தகரஞாழலணிந்தாள் பொற்றொடி தொட்டாள் என இறுதிச்சொற்கண் எழுந்து படுத்தலோசையாற் றொகை தோன்றியவாறு காண்க.

பெரும்பான்மைவரும் பண்புத்தொகைப்பின்னர் அங்ஙனம் வரும் வேற்றுமைத்தொகையை வையாது முந்துமொழிந்ததன்றலை தடுமாற்றான உவமத்தொகைக்கண்ணும் வினைத்தொகைக்கண்ணும அன்மொழித்தொகைவருதல்கொள்க. "வினையினறொகையினுமுவ மத்தொகையினு - மன்மொழிதோனறுமெனமனுர்புலவா" எனபது அவிநயம. அறற்கூந்தல் திரிதாடி என்பனவற்றை அறல்போலுங் கூந்தலையுடையாள் திரிந்ததாடியையுடையான் என விரிக்க.(உஉ)

சகக. அவைதாம்,

முன்மொழி நிலையலும பின்மொழி நிலையலு
மிருமொழி மேலு மொருங்குட னிலையலு
மம்மொழி நிலையா தன்மொழி நிலையலு
மந்நான் கென்ப பொருணிலை மரபே.

இது தொகைச்சொற் பொருணிலை கூறுகின்றது.

(இ - ள்.) அவைதாம் பொருணிலைமரபு = அத்தொகைச்சொற் கடாம் பொருள்பெறறுநிற்கும் நிலைமையினது முறைமையினை: முன் மொழிநிலையலும = முனமொழிக்கண்ணே பொருள் சிறந்து நிற்ற லும்: பின்மொழி நிலையலும் = பின்மொழிக்கண்ணே பொருள் சிறந்து நிறறலும்: இருமொழி மேலும் ஒருங்கு உடன் நிலையலும் = இரு மொழிக்கண்ணும் பொருள் ஒருங்கு சிறந்து நிற்றலும்: அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும் = அவ்விருமொழிக்கண்ணும் பொ ருள் சிறந்து நில்லாது மற்றோர் மொழிக்கண்ணே பொருள் சிறந்து நிற்றலும்: அந்நான்கு என்ப = என்றுசொல்லப்பட்ட அந்நான்கு கூறென்று சொல்லுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். வேங்கைப்பூ முன்மொழிநிலையல்; அது நறிதென்பத னோடு கூட்ட வேங்கைக்கட் பொருள் சிறவாது பூவின்கட் பொ

ருள் சிறத்தலின். ஆரமாலை பின்மொழிநிலையல். இவை வேற்று மைத்தொகை. வேற்கண் முன்மொழிநிலையல். பெண்ணணங்கு என்பது அணங்குபோலும் பெண்ணென்பதாகலிற் பின்மொழிநிலையு லாம். இவை உவமத்தொகை. கொல்யானை முன்மொழிநிலையல். இவ்வினைத்தொகைக்குப் பின்மொழிநிலையலின்று. தீந்தேன் முன் மொழிநிலையல். அடைகடல் பின்மொழிநிலையல்; இது கடலாகிய கரை எனக் கரைகூறுதலே கருத்தாகலின். இவை பண்புத்தொ கை. இவை இடம்பற்றி வந்த முன்னும் பின்னுமாம். காலம்பற்றி வருவனவும் வந்துழிக் காண்க. பண்புத்தொகையேயன்றி ஏனைத் தொகைக்கும் விசேடிந்தல் சிறுபான்மை வருதலின் ஏன்றன்கண் ணது பொருட்சிறப்பென்றார். உவாப்பதினன்கு இருமொழிமேலும் நின்றது. உடனென்றதனாற் புலிவிற்கெண்டை எனப் பன்மொழி மேல் நிற்றலுங் கொள்க. வெள்ளாடையென்பது இருமொழிமே லும் நில்லாது உடுத்தாள்மேற் பொருள் நின்றது. (௨௯)

௪௨௦. எல்லாத் தொகையு மொருசொ னடைய.

இது தொகைச்சொற்களெல்லாம் ஒருசொல்லாய் நிற்குமென் கின்றது.

(இ - ள்.) எல்லாத் தொகையும்=இருமொழித்தொடரின்கண் ணும் பன்மொழித்தொடரின்கண்ணுந் தொக்குநிற்கும் எல்லாத் தொ கைச்சொற்களும்: ஒருசொல் நடைய=ஒருசொல் நின்று தன்னை முடிக்குஞ் சொற்களோடு முடியுமாறுபோலத் தாமுந் தம்மை முடிக்குஞ் சொற்களோடு முடிதலையுடைய. எ-று.

அங்ஙனம் முடியுங்காற் "பெயரினாகியதொகையுமாருளவே" என்னுஞ் சூத்திரத்தாற் தொகைச்சொல் இருவகைய என்றும் அவற்றுட் பெயரும் பெயருந் தொக்கன ஒருசொல் நீர்மையவாய்ப் பயனிலை கொள்ளுமென்றுங் கூறிய விதியொழிந்த இலக்கணங்க ளெல்லாம் ஈண்டுக் கொள்க. அவை யானைக்கோடென்னும் பெயரி னாகியதொகை யானைக்கோட்டைக் குறைத்தானென உருபேற்ற லும் நிலங்கடந்தான் குன்றத்திருந்தானென்னும் வினையினாகியதொ கைகளும் ஒரு முற்றுச்சொல்லாய்ச் சாத்தனென்னும் பெயர்கோ டலும் மாவூர்ந்துபோயினான் குன்றத்திருந்துபோயினான் என வினை யெச்சச்சொல்லாய் நிற்றலும் மாவூர்ந்தசாத்தன் குன்றத்திருந்தசாத் தன் எனப் பெயரெச்சச்சொல்லாய் நிற்றலுமாம். இவ்வினையினா

கியதொகை படுத்தலோசையாற் பெயராகியவழிப் பயனிலை கோடலுங் கொள்க. எழுத்தினுட் "பெயருந்தொழிலும்" என்னுஞ் சூத்திரத்துட் பெயருந் தொழிலும் பிரிந்திசைத்தவழியும் பெயரும் பெயரும் ஒருங்கிசைத்தவழியும் வேற்றுமை தொக்குநிற்குமென்றலின் நிலங்கடந்தான் குன்றத்திருந்தான் எனப் பெயருந் தொழிலும் பிரிந்திசைத்தவழியுந் தொகையாதல் ஆசிரியர்க்குக் கருத்தாயிற்று. இப்பெயரும் வினையுந் தொகுதல் உவமத்தொகைக்கும் வினைத்தொகைக்குங் கொள்க. இவை இருமொழித்தொடர். உயர்சொற்கிளவி இடைச்சொற்கிளவி உரிச்சொற்கிளவி என்புழி, உயர்சொல் இடைச்சொல் உரிச்சொல் என்னுந் தொகைச்சொற்கள் ஒருசொல் நடையவாய், அவை கிளவியென்பதனோடு தொக்கு ஒருசொல் நடையவாய், மேல்வந்து முடிப்பனவற்றோடு முடிந்தன. கற்சுனைக்குவளையிதழ் என்றாற்போல்வனவும் அது.

இனிக் "கரியமலர்நெடுங்கட்காரிகைமுன்" "முட்புறமுதிர்கனி" "பெடைமயிலுருவிற்பெருந்தகுபாடினி" "கன்னிப்பெண்ணாரமுதின்" எனச் செய்யுட்கட் பலதொகையும் விராய் வந்து ஒருசொல் நடையவாய்த் தம்மை முடிப்பனவற்றோடு முடிந்தன. "துடியிடைநெடுங்கட்டுணைமுலைப்பொற்றொடி" இஃது அறுவகைத்தொகையும் ஒருங்கு தொக்கது. இனிக் கலனே தூணிப்பதக்கு தொடியேகஃசரை பதினொன்றரை என அளவும் நிறையும் எண்ணும் ஒருசொல் நடையவாய் நின்றன. இப்பன்மொழித்தொகைக்கு முற்கூறிய முடிபுகளுங் கொள்க. இனி உம்மை எச்சவும்மையாகலிற் தொகையல் தொடர்மொழிகளினும் ஒருசொல் நடையவாய் முடிவன உளவெனக் கொள்க. அவை யானைக்கோடுகூரிது இரும்பு பொன்னாயிற்று மன்றுபாடவிந்தது மக்களையுயர்திணையென்ப என வரும். (உ௪)

சஉக. உயர்திணை மருங்கி னும்மைத் தொகையே
பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்.

இஃது உம்மைத்தொகைக்கு வழுவமைக்கின்றது.

(இ - ள்.) உயர்திணை மருங்கின் உம்மைத்தொகை = உயர்திணைப்பெயரிடத்துத் தொக்க உம்மைத்தொகையின் ஈறு: பலர்சொல் நடைத்தென மொழிமனார் புலவர் = பலரைச்சொல்லுஞ் சொல்லின் இறுதிபோலப் பன்மை உணர்த்தி நிற்குமென்று கூறுவர் ஆசிரியர். எ-று.

உ-ம். கபிலபரணர்; கபிலன்பரணன் என்பதிற் கபிலனென்னும் னகர ஈறு சந்தியாற் கெட்டுக் கபிலபரணனென நின்றவழி இருவராய் நின்றமையின் வந்தாரென்னும் பன்மையொடுமுடிதல் வேண்டுதலின் ஆண்டு நின்ற ஒருமையீறு பன்மையொடு முடிதல் வழுவென்றுகருதி னகர ஈறு ரகர ஈறாய் நிற்குமென வழுவமைத்தார். கல்லாடமாமூலசீத்தலைச்சாத்தர் என்றாற்போல்வனவும் அது. இவை ஓசை பகுத்திசைத்தலின் ஒருசொல்லாய் ஒட்டாமை காண்க.

உயர்திணைப்பெயரென்றது மருங்கினென்றார் உயர்திணைவிரவுப்பெயரும் அடங்குதற்கு. (உ௫)

௪உஉ. வாரா மரபின வரக்கூ றுதலு
மென்னா மரபின வெனக்கூ றுதலு
மன்னவை யெல்லா மவற்றவற் றியல்பா
னின்ன வென்னுங் குறிப்புரை யாகும்.

இது தொகையதிகாரம் விட்டு மரபுவழுக் காக்கின்றது.

(இ - ள்.) வாரா மரபின வரக் கூறுதலும்=இயங்காதனவற்றை இயங்குவனவாகக் கூறுதலும்: என்னா மரபின எனக் கூறுதலும்=சொல்லாதனவற்றைச் சொல்லுவனவாகச் சொல்லுதலுமாகிய: அன்னவை எல்லாம் = அத்தன்மையன எல்லாம்: அவற்றவற்று இயல்பான்=அவ்வவ்வப்பொருள்களின் இயல்புகாரணத்தான்: இன்ன என்னுங் குறிப்புரை ஆகும்=இத்தன்மைய என்று சொல்லுங் குறிப்புமொழியாம். எ-று.

உ-ம். அந்நெறியீண்டுவந்துகிடந்தது அம்மலைவந்திதனோடுபொருந்திற்று எனவும், அவலவலென்கின்றனநெல் மழைமழையென்கின்றதுபைங்கூழ் எனவும் வரும். இவை வரவுஞ் சொல்லும் உணர்த்தாது இன்ன என்பதனைக் குறிப்பான் உணர்த்தியவாறு காண்க.

இனி ஒன்றெனமுடித்தலென்பதனாற் கவவகத்திடும் என்றாற்போல அச்சொல்லின் பொருட்டொழிலை அச்சொல்மேல் ஏற்றிக் கூறுவனவும், ஆயிரங்காணம்வந்தது என்றாற்போல ஒருவனால் இயக்கப்பட்டதனைத் தான் இயங்கிற்றாகப் பொருள்கூறுவனவும், நீலுண்டுகிலிகை என்றவழி நீலம்பற்றியதனை நீலம் உண்டதாக்கிப் பொருள்கூறுதலும், இப்பொருளையிச்சொற்சொல்லும் என்றாற்போல வருவனவுங் கொள்க. (உ௬)

சஉ௩. இசைப்படு பொருளே நான்குவரம் பாகும்.

இது முற்கூறிய இசைநிறையடுக்கிற்கு வரையறை கூறு கின்றது.

(இ - ள்.) இசைப்படு பொருளே நான்கு வரம்பு ஆகும்=முற் கூறிய ஒருசொல் அடுக்கினுள் இசைநிறைத்தலாற் படும் பொருண் மைக்கு வரும் அடுக்கு நான்காகிய எல்லையுடைத்தாம். எ-று.

உ-ம். "பாடுகோபாடுகோபாடுகோபாடுகோ" எனவரும். (உஎ)

சஉச. விரைசொல் லடுக்கே மூன்றுவரம் பாகும்.

இது முற்கூறிய பொருளொடுபுணர்தலடுக்கிற்கு வரையறை கூறுகின்றது.

(இ - ள்.) விரைசொல் அடுக்கே மூன்று வரம்பாகும் = முற் கூறிய ஒருசொல் அடுக்கினுட் பொருளொடுபுணர்தற்கண் விரைவு பொருட்பட அடுக்குவது மூன்றாகிய வரம்பையுடைத்து.

உ-ம். தீதீதீ எனவரும்.

அசைநிலை இருமுறையல்லது அடுக்காமையின் அதற்குப் பெ யரெல்லை கூறாராயினார். ஒருமுறை வருவது அடுக்கன்மையின் ஒரு சொல்லடுக்கெனவே இருமுறை அடுக்கினமை பெறுதும்; அவை பெறவே தீதீ படைபடை என விரைவுபொருளின் சிற்றெல்லை இருகால் அடுக்குதல் கொள்க. இஃது இசைப்படு பொருளுக்கும் ஒக்கும். விரைவிக்குஞ் சொல் விரைசொல். (உஅ)

சஉ௫. கண்டீ ரென்றா கேட்டீ ரென்றா
சென்ற தென்றா போயிற் றென்றா
வன்றி யனைத்தும் வினாவொடு சிவணி
நின்றவழி யிசைக்குங் கிளவி யென்ப.

இது வினைச்சொற்களுள் ஒருசாரன அசையாமென்கின்றது.

(இ - ள்.) கண்டீர் என்றா கேட்டீர் என்றா சென்றது என்றா போயிற்று என்றா அன்றி அனைத்தும் = கண்டீரெனவுங் கேட்டீ ரெனவுஞ் சென்றதெனவும் போயிற்றெனவும் வரும் அவ்வினைச் சொல் நான்கும்: வினாவொடு சிவணி நின்றவழி அசைக்குங் கிளவி

என்ப=வினாவொடு பொருந்தி நின்றவழி அசைநிலையடுக்காமென்று கூறுவர் புலவர். எ-று.

எனவே வினாவொடு சிவணாதவழி வினைச்சொல்லேயாம்.

ஒருவன் கூறிய கூற்றிற்கு உடம்படாதான் கண்டீரேகண்டீரே கேட்டீரேகேட்டீரே என்றால் வினைச்சொற்பொருண்மையும் வினாப் பொருண்மையும் இன்றி நிற்கும்.

இது வரையாது கூறினமையின் அடுக்காதும் வரும். ஏனையவும் ஏற்புழி அடுக்கியும், அடுக்காதும் வருமாயினும் அவை இக்காலத்து அரிய. (௨௯)

சஉ௬. கேட்டை யென்றா நின்றை யென்றா
காத்தை யென்றா கண்டை யென்றா
வன்றி யனைத்து முன்னிலை யல்வழி
முன்னுறக் கிளந்த வியல்பா கும்மே.

இதுவும் அது.

(இ - ள்.) கேட்டை என்றா நின்றை என்றா காத்தை என்றா கண்டை என்றா அன்றி அனைத்தும் = கேட்டையெனவும் நின்றையெனவுங் காத்தையெனவுங் கண்டையெனவும் வரும் அம்முன்னிலைவினைச்சொல் நான்கும்: முன்னிலை அல்வழி = முன்னிலைப் பொருளை உணர்த்திநில்லாக்கால்: முன்னுறக் கிளந்த இயல்பாகும்மே=மேற்சொல்லப்பட்ட அசைநிலையாம். எ-று.

இவையுங் கட்டுரைக்கண் அடுக்கியுஞ் சிறுபான்மை அடுக்காதும் வந்து ஏற்புழி அசைநிலையாய் நிற்கும். இவையும் இக்காலத்து அரிய. இவை சிறுபான்மை வினாவொடு வருதலுங் கொள்க. (௩௦)

சஉஎ. இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்ற
சிறப்புடை மரபி னம்முக் காலமுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னு
மம்மூ விடத்தான் வினையினுங் குறிப்பினு
மெய்ம்மை யானு மீரிரண் டாகு
மவ்வா றென்ப முற்றியன் மொழியே.

இது வினைச்சொற்களுள் ஒருசாரனவற்றிற்கு ஆட்சி வேண்டி அதன் குணங் காரணமாகக்கொண்டு ஓர் குறியிடுதல் கூறுகின்றது.

(இ - ள்.) தன்மை முன்னிலை படர்க்கை என்னும் அம் மூவிடத்தான் = தன்மை முன்னிலை படர்க்கையென்று சொல்லப்பட்ட அம்மூன்றிடத்தின்கண்ணும் வரும்: மெய்ம்மையானும் = உயர்திணை அஃறிணை விரவுத்திணையென்னும் மூவகைப்பொருடோறும்: வினையினுங் குறிப்பினும் ஈரிரண்டு ஆகுமென்ற அவ்வாறு மொழி = தெரிநிலைவினையானுங் குறிப்புவினையானும் இவ்விரண்டாய் வருமென்று யான் முற்கூறிய அவ்வாறுவகைச் சொல்லை: இறப்பின் நிகழ்வின் எதிர்வின் எனஅ சிறப்பு உடை மரபின் அம்முக்காலமும் இயல் முற்று என்ப = இறப்பு ஒன்றானும் நிகழுஞ் சிறப்புடை மரபானும் நிகழ்வு ஒன்றானும் நிகழுஞ் சிறப்புடை மரபானும் எதிர்வு ஒன்றானும் நிகழுஞ் சிறப்புடை மரபானும் அம்முக்காலத்தும் நிகழுஞ் சிறப்புடை மரபானும் இயலும் முற்றுச்சொல்லென்று பெயர்கூறுவர் ஆசிரியர். எ-று.

"அம்மாம்" என்னுஞ் சூத்திரம் முதலாகப் "பல்லோர்படர்க்கை" என்னுஞ் சூத்திரம் இறுதியாக மூவகையிடமும் மூவகைப் பொருளும் இருவகைவினையும் எடுத்தோதியவற்றை ஈண்டும் ஓதியது அனுவாதமாயிற்று. ஆண்டு ஓதாது எஞ்சிநின்ற காலமுங் குறியீடும் ஈண்டு ஓதியது இலக்கணமாயிற்று. முன்னர்க் "குறிப்பினும்வினையினும்" என்னுஞ் சூத்திரத்திற் "காலமொடுவரூஉம்வினைச் சொல்லெல்லாம்" என்றது மூவகைவினைக்கும் பொதுவாய் நின்று ஒரோவோர் முற்றுவினையும் முக்காலமும் பெற்றே வருமென்னும் ஐயம் நிகழ்த்திற்றதனை ஒரோவோர் காலம் பெற்றுவருவனவும் முக்காலமும் பெற்றுவருவனவுமாய் நிற்கும் முற்றென ஐயம் அகற்றினார் இச்சூத்திரத்தான். எச்சங்கட்கு மேலிற் சூத்திரத்தான் ஐயம் அகற்றுப. மேற் "பிரிநிலைவினை" என்னுஞ் சூத்திரத்தான் எச்சங்கட்குக் குறியீடு கூறுகின்றாராதலின் அதற்கு ஏற்ப முற்றிற்குங் குறியீடு கூறினார்.

இனி அவை காலத்தொடு வருங்கால் றகர உகரம் இறந்த காலத்தாற் சிறந்தது; உம்மொடு வரூஉங் கடதறவுங் கடதறவென்னும் அந்நான்கு ஊர்ந்த குன்றியலுகரமும் அல்லும் பகரமும் ஆரும் ஆவும் வவ்வுமாகிய பதின்மூன்றும் எதிர்காலத்தாற் சிறந்தன; அம் ஆம் எம் ஏம் என் ஏனும் அன் ஆனும் அள் ஆளும் அர் ஆரும் அகர

முந் தகர உகரமுமாகிய பதினொன்கும் முக்காலத்தாற் சிறந்தன; முற்று இருபத்தொன்பதின்கட் டகர உகரம் வினைக்குறிப்பாதலின் அது வும் முக்காலத்தாற் சிறந்ததாம். ஆகத் தெரிநிலைமுற்று இருபத் தெட்டுங் காண்க.

யார் எவன் என்பனவோவெனின், அவையும் முப்பாற்கும் இரு பாற்கும் பொதுவாகி இடம் உணர்த்தாவேனும் வினைக்குறிப்பாக லின் முக்காலமும் உடையவென்று உணர்க.

இருதிணைக்கும் ஓதிய குறிப்புவினை பதினெட்டும் முக்கால மும் உடைய.

இனிப் பொருள் உணர்த்தாது இடம் உணர்த்தும் முன்னிலை யும் வியங்கோளுமாகிய விரவுவினைமுற்றுக்களும் இடமும் பொரு ளும் உணர்த்தா. விரவுவினைமுற்றுக்களும் பிரிவுவேறுபடூஉஞ் செய் தியவாய் நிற்றலின் இடமும் பொருளும் உணர்த்திக் காலங்கொண் டே நிற்குமென்று உணர்க.

இவை ஐயும் ஆயும் இர்ரும் ஈரும் முக்காலத்தாற் சிறந்தன; இகரமும் இன்னும் வியங்கோளுஞ் செய்மனவும் எதிர்காலத்தாற் சிறந்தன; செய்யுமென்பது நிகழ்காலத்தாற் சிறந்தது; இன்மை செப்பலும் வேறென்கிளவியும் வினைக்குறிப்பாதலின் முக்காலத்தாற் சிறந்தன.

இனி விரவுவினையுள் வினையெச்சமும் பெயரெச்சமும் மேற் கூறுதும். இவை ஈரிரண்டாங்கால் ஓரீற்றின்கண்ணே கொள்க.

உ-ம். சென்றனன் கரியன் எனவும், சென்றது கரிது எனவும், சென்றனை கரியை எனவும் வரும். ஈண்டுக் காலமுங் குறியீடுங் கூறினரேனும் வந்ததுகொண்டுவாராததுணர்த்தலென்னும் உத்தி பற்றி வினையியலுட் காலமுங் குறியீடும் விரித்து ஆசிரியரெல்லா ரும் உரையுங் காண்டிகையுங் கூறினரென்று உணர்க. இவை முற்றிநிற்குமாறு "அவற்றுருபெருவழி" என்னுஞ் சூத்திரத்துட் கூறினும்.

மெய்ம்மையானுமென்றது "ஊரானோர்தேவகுலம்" என்றாற் போலத் தொறுவென்பதன் பொருட்டாய் நின்றது.

இச்சூத்திரத்திற் கூறியன எல்லாம் முற்றப்பெறுவனவுங் குறை யப்பெறுவனவும் வினையியலுள் விரித்து ஓதியவாற்றான் உணர்க. ()

சஉஅ. எவ்வயின் வினையு மவ்வயி னிலையும்.

இது மேலதற்கோர் புறனடை.

(இ - ள்.) எவ்வயின் வினையும் = மூன்றிடத்து வரும் வினையெச்சமும் பெயரெச்சமும்: அவ்வயின் நிலையும் = அம்முற்றியல்பிலே நிற்கும். எ-று.

என்றது இறப்புப் பற்றி வருவனவும் இறப்பும் நிகழ்வும் பற்றி வருவனவும் எதிர்வு பற்றி வருவனவும் முக்காலமும் பற்றி வருவனவுமாம் என்றவாறு.

வினையெச்சங்களுள் உகரமும் ஊகாரமும் எனவும் முன்னுங் கடையும் இறப்பும், புகரமும் பின்னும் இறப்பும் நிகழ்வும், இயரும் இயவும் இன்னுங் குகரமும் எதிர்வும், அகரமுங் காலும் வழியும் இடமும் முக்காலமும் பற்றி வந்தவாறும்; பெயரெச்சங்களுள் உம் ஈறு நிகழ்வும் எதிர்வும், அகர ஈறு இறப்பும் பற்றி வந்தவாறுங் காண்க.

இருவகை எச்சத்திற்குங் "காலமொடுவரூஉம்வினைச்சொல்லெல்லாம்" என்ற பொதுவிதியான் முக்காலமும் ஒன்றற்கு வருமோ என்னும் ஐயம் நிகழ்ந்ததனை இச்சூத்திரத்தான் அகற்றினார். ஆசிரியர் அவற்றிற்கு ஓதிய வாசகங்களான் அவற்றிற்கு உரிய காலங்களும் உணர்த்தினாரெனின், அவ்வாசகங்களாற் காலம் உணராதவையும் உளவாகலின் அவையும் விளங்குதற்கு ஈண்டுக் கூறினாரென்று உணர்க.

சேனாவரையர் வினையென்றது முதனிலையென்று பொருளுரைத்து அவையும் முற்றுச்சொற்போல முற்றிநிற்கும் என்றாராலெனின், அம்முதனிலை படுத்தலோசையாற் பெயர்த்தன்மைப்பட நிற்குமாறும் எடுத்தலோசையான் முன்னிலையேவலொருமைவினைமுற்றாய் நிற்குமாறும் "இர்ஈர்மின்" என்னுஞ் சூத்திரத்துட் கூறினும். முற்றிலக்கணங் கூறுதற்கு இடையே இச்சூத்திரத்தான் எச்ச இலக்கணத்தைக் கூறினார், பருந்துவிழுக்காடாக, மாட்டேறிற்றென்று கருதி. (௩௨)

சஉ௯. அவைதாம்,
தத்தங் கிளவி யடுக்குந வரினு
மெத்திறத் தானும் பெயர்முடி பினவே.

இது முற்றுச்சொற்கு முடிபு கூறுகின்றது.

(இ - ள்.) அவைதாம்=முற்கூறிய முற்றுச்சொற்கடாம்: தத் தங் கிளவி அடுக்குந வரினும்=தத்தமக்கு உரிய வாய்பாடுகள் பல வாய் அடுக்கிவரினும்: உம்மையான் அடுக்காது ஒன்றே வரினும்; எத்திறத்தானும் பெயர் முடிபின=எவ்வாற்றானும் பெயர்ச்சொல்லை முடிபாகவுடைய. எ-று.

உண்டானின்றானோடினான்பாடினான்சாத்தன் நல்லனறிவுடை யன்செவ்வியன்சான்றோர்மகன் எனவும், வந்தான்வழுதிகரியன்மால் எனவும்வரும்.

எத்திறத்தானும் என்றதனால் உண்டான்சாத்தன் சாத்தனுண் டான் என முன்னும் பின்னும் பெயர்நிற்றலும் "நின்றானிருந்தான் கிடந்தான்றன்கேளலறச்-சென்றான்" என அடுக்கிப் பெயர்வெளிப் படாது நிற்றலும் "முப்பஃதென்ப" என அடுக்காது பெயர்வெளிப் படாது நிற்றலுங் கொள்க. ஈண்டு இலேசாற் கொண்டது முடிக் கும் பெயர் வெளிப்படாது நின்றதற்கென்றும் "எவ்வயிற்பெயரும்" என்னுஞ் சூத்திரத்தாற் கொண்டது முடிக்கப்படும் பெயர் வெளிப் படாது நின்றதற்கென்றும் உணர்க.

வேற்றுமைச்சொல்லென வேறொர் சொல்லின்றி முற்றும் எச்சமும் வேற்றுமையை விரிக்குமாறுபோல எழுவாயும் பயனிலை யுமென வேறொர்சொல்லின்றி முற்றும் எச்சமும் எழுவாயும் பய னிலையுமாய் நிற்குமென்றும் உணர்க. முற்றுப்பெயர்கொண்டல்லது தாமாக முற்றி நில்லாமைக்குக் காரணம் "அவற்றொடுவருவழி" என்னுஞ் சூத்திரத்துட் கூறினும். (௩௩)

சஙூ0. பிரிநிலை வினையே பெயரே யொழியிசை
யெதிர்மறை யும்மை யெனவே சொல்லே
குறிப்பே யிசையே யாயீ ரைந்து
நெறிப்படத் தோன்று மெஞ்சுபொருட் கிளவி.

இது முற்கூறிய எச்சச்சொற்கட்கு முடிபு கூறுவான் அவற் றது பெயரும் முறையுந் தொகையுங் கூறுகின்றது.

(இ - ள்.) நெறிப்படத் தோன்றும்=முன்னர் எடுத்து ஓதிய இடங்களிலே முறைமைப்படத் தோன்றும்: பிரிநிலை வினையே பெ

யரே ஒழியிசை எதிர்மறை உம்மை எனவே சொல்லே குறிப்பே இசையே ஆயீரைந்தும்=பிரிநிலை முதல் இசை ஈறாகிய அப்பத்தும்: ஏஞ்சுபொருட் கிளவி=எச்சச்சொல்லென்று பெயராம். எ-று.

எஞ்சிநிற்பதோர் பொருளையுடைய சொல்லெனவே எச்சச்சொல்லென்று பெயராயிற்று. இப்பத்தோடும் எச்சமென்பதனைக் கூட்டுக. இவற்றுட் பிரிநிலையெச்சம் முதலிய ஏழும் எச்சச்சொல் வந்து முடித்தலையுடைய; ஏனைய மூன்றும் ஆச்சொல் வந்து முடியாவென்று உணர்க. வினையெச்சமும் பெயரெச்சமும் வினைச்சொல்லொழிபு; ஏனைய இடைச்சொல்லொழிபாம். (௩௪)

சங௧. அவற்றுட்,
பிரிநிலை யெச்சம் பிரிநிலை முடிபின.

இது முறையே பிரிநிலையெச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் = முற்கூறிய பத்தனுள்: பிரிநிலையெச்சம்=ஏகாரமும் ஓகாரமுமாகிய பிரிநிலையெச்சங்கள: பிரிநிலை முடிபின=பிரிக்கப்பட்ட பொருண்மேல் வருஞ் சொல்லையே தமக்கு முடிபாக உடையவாம். எ-று.

உ-ம். அவனேகொண்டான் அவனோகொண்டான் எனப் பிரிக்கப்பட்ட சுட்டுப்பெயரின் வினைகொண்டு முடிந்தன. இடைச்சொற்குத் தமக்கு இயல்பின்மையிற் சோற்றைப்பசித்துண்டான் என்றாற்போல அவனென்னுஞ் சுட்டுப்பெயரும் இடைநின்ற ஏகார ஓகாரமுங் கொண்டானென்பதனோடு முடிந்தன. அன்றி அவனென்பது கொண்டானென்பதனோடு முடிய ஏகார ஓகாரங்கள் பிறர்கொண்டிலரென்பதனோடு முடிந்தன என்றல் பொருத்தமுடைத்தெனின், வினையெச்சமும் பெயரெச்சமும் ஒழித்து இடைச்சொல்லான் வரும் எச்சங்கள் பொருள் தருமாறு இடைச்சொல்லோத்தினுட் கூறி ஈண்டு அவற்றிற்கு முடிபுசொற் கூறுகின்றாராதலிற் கொண்டானென்னுஞ் சொல் வந்து அவவெச்சங்களை முடித்தாலல்லது பிறர்கொண்டிலரென்னும் பொருண்மை முடிபு தோன்றாதாதலிற் கொண்டானென்பதே முடிக்குஞ் சொல்லாய் நிற்பப் பிறர்கொண்டிலரென்னும் பொருண்மை முடிபு தோன்றிற்றென்றலே பொருத்தமுடைத்தென்று கோடும். அன்றியும் மும்மையெச்சத்திற்கு உள் நின்ற பொருண்மைமுடிபு முன்னர்க் கூறி அதனை நீக்கிச் சொன்மைமுடிபு ஈண்டுக் கூறுகின்றதனானும் இஃதே ஆசிரியர் கருத்தென்று உணர்க. (௩௫)

௪௫௨. வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பு
நினையத் தோன்றிய முடிபா குமே
யாவயிற் குறிப்பே யாக்கமொடு வருமே.

இது வினையெச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

(இ - ள்.) வினையெஞ்சுகிளவிக்கு வினையுங் குறிப்பும் நினையத் தோன்றிய முடிபாகும்=வினையெச்சத்திற்குத் தெரிநிலைவினையுங் குறிப்புவினையும் ஆராயத்தோன்றிய முடிபுசொல்லாம்: ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே=ஆண்டுக் குறிப்புமுற்று ஆக்கவினையோடு வரும். எ-று.

உ-ம். உழுதுவந்தான் மருந்துண்டுநல்லனாயினான் எனவரும். நினைய என்றதனான் உழுதுவந்தவன் உழுதுவருதல் எனத் தொழிற்பெயரோடும் வினைப்பெயரோடும் முடிதலுங் கொள்க.

ஈண்டு இவ்வினையெச்சமுடிபு கூறுகின்றவர் வினையியற்கண் "முதனிலைமூன்றும்" என்னுஞ் சூத்திரம் முதலிய மூன்றுசூத்திரத்தான் வினையெச்சத்திற்கு முடிபுகூறியது என்னையெனின் ஈண்டுக் கூறிய பொதுவிதிக்கு ஆண்டு மூன்றுசூத்திரத்தானும் மூவகையாகச் சிறப்புவிதி கூறினார் எதிரதுபோற்றலென்னுந் தந்திரவுத்தியாலெனக. இனி "வேங்கையுங்காந்தளுநாறி - யாம்பன்மலரினுந்தான் றண்ணியளே" "வில்லகவிரலிற்பொருந்தியவா-நல்லகஞ்சேரினொருமருங்கிலமே" என்றாற் போல்வன பிறவும் ஆக்கம் விரிந்தல்லது பொருளுணர்த்தாமை உணர்க. (௫௬)

௪௫௫. பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே.

இது பெயரெச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

(இ - ள்.) பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே=பெயரெச்சம் பெயர்ச்சொல்லோடு முடியும். எ-று.

உ-ம். உண்ணுஞ்சாத்தன் உண்டசாத்தன் எனவரும்.

ஈண்டுப் பெயரொடுமுடியும் என்ற பொதுவிதிநோக்கி "நிலனும்பொருளும்" என்னுஞ் சூத்திரத்தான் இப்பெயர்தாம் பொருள்வகையான் ஆறுவகையவாமென்று எதிரதுபோற்றலென்னும் உத்தியாற் கூறினார். (௫௭)

சரு௪. ஒழியிசை யெச்ச மொழியிசை முடிபின.

இஃது ஒழியிசையெச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

(இ - ள்.) ஒழியிசையெச்சம் ஒழியிசை முடிபின=மன்னுந் தில்லும் ஓகாரமுமாகிய ஒழியிசையெச்சம் மூன்றும் அவவொழியிசைப் பொருண்மேல் வருஞ் சொல்லையே தமக்கு முடிபாக உடைய. எ-று.

"கூரியதோர்வாண்மன்" என்பது திடபமின்றென்பதனோடும் "வருகதில்லம்ம" என்பது வந்தால் இன்னதுசெய்வேனென்பதனோடும் முடியும். ஆண்டுப் பொருண்மைமுடிபு கூறினார் ஈண்டுப் பொருண்மையை உணர்த்துஞ் சொன்மைமுடிபு கூறினார்.

உ-ம். கொளலோகொண்டான் என்பது கொண்டானென்பதனோடு முடியும். அது கொண்டுய்யப்போமாறறிந்திலன் என்பதனோடு முடிந்ததெனிற் கொண்டானென்பது வந்து முடியாக்கால் அப்பொருண்மை முடிபு தோன்றாமை உணர்க. (௩௪)

சரு௫. எதிர்மறை யெச்ச மெதிர்மறை முடிபின.

இஃது எதிர்மறையெச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

(இ - ள்.) எதிர்மறையெச்சம் எதிர்மறை முடிபின=மாறுகொளெச்சமென்ற ஏகாரமும் ஓகாரமும் உம்மையுமாகிய எதிர்மறையெச்சம் மூன்றும் எதிர்மறைப்பொருளை உணர்த்துஞ் சொல்லை முடிபாக உடைய. எ-று.

உ-ம். யானேகொள்வேன் யானோகொள்வேன் சாத்தன்வரலுமுரியன் என அவ்விடைச்சொற்களின் பின்னர் நின்ற சொற்கள் அவற்றை முடித்தலாற் கொளளேன் கொள்ளேன் வாராமையும் உரியன் என்னும் பொருண்மைமுடிபு தோன்றியவாறு காண்க. ()

சருசு. உம்மை யெச்ச மிருவீற் றானுந்
தன்வினை யொன்றிய முடிபா கும்மே.

இஃது உம்மையெச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

(இ - ள்.) இரு ஈற்றானும் = ஒன்றற்கொன்று முடிவனவும் முடிப்பனவுமாகிய இரண்டு கூற்றின்கண்ணும் வரும்: உம்மையெச்சந் தன்வினை=உம்மையெச்சங்களை முடிக்குந் தன்னுடைய வினைச்

சொற்கள்: ஒன்றிய முடிபாகும்=ஒருமைக்குப் பொருந்திய வினையே மற்றையும்மைக்கும் முடிபாய் வரும். எ-று.

உ-ம். சாத்தனும்வந்தான்கொற்றனும்வந்தான் என எதிரதுதழீஇய உம்மைக்கு முடிபாய வினையே இறந்ததுதழீஇயதற்கும் முடிபாயிற்று. சாத்தனும்வந்தான்கொற்றனும்வரும் என்பதூஉம் ஒன்றிய முடிபாம்; கொற்றனும் உண்டானென்றால் ஒன்றிய முடிபாகா. எனவே எச்சப் பொருட்கும் உம்மையை முடிபாகக் கூறாது அதனோடு தொடர்ந்த வினைமுடிபாமாறு கூறவே உண்ணின்ற பொருண்முடிபு கூறாது சொன்முடிபு கூறுதலே ஆசிரியர் கருத்தாயிற்று. எனவே முற்கூறியவற்றிற்குஞ் சொன்முடிபே கூறினாராயிற்று. "வேங்கையுமொள்ளிணர்விரிந்தன - நெடுவெண்டிங்களுமூர்கொண்டன்றே" என்பது இணர்விரிதலும் ஊர்கோடலும் மணஞ்செய்யுங் காலங் குறித்தலின் அவை ஒருவினையேயாம்.

இனி எஞ்சுபொருட்கிளவி செஞ்சொலாயவழியுந் தன்வினைகோடல் தன்னினமுடித்தலாற் கொள்க. அது சாத்தன்வந்தான் கொற்றனும்வந்தான் வரும் என்பதாம். (௪0)

சஙஎ. தன்மேற் செஞ்சொல் வருஉங் காலை
நிகழுங் காலமொடு வாராக் காலமு
மிறந்த காலமொடு வாராக் காலமு
மயங்குதல் வரையார் முறைநிலை யான.

இதுவும் அவ்வெச்சவும்மையது காலமயக்கங் கூறுகின்றது.

(இ - ள்.) தன்மேற் செஞ்சொல் வருஉங் காலை=அவ்வும்மையெச்சத்தின் முன்னர் முடிக்குஞ் சொல் உம்மையில் சொல்லாய் வருங்காலத்து: நிகழுங் காலமொடு வாராக் காலமும்=நிகழ்காலத்தோடு எதிர்காலமும்: இறந்தகாலமொடு வாராக்காலமும் = இறந்தகால்த்தோடு எதிர்காலமும்: மயங்குதல் வரையார் முறைநிலையான= மயங்குதலை நீக்கார் அவ்வாறு மயங்கும் முறைமைக்கண். எ-று.

உ-ம். கூழுண்ணுநின்றான்சோறுமுண்பன் கூழுண்டான்சோறுமுண்பன் எனவரும். முறைநிலையென்றதனாற் சிறுபான்மை நிகழ்வோடு இறப்பும் மயங்குதல் கொள்க. கூழுண்ணுநின்றான்சோறுமுண்டான் எனவரும். (௪க)

சங அ. எனவெ னெச்சம் வினையொடு முடிமே.

இஃது எனவெனெச்சமாமாறு கூறுகின்றது.

(இ - ள்.) எனவென் எச்சம் = முன்னர் வினையுங் குறிப்பும் இசையும் பண்பும் எனக் கூறிய நால்வகையவாகிய எனவெனெச்சம்: வினையொடு முடிமே = தெரிநிலைவினையோடுங் குறிப்புவினையோடும் முடியும். எ-று.

செய்தென என்னும் வினையெச்ச என வினை கோடல் முற்கூறினர். எண் எனவும் பெயர் எனவும் வினைகொள்ளா. எனவே எனவென்னும் இடைச்சொல் ஏழுவகையதாயிற்று.

உ-ம். கார்வருமெனக்கருதினோந்தாள் துண்ணெனத்துடித்தது ஒல்லெனவொலித்தது காரெனக்கறுத்தது என நான்கனுள் இருவகை வினையுங் காண்க.

என்றென்பதற்கும் இவ்விதி ஒக்கும். கொள்ளென்றுகொண்டான் மலைவான்கொள்ளென்றுயர்பலிதூஉய் என்பன கொள்ளென்று சொல்லிக் கொண்டானெனவும் மலைவான்கொள்ளவேண்டுமென்று சொல்லி எனவும் பொருடருதலிற் சொல்லெச்சமாம். (சஉ)

சஙகூ. எஞ்சிய மூன்று மேல்வந்து முடிக்கு
மெஞ்சுபொருட் கிளவி யிலவென மொழிப.

இஃது வினையெச்சங்கட்கு முடிபுவேற்றுமை கூறுகின்றது.

(இ - ள்.) எஞ்சிய மூன்றும்=ஒழிந்த சொல்லெச்சமுங் குறிப்பெச்சமும் இசையெச்சமுமாகிய மூன்றும்: மேல்வந்து முடிக்கும் எஞ்சுபொருட்கிளவி இல என மொழிப = ஒழிந்த எச்சங்கள்போலத் தமக்குமேல் வேறாய் வந்து தம்மை முடிக்கும் எஞ்சியபொருட்கிளவியை உடையவல்ல என்று கூறுவர் ஆசிரியர். எ-று.

எனவே, பிறசொல்லை அவாவிநின்றாலும் அவை வந்துமுடியாமற் தாமே அவற்றைக் கூறிநிற்குமாயின. அவை மேற்காட்டுதும். சொல்லை எச்சமாகவுடைய சொல்லெனவுங் குறிப்பின்கட் தோன்றிய எச்சமெனவும் இசையின்கட் தோன்றிய எச்சமெனவும் விரிக்க. (சங)

சச0. தத்தங் குறிப்பி னெச்சஞ் செப்பும்.

இது குறிப்பெச்சமும் இசையெச்சமும் முடியுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) எச்சம் = சொல்லெச்சம் ஒழிந்த இருவகையெச்சங்கள்: தத்தங் குறிப்பிற் செப்பும் = தம்மைக் கூறுவோர்தம்முடைய தம்முடைய குறிப்புக்களாலே தம்முடைய எஞ்சுபொருளைத் தாமே கூறி நிற்கும். எ-று.

உ-ம். கற்கறிக்கநன்கட்டான் என்புழி தீங்கட்டானென்னுங் குறிப்புத் தோன்றிய எஞ்சுபொருளினைத் தானே கூறிநின்றது. வயிறுமொடுமொடுத்தது என்றால் இசையிற் குறிப்பாகிய உண்ண வேண்டாமென்னும் எஞ்சுபொருளினைத் தானே கூறிநின்றது. இவ் விசையிற் குறிப்பு வயிற்றின்கண்ணுங் கொள்க.

இனிப் பிறசொல் வாராது தம்மைத்தாமே முடிக்குமென்று விண்ணெனவிணைத்தது ஒல்லெனவொலித்தது என்பன காட்டினுரால் உரையாசிரியரெனின், அவை தம்மைத் தாமே முடியாமல் அது விண்ணெனவீங்கிற்று ஒல்லெனவோடிற்றெனப் பிறசொல் வந்து முடித்தலும் அவற்றிற்கு ஏற்குமாகலானும் அவை எனவென்னும் இடைச்சொல்லாகலானும் அவற்றைக் கொண்டாற் காரெனக் கறுத்ததென்னும் பண்புங் கோடல்வேண்டுமாகலானும் அது போலியுரையாம். இனிச் சேனாவரையர் குறிப்பெச்சத்திற்கு "இளைதாக முண்மரங்கொல்க" என்னுங் குறள்வெண்பாவும் இசையெச்சத்திற்கு "அகரமுதல" என்னுங் குறள்வெண்பாவுங் காட்டினாராலெனின், அவர் காட்டின குறிப்பெச்சஞ் செய்யுளிலக்கணங் கூறுகின்ற செய்யுளியற் "சொல்லொடுங்குறிப்பொடும்" என்னுஞ் சூத்திரத்தாற் பல சொற் றொடர்ந்ததோர் செய்யுள் முடிந்தக்கால் வருமென்று கொண்ட குறிப்பெச்சமாகலின் அதனைச் சொல்லிலக்கணத்திற் கூறுகின்ற குறிப்பெச்சத்திற்குக் காட்டினால் ஆண்டைக் குறிப்பெச்சத்திற்கு வேறுபொருள் இன்றாமாகலானும் அவர் இசையெச்சமென்ற "அகரமுதல" என்பதன்கண் அதுபோல என விரிந்த உவமச்சொற் றுணியுமாறு விரியாது இரண்டற்கும் பொதுவாய் வேறுபடவந்தவுவமத்தின்பாற் படுதலல்லது இசையாற் பிறவாமையானும் அவை பொருந்தாமை உணர்க. (௪௪)

௪௪௫. சொல்லெனெச்ச முன்னும் பின்னுஞ்
சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே.

இது சொல்லெச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

(இ - ள்.) என் எச்சம்=என்னென்கின்ற எச்சமானது: சொல்லளவு அல்லது=சொல்லென்னும் முதனிலைமாத்திரை தன்னுள்ளேயே எஞ்சிநிற்றலல்லது: சொல் முன்னும் பின்னும் எஞ்சுதலின்று=செய்யுளியலிற் கூறுஞ் சொல்லெச்சம்போல ஒருசொல் செய்யுட்கு முன்னும் பின்னும் எஞ்சிநிற்றலில்லை. எ-று.

என்னென்னும் இடைச்சொற்கண்ணே சொல்லென்பது தோன்றுதலின் என்னெச்சமென்றார். என்னென்பது சொல்லை ஒழிபாக நிற்றலின் முன்னர்ச் சொல்லெச்சமென்றார். "வினையெனப்படுவது" என்றது வினையென்றுசொல்லப்படுவதென்று பொருள் தந்த இடத்து என்னென்னும் எச்சந் தான் அவாவுதலின் இடையேநின்ற சொல்லென்னும் முதனிலைக்குத் தன் ஈற்றில் நின்ற செயவெனெச்சத்தை உணர்த்தும் அகரத்தை ஏற்பித்து நின்றவாறு காண்க. "நளியென்கிளவி" என்றது நளியென்று சொல்லுஞ் சொல்லென்று பொருள் தந்த இடத்து என்னென்னும் எச்சந் தான் அவாவுதலின் இடையேநின்ற சொல்லென்னும் முதனிலைக்குத் தன் ஈற்றில் நிற்குஞ் செய்யுமென்னும் எச்சத்தை உணர்த்தும் உம்மென்பதனை ஏற்பித்து நின்றவாறு காண்க. தாவெனநின்றான் என்பது தாவென்று சொல்லி நின்றானென எனவெனெச்சஞ் சொல்லியென்னும் வினை கொண்டு நின்றது. இது சொல்லெச்சமன்று. இங்ஙனம் எச்ச ஈறுகளை ஏற்றலிற் சொல்லென்பது முதனிலையாயிற்று. என்னென்பதற்குஞ் சொல்லென்பதற்கும் இடைநின்ற மகர உகரம் அவ்விரண்டினையுங் கூட்டுதற்கு வந்துநின்றது. "எழுத்தெனப்படுப" "பெயரெனப்படுப" "இடையெனப்படுப" எனவும் "இலமென்கிளவி" "முழுதென்கிளவி" "கடியென்கிளவி" "மீனென்கிளவி" "தேனென்கிளவி" எனவும் வருவன எல்லாம் இக்கூறியவாறே வந்த சொல்லெச்சம்.

இனிச் செய்யுட்கண் வருஞ் சொல்லெச்சமாயின் எமக்கு எனக் "கல்கெழுகானவர்நல்குறூஉமகண் - மருந்தெனின்மருந்துவைப்பெனின்வைப்பு" என்புழி முன்னுங் "குன்றங்குருதிப்பூவின்குலைக்காந்தட்டு" என்புழி யாங் காந்தட்பூவாற் குறைவிலமெனப் பின்னுங் கூற்றுச்சொல் எச்சமாய் நிற்குமாறு உணர்க. இதற்கு விதி "சொல்லொடுங்கூறிப்பொருடுமுடிவுகொளியற்கை-புல்லியகிளவியெச்சமாகும்" என்னுஞ் சூத்திரமென்று உணர்க.

இனி "உயர்திணையென்மனார்" என்பதற்கு ஆசிரியரென வரும் பெயர் சொல்லெச்சமென்று உதாரணங் காட்டினால், அது பொருந்தாது. சூத்திரஞ் செய்யுளாதலானும் அதுதான முற்றுச்சொற்குப் பெயர் தோன்றாமலும் நிற்குமென்று முற்கூறியதாகலானும் இது சொல்லெச்சமாகாமை உணர்க. (சரு)

சசஉ. அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்.

இது மரபுவழூக் காக்கின்றது.

(இ - ள்.) அவையல் கிளவி=நன்மக்களிடைக் கூறப்படுவதல்லாத சொல்லினை: மறைத்தனர் கிளத்தல்=அவவாய்பாடு மறைத்துப் பிறவாய்பாட்டாற் கூறுக. எ-று.

உ-ம். "ஆன்முன்வரூஉமீகாரபகரம்" "கண்கழீஇவருதும்" "கருமுகமந்தி" "செம்பினேற்றை" "புலிநின்றிறந்தநீரலீரத்து" என வரும். ஈகாரபகரமென்றது ஒருயிர்மெய்யெழுத்தாகக் கூறின் அவையல்கிளவியாமென்று உயிரும்மெய்யுமாகப் பிரித்து அவவுயிர்மெய்யெழுத்தையே கூறியது. ஒழிந்தன அவவாறன்றி அவையல்கிளவிப் பொருளைப் பிறசொல்லான் உணர்த்திற்றேனும் அப்பொருளையே உணர்த்திநிற்றலின் அதனைப் பிறிதோராற்றான் மறைத்தனவேயாம்.

தகுதியாவது செத்தானெனப் பெரும்பான்மை வழங்கப்பட்டன தகுதிநோக்கித் துஞ்சினானெனச் சிறுபான்மை வழங்கப்பட்டு நிற்கும்; அவையல்கிளவியாவது இழிந்தோர் கூறும் இழிசொற்களை நன்மக்களிடை மறைத்துக் கூறப்படும்; இஃது இரண்டற்கும் வேற்றுமை. இங்ஙனம் மறைத்துக் கூறாக்கால் வழூவாதல் கருதி வழூவமைத்தார். இது பொருளிடையிடுதலென்னுந் தந்திரவுத்தி. (சசு)

சசங. மறைக்குங் காலை மரீஇய தொராஅல்.

இது மேலதற்கோர் புறனடை.

(இ - ள்.) மறைக்குங் காலை = அவ்வவையல்கிளவியை மறைத்துக் கூறுங்கால்: மரீஇயது ஒராஅல்=மேற்றொட்டு மரீஇ வழங்கியதனை மறைத்தலை நீக்குக. எ-று.

உ-ம். "மெழுகுமாப்பிதன்கண்கலுழ்நீரானே" "ஆப்பிநீரெங்குந் தெளித்துச்சிறுகாலை" யானையிலண்டம் யாட்டுப்பிழுக்கை என

வரும். தன்பொருள்மேல் நில்லாது அணிகுறித்து நின்ற "பகல் கான்றெழுதரும்பல்கதிர்ப்பரிதி" என்றாற்போல்வன தம்பொருளை உணர்த்துங்கால் மறைத்துக்கூறப்படுமாறு உணர்க. (சஎ)

சசச. ஈதா கொடுவெனக் கிளக்கு மூன்று
மிரவின் கிளவி யாகிட னுடைய.

இஃது ஒருபொருண்மேல் வரும் ஈ தா கொடு என்னும் பல சொற்கு மரபுவேறுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) ஈ தா கொடு எனக் கிளக்கும் மூன்றும் = ஈ தா கொடு என்று முன்னின்றானைநோக்கிக் கூறுஞ் சொற்கள் மூன்றும்: இரவின் கிளவி ஆகு இடன் உடைய = ஒருவன் ஒன்றை இரத்தற் கண் வருஞ் சொல்லாம் இடமுடைய. எ-று.

"ஈச்சிறகு" எனவும் "தாவினன்பொன்" எனவும் "கொடுங் கோல்" எனவும் இவை பிறபொருளையும் உணர்த்துதலின் ஆகிட னுடைய என்றார். இவை மூன்றும் இல்லெனா இரப்போர்க்கும் இடனின்று இரப்போர்க்குந் தொலைவாகி இரப்போர்க்கும் உரிய என்று உணர்க. (சஅ)

சசரு. அவற்றுள்,
ஈயென் கிளவி யிழிந்தோன் கூற்றே.

இது முதலதன் மரபுகூறுகின்றது.

(இ - ள்.) அவற்றுள் ஈ என் கிளவி = முற்கூறிய மூன்றனுள் ஈயென்னுஞ் சொல்: இழிந்தோன் கூற்று = இரக்கப்படுவோனின் இழிந்த இரவலன் அவனை இரக்குங்காற் கூறுங் கூற்றாம். எ-று.

உ-ம். "பெருமாவெனக்கொருபிடிசோறீ" எனவும் "ஈயென விரத்தலோவரிதேநீயது" எனவும் இவ்விரண்டுந் தன்மையும் முன்னிலையும் பற்றி வந்தன. "சிறியகட்பெறினேயெமக்கீயுமன்னே" என்றது உளப்பாட்டுத்தன்மையும் படர்க்கையும் பற்றி வந்தது. "இவற்கீத்துண்மதிகள்ளே" என்புழியும் இவனென்பது முன்னிலையும் படர்க்கையுமென்று உணர்க. (சகூ)

சசகூ. தாவென் கிளவி யொப்போன் கூற்றே.

இஃது இரண்டாவதன் மரபு கூறுகின்றது.

(இ - ள்.) தாவென் கிளவி = தன்மை முன்னிலைக்கு உரிய தாவென்னுஞ் சொல்: ஒப்போன் கூற்று = இரக்கப்படுவானோடு ஒக்கும் இரவலன் அவனை இரக்குங்காற் கூறுங் கூற்றாம். எ-று.

உ-ம். எனக்குச்சோறுதா எனவரும்.

"மாணலந்தாவெனவருந்தற்கண்ணும்" எனவும் "என்னலந்தாராய்" எனவுங் கொடு போல வருவன கொடுப்பான் பொருளாய்க் கொள்வான்கட் செல்லாதனவற்றை இரந்தனவாம்.

ஒப்போன்கூற்று என்றாரேனுஞ் சிறுபான்மை வலியாற் கொள்ளுமிடத்துந் தாவென்பதூஉ வருமெனக் கொள்க. "நின்னதுதாவெனநிலைதளரக் - குரங்கென்னக்குறுங்கூளியர் - பரந்தலைக்கும்பகையொன்றென்கோ" எனவரும். (௫0)

சசஎ. கொடுவென் கிளவி யுயர்ந்தோன் கூற்றே.

இது மூன்றாவதன் மரபு கூறுகின்றது.

(இ - ள்.) கொடு என் கிளவி = கொடுவென்னும் படர்க்கையாகிய முதனிலைச்சொல்: உயர்ந்தோன் கூற்று = இரக்கப்படுவோனின் உயர்ந்த இரவலன் அவனை இரக்குங்காற் கூறுங் கூற்றாம். எ-று.

உ-ம். இவற்கூண்கொடு எனவரும். (௫க)

சசஅ. கொடுவென் கிளவி படர்க்கை யாயினுந்
தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பிற்
றன்னிடத் தியலு மென்மனார் புலவர்.

இது கொடுவென்பதற்கு இடவழு அமைக்கின்றது.

(இ - ள்.) தன்னைப் பிறன்போலாயினுங் கூறுங் குறிப்பிற் கொடு என் கிளவியும் = இரப்போர்பலருந் தம்மிலொருவனைக் காட்டி இவற்குக்கொடு எனத் தம்மைப் பிறரைப்போலாயினுங் கூறி இரக்குங் கருத்தினாற் கூறப்படுங் கொடுவென்னுஞ் சொல்லும்: தன்னைப் பிறன்போலாயினுங் கூறுங் குறிப்பிற் படர்க்கைக் கிளவியும் = கூறுகின்றார் பலருந் தம்மைப் பிறரைப்போலாயினுங் கூறுங் கருத்தினாற் கூறப்படும் படர்க்கைச்சொற்களும்: தன்னிடத்து இயலும் என்மனார் புலவர் = இவ்விரண்டுந் தன்மையிடத்திற்கு உரியவாய் நடக்குமென்று கூறுவர் புலவர். எ-று.

உ-ம். இவற்கூண்கொடு எனவரும்; அங்ஙனஞ்சொல்லுவானே பெருஞ்சாத்தன்றந்தை, சொல்லப்படுவோளோ பெருஞ்சாத்தன்றாய்.

இந்நான்கு சூத்திரத்தானும் ஆண்பாலுரிமையாற் கூறினரேனும் அவை முப்பாற்கும் உரித்தாமாறு மேலே உணர்க.

சேனாவரையர் கொடுவென்பது தானே தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பினையும் உணர்த்துமென்று, அதற்குச் "சாந்துகொடு" என்பது உதாரணங் காட்டினாராலெனின், கொடுவென்பது கொடுப்பதோர்பொருளை ஏற்றற்கு உரிய நான்கனுருபுவந்தால் அதனை முடித்தற்கு வந்த சொல்லாதலின் அவற்கு இவற்கு உவற்கு என்னுஞ் சொற்களை அவாய் அவற்றை முடித்தேநிற்றல்வேண்டும்; வேண்டவே அவற்குக்கொடுவென்பது "ஏனையிரண்டும்" என்புழிக் கூறியதாம்; எனக்குக்கொடுவென்பது தன்னைப்பிறன்போற் கூறுங் குறிப்பில்லாததாயிற்று; ஆதலாற் தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பிற்றாய் வழுவமைதியும் ஏற்றுநிற்பது இவற்குக்கொடு என்னும் உதாரணமேயாயிற்றென்க. (ருஉ)

சசசு. பெயர்நிலைக் கிளவியி னாஅ குநவுந்
திசைநிலைக் கிளவியி னாஅ குநவுந்
தொன்னெறி மொழிவயி னாஅ குநவு
மெய்ந்நிலை மயக்கி னாஅ குநவு
மந்திரப் பொருள்வயி னாஅ குநவு
மன்றி யனைத்துங் கடப்பா டிலவே.

இதுவும் ஒருசார் வழுவமைக்கின்றது.

(இ - ள்.) பெயர்நிலைக் கிளவியின் ஆஅகுநவும்=தத்தம் பொருளுணர்த்தாது பெயர்ந்த நிலைமையையுடைய சொல்லான் வருஞ் செய்யுளும்: திசைநிலைக் கிளவியின் ஆஅகுநவும்=திசையான் நிலைபெற்ற பெயரான் வருஞ் சொல்லும்: மொழிவயிற் தொன்னெறி ஆஅகுநவும்=சொல்லிடத்துப் பழைய நெறியானாய் வருஞ் சொல்லும்: மெய்ந்நிலை மயக்கின் ஆஅகுநவும்=ஒருமைப்பொருளாற் கூறவே பன்மைப்பொருள் தோன்றி மயங்கும் மயக்கினான் ஆகுஞ் செய்யுட்களும்: மந்திரப்பொருள்வயின் ஆஅகுநவும் = மந்திரத்தையுடைய தெய்வங்களிடத்தே அம்மந்திரமாய் வருஞ் சொற்களும்: அன்றியனைத்தும் = ஆகிய அவ்வனைத்தும்: கடப்பாடு இல = வழங்

கியவாறே கொள்வதல்லது இலக்கணத்தான் யாப்புறவு உடைய வல்ல. எ-று.

உ-ம். "ஒள்வாள் - கறையடியானைக்கல்ல - துறைகழிப்பறியா வேலோனூரே" என்புழி வேலோனென்பது வேலையுடையோ னென்னும் பொருள் பெயர்ந்து ஒருபெயர்த்தன்மையாய் நின்றது. "செழுந்தாமரையன்னவாட்கண்" என்பதூஉம் அது. தென்னன் வடமன் குடக்கோ தென்பாண்டி என இவை திசைநிலைக்கிளவி. முதுமொழி பொருளுடையனவும் பொருளில்லனவுமென இருவ கைப்படும். "யாட்டுளானின்னுரைதாரான்" என்றது இடையன் எழுத்தொடு புணராது பொருள் அறிவுறுக்கும் மொழியைக் கூறுதலன்றி எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் மொ ழியைக் கூறான் என்னும் பொருள் தந்து நின்றது. "யாற்றுட் செத்தவெருமையீர்த்தலூர்க்குயவர்க்குக்கடன்" என்பது குயவன் சுள்ளையினெழுந்த புகையானுய மேகந் தந்த நீரான் எருமை சாதலின் அதனை இழுத்தல் குயவர்க்குக் கடனுயிற்றென ஒரு காரணம் உள் ளதுபோலக் கூறுகின்றது உண்மைப்பொருளன்றி ஒருவன் இயை பின்றிக் கூறிய சொற்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படுதலிற் பொ ருளுணர்த்தாதாயிற்று. "இல்வாழ்வானென்பான்" "திணைத்துணை யுந்தேரான்பிறனில்புகல்" "நட்பராணுறுமுடையான்" "வறியவனி ளமைபோல" என்றாற்போல்வனவெல்லாம் ஒருமைப்பொருள் கூறிற் றேனும் பன்மைப்பொருளை உணர்த்தலின் மெய்ந்நிலைமயக்கமா யிற்று. மெய் பொருள். மந்திரச்சொல் மந்திரநூல்களிற் கேட் டுணர்க.

நம்பி நங்கை என அஃறிணையைக் கூறுவனவும் "எழுது வரிக்கோலத்தார்" என்னும் பிரேளிகைச் செய்யுளிற் றிணைவழுவும் "ஒருவரைக்கூறும்பன்மைகிளவியும்" என்னுஞ் சூத்திரத்துள் அடங் குமாறும், புலியான் பூசையான் என்பன திசைச்சொற்கண் அடங் குமாறும் உணர்க. வெண்கொற்றப்படைத்தலைவனுஞ் சிறப்பினுகிய பெயர்க்கண் அடங்கும். (ருஅ)

சருo. செய்யா யென்னு முன்னிலை வினைச்சொற் செய்யென் கிளவி யாகிட னுடைத்தே.

இஃது ஓசைவேறுபாட்டான் ஒருசொல் ஒருசொல்லாமென் கின்றது.

(இ - ள்.) செய்யாய் என்னும் முன்னிலைவினைச்சொல் = ஒரு தொழிலினை மேற்செய்யாயென்னும் மறையாகிய முன்னிலைவினைச் சொல்: செய் என் கிளவி ஆகு இடன் உடைத்து = அத்தொழிலினைச் செய்யென்னும் உடம்பாட்டு முன்னிலைவினைச்சொல்லாம் இடத்தினையுடைத்து. எ-று.

இடனுடைத்து என்றதனான் உண்ணாயென்பது மறையாய் வருதலே பெரும்பான்மையாயிற்று. அது சிறுபான்மை உடம்பாட்டின்கண் வருங்கால் வேண்டிக்கோடற் பொருண்மைக்கண் வருமென்று உணர்க. உண் தின் என்பன முதலிய முன்னிலையேவல் உயர்ந்தான் இழிந்தானை ஏவுதற்கண் வரும். "அறியாய்வாழிதோழி***பொருளேகாதலர்காத - லருளேகாதலரென்றிநீயே" என்னும் அகப்பாட்டினுள் அறியாயென்றது காதலர் அருளே காதலித்திருப்பாரென்று நீ கூறுகின்றமையாற் காதலர் கருத்தினை நீ அறியாயென முன்னிலைமறையாய் நின்றவாறும், "அறியாய்வாழிதோழிபொறிவரிப் - பூநுதல்யானையொடு" என்னும் அகப்பாட்டினுள் அறியாயென்றது "காமங்கலந்தகாதலுண்டெனி - னன்றுமனதுநீநாடாய்கூறுதி" என்றதனோடு இயையுங்கால் அவனோடு கூட்டமுண்டெனின் அது மிகநன்று அதனை நீ ஆராயாமற்கூறுகின்றாய் அதனை நின் மனத்தான் ஆராய்ந்துபாராயென வேண்டிக்கோடற் பொருள் தந்து முன்னிலையேவலுடம்பாடாய்நின்றவாறும் உணர்க. இங்ஙனம் மறைச்சொல் உடம்பாட்டுப்பொருளைப் படுத்தலோசையாய் உணர்த்திநிற்றல் சான்றோர் செய்யுளுட் பெரும்பான்மையென்று உணர்க.

இனி வழக்கினுள்ளும் இந்நாளெம்மில்லத்துண்ணாய் இப்பொழுதுசொல்லாய் என்றாற்போலப் பெரும்பான்மையும் வழங்குமாறு உணர்க.

உண்பாயென்னுஞ் சொல் ஓசைவேற்றுமையான் முற்றுந் தொழிற்பெயரும் வினையெச்சமும் வியங்கோளுமாய் நின்றாற்போலவுந் தபு என்பது ஓசைவேற்றுமையான் ஒன்றனைக்கொல்லென்றும் நீ சாவென்றும் நின்றாற்போலவும் மறைச்சொல் ஓசைவேற்றுமையான் உடம்பாடு உணர்த்திற்றென்று உணர்க. அங்ஙனம் உணர்த்திற்றேனும் மறையுணர்த்தும் ஆகாரம் உடம்பாடுணர்த்துமோவெனின், அதனை ஏகாரம் உண்பேனே உண்ணேனே என விதிக்கும் மறைக்கும் வந்தாற்போலக் கொள்க.

மறையென்பது செய்யாயென்னும் வாசகத்தாற் சூத்திரஞ் செய்தமையாற் பெற்ரும். செய்யென்பது விதிவினையே உணர்த்து தல்பற்றிச் செய்யென்கிளவி என்ருர்.

இனிச் சேனுவரையர் செய்யாயென்னும் முன்னிலைமுற்றுச் சொல் ஆயென்னும் ஈறுகெடச் செய்யென்னும் முன்னிலையேவன் முற்ருய் நிற்குமென்று பொருள்கூறி, உண்ணுய் தின்னுய் நடவாய் கிடவாய் என்பன ஈறு கெட்டு உண் தின் நட கிட என நிற்கு மென்ருராலெனின், உண்ணுயென்பதும் உண்ணென்பதுந் தம்மிற் பொருள்வேறுபாடு உடைமையின் உண்ணுயென்பதன் பொருளை உண்ணென்பது உணர்த்தி ஈறு கெட்டு நிற்குமென்றல் 'பொருந் தாதாம். நீகலாய்த்திராது உண்ணுயென்ற பொருளை உண்ணென்றது தாரரது ஏவற்பொருட்டாய் நின்றவாறு காண்க. அன்றியும் இவ் உண் தின் நட கிட என்பனவற்றை முதனிலையென்றே தாமுங் கூறிப்போந்தாராதலின் இவை முதனிலையாய் நிற்குமிடத்துக் கரு செய் வெள் என்னும் முதனிலைகள் பண்புமாத்திரையே உணர்த்தி ஈறு கெடுதலும் பொருளுணர்த்துதலுமின்றி நின்ருற்போல இவை யும் வினைமாத்திரையே உணர்த்தி ஈறுகெடுதலும் பொருளுணர்த் துதலுமின்றி நிற்றல்வேண்டும், இவை அங்ஙனம் நில்லாது ஆயென் னும் ஈறுகெட்டு முன்னிலையேவற் பொருண்மையே உணர்த்தி நிற் குமென்றலின் முதனிலையென்றல் பொருந்தாதாம். ஆகவே வினைச் சொற்கு முதனிலைகள் உண் தின் நட கிட முதலிய என்ரும். இவர் பிறர்மதமே கூறினுர், இஃது ஆசிரியர்க்குக் கருத்தன்மை உணர்க. அன்றியும் உண் தின் நட கிட முதலியன முன்னிலை உணர்த்தி நிற்குமேல் உண்டான் உண்டேன் என உண்ணென்னும் முதனிலையில் விரிந்துநின்ற ஈற்ருன் உணர்த்தும் படர்க்கைக்குந் தன்மைக்கும் வழுவாமாறு காண்க. (௫௪)

௪௫௫. முன்னிலை முன்ன ரீயு மேயு
மந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

இது பொருள் தரும் இடைச்சொற்களுட் சில நிலைவேறு படுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) முன்னிலை முன்னர் ஈயும் ஏயும் = முன்னிலைவி னைச்சொல் முன்வரும் ஈகாரமும் ஏகாரமும்: அந்நிலை மரபின் மெய் ஊர்ந்து வருமே = அம்முன்னிலைச்சொற்கட் தாம் நிற்றற்கு உரிய முறைமையையுடைய மெய்களை ஊர்ந்துவரும். ௭-று.

முன்னிலைச்சொல்லாவன செல் நில் புகு உண் தின் உரை என்றாற்போல வருவனவாம்.

உ-ம். "சென்றீபெருமநிற்றகைக்குநர்யாரோ" "அட்டிலோலை தொட்டனைநின்மே" எனவரும். இவற்றுள் ஈகாரம் புக்கீ உண்டீ உரைத்தீ சென்றீ எனக் கடதறவை ஊர்ந்துவரும் என்பது தோன்ற 'அந்நிலைமரபின் மெய்' என்றார். ஏகாரம் மகரம் ஊர்ந்து வரும். இவை நிலைமொழி வருமொழி செய்து புணர்க்கப்படாமையிற் புணர்ச்சிவிகாரமின்றி முன்னிலைச்சொல்விகாரமாயிற்று.

உண்பாயென்பதற்கு மறையாகிய உண்ணாயென்னுஞ் சொல் படுத்தலோசையான் உண்டலைச்செய்யென்னும் பொருள் தந்து நிற்றலிற் "செய்யென்கிளவியாகிடனுடைத்து" என்று சூத்திரஞ் செய்த தன்பின்னர்ச், சொல்லுதலைச் செய நிற்றலைச் செய்யென இச் சூத்திரத்தின் முதனிலைகளுஞ் செய்யென்னும் வாசகத்தினையே உணர்த்தி நிற்குமென்பது கருதிச் "செய்யென்கிளவியாகிடனுடைத்து" என்றதன்பின் இதனை வைத்தார். (௫௫)

சரு௨. கடிசொ லில்லைக் காலத்துப் படினே.

இது காலந்தோறும் புதிதாகத் தோன்றிய சொற்களுங் கொள்க என்கின்றது.

(இ-ள்.) கடிசொல் இல்லை = இவை தொன்றுதொட்டு வந்தன அல்ல என்று கடியப்படுஞ் சொற்கள் இல்லை: காலத்துப் படினே = அவ்வக்காலத்துத் தோன்றி நன்மக்கள் வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளும் வழங்கப்பட்டு வருமாயின். எ-று.

உ-ம். சட்டி சள்ளை சமை எனவும் "சான்றோர்சமழ்த்தனர்நிற்பவே" "சையலாய்சமழாதுரையென்றதே" எனவுஞ் சகரம் மொழிக்கு முதலாய்வந்தவாறு காண்க. இவை "சகரக்கிளவியுமவற்றோரற்றே-அஐஔவெனுமூன்றலங்கடையே" என ஆசிரியர் விலக்கலின், அக்காலம் மொழிக்கு முதலாகாது விலக்கிய சகரம் பிற்காலத்து வழங்கியதாயிற்று. ஞெண்டென்பது ஞண்டாய்ப் பின்னர் நண்டென மரீஇயிற்று.

இச்சூத்திரம் எதிர்பொருளுணர்த்தலென்னும் உத்தியாம். இவ்வாறு பின்னர் வழங்குவன எல்லாவற்றிற்கும் இதுவே விதி.

இனி ஒன்றெனமுடித்தலாற் புதியன தோன்றினாற்போலப் பழையன கெடுவனவும் உள. அவை அழன் புழன் முதலியனவும் எழுத்திற் புணர்ந்தசொற்கள் இக்காலத்து வழங்காதனவுமாம். (ருசு)

சருங. குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி யறிதல்.

இது செய்யுள்விகாரங் கூறுகின்றது.

(இ - ள்.) குறைச்சொற் கிளவி = குறைக்கப்படுஞ்சொல்லாகிய சொற்கள்: குறைக்கும்வழி அறிதல் = குறைக்குமிடம் அறிந்து குறைக்க. எ-று.

குறைக்கும்வழியறிதலென்றது ஒருசொற்குத் தலை இடை கடையென இடம் மூன்றே, அவற்றுள் இன்னுழிக் குறைக்கப்படும் இச்சொல்லென்று அறிந்து குறைக்க என்றவாறும்.

உ-ம். "மரையிதழ்புரையுமஞ்செஞ்சீறடி" எனவும், "வேதின வெரிநினோதிமுதுபோத்து" எனவும் "நீலுண்டுகிலிகைகடுப்பப்பலவுடன்" எனவும் மூன்று இடத்துங் குறைத்தவாறு காண்க. ஈது ஒரு சொல்லின்கட் சிறிது நிற்பச் சிறிது கெடுந்தலாதலின் முழுவதுங் கெடுத்தலாகிய தொகுக்கும்வழித் தொகுத்தலின் வேறுதல் அறிக.

குறைச்சொற்கிளவியெனவே இவ்விதி செய்யுட்கணென்பது பெறுதும். இது பொருளிடையிடுதலென்னும் உத்தியாம். (ருஎ)

சருச. குறைத்தன வாயினு நிறைப்பெய ரியல.

இது மேலதற்கோர் புறனடை.

(இ - ள்.) குறைத்தன ஆயினும் = செய்யுளகத்துச் சொற்கள் குறைக்கப்பட்டன ஆயினும்: நிறைப்பெயர் இயல = அவை பொருளுணர்த்தும்வழி நிறைந்துநின்ற பெயரின் இயல்பையுடையவாம். எ-று.

என்றது முற்கூறிய உதாரணங்கள் தாமரை ஓந்தி நீலமென நிறைந்தபெயரின் பொருள்களைத் தந்தேநிற்கும் என்றவாறும். "கண்டிரண்முத்தங்கொண்டுவந்து" என்புழி வந்தன்றென்னும் வினையுஞ் "சென்றாரென்பிலர்தோழி" என்புழி என்பாரிலரென்னும் வினையுஞ் சிறுபான்மை குறைத்தல் தன்னினமுடித்தலாற் கொள்க. (ருஅ)

சருரு. இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே.

இது விசேடிக்குஞ் சொல் இவ்வாறு நிற்குமென்கின்றது.

(இ - ள்.) வேற்றுமைச்சொல் எல்லாம் = முடிக்குஞ் சொல்லை விசேடித்து நிற்குஞ் சொற்களெல்லாம்: இடைச்சொல் = முடிக்கப் படுஞ் சொற்கும் முடிக்குஞ் சொற்கும் நடுவே வருஞ் சொல்லாய் நிற்கும். எ-று.

வேற்றுமைச்சொல் வேறுபாட்டினைச்செய்யுஞ்சொல் என விரியும். எழுவாயை முடிக்கும் பயனிலைக்கும் முற்றை முடிக்கும் பெயரிற்கும் வினையெச்சத்தை முடிக்கும் வினைக்கும் பெயரெச்சங்களை முடிக்கும் பெயர்கட்கும் இடையே வருதலின் இடைச்சொல் என்றார்.

உ-ம். "கண்ணிகார்நறுங்கொன்றை * * * யூர்திவால்வெள்ளேறே" என்புழிக் கொன்றையையும் ஏற்றையும் இடைவந்தசொற்கள் விசேடித்து வந்தன. "ஈந்தையோனேபாண்பசிப்பகைஞன்" என்புழி ஈந்தையோனென்னும் முற்றிற்கு முடிபாகிய பகைஞனென்னும் பெயரை இடையினின்ற சொல் விசேடித்து நின்றது. "இழிபிறப் பினோனீயப்பெற்று - நிலங்கலனாகவிலங்குபலிமிசையும்" என்புழிப் பெற்றென்னுஞ் செய்தெனெச்சத்திற்கு முடிபாகிய மிசையுமென்னும் வினையை இடைநின்ற சொற்கள் விசேடித்து நின்றன. "ஏந்தெழின்மழைக்கணிளையோன்மடுப்பத் - தேம்பாய்தேறனீசிறிதுணினே" என்புழி மடுப்பவென்னுஞ் செயவெனெச்சத்திற்கு முடிபாகிய உணினென்னும் வினையை இடைநின்ற சொற்கள் விசேடித்துநின்றன. "வெற்பராடும்வெற்புச்சேர்பிருக்கை-பயம்பிற்கொள்ளாப்பைங் கண்யானை" என்புழிச் செய்யுமென்னும் பெயரெச்சத்திற்கும் அதன் மறைக்கும் முடிபாகிய இருக்கையையும் யானையையும் இடைவந்த சொற்கள் விசேடித்து நின்றன. "குரங்குளைப்பொலிந்தகொய்சுவற் புரவி நின்றொடுதூக்கியவெண்வேற்செழியன்" என்புழிச் செய்த என்னும் பெயரெச்சங்கட்கு முடிபாகிய புரவியையுஞ் செழியனையும் இடைவருஞ் சொற்கள் விசேடித்து நின்றன. சான்றோர் செய்யுட்கண் இங்ஙனம் அச்சொற்களை விசேடித்து வருதல் பெரும் பான்மையென்று உணர்க. பண்பும் உடைமையும் முதலிய இடை வந்தால் அவை விசேடித்து நிற்குமாறும் உணர்க.

இனி இடைச்சொற்களெல்லாந் தாம் அடைந்த பெயர்வினைகளின் பொருள்களை வேறுபடுத்தி நிற்றலின் வேற்றுமைச்சொல் லென்று சொல்லப்படுமென்று பொருள்கூறினாரால் உரையாசிரியரெனின், அவை வேறுபாடுசெய்தல் அவ்வோத்திற் கூறிய சூத்தி

ரங்களின் பொருளால் ஆண்டுப் பெறப்படுதலின் ஈண்டுக் கூறல் கூறி யதுகூறலாமாகலின் அதுபொருந்தாதென்க. "கூரியதோர்வாண்மன்" என்புழித் திடபமின்றென்பது வாளை வேறுபடுத்தினவாறு அச்சூத் திரத்தாற்பெற்றும். பிறவற்றையும் இவ்வாறேகொள்க.

இனிச் சேனாவரையர் இடைச்சொல்லெல்லாம் விசேடித்து நிற்குமென்றாராலெனின், "கொன்னூர் துஞ்சினும்" "கொன்னே கழிந்தன் றிளமையும்" என்றாற்போல்வன சில இடைச்சொற்கள் விசேடித்தலன்றி எல்லா இடைச்சொற்களும் விசேடித்துநில்லாமை ஆண்டு அவர் காட்டிய உதாரணங்களை நோக்கி உணர்க. (ருகூ)

சடுகூ. உரிச்சொன் மருங்கினு முரியவை யுரிய.

இஃது உரிச்சொற்கும் விசேடித்தல் உண்டென்கின்றது.

(இ - ள்.) உரிச்சொல் மருங்கினும்=உரிச்சொல்லிடத்தும்: உரி யவை உரிய=விசேடிக்குஞ்சொல்லாதற்கு உரியன உரியவாம். எ-று.

எல்லாம் உரியனவாகா எனவே உரிச்சொற்கள் விசேடித்தும் விசேடிக்கப்பட்டும் நிற்பன உளவென்பது பெற்றும்.

உ-ம். உறுகால் தவப்பல நனிசெய்தது ஏகல்லடுக்கம் என்பன ஒன்றை விசேடித்தல்லது வாரா. குருமணி விளங்குகுரு கேழ்கிள ரகலம் செங்கேழ் செல்லனோய் அருஞ்செல்லல் இன்னற்குறிப்பு பேரின்னல் இவை தாம் ஒன்றனை விசேடித்தும் பிற தம்மைவிசே டிக்கப்பட்டும் நின்றன. குருவிளங்கிற்று செல்லறீர்க எனத் தாமே நின்று வினைகொள்வன விசேடிக்கப்படுந் தன்மையுடையன என்று உணர்க. பிறவும் இவ்வாறு வருவன உளவேற் கண்டுகொள்க.

மருங்கினுமென்ற உம்மையை எச்சவும்மையாக்கி இடைச்சொற் களினும் விசேடித்து நிற்றற்கு உரியன சில உள, எல்லாம் உரியன வாகாவெனப் பொருளுரைத்துக் "கொன்னூர் துஞ்சினும்" "கொன் முனையிரவூர்போல" "கொன்னேகழிந்தன் றிளமையும்" என்றாற் போல வருவன பிறவுங் கொள்க.

முன்னிற் சூத்திரத்தாற் கூறிய விசேடித்தல் உரிச்சொற்கும் இடைச்சொற்கும் ஏற்றலின் அவற்றையும் ஈண்டுக் கூறினார். விசே டித்தல் இடைச்சொற்குச் சிறுபான்மையாகலின் அதனை உம்மை யாற் றழீஇயினார். (சுo)

சுருஎ. வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய.

இது வினையெச்சம் முதலியன வேறுபெயர் பெறுமென் கின்றது.

(இ - ள்.) வினையெஞ்சு கிளவியும்=வினையெச்சமாகிய சொற் களும்: உம்மையாற் பெயரெச்சமாகிய சொற்களும் முற்றுச்சொற்க ளும்; வேறு பல் குறிய=முற்கூறிய பெயர்களோடு வேறுவேறாகப் பலபெயர்களையும் உடையவாம். எ-று.

உ-ம். "பெயர்த்தனென்முயங்கயானே" இது வினையெச்சத் தன்மைத் தெரிநிலைமுற்று. "வந்தனைசென்மோவளைமெய்பரப்ப" இது வினையெச்ச முன்னிலைத் தெரிநிலைமுற்று. "முகந்தனர்கொ டுப்ப" "மோயினளுயிர்த்தகாலை" இவை வினையெச்சப் படர்க் கைத் தெரிநிலைமுற்று. "ஒலிசினைவேங்கைகொய்குவஞ்சென் றுழி" இது வினையெச்ச உளப்பாட்டுத் தன்மைத் தெரிநிலைமுற்று. "வறு வியென்பெயர்கோவாண்மேம்படுந" இது வினையெச்சத் தன்மை வினைக்குறிப்புமுற்று. "நன்னர்நறுநுதனயந்தனைநீவி" "வெள்வேல் வலத்திர்" இவை வினையெச்ச முன்னிலை வினைக்குறிப்புமுற்று. "சுற்றமைவில்லர்" "சுரிவளர்பித்தையர்" "அற்றம்பார்த்தல்குங்கடுங் கண்மறவர்" இவை வினையெச்சப் படர்க்கை வினைக்குறிப்புமுற்று. இன்னும் வேறுவேறு பெயர்பெற்று வருவனவுங் கொள்க.

"எல்வளைநெகிழ்த்தோர்க்கல்லலுறீஇயர்" "உள்ளோன்றோழிப டீஇயரென்கண்ணே" "கேட்டீவாயாயின்" என்பன வினையெச்சவி னைத் திரிசொல். இங்ஙனம் வினையெச்சந் திரிந்து நிற்கும் எனவே, ஈறு திரிந்து நிற்குமென வினையியலுட் காட்டியவற்றிற்கும் இதுவே விதியாயிற்று.

இனிப் பெயரெச்சம் வேறுபெயர் பெறுமாறு "அவர்தம்முள் ளான்றருமதத்தனென்பான்" எனவும் "கச்சினன்கழலினன்றேந் தார்மார்பினன் - வகையமைப்பொலிந்தவனப்பமைதெரியற் - சுரிய லம்பொருநனைக்காணிரோ" எனவும் "குவளையேயளவுள்ளகொழுங் கண்ணாள்வளையே" எனவும் "புரிமாலையர்பாடினியரும்" எனவும் வந்தன உயர்திணை முப்பாற்கண்ணும் வந்த பெயரெச்சப் படர்க்கை வினைக்குறிப்புமுற்று. "பெருவரைமிசையதுநெடுவெள்ளருவி" "தெ ரிநடையமாகளிறுதன்றுள்பாடுநர்க்குநன்கருளியும்" இவை அஃறிணை இருபாற்கண்ணும் வந்த பெயரெச்சப் படர்க்கை வினைக்குறிப்பு

முற்று. "பெருவேட்கையேனெற்பிரிந்து" இது பெயரெச்சத் தன்மை ஒருமை வினைக்குறிப்புமுற்று. "கண்புரைகாதலேமெம்முள்ளான்" இது பெயரெச்சத் தன்மை உளப்பாட்டுப் பன்மைவினைக் குறிப்புமுற்று. "உலங்கொடோளினையொருநின்னால்" இது பெயரெச்ச முன்னிலை ஒருமைவினைக்குறிப்புமுற்று. "வினைவேட்கையிர் வீரர்வம்மின்" இது பெயரெச்ச முன்னிலைப் பன்மைவினைக்குறிப்பு முற்று. இன்னும் வேறுவேறு பெயராய் வருவனவுங்கொள்க.

பின்பு நூல்செய்தோர் வினையெச்சமுற்றென்று பெயர்கூறாமல் முற்றுவினையெச்சமென்று பெயர்கூறினாரேனும் பெயரெச்சவினைக் குறிப்புமுற்றென்று பெயரெச்சத்திற்குக் குறியிட்டு ஆளவேண்டுதலின் அதற்கும் அப்பெயரே கொள்ளவேண்டுமென்று உணர்க.

இனிப் பாயுந்து தூங்குந்து எனவும் "சினைஇயவேந்தனெயிற் புறத்திறுத்த" எனவும் "கடைஇயநின்மார்பு" எனவும் வருவன பெயரெச்சவினைத்திரிசொல்.

இனிக் "கண்ணும்படுமோவென்றிசின்யானே" இது தன்மை முற்றுவினைத்திரிசொல். "ஈங்குவந்தீத்தந்தாய்" இது முன்னிலை முற்றுவினைத் திரிசொல். "புகழ்ந்திகுமல்லரோ" இது படர்க்கை முற்றுவினைத்திரிசொல்.

இவ்வாறு மூவகைப்பெயர்களும் வேறுவேறு பெயர்பெற்று நிற்றல் கூறவேண்டுதலின் இதனை இவ்வோத்தினுட் கூறினோர். இங்ஙனம் பெயர்கள் கூறவே அவற்றிற்கு உரிய இலக்கணமுங் கூறினாராயிற்று.

இனி ஓரெச்சம் ஓரெச்சமாய்த் திரிந்துவருவனவும் வேறேபெயர் பெறுதலின் அவற்றிற்கும் இதுவே இலக்கணமாம். இவற்றுள்ளும் விசேடித்து நிற்பனவும் உள என்பது உணர்த்துதற்கு "உரிச்சொன்மருங்கின்" என்னுஞ் சூத்திரத்தின்பின் இதனை வைத்தார்.

இதனை விரவுவினையாகிய வினையெச்சமும் பெயரெச்சமும் பாலும் இடமுங் காட்டிநிற்றலின் முற்று எச்சமாய்த் திரிந்ததென்னாமோ வெனின், என்னாம்; "அளிநிலைபெறாஅது" என்னும் அகப்பாட்டினுள் ஒண்ணுதல், குறுகவந்து, முகமாறிக்கொள்ளாது, தனித்து, வடுக் கொளுத்தி, நக்கு, முகத்தினுரைத்து, ஒற்றி, மோந்து, உயிர்த்தகாலை என வினையெச்ச அடுக்காகச் செய்யுள் செய்கின்றவர் தம் பேரறி

வுடைமை தோன்ற எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே கிடந்து பயனிலையை விசேடிக்கும் எச்சங்களுட் சிலவற்றைத் திரித்துப் பாலும் இடமுங் காட்டி நிற்பச் செய்யுள் செய்தாராகலின். இனிப் பெயரெச்ச வினைக்குறிப்புமுற்றிற்கும் அவர்தம்மிடத்தேநின்ற தரு மதத்தன் புரிமாலையணிந்த பாடினியர் எனப் பெயரெச்சம் விரிந்த வாறு காண்க.

பெரும்பான்மை இங்ஙனஞ் செய்யுள் செய்தற்குக் காரணம் விரவுவினை பிரிவுவேறுபடூஉஞ் செய்தியவாய்ப் பிரிந்து நிற்குங்காற் பாலும் இடமுங் காட்டுந் தன்மையுந் தம்முள்ளே உடையவாயி னமையின், அவ்வெச்சம் முற்றாய்த் திரிந்ததென்பது உணர்த்துதற் கன்றே இடையிடை வினையெச்சவாய்பாடும் உடனோதி எல்லா வற்றிற்கும் ஒருவினையே முடிபுகூறிற்றென்று உணர்க. அன்றி யும் முற்று எச்சமாய்த் திரிந்து அடுக்கியுந் தனித்தும் வந்து வினை கோடல் ஆசிரியர்க்குக் கருத்தாயிற், சிறுபான்மையாய் வினைகொள் ளும் முற்றிற்குச் சூத்திரஞ் செய்தாற்போல முற்றுச்சொல் அடுக் கியும் அடுக்காதும் வந்து பெயரோடு முடிதற்கு "அவைதாந் தத் தங்கிளவி" என்று சூத்திரஞ் செய்தாற்போல முற்றுச்சொல்லே எச்சமாகி அடுக்கியுந் தனித்தும் வந்து வினைகொள்ளுமென்றாற் போல ஒரு சூத்திரஞ் செய்திலராம்; அங்ஙனம் பெரும்பான்மை யும் வழங்குவதோர் இலக்கணத்திற்குச் சூத்திரஞ் செய்யாமையின் அவர்க்கு அது கருத்தன்மை உணர்க. அன்றியும் வினையெச்சம் முற்றாய்த் திரிந்து பின்னும் அதன் பொருளுணர்த்தி நிற்றல் "இன் றியென்னும்வினையெஞ்சிறுதி" என்னுஞ் சூத்திரத்தானும் உணர்க. இவ்விலக்கணத்தினது நுண்மையை உணர்தலாற்றாப் பின்னுள் ளோர் "முற்றேயெச்சமாகலுமுரித்தே" எனச் சூத்திரஞ் செய்தார். அவர் கருத்தைப்பற்றிச் சேனாவரையரும் முற்றெச்சமாமென்றார்; அது பொருந்தாமை இக்கூறியவாற்றானுஞ் சான்றோர்செய்யுட்கு முன்னுள்ளோர் கூறிய உரைகளானும் உணர்க.

இனி ஞாயிறுபட என்னுஞ் செயவெனெச்சத்து அகர ஈறு பட்டு என உகர ஈறாய்த் திரிந்துநின்றது என்றாரால் உரையாசிரிய ரெனின், ஞாயிறுபடவந்தானென்பது ஞாயிறுபடாநிற்கவந்தானென நிகழ்காலம் உணர்த்துதல் வழக்காதலின் அது திரிந்து இறந்தகாலம் உணர்த்துமென்றல் பொருந்தாமை உணர்க. (கூக)

சருஅ. உரையிடத் தியலு முடனிலை யறிதல்.

இது தொடர்மொழிப் பொருள்வேறுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) உரையிடத்து இயலும் = ஓரெச்சவாய்பாடாகக் கூறும் இடத்ததுதானே மற்றோரெச்சவாய்பாட்டிற்கும் ஏற்று நடக்கும்: உடனிலை அறிதல் = கூட்டத்தினை அறிந்து தொடர்மொழிக்கு ஏற்ப வெவ்வேறாகப் பொருளுரைக்க. எ-று.

உ-ம். "பெண்மைசுட்டியவுயர்திணைமருங்கி - னாண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவியும்" என்புழிப் பெண்மை சுட்டவேண்டி ஆண்மைதிரிந்த என வினையெச்சவாய்பாடாயும் பெண்மைசுட்டிய பெயர்நிலைக்கிளவி எனப் பெயரெச்சவாய்பாடாயும் நின்றவாறு காண்க. "ஆடியகூத்தனும்வந்தானவனோடு - கூடியகூத்தியையுங்கொண்டு" என்றாற்போல்வனவுஞ் சான்றோர் செய்யுட்கண் இவ்வாறு வருவனவும் பிறவும் இதனான் முடித்துக்கொள்க. இன்னும் உடனிலையென்றதனானே ஓடிவந்தான் விரைந்துபோயினான் என முடிக்கும் வினையோடு உடனிகழ்வனவுங் கொள்க.

இச்சூத்திரத்திற்கு வழக்கிடத்து உடனிற்கற்பால அல்லனவற்றது உடனிலை போற்றுக என்று பொருள்கூறி இந்நாழிக்கு இந்நாழிசிறிது பெரிது என்பது காட்டினாரால் உரையாசிரியரெனின், அது சிறப்பின்கண்வரும் நான்காம் வேற்றுமைப்பொருளாய் அடங்குதலானுஞ் சிறிதென்பது பெருமையை விசேடித்து நிற்றலானும் அதுதான் முன்னர்ப் பெறப்பட்டமையானும் இவ்வெச்சமயக்கங் கூறுதலே ஆசிரியர் கருத்தென்று உணர்க. (சுஉ)

சஙுங. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே
யின்ன வென்னுஞ் சொன்முறை யான.

இது வினைக்குறிப்புச்சொல் பொருள் தரும் வேறுபாடு கூறுகின்றது.

(இ - ள்.) இன்ன என்னுஞ் சொல் முறையான = இத்தன்மைய என்று சொல்லப்படும் வினைக்குறிப்புச்சொற்கள் பொருள் தரும் முறைமையிடத்து: முன்னத்தின் உணருங் கிளவியும் உள = அவற்றுட் சில நுண்ணுணர்வுடையோர்க்குக் குறிப்பினாற் தெரிநிலைப்பொருள் உணரப்படுஞ் சொற்களும் உள அவற்றை உணர்க. எ-று.

உம்மையாற் தெரிநிலைப்பொருள் உணரப்படாத சொற்களும் உள என்று உணர்க. தெரிநிலைப்பொருள் உணர்த்துவன வினை

யெச்சவினைக்குறிப்புமுற்றும் பெயரெச்சவினைக்குறிப்புமுற்றுமாம். தெரிநிலைப்பொருள் உணர்த்தாதன ஏனைவினைக்குறிப்புமுற்றும்.

முருகாற்றுப்படையுட் "கச்சினன்கழலினன்செச்சைக்கண்ணி யன் - குழலன்கோட்டன்குறும்பல்லியத்தன் - தகரன்மஞ்ஞையன் புகரில்சேவலங் - கொடியனெடியன்றொடியணிதோள - னரம்பார்த் தன்னவின்குரற்றொகுதியொடு - குறும்பொறிக்கொண்டநறுந்தண் சாயன் - மருங்கிற்கட்டியநிலனேர்புதுகிலினன் - முழவுறழ்தடக்கை யினியலவேந்தி - மென்றோட்பல்பிணைதழீஇத்தலைத்தந்து - குன்று தொறாடலுநின்றதன்பண்பே" என்புழி வந்த வினையெச்சவினைக் குறிப்புமுற்றுக்கள் ஆக்கம்பெற்றுப் பொருளுணர்த்துங்காற் கச்சைக் கட்டிக் கழலையணிந்து கண்ணியைச்சூடிக் குழலையூதிக் கோட்டைக் குறித்துப் பல்லியங்களையெழுப்பித் தகரைப்பின்னிட்டு மயிலையே றிக் கொடியையுயர்த்து வளர்ந்து தோளிலே தொடியையணிந்து துகிலையுடுத்து ஏந்தித் தழீஇத் தலைக்கைகொடுத்து ஆடலும் அவற்கு நிலைநின்ற பண்பெனச் செய்தெனெச்சப்பொருளை உணர்த்தி நின்ற வாறு காண்க. முன்னர்க்காட்டிய பெயரெச்சவினைக்குறிப்புமுற் றுக்கட்குந் தெரிநிலைவாசகமாக விரித்துப் பொருள்கூறுதற்கு ஏற் பனவற்றை உணர்ந்து அவற்றிற்கு ஏற்கத் தெரிநிலையாகப் பொருள் கூறிக்கொள்க. "நல்லனறிவுடையன்செவ்வியன்சான்றோர்மகன்" எனக் குறிப்புமுற்று அடுக்கிப் பெயரோடு முடிபுழி நல்லனாயிருப் பன் அறிவுடையனாயிருப்பன் செவ்வியனாயிருப்பன் சான்றோர் மகன் என விரித்துப் பொருள்கூறியக்காலும் அத்தெரிநிலைப் பொ ருளுணர்த்தாதவாறு காண்க.

இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர் சொல்லுவான் குறிப்பாற் பொருளுணரப்படுஞ் சொற்களும் உள இப்பொருள் இத்தன்மைய என்று கூறுதற்கண்ணெனப் பொருள்கூறிச் செஞ்செவி வெள் ளொக்கலர் என்பது காட்டினாரால் எனின் அது குறிப்பிற்றோன் றலினது வேறுபாடாமென மறுக்க. (சு௩)

சசுO. ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்.

இஃது ஒருசொல் இருபொருள் உணர்த்துவதோர் மரபுவழு அமைக்கின்றது. இதனை ஒருசொல் இருபொருட் பிரிவில வரை யாரென மாறுக.

(இ - ள்.) இருபொருள் ஒருசொல் பிரிவில் வரையார்=ஒரு சொல் ஒருகாற் கூறுதற்கண்ணே இரண்டுபொருளைப் புலப்படுத்தி இரண்டற்கும் பிரிவிலவாய் நிற்றலைச் சிறப்புடையவென்று கொள்வர் ஆசிரியர். எ-று.

பிரிவில என்றது இரண்டற்கும் ஒப்ப நிற்றலை.

உ-ம். "குழல்வளர்முல்லையிற்கோவலர்தம்மொடு - மழலைத்தும்பி வாய்வைத்தூத" என்புழிக் குழல்வளர்முல்லையென்று கூறியபொழுதே ஆயர் ஊதுங் குழலிலே எழுந்த முல்லையென்னும் பண்ணையும் மயிரிலே கிடந்த முல்லையென்னும் பூவையும் ஒருகாலத்தே புலப்படுத்தி இரண்டற்கும் பிரிவிலவாய் நின்றவாறு காண்க. இஃது ஒருசொல் ஒருகாற் கூறுதற்கண் இரண்டுபொருளை உணர்த்துதல் வழுவேனும் அமைகவென அமைத்தார். இதனை உவமவியலுள் "ஒரீஇக்கூறலும்" என்னுஞ் சூத்திரத்துச் செய்யுட்கண் இலக்கணமாகக் கூறுமாறும் உணர்க. இங்ஙனஞ் சான்றோர் செய்யுட்களுட் பல இடத்தும் வருமாறு உணர்க.

வரையாரென்றதனான் இவை விகாரப்பட்டு நிற்பனவுங் கொள்க. "பாடுதும்பாவைபொற்பே" என்றவழி ஒருகாற் பொலிவே என்று ஏகார ஈறும் ஒருகாற் "பொன்னுற்செய்தபேய்" என்று யகர ஈறும் விகாரமாயும் நின்றவாறு காண்க. இவ்வாறு வருவன பிறவும் உணர்க.

இன்னும் உய்த்துக்கொண்டுணர்தலென்னுந் தந்திரவுத்தியான் இச்சூத்திரத்திற்குச் செவ்வனே கிடந்தவாறும் பொருள்கொள்க. ஒருபொருளையே உணர்த்திநிற்கும் இரண்டுசொற்கள் தம்மிற் பிரிதலின்றி நிற்பனவற்றை நீக்கார் கொள்வர் ஆசிரியர். எ-று.

உ-ம். நிவந்தோங்குபெருமலை துறுகன்மீமிசை என்றாற்போல ஒருசொல் இடைவராமல் அடுக்கி நிற்பனவாம். (சுச)

சசுரு. ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காகு மிடனுமா றுண்டே.

இது பால்வழு அமைக்கின்றது.

(இ - ள்.) ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி=ஒருமையைக் கருதிய பெயராகிய நிலைமையையுடைய சொல்: பன்மைக்கு ஆகும்

இடனுமாருண்டே = பன்மைக்குப் பொருந்தி நிற்கும் இடமும் உண்டு. எ-று.

எனவே பன்மை சுட்டிய பெயர்ச்சொல் ஒருமைக்குப் பொருந்தி நிற்கும் இடமும் உண்டு என்னும் பொருள் அருத்தாபத்தியாற் றந்தது.

உ-ம். "அஃதைதந்தை - யண்ணல்யானை யடுபோர்ச்சோழர்" என்புழிச் சோழரெல்லாரும் அஃதைக்குத் தந்தையாம் முறையராய் நிற்றலிற் றந்தையென்னும் ஒருமை சோழரென்னும் பன்மையோடு துணித்தனி சென்று கூடுதலின் *வழுவின்றேனும் ஈற்றுப் பன்மைபற்றி வழுவமைத்தார். "புலையனெறிந்தபூசற்றண்ணுமை - யேவலிளையர்தாய்வயிறுகரிப்ப" என்புழி இளையரென்னும் பன்மை தாயென்னும் ஒருமையோடு பொருந்தும்வழி ஒருவற்கு ஒருத்தி தாயாந் தன்மையான வழுவின்றேனும் ஈற்றுப்பன்மைபற்றி வழுவமைத்தார். இவை பொருளிடையிடுதலென்னும் உத்தியாம்.

இன்னும் இதனானே "இனைத்தாளன்னசிறுபசுங்கால-வொழுகுநீராரல்பார்க்குங் - குருகுமுண்டுதாமணந்தஞான்றே" எனப் பன்மை சுட்டிய பெயர்ச்சொல் ஒருமையோடு இயைபின்றி இயைதலின் வழுவாய் அமைவதூஉங் கொள்க. குருகென்பது இயற்பெயராதலின் அதன்கட் பன்மையோடு காலவென்பது இயைந்து காலனவாகிய குருகுகளென நிற்பின் அஃது உண்டென்னும் ஒருமைக்கு ஏலாமையிற் குருகென்பது ஒருமையாயே நின்றதாதலின் வழுவேயாம்; "கள்வன்றானொருவனுமேவேறுசிலராண்டில்லை" என்று கூறுகின்றாள், இரைதேரும் மனக்குறிப்புடைமையிற் கேளாது, சிறிதுகேட்டதாயினுங் கொலை சூழ் குருகாதலிற் கூறுவதுஞ்செய்யாது, இத்தன்மைத்தாயதோர் குருகும் உண்டென்று கூறுதலின் உண்டென்று ஒருமைவாசகத்தாற் கூறினார். இனி "இரண்டனுட்கூர்ங்கோட்டசுடர்வேல்" என்புழி இரண்டனுளென ஒன்றை வகுத்தமையாற் கூர்ங்கோட்டதென ஒருமையாகற்பாலது கோட்டவெனப் பன்மையாய் நிற்றலும் இதனாற் கொள்க. "என்னீரறியாதீர்போலவிவைகூறல்" என ஒருவனைப் பன்மையாற் கூறிப் பின்னர் "நின்னீரவல்லநெடுந்தகாய்" என அவனை ஒருமையாற் கூறுவன போல்வனவும், "இறப்பத்துணிந்தனிர்கேண்மின்மற்றைஇய" என்றாற்போல்வனவும் இதனாற் கொள்க.

இன்னும் இதனானே நம்பிமார் நங்கைமார் அன்னைமார் என்றாற்போல்வன ஒருமைப்பெயர் அடுத்துநின்று மாரீறு பன்மையுணர்த்துதலுங் கொள்க. யான் எம்மூர்புகுவன் நீ நும்மூர்புகுவை என்றாற்போல்வனவோவெனின், அவை யான் புகுவன் நீ புகுவை என ஒருமைமுடிபோடு முடிந்துநிற்ப, எம்மூர் உம்மூர் என்பன வேறோர் முடிபாய் நின்றனவென்று கொள்க.

இனி "மன்றமராத்தபேமுதிர்கடவுள்" என்பது மராத்துக்கடவுளென நிற்கும். இவை போல்வன அன்றி முன்னர்க் காட்டிய உதாரணங்கள்போல மயங்கி வருவன உளவேல் அவற்றையும் இச்சூத்திரத்தான் அமைத்துக்கொள்க. (௬௫)

சசுஉ. முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
யாற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்.

இஃது ஆற்றுப்படைக்கண் முன்னிலையொருமை பன்மையோடு முடிகவென்கின்றது.

(இ - ள்.) முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி = முன்னிலையிடத்தைக் கருதின ஒருமைப்பெயர்: பன்மையொடு முடியினும் வரைநிலை இன்று = பன்மைச்சொல்லோடு முடியினும் நீக்கும் நிலையின்று: ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும் = அம்முடிபு ஆற்றுப்படைச் செய்யுளிடத்துச் சுற்றத்தார் தலைவனை ஆற்றுப்படுத்தற்கண்ணதாகப் பாதுகாத்து உணர்த்தல்வேண்டும். எ-று.

உ-ம். கூத்தராற்றுப்படையுட் "கலம்பெறுகண்ணுளரொக்கற்றலைவ" என நின்ற ஒருமைச்சொல் முடிவுழி "இரும்பேரொக்கலொடுபதமிகப்பெறுகுவிர்" என்னும் பன்மையோடு முடிந்தவாறு காண்க.

இவ்விரண்டுசூத்திரத்தானுங் கூறிய மயக்கஞ் சிறுவரவிற்றாய் இலக்கணவழக்கு உண்மையிற் "பான்மயக்குற்ற" என்னுஞ் சூத்திரத்தாற் கூறிய ஒருமைபன்மை வழுவமைதியாகிய இலக்கணவழக்கோடு உடன்வையாது ஈண்டு வைத்தார். (௬௬)

சசுந. செய்யுண் மருங்கினும் வழக்கியன் மருங்கினு
மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்

பல்வேறு செய்தியி னூனெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்.

இது யான் விரித்துக் கூறாதனவற்றை விரித்துக் கூறிக்கொள்க என அதிகாரப்புறனடை கூறுகின்றது.

(இ - ள்.) செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும் = இவ்வதிகாரத்தின்கட் செய்யுளிடத்தும் வழக்கிடத்தும்: மெய் பெறக் கிளந்த கிளவி எல்லாம் = சிலவற்றிற்கு ஞாபகமாகப் பொருள் பெறச் சொல்லப்பட்ட சொற்களெல்லாவற்றையும்: பல் வேறு செய்தியின் நூல் நெறி பிழையாது = செம்பொருளவாய்ப் பலவாக வேறுபடுத்திய விரிவுகளையுடைய அகத்தியத்திற் கூறிய நெறியிற் தப்பாமல்: சொல் வரைந்து அறியப் பிரித்தனர் காட்டல் = சொல்லை வேறுபடுத்து மாணுக்கன் உணருமாறு நுண்ணுணர்வுடையோர் உரையானுங் காண்டிகையானும் பிரித்துக் காட்டுக. எ-று.

அங்ஙனம் உணரப் பிரித்துக் காட்டுமாறு என்னையெனின், இரண்டாவது "வினையேவினைக்குறிப்பவ்விருமுதலிற்றோன்றும்" என்றதற்கு, மூவகையவாகிய வினைச்சொல்லினும் வினைக்குறிப்புச் சொல்லினும் பிறக்குங் காரணங்கள் எட்டனுட் செயப்படுபொருட் கண்ணே இரண்டாவது தோன்றுமென்றும், அச்செயப்படுபொருள் கடாம் மூவகையவென்றும், மூன்றாவதற்கு ஓதிய வினைமுதல் இயற்றும்வினைமுதலும் ஏவும்வினைமுதலுமென இருவகையவென்றுங், கருவி முதற்காரணமுந் துணைக்காரணமுமென இருவகையவென்றும், நான்காவதற்கு ஓதிய கொடைப்பொருள் இருவகையவென்றும், ஐந்தாவதற்குப் பொருள் நால்வகையவென்றும், அதன்கட் பொருள் உறழ்பொருவும் உவமப்பொருவுமாமென்றும், ஏது காரகவேதுவும் ஞாபகவேதுவுமாமென்றும், ஆறாவதற்குத் தற்கிழமை ஐவகைய பிறிதின்கிழமை மூவகையவென்றும், பிறவும் வேற்றுமையோத்தினுட் பிரித்துக்காட்டினும். இனி வினையெனப்படுவதெனப் பொதுப்படக் கூறிய முதனிலைகளை இன்னவாறு வருமெனப் பிரித்துக்காட்டியும், அவை எடுத்தலோசையான் முன்னிலையேவலொருமைமுற்றாய் நிற்குமென்றுங், கடதறக்கள் முதனிலையை அடுத்து வருங்கால் இறப்பும் ஈற்றினை அடுத்து வருங்கால் எதிர்வும் உணர்த்துமென்றும், நில் கின்று என்பன நிகழ்காலம் உணர்த்துமென்றும், பகர வகரம் எதிர்காலம் உணர்த்துமென்றும், ஏனை

யெழுத்துக்கள் இன்பெற்றும் பெறுதும் உகரம்பெற்றும் பெறுதும் வருமென்றும், வினைக்குறிப்புக்கள் பண்பாங் காலத்தும் வினைக்குறிப்பாங் காலத்தும் வேறு வேறு பொருளுணர்த்துமென்றும், விரவுவினைகள் பிரிவுவேறுபடூஉஞ் செய்தியவாங் காலத்து முடிக்குஞ் சொல்லானுமன்றித் தம்முள்ளே பாலும் இடமுங் குறித்துக்கொள்ளுந் தன்மையையுடையவென்றும், வினையெச்சங்கள் காலங்காட்டும் எழுத்துக்களை பெறுமென்றும், அவைதிரியுமென்றும், அவை காரணகாரியம் பெறுமென்றும், பெயரெச்சங்களுட் காரணப்பொருட்டாய வருவன கருவிக்கண் அடங்குமென்றும், பிறவும் வினையியலுட்பிரித்துக்காட்டினும். இனி அறுவகைத் தொகையுந் தொகுங்கால் இன்னசொற்கண்ணே இன்னதொகை தொகுமென்றும், முற்கூறிய வினைச்சொற்கடாமுஞ் சில முக்காலமுஞ் சில ஒரோவோர்காலமும் உணர்த்துமென்றும், அவை பெயர்கள்பெறுங்கால் இன்னவாறே பெயர்கள்பெறுமென்றும், பிறவும் எச்சவியலுட் பிரித்துக்காட்டினும்.

இனிச் "சொல்வரைந்தறியப்பிரித்தனர்காட்டல்" என்பதனுற் இறையனாரென்பது இறையனாற்செய்யப்பட்ட நூலெனவும் இறையனது நூலெனவும், மூன்றாவதும் ஆறாவதும் விரிந்தது. கடிப்பகையென்பது நான்காவதும் ஆறாவதுங் கடியாகியபகையெனப் பண்பும் விரிந்தது. ஏழேகாலென்பது ஏழுங் காலுமென உம்மையும் ஏழேகால் நிலமான நூலென அன்மொழியும் விரிந்தது. சொல்லிலக்கணமென்பது ஆறாவதும் நான்காவதும் ஏழாவதும் விரிந்தது சொல்லிலக்கணங் கூறிய நூலென ஆகுபெயருமாய் நின்றது. பொன்மணியென்பது மூன்றாவதும் ஐந்தாவதும் ஏழாவதும பொன்னுமணியுமென உம்மையும் விரிந்தது. கருப்புவேலியென்பது நான்காவதும் ஆறாவதும் ஏழாவதும் மூன்றாவதும் ஐந்தாவதும் விரிந்தது. இயலிசையென்பது ஆறாவதும் ஏழாவதும் இயலுமிசையுமென உம்மையும் இயல்கின்ற இசையென வினையும் இயலாகிய இசையெனப் பண்பும் விரிந்தது. உரைவிரியென்பது ஆறாவதும் ஏழாவதும் நான்காவதும் இரண்டாவதும் உரைக்கும்விரியென வினையும் உரைவிரியையுடையதென அன்மொழியும் விரிந்தது. கருத்துப்பொருளென்பது இரண்டாவதும் மூன்றாவதும் ஐந்தாவதும் நான்காவதும் ஆறாவதும் ஏழாவதுங் கருத்தும்பொருளுமென உம்மையும் விரிந்தது. சொற்பொருளென்பது மூன்றாவதும் நான்காவதும் ஐந்தாவதும் ஆறாவதுஞ் சொல்லும்பொருளுமென உம்மையுஞ்

சொல்லாகியபொருளெனப் பண்பும் விரிந்தது. இவ்வாறே பிறசொற்களுந் தொக்கு விரியுமாறு அறிந்து பிரித்துக் காட்டுக.

"இவன்யாரென்குவையாயினிவனே" என்னும் புறப்பாட்டினுட் சேரனைமுன்னிலையாக்கி முடமோசியார் கூறுகின்ற காலத்து இவனென்பது முன்னிலைப்படர்க்கையாய் நின்றது. இவ்வாறு வருவனவும் பிறவும் பிரித்துக் காட்டுக.

கொல் செல் வெல் என்பன லகரம் னகரமாய்த் திரிந்து தனக்கேற்ற றகர ஒற்றுப் பெற்றுப் பாலும் இடமுங் காட்டும் ஆன் ஏறிக் கொன்றான் சென்றான் வென்றான் என நின்றன. கோறு கோறும் சேறு சேறும் வேறு வேறும் என்பன முதனிலை நீண்டு லகர ஒற்றுக் கெட்டுத் தமக்கு உரிய ஒருமைத்தன்மையீறும் பன்மைத்தன்மையீறும் பெற்று நின்றன. வாவென்பது வந்தான் வருகின்றான் என முதனிலை குறுகிக் கால எழுத்திற்கு ஏற்ற இடைநிலையெழுத்துப் பெற்று வந்தன. கொள்ளென்பது கொண்டான் கோடு கோடும் என ளகாரம் ணகாரமாயுங் கெட்டும் முதனிலை நீண்டும் வந்தன. கைவாரங்கொள்வானைக் கைவாரியெனவுந் திருவில்லாதானைத் திருவிலியெனவும் அறிவில்லாதானை அறிவிலியெனவும் நூலோதினானை நூலோதியெனவும் இவ்வாறே ஈறு திரிந்து வருவனவும் பிறவும் பிரித்துக்காட்டுக.

வில்லி வாளி வினைக்குறிப்புமுற்றீறு திரிந்த பெயர். வலைச்சி பனத்தி வெள்ளாட்டி முதலியன சகரமுந் தகரமும் டகரமுமாகிய இடைநிலை பெற்றன. செட்டிச்சி கணக்கச்சி முதலியன இச்சென்னும் இடைநிலைபெற்றன. கணவாட்டி இவ்வினைப்பெயர் டகரம் பெற்றது. இன்னும் இவ்வாறே வருவன பிறவும் பிரித்துக் காட்டுக.

கிள்ளிகுடி கிள்ளியுடைய குடிமக்கள் இருக்கும் ஊரெனவுங் கீழ்வயிற்றுக்கழலை கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலைபோல்வானெனவும் அன்மொழித்தொகையாம். வடுகக்கண்ணனென வல்லொற்று அடுத்தால் வடுகநாட்டிற் பிறந்த கண்ணனென்றாம்; வடுகங்கண்ணனென மெல்லொற்றுஅடுத்தால் வடுகனுக்கு மகனாகிய கண்ணனென்றாம். "நனிபேதையே நயனில்கூற்றம்"... "நனிநீடுழந்தன்றுமன்னேயினியே" என்பது பின்வருங்காலம் உணர்த்திற்று. இனியெம்மெல்லை எனப் பின்னென்னும் இடம் உணர்த்திற்று. ஏனோவென்பது ஒழிபொருள் உணர்த்திற்று. ஏதிலனென்பது [illegible]னென்னும் பொருள் உணர்த்திற்று. உண்ணு

நின்றானென்புழி ஆவென்பது இடைநிலையெழுத்தென்று உணர்க. வா தா என்றாற்போல்வன மறையுணர்த்துங்கால் வாரான் தாரான் வாராதுபோயினான் தாராதுபோயினான் வாராதசாத்தன் தாராதசாத்தன் என முதனிலை குறுகாது நிற்குமென்று உணர்க. நன் தீ சிறு பெரு வன் மென் கடு முது இள புது பழ இன் உடை அன் என்பன முதலிய முதனிலைகள் மகர ஐகாரம்பெற்று நன்மை தீமை சிறுமை பெருமை என வினைக்குறிப்புப்பெயராய்நிற்குமாறும், இவைதாம் நன்று தீது சிறிது பெரிது வலிது மெலிது கடிது முதிது இளைது புதிது பழைது இன்று உடைத்து அன்று என அஃறிணை வினைக்குறிப்புமுற்றாய்நிற்குமாறும், நல்லன் தீயன் சிறியன் பெரியன் வலியன் மெலியன் கடியன் முதியன் இளையன் புதியன் பழையன் இல்லன் உடையன் அல்லன் என அன்பெற்று உயர்திணை வினைக்குறிப்பாய் நிற்குமாறும், இவைதாம் ஆனென்னும் ஈறு பெற்று முற்றாயும் படுத்தலோசையான் வினைக்குறிப்புப்பெயராய் உருபேற்றும் பயனிலைகொண்டும் நிற்குமாறும் பிரித்துக் கொள்க. இவ்வாறே ஏனைப்பால்களோடும் ஒட்டுக. இவை பண்பாய் நிற்குமாறும் உரியவென்று உணர்க. இவைதாமே நன்றாய்வளர்ந்தான் வளர்ந்தது, தீதாய்ப்போயினான் போயிற்று என வினையெச்சக்குறிப்பாமாறும் நல்லசாத்தன் தீயசாத்தன் எனப் பெயரெச்சக்குறிப்பாமாறுங் காண்க. சிற இழி தீர் என்னும் முதனிலைகள் அல்லீறு பெற்றும் அன்னீறும் ஆனீறும் பெற்றும் முற்கூறியவாறே நிற்குமாறுஞ் சிறந்து இழிந்து தீர்ந்து எனவுஞ் சிறந்த இழிந்த தீர்ந்த எனவும் வினையெச்சவினைக்குறிப்பும் பெயரெச்சவினைக்குறிப்புமாமாறும் உணர்க. இவ்வாறு வருவன பிறவும் பிரித்துக் கொள்க. "சுடரிழாய் * * * பன்மாணும்" என்புழி மானென்னும் இடைச்சொற் பலபடியுமென்னும் பொருட்டாய் நின்றவாறு காண்க. "பிரிதல்வல்லியாரிதுந்துறந்தோர்" என்புழி வல்லாராயென வினையெச்சமாய் நின்றவாறு காண்க. "கால்பொரநுடங்கலிற்கறங்கிசையருவி" என்புழி நுடங்குதலையுடைய அருவியென நிற்குமாறு உணர்க. இவைபோல்வன ஓசைவேற்றுமையான் வேறுபடுவனவும் உணர்ந்துகொள்க. "நில்லாதுபெயர்ந்தபல்லோருள்ளும்" என்புழி முன்னர் எல்லாரும் உளப்பாடாகக் கூறிய தோழி ஈண்டும் பல்லேமுள்ளும் என்னாது தன்னை நீக்கிக் கூறியதென்னையெனின், தலைமகன் தன்னைநோக்கி அழிவு தகக்கூறி ஆற்றானாகி நின்ற நிலைமையைக் கண்டும் அருள் பிறவாது ஆயமுந் தலைவியும் போயவாறும் அதற்குத் தான் அழிவு

தக்கு நிற்றலின் அவரோடு போதலாற்றாது பின்னர்ப் போயவாறுந் தோன்றக் கூறுகின்றாளாதலிற் பல்லோருள்ளுமெனக் கூறினுளென்று பொருள்கூறுக. "முரசுமுழங்குதானைமூவருள்ளு - மரசெனப்படுவதுநினதேயத்தை" என்புழி மூவரென்றது என்னையெனின், புலவன் கூறுகின்ற இவனை ஒழிந்த இருவகைக் குலத்தோரும் இவன்முன்னுள்ளோரும் படர்க்கையராதலின் அம்மூவகைக் குலத்து உள்ளோரையுங் கூட்டி முரசுமுழங்குதானை மூவர் அரசருளும் அரசென்று ஈண்டுச் சிறப்பித்துச் சொல்லப்படுவது அச்சோழன்வழித் தோன்றிய நின்னரசே என்றானெனப் பொருள்கூறுக.

இங்ஙனஞ் சான்றோர் செய்யுட்கள் இவ்வாசிரியர் கூறிய இலக்கணங்களுள் அடங்காதது போன்று கிடப்பன பிறவும் உளவேனும் நுண்ணுணர்வு உடையோர் அவற்றின் பொருட்பயனை நோக்கி ஒருவாற்றான் இக்கூறிய இலக்கணங்களுள் அடக்கிக்கொள்க.

இச்சூத்திரத்தின் கருத்து இவ்வதிகாரத்துட் சிலவற்றிற்கு விரித்துக்கூறாது நுண்ணுணர்வு உடையார் உணருமாறு கூறிய இலக்கணங்களும் உள; அவற்றிற்கு முதனூலானும் விரித்துரையானுங் காண்டிகையானும் உணர்த்துகவென்று கூறுதலாம். இங்ஙனங் கூறினார் முடிந்ததுகாட்டலென்னுந் தந்திரவுத்திக்கு இனமாகவென்று உணர்க. இங்ஙனங் கூறாது யான் கூறப்படும் இலக்கணங்களை முதனூல்களாற் கூறிக்கொள்கவெனின், அது குன்றக் கூறலென்னுங் குற்றமாமென்று உணர்க. (௯௭)

எச்சவியல் முற்றும்.

## சொல்லதிகாரம் முற்றும்.

உ

கிளவியோ ரறுபா னிரண்டுவேற் றுமையிற்
கிளரிரு பஃதிரண் டேழைந்
துளமயங் கியலாம் விளியின்முப் பானே
ழுயர்பெயர் நாற்பதின் மூன்று
தெளிவினை யியலைம் பானுட னொன்று
செறியிடை யியலினாற் பானெட்
டொளிருரி யியலொன் பதிற்றுப்பத் துடனெட்
டொழிபறு பானின்மே லேழே.

# சூத்திர அகராதி.


| சூத்திரம். | பக்கம். | சூத்திரம். | பக்கம் |
|---|---|---|---|
| அஆவஎன-வறி | ௧௦ | அவற்றுள், இஈயாகும் | ௯௦ |
| அஆவஎன-வற்று | ௧௩௯ | அவற்றுள், இருமுஞ்சின் | ௧௮௪ |
| அனைப்பிறத்தல் | ௮௧ | அவற்றுள், இயற்சொல் | ௨௩௦ |
| அசைநிலைக்கிளவி | ௧௮௨ | அவற்றுள், இரங்கல் | ௨௧௬ |
| அச்சக்கிளவிக்கு | ௭௬ | அவற்றுள், ஈயென்கிளவி | ௨௬௯ |
| அச்சம்பயமிலி | ௧௭௫ | அவற்றுள், எழுவாய் | ௪௯ |
| அடிமறிச்செய்தி | ௨௩௭ | அவற்றுள், செய்கென் | ௧௩௧ |
| அடைசினைமுதலென | ௨௧ | அவற்றுள், செய்யும் | ௧௬௫ |
| அண்மைச்சொல்லிற்கு | ௯௪ | அவற்றுள், தடவென் | ௨௦௬ |
| அண்மைச்சொல்லே | ௯௨ | அவற்றுள், தருசொல் | ௨௩ |
| அதற்குவினையுடைமை | ௬௧ | அவற்றுள், நான்கே | ௧௧௬ |
| அதனினியறல் | ௫௯ | அவற்றுள், நிரனிறை | ௨௩௫ |
| அதிர்வும்விதிர்ப்பும் | ௨௦௪ | அவற்றுள், நீயென்கிளவி | ௧௨௨ |
| அதுச்சொல்வேற்றுமை | ௧௩௬ | அவற்றுள், பன்மை | ௧௩௪ |
| அதுவிதுவுதுவென | ௧௧௧ | அவற்றுள், பிரிநிலை | ௨௬௧ |
| அதுவென்வேற்றுமை | ௭௪ | அவற்றுள், பெயரெனப் | ௧௦௫ |
| அத்திணைமருங்கின் | ௧௪௨ | அவற்றுள், முதனிலைமூன்று | ௧௫௭ |
| அந்திலாங்க | ௧௮௧ | அவற்றுள், முன்னிலைக் | ௧௪௬ |
| அந்நாற்சொல்லும் | ௨௩௪ | அவற்றுள், முன்னிலைதன் | ௧௫௧ |
| அப்பொருள்கூறிற் | ௨௭ | அவற்றுள், யாதென | ௨௪ |
| அமர்தன்மேவல் | ௨௨௨ | அவற்றுள், விறப்பே | ௨௧௩ |
| அம்மகேட்பிக்கும் | ௧௮௫ | அவற்றுள், வினைவேறு | ௩௮ |
| அம்மவென்னும் | ௧௦௧ | அவற்றுள், வேற்றுமைத் | ௨௪௨ |
| அம்முக்கிளவியும் | ௧௫௮ | அவற்றொடுவருவழிச் | ௧௬௨ |
| அயனெடிதாயின் | ௯௮ | அவைதாம், அம்மாம் | ௧௨௭ |
| அரியேயையமை | ௨௧௫ | அவைதாம், இஉஐஓ | ௮௯ |
| அர்ஆர்பஎன | ௧௩௨ | அவைதாம், உறுதவ | ௨௦௦ |
| அலமரறெருமரல் | ௨௦௩ | அவைதாம், தத்தங்கிளவி | ௨௫௯ |
| அவற்றின்வரூஉம் | ௧௯௩ | அவைதாம், தத்தம்பொருள் | ௮௬ |
| அவற்றுள், அழுங்கல் | ௨௧௩ | அவைதாம், புணரியனிலை | ௧௭௨ |
| அவற்றுள், அன்னெனிறுதி | ௯௩ | அவைதாம், பெண்மை | ௧௧௬ |

| சூத்திரம். | பக்கம். |
| --- | --- |
| அவைதாம், பெயர்ஐ | ௪௯ |
| அவைதாம், முன்மொழி | ௨௫௧ |
| அவைதாம், முன்னும் | ௧௭௪ |
| அவைதாம், வழங்கியல் | ௮௫ |
| அவையல்கிளவி | ௨௬௮ |
| அவ்வச்சொல்லிற்கு | ௧௯௬ |
| அவ்வழி, அவனிவன் | ௧௦௬ |
| அவ்வே, இவ்வென | ௮௯ |
| அளபெடைப்பெயரே | ௯௫ |
| அளபெடைப்பெயரே | ௯௬ |
| அளபெடைப்பெயரே | ௯௯ |
| அளபெடைமிகூஉம் | ௯௧ |
| அளவுநிறையும் | ௮௭ |
| அன்ஆன் அள்ஆள் | ௧௩௨ |
| அன்மையினின்மையின் | ௧௩௮ |
| அன்னபிறவுங்கிளந்த | ௨௨௮ |
| அன்னபிறவுந்தொன்னெறி | ௭௭ |
| அன்னபிறவுமஃறிணை | ௧௧௩ |
| அன்னபிறவுமுயர்திணை | ௧௧௧ |
| ஆகவாகலென்பது | ௧௮௬ |
| ஆக்கக்கிளவி | ௧௭ |
| ஆக்கந்தானே | ௧௭ |
| ஆங்கவுரையசை | ௧௮௫ |
| ஆடூஉவறிசொல் | ௬ |
| ஆண்மைசுட்டிய | ௧௧௮ |
| ஆண்மைதிரிந்த | ௧௩ |
| ஆண்மையடுத்த | ௧௦௭ |
| ஆயென்கிளவியும் | ௧௩௫ |
| ஆருமருவும் | ௯௫ |
| ஆவோவாகும் | ௧௨௪ |
| ஆறன்மருங்கின் | ௭௬ |
| ஆறுகுவதே, அதுவெனப் | ௬௩ |
| ஆனெனிறுதி | ௯௪ |
| இசைத்தலுமுரிய | ௪௬ |
| இசைநிறையசைநிலை | ௨௪௦ |
| இசைப்படுபொருளே | ௨௫௫ |
| இசைப்பிசையாகும் | ௨௦௩ |
| இடைச்சொல்லெல்லாம் | ௨௭௬ |
| இடைச்சொற்கிளவியும் | ௧௦௫ |
| இடையெனப்படுப | ௧௭௧ |
| இதனதிதுவிற்றென்னும் | ௮௧ |
| இதுசெயல்வேண்டும் | ௧௬௮ |
| இயற்கைப்பொருளை | ௧௬ |
| இயற்கையினுடைமையின் | ௬௪ |
| இயற்சொற்றிரிசொல் | ௨௨௯ |
| இயற்பெயர்க்கிளவியும் | ௨௯ |
| இயற்பெயர்சினைப்பெயர் | ௧௧௫ |
| இயற்பெயர்முன்னர் | ௧௮௨ |
| இயைபேபுணர்ச்சி | ௨௦௨ |
| இரட்டைக்கிளவி | ௩௪ |
| இரண்டன்மருங்கின் | ௭௩ |
| இரண்டாகுவதேஐயெனப் | ௫௪ |
| இருதிணைச்சொற்கும் | ௧௧௪ |
| இருதிணைப்பிரிந்த | ௧௦௫ |
| இருதிணைமருங்கின் | ௧௦ |
| இருபெயர்பலபெயர் | ௨௪௯ |
| இர்ஈர்மின்னென | ௧௪௭ |
| இலம்பாடொற்கம் | ௨௧௬ |
| இறப்பினிகழ்வி-றசி | ௨௫௬ |
| இறப்பினிகழ்வி-ருவம் | ௧௨௬ |
| இறப்பேயெதிர்வே | ௧௭௧ |
| இறுதியுமிடையும் | ௭௮ |
| இறைச்சிப்பொருள்வயிற் | ௧௨௪ |
| இனச்சுட்டில்லாப் | ௧௬ |
| இனைத்தெனவறிந்த | ௨௫ |
| இன்றிலவுடைய | ௧௪௨ |
| இன்னபெயரே | ௧௨௩ |
| ஈதாகொடுவெனக் | ௨௬௯ |
| ஈரளபிசைக்கும் | ௧௮௭ |
| ஈற்றுநின்றிசைக்கும் | ௧௯௦ |
| ஈற்றுப்பெயர்முன்னர் | ௭௫ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| உகப்பேயுயர்தல் | ௨௦௨ |
| உகரந்தானே | ௯௦ |
| உசாவேசூழ்ச்சி | ௨௧௯ |
| உணர்ச்சிவாயில் | ௨௨௬ |
| உம்மூந்தாகும் | ௧௯௫ |
| உம்மைதொக்க | ௧௯௨ |
| உம்மையெச்சம் | ௨௬௩ |
| உம்மையெண்ணினுருபு | ௧௯௩ |
| உம்மையெண்ணுமெனா | ௧௯௧ |
| உயர்திணைமருங்கின் | ௨௫௩ |
| உயர்திணையென்மனார் | ௧ |
| உயாவேயுயங்கல் | ௨௧௯ |
| உரிச்சொற்கிளவி | ௧௯௮ |
| உரிச்சொன்மருங்கினும் | ௨௭௮ |
| உருபுதொடர்ந்தடுக்கிய | ௭௮ |
| உருவுட்காகும் | ௨௦௦ |
| உருவெனமொழியினும் | ௧௮ |
| உரையிடத்தியலும் | ௨௮௧ |
| உவமத்தொகையே | ௨௪௩ |
| உளவெனப்பட்ட | ௧௦௦ |
| எச்சஞ்சிறப்பே | ௧௭௬ |
| எச்சவும்மையும் | ௧௮௯ |
| எஞ்சியகிளவி | ௧௫௦ |
| எஞ்சியமூன்றும் | ௨௬௫ |
| எஞ்சியவிரண்டின் | ௯௭ |
| எஞ்சுபொருட்கிளவி | ௧௯௦ |
| எடுத்தமொழியினம் | ௪௬ |
| எண்ணுங்காலும் | ௩௪ |
| எண்ணேகாரம் | ௧௯௨ |
| எதிர்மறுத்துமொழியினும் | ௮௦ |
| எதிர்மறையெச்சம் | ௨௬௩ |
| எப்பொருளாயினும் | ௨௬ |
| எய்யாமையே | ௨௧௧ |
| எல்லாச்சொல்லும் | ௧௦௨ |
| எல்லாத்தொகையும் | ௨௫௨ |
| எல்லாமென்னும் | ௧௨௧ |
| எல்லாருமென்னும் | ௧௦௯ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| எல்லேயிலக்கம் | ௧௮௨ |
| எவ்வயிற்பெயரும் | ௫௨ |
| எவ்வயின்வினையும் | ௨௫௯ |
| எழுத்துப்பிரிந்திசைத்தல் | ௨௨௭ |
| எறுழ்வலியாகும் | ௨௨௪ |
| எற்றென்கிளவி | ௧௮௦ |
| எனவெனெச்சம் | ௨௬௫ |
| என்றுமெனவும் | ௧௯௬ |
| என்றென்கிளவியும் | ௧௭௯ |
| ஏயுங்குரையும் | ௧௮௩ |
| ஏழாகுவதே, கண்ணெனப் | ௬௫ |
| ஏற்றநினைவும் | ௨௦௯ |
| ஏனைக்காலமும் | ௧௭௧ |
| ஏனைக்கிளவி | ௧௨௨ |
| ஏனைப்புள்ளி | ௯௨ |
| ஏனையிரண்டும் | ௨௩ |
| ஏனையுயிரே | ௯௦ |
| ஏனையுருபுமன்ன | ௮௩ |
| ஏனையெச்சம் | ௧௫௯ |
| ஐந்தாகுவதே, இன்னெனப் | ௬௨ |
| ஐயமுங்கரிப்பும் | ௨௨௩ |
| ஐயுங்கண்ணும் | ௭௯ |
| ஐவியப்பாகும் | ௨௨௩ |
| ஒப்பில்போலியும் | ௧௮௫ |
| ஒருபெயர்ப்பொதுச்சொல் | ௩௫ |
| ஒருபொருளிருசொற் | ௨௮௩ |
| ஒருபொருள்-சொல் | ௨௩௧ |
| ஒருபொருள்-பெயர் | ௩௧ |
| ஒருமைசுட்டியபெயர் | ௨௮௪ |
| ஒருமைசுட்டியவெல்லாப் | ௧௨௦ |
| ஒருமையெண்ணின் | ௩௨ |
| ஒருவரென்னும் | ௧௨௨ |
| ஒருவரைக்கூறும் | ௨௧ |
| ஒருவினையொடுச்சொல் | ௭௨ |
| ஒழியிசையெச்சம் | ௨௬௩ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| ஒன்றறிகிளவி | ௯ |
| ஒன்றறிசொல்லே | ௬ |
| ஒன்றன்படர்க்கை | க௪0 |
| ஒன்றுவினைமருங்கின் | ௩அ |
| ஓம்படைக்கிளவிக்கு | எரு |
| ஓய்தலாய்தல் | உ0அ |
| ஓவும் உவ்வும் | ௯0 |
| கடதறவென்னும் | க௩0 |
| கடிசொலில்லை | உஎரு |
| கடியென்கிளவி | உஉஉ |
| கண்கால்புறமகம் | ௬௬ |
| கண்டீரென்று | உருரு |
| கண்ணுந்தோளும் | ௪எ |
| கதழ்வுந்துனையும் | உ0௪ |
| கமநிறைந்தியலும் | உக௪ |
| கம்பலைசும்மை | உக௩ |
| கயவென்கிளவி | உ0௬ |
| கருமமல்லாச் | ௬௯ |
| கருவிதொகுதி | உக௪ |
| கவவகத்திடுமே | உகரு |
| கவர்வுவிருப்பாகும் | உகஎ |
| கழிவேயாக்கம் | கஎ௪ |
| கழுமென்கிளவி | உக௪ |
| கள்ளொடுசிவணும் | ககஉ |
| கறுப்புஞ்சிவப்பும் | உக௯ |
| கன்றலுஞ்செலவும் | எ0 |
| காப்பினொப்பின் | ரு௬ |
| காலந்தாமே | கஉ௬ |
| காலமுலகம் | ௪௪ |
| கிளந்தவல்ல | அஎ |
| கிளந்தவல்ல | க௯எ |
| கிளந்தவிறுதி | ௯௯ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| குஐஆனென | அக |
| குடிமையாண்மை | ௪0 |
| குத்தொகவரூஉங் | எ௬ |
| குருவுங்கெழுவும் | உ0க |
| குறித்தோன்கூற்றம் | ௩௯ |
| குறிப்பினும்வினையினும் | கஉ௬ |
| குறைச்சொற்கிளவி | உஎ௬ |
| குறைத்தனவாயினும் | உஎ௬ |
| கூர்ப்புங்கழிவும் | உ0௩ |
| கூறியகிளவி | உஉரு |
| கூறியமுறையின் | ரு௩ |
| கெடவரல்பண்ணை | உ0ரு |
| கேட்டையென்று | உரு௬ |
| கொடுவென்கிளவிபடர் | உஎ0 |
| கொடுவென்கிளவியுயர் | உஎ0 |
| கொல்லேயையம் | கஅக |
| சாயன்மென்மை | உ0௬ |
| சிதைந்தனவரினும் | உ௩௩ |
| சிறப்பினாகிய | ௩க |
| சினைநிலைக்கிளவிக்கு | ௬௯ |
| சீர்த்திமிகுபுகழ் | உ0௩ |
| சுட்டுமுதலாகிய | ௩0 |
| சுட்டுமுதற்பெயரும் | ௯அ |
| சுட்டுமுதற்பெயரே | ௯எ |
| சுண்ணந்தானே | உ௩௬ |
| செந்தமிழ்சேர்ந்த | உ௩உ |
| செப்பினும்வினாவினும் | கரு |
| செப்பும்வினாவும் | க௩ |
| செப்பேவழீஇயினும் | க௪ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| செயப்படுபொருளைச் | கஎ௦ |
| செயற்கைப்பொருளை | கஎ |
| செய்துசெய்யூச் | கருங |
| செய்தெனெச்சத்து | கசாசா |
| செய்யாவென்னும் | உஎஉ |
| செய்யுண் மருங்கினும் | உஅசா |
| செலவினும்வரவினும் | உஉ |
| செல்லீன்னல் | உ௦க |
| செழுமைவளனும் | உகச |
| சேரேதிரட்சி | உகஎ |
| சொல்லெனப்படுப | க௦ச |
| சொல்லெலனெச்சம் | உசாசா |
| ஞெமிர்தலும்பாய்தலும் | உகஎ |
| தகுதியும்வழக்கும் | கரு |
| தஞ்சக்கிளவி | கஅக |
| தடவுங்கயவும் | உ௦ரு |
| தடுமாறுதொழிற்பெயர்க்கு | எச |
| தத்தங்குறிப்பினெச்சம் | உசாரு |
| தத்தமெச்சமொடு | கசாரு |
| தநநுஎனை | க௦க |
| தநநுஎனும் | உஙகூ |
| தன்மேற்செஞ்சொல் | உசாச |
| தன்மைசுட்டலும் | ககூ |
| தன்மைசுட்டிற் | கஉஉ |
| தன்மைச்சொல்லே | ஙஉ |
| தன்னுளுறுத்த | கஉக |
| தாமென்கிளவி | கஉ௦ |
| தாவென்கிளவி | உசாகூ |
| தாவேவலியும் | உகஉ |
| தானென்கிளவி | கஉ௦ |
| தானென்பெயரும் | கூரு |
| திணையொடுபழகிய | கஉச |
| தீர்தலுந்தீர்த்தலும் | உ௦ரு |
| துய்யென்கிளவி | உககூ |
| துவன்றுநிறைவு | உ௦அ |
| துவைத்தலுஞ்சிலைத்தலும் | உகரு |
| தெவுக்கொளல் | உகஉ |
| தெவ்வுப்பகை | உகஉ |
| தெரிநிலையுடைய | ககங |
| தெரிபுவேறு | க௦ச |
| தெளிவினையும் | கஎகூ |
| தேற்றம்வினாவே | கஎஅ |
| தொழிலிற்கூறும் | கூச |
| தொழிற்பெயராயின் | கூசா |
| நம்பூமேவும் | உ௦எ |
| நளியென்கிளவி | உ௦சா |
| நனவேகளனும் | உஉக |
| நன்றீற்றேயும் | கஅஅ |
| நன்றுபெரிதாகும் | உகக |
| நான்காகுவதே, குஎனப் | சா௦ |
| நிகழூஉநின்ற | ககரு |
| நிரனிறைசுண்ணம் | உஙரு |
| நிலப்பெயர்குடிப்பெயர் | க௦கூ |
| நிலனும்பொருளும் | கசாக |
| நிறத்துருவுணர்த்தற்கும் | உஉ௦ |
| நின்றாங்கிசைத்தல் | சசா |
| நீயிர்நீயென | கஉக |
| நும்மின்றிரிபெயர் | கூஎ |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| நொசிவுநுழைவு | உஉ0 |
| பசப்புநிறனும் | உ0உ |
| படரேயுள்ளல் | உக0 |
| பணையேபிழைத்தல் | உக0 |
| பண்புகொள்பெயருமு | கூச |
| பண்புகொள்பெயரும் | கூசா |
| பண்புதொகவருடம் | உரு0 |
| பயப்பேபயனும் | உ0உ |
| பரவும்பழிச்சும் | உஉஉ |
| பலவயினானும் | நசா |
| பல்லபலசில | ககஉ |
| பல்லோர்படர்க்கை | கருஉ |
| பழுதுபயமின்றே | உ0சா |
| பன்முறையானும் | கசா0 |
| பன்மைசுட்டியவெல்லாப் | கககூ |
| பன்மையு-வருநிலை | கநச |
| பன்மையு-வம்மூவிர | கசஉ |
| பன்மையு-யஃறிணை | கசச |
| பன்மையு-யுயர்திணை | கநகூ |
| பாலறிமரபின | கநரு |
| பானமயக்குறற | கஅ |
| பிணையும்பேணும் | உக0 |
| பிண்டப்பெயரும் | எஉ |
| பிரிநிலைவினாவே | கஎஎ |
| பிரிநிலைவினையே | உசா0 |
| பிறிதுபிறிதேற்றலும் | எகூ |
| பின்முன்கால்கடை | கருசா |
| புதிதுபடற்பொருட்டே | உஉக |
| புலம்பேதனிமை | உ0அ |
| புள்ளியுமுயிரும் | க00 |
| புனிறென்கிளவி | உஉ0 |
| பெண்மைசுட்டியசினைமுதற் | ககஎ |
| பெண்மைசுட்டியவுயர்திணை | எ |
| பெண்மைசுட்டியவெல்லாப் | ககஅ |
| பெண்மைசினைப்பெயர் | ககஎ |
| பெண்மைமுறைப்பெயர் | ககஅ |
| பெயரினாகிய | ருஉ |
| பெயரினுந்தொழிலினும் | நசா |
| பெயரெனுக்கிளவியெ | உசாஉ |
| பெயரெனுக்கிளவியும் | கசாந |
| பெயர்நிலைக்கிளவிகாலங் | ருந |
| பெயர்நிலைக்கிளவியின | உஎக |
| பேநாமுருமென | உகஅ |
| பையுளுஞ்சிறுமையும் | உகக |
| பொருடெரிமருங்கின | உநஎ |
| பொருட்குத்திரிபில | உஉசா |
| பொருட்குப்பொருள் | உஉரு |
| பொருண்மைசுட்டல | ரு0 |
| பொருண்மைதெரிதலும் | க0ந |
| பொருளொடுபுணர்ச் | உஅ |
| பொறப்பேபொலிவு | உ0கூ |
| மகடூஉமருங்கிற | கஉந |
| மதவேமடனும் | உஉக |
| மல்லல்வளனே | உ0க |
| மழவுங்குழவும் | உ0ந |
| மறைக்குங்காலை | உசாஅ |
| மற்றெனகிளவி | கஎகூ |
| மற்றையதென்னும் | கஅ0 |
| மனனவென்கிளவி | கஅக |
| மன்னாப்பொருளும் | உசா |

| சூத்திரம். | பக்கம். |
|---|---|
| மாதர்காதல் | ௨௦௭ |
| யாரைக்கிளவியும் | ௧௩௩ |
| மாவென்கிளவி | ௧௮௩ |
| மிகுதியும்வனப்பும் | ௨௨௧ |
| மிக்கதன்மருங்கின் | ௧௬௭ |
| மியாயிகமோமதி | ௧௮௩ |
| முதலிற்கூறும் | ௮௫ |
| முதலுஞ்சினையும் | ௭௧ |
| முதற்சினைக்கிளவிக்கு | ௭௦ |
| முதன்முனைவரின் | ௭௧ |
| முந்நிலைக்காலமும் | ௧௬௬ |
| முரஞ்சன்முதிர்வே | ௨௦௮ |
| முழுதென்கிளவி | ௨௦௭ |
| முறைப்பெயர்-முறை | ௯௮ |
| முறைப்பெயர்-யேயொடு | ௯௫ |
| முறைப்பெயர்மருங்கின் | ௯௧ |
| முற்படக்கிளத்தல் | ௩௦ |
| முற்றியவும்மை | ௧௯௦ |
| முனைவுமுனிவாகும் | ௨௨௩ |
| முன்னத்தினுணரும் | ௨௮௨ |
| முன்னிலைசுட்டிய | ௨௮௬ |
| முன்னிலைமுன்னர் | ௨௭௪ |
| முன்னிலைவியங்கோள் | ௧௪௫ |
| மூன்றனுமைந்தனும் | ௭௩ |
| மூன்றுருகுவதே, ஒடுவெனப் | ௫௭ |
| மெய்பெறக்கிளந்த | ௨௨௪ |
| மொழிப்பொருட்காரணம் | ௨௨௭ |
| மொழிமாற்றியற்கை | ௨௩௮ |
| யாஅரென்னும் | ௧௩௪ |
| யாகாபிறபிறக்கு | ௧௮௬ |
| யாணுக்கவினாகும் | ௨௨௨ |
| யாதனுருபிற்கூறிற்றாயினும் | ௮௦ |
| யாதெவனென்னும் | ௨௪ |
| ரஃகானொற்றும் | ௯ |
| வடசொற்கிளவி | ௨௩௩ |
| வண்ணத்தின்வடிவின் | ௨௪௬ |
| வண்ணம்வடிவே | [illegible]௬௨ |
| வம்புநிலையின்மை | ௨[illegible] |
| வயவலியாகும் | ௨௧௮ |
| வயாவென்கிளவி | ௨௧௯ |
| வறிதுசிறிதாகும் | ௨௦௯ |
| வன்புறவரூஉம் | ௧௬௯ |
| வாராக்காலத்துநிகழுங் | ௧௬௭ |
| வாராக்காலத்துவினை | ௧௬௯ |
| வாராமரபின | ௨௫௪ |
| வார்தல்போகல் | ௨௦௪ |
| வாளொளியாகும் | ௨௧௮ |
| வியங்கோளெண்ணுப் | ௩௩ |
| வியலென்கிளவி | ௨௧௮ |
| விரைசொல்லடுக்கே | ௨௫௫ |
| விழுமஞ்சீர்மையும் | ௨௧௪ |
| விழைவின்றில்லை | ௧௭௯ |
| விழைவேகாலம் | ௧௭௫ |
| விளிகொள்வதன்கண் | ௪௯ |
| விளியெனப்படுப | ௮௮ |
| விறப்புமுறப்பும் | ௨௧௨ |
| வினாவுஞ்செப்பே | ௧௪ |
| வினையிற்றோன்றும் | ௧௧ |

| சூத்திரம். | பக்கம். | சூத்திரம். | பக்கம். |
|---|---|---|---|
| வினையினும்பண்பினும் | ௯௮ | வேறுவினைப்பொதுச்சொல் | ௩௩ |
| வினையின்றொகுதி | ௨௪௫ | வேற்றுமைதாமே | ௪௮ |
| வினையெஞ்சுகிளவிக்கு | ௨௬௨ | வேற்றுமைத்தொகையே | ௨௪0 |
| வினையெஞ்சுகிளவியும் | ௨௭௯ | வேற்றுமைப்பொருளை | ௬௮ |
| வினையெனப்படுவது | ௧௨௫ | வேற்றுமைமருங்கிற் | ௮௬ |
| வினையேகுறிப்பே | ௧௭௮ | | |
| வினையேசெய்வது | ௮௩ | | |
| வினையொடுநிலையினும் | ௧௯௫ | வையேகூர்மை | ௨௩௪ |
| வினைவேறுபடாஅப் | ௩௯ | | |
| வினைவேறுபடூஉம் | ௩௭ | ளஃகானொற்றே | ௮ |
| | | | |
| வெஃகல் வேண்டல் | ௨0௯ | னஃகானொற்றே | ௮ |
| வெளிப்படுசொல்லே | ௨00 | னரலளவென்னும் | ௯௨ |


MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY,
MADRAS 41

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY,
MADRAS 41